# சிங்கப்பூர் ஸ்ரீ தெண்டாயுதபாணி வழிபாட்டு மலர்



2024

# சிங்கப்பூர் ஸ்ரீ தெண்டாயுதபாணி வழிபாட்டு மலர்



2024

# முன்னுரை

தமிழையும் சைவத்தையும் இரு கண்களாக போற்றி, சென்ற இடங்களில் எல்லாம் தமிழ் கடவுளாம், செட்டி மகனாம் செல்வநலம் அருளும் செந்தூரனாம், வாரி வழங்கும் வள்ளலாம் தெண்டாயுதபாணி கடவுளுக்கு ஆலயம் எழுப்பி, அவன் புகழ் பாடியும், பரவியும் வருபவர்கள் நகரத்தார் பெருமக்கள்.

கண்கண்ட தெய்வமாம் கந்தவேளின் அன்பையும், அருளையும், பறைசாற்றும் விதமாக அப்பெருமக்கள் கொண்டாடும் திருவிழாக்களில் முதன்மையும், தொன்மையும் ஆனது தைப்பூசத் திருவிழா.
முன்னூறு ஆண்டுகளுக்கும் மேலாக, நம் நாடும், மக்களும், குலமும் தழைக்க வேண்டி கடும் விரதமிருந்து, காவடி தாங்கி கால்நடையாய் சென்று பழநிவாழ் பாலகுமாரனை பாடிப் பரவி வழிபட்டு வருகின்ற நகரத்தார்கள், அலைகடலுக்கு அப்பாலும் தைப்பூச விழாவினை அதே சிறப்போடு கொண்டாடி வருகின்றோம்.

அவ்வழியில் 150 ஆண்டுகளுக்கும் மேலாக கொண்டாடப்பட்டு வரும் சிங்கப்பூர் தெண்டாயுதபாணி தைப்பூசத்திருவிழா, வேல் வடிவாய் இருந்து, வேண்டும் வரம் நல்கும் வேலவனின் வெள்ளிரத நகர்வலம், பெருகிவரும் நகரத்தார் காவடிகள், சிங்கை பக்தர்களின் சிலிர்க்க வைக்கும் நூற்றுக்கணக்கான அலகுக் காவடிகள், எண்ணில் அடங்கா பாற்குடங்கள், வேலுக்கு 24 மணி நேரத்திற்கும் மேலாக இடைவிடாது நடக்கும் பாலாபிஷேகம், என்று எழுத எழுதப், பேசப் பேச, நினைக்க நினைக்க, மனம் சிலிர்க்க வைக்கும் ஒரு விழாவாகும். நகரத்தார்களின் சீரிய நிர்வாகத்தில் மிகச் சிறப்பாக நடக்கும் இவ்விழாவைக் காணக்கண் கோடி வேண்டும்.

தைப்பூச விழாவினை ஒட்டி, உலகனைத்திலும் உள்ள பக்தர்கள், தமிழ்க்கடவுள் முருகனை, மனமுருகி பாடி பரவி அவனருள் பெறவேண்டும் என்ற பக்தி நோக்கில் இம்மலரை வெளியிடுகின்றோம். எல்லா நலமும், வளமும் தந்து நம் அனைவரையும் காத்து இரட்சித்து தாயாய், தந்தையாய், குருவாய், வாரி வழங்கும் வள்ளலாய் நம்மை வழிநடத்தும் சிங்கை முருகனின் புகழ்பாடும் இந்த சிங்கப்பூர்

தெண்டாயுதபாணியின் வழிபாட்டு மலரை வெளியிடும் வாய்ப்பு மீண்டும் எங்களுக்கு கிட்டியது பெரும் பாக்கியம்.

பல அரிய பாடல்களும், புதிய பாடல்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. அப்பாடல்களை எழுதிய அருட்கவிகளுக்கும், இம்மலர் ஒரு சிறந்த தொகுப்பாக வெளிவர பலவிதங்களிலும் உதவிய நகரத்தார் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றி.

வழிபாட்டுப் பாடல்கள், காலத்திற்கேற்பவும், கவிஞருக்கு ஏற்பவும், பலவிதமான மனித உணர்வுகளை பிரதிபலிக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. அந்தவகையில், ஒரு மூன்று உணர்வுகளை மட்டும் குறிப்பிட்டு உணர்த்தும் பாடல் வரிகளை உங்கள் பார்வைக்காக இங்கே தொகுத்துள்ளோம்.

| **உணர்வு** | **பாடல் வரிகள்** | **பாடல் பெயர்** |
|---|---|---|
| அன்பு | அப்பனே உனைநான் காண வருவேன் நெஞ்சிலே அன்பு மலர் கொண்டு வருவேன் அதுவேண்டும்,<br>இதுவேண்டும் என உன்னை ஒருபோதும் அல்லல் செய்யாது தொழுவேன் | சிங்கை முருகன் பாமாலை |
| நம்பிக்கை | ஒரு படியேறிட முருகன் அவன்<br>உயர்படியில் நம்மை ஏற்றிடுவான்<br>மறுபடி மறுபடி மலையேற<br>மலைக்கும்படி நம்மை மாற்றிடுவான் | பழனிமலை படியேறு |

| **உணர்வு** | **பாடல் வரிகள்** | **பாடல் பெயர்** |
|---|---|---|
| கோபம் | பாடாத பாட்டெல்லாம் பாடி அழைத்தாலும்<br>ஆடாதிருப்பதுவோ அருளும் வறண்டதுவோ<br>வாடா மருக்கொழுந்தே மலைப்பழனி வேலவனே<br>வாடா என அழைத்தேன் வருவாய் இதுசமயம் | சிங்காரமாலை |

இந்தப் பாடல்களை நீங்கள் பாடும்பொழுது, என்னென்ன உணர்வுகள் உங்களுக்கு ஏற்படும் என்பதை பாடிப் பார்த்து நீங்களே தெரிந்துகொள்ளுங்களேன்!

இம்மலரை குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டு தந்த ஞானம் கிராப்க்ஸ் பதிப்பகத்தாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

இம்மலரில் உள்ள பாடல்கள் அனைத்தையும் **www.bhajanai.com** என்ற இணையதளம் மூலம் செவிமடுக்கலாம் / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். கீழ்கண்ட QR படத்தின் (QR Code) உங்கள் தொலைபேசியில் ஸ்கேன் செய்து, தொலைபேசி செயலி வழியாகவும் பாடல்களை செவிமடுக்கலாம்.

முருகன் புகழ் பாடுவோம்!
முருகன் அருளை நாடுவோம்!!
ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

வேலும் மயிலும் துணை

*நன்றி,*
*இங்கணம்*
*சிங்கப்பூர் நகரத்தார் நண்பர்கள்*
*www.bhajanai.com நிர்வாகக் குழு*
*2024*

**விநாயகர் பாடல்கள் .......................................................................... 15**

ஐந்து கரத்தனை ஆனைமு கத்தனை .................................... 15
கணபதி என்றிட கலங்கும் வல்வினை ..................................... 15
பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை ............................... 15
வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள் ..................... 15
விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்................ 15
வேழமுகத்து விநாயகனைத் தொழ........................................... 15
மங்களத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா! ............. 16
உள்ளமதில் நலங்கூட ஓங்குபுகழ் வளங்கூட ........................... 16
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார் ........................................................................................ 17
ஆனை முகன் சன்னிதி அது கொடுக்கும் நிம்மதி .................. 17
சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜய ஜய..................................... 18
ஓம் கணேச பாஹிமாம் ............................................................... 19
தொந்திக் கணபதி வா வா வா..................................................... 19
சீதக் களபச் செந்தா மரைப்பூம் ................................................. 20
எள்ளுப் பொரித்த பொரியும்......................................................... 22
கதியென அருள்வாய் சரணம் கணேசா..................................... 23
வளர் சிகையைப் பராபரமாய் வயங்கு ..................................... 24
பூஜை செய்து உனைத் தொழுவோம் கணபதி ராஜா ............ 26
மங்களம் அருள்வாய் வினாயகா!.................................................. 26
மங்களம் அனைத்தையும் தந்தருளும் அப்பனே..................... 27
நெஞ்சுருக வேண்டியே ................................................................ 28
சிந்தையில் உறைந்திட்ட சிங்கையின்....................................... 29
கணபதியே எங்கள் கணபதியே...................................................... 30
எமையாளும் ஐங்கரனே ............................................................... 31
ஜெய ஜெய கணபதி ஜெய ஜெய கணபதி .............................. 32
அருளே உருவான ஆனைமுகத்தோனே ................................... 33
அதிகாலை உனை மனதிலே........................................................ 35
மூத்தவனே வா முருகன் சோதரா.............................................. 37
அபிஷேகம் அபிஷேகம்................................................................ 38
ஓம் ஓம்கார வடிவே....................................................................... 41

**சிவன் பாடல்கள் ...................................................................................... 44**

ஐந்தெழுத்து சிவபெருமான் ஆட்சிசெய்யும் பீடமாம் ........... 44
சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி .................................. 45
அதிகார நந்தியே முழுதாக நம்பினேன் .................................. 46
அங்கும் இங்கும் எங்குமாய் ........................................................ 48

உன்னையன்றி வேறுதெய்வம் உள்ளம் எண்ண வில்லையே ........ 49
கல்லில்செய்த யானைக்குக் கரும்பு தன்னையளித்தவா ... 50
கருணையின் வடிவே கைலாச லிங்கம் ........ 52
யுகங்களைக் கடந்த பரம்பொருள் லிங்கம் ........ 52
சிவகைலாசா பரமேசா ........ 54
சிவாய நம ஓம் சிவாய நம ஓம் ........ 55
ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர! ........ 55
வருக வருக வைத்தீசா ........ 56
மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ........ 58
**கிருஷ்ணன் பாடல்கள் ........ 63**
அகரம் முதலே அழியாப் பொருளே ........ 63
குழந்தையாக மீண்டும் கண்ணன் பிறக்கமாட்டானா........ 68
**பைரவர் பாடல்கள் ........ 69**
தனந்தரும் வயிரவன் தளரடி பணிந்திடின் ........ 69
**ஆஞ்சநேயர் பாடல்கள் ........ 71**
உள்ளம் உருக, விழிசெருக, ........ 71
ராமநாமம் பாடுகின்ற ஆஞ்சநேயனே ! ........ 73
ஓதிய நாவில் உணர்ந்தவர் நெஞ்சில் உலாவிடும் ராமஜெயம் ........ 74
**பெருமாள் பாடல்கள் ........ 75**
ஆதிசேஷா அனந்தசயனா ........ 75
திருப்பதி மலைமேல் இருப்பவனே - ........ 75
சகலலோக சாட்சியாகி சகல வேத சாரமாகி ........ 76
**ஐயப்பன் பாடல்கள் ........ 78**
அகமும் குளிரவே அழைத்திடுவோமே ........ 78
பவனி வாராரிங்கே சுவாமி சரணம் ஐயப்பா ........ 79
சாமியே ஐயப்போ ........ 80
ஹரிவராஸனம் ஸ்வாமி விச்வமோஹனம் ........ 81
அச்சன் கோவில் அரசே என் அச்சம் தீர்க்கவா ........ 82
தேடுகின்ற கண்களுக்குள் ஓடிவரும் சுவாமி........ 82
கோடி சூரியன் உதிக்கும் மலை........ 83
அய்யன் அருள் உண்டு என்றும் பயமில்லை ........ 84
தந்தன தாளம் போடப்பா ! ........ 84

**அம்மன் பாடல்கள் ........................................................................ 86**

கருவிலே திருவுடைய நல்லறிவா ளர்தமது ............................ 86
எள்ளுப்பூ மூக்கு எழிற்குவளையம் பூக்கண்கள்..................... 96
அண்டங்கள் ஏழினோ டேழும் அப் பாலுமாய்........................ 101
சித்திர விதானமுடன் திருமதில் கோபுரம்,............................ 122
கருங்குளம் தேவியே உனைப்பாட எந்தனுக்குக்.................. 125
நாட்டமிகு தேவியாம் நானிலம் போற்றிடும்.......................... 127
மாணிக்கத் தேரினிலே.......................................................... 132
குருவின்றி வித்தையைக் கற்றவன் நெஞ்சிலே .................... 133
நல்லதைச் சொல்லென்றும் நல்லதே செய்யென்றும் ......... 140
வஞ்சிசிவ காமவல்லி வாடா மலர்மங்கை............................. 140
கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் ......................... 141
சந்தனம் குங்குமம் ஜவ்வாது திருநீறில் ................................. 142
முத்துமணி மண்டபம் ரெத்தினச் சிம்மாசனம்..................... 142
ஆதிசிவன் உடல்மீது பாதியுடல் பெற்றிட்ட ........................... 143
மீன்கொடி பறக்கவே மேதினி சிறக்கவே............................... 143
மலையரசி மாதரசி மங்காத புகழரசி .................................... 144
ஆட்டங்கள் ஆடியே அகிலத்தை ஆண்டிடும் ........................ 144
மஞ்சள் முகத்தழகும் மத்தியிலே பொட்டழகும் ................... 145
முல்லையுடன் மல்லிகை முத்தார அணிபூட்டி ...................... 145
ஆழிசூழ் உலகத்தை அன்பாலே காத்திடும்........................... 146
பூக்காட்டில் மணம் பரப்பி புகழ்க் காட்டில் வீற்றிருக்கும் . 146
இமயத்தில் பிறந்தாலும் இதயத்தில் வாழ்கின்ற.................. 147
சிங்காரச் சிற்றாடை சிகப்பு நிறப்பட்டாடை......................... 147
தித்திக்கும் திருக்கோயில் சிங்காரப் பொற்கோயில் ......... 148
மாலவன் மலைவீட்டில் மணிச்சங்குப் பூபாளம் ................... 148
கொஞ்சிடும் நெல்வளம் கொழித்திடும் பல்வளம்............... 149
வைரமுடி கிரீடங்கள் வானத்தை முத்தமிட ........................... 149
சந்தனம், குங்குமம் சவ்வாது திருநீரில்.................................. 150
உள்ளத்தின் ஆசையை ஒப்பற்ற ஓசையாய் ......................... 150
கற்கண்டுத் தமிழ்ச் சோலை காரையம் பதியாளும் ........... 151
வித்துக்கு வித்தாக வேதத்தின் சொத்தாக ............................ 151
விரிசடை வேந்தனின் வேல்விழி நாயகி ................................ 152
கோட்டைவாழ் நகரத்தார் கொண்டாடிப் போற்றிடும் ...... 152
கோட்டையம்மன் திருவிழா .................................................. 157
காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி .......................... 158
எட்டுவகை லெட்சுமியால் ஏராளமான செல்வம்.................. 159
மங்கள ரூபிணி மதியணி சூலினி .......................................... 160

கற்பகமே! கற்பகமே! கற்கண்டுப் பெட்டகமே! .................... 162
அம்மா கலைவாணி-எனக்கு அருள்வாய் மகராணி! .......... 162
புத்தகத்து உள்ளுறை மாதே! .................................................. 164
ஸ்ரீசக்ர பீடத்தில் ராஜேஸ்வரி ................................................. 165
ஸ்ரீசக்ர வாசினி சிம்மாசனி........................................................ 165
செந்தாமரை மலரில் திகழ்கின்றவள்........................................ 166
ஒருகோடி சந்திரனின் ஒளியானவள் ........................................ 167
கூரை தான் வேண்டாது, கொலு வீற்றிருக்கும் தாயே! ........ 167
அம்மா மதுரை மீனாக்ஷி............................................................ 168
தையல்நாயகி அம்மா தையல்நாயகி-என்றும்..................... 169
தங்கரதம் ஏறி வரும் மங்களச் செல்வி-தமிழ் ........................ 170
உறவை மறந்தாலும் உணவை மறந்தாலும் .......................... 171
குங்குமத்தை அணிந்திருக்கும் தாயே ...................................... 171
காஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி........................................... 172
அம்மா முத்துமாரி - எங்கள் ....................................................... 172
கமுகு பலாவும் வாழையும் நெல்லும் ..................................... 173
கற்பூர நாயகியே ! கனகவல்லி,.................................................. 176
ஆக்கும் தொழில் ஐங்கரன் ஆற்ற நலம்.................................. 178
காணுகின்ற இடமெலாம் கலந்துநிற்கும் தேவியே!............. 181
குங்குமத்தில் நீ குளித்து குவலயத்தை ஆள்கிறாய் ............ 182
மாரியாத்தா தாயே மாரியாத்தா-நல்ல .................................. 183
வருக வருக வருக வருக வடிவுடையம்மா-வரம்................... 184
மாலவன் மார்பில் நிற்கும் மங்கலக் கமலச் செல்வி .......... 185
செங்கதிர் ஒளிர்சிவ கங்கையாம் சீமையில் எங்களைக் . 191
ஆதியாய் அநாதியாய் அமைந்ததேவ தேவியே!................. 193
ஆதிபராசக்தி அம்மா அருள்வாய் தாயே நீ ........................... 194
ஆலயத்தை சுற்றிவந்தால் அருள்கிடைக்குமடி................... 195
உன்னெழில் கோலம், என்னிரு கண்ணில், ............................ 196
அன்னையென மதுரையில் அருளாட்சி செய்கின்ற........... 197
மண்ணிலே ஏர்கொண்டு மனிதர்கள் உழும்போது ............. 199
பொங்கிவரும் காவிரியாய் பூங்கருணை தன்னையே ...... 199
அரும்பாக மனத்திலே முளைத்திடும் ஆசைகள் ................. 200
சிற்றாடை இடையுடுத்திச் சிறுகுழந்தை கையெடுத்துச் .. 200
அஞ்சுமுகம் தோன்றுகையில் ஆறுதல் கரம்நீட்டி ............... 201
பற்றொன்று இல்லார்க்கே வீடருள் பரமனவன் ..................... 201
மந்திரமும் தந்திரமும் மருந்துமாய் ஆகியே .......................... 202
அரியோடு பிரம்மனும் அறியாத சிவனாரும்........................ 202
எங்கெங்கும் நிறைந் திருக்கும் .................................................. 203

காவிரி நதியின் கரையினிலே .................................................. 205
மேல் மருவத்தூரில் எங்கம்மா ஆதிபராசக்தி - நான் ........... 206
கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன் ...................... 208

**முருகன் பாடல்கள் ......................................................................... 209**

ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் வேலும் .......................... 209
வற்றாத பொய்கை வளநாடு கண்டு ....................................... 212
அரனுடைய நெற்றியில் அறுபொறிக ளாகவே........................ 215
வீதிசுற்றிக் கீழ்புறமும் கடலுங் கண்டேன் ............................ 223
கையகல நெஞ்சுண்டு ஆனால் உள்ளே.................................. 226
கந்தனே! கடம்பனே! கருத்தினில் உறைந்திடும்.................... 228
ஒருகால் நினைத்தாலும் இருகால் சிலம்பதிர ....................... 231
சிங்கை நகராளும் ஶ்ரீதண்ட பாணியே .................................. 233
மன்றாடி ஈன்றமகன் குன்றக்குடி முருகன் ............................ 237
அலைகடலுக்கப்பாலே மலைநாட்டில் அமைந்திருக்கும் . 237
சிறுவயது முதற்கொண்டே திருச்செந்தூர் முருகனை நான் ........................................................................................................ 238
துன்ன கயிலாய கிரி மேருகிரி கந்தமலை.............................. 238
சரவணையி லேபிறந் தாறுமுக வடிவான .............................. 239
தரணிதனில் அறுபத்து அறுகோடி தீர்த்தமும்....................... 239
செந்தூரில் விளையாடிச் சிறப்புக்கள் பலசெய்து................ 240
ஆனைமுகன் தம்பியே அம்பிகை பாலனே ........................... 240
ஆலோலம் பாடுகுற வள்ளியம்மை கழுத்தில் ....................... 241
வேலாவா கந்தாவா குமரா வாவா........................................... 242
ஆர் ஆர் இருக்கினும் என் கவலை மாற்றுவது ...................... 243
அள்ளிக் கொடுப்பதில் வல்லமை பெற்றவன்........................ 244
ஆனைமுக வாயும்மை அனுதினம் நம்பினேன் .................... 245
தமிழாலே அழைத்தவுடன் தாவும் பாலா ............................... 249
வண்டாடும் குழல்மாதர் கண்டாடும் மயில்மீதில் ............... 251
பூ மேவு சண்முக விலாசமும் மீராறு ........................................ 251
வானோங்கு தென்பழனி வளர்ந்தோங்கும் மன்னவனே... 256
வையா புரிநாட்டில் வளர்ந்திடுமென் னையனுக்கு ........... 258
வீடு விளங்கிடவே வெற்றிக் கொடிபெறவே .......................... 261
விண்ணாடும் நிலவொளியே..................................................... 263
மலைமாதின் மகனாகி மயிலேறி விளையாடி ..................... 264
சிக்கலைத் தீர்க்கின்ற சிங்கைநகர் முருகனே ...................... 269
கடல் தாண்டி வருவோரின் கண்ணீரைத் ............................. 269
வேல் வேல் வடிவேல் வேதாந்த வடிவேல்................................ 270

மரத்தாண்ட ஆண்டவா மனமிரங்கி அருளப்பா.................... 270
காவடியாம் காவடி கந்தவேலன் காவடி .................................. 272
சின்னச் சின்னக் காவடி செந்தில் நாதன் காவடி .................. 272
அகலமான பன்னாங்குடன் அணிவகுக்கும் காவடி............. 273
ஆண்டிமேல் ஆசையாய் ஓடையிலே-நல்ல ............................ 275
திருமகள் கலைமகள் மலைமகள் வடிவே.............................. 275
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே ............................................................ 277
தேவ கோட்டை நன்நகராம் ....................................................... 279
ஆடுதய்யா ஆடுதய்யா வெள்ளி ஊஞ்சல் ........................... 280
செட்டி நாட்டு நகரத்தார் ............................................................ 281
தாங்கரிய துன்பம் வந்தால் செந்தில் வடிவேலா-நீ ............. 281
அப்பன் பழநி அப்பனடா-அவன்.................................................. 282
துள்ளி விளையாடும் சின்னப் பிள்ளைமுகம் மறந்து .......... 283
அழைக்கட்டுமா சாமி அழைக்கட்டுமா!-அந்த ...................... 284
அலங்காரம் செய்திட்ட மயிலு -நம்ம ..................................... 286
மயில் வந்து ஆடுது மலைமேலே................................................ 286
தேவியை மணந்த இடம் பரங்கிரியாம் தேசம்...................... 287
ஈசனோடு பேசியது போதுமே...................................................... 288
வேலாட மயிலாட வேலாட மயிலாட......................................... 289
ஆடிப்பாடி உன்னைத்தானே தேடிவாரோமே........................ 290
சிங்கப்பூரில் தெண்டபாணி சிரித்து நிற்கிறார்..................... 291
அப்பா என்றால் முருகப்பா அய்யா என்றால் வேலய்யா ... 293
எத்தனை அலங்காரம் முத்தமிழ் முருகனுக்கு ...................... 294
அரோகரா அரோகரா சொல்லுங்க-அந்த .............................. 295
ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ ................................. 296
குன்றக்குடியினிலே காவடி அந்தக்......................................... 297
மயிலே மயிலே நீ ஆடு .................................................................. 297
மலைக்குடி வேலன் இன்று கடல்தாண்டினான்-லண்டன் . 299
தென்பழனி ஆலயம் தேவதேவன் கோபுரம்........................... 300
ஆறுபடை வீடழகா முருகா ......................................................... 301
மோதகம் நிவேதனம்: முஷிகம் உன் வாகனம்:...................... 303
பேர்படைத்த கந்தனே! பிரான்படைத்த செல்வனே ............ 304
திருத்தணி முருகன் நமக்கு வழித்துணை வருவான் ........... 306
திருத்தணி நோக்கி வருகின்றோம்-உந்தன் ........................... 306
சுட்டதிரு நீறெடுத்துத் தொட்டகையில் வேலேடுத்துத் ....... 308
பக்கமிரு மாதிருக்கச் சொக்கவெள்ளி வேலெடுத்துப் ....... 308
கொஞ்சுதமிழ்ப் பாமலைக்கும் நெஞ்சமெனும் பூமலைக்கும்............................................................................ 309

முத்துமணி மண்டபத்து மெத்தனவே பூவிரித்து .................. 310
எங்கள் குறை தீர்த்திடவே எந்நாளும் காட்சிதரும் .............. 311
பச்சை மயில் வாகனம் .................................................... 312
செந்தி லாண்டவா! திருச்செந்தூர் ஆண்டவா!...................... 314
முருகா உன்னை அழைக்கின்றேன் ...................................... 315
ஆடும் மயிலும் வாகனம் தான் ........................................... 315
சிங்கை நகரில் வீற்றிருக்கும்.............................................. 316
குன்றக்குடியில் அமர்ந்தவனே.............................................. 317
செந்தூர் கடலலை ஓரத்திலே .............................................. 318
தண்ணீர் மலை ஆண்டவனே ............................................... 319
வருவாய் முருகா வந்திடுக.................................................. 320
வாவா முருகா வடிவேலா ................................................... 321
நாளை வருவதை யாரறிவார்? ............................................ 323
மாம்பழம் கேட்டது இருபிள்ளை - அதை .............................. 326
சாய்ந்தாடு முருகா சாய்ந்தாடு............................................ 326
சொல்லச் சொல்ல நாவினிக்கும்........................................... 327
நல்ல தமிழ்ச் சொல் லெடுத்து நாளும் பாடு ........................... 330
சந்தமிகு செந்தமிழில் மாலை தொடுத்தேன் ......................... 330
தங்கரதம் ஒன்று இங்கு அசைந்து வரச்................................. 331
வேண்டும் வரம் தருவதில்வல்லவனாம்................................. 332
கல்லுக்குள்ளே ஒன்றுமில்லை என விருந்தேன் ..................... 333
அன்பு செயச் சக்தியெனும் அன்னையுண்டு ........................... 334
முருகா முருகா வேல்முருகா ............................................. 335
தங்கரதம் ஏறியே தைப்பூச நாளிலே .................................... 335
ஆனைமுகன் தம்பியவர் பவனிவருகிறார்.............................. 337
கந்த வேலை வணங்கு நம் கவலையெல்லாம் போக்க....... 338
ஆறுமுக வேலவா அழகுமுகம் காட்டிவா ............................. 339
செட்டிமக்கள் நாங்களெல்லாம் செந்தமிழால் ...................... 339
சிங்கைநகர் வேலவா சிக்கலெல்லாம் தீர்க்கவா.................. 340
தேனால் அபிஷேகம் நான் செய்ததின் பலனாலோ............. 340
திருத்தணி மலையில் அருத்தமாய் நின்று............................. 341
பழனி என்றசொல் எனக்கு ஜீவமந்திரம்-அதைப் ................. 342
ஆழவந்தவா என்னை ஆழவந்தவா....................................... 344
வண்ணமயில் ஏறிடும் வள்ளி மணவாளனே ......................... 345
சத்திய ஜோதி தெரியுதையா ................................................ 346
பாசி படர்ந்த மலை முருகையா ......................................... 347
ரோஜாப்பூ மணக்குதென்று ராஜாவுக்கு வாங்கிவந்தேன். 348
சிறுவா புரியில் முருகா உனது............................................. 349

ஆதிமூல முருகா, முருகா .......... 350
ஆடுமயில் ஏறிவிளை யாடும் வேலவன் .......... 350
சிவனுக்கு அழகான குடும்பம் - பெற்றோர்க்கும் .......... 356
ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுக வேலா .......... 358
செந்தமிழ் நாட்டுப் பக்தர் காணத் .......... 358
குன்றுதோர் ஆடிவரும் குமரனுடைய வேலுஇது .......... 360
மலரில் பிறந்து மலரில் வளர்ந்தவன் .......... 361
எத்தனையோ பிறவி பெற்று இன்னல் மிக நானும் பெற்றேன் .......... 362
அன்புமனம் கொண்டவனே ஆனைமுகன் சோதரனே .......... 362
பழனிமலை மேலே, ஓர் அழகுச் சித்திரம் ! .......... 363
முத்தான முத்துக் குமரா .......... 364
அரகரோகரா சுவாமி அரகரோகரா .......... 365
சிங்கார சிங்கையிலே .......... 366
வெள்ளிக்கிழமை பூஜையிலே வா முருகா வா! உனக்கு, ... 367
தென்பழனி ஆண்டவனைத் தேடிவந்தோமே - எங்கள் .......... 368
எங்கும் நிறைந்தவனே அரகரோகரா. .......... 369
சிங்கப்பூர் தண்டபாணி வருகவே - எங்கள் .......... 370
ஆடிவாரோமே உன்னைத்தேடி பாடிவாரோமே .......... 371
கந்தனுக்கு நன்றிசொல்ல வார்த்தையுமில்லை - சிங்கை. 373
ஞானம் செறிந்த மலை நல்லோர்கள் நாடுமலை .......... 374
ஒண்ணு ரெண்டு மூணு நாலு அஞ்சு ஆறுங்க .......... 375
மொட்டை போட்ட பக்தர் கூட்டம், .......... 376
கந்தன் போட்ட கணக்கு தெரியவில்லை நமக்கு .......... 377
தில்லை நாயகன் விழிப் பிள்ளையானவன் .......... 378
அலங்கார மண்டபத்தில் மணியோசை கேட்குது .......... 379
பண்டாரமாம் பண்டாரம் பழனிமலை பண்டாரம் .......... 381
கொஞ்சும் மொழியானாலும் - உன்னைக் .......... 382
படைநடக்குது படைநடக்குது வந்து பாருங்க-மூன்றாம் .... 383
கந்தசாமியே எங்கள் சொந்தசாமியே .......... 384
அப்பன் பெற்ற பிள்ளை ஒப்பு ஏதும் இல்லை .......... 385
ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுக வேலா .......... 385
தந்தனத்தான் தந்தனத்தான் தாளம் போடுங்க .......... 386
சிவனாரின் பிள்ளை கணநாத வள்ளல் .......... 387
வாருங்கள் தோழர்களே நீங்கள் பாடுங்கள் பாடல்களே ... 390
ஆண்டுகள் தோறும் தவறாமல் .......... 391
கருவறையில் முதன் முதலில் அவனை அறிந்தேன் .......... 394
வந்தான் வேலன் விளையாட .......... 395

படியேரப்பா படியேறு பழனிமலையதன் படியேறு............ 396
வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை.......... 397
பழனிமலைக்கு நான் வராமல் இருக்க முடியுமா................ 398
முத்துக்குமரா முத்துக்குமரா முத்துக்குமரா வா வா .......... 398
பழனியாண்டவா முருகா பழனியாண்டவா - இந்தப் .......... 399
எனதென எனதென எத்தனையோ ........................................ 400
கந்தனுக்கு அரோகரா - முருகனுக்கு அரோகரா .................... 402
சிங்கை நகரின் வேலவனே ............................................... 403
கலையான உன்னழகு கவியாகுமே...................................... 404
ஆவினன் குடியிலோர் ஆண்டி - நம் .................................. 405
உண்ணும்போது நீதானே சுவையைத் தருகிறாய்............... 405
காருற்றதென்பரங் குன்றமதில் விளையாடும் ..................... 406
ஆறார் படைவீட்டில் அமர்ந்திடும் என் அய்யனுக்கு ........... 409
முந்நூறாண்டாய் முருகனைத் தேடி .................................. 412
பூரணி பராசக்தி தேவி அம்மை தரும்.................................. 414
பாலனைப்போல் தோன்றுகின்றாய் பழநிவேலா................ 419
அப்பா அப்பா முருகப்பா .................................................. 420
சுப்ரமண்யம் சுப்ரமண்யம்................................................. 421
அரோகரா அரோகரா என்று சொல்லுங்கள்.......................... 422
சிங்காராமாய் அசைந்து வரும் ரதத்தை பாருங்க -............ 423
காவடி அமுதே பழந்தமிழே................................................ 424
ஷண்முக குரு நாதனே ...................................................... 430
நடக்க நடக்க சுகம் வேண்டும் ......................................... 431
காவடிக் கதை கேளு ........................................................ 432
அழகு அழகு அழகு நம் முருகன் அழகு.............................. 434
அழகைப் பாருங்கள் முருகன் அழகைப் பாருங்கள் ........... 435
வேலோடு மயிலாட கிரி நின்றவா ..................................... 437
அழகான பழனி மலை ஆண்டவா......................................... 437
கருணையின் உருவாய் நின்ற பழநியாண்டவா.................. 438
கோள்பிடித்த இறைவா முருகா பழநி பால குமார .............. 439
மங்கலங்கள் பொங்கிவர சஞ்சலங்கள் அந்து விழ ............ 439
ஆறுமுகம் பேரைச் சொல்லி காவடிய ஏந்து. ...................... 440
விளையாட வேலேந்தும் வேலன் ...................................... 441
நாட்டையாளும் நகரையாளும் பழனிஆண்டவா................ 442
ஆயிரம் கோயில் கொண்டவனே ........................................ 445
வள்ளி மணவாளனே, குன்றக்குடி வேலோனே...................... 445
புண்ணியம் தேடி, உன் பாதத்தை நாடி, .............................. 446
ஆடி வரும் அழகுப் பிள்ள, யாரதுன்னு பாரம்மா –................ 448

ஓதித்துதிக்கும் அடியார் துன்பம்யாவையும் உடனே .......... 450
திருமுடி ஆறும் இருமடமாதர் .......... 452
தொந்தியுடன் துதிக்கையுடன் துணைவரு வாயே .......... 453
உக்கியிட்டுக் கணபதியுன் துணையைக் கேட்டோம் .......... 455
சிங்கையம்பதியில் ஆலயம் கொண்டு .......... 457
தண்டா யுதபாணி பாதம் - அதில் .......... 458
அங்கையின் வேலே அங்கமாய்க் கொண்ட .......... 459
தங்க மயிலில் ஏறிவரும் .......... 461
சீர்மேவும் எட்டிக்குடி வாழும் வேல் வேல் .......... 466

**கருப்பர் பாடல்கள் .......... 471**

சங்கிலிநற் கருப்பன் நீ சார்ந்திட்ட பொருளும் நீ .......... 471
அழகான ராங்கியக் கோயிலுள் குடிகொண்டு .......... 472
முண்டாசுக் கட்டுண்டு முழுவல்ல வெட்டுண்டு .......... 473
அள்ளி முடிச்ச கொண்டையப்பா .......... 474
காக்கும் தெய்வமே-எங்கள் .......... 475
அய்யன் வாரார் மெய்யன் வாரார்-அழகர் .......... 476
கும்மியடி தமிழ்க் கும்மியடி-அந்தக் .......... 477
அகன்ற பெரு நெற்றியும் அளவான கைகளில் .......... 479
செங்கீரை என்கின்ற சிங்கார சிற்றூரில் .......... 479
ஆறாவயல் விட்டு இரண்டுகல் தொலைவிலே .......... 480
சங்கிலிக் கருப்பனே சாம்பிராணி வாசனே .......... 480
சேவைகள் செய்வோரைச் சீர்சிறக்க வைத்திடும் .......... 482
சீராரும் செந்தமிழால் தினந்தோறும் மாலைகட்டி .......... 482
கருப்பா உன்னை அழைக்கின்றேன் .......... 484
வந்தான் கருப்பன் விளையாட .......... 485
மணக்கும் புகையில் மறைந்திருப்பான் .......... 486
கார் வளரும் மேனியாய் கருப்பண்ண சாமியே .......... 487
ஆயன் என அன்றுவந்த ஆய்பாடி நந்தன் மனை .......... 488
தாராளமாகவே உந்தன் பொற்கோவிலைத் .......... 489
வா கருப்பா வா கருப்பா வா கருப்பா வா வா .......... 490
அருள்மழை மேகமே அணையிலா வேகமே .......... 491

**திருப்புகழ் .......... 495**

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி .......... 495
நாத விந்துக லாதீ நமோநம .......... 495
முத்தைத்தரு பத்தித் திருநகை .......... 496
விறல்மார னைந்து மலர்வாளி சிந்த .......... 497

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற ............................ 497
முத்துநவ ரத்நமணி பத்திநிறை சத்தியிட .............................. 498
வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள் ................................. 498
சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ் .......................... 499
ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ........................... 499
அவனிதனி லேபி றந்து மதலையென வேத வழ்ந்து............. 500
சந்ததம் பந்தத் தொடராலே.................................................... 500
தொந்தி சரிய மயிரே வெளிறநிரை.......................................... 500
தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந் ..... 501

**மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் .............................. 502**

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க! .................................. 502

**கோளறு திருப்பதிகம்............................................................ 505**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிக ................. 505

**வேல் மாறல்............................................................................ 508**

திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை ............. 508

**கந்தர் சஷ்டி கவசம் ............................................................ 515**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார் ...................................... 515

**108 போற்றி .......................................................................... 522**

ஓம் அப்பா போற்றி ................................................................. 522

**கட்டியம்................................................................................ 525**

சீர்வள ருங்கதிர் மாமலை மேவிய............................................ 525
சண்ட பிரசண்ட வீதண்ட மூதண்டகோ .................................. 525
சுத்தசாட்குண்ய, பரிபூரண, ...................................................... 526

**வாழ்த்து ................................................................................ 528**

சண்முகக் கடவுள் போற்றி சரவணத் துதித்தோய் போற்றி
.............................................................................................. 528

# விநாயகர் பாடல்கள்

## ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை

ஐந்து கரத்தனை ஆனைமு கத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே திருமூலர்

## கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை

கணபதி என்றிட கலங்கும் வல்வினை
கணபதி என்றிட காலனும் கைதொழும்
கணபதி என்றிட கரும மாதலால்
கணபதி என்றிட கவலை தீருமே -திருமூலர்

## பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியேநீ யெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந்தா -ஔவையார்

## வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது-பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. ஔவையார்

## விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணி விப்பான்-விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து. -கபிலர்

## வேழ முகம்

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே

# விநாயகர் துதி

மங்களத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா!
பொங்குதன வயிற்றோனே பொற்புடைய ரத்தினனே
சங்கரனார் தருமதலாய் சங்கடத்தைச் சம்கரிக்கும்
எங்கள்குல விடிவிளக்கே எழில்மணியே கணபதியே!

அப்பமுடன் பொரிகடலை அவலுடனே அருங்கதலி
ஒப்பில்லா மோதகமும் ஒருமனதாய் ஒப்புவித்து
எப்பொழுதும் வணங்கிடவே எமையாள வேண்டுமென
அப்பனவன் மடியமரும் அருட்கனியே கணபதியே!

பிள்ளையாரின் குட்டுடனே பிழைநீக்கும் உக்கியிட்டு
எள்ளளவும் சலியாத எம்மனத்தை உமக்காக்கித்
தெள்ளியனாய்த் தெளிவதற்குத் தேன்தமிழில்
போற்றுகின்றோம்
உள்ளியதை உள்ளபடி உகந்தளிப்பாய் கணபதியே

இன்றெடுத்த இப்பணியும் இனித்தொடரும் எப்பணியும்
நன்மணியே சண்முகனார் தன்னுடனே நீஎழுந்து
என்பணியை உன்பணியாய் எடுத்தாண்டு எமைக்காக்க
பொன்வயிற்றுக் கணபதியே போற்றியெனப்
போற்றுகின்றோம்!

*-துர்கை சித்தர்*

உள்ளமதில் நலங்கூட ஓங்குபுகழ் வளங்கூட
வெள்ளமெனப் பொருள்கூட வெற்றியது கைகூட
உள்ளுருகி யாம்முதலாய் உன்னடியிற் தெண்டனிட்டோம்
வெள்ளெருக்கு விநாயகனே வேண்டுநலந் தாருமையா

காதிரெண்டும் முறம்போல கண்ணிரண்டுங் கடுகுமணி
ஊதிவைத்த பெருவயிறு உன்னுருவம் யானை ஐயா
ஏதிடரும் வாராமல் எந்நாளுங் காப்பவனே
ஆதிசிவன் பாலகனே அருள்பொழியுங் கணபதியே

அப்பமுண்டு பொரிகடலை அவலுமுண்டு சீனியுண்டு
முப்பழமும் தேனுடனே மோதகத்துப் படையலுண்டு
தப்பாமல் எடுத்தமுறை சரியாக்கித் தருபவனே
எப்போதும் எமக்கருள எழுந்துவருங் கணபதியே.

*மீயன்னா சேவுகன்செட்டி*

# பிள்ளையார் வணக்கம்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் அருளைத் தரும் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் அருளைத் தரும் பிள்ளையார்

ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்

ஆறுமுக வேலவனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் தீர்த்து வைக்கும் பிள்ளையார்

மஞ்சளிலே செய்திடினும் மண்ணினாலே செய்திடினும்
அஞ்செழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்

அவல்பொரி கடலையும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றி உண்ணுவார் கண்ணைமூடித் தூங்குவார்.

கலியுகத்தின் விந்தையைக் காண வேண்டி அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார்.

# ஆனை முகன் சன்னிதி

பிள்ளையாரே பிள்ளையாரே பிள்ளையாரே பிள்ளையாரே
பிள்ளையாரே பிள்ளையாரே பிள்ளையாரே பிள்ளையாரே

ஆனை முகன் சன்னிதி அது கொடுக்கும் நிம்மதி
வாழ்வில்இனி நமக்குவரும் நல்லநேரம்தான்
வளர்ச்சியோடு வந்து சேரும் வசந்த காலம் தான்

கற்பகமாய் வீற்றிருப்பான் கை நிறைய பொருள் தருவான்
அற்புதத்தை அவனிடத்தில் வந்து பாரு
நீ ஆனைமுகன் பேரை எந்தநாளும் கூறு

ஆவணியில் சதுர்த்தியினில் ஐங்கரனைப்பார்த்துவிட்டால்
பூவுலகில் செல்வமெல்லாம் வந்து சேரும்
அந்த பிள்ளையார் அருள் இருந்தால் ஒன்று கூடும்

பிள்ளையார்பட்டி வந்தால் பெருமையெல்லாம் நமக்கு வரும்
நல்லதொரு தகவல் வரும் நாளையேதான்
நமக்கு நலம் யாவும் வரும் அடுத்த வேளைதான்

# கணபதி ஜய ஜய

சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜய ஜய
சீரிய யானைக் கன்றே ஜய ஜய
அன்புடை அமரரைக் காப்பாய் ஜய ஜய
ஆவித் துணையே கணபதி ஜய ஜய
இண்டைச் சடைமுடி இறைவா ஜய ஜய
ஈசன் தந்தருள் மகனே ஜய ஜய
உன்னிய கருமம் முடிப்பாய் ஜய ஜய
ஊர்நவ சந்தி உகந்தாய் ஜய ஜய
எம்பெரு மானே இறைவா ஜய ஜய
ஏழுகுலந் தொழ நின்றாய் ஜய ஜய
ஐயாக் கணபதி நம்பியே ஜய ஜய
ஒற்றை மருப்புடை வித்தகா ஜய ஜய
ஓங்கிய யானைக் கன்றே ஜய ஜய
ஔவியமில்லா அருளே ஜய ஜய
அஃகர வஸ்த்து ஆனவா ஜய ஜய
கணபதி என்வினை களைவாய் ஜய ஜய
ஙப்போல் மழுவொன் றேந்தியே ஜய ஜய
சங்கரன் மகனே சதுரா ஜய ஜய
ஞய நம்பினார் பாலாடிய ஜய ஜய
இடம்படு விக்கின விநாயகா ஜய ஜய
இணங்கிய பிள்ளைகள் தலைவா ஜய ஜய
தத்துவ மறைதெரி வித்தகா ஜய ஜய
நன்னெறி விக்கின விநாயகா ஜய ஜய
பள்ளியி லுறைதரும் பிள்ளாய் ஜய ஜய
மன்றுள் ளாடும் மணியே ஜய ஜய
இயங்கிய ஞானக்குன்றே ஜய ஜய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ஜய ஜய
இலவகக் கொம்பொன் றேந்தியே ஜய ஜய
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ஜய ஜய
அழகிய ஆனைக் கன்றே ஜய ஜய
இளமத யானை முகத்தாய் ஜய ஜய
இரகுபதி விக்கின விநாயகா ஜய ஜய

*-ஔவையார்*

# ஓம் கணேச
# ஓம் கணேச ஓம் கணேச



ஓம் கணேச பாஹிமாம்
ஓம் கணேச ஓம் கணேச
ஓம் கணேச ரக்ஷமாம்

ஜெய கணேச ஜெய கணேச
ஜெய கணேச பாஹிமாம்
ஜெய கணேச ஜெய கணேச
ஜெய கணேச ரக்ஷமாம்

ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச
ஸ்ரீ கணேச பாஹிமாம்
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச
ஸ்ரீ கணேச ரக்ஷமாம்

ஜெய கணேச பாஹிமாம்
ஸ்ரீ கணேச ரக்ஷமாம்
ஸ்ரீ கணேச ரக்ஷமாம்
ஜெய கணேச பாஹிமாம்

## தொந்திக் கணபதி

தொந்திக் கணபதி வா வா வா
வந்தே ஒரு வரம் தா தா தா

கந்தனின் அண்ணா வா வா வா
கனிவுடன் ஒரு வரம் தா தா தா
பானை வயிற்றுடன் வா வா வா
பணிந்தேன் ஒரு வரம் தா தா தா (தொந்தி)

குள்ளக் குள்ளனே வா வா வா
குண்டு வயிறனே வா வா வா
ஆனை முகத்துடன் வா வா வா
அவசியம் ஒரு வரம் தா தா தா (தொந்தி)

எல்லாம் அறிந்த கணபதியே
எவ் வரம் கேட்பேன் தெரியாதா
நல்லவன் என்னும் ஒரு பெயரை
நான் பெறவே வரம் தா தா தா (தொந்தி)

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசைப் பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்,

பேழை வயிறும், பெரும்பாரக் கோடும்,
வேழ முகமும், விளங்குசிந் தூரமும்,
அஞ்சு கரமும், அங்குச பாசமும்,
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்,

நான்ற வாயும் நாலிரு புயமும்,
மூன்று கண்ணும், மும்மதச் சுவடும்,
இரண்டு செவியும், இலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்

சொற்பதம் கடந்த துரிய மெய் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூக்ஷிக வாகன!
இப்பொழு தென்னை யாட்கொள்ள வேண்டித்

தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே,
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து,

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்,
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே

உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்,

கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து,
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி,
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,

ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி

ஆறா தாரத் தங்குச நிலையும்!
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே,

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்,
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி,
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்,

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்,

சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்,

கருத்தினிற் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக் கருளி,
என்னை அறிவித் தெனக்கருள் செய்து,
முன்னை வினையின் முதலைக் களைந்து,

வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து,
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தி, என் செவியில்

எல்லை இல்லா ஆனந் தமளித்,
தல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்,
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி,

அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக, விரைகழல் சரணே.

## பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை

எள்ளுப் பொரித்த பொரியும்
இடித்தவல் தன்னிற் கலந்து
வள்ளிக் கிழங்கைத் திருத்தி
வாழைப் பழத்தை யுரித்து ( 1 )

உள்ளிய பாகுந் திரட்டி
உண்ணும் படியே தருவோம்
கள்ளத் திருமால் மருகா
கணபதி சப்பாணி கொட்டாயே ( 2 )

ஆறுதேங்கா யவல் தூணி
அதற்குத் தகுந்த எள்ளுருண்டை
நூறு குடலை மாம்பழம்
நொடிக்கு மளவி லமுது செய்ய ( 3 )

வல்ல பிள்ளாய்
ஆடாய் பாடாய் சங்கீதம்
அடியேன் காணநின் றாடாயே
சண்டப் பெருச்சாளி யேறி ( 4 )

சடுகுடு வென்ன வுலாவி
இண்டை யிளம்பிறை சாய
இணங்கிய கொம்போ ரிரண்டுத
அண்டத் தமரர் துதிக்க ( 5 )

அடைக்கலங் காத்த பிரானாரே
குண்டைக் கணபதி நம்பி
குடங்கையாற் சப்பாணி கொட்டாயே
பொழுது விடிந்தது பொழுது ( 6 )

போய்த் திருமலை மேலேற வேண்டும்
ஏறி மலர்ந்தபூக் கொய்ய வேண்டும்
கொய்து திருமுடி சாத்த வேண்டும்
சாத்திக் கைகட்டி நிற்க வேண்டும் ( 7 )

நின்று திருவிளக் கேற்ற வேண்டும்
ஏற்றி அரஹர வென்ன வேண்டும்

ஐயா கணபதி நம்பி
ஆயிர நாம முடையாய் ( 8 )

பொய்யில்லா மெய்யுரைப்பாய்
போன தெல்லாந் தருவாய்
வெள்ளித் தாலம் பூசிவைத்து
வேண்டும் படியே யிட்டுண்டு ( 9 )

பள்ளிக் கேற்க நடவாய்
பாக்கியஞ் செய்த பிள்ளாய்
பிள்ளாய் பிள்ளாய் பேருடையாய்
பிரம மென்னும் பெயருடையீர் ( 10 )

பிள்ளைகள் தங்கள் பிரானாரே
இருந்தீரே பிரானாரே
எங்கள் மனது கலங்காதே
பள்ளித் தடுக்குங் கையேடும் ( 11 )

படிக்குஞ் சுவடியும் பரிந்தெடுத்துத்
துள்ளித் திரியுங் கால்தன்னை
சுகமே நிறுத்தும் பிரானாரே
ஓடாதே ஒளியாதே ( 12 )

இட்டதே சோறும் பெற்றதே கறியும்
உண்டு தூங்கிப் பூசைமுடித்து
வெள்ளிமுளைக்கப் பள்ளிக்குவாரும் ( 13 )

## கணேச சரணம்

கணேச சரணம் சரணம் கணேச!
கணேச சரணம் சரணம் கணேச

வேலும் மயிலும் துணை

கதியென அருள்வாய் சரணம் கணேசா
கருணையின் வடிவே சரணம் கணேசா
சக்தியின் மைந்தா சரணம் கணேசா
சாஸ்தா குருவே சரணம் கணேசா



முதல்வனும் நீயே சரணம் கணேசா
முனிதொழும் தேவா சரணம் கணேசா
மூத்தவன் நீயே சரணம் கணேசா
மூஷிக வாகன சரணம் கணேசா

அகந்தையை அழித்திடும் சரணம் கணேசா
அன்பில் உறைந்திடும் சரணம் கணேசா

கஜமுகனநீயே சரணம் கணேசா
அடியார்க் கருள்வாய் சரணம் கணேசா

ஐந்து கரத்தோனே சரணம் கணேசா
வேழ முகத்தோனே சரணம் கணேசா
பார்வதி பாலகனே சரணம் கணேசா
பக்தருக் கருள்வாய் சரணம் கணேசா

## விநாயகர் கவசம்.

வளர் சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிக சவுந்தரதேகம்
மகோத்கடர் தாம் அமர்ந்து காக்க
விளரற நெற்றியை என்றும் விளங்கிய
காசிபர் காக்க புருவம் தம்மைத்
தளர்வில் மகோதரர் காக்க
தடவிழிகள் பால சந்திரனார் காக்க.
கவின் வளரும் அதரம் கசமுகர் காக்க
தாலம் கணக் கிரீடர் காக்க
நவில்சி புகம் கிரிசை சுதர் காக்க
நனிவாக்கை விநாயகர் தாம் காக்க
அவிர் நகை துன் முகர் காக்க
அள்எழிற் செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுரு இளங்கொடி போல் வளர்மணி
நாசியைச் சிந்தி தார்த்தர் காக்க.
காமருபூ முகந் தன்னைக் கணேசர்
நனி காக்க களம் கணேசர் காக்க
வாமம் உறும் இருதோளும் வயங்கு கந்த
பூர்வ சர்தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாயகன் காக்க
இதயந் தன்னைத் தோம் அகலுங் கணநாதர் காக்க
அகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க
பக்கம் இரண்டையும் தராதரர் காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கிலிங்கம்
வியாள பூடணர் தாம் காக்க
தக்க குய்யம் தன்னை வக்கிரதுண்டர் காக்க
சகனத்தை அல்லல் உக்க கணபன் காக்க
ஊருவை மங்களமூர்த்தி உவந்து காக்க

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க
இரு பதம் ஏகதந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசாதனர் காக்க
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூரகர் காக்க
விரல்பதும அத்தர் காக்க
தேழ்கிளரும் நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க
அக்னியில் சித்தீசர் காக்க
உமா புத்திரர் தென்திசை காக்க
மிக்க நிருதியிற் கணேசர் காக்க
விக்கின வர்த்தனர் மேற்கென்னுந் திக்கதனிற் காக்க
வாயுவிற் கச கர்ணன் காக்க
திகழ் உதீசிதக்க நிதிபன் காக்க
வடகிழக்கில் ஈச நந்தனரே காக்க
ஏகதந்தர் பகல்முழுதும் காக்க
இரவினும் சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கினகிருது காக்க
இராக்கால பூதம் உரு வேதாளம்
மோகினிபேய் இவையாதி உயிர் திறத்தால்
வருந்துயரும் முடிவிலாத வேகமுறு பிணி பலவும்
விலக்குப் பாசாங்குசர் தாம் விரைந்து காக்க
மதிஞானம் தவந்தானம் ஒளி
புகழ்குலம் வண்சரீர முற்றும்
பதிவான தனம் தானியம் கிருதம்
மனைவி மைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வாயுதர் காக்க
காமர் பவுத்திரர் முன்னான
விதியாரும் சுற்றமெல்லாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க
வென்றி சீவிதம் கபிலர் காக்க
கரியாதி எல்லாம் விகடர் காக்க
என்றி இவ்வாறு இதனை முக்காலமும்
ஓதிடன் நும்பால் இடையூறொன்றும்
ஒன்றுறா முனிவர்காள் அறிமின்காள்
யார் ஒருவர் ஓதினாலும்
அன்று ஆங்கவர் தேகம் பிணியற வச்
சிரதேக மாகி மன்னும்

*விநாயகர் கவசம் முற்றும்*

## கணபதி ராஜா!

கணபதி ராஜா கணபதி ராஜா
கணபதி ராஜா கணபதி ராஜா

பூஜை செய்து உனைத் தொழுவோம் கணபதி ராஜா
புன்சிரிப்பாய் நீ வருவாய் கணபதி ராஜா
காலமெல்லாம் உனைத் தொழுவோம் கணபதி ராஜா
கருணையுடன் நீ வருவாய் கணபதி ராஜா

கற்பகம் போல் கருணை செய்யும் கணபதி ராஜா
கவலையெல்லாம் களைந்தெறியும் கணபதி ராஜா
கந்தனுக்கு முன் பிறந்த கணபதி ராஜா
கலியுகத்தின் கண்மணியே கணபதி ராஜா

கலையனைத்தும் கண்டளிக்கும் கணபதி ராஜா
கற்றவர்க்கு களிப்பருளும் கணபதி ராஜா
நால்வேதப் பொருளான கணபதி ராஜா
நாத பிந்து கலாதீதி கணபதி ராஜா

வேழ முக நாயகனே கணபதி ராஜா
வினைகளெல்லாம் தீர்ப்பவனே கணபதி ராஜா
ஓங்காரப் பொருளாம் நீ கணபதி ராஜா
ஓம் சக்தி விநாயகனே கணபதி ராஜா

## வீரகணபதி

வினாயகா வினாயகா வீர கணபதே வினாயகா
வினாயகா வினாயகா வீர கணபதே வினாயகா

மங்களம் அருள்வாய் வினாயகா!
மகிழ்ச்சியைத் தருவாய் வினாயகா!
எங்குலம் காக்கும் வினாயகா!
ஏற்றங்கள் தருவாய் வினாயகா

மலைமேல் திருச்சியின் வினாயகா!
கலைவளம் தருவாய் வினாயகா!
கற்பக மூர்த்தி வினாயகா!
பொற்பதம் பணிந்தோம் வினாயகா

மூஷிக வாஹன வினாயகா!
மோதக ஹஸ்த்தா வினாயகா!
ஸ்யாமள கர்ணா வினாயகா!
விளம்பித சூத்ரா வினாயகா!

வாமன ரூபா விநாயகா!
மகேஸ்வர புத்ரா விநாயகா!
விக்ன விநாயக விநாயகா –
உன் பாத நமஸ்தே விநாயகா!

*சகல கலாவல்லி மாலை (குமரகுருபரசாமிகள்)*

## மங்களம் அனைத்தையும் தந்தருளும் அப்பனே

மங்களம் அனைத்தையும் தந்தருளும் அப்பனே
மகிமைமிகும் என் ஐயனே
வாசித்து நேசித்து பூஜித்து வருவோரை வாழ்வித்து
வரும் ஈசனே,... கணேசனே

சங்கர சதாசிவ சடாதரன் மைந்தனே
சக்தி சிவகாமி மைந்தனே
தன்னடி பணிந்தாரை தலைமேல் சுமந்தருளும்
தையவுடைய மகாராசனே... கணேசனே

இங்கு நான் உன்னையே துணையாக நம்பினேன்
எனது குறையாவும் தீர்ப்பாய்
இப்போதும் எப்போதும் தப்பேதும் வாராமல்
என்னை நீ காத்து அருள்வாய்... கணேசனே

பங்கய வயல்சூழும் பிள்ளையார்பட்டி வளர்
பரம கருணா மூர்த்தியே
பதினாறு பேறுகளும் அடியேனும் பெறுமாறு பாலித்தருள்
வாழ்த்தியே... கணேசனே



# லயன் சித்தி விநாயகர்



நெஞ்சுருக வேண்டியே
நிலம்பட சிரம் தொட்டு
வேண்டுவோர் நெஞ்சமெல்லாம்

ஐங்கரன் தோன்றுவான்
ஆனைமுகம் காட்டுவான்
ஆனந்தமாக வந்து

கொஞ்சுதமிழ் மொழியிலே
குறைதீர்க்க வேண்டுமென
கும்பிட்டு பண்ணிசைத்தால்

சங்கரன் பெற்றமகன்
சக்தியவள் முதற்பாலன்
சர்வமும் காத்துநிற்பான்

சிங்கப்பூர் நகரிலே
சீர்விளங்கும் நகரத்தார்
சிறப்பிற்கும் துணைபுரிந்தாய்

எங்குல நாயகா
ஏழைப் பங்காளனே
எழிலரசே காக்க வேண்டும்

மங்கை சிவகாமியும்
மண்ணாளும் ஈசனும்
மகனாக ஈன்ற போதும்

எங்கும் நீ முதற்தெய்வம்
எல்லோர்க்கும் முதல் கடவுள்
எங்கள்குறை தீர்க்கவேண்டும்

லயன் சித்தி ஆலயத்தை
வலம் வந்து வணங்குவோர்
பயம்விட்டுப் போகுதப்பா

காலையும் மாலையும்
கால்வலிக்க சுற்றுவோர்
கண்டபலன் கோடியப்பா

ஆலயம் சுற்றியே ஆனைமுகம் உன்னையே
அன்பர்கள் வேண்டுகின்றோம் வேளையிது ஆண்டவா
வேழமுக நாயகா வினைதீர்த்துக் காக்க வேண்டும்

# வளமான வாழ்வு தருவாய்

சிந்தையில் உறைந்திட்ட சிங்கையின்
நாயகன் சீர்மிகு லயன் சித்தியே
விந்தைபல புரிந்திடும் வித்தகன் நீயென
வியந்துதான் போற்றி நின்றோம்

பக்தரின் மனதினில்சக்தியைத் தந்திடும்
முத்தான உனது வடிவம்
முத்தமிழ்போல் முனைப்புடன் சன்னிதியில்
வீற்றிட்டமுழுமுதற் கடவுள் நீயே.

உடைத்திட்ட தேங்காயின் சிதறிட்ட பாகம்
போல்தீமைகள் உடையுதைய்யா
எடுத்திட்ட பணியுமே ஏற்றமுடன் நடத்திட
நித்தம் உன்தயவு வேண்டும்

வாடிய மனங்களுன் ஆலயம்
வந்தபின் மாறிய மாயமென்ன
தேடிய செல்வமும் கோடியாய் குவிந்திட்ட
பெருமைதான் என்னஎன்ன?

உமையவள் மைந்தனே உனதருள்
வேண்டியே உளமாறப்பாடுகின்றோம்
எமைக்காத்து அருள்புரிய இமைப்பொழுதில்
வந்திடுவாய் தாமதமேதுமின்றி

கியோங் சேக் சாலையின் முகப்பினில்
அமர்ந்திட்ட கற்பக மூர்த்தி நீயே.
வாழ்வாங்கு வாழ்ந்திடவேஉன் வாசல்
வந்திட்டோம் வளமான வாழ்வு தருவாய்

ஆலயம் சுற்றுவோர் காரியம் கைகூட
நிச்சயம் நீ வருவாய்
தோள் கொண்டு அவர்களின் குறைகளை
நீயுமே முற்றிலும் களைந்தெறிவாய்

வேல்கொண்டு உனைக்காண புனர்பூச
நாளிலே அன்பான தம்பி வருவான்
பார்போற்றும் உன்புகழைப்பாடிட
எமக்கு நீ முத்தான தமிழ்தருவாய்.

நல்லோர் நலம்பெறவும் நன்மை பெருகிடவும்
ஆனைமுகன் அருள் வேண்டுமே
எல்லோரும் அன்புடனேஅமைதியாய் வாழ்ந்திட
நீ அருகினில் வந்திடப்பா

வாயாறப் பாடிடுவோம் உளமாற வணங்கிடுவோம்
வினையறுக்க வந்துவிடு
நோயற்ற வாழ்வுடனே சோர்வற்ற மனதையும்
தந்தெம்மை காத்திடப்பா.

*-அழகு சுந்தரம்*

## சிங்கப்பூர் லயன்சித்தி கணபதி

கணபதியே எங்கள் கணபதியே
சிங்கப்பூர் லயன்சித்தி கணபதியே!
கணபதியே எங்கள் கணபதியே
சிங்கப்பூர் லயன்சித்தி கணபதியே!

கணபதியே எங்கள் கணபதியே
சிங்கப்பூர் லயன்சித்தி கணபதியே
கவலைகளைத் தீர்த்தருளும் கணபதியே
வரங்கள்பலத் தந்தருளும் கணபதியே

மூஷிக வாகனப் பெருமானே
முத்தான மூவுருவம் கொண்டவனே
தேனமுதத் தமிழால் தினமுன்னையே
வணங்கி மகிழ்வோம் ஆனைமுகனே

சீனரையும் கவர்ந்திட்ட உன்னாலயம்
இன்னல்கள் தீர்த்திடுமோர் கைலாயம்
உன்ஆலய வலம்வரும் அனைவருக்கும்
உன்னருளால் வாழ்வென்றும் இனிதாகும்

ஆலயம் சிறிதே ஆனாலும்
உன்புகழ் சிங்கையில் ஓங்கிநிற்கும்
உன்சன்னதியில் உடைபடும் தேங்காயும்
உன்அற்புத சக்தியின் புகழ்பாடும்

சிங்கையில் தைப்பூசத் திருவிழாவை
துவங்கிவைத்து நீ மகிழ்வாய்
காவடிப் பிள்ளைகள் அனைவருக்கும்
திடமும்பலமும் நீ அருள்வாய்

வேல்முகங் கொண்ட வேலவனும்
உன்திருவடி போற்றிப் புறப்படுவான்
வெள்ளி இரதத்தின் மீதமர்ந்து
அழகான் சிங்கையை வலம்வருவான்

உன்னருள் பெற்று உவகையுடன்
இரதத்துடன் காவடிகள் பவனிவரும்
காண்பவர் கண்களும் பனித்துவிடும்
பக்தியில் அவர்மெய் சிலிர்த்துவிடும்

தினமுன் கருணையால் துயிழெழுந்தோம்
எதிலும் முதலில் உனைத்தொழுதோம்
உன்னருளாலே தான் உயர்ந்தோம்
உன்புகழ் பாடித் தாள்பணிந்தோம்

*வெ. இராகவன், பாகனேரி, 2009.*

## ஸ்ரீ லயன் சித்தி விநாயகர் காப்பு

எமையாளும் ஐங்கரனே
சிங்கை நகர் வாசனே
வேலனின் சோதரனே
முயற்சியின் முழுவடிவே
வெற்றியின் முதற்படியே
எமைக் காக்கும் அரனே
சிங்கப்பூர் ஸ்ரீ லயன் சித்தி
கணபதியே நின் பாதமலர்
போற்றி பணிவோர்க்கு
எந்நாளும் ஜெயமே !!

*ம. தேனப்பன். காரைக்குடி*



# லயன் சித்தி கணபதி தாள் சரணம்

ஜெய ஜெய கணபதி ஜெய ஜெய கணபதி
லயன் சித்தி கணபதி தாள் சரணம்,
ஜெய ஜெய கணபதி ஜெய ஜெய கணபதி
லயன் சித்தி கணபதி தாள் சரணம்,

ஜெய ஜெய கணபதி ஜெய ஜெய கணபதி
லயன் சித்தி கணபதி தாள் சரணம்.
ஜெய ஜெய கணபதி ஜெய ஜெய கணபதி
லயன் சித்தி கணபதி தாள் சரணம்,
எங்கள் லயன் சித்தி கணபதி தாள் சரணம்

அழகே அமுதே அற்புதக் களிறே
அருளை சுரக்கும் அற்புதமே
அற்புதம் நிகழ்த்தி ஆனந்தம் அளித்து
அடியவருக்கு அருளும் கணபதியே. ( ஜெய )

கணபதி என்றிட கலங்கும் வல்வினை
உணர்ந்தே தாள்கள் பணிந்திடுவோம்
கவலைகள் போக்கி தடைகள் அகற்றி
தொழில்கள் சிறக்க அருள்வோனே ( ஜெய )

அருளை சுரந்து அகிலம் காக்கும்
முப்பெரும் இறைவன் அம்சமன்றோ
நலம் பல அருளி நல்வழி காட்டும்
மும்மூர்த்தி வடிவம் உனதன்றோ

உன்னை வணங்கி தொடங்கும் அனைத்தும்
உயர்வினை அடையச் செய்வோனே
அழகிய சிங்கை கியோங் சாய்க் சாலையில்
ஆலயம் கொண்ட முதல்வோனே (ஜெய)

முதலும் முடிவும் அறிந்தவன் நீயே
தும்பிக்கை நாயக பெரியோனே
சமத்துவம் போற்றும் சிங்கையில் நீயோ
சகலரும் வணங்கும் பெருமானே

பெருமான் உன்னை வணங்கிட வணங்கிட
செல்வ வளங்கள் தருவோனே
வலம்வரும் பக்தர் மனதினை அறிந்து
வரம்பல அருளும் நாயகனே (ஜெய)

நாயகன் உன்னிடம் சரண் புகுந்தால்
ஏற்றம் தந்து மகிழ்விப்பாய்
இனிக்கும் மோதகம் படைக்கும் பக்தர்
வாழ்வினில் நலங்கள் தழைக்கவைப்பாய்

தழைக்கும் அறங்கள் செழிக்கும் தொழில்கள்
லயன்சித்தி கணபதி அருளாலே
நாகர், நாமம், வேலும் கொண்ட
அவனது சன்னதி வாருங்கள் (ஜெய)

வந்தே வணங்கி அவனடி போற்றி
அருளினை பெற்று உயர்ந்திடுங்கள்
முப்பெரும் மூர்த்தி அருளிடும் கீர்த்தி
பாட்டினில் சொல்லிட முடியாது

சொல்லிட முடியா அருளை சுரக்கும்
சிங்கையின் முதல்வோன் அடிபணிவோம்
சீனரும் போற்றும் சித்தி விநாயகன்
சீர்மிகு வாழ்வை அருளிடுவான். (ஜெய)

கதி.பழ.லெ. சக்திகுமார்

## ஸ்ரீ லயன் சித்தி விநாயகர் சுப்ரபாதம்

அருளே உருவான ஆனைமுகத்தோனே
அன்புடன் துயில் எழுவாய்
வைகறை புலர்கின்றதே
வரத மூர்த்தியே துயில் எழுவாய்
சூர்யோதயத்தைக் காண
சித்தி கணபதியே துயில் எழுவாய்
மலர்கள் பூக்கின்ற ஓசையிலே
மகா கணபதியே துயில் எழுவாய்
மங்கள ஓசை கேட்டு
மகோதரனே துயில் எழுவாய்
இஷ்ட தெய்வமே ஸ்ரீ லயன் சித்தி
விநாயகரே திருப்பள்ளி எழுந்தருள்வாய்!!!

திருவாசல் திறந்து தரிசனம்
தந்திட திரியம்பகனே துயில் எழுவாய்
பக்தர்களின் பன்னீர் ஏற்றிட
பாசாங்குசதரனே துயில் எழுவாய்
பட்டாடை பள பளக்க

திரியம்பகனே துயில் எழுவாய்
அவல் பொரி கொழுக்கட்டை
அன்போடு ஏற்கவே துயில் எழுவாய்
முக்கனித் தட்டுடன் பக்தர்கள் காணிக்கையை
ஏற்றிட கணநாதனே துயில் எழுவாய்
இஷ்ட தெய்வமே ஶ்ரீ லயன் சித்தி
விநாயகரே திருப்பள்ளி எழுந்தருள்வாய்!!!

நாள்தோறும் நாங்கள் பாடவே
நர்த்தன கணபதியே துயில் எழுவாய்
ஆலயத்தை வலம் வரும் பக்கதர்களைக்
காண கணபதியே துயில் எழுவாய்
சங்கடங்கள் போக்கிடும் சதுர்த்தி
நாயகனே துயில் எழுவாய்
பாவங்கள் போக்கிடும் புரம்மண்ணை
கணபதியே துயில் எழுவாய்
ஆவலாய் காத்திருக்கும் பக்தர்களுக்கு
தரிசனம் தர சித்தி கணபதியே துயில் எழுவாய்
இஷ்ட தெய்வமே ஶ்ரீ லயன் சித்தி
விநாயகரே திருப்பள்ளி எழுந்தருள்வாய்!!!

அரசமரத்தடி விரும்பியே அமர்ந்திடும்
அரிமருகனே துயில் எழுவாய்
சாணியில் பிடித்தாலும் சாந்தமாய்
வந்தருளும் சச்சிதாநந்தனே துயில் எழுவாய்
எருக்கம்புல் மாலையை அன்போடு
ஏற்றிடும் ஏரம்பனே துயில் எழுவாய்
கவலைகள் நீக்கிடும் கரிமுகத்து
கணபதியே துயில் எழுவாய்
பணிவோரின் நெஞ்சிலே கருணையோடு
அமர்ந்திடவே துயில் எழுவாய்
இஷ்ட தெய்வமே ஶ்ரீ லயன் சித்தி
விநாயகரே திருப்பள்ளி எழுந்தருள்வாய்!!!

ஏழரைச் சனியிலிருந்து காக்கும்
சித்தி கணபதியே துயில் எழுவாய்
பக்தர்களின் குறை தீர்க்கும்
பரசுபாணியே துயில் எழுவாய்
பாலர்களின் கல்விக்கு அருள் புரியும்
கருணைக் கடலே துயில் எழுவாய்
உலகத்தை காத்து நல்லருள்

புரியும் பார்வதி புதல்வனே துயில் எழுவாய்
அறியாமல் செய்த பிழைகளை
மன்னிக்கும் மகாகணபதியே துயில் எழுவாய்
இஷ்ட தெய்வமே ஸ்ரீ லயன் சித்தி
விநாயகரே திருப்பள்ளி எழுந்தருள்வாய்!!!

அகந்தையை அகற்றிடும் அங்குச
பாசதரனே துயில் எழுவாய்
தலைமுறை தழைக்கச் செய்யும்
தரணிதரனே துயில் எழுவாய்
முக்தியினை வழங்கிடும்
மூஷிஹ வாகனனே துயில் எழுவாய்
ஆலயத்தை 108 வலம் வருவோரின்
ஆயுளைக் கூட்டிடும் ஆகிசனே துயில் எழுவாய்
வேண்டியதைத் தந்திடும் கற்பக விருட்சமே
தொந்திக் கணபதியே துயில் எழுவாய்
இஷ்ட தெய்வமே ஸ்ரீ லயன் சித்தி
விநாயகரே திருப்பள்ளி எழுந்தருள்வாய்!!!

*ம. தேனப்பன். காரைக்குடி*

## ஸ்ரீ லயன் சித்தி கணபதி அருள வேணும்

அதிகாலை உனை மனதிலே
தொழுதபடி துயில் எழ வேணும்
உந்தன் திரு நாமத்தை ஜெபித்தபடி
அந்நாளை தொடங்க வேணும்..
முதல் வேலையாய் உன் சன்னதி
வாசல் வரவே வேணும்
உன்னை மனமுருகித் தொழுத பின்
அன்றைய பணியை தொடங்க வேணும்
அடியார்கள் தரும் அமுது பிரசாதத்தை
உண்டே வாழ வேணும்
சிங்கையின் சக்தியே ஸ்ரீ லயன் சித்தி கணபதியே
நீயே அருள வேணும்!!!

சந்ததிகள் நின் சன்னிதானமே
அபயமென உணர வேணும்
ஞான சொரூபனே நீயே அவர்களின்
கல்விக்கு உதவ வேணும்

உலகமறியும் உத்தமர்களாய் வாழ்வில்
என்றுமே சிறக்க வேணும்
எல்லா செயல்களிலும் நீயே முன்னின்று
வெற்றியுடன் முடிக்க வேணும்
மமதையில்லா மானிடர்களாய் பிறவிப்
பெருங்கடலை கடக்க வேணும்
சிங்கையின் சக்தியே ஸ்ரீ லயன் சித்தி கணபதியே
நீயே அருள வேணும்!!!

ஆட்டுவிக்கும் ஏழரை சனியின்
தாக்கத்தை குறைக்க வேணும்
கோள்களின் பெயர்ச்சினால் ஏற்படும்
அல்லல்கள் களைய வேணும்
நினைக்கின்ற நல்ல செயல்களை
நடத்திடும் காரியசித்தி வேணும்
தீமைகளை தடுக்க வாசலில்
கணபதியே நிலையாயிருக்க வேணும்
மலை போல் அத்தனை செல்வங்களும்
நின் அருளால் குவிய வேணும்
சிங்கையின் சக்தியே ஸ்ரீ லயன் சித்தி கணபதியே
நீயே அருள வேணும்!!!

உலகத்தை குளிர்விக்க பருவம்
தவறாது மழை பொழிய வேணும்
எல்லா நீர் நிலைகளும் என்றுமே
ரொம்பி வழிய வேணும்
காடு கழனி நன்றாய்
செழிப்புற்று இருக்க வேணும்
பசி என்பதே அறியாது
எல்லா உயிரினங்களும் புசிக்க வேணும்
நோய் நொடி இல்லாத பேரின்ப
பெரு வாழ்வு கிடைக்க வேணும்
சிங்கையின் சக்தியே ஸ்ரீ லயன் சித்தி கணபதியே
நீயே அருள வேணும்!!!

அன்பும் அறனுமாய் குடும்பங்கள்
நன்மக்களாய் அமைய வேணும்
தர்மம் செய்யும் தயாள
குணம் நிறைய வேணும்
என்றுமே நல்லதை நினைக்கின்ற

வேலும் மயிலும் துணை

மனத்தினை அருள வேணும்
இப்பிறவி முழுவதும் உன் ஆலயத்தை
நூற்றியெட்டு வலம் வரும் வலிமை வேணும்
பதினாறு செல்வங்களும் நிறைவாய் பெற்று
பல்லாண்டு வாழ வேணும்
சிங்கையின் சக்தியே ஸ்ரீ லயன் சித்தி கணபதியே
நீயே அருள வேணும்!!!

*ம. தேனப்பன். காரைக்குடி*

## ஸ்ரீ லயன் சித்தி விநாயகர் வருகை

கருணை உள்ளம் கொண்டவனே சிங்கை நாயகா
காத்தருள வேண்டும் எங்கள் லயன் சித்தி விநாயகா
கருணை உள்ளம் கொண்டவனே சிங்கை நாயகா
காத்தருள வேண்டும் எங்கள் லயன் சித்தி விநாயகா

**ஆனைமுகா வருக வருக ... அபய கரம் தருக தருக (2)**
**வேழமுகா வருக வருக வேண்டும் வரம் தருக தருக**

மூத்தவனே வா முருகன் சோதரா
ராமர் வலம் அமர்ந்தவனே பாலச்சந்திரா
மூஷிகனே வா... முக்கண் பாலகா
முப்பெரும் உருவம்கொண்ட லயன் சித்தி விநாயகா ..1

**ஆனைமுகா வருக வருக ... அபய கரம் தருக தருக (2)**
**வேழமுகா வருக வருக வேண்டும் வரம் தருக தருக**

கருணை உள்ளம் கொண்டவனே சிங்கை நாயகா
காத்தருள வேண்டும் எங்கள் லயன் சித்தி விநாயகா
கருணை உள்ளம் கொண்டவனே சிங்கை நாயகா
காத்தருள வேண்டும் எங்கள் லயன் சித்தி விநாயகா

வேலும் மயிலும் துணை

எலியின் மீது ஏறி விளையாடி வா வா
நாகருடன் அமர்ந்திருக்கும் ஐங்கரனே வா
நூற்றியெட்டு வலம் வந்தோம் காண வா வா
வேலனுடன் வீற்றிருக்கும் லயன் சித்தி விநாயகா ..2

**ஆனைமுகா வருக வருக ... அபய கரம் தருக தருக (2)**
**வேழமுகா வருக வருக வேண்டும் வரம் தருக தருக**

கருணை உள்ளம் கொண்டவனே சிங்கை நாயகா
காத்தருள வேண்டும் எங்கள் லயன் சித்தி விநாயகா
கருணை உள்ளம் கொண்டவனே சிங்கை நாயகா
காத்தருள வேண்டும் எங்கள் லயன் சித்தி விநாயகா

மொழிகளையும் கடந்து நிற்கும் ஏரம்பனே வா
சீனர் மலாய் மக்கள் மனம் இடம்பிடித்தவா
வினையை தீர்க்கவா விக்னநாயகா
சந்ததியை காக்க வேண்டும் லயன் சித்தி விநாயகா ..3

**ஆனைமுகா வருக வருக ... அபய கரம் தருக தருக (2)**
**வேழமுகா வருக வருக வேண்டும் வரம் தருக தருக**

கருணை உள்ளம் கொண்டவனே சிங்கை நாயகா
காத்தருள வேண்டும் எங்கள் லயன் சித்தி விநாயகா
கருணை உள்ளம் கொண்டவனே சிங்கை நாயகா
காத்தருள வேண்டும் எங்கள் லயன் சித்தி விநாயகா

*வெங்கட் கணேசன், நாச்சியார்புரம்*

## ஸ்ரீ லயன் சித்தி விநாயகர் அபிஷேகம்

(கோவிந்தா கோவிந்தா மெட்டு)

கணநாதா கணநாதா
காத்தருள்வாயே கணநாதா

அபிஷேகம் அபிஷேகம்
லயன்சித்திக்கு அபிஷேகம்
எழில் கொஞ்சும் கணபதிக்கு
பன்னீராலே அபிஷேகம்
காலை மாலை வேளையிலே
லயன்சித்திக்கு அபிஷேகம்
எழில் கொஞ்சும் கணபதிக்கு
பன்னீராலே அபிஷேகம் (கணநாதா)

அலங்காரம் அலங்காரம்
லயன்சித்திக்கு அலங்காரம்
சிவ சக்தி மைந்தனுக்கு
சந்தனக் காப்பு அலங்காரம்
எளியோர் வேதனை வேரறுக்கும்
லயன்சித்திக்கு அலங்காரம்
சிவ சக்தி மைந்தனுக்கு
சந்தனக் காப்பு அலங்காரம் (கணநாதா)

நைவேத்யம் நைவேத்யம்
லயன்சித்திக்கு நைவேத்யம்
மூஷிஹ வாகன கணபதிக்கு
மோதகம் வைத்து நைவேத்யம்

சிங்கை நகருக்கு படியளக்கும்
லயன்சித்திக்கு நைவேத்யம்
மூஷிஹ வாகன கணபதிக்கு
மோதகம் வைத்து நைவேத்யம் (கணநாதா)

ஆராதனை ஆராதனை
லயன்சித்திக்கு ஆராதனை
வேதனை தீர்க்கும் கணபதிக்கு
தூபத்தில் தீபத்தில் ஆராதனை
ஒளியமயமான வாழ்வைப்பெற
லயன்சித்திக்கு ஆராதனை
வேதனை தீர்க்கும் கணபதிக்கு
தூபத்தில் தீபத்தில் ஆராதனை (கணநாதா)

அர்ச்சனை அர்ச்சனை
லயன்சித்திக்கு அர்ச்சனை
அன்பர்களைக் காக்கும் கணபதிக்கு
சகஸ்ரநாம அர்ச்சனை
சீருடன் வாழ்க்கை நடந்திடவே
லயன்சித்திக்கு அர்ச்சனை
அன்பர்களைக் காக்கும் கணபதிக்கு
சகஸ்ரநாம அர்ச்சனை (கணநாதா)

வாகனம் வாகனம்
லயன்சித்திக்கு வாகனம்
ஊழ் வினை அகற்றும் கணபதிக்கு
மூஞ்சூறில் வாகனம்
வெற்றிப்பாதையில் நாம் சென்றிடவே
லயன்சித்திக்கு வாகனம்
ஊழ் வினை அகற்றும் கணபதிக்கு
மூஞ்சூறில் வாகனம் (கணநாதா)

ஜெப ஹோமம் ஜெப ஹோமம்
லயன்சித்திக்கு ஜெப ஹோமம்
சங்கடங்கள் தீர்க்கும் கணபதிக்கு
சதுர் லெட்ச ஜெப ஹோமம்
வேண்டும் வரங்கள் பெறுவதற்கு
லயன்சித்திக்கு ஜெப ஹோமம்
சங்கடங்கள் தீர்க்கும் கணபதிக்கு
சதுர் லெட்ச ஜெப ஹோமம் (கணநாதா)

பிரகாரம் பிரகாரம்
லயன்சித்திக்கு பிரகாரம்
ஏற்றம் தந்திடும் கணபதிக்கு
நூற்றியெட்டு பிரகாரம்
நினைத்த காரியம் கனிந்திடவே
லயன்சித்திக்கு பிரகாரம்
ஏற்றம் தந்திடும் கணபதிக்கு
நூற்றியெட்டு பிரகாரம் (கணநாதா)

சொர்ண கவசம் சொர்ண கவசம்
லயன்சித்திக்கு சொர்ண கவசம்
காக்கும் கற்பக கணபதிக்கு
கண்களை கவரும் சொர்ண கவசம்
வாழ்வில் செல்வங்கள் பெருகிடவே
லயன்சித்திக்கு சொர்ண கவசம்
காக்கும் கற்பக கணபதிக்கு
கண்களை கவரும் சொர்ண கவசம் (கணநாதா)

நமஸ்காரம் நமஸ்காரம்
லயன்சித்திக்கு நமஸ்காரம்
ஸ்ரீ லயன் சித்தி கணபதிக்கு
அனேக கோடி நமஸ்காரம்
சுகமாய் வாழ்கை அமைந்திடவே
லயன்சித்திக்கு நமஸ்காரம்
ஸ்ரீ லயன் சித்தி கணபதிக்கு
அனேக கோடி நமஸ்காரம் (கணநாதா)

*ம. தேனப்பன். காரைக்குடி*

வேலும் மயிலும் துணை



# ஸ்ரீ லயன் சித்தி விநாயகர் 108 போற்றி

ஸ்ரீ லயன் சித்தி விநாயகரே போற்றி

ஓம் ஓம்கார வடிவே
ஓம் ஞானத்தின் நாயகா
ஓம் கிட்டங்கி பிள்ளையாரே
ஓம் அன்னையின் காவலனே
ஓம் பார்வதி வடித்த பாலகனே
ஓம் மஞ்சளில் தோன்றியவனே
ஓம் ஊற்றம் பார்க் பிள்ளையாரே
ஓம் அமைதியின் சொரூபமே
ஓம் வேலனுடன் அமர்ந்தவனே
ஓம் ராமனுடன் காட்சிதருபவனே
ஓம் சீனர்கள் மனம்கவர்ந்தவனே
ஓம் நூற்றியெட்டு வலத்தில் மகிழ்பவனே
ஓம் பொன் பொருள் தருபவனே
ஓம் சிங்கைநகர் செல்வனே
ஓம் சங்கத்தமிழ் நாயகனே
ஓம் முடியாமுதலே
ஓம் சிங்கை மக்களின் செல்லப்பிள்ளையே
ஓம் ஞானக்கொழுந்தே
ஓம் ஞானத்தை தருபவனே
ஓம் கிரகங்கள் தீண்டா கடவுளே
ஓம் தந்தைதாய் வலம்வந்தவனே
ஓம் மத்தள வயிறோனே
ஓம் பிள்ளையார்நோம்பின் நாயகனே
ஓம் சகோதர இலக்கணமே
ஓம் முப்பெரும் மூலவரே
ஓம் கருப்பட்டி பணியார பிரியனே
ஓம் திரட்டுப்பால் உண்டு திகைப்பவனே
ஓம் எருக்கம்பூ மாலை அணிபவனே
ஓம் ஆற்றல் தரும் அண்ணலே
ஓம் முனிவர்களை வழிநடத்தும் மூஷிகனே
ஓம் ஓம்கார சொரூபமாய் அமர்ந்தவனே
ஓம் தம்பியுடன் காட்சிதரும் தரணிதரனே
ஓம் நாகருடன் அருள்பவரே
ஓம் முக்கண்ணனிடம் போர் புரிந்தவனே
ஓம் ஆனைமுக அழகனே

ஓம் நர்த்தன பிரியனே
ஓம் சர்வலோக விநாயகனே
ஓம் சர்வமும் அறிந்தவனே
ஓம் சங்கடங்கள் களைபவனே
ஓம் சாரங்கபாணியின் மருகோனே
ஓம் வேதத்தின் பொருளே
ஓம் அகவல் கேட்டு மகிழ்பவனே
ஓம் பிரம்மச்சரிய மூர்த்தியே
ஓம் சுவாமிநாதனின் குருவே
ஓம் ஆறுபடை வீடு கொண்ட விநாயகா
ஓம் அபயம் அளிக்கும் ஆறுமுகன் சோதரனே
ஓம் வேதனையை வேரருக்கும் வேழமுகத்தோனே
ஓம் தீராநோயை களையறுக்கும் வைத்தியச்செல்வனே
ஓம் வினையில்லா வாழ்வுதரும் விநாயகப்பெருமாளே
ஓம் அன்புடையோர் உள்ளத்தில்  வீற்றிருப்பவனே
ஓம் பிள்ளைபேறு தரும் குமார கணபதியே
ஓம் அனைவர்க்கும் முதல்வனே
ஓம் சாந்தமூர்த்தியே
ஓம் கேட்கும் வரம் தரும் கணேசனே
ஓம் வினைகளை தீர்க்கும் விக்னேஷ்வரனே
ஓம் கல்வி கேள்வியின் நாயகனே
ஓம் உடல்நலம் தரும் கஜமுகனே
ஓம் தடைகளை தடுத்திடும் உச்சிஷ்ட கணபதியே
ஓம் ஞானத்தை அருளும் வித்யா கணபதியே
ஓம் அறிவாற்றலை தந்திடும் அங்குசபாணியே
ஓம் கோள்களை கடந்த கௌரிமைந்தனே
ஓம் சிங்கை மக்கள் பக்திக்கு செவிசாய்ப்பவனே
ஓம் நல்வழியை கைகாட்டும் கணநாதனே
ஓம் பெண்டிர் நலம்காக்கும் மங்களமூர்த்தியே
ஓம் ஒப்பற்ற வாழ்வுதரும் ஒற்றைக்கொம்பனே
ஓம் ஆதரவற்றோரை ஆதரிக்கும் அத்திமுகத்தோனே
ஓம் செல்வ வளம் தரும் லக்ஷ்மி கணபதியே
ஓம் வினையில்லா வாழ்வுதரும் விகடசக்ரனே
ஓம் காரியசித்தி அளிக்கும் சித்தி விநாயகனே
ஓம் இடறில்லா வாழ்வளிக்கும் வக்ரதுண்டனே
ஓம் மறுபிறப்பில்லா நிலைதரும் மகா கணபதியே
ஓம் கலியுகம் காக்கும் கணநாதனே
ஓம் தாளத்தில் லயப்பவனே
ஓம் வெற்றிக்கு  வழி காட்டும் விக்னநாயகனே

ஓம் பயத்தினை போக்கும் பரந்தாமன் மருகனே
ஓம் வேதத்தின் இலக்கணமே
ஓம் வேதநாயகனே
ஓம் வேதம் உரைப்பவனே
ஓம் அற வழியை காட்டும் ஆதிவிநாயகரே
ஓம் முழுமுதற் கடவுளே
ஓம் இன்னல்களை களையும் ஏகாந்தனே
ஓம் பிணியில்லா வாழ்வுதரும் கணபதியே
ஓம் சந்தன காப்பு அலங்காரத்தில் ஒளிர்பவனே
ஓம் திருவடி பணிவோரை காப்பாய்
ஓம் கணங்களின் அதிபதியே
ஓம் வளங்கள் நிறை வாழ்வுதரும் வக்ரதுண்டனே
ஓம் சதுர் லெட்ச ஜெப ஹோமத்தில் மகிழ்பவனே
ஓம் பிறவி மயக்கத்தை அறுப்பவனே
ஓம் முப்பழம் நுகரும் மூஷிகனே
ஓம் ஒளிமிகு வாழ்வளிக்கும் லக்ஷ்மி கணபதியே
ஓம் துன்பத்தை விரட்டும் தும்பிக்கை ஆள்வாரே
ஓம் எளியோரை காக்கும் ஏகாந்தனே
ஓம் கல்விக்கு அருள் புரிபவனே
ஓம் செல்வம் வழங்கும் செம்மலே
ஓம் அருகம்புல் மாலை அணிபவனே
ஓம் ஆணவத்தை அறுக்கும் ஆதிநாயகனே
ஓம் அனைத்தும் அறிந்தவனே
ஓம் ஞானம் அருளும் வித்யா கணபதியே
ஓம் பன்னீரபிக்ஷேக பிரியனே
ஓம் வரம் கொடுக்கும் வள்ளலே
ஓம் நாதத்தில் உறைபவனே
ஓம் முக்தியை தரும் மூஷிகனே
ஓம் அதிசய உருவம் கொண்டவனே
ஓம் சிங்கைநகரின் அண்ணலே
ஓம் கன்மத்தை வேரறுக்கும் கணநாதனே
ஓம் கோடாயுதத்தால் கொடுவினை கலைபவனே
ஓம் மாயை அழிக்கும் மகாகணபதியே
ஓம் மும்மூர்த்தியாய் காட்சி தருபவனே

*வெங்கட் கணேசன், நாச்சியார்புரம்*

# சிவன் பாடல்கள்



## வைத்தியநாதர் வணக்கம்

நமசிவாய நமசிவாய நமசிவாய மந்திரம்
நாவினுக்கு உகந்தநாமம் நமசிவாய மந்திரம்

ஐந்தெழுத்து சிவபெருமான் ஆட்சிசெய்யும் பீடமாம்
ஆறெழுத்து சரவணனும் காட்சிநல்கும் மாடமாம்
நைந்துவாழும் மக்களுக்கு நோய்நொடியைப் போக்கிட
நன்மருந்தைக் கொடுக்கவந்த நீலகண்டன் மந்திரம்

வைத்தியராய்ப் பணிபுரிந்து வையகத்தைக் காக்கவே
வயித்திய நாதனாக வந்துதித்தான் சங்கரன்
பைத்தியமும் பாதகமும் இங்குவந்து சேருமால்
பனிபோல விலகவைக்கும் பரமசிவன் மந்திரம்

தந்தைதாயும் தனயனோடு வாழுகின்ற வீடிது
சந்தனமும் பன்னீரும் கமகமக்கும் நாடிது
விந்தையோடு வியாதியெல்லாம் வேகமாக ஓடவே
வெற்றிவேலன் துணையிருக்கும் வீரசேகர் மந்திரம்

புள்ளிருக்கும் வேளூரென புனிதமிகு பூமியாம்
பூதநாத கணங்களுக்கும் கனிவு காட்டும் சாமியாம்
வள்ளிதெய்வானையோடு வரங்கொடுக்கும் முருகனை
வளர்த்தெடுத்து நமக்களித்த அம்மையப்பன் மந்திரம்.

நம்மதையல் நாயகியாள் நானிலத்தைக் காக்கவே
நங்கையரைத் தங்கையராய்ப் பேணிமிகப் போற்றிட
தம்முடைய குங்குமமும் திருச்சாந்து மண்ணுமே
சந்நிதியில் வழங்குகின்ற சுந்தரேசர் மந்திரம்

பாலன்எனப் போற்றிமகிழ் பாலாம்பாள் மகிழவே
வேலனவன் கோலமிகு சீலமுத்துக் குமரனாய்
ஞாலமீது ஞானமுடன் அய்யனடி பற்றியே
மக்கள்குறை தீர்க்கவந்த சொக்கநாதர் மந்திரம்

# நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர்

நந்தீஸ்வரா எங்கள் நந்தீஸ்வரா, நந்தீஸ்வரா எங்கள் நந்தீஸ்வரா



சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டு சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையுமே கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர்போக்க வந்த நந்தி

அருகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வருங்காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கும் வழங்கும் நந்தி
வரலாறு படைத்துவரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம்காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிவிட விளையும் நந்தி

வேந்தன் நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்கவைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருப்புன் கூரிலே சாய்ந்த நந்தி
செவிசாய்த்து அருள்கொடுக்கும் செல்வ நந்தி

கும்பிட்ட பக்தர் துயர் நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்விக்க எம் இல்லம் வருக நந்தி

# அதிகார நந்தியே

ஓம் நந்தி ஓம் நந்தி ஓம் நந்தி ஓம்

**காப்பு**

விந்தைபல புரிந்து வேந்தன் மாநகரில்
சிந்தை குடிகொண்டு சீர்தந்தாய் – நந்தீசா
உலகம் உய்விக்க உன்னருளை – நாளும்
நலமே தருவாய் நயந்து

அதிகார நந்தியே முழுதாக நம்பினேன்
அருள் தூவஓடி வாவா
அநியாயம் வீழவும் அசத்தியம் மாளவும்
அனுதினம் காக்க வாவா

கதியான துணையென்று கருதுமோர் நெஞ்சிலே
கருணையேநீ தந்துஆள வாவா
கற்பனைக்கு எட்டாத அற்புத தெய்வமே
கனிவோடு ஓடி வாவா

விதிவாசல் மாற்றியே வெற்றிகள் கூட்டியே
வேதனைகள் தீர்க்க வாவா
வினையோடு பகைநோய்கள் விலகவே எந்நாளும்
விரைந்து நீ ஓடி வாவா

சிதறாமல் எந்நாளும் செய்தொழில் சிறக்கவே
திருவருள் நீயும் தாதா
சீரான வேந்தன்நகர் அதிகார நந்தியே
தெய்வமே போற்றி போற்றி

தங்கமும் வெள்ளியும் தயவோடு எடுத்துநுதல்
தன்னிலே பொட்டு வைத்து
தரமான நவமணிகள் தாங்குமோர் சரட்டினை
தவழவே கழுத்தில் இட்டு

அங்கங்கள் குளிரவே ஆதரும் நெய்யினை
அள்ளியே அப்பி வைத்து
அலைகின்ற ஈஎறும்பு அண்டாத விந்தையை
அவனியிற் காட்டி வைத்து

குங்கும திலகத்தை சந்தன பீடத்தில்
குழைத்துமே நெற்றியில் வைத்து
கொம்பிலே காய்கனி நெற்கதிர் மணமலர்
கொத்தாகக்கட்டி வைத்து

சிங்கமோ என்றெண்ணச்செய்யுமோர் வடிவிலே
சிலிர்த்து வரும் நந்திதேவா
சீரான வேந்தன்நகர் அதிகார நந்தியே
தெய்வமே போற்றி போற்றி

நீருண்டு பாலுண்டு தேனுண்டு தெங்கிள
நீருண்டு பன்னீருண்டு
நிதமுண்டு அபிஷேகம் விதமுண்டு பசுவுண்டு
நீதேடும் நெய்யுமுண்டு

பேருண்டு புகழுண்டு நின்னருளை ஏத்திடும்
பேச்சுண்டு பெருமையுண்டு
பிரதோஷ நாளுண்டு பிரகார ஜனமுண்டு
சர்க்கரைப் பொங்கலுண்டு

தாருண்டு காணிக்கை தானுண்டு கழுத்திலே
தவழவோர் ஆடையுண்டு
தமிழுண்டு இசையுண்டு தவறாது எந்நாளும்
தமிழ்பாட நானுமுண்டு

சீர் என்றும் உனக்குண்டு, திருவருள் எமக்கருள்
திருநந்தி நீயுமுண்டு
சீரான வேந்தன்நகர் அதிகார நந்தியே
தெய்வமே போற்றி போற்றி



# அருள்மிகு நடராஜர் பதிகம்

ஓம் நமச்சிவாய ஓம் ஓம் நமச்சிவாய
ஓம் நமச்சிவாய ஓம் ஓம் நமச்சிவாய



அங்கும் இங்கும் எங்குமாய்
அமைந்த தேவதேவனே!
ஆதியாய் அநாதியாய்ச்
சமைந்த ஜோதி ரூபனே!

மங்களங்கள் யாவும்
நல்கும் அம்பிகை மணாளனே
மைந்தன் செய்யும்
பூஜையில் மகிழ்ந்தருள்நடேசேன!

எந்த இல்லம் ஆயினும் இருந்த இல் சிதம்பரம்
எடுத்த பீடம் ஆலயம் தொடுத்த கூரை கோபுரம்
செந்தமிழ்ச்சொல் மந்திரம் திருந்தும் அன்பே ஆகமம்
சிவந்தபாத பங்கயம் உவந்தருள் நடேசனே!

மன்றிலே எடுத்த கால் என் மனையிலும் எடுத்துவை
மனதிலே நினைத்த நன்மை விரைவிலே முடித்துவை
என்றும் தீமை அணுகிடாமல் ஈசனே தடுத்து வை
ஏத்தும் அன்பர்குழுவில் என்னைச் சேர்த்துவை நடேசனே!

ஆபயந்த ஐந்தினோடு பால் பழம் பஞ்சாமிர்தம்
ஆலைவாய்க் கரும்பு தெங்கு தேன் சுகந்த சந்தனம்
நீபயந்த யாவையும் நினக்களித்தேன் ஈசனே!
நேர்த்தியாய் அனைத்தும் ஆடி வாழ்த்துவாய் நடேசனே!

அட்டநாக பூஷணம் அளிக்க வல்லன் அல்லனே
ஆனை மான் சிறுத்தை வேட்டை ஆடவல்லன் அல்லனே
இட்ட மாலை ஆடையோடு தொட்டுவைத்த சந்தனம்
என்றும் நல்கவல்லன் வல்லன் கொண்டருள் நடேசனே!

வில்லினால் அடிக்கவோ வீசுகல் பொறுக்கவோ?
மிதித்த போதுகை பிரம்பை மேலும் நான் எடுக்கவோ?
நல்ல பிள்ளை என்னை ஆளும் நாதனும் நீ அல்லவோ?
நாளும் நான் படைத்த சொல்லும் பூவும் கொள்நடேசனே

ஆடநீ எடுத்ததாய் அறிந்தவர் இயம்புவார்
அல்ல அல்ல என் தலைமேல் சூட என்று சொல்கிறேன்
ஈடில்லாத தெய்வம் நீ இடப்புறம் எடுத்தகால்
எந்த நோக்கில் என்று சொல்ல வந்தருள் நடேசனே!

மழுவெடுத்(து) எதை விளக்க மன்றுதோறும் ஓடினாய்?
மதியெடுத்த சிரம் இருக்க மத்தனாய் ஏன் ஆடினாய்?
கழுதெடுத்து நடனம் ஆடும் காட்டில் என்ன தேடினாய்
கையில் நான் எடுத்த தூபம் கொள்ளுவாய் நடேசனே!

எடுத்த தூபம் ஆதியாவும் ஏற்றருள் மகேசனே!
இன்று நான் படைத்த யாவும் உண்ணுவாய் சபேசனே!
தடுத்த பண்டை வினையகற்றித் தாங்குவாய் சர்வேசனே!
சரணம் உன்னையன்றி ஏது? தாங்குவாய் நடேசனே!

வாழி நீபடைக்கும் தெய்வம் மலரணை அமர்ந்ததாம்!
வகுத்தளிக்கும் தெய்வம் கூட அரவணை கிடந்ததாம்!
ஊழிதோறும் ஐந்தொழில் உவந்து செய்யும் ஈசனே! ஓய்ந்து
சற்றென் நெஞ்சணைக் கண் சாய்ந்து கொள் நடேசனே!

ஓம் நமச்சிவாய ஓம் சிவாய நமரூபனே!
ஓதும் ஐந்து சபையில் ஆடும் பாதனே சங்கீதனே
வாமியாய்த் தலைத்த சிவகாமி காதல் நேசனே
மாறிலாத கருணை நீ வழங்குவாய் நடேசனே

*-அருட்கவி கு. செ. ராமசாமி*

## ஸ்ரீ வைத்தியநாதர் பதிகம்

ஓம் நமச்சிவாய ஓம் ஓம் நமச்சிவாய
ஓம் நமச்சிவாய ஓம் ஓம் நமச்சிவாய

உன்னையன்றி வேறுதெய்வம் உள்ளம் எண்ண வில்லையே
ஓசைகொண்ட தமிழினாலே பாடுவேன் உன் பிள்ளையே
அன்னை, பிள்ளை மழலையிலே அகம் குழைதல் போலவே
அணிய வேண்டும் எனது சொல்லும் ஆதி வைத்தியநாதனே.

தேசமெங்கும் கோயில்கள் திறந்து வைத்த வாயில்கள்
தேடும் அன்பர் யார்க்கும் இன்பம் கோடிநல்கும் மூர்த்திகள்
பூசைகொள்ளும் தேவர்கள் யாவையும் நின் கோலமே
போற்றும் என்னை வாழ்விலேமுன் னேற்றுவைத்ய நாதனே

ஓதும் நாலு வேதமும் உலாவு திங்கள், ஞாயிறும்,
உகந்த கந்தவேள், சடாயு உண்மை அன்பின் ராமனும்
பாதபூசை செய்யவே பலன் கொடுத்த ஈசனே
பாதிகொண்ட தையலோடு வாழி வைத்ய நாதனே

ஆலகால நஞ்சை நீ அமிர்தமாய் அருந்தினாய்
அடித்துவைத்த பன்றியின் இறைச்சியும் விரும்பினாய்
பாலன் நஞ்சு தேடவோ? பன்றிவேட்டை ஆடவோ?
படைத்தபா சுவைத்தருள் பராவும் வைத்ய நாதனே.

வாத, பித்த, சிலேட்டுமம் வகைக்கு நூறு நோய்க்குணம்
மனிதராசி அறிகிலாத புதிய நோய் தினம், தினம்
வேதனை வளர்ந்ததன்றி வென்றதோ மருத்துவம்?
மேலும் என்ன கூறுவேன்? கண் பாரும், வைத்ய நாதனே

ஆயுர்வேதம் ஆங்கிலம் அமைந்த சித்தவைத்தியம்
ஆனவேறு வகையிலும் அனேகமான பத்தியம்!
பாயும் நோயும் போனதோ? பலித்து நன்மை ஆனதோ?
பாவியேன் என் கூட்டத்தோடு பாரும் வைத்ய நாதனே.

அங்குமிங்கும் ஓடிஎன்ன? அகலவில்லை நோய்களே
ஆடி என்ன? பாடி என்ன? விலகவில்லை பேய்களே
மங்கைபாகன் நீயிருக்க எங்கு செல்வோம் சேய்களே?
மனமிரங்கி அருள்வழங்கு வாழி வைத்யநாதனே.

கண்ணில்லாத குருடருக்கும் கண்கொடுக்கும் ஈசனே
கால் இலாத முடவருக்குக் கால் கொடுக்கும் போஜனே
எண்ணிலாத நோயின் கூட்டம் இடமிலாமல் ஓடவே,
என்னுளே எழுந்தருள்வாய் அண்ணல் வைத்ய நாதனே.

சிந்தையில் இருந்த நோய் செயல்களால் விளைந்த நோய்
திசுக்குள், தோல், நரம்(பு), எலும்பு, குருதியில் செறிந்த நோய்
எந்த நோயும் போக்குவாய் எதிர்வராமல் ஆக்குவாய்
இசைந்தகந்த புரியிலே அமர்ந்த வைத்யநாதனே.

நாம, ரூப பேதமற்ற ஞான ஜோதி மூர்த்தியே
நாளும் உன்னை அன்புசெய்து பாடுகின்றேன் வாழ்த்தியே
சாமவேத கீதனே சடாயு போற்றும் பாதனே
தஞ்சம், தஞ்சம், தஞ்சம் என்னைத் தாங்கு வைத்ய நாதனே.

## சொக்கநாதர் பதிகம்

ஓம் நமசிவாய ஓம்! ஓம் நமசிவாய!
ஓம் நமசிவாய ஓம்! ஓம் நமசிவாய!

கல்லில்செய்த யானைக்குக் கரும்பு தன்னையளித்தவா
கரும்புவில்லை எடுத்தவனை கண்களாலே எறித்தவா
அல்லல்படும் அன்பர்வாழ்வில் ஆனந்தமே அருளவா
அங்கயற்கண்ணி போற்றும் ஆலவாய்ச் சொக்கேசனே

நரிகளெல்லாம் பரிகளாக நாடகம் புரிந்தவா
நாரையதும் முக்திகாண நலம்புரிந்த நாயகா
அரியும்அறியாத் திருவடியை அடியவர்க்கு காட்டவா
அங்கயற்கண்ணி போற்றும் ஆலவாய்ச் சொக்கேசனே

வந்திதந்த பிட்டுக்கே வருந்தி மண்ணைச் சுமந்தவா
வாதவூரர் பாடல்கேட்டு முதுகில் புண்ணைக் கொண்டவா
எந்தநாளும் உன்னையென்னும் ஏழைக்கருள் செய்யவா
அங்கயற்கண்ணி போற்றும் ஆலவாய்ச் சொக்கேசனே

தமிழும் வாழ வேண்டியே தலையில் விறகு சுமந்தவா
தலையில் கங்கை மதியும்சூடி கயிலை மலை அமர்ந்தவா
அமிழ்தம் அந்த அமரர்கொள்ள ஆலகாலம் உண்டவா
அங்கயற்கண்ணி போற்றும் ஆலவாய்ச் சொக்கேசனே

அக்னியில் இட்ட ஏடும் அழிந்திடாமல் காத்தவா
அலைகளாடும் வைகையிலும் அவற்றைக்கரை சேர்த்தவா
முக்தி தரும் முதல்வனென மதுரைநகர் அமர்ந்தவா
அங்கயற்கண்ணி போற்றும் ஆலவாய்ச் சொக்கேசனே

ஆயுதங்கள் ஏதுமின்றி புறங்கள் மூன்றும் எரித்தவா
ஆணவமே கொண்ட பிரம்மன் தலையிலொன்று பறித்தவா
காயுமான மனங்களையும் கனியுமென மாற்றவா
அங்கயற்கண்ணி போற்றும் ஆலவாய்ச் சொக்கேசனே

பார்த்தனோடு போட்டியிட்டுப் பன்றிவேட்டை ஆடினாய்
பாண்டியனின் சொல்லைக்கேட்டுக் கால்கள்மாறி ஆடினாய்
ஆர்த்தெழுந்த அலைகள்போல அன்புகாட்ட ஓடிவா
அங்கயற்கண்ணி போற்றும் ஆலவாய்ச் சொக்கேசனே

வன்னிமரம் கிணறுகூட வந்துசாட்சி கூறினாய்
வஞ்சியர்கள் சாபம்தீர வளையல் தன்னைச் சூட்டினாய்
கன்னியர்கள் மாலை சூட கருணையோடு இங்குவா
அங்கயற்கண்ணி போற்றும் ஆலவாய்ச் சொக்கேசனே

*ஊட்டி மெய்யப்பன், காரைக்குடி.*

# சிவலிங்கம்

அரஹர அரஹர அரஹர லிங்கம்
சிவசிவ சிவசிவ சிவசிவ லிங்கம்



கருணையின் வடிவே கைலாச லிங்கம்
காசினி காக்கும் விசுவ லிங்கம்
திருப்பரங் குன்றின் பரங்குன்ற லிங்கம்
திருவா னைக்காவலில் ஜம்புலிங்கம்

ஆடல் புரிந்த கூடல்லிங்கம்
அன்பைப் பொழியும் ஆட்கொண்ட லிங்கம்
பாடலின் சிறந்த மருதீச லிங்கம்
பக்திக் கடலின் திருவீச லிங்கம்

வெற்றி நல்கும் செயங்கொண்ட லிங்கம்
விண்ணவர் போற்றும் வளரொளி லிங்கம்
கற்றவர் ஏற்றும் ஐநூற்று லிங்கம்
கண்ணின் ஒளியாம் காளத்தி லிங்கம்

சுயம்பாய் வந்த தான்தோன்றி லிங்கம்
சொர்க்கம் நல்கும் தேசிக லிங்கம்
பயனாம் நயனாம் பசுபதி லிங்கம்
பாலைய நாட்டின் சண்டீஸ்வர லிங்கம்

புள்ளூர் வாழும் வைத்திய லிங்கம்
பொங்கும் மங்கள சங்கர லிங்கம்
உள்ளம் உறைந்த பூசலார் லிங்கம்
உயர்ந்த மயிலைக் கபாலி லிங்கம்

மார்க்கண்டன் காத்த அமுதீச லிங்கம்
மாதேவன் வீரசேகர லிங்கம்
ஆர்த்துப் போற்றும் காளீஸ்வர லிங்கம்
ஆவுடைக் கோவிலின் ஜோதிலிங்கம்

# சிவசிவ அரகர சேகர லிங்கம்

அரகர சிவசிவ ஆனந்த லிங்கம் சிவசிவ அரகர சேகர லிங்கம்
அரகர சிவசிவ ஆனந்த லிங்கம் சிவசிவ அரகர சேகர லிங்கம்

யுகங்களைக் கடந்த பரம்பொருள் லிங்கம்
யோசிக்க இயலா ஆதித்ய லிங்கம்
சிகரத்தில் வளரும் உறைபனி லிங்கம்
சீர்வளர் சாக்கைச் சேகர லிங்கம்

ஆழியின் நடுவே அழகிய லிங்கம்
அரங்கன் ராமன் வணங்கிய லிங்கம்
ஏழிரு உலகமும் தொழுதிடும் லிங்கம்
இராமேஸ்வரம் தனில் இலங்கிடும் லிங்கம்

ஆடிய பாதம் மேவிய லிங்கம்
ஆனந்தத் தாண்டவம் ஆடிய லிங்கம்
தேடியும் அடிமுடி தெரியா லிங்கம்
திருவண்ணாமலை உறைகிற லிங்கம்

பிறவாப் புளியுடைப் பேரூர் லிங்கம்
பெருவரம் அருளும் ஆரூர் லிங்கம்
உயிராய் என்னுள் உறைந்திடும் லிங்கம்
உமையவள் உடனுறைச் சேகர லிங்கம்

திருமுடி பரந்து வரம் தரும் லிங்கம்
திருவை யாறதில் திகழ்ந்திடும் லிங்கம்
சதுர்மறை போற்றும் சங்கர லிங்கம்
சாக்கை வீர சேகர லிங்கம்

இரவிலும் பகலிலும் துணைவரும் லிங்கம்
ஏகாம்பரம் எனும் பெயருடை லிங்கம்
கனவிலும் நினைவிலும் நலம் தரும் லிங்கம்
காஞ்சியம் பதியில் விளங்கிடும் லிங்கம்

ஆனைக்கா உறை ஆண்டவன் லிங்கம்
ஆறாய்ப் பெருகும் நீரமை லிங்கம்
அம்பலத்தரசாய் ஆள்கிற லிங்கம்
ஆலங்காட்டினில் அருள்சிவ லிங்கம்

உமையவள் மனமுறைச் சேகர லிங்கம்
உலகம் சிவம் என உணர்த்திடும் லிங்கம்
தமிழகம் முழுவதும் ஒளி தரும் லிங்கம்
தஞ்சைப்பிரக தீஸ்வர லிங்கம்

கங்கைக் கரையுறை மங்கள லிங்கம்
காசி கயாவினில் பேசிடும் லிங்கம்
சங்கத்து மதுரைச் சுந்தர லிங்கம்
சாக்கை வீர சேகர லிங்கம்

அவினாசியிலே ஆகம லிங்கம்
அருட்கடை யூரில் அமிர்தமாய் லிங்கம்
அணையா ஒளியாய் வழிவரும் லிங்கம்
அரகர வீர சேகர லிங்கம் - வைரம்

# அரஹர சிவனே ஆடுகவே

ஆடுக நடனம் ஆடுகவே அரஹர சிவனே ஆடுகவே
ஆடுக நடனம் ஆடுகவே அரஹர சிவனே ஆடுகவே



சிவகைலாசா பரமேசா
திரிபுரம் எரித்த நடராசா
பவபயம் போக்கும் பரமேசா
பனிமலை ஆளும் சர்வேசா

அருகொடு தும்பை மலராட
அணிமணி மாலைகள் தானாட
பெருகிடும் கங்கை தலையாட
பிறைமதி யதுவும் உடனாட (ஆடுக)

சூலம் உடுக்கை சுழன்றாட
சூழும் கணங்கள் உடனாட
ஆலம் குடித்தோன் ஆடுகவே
அடியார் மகிழ ஆடுகவே (ஆடுக)

ஆலவா யரசே சொக்கேசா
அவனியைக் காக்கும் பரமேசா
ஆலங்காட்டில் ஆடிடுவாய்
அரஹர சிவனே ஆடுகவே (ஆடுக)

திருக்கட வூரின் கடயீசா
தில்லையம் பதியில் நடராஜா
திருமுல்லை மாசில்லா மணியீசா
திருநடம் ஆடுக ஆடுகவே (ஆடுக)

வேலும் மயிலும் துணை

மயிலைக் கபாலி ஈஸ்வரனே
மதுரையில் ஆடிய ஆட்டமென்ன
கயிலையில் ஆடிய ஆட்டமென்ன
கால்மாறி ஆடுக ஆடுகவே (ஆடுக)

*-சோலை. இராமச்சந்திரன்*

# ஹர ஹர சிவ சிவ

ஹர ஹர சிவ சிவ அம்பலவாணா
அம்பலவாணா பொன்னம்பலவாணா

சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் நமசிவாய!
சிவ சிவ சிவ சிவ சிதம்பர நாதா
எங்களை ஆட்கொள்ள இங்கு நீ வாவா

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவாய நமஓம் நமசிவாய
சிவ சிவ சிவ சிவ சபாபதே
சிவகாமி சுந்தர உமாபதே

ஹர ஹர ஹர ஹர மஹாதேவா
பார்வதி ரமணா சதாசிவா
நடராஜன் எல்லோருக்கும் நல்லவனே
நல்லதெல்லாம் செய்ய வல்லவனே

ஓம் நம சிவாய சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் நமசிவாய!
எமன் ரொம்ப பொல்லாதவன் விடமாட்டான்
அவன் சாம்பசிவன் பக்தன் என்றால் தொடமாட்டான்

சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் நமசிவாய (ஹர ஹர)

# பிரதோஷப்பாட்டு

**சிவாய நம ஓம் சிவாய நமஹ! சிவாய நம ஓம் நமச்சிவாய!**

ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர!
ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர!
ஆடியபாதா அம்பலவாணா!
கூடியே பாடினோம் பிழை பொறுப்பாயே!

அஞ்செழுத்தில் அமர்ந்த சுந்தரேசா!
நெஞ்சில் நிறைந்திருப்பாயே சொக்கேசா!
சுந்தரர்க்கு தோழனான சுந்தரேசா!
சம்பந்தருக்கு தந்தையானாய்சொக்கேசா!

மண் சுமந்து கூலி கொண்ட சுந்தரேசா!
பெண் சுமந்து பெருமை கொண்டாய் சொக்கேசா!
தோடுடைய செவியோனே சுந்தரேசா!
தூய வெண்ணீரணிந்தவனே சொக்கேசா!

நரியை பரியாக்கிய சுந்தரேசா!
நாரைக்கு முத்தி கொடுத்த சொக்கேசா!
மணிவாசகத்தின் ஒளியானாய் சுந்தரேசா!
தேவாரத்தோடு இணைந்திட்ட சொக்கேசா!

கால காசிநாதா பாஹிமாம்!
விசாலாட்சி சகித விஸ்வநாத ரக்ஷமாம்!
ஆலால சுந்தரம் மீனாட்சி சுந்தரம்!
கல்யாண சுந்தரம் கடம்பவன சுந்தரம்!

நடராஜா நடராஜா நர்த்தன சுந்தர நடராஜா!
சிவராஜா சிவராஜா சிவகாமி நாதா சிவராஜா!
என்னப் பனல்லவா என் தாயுமல்லவா!
பொன்னப்பனல்லவா பொன்னம்பலத்தவா!

*-அருட்கவி கு.செ.இராமசாமி,*

## வற்றா சிவனருள் கிடைத்துவிடும்

வருக வருக வைத்தீசா
வளம் தரும் வாழ்வைத் தந்திடுக
வருக வருக வைத்தீசா
வளம் தரும் வாழ்வைத் தந்திடுக

வருக வருக வைத்தீசா
உனதருள் வேண்டி பாடுகின்றோம்
வருக வருக சொக்கேசா
வளம்தரும் வாழ்வைத் தந்திடு.

பிரம்மா தேவி சரஸ்வதியும்
திருமால் லெக்ஷ்மி இந்திரனும்
நாரதர் தேவர்கள் முனிவர்களும்
ஒன்றாய்க் கூடி வணங்குகின்றார்.

உலக உயிர்க்குப் படிஅளக்கும்
ஒப்பிலா இறைவன் சிவனையுமே
நலமாய் வாழ்ந்து உயர்ந்திடவே
நாமும் சேர்ந்தே வணங்கிடுவோம்.

உலக மக்கள் வாழ்ந்திடவே
எங்கும் தர்மம் செழித்திடவே
ஆலகால விஷம் உண்டு
நர்த்தனம் ஆடி அருளுகின்றார்,

நந்தியின் கொம்புகள் இரண்டிடையே
சங்கரன் ஆட்டத்தை கண்டிடுவோம்
சந்ததி நன்றாய் பெருகிவிடும்
செல்வங்கள் அனைத்தும் சேர்ந்துவிடும்

எல்லோர் மனமும் சிவனிடமே
அவன் நினைவாலே உருகுகின்றோம்
பல்லோர் போற்றும் நந்திதேவா
சிவனைச் சுமந்து வந்திடுக.

நெற்றியில் கண்ணை உடையவனை
பெண்ணுக்கு இடப்புறம் கொடுத்தவனை
பற்றிட வேண்டும் நம்நெஞ்சம்
பிறந்த பயனும் அதுவல்லவோ.

நன்றாய் காட்சி கண்டவர்கள்
நாயன்மார் அறுபத்து மூவருமே
ஒன்றாய் மனதை குவித்திடுவோம்
சிவனது காட்சி கிடைத்துவிடும்

அண்டங்கள் அனைத்தையும் இயக்குபவன்
அணுவை ஆட்டி அசைக்கின்றான்
கண்டத்தில் விஷத்தை ஒதுக்கியவன்
கண்டு மகிழ்ந்திட அழைக்கின்றோம்,

குணத்தால் விருப்பு வெறுப்பற்ற
வைத்திய நாதா துணையிருப்பாய்
மனமெனும் திருச்சிற் றம்பலத்தில்
சுடர்விடு சுடர்விடு ஜோதியனே

கண்ணப்பர் கண்ணும் தந்துவிட்டார்
அம்மையார் தலையால் நடந்துவந்தார்
தொண்டரும் பிள்ளைக்கறியும் தந்தார்
அன்பால் அனைவரும் ஜெயித்து நின்றார்.

முற்றும் துறந்த முனிவர்களும்
பற்றி நின்றது சிவனிடமே
சற்று நாமும் நினைத்திடுவோம்
வற்றா சிவனருள் கிடைத்துவிடும்.

சம்பந்தர் அப்பர் சுந்தரரும்
மாணிக்க வாசகர் நால்வருமே
உயிராய் மூச்சாய் கருப்பொருளாய்
வணங்கி மகிழ்ந்தது சிவனிடமே.

அணுவில் கருவாய் இருக்கின்றாய்
அதனால் எங்கும் உனதாட்சி
எங்கும் எல்லாம் சிவமயமே
சிவமயம் என்போம் பயமில்லையே.

அவரவர் வேண்டிடும் வரங்களையும்
விரைவில் சிவனிடம் பெறவேண்டி
தவத்தால் நினைத்து உருகுவதால்
சடுதியில் கொணர்வீர் நந்திதேவா.

## நடராஜப் பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறை நான்கின் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டலம் இரண்டேழு நீ
பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க்குயிரும் நீ
பிறவும் நீ யொருவ நீயே
பேதாதிபேதம் நீ பாதாதி கேசம் நீ
பெற்றதாய் தந்தை நீயே
பொன்னும் நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும் நீ
போதிக்க வந்த குரு நீ
புகழொணா கிரகங்கள் ஒன்பதும் நீ
யிந்த புவனங்கள் பெற்றவனும் நீ
எண்ணரிய ஜீவகோடிகளை ஈன்ற அப்பனே
என் குறைகள் யார்க்குரைப்பேன்?
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கை சிவகாமி யாட
மாலாட நூலாட மறையாட திறையாட
மறைதந்த பிரமனாட
கோனாட வானிலகு கூட்டமெல்லாமாட
குஞ்சர முகத்தனாட
குண்டல மிரண்டாட தண்டை புலி யுடையாட
குழந்தை முருகேசனாட
ஞானசம்பந்தரோடு இந்திராதி பதினெட்டு முனி
அட்ட பாலகருமாட
நரை தும்பை அருகாட நந்தி வாகனமாட நாட்டியப்
பெண்களாட

வினையோட உனைப்பாட எனைநாடி இதுவேளை
விரைந்தோடி ஆடி வருவாய் ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!
கடலென்ற புவிமீதில் அலையென்ற உருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கட்டுண்டு நித்த நித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடி
ஓயாமலிரவு பகலும்
உண்டு உண்டு உறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபயனும் அடைந்திலேனை
தடமென்ற மிடிகரையில் பந்தபாசங்களெனும்
தாவரம் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை இவ்வண்ணமாய்
தடையென்று கடைநின்று ஏனென்று கேளாது
இருப்பதுனக்கழகாகுமா?
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

பம்புசூனியமல்ல வைப்பல்ல மாரணம்
தம்பனம் வசியமல்ல
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேச
மதுவல்ல சாலமல்ல
அம்புகுண்டுகள் விலக மொழியு மந்திரமல்ல
ஆகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
அறியமோகனமுமல்ல
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனியிவரெலாம்
கூறிடும் வயித்தியமுமல்ல
என்மனம் உன்னடிவிட்டு அகலாது நிலைநிற்க
ஏது புகல வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

நொந்துவந்தே னென்று ஆயிரம் சொல்லியும்
நின்செவியில் மந்தமுண்டோ!

நுட்பநெறியறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ!
சந்ததமும் தஞ்சமென்றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்சமுண்டோ!
தந்திமுகன் அறுமுகன் இருபிள்ளையில்லையோ
தந்தை நீ மலடுதானோ!
விந்தையும் ஜாலமும் உன்னிடமிருக்குதே
வினையொன்றும் அறிகிலேனே
வேதமும் சாஸ்த்ரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை இதுவல்லவோ
இந்தவுலகு ஈரேழும் ஏனளித்தாய் சொல்லு
இனியுன்னை விடுவதில்லை காண்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

வழிகண்டு உன்னடியைத் துதியாத போதிலும்
வாஞ்சையில்லாத போதும்
வாலாயமாய்க் கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்தபோதும்
மொழியென்ன மொகனையில்லாமலே பாடினும்
மூர்க்கனே முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமே தவறினும்
முழு காமியே ஆயினும்
பழி எனக்கல்லவே தாய்தந்தைக்கல்லவோ
பார்ப்பவர்கள் பழியார்களோ
பாரறிய மனைவிக்குப் பாதியுடலீந்த நீ
பாலன் எனைக் காக்கொணாதோ
எழில் பெரிய அண்டங்கள் அடுக்காய் அமைத்த நீ
என் குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

அன்னைதந்தையர் என்னை ஈன்றதற்கழுவனோ
அறிவிலாததற்கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக்கழுவனோ
முற்பிறப்பென்வினை செய்தேனென்றழுவனோ
என் மூட உறவுக்கழுவனோ
முற்பிறப்பின் வினைவந்து மூளுமென்றழுவனோ

முத்தி வருமென்றுணர்வனோ
தன்னைநொந்தழுவனோ உன்னை நொந்தழுவனோ
தவமென்ன என்றழுவனோ
தையலார்க்கழுவனோ மெய்தனக்கழுவனோ
தரித்திர தசைக்கழுவனோ
இன்னமென்னப் பிறவிவருமோ வென்றழுவனோ
எல்லாமுரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

காயாமுன் மரமீது பூபிஞ் சறுத்தனோ
கன்னியர்கள் பழிகொண்டனோ
கடனென்று பொருள்பறித்தே வயிறெரித்தனோ
கிளைவழியில் முள்ளிட்டனோ
தாயாருடன் பிறவிக்கென்னவினை செய்தனோ
தந்தபொருளிலை யென்றனோ
தானென்று கெர்வித்து கொலைகளவு செய்தனோ
தவசிகளை ஏசினேனோ
வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனோ
வாணரைப் பழித்திட்டனோ
வடவுபோலே பிறரைச் சேர்க்கா தடித்தனோ
வந்தபின் என் செய்தனோ
ஈயாத லோபி என்றே பெயரெடுத்தனோ
எல்லாமும் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன
தன்பிறவியுறவு கோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன
தாரணியையாண்டுமென்ன
சேயர்கள் இருந்தென்ன குருவாயத் திரிந்தென்ன
சீஷர்கள் இருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்ன பயன் எமனோலை
ஒன்றினைத் தடை செய்யுமோ!
உதவுமோ இதுவெல்லாம் உபாயம் கருதியே
உந்தனிருபாதம் பிடித்தேன்
யார்மீது உன்மனமிருந்தாலுமுன் கடைக்

கண்பார்வையது போதுமே
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!
இன்னமும் சொல்லவோ உன்மனம் கல்லோ
இரும்போ பெரும்பாறையோ
இருசெவியும் மந்தமோ பார்வையும் அந்தமோ
இது உனக்கழகு தானோ
என்னென்ன மோகமோ இதுஎன்ன கோபமோ
இதுவே உன்செய்கை தானோ
இருபிள்ளைதாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான் விடுவனோ
உன்னை விட்டெங்கெங்கு சென்றாலும் வாழ்வனோ
உனையடுத்துங் கெடுவனோ
ஏழை என் முறையீட்டில் குற்றமென கூறுநீ
முப்புரம் எரித்த ஐயா
என் குற்றமாயினும் உன் குற்றமாயினும்
இனியருள் அளிக்க நினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!



# கிருஷ்ணன் பாடல்கள்

## ஸ்ரீ கிருஷ்ண கவசம்



அகரம் முதலே அழியாப் பொருளே
ஆயர் குலமே நேயர் கரமே
இகமும் பரமும் இணையும் இடமே
ஈதல் மரபாம் இதயத் தவமே
உலகக் குடையே உயிரின் கலையே
ஊதும் குழலுள் வேதப் பொருளே
எரியும் கனலில் தெரியும் புனலே
ஏழை மனதில் வாழும் அருளே

ஐயம் தீர்க்கும் அறிவுக் கதிரே
ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே
ஓடும் நதியில் பாடும் அலையே
அவ்அவ் வுலகை ஆக்கும் நிலையே
அடியேன் சரணம் சரணம் சரணம்!
அறமே அறமே அறமே அறமே
திறமே திறமே திறமே திறமே

தவமே தவமே தவமே தவமே
வரமே வரமே வரமே வரமே
வேதம் விளையும் வித்தே விளைவே
நாதம் பொழியும் நலமே நிலமே
ஓதும் பொழுதே உடனே வருவாய்
உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்
அறியாக் கவலை அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்!

பொய்யா மொழியே பொங்கும் நிலவே
பூமிக் குடையின் காவற் பொருளே
பார்த்தன் பணியும் பாதம் காக்க
பாஞ்ச சன்னியம் பக்தனைக் காக்க
மூடர்கள் தமையும் மோகனன் காக்க
முள்ளில் மலராய் முளைத்தோன் காக்க
வாடும் உயிரை மன்னவன் காக்க
தேடும் விழியைத் திருமால் காக்க

கேலிப் பொருளைக் கிருஷ்ணன் காக்க
கண்ணீர் நதியைக் கண்ணன் காக்க
துன்பம் என்றொரு சுமையைத் தீர்க்க
தூயோன் வருக! துணையே தருக!
மாதர் கற்பும் மடவார் நோன்பும்
மாயோன் காக்க மலைபோல் வருக!
தகிடக் தகிடத் தகிடத் தகவென

தறிபடு துன்பம் தறிகெட ஓட
திகிடத் திகிடத் திகிடத் திகிடத்
திசைவரு கவலை பசைஇல தாக!
துருவத் துருவத் துருவத் துருவிடத்
தொலையாப் பொருளே அலையாய் வருக!
நிஷ்கா மத்தில் நிறைவோன் வருக
கர்மசந் யாசக் களமே வருக
ஞானம் யோகம் நல்குவன் வருக
நல்லோர் வாழ்வில் நலமே நிறைக!

அடியேன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொங்கும் வேலும் புண்ணாக் காது
பொருந்தும் துயரம் பொடிபடு மாறு
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன்
தாளில் விழுந்தேன் சரணம் சரணம்
மதுசூ தனனே மனிதன் சரணம்
இருடீ கேசா இயலான் சரணம்!

கீதா சாரிய கிருஷ்ணா சரணம்
வேதா சாரிய வேந்தே சரணம்
தேவகி மைந்தா சிறியேன் சரணம்
யசோத குமரா அடியேன் சரணம்
உன்னை விட்டொரு உறவுக ளில்லை
என்னை விட்டொரு இனியவ னில்லை
நம்மை விட்டொரு நண்பர்க ளில்லை
நன்மையில் உன்போல் நாயக னில்லை!

எங்கெங் கேநான் இருந்திடும் போதும்
அங்கங் கேநீ அருள்செய வருக
கோசலை ஈன்ற குமரா வருக
கோதையின் மாலை கொண்டவன் வருக
ரகுவம் சத்தின் நாயகன் வருக

யதுவம் சத்தின் யாதவன் வருக
மதுவம் வென்ற மாதவன் வருக
மலைக்குடி கொண்ட மாலவன் வருக!

திருப்பதி யாளும் திருமால் வருக
திருவரங் கத்துப் பெருமாள் வருக
இராவணன் கொடுமை தீர்த்தாய்; துன்பம்
`இரா`வணம் எமக்கும் இன்னருள் புரிக
கம்சன் கொடுமை களைந்தோய் வருக
காலனை வெல்லக் கைவலி தருக
நெற்றியில் திருமண் நெஞ்சில் வைரம்
காதில் குண்டலம் கையில் வில்லொடு.

தண்டைக் காலில் சலங்கை குலுங்க
அண்டையில் வந்து அருளே புரிக
கௌரவர் தம்மை களத்தில் வென்றாய்
கௌரவம் காக்கக் கண்ணா வருக
பார்த்தன் மகிழப் பாடம் சொன்னாய்
படித்தவன் மகிழப் பரமே வருக
மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய
சான்றோன் பாதம் தாவி யணைத்தேன்.

சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன்
பக்கென உந்தன் பாதம் பற்றினேன்
கொக்கென நின்று குறிவைத் திருந்தேன்
அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்
இக்கணம் என்னை ஏங்க விடாமல்
தக்கவன் னேநீ தயவுடன் அருள்க!
கல்லாய்ப் போனவள் காலடி பட்டு
பெண்ணாய் ஆனது பிழையே அன்று!

உன்னால் தானே உலக இயக்கம்
கண்ணனி லாமல் கடல்வான் ஏது?
கண்ணனி லாமல் கடவுளு மில்லை
கண்ணனி லாமல் கவிதையு மில்லை
கண்ணனி லாமல் காலமு மில்லை
கண்ணனி லாவிடில் காற்றே இல்லை
எத்தனை பிறவி எத்தனை பிறவி
அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்!
சத்திய நாதன் தாள்களை மறவேன்
தத்துவக் கண்ணன் தனிமுகம் மறவேன்

உன்னை நம்பி உனையே சேர்ந்தால்
பிறவிக ளிலை நீபேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு
உன்னிடம் சேர்த்து உன்வடி வாக்கு
இங்கே நாங்கள் இருக்கும் வரையில்
சங்கு முழங்கு தர்மம் நிலைக்க!

பிள்ளைகள் வாழ்க்கை பிழையா காமல்
மனையவள் வாழ்க்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில் லாமல்
இன்னும் என்னும் ஆசை வராமல்
தொல்லை என்பது துளியு மிலாமல்
தொற்றும் நோய்கள் பற்றி விடாமல்
முதுமை துயரம் மூண்டு விடாமல்
படுக்கையில் விழுந்து பரிதவிக் காமல்

சிந்தனை கெட்டுத் திறமையும் கெட்டு
நிந்தனை பெற்று நீங்கி விடாமல்
என்றும் பதினா றிளமை வழங்கு
இப்பணி தொடர அற்புதம் காட்டு
தளரா மேனியில் சக்தியைக் கூட்டு
தாய்போ லிருந்து சாதம் ஊட்டு
வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென
ஊரார்க் கென்னை உதாரணம் காட்டு!

உலகில் ஒருவன் உத்தமன் இவனென
உயிர்கள் பேசிடும் ஒருநிலை கூட்டு
சிறியவர் பெரியவர் வறியவர் செல்வர்
சரிசரி சரியெனத் தலையை அசைக்க
பொலிபொலி பொலியெனப் புகழும்விளங்க
மளமள மளவென மனையிருள் நீங்க
கலகல கலவெனக் காசுகள் சேர
தளதள தளவெனத் தர்மம் தழைக்க

வரவர வரவர வாய்ப்புகள் வாய்க்க
ரகுபதி பசுபதி நன்மைகள் அருள்க
ஐயா சரணம் சரணம் சரணம்
அடியேன் வாழ்வில் நீயே கவசம்
கவசம் கவசம் கவசம் கவசம்

வந்தது வாழ்வில் மன்னவன் கவசம்
கவசம் கவசம் கவசம் கவசம்
வாழ்க்கை என்றும் கோபுரக் கலசம்
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனே துணையென அறிவோம் அறிவோம்
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனிடம் எதையும் தருவோம் தருவோம்

ஜெயஜெய ராமா ஜெயஜெய கிருஷ்ணா
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய!

*கவியரசு கண்ணதாசன்.*

## சின்ன சின்ன பதம் வைத்து

சின்ன சின்ன பதம் வைத்து
கண்ணா நீ வா வா வா
மணிவண்ணா நீ வா வா வா (சின்ன சின்ன)

வண்ண வண்ண உடை உடுத்தி
கண்ணா நீ வா வா வா
மணிவண்ணா நீ வா வா வா (சின்ன சின்ன)

மல்லிகை முல்லை மலராலே
அர்ச்சனை செய்வோம் நீ வா வா வா
மாதவனே ஆதவனே
யாதவனே நீ வா வா வா (சின்ன சின்ன)

திரௌபதி மானம் காத்தவனே
தீனஸரண்யா நீ வா வா வா
காலமெல்லம் உன் அருளை
வேண்டுகிறொம் நீ வா வா வா (சின்ன சின்ன)

கண்ணில் தெரியும் காட்சியெல்லாம்
கமலக்கண்ணா உன் தோற்றம்
கண்ணில் தெரியும் காட்சியெல்லாம்
கமலக்கண்ணா உன் தோற்றம் (சின்ன சின்ன)

கண்ணழகா மணிவண்ணா
கண்ணா நீ வா வா வா
வண்ண வண்ண உடை உடுத்தி
கண்ணா நீ வா வா வா (சின்ன சின்ன)

வேலும் மயிலும் துணை

# கண்ணன்பிறக்க மாட்டானா

குழந்தையாக மீண்டும் கண்ணன் பிறக்கமாட்டானா
புல்லாங்குழல் ஊதி நம்மை மயக்க மாட்டானா

குழந்தையாக மீண்டும் கண்ணன் பிறக்கமாட்டானா
புல்லாங்குழல் ஊதி நம்மை மயக்க மாட்டானா
மழலையாகப் பேசி நம்மை மயங்கச் செய்வானா
செம்பவளவாயால் முத்தம் ஒன்று கொடுக்கமாட்டானா
மாடு, கன்று காட்டில் ஓட்டி மேய்க்கமாட்டானா - அவன்
வீடுகளில் உறிவெண்ணெயைத் திருடமாட்டானா
என்னை அவன் தோழனாக ஏற்கமாட்டானா - அந்த
வெண்ணெயில் நான் பங்கு போட்டு தின்ன மாட்டேனா
மலையில் ஏறி குடையாக பிடிக்கமாட்டானா - நம்
தலையில் அந்த மழை விழாமல் தடுக்க மாட்டானா
மாயம் காட்டி காலம் காட்டி மயங்கச் செய்வானா
ஜாடை காட்டி நம் மனதை கொள்ளை கொள்வானா
கீதையைத் தான் திரும்ப வந்து உரைக்கமாட்டானா - அந்த
பாதையில் நாம் நல்லவராய் நடக்கமாட்டோமா

*அருண் வீரப்பா காரைக்குடி*



# பைரவர் பாடல்கள்

## ஸ்வர்ணாகர்ஷண பைரவர் அஷ்டகம்

வைரவ தேவா வைரவதேவா வளமது தந்திடுவாய்
வைரவ தேவா வைரவதேவா ஜெயமது அருளிடுவாய்

தனந்தரும் வயிரவன் தளரடி பணிந்திடின்
தளர்வுகள் தீர்ந்து விடும்
மனந்திறந் தவன்பதம் மலரிட்டு வாழ்த்திடின்
மகிழ்வுகள் வந்துவிடும்
சினந்தவிர்த் தன்னையின் சின்மயப் புன்னகை
சிந்தையில் ஏற்றவனே
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்

வாழ்வினில் வளந்தர வையகம் நடந்தான்
வாரியே வழங்கிடுவான்
தாழ்வுகள் தீர்ந்திட தளர்வுகள் மறைந்திட
தானென வந்திடுவான்
காழ்ப்புகள் தீர்த்தான் கானகம் நின்றான்
காவலாய் வந்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்

முழுநில வதனில் முறையொடு பூஜைகள்
முடித்திட அருளிடுவான்
உழுதவன் விதைப்பான் உடமைகள் காப்பான்
உயர்வுறச் செய்திடுவான்
முழுமலர்த் தாமரை மாலையை ஜெபித்து
முடியினில் சூடிடுவான்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான்

நான்மறை ஓதுவார் நடுவினில் இருப்பான்
நான்முகன் நானென்பான்
தேனினில் பழத்தைச் சேர்த்தவன் ருசிப்பான்
தேவைகள் நிறைந்திடுவான்
வான்மழை எனவே வளங்களைப் பொழிவான்
வாழ்ந்திட வாழ்த்திடுவான்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான்

பூதங்கள் யாவும் தனக்குள்ளே வைப்பான்
பூரணங்கள் நான் என்பான்
நாதங்கள் ஒலிக்கும் நால்வகை மணிகளை
நாணினில் பூட்டிடுவான்
காதங்கள் கடந்து கட்டிடும் மாயம்
யாவையும் போக்கிடுவான்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான்

பொழில்களில் மணப்பான் பூசைகள் ஏற்பான்
பொன்குடம் ஏந்திடுவான்
கழல்களில் தண்டை கைகளில் மணியணி
கனகனாய் இருந்திடுவான்
நிழல்தரும் கற்பகம் நினைத்திட பொழிந்திடும்
நின்மலன் நானென்பான்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான்

சதுர்முகன் ஆணவத் தலையினைக் கொய்தான்
சத்தொடு சித்தானான்
புதரினில் பாம்பைத் தலையினில் வைத்தான்
புண்ணியம் செய்யென்றான்
பதரினைக் குவித்து செம்பினை எரித்தான்
பசும்பொன் இதுவென்றான்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான்

ஜெய ஜெய வடுக நாதனே சரணம்
வந்தருள் செய்திடுவாய்
ஜெய ஜெய ஷேத்திர பாலனே சரணம்
ஜெயங்களைத் தந்திடுவாய்
ஜெய ஜெய வயிரவா செகம்புகழ் தேவா
செல்வங்கள் தந்திடுவாய்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான்

*ஸ்ரீ துர்கை சித்தர் அருளியவை*

# ஆஞ்சநேயர் பாடல்கள்

வாவாவா அனுமானே வளங்கள் தருவாய் அனுமானே
வாவாவா அனுமானே வளங்கள் தருவாய் அனுமானே

உள்ளம் உருக, விழிசெருக,
உடலம் எங்கும் களிபரவ,
வள்ளல் நாம ஜெபத்தாலே
வழியும் கண்ணீர்த் துளிபெருக

மெல்ல இருந்த பெருமானே!
வேண்டித் தினமும் தொழுவேனே!
அள்ளி வழங்கி எனதுகுறை
அனைத்தும் தீராய் அனுமானே!

பொறியும் புலனும் போனபடிப்
போகும் விலங்குச் சாதியிலே
தறியா தலையும் காற்றினுக்கே
தனயன் ஆனாய் மேருவிலே!

நெறியும் நிலையும் தவறாமல்
நின்றாய்! யார்பால் அதுகற்றாய்?
அறியேன் உன்போல் ஒருவனையே
அருள்வாய் ஐயா அனுமானே!

படிகம் போலும் பால்போலும்
பரமா, உனது நிறம் விளங்கும்!
வெடிபோல், கோடை இடிபோல்
விம்மி உனது குரல் முழங்கும்!

அடி-பாதாளம் அதன்கீழே!
அணிமா முடியோ விண்மேலே!
வடிவாய்க் காட்சி தருவானே!
வணக்கம் வணக்கம் அனுமானே!

ஆயுள் வளரும் உன்னாலே !
அழகும் வலிவும் உன்னாலே !
பாயும், நோயும், பல்பகையும்
பறந்து போகும் உன்னாலே !

கோயில் எனது நெஞ்சகமாம் !
கூறும் கவிதை மந்திரமாம் !
தேயம் தழுவும் புகழோனே !
சித்தம் இரங்காய் அனுமானே !

அன்னை அருளால் இவ்வுலகில்
அழியா திருக்கும் பெரியதபம் !
மன்னன் அருளால் அவ்வுலகில்
மலரோன் நிகராய்ப் பிரம்மபதம் !

தன்னை நம்பும் அடியார்க்குத்
தலைமை தருதல் உனது குணம் !
என்னை ஆளும் பகவானே !
இன்றே அருள்வாய் அனுமானே !

ஜென்மச் சனியால், அட்டமத்தில்
சீறும் சனியால், கண்டகனாம்
வன்மச் சனியால் நீச்சமுடன்
சனியால் உனையடைந்தோம்

கன்மச் சனியின் பகைவிலக்கு
கலங்கும் குடியை நிலைநிறுத்து !
பொன்னைப் பொழியும் கையோனே !
போற்றி போற்றி அனுமானே !

இழந்த பொருளை மறுபடியும்
எய்த வைப்பாய்; பாவாலே
உழர்ந்த காதல் தம்பதிகள்
ஒன்று சேர உதவிடுவாய் !

அழிந்த எதையும் புதிதாக
ஆக்கித் தருவாய் நல்வாழ்க்கை !
விழைந்து நாளும் பணிவேனே !
வெல்க வெல்க அனுமானே !

இணையா திருந்த இதயங்கள்
இணையும் வண்ணம் அணைகட்டி
துணையாய் வந்து தோள் தொட்டு !
சுமையை வாங்கக் கைநீட்டு !

மணிவால் கொண்டு பகைகட்டு !
வருத்தம் போக்க நலமாக்கு !
கணமும் பிரியா(து) எனதுகுடி
காப்பாய் நீயே அனுமானே !

*அருட்கவி கு.செ. இராமசாமி*

# அருள்தரும் ஆஞ்சநேயர்

**ஆஞ்சநேயனே! ஆஞ்சநேயனே!**
**அஞ்சனை தனையனே ! ஆஞ்சநேயனே !**

ராமநாமம் பாடுகின்ற ஆஞ்சநேயனே !
ராமதூதனாக வந்த ஆஞ்சநேயனே! - ஸ்ரீ
ராமதூதனாக வந்த ஆஞ்சநேயனே!

சஞ்சீவியை கொணர்ந்த ஆஞ்சநேயனே!
சிரஞ்சீவியாய் வாழும் ஆஞ்சநேயனே! - என்னும்
சிரஞ்சீவியாய் வாழும் ஆஞ்சநேயனே!

வானர வீரனே ஆஞ்சநேயனே !
வாயுகுமாரனே ஆஞ்சநேயனே ! - எங்கள்
வாயுகுமாரனே ஆஞ்சநேயனே !

அயோத்தி நாததாச ஆஞ்சநேயனே!
அடைக்கலம் தந்தருள்வாய் ஆஞ்சநேயனே! - எமக்கு
அடைக்கலம் தந்தருள்வாய் ஆஞ்சநேயனே!

ராம ராம, ராம ஆஞ்சநேயனே!
ராமசீத, சீத ராம ஆஞ்சநேயனே! - ஸ்ரீ
ராமசீத, சீத ராம ஆஞ்சநேயனே!

ஏழைப்பங் காளனே ஆஞ்சநேயனே!
ஏற்றம் பலதந்தருள்வாய் ஆஞ்சநேயனே ! - வாழ்வில்
ஏற்றம் பலதந்தருள்வாய் ஆஞ்சநேயனே!



# சிவம் சீதா ராம ஜெயம்

ராமஜெயம் ஸ்ரீராமஜெயம் ராமஜெயம் நம் தேகபலம்
ராமஜெயம் ஸ்ரீராமஜெயம் ராமஜெயம் நம் ஜீவரசம்

ஓதீய நாவில் உணர்ந்தவர் நெஞ்சில் உலாவிடும் ராமஜெயம்
உள்ளம் நினைத்ததை அள்ளி வழங்கி உயர்த்திடும்
ராமஜெயம்
சீதை இலக்குவன் மாருதி வீடணன் சீர்பெற்ற ராமஜெயம்
சித்தி தரும் பரம சக்திமயம்
சிவம் சீதா ராம ஜெயம்
ஜெய சீதா ராம ஜெயம்



ஆழ நெடுங்கடல் சேதுவிலே
அணையாக்கிய ராமஜெயம்
ஆங்கொடு கல்லிடை பூங்கொடி
தோன்ற அருள்தரும் ராமஜெயம்

தேடி அலைந்தவன் வாலில்
நெருப்பும் சிலீரென ராமஜெயம்
சித்தி தரும் பரம சக்திமயம்
சிவம் சீதா ராமஜெயம் ஜெய சீதா
ராம ஜெயம்

தாயிற் சிறந்த சபரியை வாழ்வித்த தாரகம் ராமஜெயம்
தந்தையின் மேம்பட்ட விந்தை ஜடாயுவின் தத்துவம்
ராமஜெயம்
சேயனும் அங்கதன் நயன் சுமித்திரன் ஜீவிதம் ராமஜெயம்
சித்தி தரும் பரம சக்திமயம்
சிவம் சீதா ராம ஜெயம் ஜெய சீதா ராம ஜெயம்

காலன் நம்மை அணுகாமல் அருள் செய்து காத்திடும்
ராமஜெயம்
காசி தலத்தில் விஸ்வேசனும் ஓதி களித்திடும் ராமஜெயம்
சீலக் கலைகள் நான்கு மறைகளில் தித்திக்கும் ராமஜெயம்
சித்தி தரும் பரம சக்திமயம்
சிவம் சீதா ராம ஜெயம் ஜெய சீதா ராம ஜெயம்

பாதம் தொடங்கி நம் நேசம் வரை பரிபாலிக்கும் ராமஜெயம்
பக்குவமாய் எட்டு திக்கும் காவல் படைத்திடும் ராமஜெயம்
தீது புகாமல் ஓர் சேதம் வராமல் ஜெயம் தரும் ராமஜெயம்
சித்தி தரும் பரம சக்திமயம்
சிவம் சீதா ராம ஜெயம் ஜெய சீதா ராம ஜெயம்

# பெருமாள் பாடல்கள்

## திருமால் வணக்கம்

ஆதிசேஷா அனந்தசயனா! ஸ்ரீநிவாசா ஸ்ரீ வெங்கடேசா



ஆதிசேஷா அனந்தசயனா
ஸ்ரீநிவாசா ஸ்ரீ வெங்கடேசா

வைகுண்ட நாதா வைதேகிப்ரியா
ஏழுமலை வாசா எங்களின் நேசா

வேணுவிலோலா விஜயகோபாலா
நீலமேக வண்ணா கார்மேக கண்ணா

காளிங்க நர்த்தனா கமனீய கிருஷ்ணா
கோமள வாயனா குருவாயூரப்பனா

ஸ்ரீராம சந்திர மூர்த்தியைப் பாடு
தீவினை யகலவன் திருவடி தேடு

பாவங்கள் போக்க பஜனைகள் செய்வோம்
பார்த்த சாரதியின் பாதம் பணிவோம்

திருப்பதி மலையில் திருமுகம் காட்டும்
திருவேங்கடத்தான் திருவருள் பெறுவோம்

ஸ்ரீரெங்கநாதன் பள்ளி கொண்டிருக்கும்
ஸ்ரீரெங்கம் சென்றவன் திருவடி பணிவோம்

## திருப்பதி மலைமேல் இருப்பவன்

திருப்பதி மலைமேல் இருப்பவனே –
எங்கள்தீராத வினைகளைத் தீர்ப்பவனே.
ஸ்ரீ நிவாஸா கோவிந்தா–ஹரேஸ்ரீ வெங்கடேசா வைகுந்தா

திருப்பதி மலைமேல் இருப்பவனே -
எங்கள்தீராத வினைகளைத் தீர்ப்பவனே.
ஸ்ரீ நிவாஸா கோவிந்தா-
ஹரேஸ்ரீ வெங்கடேசா வைகுந்தா

ஏழு மலைமேல் இருப்பவனே
எல்லா வினைகளும் தீர்ப்பவனே
பாண்டுரெங்கா கோவிந்தா-ஹரே
பரம தயாளா வைகுந்தா

உளமெனும் கோவிலில் வசிப்பவனே
உலகோரை வாழவைக்க வந்தவனே
வெங்கடரமணா கோவிந்தா-ஹரே
சங்கட ஹரணா வைகுந்தா

திருப்பதி மலைமேல் இருப்பவனே - எங்கள்
தீராத வினைகளைத் தீர்ப்பவனே
சங்கு சக்கரா கோவிந்தா-ஹரே
சாரங்கதாரா கோவிந்தா

ஏழு மலைமேல் இருப்பவனே
எல்லா வினைகளும் தீர்ப்பவனே
பக்த வத்ஸல கோவிந்தா-ஹரே
பாரதப்ரிய கோவிந்தா

உளமெனும் கோவிலில் வசிப்பவனே
உலகோரை வாழவைக்க வந்தவனே
பசுபால கிருஷ்ண கோவிந்தா-ஹரே
பாபவிமோசன கோவிந்தா

அலர்மேலுநாதா கோவிந்தா-ஹரே
ஆபத்பாந்தவா கோவிந்தா
திருப்பதி வாசா கோவிந்தா-ஹரே
திருமலை வாசா கோவிந்தா

## ஓம் நமோ நாராயணாய

ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நமோ
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நமோ

சகலலோக சாட்சியாகி சகல வேத சாரமாகி
சகலயோக சித்தியாகி நின்ற மூர்த்தியே
சகலதத்துவங்கள் ஆகி பரம ஞான விந்தையாகி
சகலசப்த வடிவமாகி வந்த மூர்த்தியே

அருணசகுண நிலையில் ஆகி அகர சுரவிபாதமாகி
அதிலுமாகி இதிலுமாகி அமையும் மூர்த்தியே
அணுவுளே யகண்டமாட அணுவினால் அனைத்துமாட
அமரநாத வடிவில் ஆடும் அருண மூர்த்தியே

எனதுநான் என்றசெருக்கி மமதையுற் றலைந்த என்னை
இனியனாக்கி இணைய வைத்த இன்ப மூர்த்தியே
எனதுள்ளத்தில் உனது நாமும் எழுதிவைத்து நடனமாடி
ஏகமாய் எனைக்கவர்ந்த யோக மூர்த்தியே

படிஎல்லாம் கடந்து சுத்த பிரம்ம வஸ்துவாயிருந்து
பஜனையால் மகிழ்ந்து தோன்றும் திவ்ய மூர்த்தியே
ஒரு கணத்துள் எனதுள்ளத்தை
உருகவைவைத்த உனது நாமம்
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நமோ

அளவில்லமல் எழும்விசார அலையடித்து மருளகற்றி
அமைதி பெற்றடங்கவைத்த அன்பு மூர்த்தியை
ஒரு கணத்துள் எனதுள்ளத்தை
உருகவைவைத்த உனது நாமம்
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நமோ



# ஐயப்பன் பாடல்கள்

## பகவான் சரணம், பகவதி சரணம்

பகவான் சரணம் பகவதி சரணம் சரணம் சரணம் ஐயப்பா
பகவதி சரணம் பகவான் சரணம் சரணம் சரணம் ஐயப்பா

அகமும் குளிரவே அழைத்திடுவோமே
சரணம் சரணம் ஐயப்பா
பகலும் இரவும் உன் நாமமே
சரணம் சரணம் ஐயப்பா
கரிமலை வாசா பாபவினாசா
சரணம் சரணம் ஐயப்பா
கருத்தினில் வருவாய் கருணையைப் பொழிவாய்
சரணம் சரணம் ஐயப்பா
மஹிசி சம்ஹாரா மதகஜ வாகனா
சரணம் சரணம் ஐயப்பா
சுகுண விலாசா சுந்தர ரூபா
சரணம் சரணம் ஐயப்பா



ஆறுவாரமே நோன்பிருந்தோம்
பேரழகா உன்னைக் காண வந்தோம்
பால் அபிஷேகம் உனக்கப்பா
பாலனைக் கடைக்கண் பாரப்பா
முத்திரை தேங்காய் உனக்கப்பா
தித்திக்கும் நாமம் எனக்கப்பா
கற்பூர தீபம் உனக்கப்பா-உன்
பொற்பத மலர்கள் எனக்கப்பா
தேவன் பாதம் தேவி பாதம்
சேவடி சரணம் ஐயப்பா
நாவினில் தருவாய் கீதமப்பா
தேவை உன் திருப்பாதமப்பா

நெய்யபிஷேகம் உனக்கப்பா-உன்
திவ்ய தரிசனம் எமக்கப்பா
தையினில் வருவோம் ஐயப்பா-அருள்
செய்யப்பா மனம் வையப்பா
பகவான் சரணம் பகவதி சரணம்
பகவானே பகவதியே
தேவனே தேவியே
ஸ்வாமி சரணம் ஐயப்பா சரணம்

# ஐயன் பவனி வருதல்

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா



பவனி வாராரிங்கே சுவாமி சரணம் ஐயப்பா
வாவர் சுவாமி கூட வாரார் சரணம் ஐயப்பா
காவலர்கள் கூட வாரார் சரணம் ஐயப்பா
ஆவலோடு கூப்பிடுவோம் சரணம் ஐயப்பா

அம்பும் வில்லும் கையிலேந்தி
சுவாமி வருகிறார்
எம்பெருமான் துள்ளித்
துள்ளி ஆடிவருகிறார்
துன்பமெலாம் தீர்த்திடவே
பவனி வருகிறார்
இன்பமொடு கும்பிடுவோம் சரணம் ஐயப்பா

தந்தை தாயுமான சுவாமி பவனி வருகிறார்
வேதியர் சபை நடுவே சுவாமி வருகிறார்
பூதப்படைகளுடனே ஐயன் வருகிறார்
இத்தருணம் காத்திடுவாய் சரணம் ஐயப்பா

கடகடவென பேரிமுழங்க சுவாமி பவனி வருகிறார்
கொட்டு வாத்தியம் முழங்கிடவே ஐயன் வருகிறார்
மாடன் சடையன் பொருளன் இருளன் சரணம் ஐயப்பா!
ஓடிவாரார் பவனி வாரார் சரணம் ஐயப்பா

மின்னல்போல் ஒளிவிளங்க சரணம் ஐயப்பா
பொன்னுமேனி கண்டிடவே சரணம் ஐயப்பா
தனிச்சிலம்பும் சல்லடையும் சுவாமி ஐயப்பா
கணகணவென சலங்கை குலுங்க பவனி வருகிறார்

பிள்ளைக்குறையால் உள்ளம் நொந்து வருந்தும் பக்தரை
உள்ளமிரங்கி கருணை காட்டி பாரும் ஐயப்பா
வள்ளலென்று பெயர் விளங்கும் எங்கள் ஐயப்பா
அள்ளி அள்ளி ஏகிடுவாய் செல்வக்குவியலை

கடும்பிணியின் கொடுமையினால் வருந்தும் அன்பரை
நொடிப்பொழுதில் பிணியகற்றி காத்தருள் அய்யா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

# வழிநடை சிந்து

| | |
|---|---|
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | பள்ளிக்கட்டு |
| கற்பூரஜோதி | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | கற்பூரஜோதி |
| | |
| பகவானே | பகவதியே |
| பகவதியே | பகவானே |
| தேவனே | தேவியே |
| தேவியே | தேவனே |
| ஐயப்ப பாதம் | சாமி பாதம் |
| | |
| சாமி பாதம் | ஐயப்ப பாதம் |
| பாதபலம்தா | தேகபலம்தா |
| தேகபலம்தா | பாதபலம்தா |
| வில்லாளி வீரனே | வீரமணி கண்டனே |
| வீரமணி கண்டனே | வில்லாளி வீரனே |
| | |
| பகவான் சரணம் | பகவதி சரணம் |
| பகவதி சரணம் | பகவான் சரணம் |
| தேவன் சரணம் | தேவி சரணம் |
| தேவி சரணம் | தேவன் சரணம் |
| | |
| தாங்கி விடப்பா | ஏந்தி விடப்பா |
| ஏந்தி விடப்பா | தாங்கி விடப்பா |
| தூக்கி விடப்பா | ஏற்றம் கடினம் |
| ஏற்றம் கடினம் | தூக்கி விடப்பா |
| | |
| கல்லும் முள்ளும் | காலுக்கு மெத்தை |
| காலுக்கு மெத்தை | கல்லும் முள்ளும் |
| நெய் அபிஷேகம் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | நெய் அபிஷேகம் |

வேலும் மயிலும் துணை

# ஹரிவராஸனம் ஸ்வாமி விச்வமோஹனம்

சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா

ஹரிவராஸனம் ஸ்வாமி விச்வமோஹனம்
ஹரிததீச்வரம் ஆராத்ய பாதுகம்.
அரிவிமர்த்தனம் ஸ்வாமி நித்ய நர்த்தனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே.

சரணகீர்த்தனம் ஸ்வாமி சக்தமானஸம்,
பரணலோலுபம் ஸ்வாமி நர்த்தனாலஸம்.
அருண பாஸுரம் ஸ்வாமி பூத நாயகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே.

ப்ரணய ஸத்யகம் ஸ்வாமி ப்ராண நாயகம்
ப்ரணத கல்பகம் ஸ்வாமி ஸுப்ரபாஞ்சிதம்.
ப்ரணவ மந்திரம் ஸ்வாமி கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே.

துரக வாஹனம் ஸ்வாமி ஸுந்தரானனம்,
வரகதாயுதம் ஸ்வாமி வேத வர்ணிதம்.
குருக்ருபாகரம் ஸ்வாமி கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே.

திரி புவனார்ச்சிதம் ஸ்வாமி தேவதாத்மகம்
த்ரிநயனம் ப்ரபும் ஸ்வாமி திவ்ய தேசிகம்.
த்ரிதச் பூஜிதம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே.

பவபயா பஹம் ஸ்வாமி பாவுகாவஹம்
புவன மோஹனம் ஸ்வாமி பூதி பூஷனணம்.
தவள வாஹனம் ஸ்வாமி திவ்ய வாரணம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே.

களம்ருது ஸ்மிதம் ஸுந்தரானனம்
களப கோமளம் ஸ்வாமி காத்ர மோஹனம்.
களபகேஸரீ ஸ்வாமி வாஜி வாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே.

ச்ரித ஜனப்ரியம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
ச்ருதி விபூஷணம் ஸ்வாமி ஸாது ஜீவனம்.
ச்ருதி மனோஹரம் ஸ்வாமி கீதலாலஸம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே.

## அச்சன் கோவில் அரசே என் அச்சம் தீர்க்கவா

ஸ்வாமி பொன் ஐயப்பா சரணம் பொன் ஐயப்பா
சபரிகிரி நாயகனே சரணம் ஐயப்பா
ஸ்வாமி பொன் ஐயப்பா சரணம் பொன் ஐயப்பா

அச்சன் கோவில் அரசே என் அச்சம் தீர்க்கவா
பச்சை மயில் ஏறும் பன்னிரு கையன் சோதரா
இச்சைகொண்டேன் உந்தன் முன்னே ஈஸ்வரன் மைந்தா
பச்சை வண்ணம் பரந்தாமன் மகிழும் செல்வா

ஆரியங்காவில் வாழும் ஆண்டவனே வா
பார்வதியால் அகமகிழும் பாலகனே வா
எருமேலி வீற்றிருக்கும் இறைவனே நீ வா
தர்மஞான சாஸ்தாவே தயவுடனே வா

மலைமேடு சபரிமலை மன்னவனே வா
குறைதீர்க்கும் குளத்துப்புழை பாலனே நீ வா
மன்னவனே மணிகண்டனே மகிழ்வுடனே வா
வன்புலிமேல் காட்சி தரும் வள்ளலே நீ வா

தேவர்களும் உனைப்பணிய காந்த மலையிலே
நீ ஆவலுடன் காட்சி தந்தாய் ஜோதி உருவிலே
காவலனே கண்ணாரக் கண்டோமே ஜோதி தனை
நாவார உனை அழைத்தோம் ஸ்வாமியே சரணம் ஐயப்பா

## தேடுகின்ற கண்களுக்குள்

தேடுகின்ற கண்களுக்குள் ஓடிவரும் சுவாமி
திருவிளக்கின் ஒளியினிலே குடியிருக்கும் சுவாமி
வாடுகின்ற ஏழைகளின் வறுமை தீர்க்கும் சுவாமி
வஞ்சமில்லா நல்லவர்க்கு அருள் புரியும் சுவாமி
ஐயப்ப சுவாமி அருள்புரி சுவாமி (தேடு)

கண்ணனும் நீ கணபதி நீ கந்தனும் நீயே-எங்கள்
காவல் தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே
அண்டமெல்லாம் காத்தருளும் சக்தியும் நீயே-என்மேல்
அன்பு வைத்து நதி வரைக்கும் ஓடிவந்தாயே
ஐயப்பா சுவாமி இன்னும் அருள்புரி சுவாமி (தேடு)

தந்தையுண்டு அன்னையுண்டு எந்தன் மனையிலே-ஒரு
தம்பி மட்டும் பிறக்க வேண்டும் உந்தன் வடிவிலே
அன்புகொண்டு தந்தைக்கவன்செய்யும் பணியிலே-நாங்கள்

ஆண்டுதோறும் வந்து நிற்போம் உந்தன் நிழலிலே
ஐயப்ப சுவாமி இன்னும் அருள்புரி சுவாமி (தேடு)

*கண்ணதாசன் தேவராஜன்*

## எந்த மலை சேவித்தாலும்

எந்த மலை சேவித்தாலும் தங்கமலை வைபோகம்
எங்கேயும் நான் கண்டதில்லையே ஐயப்பா
எங்கேயும் நான் கண்டதில்லையே

கோடி சூரியன் உதிக்கும் மலை
கோமலாங்கன் வாழும் மலை
கோடி ஜனங்கள் வருகும் மலை
குளத்தூர் அய்யன் வாழும் மலை

பாரில் உள்ளோரெல்லாம் புகழும் மலை
பரவசத்தை கொடுக்கும் சபரிமலை
பாவ வினைகளை தீர்க்கும் மலை
பம்பா பாலன் வாழும் மலை

சபரிநாயகா சரணம் சரணம் என்று
உருகி ஒருமுறை கூறினால்
சகல வினைகளும், சகல குறைகளும்,
சகல பிணிகளும் அகலுமாம்

மதகஜானனா குக சகோதரா
வருக வருக வருக என வாழ்த்தினால்
மனமகிழ்ந்து முன் வந்து நின்று
அருள் தந்து நேர் வழி காட்டுவான்

ஸ்வாமியே சரணம் ஐயப்பா
ஸ்வாமியே சரணம் ஐயப்பா

வேலும் மயிலும் துணை

# அய்யன் அருள் உண்டு என்றும் பயம் இல்லை

ஐயப்பா சரணம் ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

அய்யன் அருள் உண்டு என்றும் பயமில்லை
போவோம் சபரிமலை
அந்த ஆதிசிவன் மைந்தன் ஐயப்பன் என்றும்
பக்தரைக் காப்பவனே

ஐயப்பா சரணம் ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

அழுதையில் மூழ்கி கல்லும் எடுத்து
கல்லிடுங்குன்று வந்தேன்
கல்லிடுங்குன்றில் கல்லினைப் போட்டு
அந்தகரிமலை ஏறி வந்தேன்

ஐயப்பா சரணம் ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

பொன்னம்பலத்தில் தை மாதத்தில்
ஜோதியாய்க் காட்சி தந்தாய்
எங்கள் எண்ணம் பலித்தது
மனமும் நிறைந்தது மணிகண்டப் பெருமாளே

ஐயப்பா சரணம் ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

பந்தள நாட்டு இராஜகுமாரா பஞ்சகிரி வாசா
சந்தனம் வைத்து வந்தனம் செய்தோம் சபரிமலை வாசா

## சரணம் சரணம் ஐயப்பா

தந்தன தாளம் போடப்பா !
சபரி மலைக்கே ஓடப்பா !
சந்தனம் கமழும் மெய்யப்பா !
சத்திய ஜோதி ஐயப்பா !
இருமுடி கட்டி வையப்பா !
என்றும் காப்பான் ஐயப்பா !
ஒருமுடி வாக நில்லப்பா !
உத்தம வழியிற் செல்லப்பா !

பம்பா நீரில் ஆடப்பா !
பரவச மாகிப் பாடப்பா !
தெம்பாய் சரணம் போடப்பா !
திருமலை நோக்கி ஓடப்பா !
பேட்டை துள்ளி ஆடப்பா !
பெரிதாய் சரணம் போடப்பா !

வேலும் மயிலும் துணை

வாட்டம் தீரும் கேளப்பா !
வருத்தும் துயரம் தூளப்பா !

தேங்காய்க் குள்ளே நெய்யப்பா !
திகழும் ஜோதி ஐயப்பா !
மாங்காய்க் குள்ளே பாலப்பா !
மனத்துக் குள்ளே ஐயப்பா !
மனத்துக் குள்ளே மாசப்பா !
மாசைக் கழுவி வீசப்பா !
நினைத்துப் பார்த்தால் ஐயப்பா !
நீயே ஆவாய் மெய்யப்பா !

ஆடும் மாடும் நீயப்பா !
ஆண்டவன் பெற்ற சேயப்பா !
ஓடும் பொன்னும் ஒன்றப்பா !
உண்மையில் உள்ளம் ஒன்றப்பா !
இனிய வார்த்தை கூறப்பா !
இதயம் கோயில் பாரப்பா !
மனித நேயம் பேணப்பா !

மனத்துள் ஜோதி காணப்பா !
கடமைகள் ஒழுங்காய்ச் செய்யப்பா !
காப்பான் நம்மை ஐயப்பா !
உடைமைகள் யாவும் பொய்யப்பா !
உண்மை தெய்வம் ஐயப்பா !
சபரி மலையின் ஐயப்பா !
சத்தியம் வெல்லச் செய்யப்பா
சபதம் போட வையப்பா !
சரணம் சரணம் ஐயப்பா !

வேலும் மயிலும் துணை



# அம்மன் பாடல்கள்

## அம்பிகை அழகு தரிசனம்

**ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!**
**ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!**

கருவிலே திருவுடைய நல்லறிவா ளர்தமது
கனிவான நட்பு வேண்டும்
காசுபண ஆசைகளில் வேசியரைப்
போலாடிக் கறவாத புத்தி வேண்டும்



அருளுடைய பெரியவர்கள்
ஆசிவேண்டும் நெஞ்சில்
அகலாத அன்பு வேண்டும்
ஆதரவில் லாதவரில் நல்லவரைப்
பார்த்து நான் ஆதார மாக வேண்டும்

மருளுடைய மான்போலும்
மங்கை ஒரு தேவிஎன்
மனையாட்டியாக வேண்டும்
மானமெனும்
ஒன்றிலே மாறாத குறிவைத்து
வாழ்க்கையைக் காக்க வேண்டும்

இருளகல ஒளிவீசும் இறைவனது தேவியே
இவைசேர வேண்டும் எனையே!
இனியதொரு மதுரைநகர் அரசுவீற் றிருக்கின்ற
இளைய மீனாட்சி உமையே! 1

ஆழ்கடலில் போட்டாலும் அக்கினியி லிட்டாலும்
அழியாத மேனி வேண்டும்
அடுநோய்கள் பலகூடி உடல்மீது தொடுத்தாலும்
அலறாத நெஞ்சம் வேண்டும்

ஊழ்வினைகள் ஒன்றாகி உயிர்வாதை செய்தாலும்
ஒளிசிந்தும் இதழ்கள், வேண்டும்
உச்சத்தில் நின்றபடி கீழே விழுந்தாலும்
உலையாத திறமை வேண்டும்

பாழ்வழி யிலேதூங்கிப் பசியோ டிருந்தாலும்
பக்தியில் உறுதி வேண்டும்
பயமாகத் தோன்றுவதை நயமாக மாற்றுகிற
பலமான அறிவு வேண்டும்

சூழ்வதெல்லாம் நீயென்ற துணிவுதா தேவியே
சொக்கனின் அன்பு மனையே!
தொல்மதுரை நகருக்குப் பல்லாண்டு பாடிடும்
தூய மீனாட்சி உமையே 2

முன்னாளில் சென்றதைப் பின்னாளில் நினைக்கின்ற
மூடமை தீர்க்க வருவாய்
மூதறிஞர் சொல்கேட்டும் பேதமைமாறாத
முறைகேடு நீக்க வருவாய்

பொன்னான காலத்தை பாழ்செய்து தூங்காமல்
புகழ்மாலை சூட்ட வருவாய்
பொய்யர்கள் நடுவிலும் நல்லதே நினைக்கின்ற
புத்தியை கொண்டு வருவாய்

மன்னாதி மன்னனும் மண்டியிட்டே என்னை
வணங்கிடும் பெருமை யருள்வாய்
மலை மீது நின்றாலும் அவமான ஆணவ
மண்டாமல் காக்க வருவாய்

தென்னாடும் வடநாடும் ஒருங்கே பணிகின்ற
செவ்வமலை ராஜன் மகளே
திருமதுரை நகராளும் தருமதுரை ராணியே
தெய்வ மீனாட்சி உமையே. 3

ஆடுகின்ற பம்பரம் ஆடல் நிறுத்தாமல்
ஆடுவதும் உன் செய்கையே
அஞ்சுகின்ற நெஞ்சமும் ஆர்பரித் தேநின்று
அரசோச்சல் உன் செய் கையே

பாடுகின்ற பாவலன் பல்லாயிரம் பாடல்
பாடுவதும் நின் செய்கையே
பல்லக்கில் ஏறுவதும் செல்வாக்கு மீறுவதும்
பரமாத்ம நின் செய்கையே

கூடுகின்ற கூட்டத்தில் மாலை மரியாதைகள்
கூடுவதும் உன் செய்கையே
குற்றங்களை நீக்கி சுற்றங்கள் ஒன்றாகி
கொஞ்சுவதும் உன் செய்கையே

கோடு நதிமாகடலில் கொள்ளைகளை காட்டிடும்
கோமகனின் அன்பு மயிலே
கொற்றவர்கள் ஆண்ட திருக்கூடல் நகர் ராணியே
கோதை மீனாட்சி உமையே! 4

கல்லாக மரமாக காய்த்தவர் தம்மையும்
கனியாக மாற்றும் அருளே
கந்தல் உடைகட்டி அம்மா என்பார் வாழ்விலே
கடலாக பொங்கும் அருளே

சொல்லோடு பொருளோடு சுவையோடு விளையாடச்
சுகமாக வந்த தமிழே
தொடைமீது குருநாதன் தனை வைதீச்வரனுக்கும்
சுடராக நிற்க்கும் அமுதே

கல்லார்க்கும் கற்றார்க்கும் காணார்க்கும் கண்டார்க்கும்
கரையேற்றம் நல்கும் கலையே
கல்யாணம் இல்லாத கன்னிப் பெண் கண்ணீரைக்
காலத்தில் நீக்கும் சிலையே

எல்லார்க்கும் எல்லோமும் எப்போதும் தருகின்ற
ஏகாம்பரன் தேவியே
எழில்பொழியும் காஞ்சிநகர் அரசு புரி ராணியே
ஏதில் காமாட்சி உமையே! 5

மழைக்காலம் குளிர்காலம் வருங்காலம் நிகழ்காலம்
வரிபோட் டனுப்பும் அழகே
மதியென்றும் நிதியென்றும் சதியென்றும் பதியென்றும்
மடல் தந்து கூட்டும் மலரே

அழைத்தாலும் வெறுத்தாலும் அடித்தாலும் அணைத்தாலும்
அன்றாடம் உதவும் கனியே
அலைந்தாலும் தவித்தாலும் அமர்ந்தாலும் படுத்தாலும்
அருகாக நிற்கும் துணையே

அழக்கூட வழியற்ற பிள்ளைக்குப் பாலூட்டி
அறந்தந்த தெய்வ நிலையே
அடியார்க்கும் அடியாரை சிறியார்க்கும் சிறியாரை
அணைக்கின்ற அன்பு நிலையே

இழைகின்ற உள்ளத்தை எனக்கும் அளிக்கின்ற
ஏகாம்பரன் தேவியே
எழில் பொழியும் காஞ்சிநகர் அரசுபுரி ராணியே
ஏதில் காமாட்சி உமையே! 6

வீட்டுக்குள் நகைவைத்து பூட்டிவிட்டால் அங்கு
வெளியிலே நீ நிற்கிறாய்
விளக்கிலே நெய்யின்றி விம்முவார் கண்முன்பு
விளக்கமே நீ வைக்கிறாய்

காட்டிலே விட்டாலும் கண்கட்டி வித்தைபோல்
கைதந்து நீ காக்கிறாய்
காணாத பிள்ளையைத் தேடினால் நீவந்து
கருணையோடென்னைப் பார்க்கிறாய்

கூட்டிலே இட்டாலும் குயில்முட்டை தன்னைக் காத்தும்
குஞ்சாக நீ ஆகிறாய்
குழியிலே எறும்புக்கும் கோட்டிலே யானைக்கும்
கொள்கையை நீ சொல்கிறாய்

ஏட்டிலே படித்தாலும் எப்போதும் இனிக்கின்ற
ஏகாம்பரன் தேவியே
எழில்பொழியும் காஞ்சிநகர் அரசுபுரி ராணியே
ஏதில் காமாட்சியே உமையே! 7

ஊமைக்குழந்தைக்கு நின் மகன் வேல்கொண்டு
ஓ மென்று எழுதவில்லையோ
உழல்கின்ற பாண்டவர் பாரதப் போருக்கு
உன் அண்ணன் உதவவில்லையோ

காமனை கண்ணாலும் திரிபுரம் சிரிப்பாலும்
கணவனே எரிக்க வில்லையோ
காட்டிலும் மேட்டிலும் கரையிலும் நின் பிள்ளை
கவலைகள் தீர்க்கவில்லையோ

சாமத்தில் உன்நாதன் சிவனுக்கு எனைப்பற்றி
சரியாக சொல்லவில்லையோ
சரிகமவென்றே பாடி பார்க்கிறேன் நீ இன்னும்
சங்கீதமாக விலையோ

எமன் நெருங்காமல் என் வாழ்வு காக்கின்ற
ஏகாம்பரன் தேவியே
எழில்பொழியும் காஞ்சிநகர் அரசுபுரி ராணியே
ஏதில் காமாட்சியே உமையே! 8

நீராடை நெய்பூசி புத்தாடைகள் கட்டி
நேர்வந்த கன்னியரெல்லாம்
நிழல்கண்டு துணை கண்டு மகவோடு பொருள் கண்டு
நிலையான வாழ்வுமடைவார்

போராடிப் போராடிப் பலதுன்பம் பெற்றோர்கள்
புகழார்ந்த அமைதிய டைவார்
புண்ணாகி மரணத்தைப் கண்ணாக நினைப்போர்கள்
புதுவாழ்வு தாமுமடைவார்

வாராத படியேறி வந்தோர்கள் எல்லோரும்
வளமான செல்வமடைவார்
வயதான முதியோரும் ஜெயதேவி உனைக்கான
மாறாத இளமைய டைவார்

எராளர் குரலோடு எழில் நடன மிடுகின்ற
இனிய நடராஜன் துணையே
இதமுடைய பொன்னிநதி கரைபுரளும் தில்லைநகர்
இன்ப சிவகாமி உமையே! 9

தந்தைஎன் றேநாதன் தாளங்கள் போடுவான்
தத்தைகள் ஓடிவருவார்
தரதரவென்றே மன்னன் தாவிக் குதிக்கையில்
தருவார்கள் பக்கம் வருவார்

தித்தைஎன் றேவள்ளல் ஆடும் தளத்தில்
தித்திக்கும் மொழிபேசுவார்
திகதீம்என் றேதேவன் திரும்பக் குதிப்பனேல்
தீயோர்கள் ஓடிவிடுவார்

வித்தைகள் பலகற்றும் சிற்சபை ஈசனும்
விடையேறும் போது உன்னை
விட்டும் விடாமலும் உன்னை பிடிக்கின்றான்
விடலாமோ நீயும் என்னை

நத்தையும் நடமாடக் கால்தூக்கி நடனமிடும்
நடராசன் கொண்ட துணையே
நதிபெருகும் தில்லைநகர் அரசுபுரி ராணியே
நங்கைசிவ காமி உமையே! 10

கருவிலே நான் தூங்கி காலங் கழிக்கையில்
காற்றாக வந்தவள் நீ
கையிலே பிள்ளையாய் பையக்கிடக்கையில்
கனிந்த பாலானவள் நீ

உருவிலே பெரிதாகிப் பள்ளிக்கு செல்கையில்
உடன் வந்த கல்வியும் நீ
உறவிலே ஒன்றாகி திருமணம் நடக்கையில்
ஒளிமாலை ஆனவள் நீ

திருவோடு பிள்ளை என்மனையிற் பிறக்கையில்
சீர் தந்த ஆட்சியும் நீ
தேசங்கள் யாவிலும் தொழில்செய்யச் செல்கையில்
செல்வமாய் நின்றவள் நீ

குருவான குமரனின் அறிவான அன்னையே
கோல நடராசன் துணையே
கோவிலிடை அந்தணர்கள் கூடிவரும் தில்லையில்
கொஞ்சும் சிவகாமி உமையே! 11

பட்டாடை கட்டி உன்னைப்பார்க்கின்ற வேளையில்
பத்தினியை நான் பார்க்கிறேன்
பல்லக்கில் எறிநீ ஊர்முழுதும் செல்கையில்
பைரவியை நான் பார்க்கிறேன்

எட்டாத நேர்நடுவில் உன்னை வைக்கையில்
இன்தமிழை நான் காண்கிறேன்
எங்கெங்கு போயினும் எத்தனை நான் காண்கினும்
அங்கெல்லாம் உனைக் காண்கின்றேன்

தொட்டார்க்குத் தாயாக தொடர்வாருக்குச் சேயாக
தோகை நீ ஆனதென்ன
சோழகுலம் ஆளும்வரை பலகாலம் நீ அங்கு
துணையாய் இருந்ததென்ன

கொட்டாத மேளங்கள் கொட்டுகிற கூத்தாடி
கோல நடராசன் துணையே
கொடிவளரும் தில்லைநகர் நடுவிலொரு திருக்கோயில்
கொண்ட சிவகாமி உமையே! 12

ஆசையுடன் ஒரு நூறுபாடலுனக் கணிவித்த
அபிராம பட்டருக்கு
அமாவாசை யன்றந்தநிலவுவரச் செய்தாயே
அதுபோதும் பக்தருக்கு

தாசி எனச் சொன்னாலும் தகைமை நிலைமாறாத
தங்க மயில் மாதவிக்கு
தங்க இடம் தந்தாயே தனியுறவு கொண்டாயே
சாட்சியிது காதலுக்கு

பூசுவது வெண்ணீறு பூணுவது திலகமென
பூசைசெய்யும் பெண்களுக்குப்
போனபிறப் பென்றாலும் வந்தபிறப் பென்றாலும்
புகழ் தந்தாய் கண்களுக்கு

தேசுலவும் சோழர்களின் காலம் முதல் இன்று வரை
தெய்வநிலை பெற்ற சிலையே
திருமுகமும் குங்குமமும் ஒருசேர ஒளிவீசும்
திருக்கடவூர் அபிராமியே! 13

காவிரிப்பூம் பட்டினத்து வாணிகரைத் தாலாட்டி
காத்தது உன் கண்களி லையோ
கல்லிருக்கும் சோலைகளின் உள்ளிருந்து குலமாதர்
காவல்தரும் தெய்வமில்லையோ

கோவலனைக் கூடலிலே கொன்றவுடன் கண்ணகியின்
கூட்டினுள் நீ செல்லவில்லையோ
கொற்றவரைப் பத்தினியைப் பார்ப்பணரை விட்டுவிட்டு
மற்றவரைக் கொல்ல வில்லையோ

ஆவலர்க்கு நல்லதமிழ் படியளந்து தந்துவிட்டு
பாடல் நீ பெற்ற திலையோ
பாலோடு சந்தனமும் பரிசாக வைத்தவர்க்கு
பாவை நீ காவலிலையோ

பூவிரிய வண்டுவர நின்முகத்தைப் பார்த்தவுடன்
பூசை செய்ய வைத்த மயிலே
போதவிழும் திருக்கடவூர் தேவர்நக ராகவந்த
பொன்மேனி அபிராமியே! 14

வேலும் மயிலும் துணை

திருமகளும் கலைமகளும் அலைமகளும் உள்ள இடம்
திருக்கடவூர் சங்கமல்லவோ
சிவபெருமான் திருமாலும் பிரம்மாவும் வந்த இடம்
திருக்கோவில் மேடையல்லவோ

பருவமுயர் பெண்களோடு பலபெற்ற தாய்மாரும்
பார்ப்பது உன்வடிவமல்லவோ
பாவிகளும் வந்தவுடன் புண்ணியர்கள் ஆகுமிடம்
பாவை உன் சோலையல்லவோ

ஒருபிறவி மறுபிறவி எழுபிறவி வந்தாலும்
உன்னையே பணிய அருள்வாய்
உலகமெனை அறியாத புல்லாகிக்கிடந்தாலும்
உன் மனம் முளைக்க அருள்வாய்

அருள்வளர மருள் அகல ஆதிக்கம் செய்கின்ற
அமிர்த கடேசந்தான் துணையே
அழகு திருக்கடவூரில் பழகு தமிழ் உரையாடும்
அன்பு மயில் அபிராமியே! 15

ஏழுலகம் முடிசூட்ட கவிராஜ சிங்கமென
எனை மாற்ற வேண்டும் நீயே
எதிரொருவர் இல்லாது புதுமைகளை நான் செய்ய
ஏற்றமுற வேண்டும் தாயே

வாழும்வரை நலமாக மற்றோர்குத் துணையாக
வாழ்விக்க வேண்டும் நீயே
வந்தாலும் போனாலும் வாடாமல் உள்ளத்தை
வளமாக்க வேண்டும் தாயே

வீழுவது உன் பாதம் விளங்குவது வேதமென
விதிவைக்க வேண்டும் நீயே
விளையாட்டு பிள்ளைஎனை வழிகாட்டி அழைத்தே
வினைதீர்க்க வேண்டும் தாயே

சூழுமொரு சோலையிடை அமுதீசர் பாகத்தில்
துணையாக நிற்கும் மயிலே
சோலை திருக்கடவூரில் ஆதிஉமை வடிவாகச்
சுடர்வீசும் அபிராமியே! 16

காலமகள் விளையாடும் நீலமணிக் கடல்மீது
கங்கை நதி சேரும் போது
கண்ணெதிரில் உன் பிள்ளை உன்னோடு சேராமல்
கண்ணீரில் நிற்பதேது

ஆலமர நிழலாக ஆதரவு தந்தாலும்
அல்லலுறும் எனது வாழ்வு
அம்மாவுன் திருவடியை அடைந்தாலே அமைதி வரும்
அடுத்ததொரு பிறவி ஏது

மாலவனின் தங்கைக்கு வானகமும் மண்ணகமும்
மலர் பூக்கும் சோலையல்லவோ
வரவேண்டும் உனதுமடல் தரவேண்டும் உன்கருணை
வானக மிலாத நிலவே

கோலமிகு விசுவேசன் காசிநகர் தன்னிலே
கொண்டாடும் அன்பு மயிலே
குடையளவு காணக் கொடையளந்து கொண்டுவா
கோதை விசாலாட்சி உமையே! 17

ஆத்தாளுன் சந்நிதியை அறியாத பிள்ளைநான்
ஆனாலும் கவிதை சொன்னேன்
ஆடிவரும் கங்கையில் மூழ்காத காக்கை நான்
ஆனாலும் பேறுபெற்றேன்

காத்தாலும் மங்களக் கையோடு முகத்தையும்
கற்பனையில் காணுகின்றேன்
கட்டாயம் உன்னருளைப் பெற்றேநான் வாழ்கிறேன்
காலத்தில் அங்கு வருவேன்

சேர்த்தாளும் அன்னையே சேய் செய்த பாவத்தை
சிறிதும் நீ மதிக்க வேண்டாம்
சிற்றறிவை ஆசானின் பேரறிவு காப்பதுவும்
தேவி நீ மறந்த ஒன்றா

பூத்தாமரைப்போல் பொங்கும்சின நாகத்தைப்
புரிந்தவன் கலந்த மயிலே
புகழ்பெருகு காசிநகர் தகவுடைய தேவியே
பூவை விசாலாட்சி உமையே! 18

மானிடம் பெரிதன்று பூமியில் பிறந்த நான்
மதிகெட்டுச் சொன்னதுண்டு
மண்ணிலே புழுபூச்சி தன்னைவிட ஈனமாய்
வாழ்க்கையைப் பார்த்ததுண்டு

ஊனுடல் மண்கேட்க உயிர்தனை நீ கேட்டு
ஊடாடி நிற்ப துண்டு
ஓங்கி வளர்மரங்களும் பாம்புடன் வாழ்வதை
உளம் நொந்து பார்ப்பதுண்டு

நானிடர்பட்டபின் மானிடப் பிறவியை
நலமிலாப் பிறவி என்று
நன்றாகக் காண்கிறேன் மன்றாடி நிற்கிறேன்
நாடாதோசொர்க்க மென்று

தேனிடம் மொழிவாங்கி விசுவேசன் மடியிலே
சிந்திடும் அன்பு மயிலே
சிறுகூடற்பட்டி வரை மறுபிறவி எடுத்தாயென்
தெய்வ விசாலாட்சி உமையே! 19

உள்ள நாள் வரையிலே நன்மையும் தீமையும்
நன்றென்றே எண்ணும் வரம்தா
உறவோடு பகையையும் இரவோடு பகலையும்
ஒருமித்துப் பார்க்க வரம் தா

வெள்ளம்போல் செல்வமும் வறுமையும் சமமென்று
விளையாடும் வாழ்க்கை வரம் தா
விதியென்றும் வலியதே மதியென்றும் சிறியதே
வினை தீர்த்து நல்ல துணை தா

பள்ளம் போல் இகழையும் மலைபோல் புகழையும்
பந்தாடும் வீர நிலைதா
எங்கும் பசியையும் பலசுவை உணவையும்
பதறாமல் கொள்ள வரம் தா

அள்ளியிடும் கையிலும் அர்த்த சாமத்திலும்
அருள் செய்யும் அன்பு மயிலே
அறமுடைய வணிகர் குலம் சிலைவைத்த தேவியே
அழகு விசாலாட்சி உமையே! 20

*-கவிஞர் கண்ணதாசன்*



# தையல்நாயகி பாமாலை

எள்ளுப்பூ மூக்கு எழிற்குவளையம் பூக்கண்கள்
இயல்பான அழகு வடிவம்
இனிய முகம் தாமரை இருசெவிகள் செந்தாழை
இறைவிநிறம் நல்ல பவளம்

கள்ளிருக்கும் ரோஜாப்பூக் கன்னங்கள் அல்லியில்
கடைந்ததோர் இரண்டு கால்கள்
கைகளும் விரல்களும் கனகாம்பரம் மல்லி
கற்பகப் பூவில் தோள்கள்

புள்ளிருக்கும் வேளூர் பூவையுன்அங்கமெல்லாம்
பூக்களாய் மலர்ந்திருக்க
பூவுடல் கொண்டவுனை வர்ணித்துப் பாமாலை
பூமாலையோடு தந்தேன்

வல்லவள் நின் அருளாலே வரும் துயரை போக்கியொரு
வரம்தந்து காக்க வருவாய் - அம்மா
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே. 1

பால் கேட்டு அழுததோர் பிள்ளைக்குச் சீர்காழிப்
படித்துறையில் பால் கொடுத்தாய்
பச்சை வெற்றிலைதுப்பிக் கவிகாள மேகத்தைப்
பாட்டரசன் ஆக்கி வைத்தாய்

வேல்கேட்ட பிள்ளைக்குச் செந்தூரில் சமர்செய்ய
விருப்பமுடன் வேல் கொடுத்தாய்
விளையாடும் ஏழரைச் சனியோடு கிரகங்கள்
விலகிடும் வழி அமைத்தாய்

நூல்கேட்ட ஞானத்தில் நூறுகவி பாடுமெனை
நோக்கி நீ எது கொடுத்தாய்
நொடிப்பொழுதில் என்வாழ்வில் படிப்படியாய் துயரங்கள்
நுழைவதற்கு ஏன் விடுத்தாய்

வாழ்வரசி இனி எனது வருங்காலம் செல்வங்கள்
வரும் காலம் ஆக்க வருவாய் - அம்மா
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே. 2

தா வென்று கேட்டவுடன் கொடுப்பதனால் தானுன்னைத்
``தாய்'' என்று சொல்லிவைத்தார்
தலைமகளுன் சந்நிதியில் கலைமகளின் அருளாலே
தமிழ் பாடி வரங்கள் பெற்றார்

சேய்ஒன்று எதிரினிலே கதறுவது கேட்காமல்
செவிமூடி நிற்க லாமோ?
சிறுபிழைகள் இருந்தாலும் மன்னித்து அருள்காட்டும்
தேவியவள் நீயல் லவோ

ஆயகலை அத்தனையும் அறிந்தவனை நோய்நொடிகள்
அணுகவிடல் முறையாகுமோ
அரியதொரு செல்வத்தை உரியமகன் ஏற்காமல்
அனுதினமும் வாட லாமோ?

வாயுவென வேகமாய் வந்தெனது துயர்தீர்த்து
மகிழ்ச்சியினைக் கொடுக்க வருவாய் - அம்மா
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே. 3

தங்கநிகர் குணத்தோடு தைரியமும் தருகின்ற
தமிழ்ச் செல்வி போற்றி போற்றி
தரணியிலே புகழ்காண வரமளிக்கும் சுந்தரியாம்
தாமரைப் பூமாது போற்றி

மங்கையர்க்கு மாலைகளும் மன்னவர்க்கு வேலைகளும்
மகிழ்ந்தளிக்கும் அரசி போற்றி
மாதரசி உண்ணா மலைஅழகு சிவகாமி
மங்கை மீனாட்சி போற்றி

பொங்கி வரும் துயரத்தைப் பொடியாக்க வரும் அன்ன
பூரணி கல்யாணி போற்றி
யோகமுடன் வாழ்வுதரும் பூங்கொடியாம் விசாலாட்சி
புனித உமாதேவி போற்றி

மங்களங்கள் அத்தனையும் எங்களது வீடுவர
மாதரசி கூட்டி வருவாய் - அம்மா
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே. 4

மலைபோன்ற செல்வத்தை குவித்து வைத்திருந்து நான்
மற்றவர்க்கு உதவ வேண்டும்
மழலையின் குணத்தோடு முதுமையிலும் இளமையாய்
மகிழ்வோடு வாழ வேண்டும்.

கலைதவழும் மேடையெல்லாம் பூமாலை அணிந்து நான்
கௌரவம் பெறவும் வேண்டும்.
கவிபாடும் எனதுகுரல் கேட்டவுடன் தெய்வமெலாம்
காட்சி தந்து அருளவேண்டும்.

நிலையான புகழ்தந்து உற்றாரும் மற்றாரும்
நேசிக்கும் உறவு  வேண்டும்.
நீ எனது துணையாகி நான் செல்லும் பாதைக்கு
நேர் வழிகள் காட்டவேண்டும்

வளையாடும் கரத்தழகி பகை வென்று எந்நாளும்
மறுக்காமல் காக்க வருவாய் - அம்மா
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே. 5

சிறுவயதில் உன்பெருமை தெரிந்திருந்தால் உன்னைச்
சேவித்து மகிழ்ந்தி ருப்பேன்!
தெரியாமல் செய்த பிழை அத்தனையும் மன்னிக்கத்
தேடி வந்த முதிருப்பேன்!

புரியாமல் எடுத்த இப்பிறவிதனில் மங்கையரின்
போகத்தை அளந்தி ருந்தேன்!
பொன்னோடும் பெண்னோடும் வருமின்பம் போதுமெனப்
புரியாமல் வாழ்ந்திருந்தேன்!

திருநாளில் உன் பெருமை தெரிந்ததும் தொடர்ந்துநான்
செவ்வாயில் விரதம் வைத்தேன்!
தித்திக்கும் அருள்தன்னை சித்திக்க வரம்வேண்டி
சிங்காரப் பாட்டி சைத்தேன்!

பருவத்தில் நான்செய்த பாவத்தை மன்னித்துப்
பாவை நீ காக்க வருவாய் - அம்மா
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே! 6

திருக்கழுக் குன்றத்தில் கழுகுக்கும் மதியத்தில்
தினந்தோறும் சோறு உண்டு!
திருநாளாம் பொங்கலில் நந்தியெனும் மாட்டுக்கும்
தித்திக்கும் பொங்கல் உண்டு!

வருஷத்தில் ஒருநாளில் வடையோடு அன்னத்தை
வைரவரும் காண்ப துண்டு!
வளர்கின்ற புற்றுக்குள் ஒளிகின்ற பாம்புக்கும்
வார்க்கின்ற பாலு முண்டு!

அர்ச்சித்து வழிபட்டு அன்னையே உனையெண்ணும்
அடியேனுக் கென்ன உண்டு!
அன்று தினம் அளந்தபடி என்றைக்கும் நடந்திடவே
அருள்புரிய வேண்டும் அம்மா!

மரம் வைத்த நீதானே தண்ணீரும் விடவேண்டும்
மறந்திடல் முறையாகுமோ - அம்மா
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல் நாயகியே!
வளம் காண வைக்கும் உமையே! 7

கழுதையெனும் பிறவியை எடுத்தாலோ நிச்சயம்
கழுத்திலே பொதி யிருக்கும்!
காளைமாடாகவே பிறந்திடின் நிச்சயம்
கழனியில் கால் இருக்கும்!

பழுதான பிறவியாம் நாயாகப் பிறந்தாலோ
பகலிரவு விழிக்க வேண்டும்!
பறவையாய்ப் பிறந்தாலும் மரங்களின் உச்சியில்
பதியங்கள் போட வேண்டும்!

வேலும் மயிலும் துணை

அழுதாலும் தொழுதாலும் அன்னையே உனையன்றி
யாரெனக்கு தவுவார்கள்?
ஆறறிவு கொண்டதோர் மனிதனாய் என்னை நீ
அகிலத்தில் படைத்த பின்னால்

வழிகாட்ட மறுப்பதும் நியாயமா? என் விழியில்
வடிந்து நீர் ஓடலாமா? - அம்மா
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே. 8

புல்லாகிப் பூடாகிப் புழுவாகி இருந்தாலோ
புலம்பியே தீர வேண்டும்!
பொன்னாக அணிகின்ற மனிதனாய்ப் பிறந்தநான்
புதுயுகம் காண வேண்டும்!

கல்லாகி நிற்கின்ற தெய்வம் நீ இல்லையெனக்
காட்டிட விரைந்து வருக
கனதனம் நீதந்து காசினியில் புகழ்தந்து
காவலாய் நின்று அருள்க!

முள்ளாக மலராக மோதிடும் வாழ்க்கையில்
முற்றும் நான் நம்பி வந்தே!
மோதகப் பிரியனின் தாயான உன்னிடம்
முறையீடு செய்யு கின்றேன்!

பல்லக்கு பரிவாரம் பார்த்திடும் ராஜாங்க
பவனியை எனக்கு அருள்க - அம்மா
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே! 9

எவருக்கு எதுவேண்டும் என்பதை அறிந்த நீ
ஏறிட்டுப் பார்க்க வில்லை!
இருகரம் கூப்பியுன் சந்நிதியில் நிற்கும் நான்
எதுகேட்டும் மாறவில்லை!

சிவல்புரியில் வாழ்கின்ற சிங்காரம் தந்ததோர்
செந்தமிழ் கவிதை மூலம்!
சீர்கொண்ட பதிகங்கள் பத்தையும் கேட்டுநீ
சிரமத்தை அகற்ற வேண்டும்!

வேலும் மயிலும் துணை

கவலைக்கு மருந்தாகும் கடவுளே உனைநம்பி
காலங்கள் போக்கி விட்டேன்!
காப்பாற்ற வேண்டியது உன்பொறுப் பல்லாது
காசினியில் யார் பொறுப்பு!

மகன்கேட்டு தாய்எதுவும் மறுப்பதில் முறையில்லை
மனமிரங்கி வந்து அருள்க! - அம்மா
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே. 10

*கவிஞர் சிவல்புரி சிங்காரம்*

# உமையவள் பாமாலை

அண்டங்கள் ஏழினோ டேழும் அப் பாலுமாய்
ஆன எம் ஞான தேவா!
அறுகுடன் தும்பையும் ஆத்தியும் கொன்றையும்
அணிசெய்யும் அழகு மார்பா

எண்டிசை நடுங்கவே இறைவனார் தேரின் அச்(சு)
இற்றிடச் செய்த வீரா
இலகு புகழ் முனிசொல்ல உலகுபுகழ் பாரதம்
எழுதிடும் கவிதை நேசா!

தண்டையொடு கிண்கிணி சதங்கையும் கொஞ்சவே
சந்தடை கொள்ளும் பாதா!
சரவணன் அறுமுகன் மணமகன் ஆகவே
தண்ணளி புரிந்த ஈசா

தெண்டிரை சூழுலகில் தேவிராஜேஸ்வரியின்
தெய்வமாக் கருணை பாட
சித்தமிசை குடி கொண்ட தத்துவ விநாயகா
திருவருள் தந்து நீகா!

சிந்தூரம், குங்குமம், செவ்வானம், அவ்வானம்
திகழ வருகதிரின் உதயம்
தேசு மிகு மாணிக்கம், திரு ஏறு கமலம் அச்
செங்கமலம் அஞ்சு பவழம்

மந்தாரம் மழை நாளில் வரும் இந்தர கோபம் அவ்
வண்டூ ரும் மலையில் நறவம்
மான்மதம், செங்குருதி போன்மலரும் மாதுளம்
மாதுளம் சிதறும் முத்தம்

செந்தீயின் வண்ணம் என வேசொல்லு(ம்) மேனியும்
செப்பரிய அழகு வடிவும்
சிங்கா தனத்திலும் சிவனார் மனத்திலும்
சீர் கொண்டிலங்கும் எனினும்

எந்தாய்நின் பேர் சொல்லும் ஏழையேன் அறிவிலும்
என்றென்றும் திகழ அருள்வாய்!
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே! 1

தேறாத கவிஎனினும் மாறாத காதலால்
திரு முன்பு சாற்றுகின்றேன்!
சிந்தை அணு ஒவ்வொன்றும் தேவி உனதே ஆகச்
செய்ய தமிழ் பாடுகின்றேன்!

ஆறாத துயருக்கும் அகலாத கவலைக்கும்
ஆரை நான் நொந்து கொள்வேன்
அறியாது பிழை செய்து சரியாக வதைபட்ட
அவலத்தை எங்கு சொல்வேன்

நீறாக வேநிருதர் புரமூன்றும் செற்ற உனை
நெஞ்சாரப் போற்றுகின்றேன்
நெற்றிவிழியால் எனது குற்ற மலை பொடியாக
நின்னருளை வேண்டுகிறேன்!

ஈறேதும் இல்லாத இன்பவடிவாக என்
இதயதள மீதும் ஒளிர்வாய்!
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே 2

சீரார் பெருந்துறையில் சிவயோக நாயகி
சிவகாமி தில்லை மன்றில்
தென்குமரி பகவதி திருவானைக்காவினில்
திகழும் அகிலாண்டேஸ்வரி

காரார் மதிற்கச்சி காமாட்சி, அங்கயற்
கண்ணி செந்தமிழ் மதுரையில்
கங்கைவள நாடுடைய நங்கை விசாலாட்சி
காளிவங் காள மண்ணில்

தாரார்சிவன் தோளும் தமிழும் விழைபவள்
சமயபுரம் அதனில் மாரி
தட்டாமல் கடவூரில் பட்டருக்கருள் செய்த
தையல் அபிராமவல்லி

ஏரார் மழைக்கண்ணி எண்ணரிய நின்கோலம்
யாவும் எமை ஆள வலவோ
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே 3

மாதவன், சீதரன் மதுசூதனன் துளசி
மாலை மார்பன் கேசவன்
வைகுந்தன், அச்சுதன், மலைமேலும் அலைமேலும்
வாழ்கின்ற மறைநாயகன்

தாதவிழ் மலர்க்கூந்தல் ஜானகிமணவாளன்
சனார்த்தனன் தேவதேவன்
சாரங்கன், நாரணன், தாமோதரன் கோதை
தலைவன், ஆழ்வார்கள் நேசன்

மேதினி அளந்ததிரி விக்(கி)ரமன், திருமகள்
விழைகின்ற பதுமநாபன்
வேறு வேறான பெயர் நூறுநூ றாய்விரியும்
மேகவண்ணன் தங்கையே!

ஈதென வரைந்து யாம் ஓதுதற் கரியநின்
இசைபாட மொழியேது காண்
இறைவினைஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே. 4

மூவர்க்கும் தேவர்க்கும் யாவர்க்கும் மேலான
முதல்வி, முக்கண்ணி போற்றி
முறையாகத் தொழுவோர்க்குத் துணையாகி வழிகாட்டும்
முத்தமிழ்ச்செல்வி போற்றி

நாவுக்கும் நெஞ்சுக்கும் நலம்தந்(து) இனிக்கின்ற
நாதாந்த சக்தி போற்றி
நான் என்றும் எனதென்றும் நலியாத நிலைசேர்க்கும்
ஞானப் பூங்கோதை போற்றி

பாவுக்கும் பூவுக்கும் பாதம் பெயர்த்தருளும்
பாண்டிமாதேவி போற்றி
பணிவார்தம் துயரோடு பிணியாவும் பொடியாக்கும்
பரமகல் யாணி போற்றி

ஏவல் கொண்டுலகு பல காவல்செய், அன்னைநின்
இணையடிகள் போற்றி, போற்றி
இறைவி எனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே 5

பொன்னும் நீநான்தேடும் பொருளும் நீ புகழும் நீ
போகங்கள் யாவும் நீயே
புறமும் நீ அகமும் நீ புவியெங்கும் நான் காணும்
பொலிவு நீ போதம் நீயே

முன்னும் நீ நடுவும் நீ முடிவும் நீ முடிவிலா
முழுமை நீ ஞானம் நீயே
முதுமை நீ இளமை நீ மோகம் நீ தாகம் நீ
மோனம் நீ கானம் நீயே

மன்னும்நீ தான் எனது வாழ்வென்று வளம் என்று
மனமுருகி நின்றதெல்லாம்
வஞ்சமோ? எனதுயர் கொஞ்சமோ? இவ்வாறு
மறப்பதுவும் ஒரு நெஞ்சமோ

இன்னும் நீ சற்றும் இரங்காதிருந்திடில்
என்னுயிர் இனி மிஞ்சுமோ?
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயலை வாழும் உமையே 6

ஆயிரம் இதழ்கொண்ட தாமரை மலரிலே
அழகாக வீற்றிருப்பாய்
அங்குசம் பாசம் கரும்பு வில் ஐங்கணை
அங்கையில் ஏற்றிருப்பாய்

வேயின் குழல் முழவு வீணைநாத ஸ்வரம்
மேவுமிசை கேட்டிருப்பாய்
விறலியர் நடம்புரிய வேறு வேறான கலை
விந்தைகள் நயந்திருப்பாய்

ஞாயிறு முதற் பிரமன் நாராயணன் துதித்திடவும்
ஞாலமுழு தாண்டி ருப்பாய்
நாடிவரும் அன்பர்க்குக் கோடிநலம் தந்துலகில்
நலிவின்றிக் காத்திருப்பாய்

ஈயென இரந்துன்னை வேண்டவும் வேண்டுமோ
எனையும் நீ ஆதரிப்பாய்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே 7

மாரியாய் மேரியாய் முகமது நபிக்கருள
வந்த ஒரு மாசக்தியாய்
மனவாக் கிறந்ததிருவருளாய் மதங்கள் தோறும்
வாழ்கின்ற தெய்வம் நீயே

ஓரிடம் ஒருகுணம் ஒருநிலை ஒருருவம்
ஒருபெயர் ஒருவிகற்பம்
ஒன்றுமில்லாத படி ஒவ்வொன்றும் தானாகி
உணர்வரிய பிரமம் நீயே

ஆரியம் திராவிடம் ஆங்கிலம் சீனமென
அமைகின்ற மொழிகள் நீயே
ஆமென்றும் இல்லையென அறுதியுடன் வாதித்தும்
அடைவரிய எல்லை நீயே

யாரென்ன சொன்னாலும் யான் உன்னை ஒரு நாளும்
ஐயுற்ற தில்லை தாயே
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே 8

துயிலெலும் வேளையில் சுவைநீர் அருந்துகையில்
துறைநீர் படிந்தெழுகையில்
தொழுகையில் பலபணியும் புரிகையில் இன்பமொடு
துன்பங்கள் எதிர்வருகையில்

வயிராற உண்ணுகையில் மாதரார் தோட்புறம்
மனமுருகி உயிர்தோய் கையில்
மக்கள் மெய் தீண்டுகையில் மாறாத காதலொடு
வண்டமிழ்ச் சுவை ஆய்கையில்

அயலெவரும் அறியாமல் அன்னையுனை வழிபடும்
ஆசைமகன் நானில்லையா
ஆசைமகன் தருகின்ற வாசமலர் மாலைகள்
அத்தனையும் தேனில்லையா?

இயலும்வரை பாடியும் எடுத்தளிக்காமல் நீ
இருப்பதொரு பழியில்லையா?
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே 9

காற்றைப் படைத்தவள் நீயென்ற போதிலும்
கவரிகள் வீசுகின்றோம்
கனலும்உன் வடிவெனிலும் கற்பூர தீபங்கள்
கமழ்தூபம் காட்டுகின்றோம்

ஆற்றையும் கடலையும் அருளியநின் மேனிக்கும்
அபிடேக நீர்சு மந்தோம்
அங்கிங் கெனாதுவெளி எங்குமுள நீ உறைய
ஆங்காங்கு கோயில் செய்தோம்

போற்றரிய நின்வடிவைப் பொன்னிலும் கல்லிலும்
பூசித்து வாழ்த்துகின்றோம்
புவிமீது நீ தந்த பொருளன்றி வேறொன்றைப்
போய்த்தேடி எங்கு பெறுவோம்

ஏற்றருள வேண்டும் என இதயத்தை எம் அன்பை
இணைமலர்த் தாளில் வைத்தோம்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே 10

என்னகவி பாடினால் உன் மனது மாறுமோ
என்மீதும் கருணை வருமோ
எவர்மூலம் அணுகினால் யான் செய்யும் விண்ணப்பம்
எளிதாக நிறைவேறுமோ

சொன்னபடி கேளாமல் துயர் செய்யும் என்மனம்
தூய்மைபெற வழியுமுண்டோ?
சோதித்து வாட்டுவது போதுமென உன்னிடம்
சொல்லுபவர் யாருமிலையோ?

சின்னமலர் என்றாலும் தேன்துளி சுமந்து தவம்
செய்துவரும் மலரல்லவோ?
செப்புவது பிழைபடினும் செவியின்பம் தரவல்ல
சேய்மழலை மொழியல்லவோ?

இன்னபடி தான் பெற்ற பிள்ளைதுயர் எய்துகையில்
இளகாத தாயுமுண்டோ?
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே 11

நெற்றியில் நீ தந்த குங்குமம் இருக்கையில்
நெஞ்சினில் மயக்க மில்லை
நேரான சிந்தையோடு போராட வந்தபின்
நினைவினில் குழப்ப மில்லை

முற்றுமுனை நம்பியே முறையோடு மேற்கொள்ளும்
முயற்சியில் தயக்க மில்லை
மோகவயமாக உனைத் தாகமுடன் பாடிவரும்
முத்தமிழ் சலிப்பதில்லை

உற்றபகை யாரெனிலும் உன் துணை கிடைத்தபின்
ஓய்வுற நினைப்பதில்லை
உலகமோ ரேழுமே எதிராக நின்றாலும்
உண்மையை மறைப்பதில்லை

இற்றதினி அச்சம் இடர் கவலை நோய்பகைகள்
இன்னல்கள் இல்லை இல்லை
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே 12

ஓமெனும் மந்திரத்துட் பொருள் ஆகின்ற
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி
ஊழிதொறும் ஊழிதொறும் உயர் அறம் காக்கின்ற
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி

நாமமும் உருவமும் பலவாகி உலகாளும்
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி
ஞானமும் இச்சையும் கிரியையும் தானான
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி

சேமமும் இன்பமும் சித்தியும் உதவிடும்
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி
ஸ்ரீ சக்ர நிலையத்தில் சிவசக்தி வடிவான
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி

யாமும்எம் கல்வியும் யாவும் உன் அடைக்கலம்
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே 13

வேலும் மயிலும் துணை

பொலிகஇவ் வையகம் பொலிக நெடு வானகம்
போயொழிக துயரமெல்லாம்
புதியசொல் புதியபொருள் புதிய சுவை புதியஇசை
புலரட்டும் உலகமெல்லாம்

மலிகவளம் வளர்கநலம் வாழ்கவே நல்லறம்
மயக்கங்கள் யாவும்தீர்க!
மங்கல மடைந்தையர் மனையறம் நனிதழைக
மடமைகள் வீழ்க! வீழ்க!!

கலிகெடுக எங்கெங்கும் கருணை அரசோச்சுக
கயமைகள் நிலம்பு தைக!
கலைமகள் விளக்கமாய் திருமகள் பெருக்கமாய்க்
காலங்கள் அமுதாகுக

இலம்பா(டு) ஒன்றில்லாமல் யாவர்க்கும் யாவும்இனி
எய்தநீ ஆணைதருக
இறைவிஎனை ஆண்டரும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே. 14

தேவாதி தேவிநின் தெய்வமாக் கருணையால்
தீராத நோய்கள் தீரும்
செல்வமும் செல்வாக்கும் செருமுனையில் வெற்றியும்
சீர்நிலை பேறும் சேரும்

பூவுலகில் நிலையான புகழ்பெருகும் அறிவில்ஒரு
புதிய ஒளிதான் பிறக்கும்
பூண் ஆள் இடம் துணை புத்திரர் பசுக்கள் எனும்
பொலிவு வரும் உயிர் தழைக்கும்

வேலும் மயிலும் துணை

பாவங்கள் ஏழ்மைகள் பழவினைகள் எனும் இவைகள்
பனிபோல் அகன்றுநீங்கும்
பத்தியொடு சொல்வார்க்குச் சித்திகள் கைகூடும்
பாரின் மிசை அமைதி ஓங்கும்

யாவும் கடந்தபே ரின்பநிலை கிட்டும்என
இசைபாடி வாழ்த்து கின்றோம்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி
இமயமலை வாழும் உமையே. 15

நோக்கும் திசைதோறும் நூபுரத்தாள்களும்
நூல்போல் ஒசிந்த இடையும்
நொடிதோறும் நொடிதோறும் புதிதான எழில் கொள்ளும்
நுவலரி யதிரு மேனியும்,

வார்க்குங் குமக்கச்சு மார்பும் அம்மார்பினில்
வாடாதமலர் மாலையும்
வயிரமொடு நவமணி வயங்குமங் கல நாணும்
மணம் வீசும் இனிய பொலிவும்

காக்கும் கரங்களும் அங்குசம் பாசம்
கரும்பு வில் மலர்கள் ஐந்தும்,
கனிவாயில் மூரலும் கருணைபொழி விழிகளும்
கனகமணி ஒளிரு முடியும்

ஈர்க்கும் சுடர்முகமும் இருவிழி களிப்பையும்
எங்கெங்கும் காண அருள்வாய்!
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே. 16

பனிதங்கு நிலவுபோல் பால் போல் பளிங்குபோல்
பட்டொளி நிறைந்த வடிவம்
படிகமணி மாலையும் ஏடும் தரித்து யாழ்
பயின்றருளும் நான்கு கரமும்

புனிதங்கள் யாவும் பொருந்த வெண்டாமரைப்
பூமேல் விளங்கு பதமும்
பொழுதெலாம் எண்ணும் என் பழுதெலாம் போக்கிநற்
புலமை தரவேண்டும் அம்மா!

கனிதந்து மலர் தந்து கவிதந்து தொழுவோரக்குக்
கண்தந்து காக்கும் அரசே!
கலைஞான மகளென்ற நிலையான புகழ் கொண்ட
கருணைமயமான பொருளே!

இனிதங்கு தடையின்றி யான்பாட நீ கேட்க
இதயம் கனிந்தருள்வாய்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே. 17

வானமும் பூமியும் மாறினும் மாறாத
வாய்மை வடிவான தேவி
வழிபாடு செய்பவர் குறைபாடு தீர்த்தின்ப
வாழ்வுதரும் ஆதி தேவி

தேனுமாய் அமுதுமாய்ச் சித்தத்திலே நின்று
தித்தித் தினிக்கும் தேவி
சேரின் மார்பை இருகூறாகவே செய்யும்
திரிசூலம் ஏந்து(ம்) தேவி

கானமும் சிற்பமும் கலைமலர் பலப்பலவும்
காணிக்கை கொள்ளும் தேவி
கற்பனையும் ஒப்பனையும் காலம் ஒரு மூன்றும்
கடந்தஎம் தேவதேவி

ஈனமொன்றண்டாத ஞானமாதேவி உனை
என் சொல்லி வாழ்த்துவோம் யாம்!
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமல வாழும் உமையே! 18

வரம்பற்ற ஆற்றல் வரப்பெற்ற பண்டனை
மற்றும் அவன் பெற்ற மகனை
மாறுகொள் விடங்கனை மடம்படு விசுக்(கி)ரனை,
மதுகைடன், மயிடனை

உரம்பெற்ற சும்பனை, நிசும்பனை, நரகனை
உதிரபீசன் மரபினை
ஒழிவிலாச் சண்டனை, முண்டனை, இரணியனை
உணர்வற்ற தக்கன் தனை

சிரம்பத்து பெற்றவனைத் தேரேறி மாவேறிச்
செற்ற எம் வெற்றி மயிலே!
சேவிக்கும் அடியாரை வாழ்விக்கும் ஆசையால்
செங்கோல் பிடித்த அழகே!

இரும்புவி புரந்தருள், பெரும்பெயர், மடந்தை உனை
என் சொல்லி போற்று வோம்யாம்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 19

பிறையார் சடைபித்தன், பிஞ்ஞகன், சங்கரன்
பிறவாத யாக்கை உடையோன்,
பேராயிரங் கொண்ட பெருநாவலன் சிவன்
பிரமன் மறியாத மறையோன்

கறையார் கழுத்தினன், கண்ணுதல், கயற்கண்ணி
காதலன், கங்கை, நாடன்,
காளத்தி நாதன், கபாலி, கங்காதரன்,
கயிலையோன், மங்கைபாகன்,

சிறையார் புனற்றில்லைச் சிற்றம்பலத்தினன்
திரியம்பகன், தியாகராசன்,
திரிபுரம் எரித்தவன், குருபரன், ஈசன்எனச்
செப்பும்எம் அப்பனான

இறையோனும் நீயும் எம் இல்லங்கள் தோறும்
எழுந்தருள வேண்டும் அம்மா!
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 20

மாலினி கபாலினி மனோன்மணி நந்தினி
வன்னி மண்டல வாசினி
மானவதி யோகினி மனாதீத நாயகி
வாகினிமன மோகினி

சூலினி சுவாசினி சுமங்கலி சுந்தரி
துணைவி திரிபுரசுந்தரி
சோதிச் சொரூபிணி சுதாமினி அமசினி
சும்ப திசுர மர்த்தினி

சாலினி சனாதினி தருணி கல்யாணி சிவ
சங்கரிசாரு கேசி
சாம்பவி கலாவதி தருமவர்த் தணிஜனனி
சாமுண்டி தேவதேவி

ஏலவார் குழலிஎன எண்ணரிய பெயர்பூணும்
ஈஸ்வரி போற்றி போற்றி
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 21

மாசக்தி கௌமாரி மாதங்கி காங்காளி
மனோன்மணி புவனேசுவரி
வாரகி இந்த்ராணி வயிரவிஜய வைணவி
மகேச் வரிகாத்யாயனி

பேசரிய அபிராமி பிரமாணி காயத்ரி
பிறைசூடி முத்துமாரி
பெரியநாயகி குமரி அரியாநாரணி கௌரி
பெற்றிக கொற்றி நீலி

தேசு மிக சுந்தரிப வானிகார்த்தி கைவாணி
த்ரியம்பகி சிவசங்கரி
திரிசூலி காமாட்சி சிம்மவா கனியிடன்
சிரமேறும் கண்டி காளி

ஈசன்மனை யாட்டிஎம் பெருமாட்டி மீனாட்சி
இணையடிகள் போற்றி போற்றி
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 22

கொடியேறு தேர்களிடைக் கொய்யுளை வெண்புரவி
குஞ்சரம் உலவு வாசல்
குமுதவாய் மாதரும் அமுதவாய் பாணரும்
கூடிவரும் அழகு வாசல்

கடியேறு மஞ்சளோடு குங்குமம் சந்தனம்
கவிமணம் நிறைந்த வாசல்
கள்ளமொன்றில்லாத உள்ளமுடை யார்க்கெலாம்
கதவுகள் திறந்த வாசல்

வடிவேறு திருமகள் மணாளனோடு வானவர்
மணிகொண்ட முடிகள் படிய
மங்காத நவமணிகள் எங்கெங்கும் சிதற ஒளி
மயமாய் விளங்கும் வாசல்

இடியேறு முரசொலி எழும்வாசல் அன்னைநீ
எழுந் தருளும் கோயில் வாசல்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 23

வேலும் மயிலும் துணை

எனையாளும் அன்னை நின் இருபாதகமலங்கள்
இரவி போல் ஒளி வீசுமாம்!
எதிரான தக்கனை இரணியனை எச்சனை
எரியேற் றிமுறை காக்குமாம்

தனைநாளும் மறவாமல் நினைவார்தம் குரல்கேட்டுத்
தாழா(து) எழுந்தோடுமாம்!
தலைமாலை சூடி ஒரு கொலைவாளும் ஏந்தியே
சங்கர நடமாடுமாம்!

வினையோடு பகைபிணிகள் வேதனை தவிர்க்கின்ற
மெய்யான துணையாகுமாம்
வேலுக்கு மேலான வெற்றிப் பதங்கட்கு
வேறேது நிகராகுமாம்?

இணை என எழுதரிய புகழுடைய நினதடிகள்
ஏழையேற் கருள்செய் கண்டாய்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 24

நாள் என்றும் கோள் என்றும் நாங்கள் அஞ்சோம், அந்த
நமனையும் ஏவல் கொள்வோம்!
நாடாளும் அரசர்க்கும் ஈடாக மேலாக
ஞாலமுழுதாள வல்லோம்!

வாள் ஒன்று கண்ணுடைய மங்கை நல் லாட்கன்றி
மற்றையார்க்(கு) அடிமை செய்யோம்
வறுமையும் கொடுமையும் மடமையும் அகலவே
மாசக்தி பேர்சொல்லுவோம்

தாள்ஒன்று தொண்டரைத் தாங்கும் பராசக்தி
தன்மக்கள் நாங்கள் எனவே
தறுகண்மை குன்றாத பெருமக்கள் கூட்டத்தில்
சாரும் நாள் எந்த நாளோ?

யாளியும் விடையுமே ஊர்தியாய் அண்டங்கள்
யாவும் பரந்தருள்வாய்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே. 25

வேலும் மயிலும் துணை

கற்பூர சோதியில் கமலால யத்தினில்
கயிலாய மலை மீதினில்
கந்தருவர் கின்னரர் கணநாதர் சித்தர்கள்
கண்டு தொழ நின்ற பொருளே

வெற்பூறு கங்கையை வில்வமுடன் ஆத்தியை
வெள்ளெருக் கைத்தும் பையை
மிடைகொன்றை பாம்பினோடு பிறைசூடுவான் பங்கில்
மேவித்தழைத்த எழிலே

மற்போர் துணிந்த மாயிடன் தலைமீது
மனைபோற்ற ஏறு திறலே
மாறுபடு சூரர் குலம் நீறு படமேல்தந்து
வாகைமலர் சூடும் அருளே

எப்பொழுதும் மேலெலும் இளஞாயிறே எங்கள்
ஏழமை தவிர்த்த அரசே
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 26

சரவணா, சண்முகா, சக்திவடி வேலா
சடான்னா மயில் வாகனா
தணிகாச்சலா அருணகிரிகாதலா செந்
தமிழ்ச் சுவை பழுத்த அழகா!

குருபரா கந்தா குகா கார்த்திகேயா
குறத்திமணவாள முருகா
கும்பிடும் அடியவர் வெந்துயர் களைகின்ற
கொற்றவை பெற்ற குமரா

கருதிவரும் யாவினையும் உறுதிபெற வேநல்கும்
கருணைமய மான தலைவா!
களங்கொண்ட வீர நலந்தந்து காவெண்
கடம்ப மலர்மார்பா என

இருபோதும் தொழுவோர்க்கு இனிபோதும் என
ஈவோனுக்(கு) அன்னை நீ காண்!
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 27

அடியார் மனப்பொழிலில் விளையாடும் அன்னமே
ஆதிசி வன்மலை மார்பிலே
அசையும் பசுங்கொடியே! ஆகமபுராணங்கள்
அடைவரியதொடு வானமே!

கொடியோர் உயிர் பருகும் குலிசமே அவுணர்தம்
கோட்டையில் விழுந்த கனலே!
குல மாதர் மஞ்சளோடு குங்குமம் காக்கின்ற
கோமளத் தெய்வ மலரே!

கடவா பாவக்கடல் கடக்கவரு தோணியே
காமம் கடுஞ்சி னத்தைக்
காய்கின்ற பருதியே நோய் சாவுக்கவலைகள்
களைகின்ற அருமருந்தே!

இடையீடில்லாது தரும் மழை மேகமே! எம்
இலக்கா வ(து)உன் பாதமே!
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 28

தமிழேனும் அளப்பரும் தண்கடல் சூல்மதுரைத்
தலைவிநீ அமுதவாக்கால்
சங்கரன் வணங்கிய சிவானந்த சௌந்தர்ய
தத்துவச் செல்வியும் நீ!

சிமையரை மேருவில் குமரிமுனை அலைகளில்
சீர்பூத்த பைங்கொடியும் நீ!
செருவென்று புகழ் கொண்ட முகவைசிவ கங்கைமுதல்
தேசங்கள் ஆள்பவளே நீ!

வேலும் மயிலும் துணை

சமயங்கள் யாவிலும் அமைகின்ற உண்மை நீ
சன்மார்க்க வள்ளல் தாய்நீ
சபரிமலை காச்மீரம் ஸ்ரீசைலம் காசி எனும்
தலம் தோறும் வாழ்பவள் நீ

இமையோரும் முனிவரும் இலக்கியம் புலவோரும்
ஏத்துமல ரடிகள் வாழி!
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 29

மறைநூல் படைத்தவள் மலைதூளடத்தவள்,
மகாமேரு வில்லாய் வளைத்தவள்,
மணியாழி வழிதரக் கணை தான் விடுத்தவள்,
வலங்கொண்ட குலிசம் தரித்தவள்,

பிறைபோல் எயிற்றினால் புவிக் காத்தளித்தவள்,
பெருகும் கபாலக் கரத்தினள்
பேசும் இவர் எழுவரும் ஆணைவழி மேவ நீ!
பேராசியற்றும் திறத்தினாள்!

துறைசேர் தமிழ்க் கலை வடநூல் மறைத்தொகை
துதி சொல்ல ஞாலம் புரப்பவள்!
துணைநீ எனச் சரண் புகுவோர் துயர்மலை
தூள்செய்ய நெடுவேல் கொடுப்பவள்

இறையேனும் தானுமாய் முறைகாக்கும் அன்னை நீ
ஏசும்பன் கச்சித் தலத்தினாள்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 30

மனக்கவலை தீர்க்கும் மருந்தென்று சொல்லுவேன்
வயிறார உண்ணுவதற்கு
வடித்த சோறென்பேன் மற்றும் நான் பருகவே
வாய்த்ததேன் வாரி என்பேன்

சினக்கறி(று) எனத் திரிபுலன்களை அடக்கியே
தெருட்டும் அங்குசம் நீ என்பேன்
செறியும் வினைகாட்டில் தீ என்பேன், சிந்தையாம்
தேர்கொண்ட ஆணி என்பேன்

தனக்குவமை இல்லாத தலைவி உனை யேஎன்றும்
தங்கம் என்பேன் கருணையால்
தாரணி வகுத்தபரி பூரணி உனக்கெனது
தமிழ் தந்து வாழ்த்தி நிற்பேன்

எனக்கினியும் சோதனைகள் ஏன்? உலகில் உனையன்றி
எவரென்னைக் காக்க வல்லார்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 31

நினையாத நெஞ்சும் நினைந்து நின்நாமம்
நிகழ்த்தி அறியாத நாவும்
நேர்வந்து காணாத கண்ணும் நின் சீர்களை
நேயஞ்செய்யாத செவியும்

மனைவாழ்வு செல்வம் வழங்கும் உனை நாளும்
வணங்கித் தொழாத கையும்
மானுடரும் வானவரும் சூழவரும் நின்கோயில்
வலம் செய்கிலாத காலும்

நினையாத பொழுதும் உனைச்சித்தமிசை வைத்திலாச்
சிறு வாழ்வும் பெருந்துயரமும்,
தேர்ந்தெனக் கேபிரமன் ஈந்தனன் நானும் உன்
சேவகம் புரிவ தெந்நாள்?

எனையாளும் அன்னையே உனையன்றி இவ்வுலகில்
எவரென்னை அறிய வல்லார்!
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 32

அடையா நெடுங்கதவும் அஞ்சேல் எனச் சொல்லும்
அமைகின்ற சந்நிதானம்!
அடியாரும் வானவர் அரம்பையர் முனிவரும்
அணைகின்ற சந்நிதானம்

பொடியேறு திருமேனி புனிதரும் நீயுமாய்
பொலிகின்ற சந்நிதானம்
போயெவர் கடத்தலையும் ஈயென்று நில்லாத
புகழ்நல்கும் சந்நிதானம்

முடவர்க்குக் கால்தந்து குருடர்க்கு கண்தந்து
மூங்கைக்கும் மொழிகள் தந்து
மும்மைமலம் அறுவித்துச் செம்மை நலம் உணர்வித்து
முத்திதரும் சந்நிதானம்!

இடர்யாவும் போக்கும் எழிற்சந்நி தானம் நின்
இசைகொண்ட சந்நிதானம்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 33

கனலின் பிழம்பாக கதிரவன் ஒளியாகக்
கார்மேக வான வில்லாய்
கறையேதும் இல்லாத நினைவான திங்களாய்க்
காட்சிதரும் ஆதி சக்தி

நினையாவும் அரிதாள அனுபவப் பொருளாக
நிலையங்கள் ஆறும் ஏறி
நீங்காத பேரின்ப மாம்கோலம் பலகொண்டு
நிகரற்ற மூல சக்தி

அனலாய்த் துயின்று பின் அறிவுற்று மேலெழுந்(து)
ஆனந்த முகடு மேவி
அழியாமை தரும் அமுத மழையாய்ச் சுவைத்தருளும்
அரவான யோக சக்தி,

இனிது புவி இனிதுவான் இனியதே மனிதவாழ்(வு)
இனிய நின் துணைவாய்க்குமேல்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 34

அன்னைநின் அருளினால் அல்லாமல் ஐயனம்
அகஒளி பெறல் அரிது காண்!
அரியதொழில் மறையவன் பிரமனையும் வாழ்விக்கும்
ஆதார சுருதி நீகாண்

மன்னு புகழ் அவதாரம் ஒன்பதோ டென்றினையும்
மாயோன் தனக்களித்து
வருத்துபகை அவுணரை அழித்தருளும் நினது கை
வண்ணம் வழுத் தரிதுகாண்

பொன்னிலகு திருவதனம் பொழிக்கருணை வெள்ளத்தில்
பொருகயல் இரண்டினோடும்
புரைதீர்த்த செம்பவழம் நிரைசேர்ந்த வெண்முத்தம்
பூங்கமல மலருமாக

என் இதய பீடத்தும் ஏற இறைவாய் என்னில்
என்றும் அடியார்க்கெளியைகாண்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 35

கொற்றத் தமிழ்க்கம்பன் குற்றம் மறைக்கநீ
கொட்டிக் கிழங்குவிற்றாய்
கூறுதமிழர் ஏட்டினை நீரிலும் நெருப்பிலும்
குலையாமல் காத்து நின்றாய்

வெற்றித் தமிழ்க்கான மேகமென வீணனையும்
மேதையாய் நீஆக் கினாய்!
மெய்ஞானி சொற்றமிழை மெய்பிக்க வானத்தில்
வெண்ணிலவு தோற்றுவித்தாய்

ஒற்றித் தலம்விட்டு வள்ளலார் பசிதீர
ஓடோடிச் சோறு தந்தாய்
உத்தமக் கவியரசன் குருபரன் முன்புநீ
ஒளிசிந்த நடைப யின்றாய்

இற்றைக் கென் தமிழோடும் சற்றுவிளையாடி நீ
இன்னருள் புரிய வருவாய்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 36

என்னென்ன கனவுகள் என்னென்ன காதல்கள்
எத்தனை இசைப்பாடல்கள்
இரவு பகல் பாராமல் இமைசிறிதும் மூடாமல்
எழுப்பிய மனக்கோட்டைகள்

அன்னையோடு தந்தையென அன்பு மனைமக்கள் என
ஆதரவு தரும் சுற்றங்கள்
ஆயிரம் நேயங்கள் அடைவரிய செல்வங்கள்
ஆயபிற வாழ்வு நிலைகள்

பொன்னிநதி ஓட்டத்தில் பொங்கி எழும் குமிழிகள்
புரளும் அலை நாடகங்கள்
பொய்ம்மைகள் நில்லாமல் போயொழியும் மாயங்கள்
பொருளற்ற கூக்குரல்கள்

இன்னவகை எண்ணாமல் பின்னலிடம் ஆசையால்
என்னென்ன மனவீக் கங்கள்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 37

அன்பான நெஞ்சங்கள் அல்லால் அழிவதும்
அன்னைநீ அறியாததாதோ?
அசடரும் கசடரும் அசத்தியப் பேயரும்
ஆட்சி பெற்றே வாழ்வதோ?

பொன்னான உலகத்தைப் போர்வெறி புலன்வெறி
புசித்திடவும் நீபார்ப்பதோ!
போகாத வழிபோய்ப் புலம்பிஅழும் மனித குலம்
பொழிவு பெறவழி யில்லையோ?

தன்னலமும் வஞ்சகமும் தரணிமகள் உயிர்நிலை
தகர்த்தல் நீ சம்மதித்தோ?
சங்கார நடமாடி வெங்கொடுமைசாய்க்க இது
சரியான பொழுதில்லையோ?

என்னவரும் ஆனால் உன்மவுனம் கலையா(து)
இருப்பதன் பொருள் என்னவோ?
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 38

சூலமும் வாளும் சுற்றிவரும் வேளையில்
துர்க்கையாய் மாறுவாய் நீ!
துப்பாக்கி பீரங்கி தோட்டாக்கள் ஆகியும்
சூசைபோல் மேவுவாய் நீ!

சீலமும் ஞாலமும் தேசமும் வாழ்வுறச்
செருமுறையில் ஏறுவாய் நீ!
திருவடி இரண்டிலும் பகைவர் செங் குருதியால்
செம்பஞ்சு பூசு வாய்நீ!

காலமும் விதிகளும் கட்டுவிடும் நேரம்
கறங்காக ஆடுவாய் நீ!
காணாத நோயாகிப் போராகி மரணமாய்க்
கயமைசாடுவாய் நீ!

ஏலவர் குழலிலே வாகைமலர் சூடியே
எதிரியின்றி ஆளுவாய் நீ!
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 39

மேனியும் ஆடையும் விழிகளும் சிவந்தபடி
வீரமா காளியே வா!
மேவுபகை யாவினையும் சாவுமகள் நாவில்
விருந்தாக்கும் சூலியே வா!

தானென நினைத்துவரும் ஆணவம் தனையுண்டு
சதிராடும் மாரியே வா
தருமநெறி தவறாத பரதநிலம் காவலுற
சங்கரா தேவியே வா

ஆனதினி ஆகட்டும் அறம் மட்டும் வாழட்டும்
ஆங்கார நீலி யே வா!
அமைதிவடி மூடுமெனில் அழிவுவழி திறந்து நீ
ஆதிமக மாயி யேவா

ஈனமினவெல்லா தெனப் புவி உணர்த்திட
எழுந்து வா விரைந்து வா! வா
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 40

அல்லாத செயல்புரியும் பொல்லாத மனிதர்கள்
அழியும் ஒரு காலமும் வரும்
அரக்கமனம் உடையவரின் ஆதிக்க வெறியாட்டம்
அடங்க ஒரு நேரம் வரும்

சொல்லாலும் நினைவாலும் துயர்செய்து திரிபவர்
துடித்துயிர் இழக்க நேரும்
துறைதோறும் துறைதோறும் முறைநீங்கும் கயவர்க்குத்
தூக்கு மரம் ஒன்று தோன்றும்

வெல்லாத சான்றோர்களின் வேதனைகள் தீரும் ஒரு
வெற்றிநாள் விரைவில் வரும்
மேலோரும் நூலோரும் வீறோங்கி நமையாளும்
மெய்ஞ்ஞான உலகு தோன்றும்

எல்லாரும் வாழ்வுபெறும் அந்நாள் என் தவமெலாம்
ஈடேறும் இனிய நாளாம்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேசுவரி
இமயமலை வாழும் உமையே! 41

ஆராய்ந்து சொல்தேடி ஆன்மாவின் தாபத்தை
அறிவிக்க முயலுகின்றேன்
ஆனாலும் முழுமையும் அறிவிக்கும் திறனின்றி
அபலையாய்க் கதறுகின்றேன்

சீர்தோறும் அடிதோறும் தேவிநின் திருபதச்
சிலம்பொலி விரும்புகின்றேன்
தெய்வமே உன் குரலும் சேரும் எனும் ஆசையால்
செந்தமிழ் முழங்குகின்றேன்

வாராத துன்பங்கள் வந்தாலும் உனையன்றி
வைப்புநிதி வேறு காணேன்
வாய்முத்தம் ஒன்றேனும் நீ வழங்காமல்
வருந்துதல் பொறுக்க மாட்டேன் 42

## கருங்குளம் ஸ்ரீ பரநாச்சியார் பதிகம்.

சித்திர விதானமுடன் திருமதில் கோபுரம்,
தேவி நீ நாடவில்லை!
செய்பிழை யாதெனிலும் உய்திதருவாய் அன்றிச்
சிறிதேனும் கோபமிலை!

பக்தியொடு நின்பாதம் பாடுவேன்! பாடுவேன்!
பக்கம்வா, வா, அன்னையே!
பல்கும் கருங்குளம் மல்கவளர் சக்தியே
பரநாச்சி தேவி உமையே! 1

பெருகிப் புறப்பட்ட நதியின் அலை தாலாட்டப்
பெட்டியில் வந்த பெண்ணே!
பேர்கொண்ட கண்மாயில் ஊர்வந்து கொண்டாடப்
பிறை சூடி நின்ற பொன்னே!

பருகிவரும் நீரும் என் பசிதீர்க்கும் சோறும் உன்
பரி வல்லவோ அன்னையே!
பல்கும் கருங்குளம் மல்கவளர் சக்தியே
பரநாச்சி தேவி உமையே! 2

எங்கள் குலம் காக்கும் ஈஸ்வரியும் அல்லவோ!
என்னம்மை நீ யல்லவோ!
எதுநான் விழைந்தாலும் இந்தா! எனத்தரும்
ஈடற்ற தாயல்லவோ?

பங்குனியில் செவ்வாயில் பொங்கலோடு புரவியும்
படைப்போம் உனக் கன்னையே!
பல்கும் கருங்குளம் மல்கவளர் சக்தியே
பரநாச்சி தேவி உமையே! 3

கொட்டிக் குதித்தாடும் கும்மியும் குரவையும்
கோதையே உனதுயோகம்!
குதிரைகள் வரிசையும் வனிதைகள் கவிதையும்
கூறும் சஹஸ்ரநாமம்!

பட்டுப் பாவாடை மலர்மொட்டுப் பூவாடையின்
பரிமளம் கமழ் அன்னையே!
பல்கும் கருங்குளம் மல்கவளர் சக்தியே
பரநாச்சி தேவி உமையே! 4

பூக்கட்டும் கரகத்தில் பின்முகம் காட்டுவாய்
புகையில் பகை போக்குவாய்!
பொன்கட்டும் பயிரிலே மணிகட்ட நன்றாகப்
பொலி கட்ட விளை வாக்குவாய்!

பாக்கட்டும் நாவினால் பாவாய் உனைக்கட்டப்
பாடினேன் நலம் ஆக்குவாய்!
பல்கும் கருங்குளம் மல்கவளர் சக்தியே
பரநாச்சி தேவி உமையே! 5

மாதா உனைப்போற்றும் மைந்தர்கள் வைரமணி
மகுடபதி செல்வநாதர்!
வருவார்தம் பசிதீர ஒருவாய் கொடுத்தாலும்
மண்ணிலே அவர் குபேரர்!

பாதார விந்தமே பற்றுவேன்! பற்றுவேன்!
பரம கல்யான நிதியே!
பல்கும் கருங்குளம் மல்கவளர் சக்தியே
பரநாச்சி தேவி உமையே! 6

முத்து முத்தான தமிழ் மூவாத செந்தமிழ்
மொய் குழல் உனது தமிழே!
மொகு மொகுவென வண்டுகள் மொய்க்கும் மணம் தங்கும்
மூடி இல்லாத சிமிழே!

பத்தினிகள் காவலாய் சுற்றி வரும் உத்தமி
பாலகன் எனக்கும் அருளே!
பல்கும் கருங்குளம் மல்கவளர் சக்தியே
பரநாச்சி தேவி உமையே! 7

அன்னாய் என் வெற்றிகள் அத்தனையும் உன்னுடைய
அருளால் கிடைத்த வெற்றி!
அதிகாரம் செல்வங்கள் மனைமாதர் மக்களும்
அடியேன் புரிந்த பக்தி!

பதினாறு பேறுகள் தரும் தேவ தேவியே!
படைதாங்கி வருக சுற்றி!
பல்கும் கருங்குளம் மல்கவளர் சக்தியே
பரநாச்சி தேவி உமையே! 8

மஞ்சளொடு குங்குமம் மங்கலம்! மங்கலம்!
வண்ணமலர் மாலை தீபம்!
வாயூறும் பானகம்! மதுரம் மனோகரம்!
மணிகள் குலுங்கும் நாதம்!

பஞ்சமும் நோயும் வராது பரிபாலிப்பாய்!
பற்றினேன் உனது பாதம்!
பல்கும் கருங்குளம் மல்கவளர் சக்தியே
பரநாச்சி தேவி உமையே! 9

திருவாக்கும் சக்தியே! தீராதவல்வினை
தீர்க்கும் மகா சக்தியே!
தேகத்தில் வாக்கில் என் சித்தத்தில் ஜீவனில்
திகழும் பரா சக்தியே!

பரயோக சிவஞான சக்தியே! சக்தியே!
பாடுவேன் உன் வெற்றியே!
பல்கும் கருங்குளம் மல்கவளர் சக்தியே
பரநாச்சி தேவி உமையே! 10

*அருட்கவி கு,செ.இராமசாமி.*

# கரந்தமலை என்னும் பரநாச்சி தாயே!

கருங்குளம் தேவியே உனைப்பாட எந்தனுக்குக்
கள்ளமில்லா நெஞ்சம் வேண்டும்
காலமும் நும்புகழ் மறவாது நினைக்கின்ற
கனிவான உள்ளம் வேண்டும்

திருவொடு புகழொடு நான்வாழ உந்தனின்
திருவருள் எனக்கு வேண்டும்
தீராத நோயெல்லாம் தீர்த்திடும் சக்தியே
தினமெம்மை நோக்க வேண்டும் 1

கரந்தமலை எனும்பெயரில் கருங்குளம் வந்திட்ட
பரநாச்சி என்னும் தாயே
கரத்தினில் ஏந்திட்ட தீவெட்டி விளக்கினைக்
கனிந்துநீ ஏற்று நின்றாய்

விஸ்த்தார மண்டபம் பக்தருக்கு வழங்கிநீ
விளாரிமார் வீடு கேட்டாய்
விரதமாய் இருந்தவர் கொணர்ந்திடும் விளாரியே
விருப்பமாய் இருக்குதென்றாய் 2

ஆண்டுக்கு ஒருமுறை திருவிழாக் கொண்டாட
ஆசையாய் இருக்கு தென்றார்
ஈராண்டுக் கொருமுறை எனையெண்ணிக் கொண்டாடு
இதுபோதும் எனக்கு என்றாய்

ஈரவுடை கட்டியே வருவோரைக் காணவே
இன்பமாய் இருக்கு தென்றாய்
இளந்தேங்காய் உடைத்ததனை வெறுவாயில் தின்பதையே
இனிமையாய் வேண்டி நின்றாய் 3

உன்பெயரைச் சொன்னவர்கள் ஒருநாளும் குறையாமல்
உயர்வாக வாழ்ந்து நிற்பார்
நம்பியவர் இல்லங்களில் நாள்தோறும் வந்திருந்து
நலமாக வாழ வைப்பாய்

எம்மனை சிறக்கவும் எழிலோடு விளங்கவும்
இதமாக எம்மை ஆள்வாய்
அம்பிகையே பரநாச்சி என்றாலே ஓடிவந்து
அழகான வார்த்தை சொல்லுவாய். 4

குழந்தைகள் மனையிலே கொஞ்சியே வளர்ந்திடக்
கோடியாய் நன்மை அருள்வாய்
குறைவற்ற செல்வங்கள் குவலயம் போற்றவே
கூறிய மதியைத் தருவாய்

அழகோடும் அறிவோடும் அவர்வாழ்வு சிறக்கவே
அன்பான ஆசி தருவாய்
அளவோடு வளர்ந்தபின் திருமணம் நடத்தவே
அன்பாய் நீஉதவ வருவாய் 5

மஞ்சளுடன் குங்குமம் வேண்டியே நினைக்கிறேன்
மங்களமாய் அள்ளித் தருவாய்
தஞ்சமென்று உனையடைந்த தகமைநிலை சிறக்கவே
தரணியில் வாழவைப்பாய்

விஞ்சுகிற மனக்கவலை விலகிட வேண்டுகிறேன்
விரைவினில் தீர்த்து வைப்பாய்
அஞ்சுகிற நெஞ்சோடு அடிபணிந்து கேட்கின்றேன்
நீ ஆதாரமாக வருவாய் 6

சத்தியத்தின் தேவியே இத்தரையில் நான்வாழ
இனியதுணை யாக வருவாய்
உத்தமனாய் என்றென்றும் வாழ்ந்திடவே நீயெனக்கு
உற்றதுனை யாக வருவாய்

இத்தரையில் மட்டுமின்றி எங்கெங்கு சென்றாலும்
இனியபுக ழாக வருவாய்
வித்தைகள் பலகற்று வீரனாய் விளங்கிட
வேண்டிய வரங் களருள்வாய் 7

கானகம் வாழ்ந்தாலும் குலவையொலி கேட்டதுமே
கலகலென ஓடி வருவாய்
தேனான மொழிபாடிச் சிறப்பாக கும்மியிட
தேவிஎனக் கருள வேண்டும்

தானானை கொட்டியே தரிசிக்க வருவோர்க்கு
தனந்தனை அளிக்க வேண்டும்
தினமுன்னை நினைப்போர்க்குப் பணமாக நீயிருந்து
பலமான வாழ்வு தருவாய் 8

பல்லக்கில் ஏறிநீ பட்டணம் வருகையில்
பார்த்துவர மளிக்க வேண்டும்
மதலைகள் பின்வர மகிழ்ந்துநீ வருகையில்
மனைகளைக் காண வேண்டும்

பானக்கம் நீர்மோரு பருகிஉனை நினக்கையில்
பக்கத் துணை யாக வரவேண்டும்
சுண்டலும் மாங்காயும் சுவைத்துஉனை பார்க்கையில்
நீசுந்தர மாக வேண்டும் 9

தொழில்தனைச் செய்வோர்க்குத் தொடராக வந்திருந்து
சோராது வாழ வைப்பாய்
அழியாத உள்ளத்தை அனைவருக்கும் நீயளித்து
அகலாது நின்று காப்பாய்

செழிப்பான வயல்நடுவில் சிரிப்பாக நீயிருந்து
சீராக வாழவைப்பாய்
பொழிவதனை எதிர்நோக்கும் பொன்னான காலத்தைப்
பொலிவோடு கூட்டு விப்பாய் 10

*புலவர் சாந்தா - கவிமணி, கல்லல்*

## நலம் தரும் நாச்சியார் அம்மன்.

நாட்டமிகு தேவியாம் நானிலம் போற்றிடும்
நாச்சியார் அம்மை தாயே
காட்டுக்கு நடுவிலே நாச்சி என்னும் பெயரிலே
தோன்றிட்ட அம்மை நீயே

ஊர்மக்கள் யாவருக்கும் எளிதினில் அருளிட
எழுந் தருளவேண்டி உனையே
ஏற்றமிகு நகரத்தார் எல்லோரும் ஒன்றாக
ஊருக்குள் கோவில்அமைத்தார்

வேலும் மயிலும் துணை

இளையதோர் நாச்சியாய் கம்பனூரில் வாழ்ந்திடும்
இனையற்ற அன்னை தாயே
இன்பங்கள் அனைத்தையும் எங்களது வீடுவரை
கொண்டுவரும் அன்னை நீயே!

நம்பியுன் காலடியே சரணமென பற்றினோம்
நிதமென்னைக் காத்து அருள்வாய்
நம்பினோர் வாழ்க்கையில் நன்மையே விளைத்திடும்
நாச்சியார் அம்மை தாயே! 1

அன்போடு அனைவரும் உன்னையே வேண்டினோம்
அடைக்கலம் தந்து அருள்வாய்
பண்போடு பிள்ளைகள் பரிவோடு பாடினோம்
பாங்குடன் வாழ வைப்பாய்

வாழ்வினில் வளம்பெற உன்பதம் பற்றினோம்
வளமயாவும் தந்து அருள்வாய்
தயவாகத் தாளினை மறவாமல் எண்ணினோம்
தாயாக அருள் புரிகுவாய்

பலகல்வி பெற்றாலும் பன்னாட்டில் வாழ்ந்தாலும்
பலன் உன்னைப் போற்றல் அன்றோ!
அன்னையுன் அருள்வேண்டி அனுதினம் வணங்கினோம்
அகிலமே உனது அன்றோ!

ஊருக்கு காவலாய் உலகுக்கே அன்னையாய்
உள்ளத்தில் உறைந்து விட்டாய்
நம்பினோர் வாழ்க்கையில் நன்மையே விளைத்திடும்
நாச்சியார் அம்மை தாயே! 2

சித்திரை திங்களில் பத்துநாள் திருவிழா
சிறப்புடன் நடத்தி வருவார்
ஊர்மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடியே
உன்னடி பாடி வருவார்

கொண்டாடி மகிழ்ந்திடும் பிள்ளைகள் வாழ்வில்
நன்மைகள் அருளும் தாயே
கொடியேற்றி காப்பிட்டு முதலாம் திருநாளில்
கேடயம் ஏறிநீ வருவாய்

இளைஞர்குழு நடத்திடும் இரண்டாம் திருநாளில்
தங்கத் தாமரையில் ஜொலிப்பாய்
இதயத்தில் குடிகொண்ட எங்களது அன்னையே
இன்முகம் காட்டி அருள்வாய்

மலர்களின் மத்தியில் மங்கையுன் முகம்கண்டால்
மனதிற்கு அமைதி யன்றோ!
நம்பினோர் வாழ்க்கையில் நன்மையே விளைத்திடும்
நாச்சியார் அம்மை தாயே! 3

முறையாகத் தொழுவோரை முன்நின்று காத்திடும்
முத்தான சக்தி நீயே
மூன்றாம் நாளதனில் அன்னத்தில் மீதேறி
மகிழ்வோடுக் காக்க வருவாய்

வைரமாய் ஜொலித்திடும் நான்காம் திருநாளை
வைரவன் கோவில் நடத்திட
காமதேனு ஏறிநீ திருஉலா வருமழகை
காணக்கண் கோடி வேண்டும்!

பிள்ளையார் பட்டியார் பெருமையாய் நடத்திடும்
ஐந்தாம் திரு நாளிலே
சிங்காரமாகவே சிங்கத்தில் ஏறிநீ
ஜெகமுய்ய காட்சி தருவாய்

மூன்றாரு ஏழோடு திருநாட்கள் இவைகளை
இலுப்பைக் குடியார் நடத்திட
நம்பினோர் வாழ்க்கையில் நன்மையே விளைத்திடும்
நாச்சியார் அம்மை தாயே! 4

அடியவரின் துயரத்தை நொடியிலே களைந்திடும்
அன்பான அன்னை நீயே
ஆறாம் திருநாளில் ரிஷபத்தில் ஏறியே
ஆதரவாய் நின்று காப்பாய்

எழிலான அன்னையே அன்பாக என்னையே
ஏற்றங்கள் தந்து காப்பாய்
ஏழாம் நாளதில் வெள்ளிப் புரவியில்
ஏறிநீ காத்து அருள்வாய்

எட்டாம் திருநாளில் நகரத்தைப் பார்த்திட
தேரில் நீ ஏறிவருவாய்
ஊர்மக்கள் அனைவரும் தேர் வடம்பிடிக்கவே
அழகாக பவனி வருவாய்

ஒன்பதாம் நாளிலே தேர்த்தடம் காணநீ
யானையில் ஏறி வருவாய்
நம்பினோர் வாழ்க்கையில் நன்மையே விளைத்திடும்
நாச்சியார் அம்மை தாயே! 5

வேலும் மயிலும் துணை

சிங்கையில் வாழ்கின்ற நாச்சியார்புர மக்கள்
சிறப்பாக ஒன்றுகூடி
செய்திடும் திருநாளாம் பத்திலே
பல்லக்கு பூவிலே ஏறிவருவாய்

ஊரையே காக்கின்ற உத்தமி உன்னையே
ஊஞ்சலில் ஆட வைப்போம்!
பாவங்கள் போக்கவே பாவையே உனைஎண்ணி
பால்குடம் ஏந்தி வருவோம்!

மஞ்சளோடு குங்குமம் வேண்டியேநிற்போர்க்கு
மங்களம் தருபவள் நீ!
தஞ்சமென உன்பதம் நம்பியே வந்தோர்க்கு
தாயாக வருபவள் நீ!

நல்லோர் நலம்பெறவும் நன்மைகள் பெருகிடவும்
நலமனைத்தும் தந்து அருள்வாய்
நம்பினோர் வாழ்க்கையில் நன்மையே விளைத்திடும்
நாச்சியார் அம்மை தாயே! 6

துயரங்கள் துடைத்திடும் இனியவள் நீயென்று
திடமாக நம்பினேன் தாயே
சிகரங்கள் அடைந்திட சிறந்தவழி இதுவென்று
சீக்கிரம் சொல்லு வாயே

கருமங்கள் விலக்கிட கணப்பொழுதில் வந்திடும்
கருணை வடிவான தாயே
தருமங்கள் தழைத்திட நெறியோடு வாழ்ந்திட
தவறாது எனக்கு அருள்வாயே!

செல்வங்கள் தந்துமே சிரமங்கள் களைந்துமே
சந்ததிகள் காக்கும் தேவி!
நன்மைகள் அனைத்துமே எங்கட்க்கு நல்கிடும்
நானிலம் போற்றும் தேவி

இல்லங்கள் புகுந்துமே இன்னல்கள் களைந்துமே
இன்பங்கள் அருளும் தேவி!
நம்பினோர் வாழ்க்கையில் நன்மையே விளைத்திடும்
நாச்சியார் அம்மை தாயே! 7

பொன்னகை அணிந்துமே புன்னகை புரிந்துமே
புவியாள வந்த தேவி
என்மனம் மாறவே இன்முகம் ஆகவே
அருள் தரும் சக்திநீயே!

உடல்நலம் யாவுமே உறுதியாய் ஆகவே
உடனிருந்து அருளும் தேவி!
தொழில்வளம் என்றுமே சிறப்போடு இருந்திட
துணை புரியும் சக்திநீயே!

பொருள் வளம் யாவுமே பன்மடங்காகவே
பெருக்கிடும் கல்யாணியே!
வேண்டும் வரம் அத்தனையும் நினைத்தவுடன்
வேகமாய் தந்திடும் சக்திநீயே!

நற்குணம் யாவுமே என்குணம் ஆகவே
நல்லருள் புரியும் தேவி!
நம்பினோர் வாழ்க்கையில் நன்மையே விளைத்திடும்
நாச்சியார் அம்மை தாயே! 8

தமிழாலே கவிசொல்லி வாயார உன்னையே
தினந்தோறும் தொழுது வந்தோம்
தவறேது செய்தாலும் தாய்போல பொறுத்துநீ
அடியேனை என்றும் காப்பாய்

மனக்கவலை யாவினையும் நொடிப்பொழுதில்
நீக்கிவிடும் அன்பான அன்னை நீயே
மனதார உன்னையே முழுமையாய் நம்பினோம்
முன்நின்று காக்க வா வா

உண்மைகள் உணர்த்திட எழுந்தருளும் அன்னையே
உன்னடி பற்றி நின்றோம்
இன்பமாய் வாழ்வதனை எங்கட்க்கு நல்கிட
இப்பொழுதே இங்கு வா வா

எங்கள்குலம் சிறக்கவும் ஏற்றங்கள் காணவும்
என்றைக்கும் அருளும் தாயே
நம்பினோர் வாழ்க்கையில் நன்மையே விளைத்திடும்
நாச்சியார் அம்மை தாயே! 9

தேடினோம் தேடினோம் உன்னடி தேடினோம்
தினமெம்மை காக்க வேண்டும்
பாடினோம் பாடினோம் உன்புகழ் பாடினோம்
பாமாலைநீ ஏற்க வேண்டும்

போற்றினோம் போற்றினோம் உன்னையே போற்றினோம்
பக்கதுணை ஆக வேண்டும்
வேண்டினோம் வேண்டினோம் உன்னருள் வேண்டினோம்
வேண்டும் வரமளிக்க வேண்டும்

பற்றினோம் பற்றினோம் உன்பதம் பற்றினோம்
பண்புடன் வாழ வேண்டும்
நாடினோம் நாடினோம் உன்னடி நாடினோம்
நன்மைகள் அடைய வேண்டும்

நாவிற்கரசு என்நாவிலே நீவந்து அமர்ந்து
நல்லருள் புரிய வேண்டும்!
நம்பினோர் வாழ்க்கையில் நன்மையே விளைத்திடும்
நாச்சியார் அம்மை தாயே! 10

*சே.சு.வி.அழ. திருநாவிற்கரசு, நாச்சியாபுரம், 14-04-2011*

## நாச்சியார் அம்மன் துதி

மாணிக்கத் தேரினிலே
மகிழ்வோடு வலம் வரும்
நாச்சிக்கு – பாத காணிக்கை செலுத்தி
ஆச்சிகள் வேண்டுவோம் அவள்
அருள் ஆசிக்கு!
சித்திரை தேரினிலே
சிரிப்போடு நீ வருகையிலே
நித்திரையும் மறந்து போகும்
பால் அருந்தும் பிள்ளைக்கு
எத்துறையிலும் எம்மக்கள்
முத்திரை பதிக்க நீ
முன் நின்று உதவ வேண்டும்!
நாவினிக்கப்பாடி பூமணக்கச்சூடி
வெற்றிக் கொடி பறக்க
சுற்றமெல்லாம் சிறக்க
நலமோடும் வளமோடும் வாழ
நாச்சியாரம்மனை நாளும் நாம் துதிப்போமே!

*உமையாள் நடராஜன், கொச்சின் இல்லம், நாச்சியாபுரம்.*

# மீனாட்சியம்மன் பாமாலை

குருவின்றி வித்தையைக் கற்றவன் நெஞ்சிலே
குடிகொள்ள அமைதி யிலையே
குழைநின்ற கையிலும் வளைகின்ற மெய்யிலும்
குணங்காண ஒருவ ரிலையே

இருவென்று சொல்லாமல் இருப்பதை தந்தாலும்
எவர்பாலும் நன்றி யிலயே
இடதுகண் ஓர்சொலும் வலது கண் ஓர்சொலும்
எடுத்துரைக் கின்ற உலகில்

மருவொன்று மில்லாத வாழ்வகை அறியாத
மனிதனை படைத்த சிலையே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 1

சேர்கின்ற பொருள்களை செம்மையாய் எந்நாளும்
காக்கவும் திறமை இலையே
ஜெயிக்கின்ற கட்சியில் நுழைகின்ற வித்தையைத்
தேருமோர் அறிவு மிலையே

பேர்வந்த வேளையிற் பேரையே விலையாகப்
பேசவும் தெரியவிலையே
பிடித்தகை நழுவவே விளக்கெண்ணெய் பூசுவார்
பெரிதாக வாழும் உலகில்

வார்கின்ற பொதிகையும் வளர்க்கின்ற வைகையும்
வளம்பாட வாழும் சிலையே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 2

தாசியின் மார்பிலும் தவுல்கொண்ட தோளிலும்
தழும்புதான் மிச்ச மாகும்
சன்யாசி பையிலும் சாவண்ட மெய்யிலும்
சாம்பல்தான் மீத மாகும்

பாசத்து நெஞ்சிலும் பழக்கத்து நட்பிலும்
படும்பாடு கோடி யாகும்
பல்லோர்க்கும் நல்லவன் பொல்லாதவன் எனும்
பழம்பாடல் வாழு முலகில்

மாசற்ற பொன்னொடும் வைரமும் மணிகளும்
மார்பாட வாழும் சிலையே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 3

கோமுட்டி கரத்தோர் கோமுட்டி அங்ஙனே
கோமுட்டி பிள்ளை மாண்டான்
கொடிய பாம்பதனயே வளர்த்தவன் பிள்ளையும்
கொடிய பாம்பதனில் மாண்டான்

நாய் கட்டிக் காத்தவன் பிள்ளையும் அவ்வண்ணம்
நாய்கடி பட்டு மாண்டான்
நான் மட்டும் எங்ஙனம் மாள்வனென் றெண்ணுதி
நன்றி கொன்றார் கையன்றி

வாய்முட்டும் கள்ளிலே சேய்முட்டும் வண்ணமே
தான் முட்டும் மன்ன னருகே
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 4

நாக்கினால் ஊரையே நாட்டித் திரட்டுவான்
நாக்குக்கும் வெற்றி தந்து
நாடகக் காரனின் வேடத்தில் நின்றவன்
நடிப்புக்கும் வெற்றி தந்து

தூக்கினால் மேலெழும் ஓட்டைத் துருத்திக்கும்
தூக்கத்தில் வெற்றி தந்து
தூயவர் வாழ்க்கையில் தோல்விமேல் தோல்வியே
தொடுத்து வைக்கின்ற கலையே!

வாக்கிலா செல்வமே! மனமிலாத் தெய்வமே
வடிவான மஞ்சள் நிலவே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 5

முதுகிலே கண்வைக்க முயலாத இறைவனோ
முகத்திலே கண்ணை வைத்தான்
முகம்பார்க்க விரும்பாது பகையான மனிதனோ
முதுகையே பார்த்து நின்றான்

சதிகாரர் கையிலே பலியாக அஞ்சுவான்
தர்மத்தை வேண்டி நின்றான்
தர்மத்தின் தேவனோ தன்னையும் பிறரையும்
சதிகாரர் கையில் வைத்தான்

மதியையே விதியினால் மாய்க்கின்ற சொக்கனை
மடியிலே வைத்த மயிலே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 6

இருமனப் பேயரும் கள்ளுண்டு கவராடும்
இறைமுறை பிழைத்த அரசும்
ஏய்க்கின்ற நெஞ்சமும் சூழ்ச்சியும்
இருகையில் ஒளிந்த வாளும்

கருமிருட் கள்வரும் கடிப்பதைக் கடித்தபின்
கருக்கும் பார்க்கும் நரியும்
காலத்தில் வந்ததை ஞாலத்தில் வந்ததாய்
கண்ணாடி குள்ளமதியும்

வரையின்றி வாழுமோர் உலகில் என்னையும்
வசைகாண விட்ட மயிலே
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 7

விளையாட்டுப் பிள்ளையும் பறிக்கப் பலாமரம்
வேரிற் பழுத்ததைப் போல
விரும்பினார் சமைக்கின்ற விதத்திலே கோழிகள்
வீட்டினில் வளர்வதைப் போல

வளையளார் கைக்கென்று வாரத்தில் முழுதாக
வளர்கின்ற கீரை போல்
வருவார்கள் உண்ணவே உணவுடன் என்னையும்
வைத்த தல்லாமல் உலகில்

வளர்கொண்ட செல்வத்தை பெட்டியில் மறைவாக
வைத்ததே என்றுமில்லையே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 8

செப்பினாற் சிலைசெயும் வினைஞரும் மெதுவாகச்
செப்பிலே பாதி கொள்வார்
செம்பினால் நகைசெயும் கொல்லரும் மறைவாக
சேதாரம் பாதி கொள்வார்

தப்பினால் ஏழையார் உடலிலே பணக்காரர்
சதைவெட்டி உண்டு பார்ப்பார்
தருமகர் தாக்களும் தருமகாரி யத்திலே
தங்கள்கா ரியங்கள் பார்ப்பார்
வைப்புயர் நிலத்திலே வளரவே தெரியாத
மரத்தை படைத்த மயிலே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 9

தான்பெற்ற செல்வனை ஏன் பெற்றோம் என்று
தான் தாயன்று மாண்டு போனாள்
தந்தையும் இப்பிள்ளை உருப்படாது என்றுதான்
தணலிலே வெந்து போனான்

ஊன்பெற்றயானுமோர் உயிர்கொள்ள வைத்தவன்
உயரத்திலே ஒளிந்து கொண்டான்
உதிரத்தின் அணுவிலே தமிழன்னை மட்டுமே
உறவாக வந்து நின்றாள்

வான்பெற்ற பேருபோல் யான்பெற்ற தமிழிலே
வாழ்கின்றேன் வண்ண மயிலே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 10

பூர்வத்தில் செய்ததோ இந்நாளில் செய்ததோ
புண்ணியம் மட்டும் மிச்சம்
பொருளாக வந்ததோ அருளாக வந்ததோ
புகழாரம் உண்டு கொஞ்சம்

ஆர்வத்தில் சேர்ந்ததோ அனுபவம் ஈந்ததோ
அறிவினுக் கில்லை பஞ்சம்
அமைதியில் லாதவன் துயில் கொண்டு தேறவே
ஆண்டவன் விரித்த மஞ்சம்

வளர்கின்ற கவியின்றி வேறொன்று மில்லையே
வைகையிற் பூத்த மலரே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 11

முட்டாள்கள் பலர்கூடி முடிவு செய்தாலே
முழுதான ஜனநாயகம்
முதலாளி மடியிலே முட்டாள்கள் ஆடினால்
முழுதான பணநாயகம்

பட்டாளம் அதனயே பறித்துக் கொண்டோடினால்
பலமான ஆதி பத்தியம்
பாரிலே இம்மூன்றும் சக்கரம் போல்வரப்
பார்கின்ற கண்களுக்கு
வட்டாடத் தோன்றுமே அல்லாது நேர் செல்லும்
வழிதோன்ற மார்க்கம் இல்லையே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 12

கத்தியால் தலையையும் சீவலாம், மரத்திலே
கலைவண்ணம் செய்து விடலாம்
கனல் கொண்டு நாட்டையே எரிக்கலாம்
விளக்கிலே கருவாக ஒளிர விடலாம்

புத்தியால் வாழவும் வைக்கலாம்: நல்லவர்
புகழையும் மாய்த்து விடலாம்
பொருள் மட்டும் சேருமேல் நன்மையும் தீமையும்
பொருளால் நடத்தி விடலாம்

மத்தளம் போலிதில் சத்தியம் படும்பாட்டை
மாற்றுமோர் சக்தி யிலையே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 13

திருடனும் அரகரா சிவசிவா என்றுதான்
திருநீரு பூசு கின்றான்
சீட்டாடும் மனிதனும் தெய்வத்தின் பேர்
சொல்லிச் சீட்டை புரட்டுகிறான்

முரடனும் அரிவாளில் காரியம் பார்த்தபின்
முதல்வனை வணங்கு கின்றான்
முச்சந்தி மங்கையும் முக்காடு நீக்கையில்
முருகனைக் கூவு கின்றாள்

வருடுவார் கைக்கெல்லாம் வளைகின்ற தெய்வம் என்
வாழ்க்கையைக் காக்க விலையே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 14

பொய்யப்பன் சபையிலே கைகாட்டி நிற்பனேல்
பொருளப்பன் துணை கிடைக்கும்
பொருளப்பன் மூலமே சூதாடி பார்ப்பனேல்
புகழப்பன் நிலை கிடைக்கும்

மெய்யப்பன் தன்னையே நம்பினேன் அவன்என்னை
வீணப்பன் ஆக்கி விட்டான்
வினையப்பன் தன்னுடனே விதியப்பன் என்பவன்
வீட்டுக்கே வந்து விட்டான்
மையப்பும் கண்ணினால் அப்பனை அம்மைநீ
வாங்கிக் கொள் வண்ண மயிலே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 15

தும்பிக்கை போனபின் யானையைப் பூனையும்
துரத்திடும் தன்மையே போல்
துணிவிலாக் கோழையைச் சிறுவனும் கைகொட்டிச்
சூழ்கின்ற அவலமே போல்

நம்பிக்கை போனவன் வாழ்க்கையும் காலத்தில்
நலிவுறும் என்ன அஞ்சி
நடுங்காத நெஞ்சொடும் தொடர்கின்றேன் வருகின்ற
நாளை என்காலம் என்றே

வம்புக்கு சொக்கனை வளையாடும் கைகளில்
வளைக்கின்ற வண்ண மயிலே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 16

நீரிலே வாழ்கின்ற மீன்களும் நத்தையும்
நிலத்திலே சாவதென்ன?
நிலத்திலே வாழ்கின்ற மனிதனும் மிருகமும்
நீரிலே சாவதென்ன?

சீருலாப் பேருவாச் சிறப்புலாக் கொண்டாரும்
சிறுமையில் அழிவ தென்ன?
சேரிடம் அறியாமற் சேர்ந்ததோ? இல்லையேல்
சிறுமதிப் போக்கி னாலே?

மார்புலாஞ் சேலையில் மனமுலாம் மாலையை
மகிழ்வுலா விட்ட மயிலே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 17

அர்ச்சனைப் பூக்களும் கழுநீர்ப் புறத்திலே
அழிவுற்று வீழ்வதென்ன?
அழகு மாளிகைகளும் பிளவுண்டு வெடிப்புண்டு
அவலமாய் நிற்பதென்ன?

கர்ச்சனைச் சிம்மமும் கைகட்டி வாய் பொத்தி
கண் நோக்கி வாழ்வதென்ன?
கர்ம வீரர்களும் மாவீரர்களாய்
கர்மத்தை மறந்ததென்ன?

வர்மமில்லா நெஞ்சின் கேள்வியை பதிலாக
வளர்க்க வா மஞ்சள் மயிலே
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 18

பொய்யான கற்பனைப் போக்கிலே போனவன்
புகழையும் இழப்ப துண்டு
புகழெனும் போதையில் உண்மையை மறைப்பவன்
புத்தியெள இழப்ப துண்டு

மெய்யான ஞானியும் விதிவிட்ட காற்றிலே
விலையாகிப் போவதுண்டு
விவரமே இல்லாமல் காலத்தின் போக்கிலே
வீணர்கள் வாழ்வ துண்டு

மையாருங் கண்ணினால் மைந்தர்க்குச் சரியான
வழிகாட்டும் வஞ்சி மயிலே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 19

காடுசென்றே கொண்ட மனைவியைத் தோற்றவன்
காகுத்தன் என்ற கதையும்
காடுசெல் லாமலே களத்திலே தோற்றவன்
கண்ணால் வென்ற கதையும்

வீடுகண் டேபிறன் மனைவியை சேர்ந்தவன்
மேனிப்புண் கொண்ட கதையும்
வெற்றியும் தோல்வியும் தேவர்க்கும் உண்டென்ற
வேதத்தைச் சொல்ல விலையோ!
மாடுவென்றா லென்ன, மனிதன்வென்றா லென்ன
வல்வினை வெற்றி மயிலே!
மலர்கொண்ட கூந்தலைத் தென்றல்தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே! 20

## கொற்றவை (கொல்லங்குடி)

நல்லதைச் சொல்லென்றும் நல்லதே செய்யென்றும்
நயம்படச் சொல்லும் தாயே
நச்சு எண்ணம் கொண்டே இச்சையாய் அலைவாரை
நசுக்கிடும் அன்னை நீயே

பொல்லாத செயலினை பொடிப்பொடியாக்கிடும்
பொன் சுடர் தீபம்நீயே
புகழுடைய வாழ்விற்குப் பொன்முடி சூட்டியே
பூத்தூவி வாழ்த்துவாயே

கல்லாத மாந்தரின் கண்ணீரை நீக்கிடும்
கருவண்ண அன்னைநீயே
கற்றோரின் நெஞ்சத்தில் கலங்கரை விளக்கான
காவியச் சுடரும் நீயே

வில்லாக வேலாக வினைதீர்க்கும் மருந்தாக
விளங்கிடும் சக்தி நீயே
வேண்டிடும் நல்வரம் விரைவாகத் தந்திடும்
வெட்டுடை காளியுமையே!

## மங்கலநாயகி ஒன்பது கோயிலில்

வஞ்சிசிவ காமவல்லி வாடா மலர்மங்கை
வளர்பிள்ளை யார்பட் டியிலே
மாத்தூரில் பெரியநாயகி மாதுசிவ புரந்தேவி
வளர்இரணிக் கோயில் தனிலே

மஞ்சளணி ஆவுடையாள் மலர்சூரக்குடியதனில்
வளர்வேலங் குடிகா மாக்ஷி
மாயிலுப்பைக் குடியோடு நேமத்தில் சௌந்திர
நாயகியாய் ஒளிரும் மலரே

கொஞ்சுமெழில் இளையாற்றங் குடிநித்ய கல்யாணி
குவலயங் காக்குந் தலைவி
கூடுமெழில் வயிரவன் கோயிலமர் வடிவுடையாள்
குலமாதர் போற்றும் இறைவி

விஞ்சுபுகழ் நகரத்தார் வியனொன்பது கோயிலில்
கொஞ்சிவரும் சக்தி மயிலே
அஞ்செழுத்து நாயகனின் நெஞ்சைவிட் டகலாத
அன்னபூரணி உமையே!

*தேவகோட்டை மீயன்னா சேவுகன்செட்டி*

# இறைவியர் வணக்கம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்

சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்

அலையாழி அரிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
அருள்வாயே அபிராமியே

*-அபிராமி அம்மைப் பதிகம் (அபிராமி பட்டர்)*



## 1. ஸ்ரீராஜ ராஜேஸ்வரி - பெங்களூர்

சந்தனம் குங்குமம் ஜவ்வாது திருநீறில்
தவழ்ந்திடும் சக்தி வடிவே
தங்கமுக ஒளியிலே தரணியை வாழ்விக்கும்
தாயமுத அன்பு வடிவே

செங்கனிச் சிரிப்பிலே செவ்வானம் பொழிகின்ற
செம்பவள முத்து வடிவே
செங்கதிர் ஒளிகூட்டி சிங்காரப் புகழ்சூடும்
செப்பரிய அழகு வடிவே

கந்தனைக் கணபதியை தந்துமே வாழ்வித்த
கற்கண்டு கனிவு வடிவே
காற்றையும் மழையையும் கதிரவன் ஒளியையும்
கலந்து தரும் இயற்கை வடிவே

சிந்தனைச் சோலையில் தென்றலாய் உலவிடும்
தெய்வ ஒளி சிற்ப வடிவே
சிவனாரின் துணையான ராஜராஜேஸ்வா¢
ஸ்ரீசக்தி அம்மை யுமையே!

## 2. காமாட்சியம்மன் - காஞ்சிபுரம்

முத்துமணி மண்டபம் ரெத்தினச் சிம்மாசனம்
முழங்கிடும் மணி ஓசையே
முப்பெரும் சக்தியாம் திரிசூலம் ஏந்திடும்
முத்து நகைபெற்ற தாயே

பத்துவிரல் சூட்டிய பவளமணி மோதிரம்
பாடகத் தண்டை கொலுசும்
பச்சையுடன் நீலமும் புஷ்பராகத்திலும்
பதித்திட்ட தாலியழகும்

முத்து மூக்குத்தியும் முழுவைரக்கம்மலும்
மிளிர்கின்ற ஒட்டியாணம்
முத்துமணி மாலையுடன் முக்திதரும் கைகளில்
முக்கனிக் கரும்பு வில்லும்

சித்தத்தில் என்றுமே சக்தியாய் விளங்கிடும்
தேவியவளள் அருள்மாட்சியே
செந்தமிழ் பாடிடும் சிந்தையில் வாழ்ந்திடும்
தேவியுமை காமாட்சியே

## 3. விசாலாட்சி அம்மன் - காசி

ஆதிசிவன் உடல்மீது பாதியுடல் பெற்றிட்ட
அழகான அன்னை உமையே!
ஆற்றல் சேர் சக்தியாய் அகிலத்தைக் காப்பதற்கு
அருளாகி வந்த திருவே!

வேதனைகள் தீர்க்கின்ற வேல்விழியே அருள்காட்டி
வெற்றியினைக் காட்டுவாயே!
வெங்கொடுமை தணிக்கின்ற கங்கைநதி தீரத்தில்
விளையாடும் அன்னை நீயே!

மாதவங்கள் செய்கின்ற மாமுனிவர் பலபேர்கள்
வாழ்கின்ற புனித காசி
மாற்றங்கள் செய்கின்ற தீர்த்தங்கள் விளையாடி
மணக்கின்ற இனிய காசி

சோதனைகள் வரும்போது வேதனையை நீக்குகின்ற
சோலையாம் விசாலாட்சியே
சொந்தமென வந்துநிதம் உன்னடியைத் தொழுவோர்க்கு
துணைநீயே விசாலாட்சியே!

## 4. மீனாட்சி அம்மன் - மதுரை

மீன்கொடி பறக்கவே மேதினி சிறக்கவே
மிளிர்கின்ற மாமதுரையே
மேகநிறச் சொக்கர் மீனாட்சி கல்யாணம்
மேன்மையாய் நடக்குதங்கே!

தேன்சொட்டும் சித்திரையில் திருவிழா நடக்குதே
திக்கெட்டும் மக்கள் வெள்ளம்
தெவிட்டாத மொழிபேசும் சிங்காரக் கிளியோடும்
சிரிக்கின்ற தாயின் உள்ளம்

வான்முட்டும் கோபுரமும் வழிந்தோடும் வைகையும்
வையத்தே வாழவைக்கும்
வாழ்ந்திடும் தமிழ்ச்சங்கம் வள்ளுவன் குறளோடு
வாழ்வினை உயரவைக்கும்

கோனாட்சி செய்கின்ற மீனாட்சி பவனி வரக்
கொஞ்சுமெழில் தங்கரதமே
கோடிப்பேர் நெற்றியில் குங்குமம் ஆகியருள்
கோதை மீனாட்சி யுமையே!

## 5. அகிலாண்டேஸ்வரி - திருவானைக்காவல்

மலையரசி மாதரசி மங்காத புகழரசி
மாதவத்துப் பேரரசியே
மாணிக்கத் தேரேறி மகிழ்வாகப் பவனிவரும்
மங்கலத் தாயரசியே

கலையரசி கயலரசி கனிவான மொழியரசி
கற்கண்டுச் சொல்லரசியே
காவியத் தமிழ் நெஞ்சில் கருணையாம் நிலைதந்து
களிக்கின்ற பூவரசியே

சிலையாக நின்றாலும் சீரான வாழ்வு தரும்
செம்மைசேர் எழிலரசியே
செவ்வானம் பொழிகின்ற சிங்கார அருள்முத்துத்
தேவியவள் அருளரசியே

நிலையான வாழ்வுக்கு நீங்காத ஒளியூட்டும்
நெறியான தாயரசியே
நித்தமும் சித்தத்தில் நின்றுமே அருளூட்டும்
நீடுபுகழ் உலகரசியே!

## 6. சிவகாமி அம்மன் - சிதம்பரம்

ஆட்டங்கள் ஆடியே அகிலத்தை ஆண்டிடும்
ஆனந்தவல்லி நீயே
அழகான நாட்டிய முத்திரை நூற்றெட்டு
அமைத்திட்ட சிவகாமியே

பாட்டரங்கம் கொண்டு பாவலர் நாள்தோறும்
பாமாலை கோடி தருவார்
பாமாலை பாடியே பூமாலை பல சூட
பக்தர்கள் நாடி வருவார்

கோட்டங்கள் மண்டபம் கோபுர நந்தியும்
கூத்தனின் புகழ்பாடுதே
கூத்தனுடன் சக்தியும் ஆடிடும் ஆட்டத்தில்
கொடுமைகள் அழிந்தோடுதே

வாட்டங்கள் போக்கிட வந்திடும் அன்னையே
வல்லியவள் சிவகாமியே
வரம்வேண்டிக் கரம்கூப்பும் வறியவர் வாழ்வினை
வளமாக்கும் தேவி உமையே!

## 7. கொப்புடையம்மன் - காரைக்குடி

மஞ்சள் முகத்தழகும் மத்தியிலே பொட்டழகும்
மங்களம் தருவதன்றோ
மாணிக்க மூக்குத்தி முத்துப் பில்லாக்குமே
மகிழ்வூட்டும் அலங்காரமே

அஞ்சனம் தீட்டிய அம்புவில் விழிகளில்
அகிலமே அடக்க மன்றோ
அழகான காதினில் ஆடிடும் குண்டலம்
அலைகடல் முத்து வகையோ

தஞ்சமென வந்தவரைத் தாங்கிடும் கைகளில்
தவழ்ந்திடும் தங்க வளையல்
தங்கமென நெஞ்சிலே கொஞ்சிடும் மாலைகள்
தாயவளின் பொற்குவியல்கள்

கொஞ்சிடும் உதட்டிலே கூடிடும் புன்னகை
கோடிக்கு கோடி பெறுமே
குறையாத வாழ்வினை நிறைவாகத் தந்திடும்
கொப்புடையம்மை உமையே!

## 8. காந்திமதி அம்மன் - நெல்லை

முல்லையுடன் மல்லிகை முத்தார அணிபூட்டி
முடிசூடும் அன்னைநீயே
மோகனப் புன்னகை பூத்திடும் இதழ்களில்
முத்தமிழ் சிந்துவாயே

கல்லையும் கனியாக்கும் கற்கண்டு மொழிதந்த
கண்கண்ட தெய்வம் நீயே
கடலையும் மலையையும் காலத்திற்கிணை சொன்ன
காவியச் சோலை நீயே

எல்லையே இல்லாத நெல்லையாம் பதியினில்
ஏற்றிய தீபம் நீயே
எங்குமே இருள் நீக்கி இனியநல் அருளூட்டும்
ஈசனின் பதியும் நீயே

தொல்லைகள் மறைந்திட தொண்டுள்ளம் மலர்ந்திட
தூயவரம் அருளுவாயே
தும்பிக்கை கணபதி தோகைமயில் முருகனுடன்
தோன்றிடும் காந்திமதியே!

## 9. அபிராமி அம்மன் - திருக்கடவூர்

ஆழிசூழ் உலகத்தை அன்பாலே காத்திடும்
அன்னையே அருள் நாயகி
அமுதான கடவூரில் பட்டருக்கருள் செய்த
அம்மையே புகழ் நாயகி

வேழ மாய் ஒருபிள்ளை வேலோடு மறுபிள்ளை
மேன்மையாய் பெற்ற தாயே
வினைதீர்க்கும் குங்குமம் மஞ்சளில் விளங்கிடும்
வேள்வியே கோதை நீயே

ஏழிசை நாதத்தை எழுப்பியே மகிழ்ந்திடும்
இணையற்ற இசை வல்லியே
எங்குமே மங்கலம் பொங்கியே தங்கிட
இயங்கிடும் சக்தி நீயே

வாழியென அன்போடு வாழ்த்திடும் சொல்லாண்டு
வாழ்ந்திடும் தமிழ் நாயகி
வளம் கூட்டும் கரும்புவில் வழங்கிடும் காட்சியே
வள்ளல் நீ அபிராமியே!

## 10. கருமாரி அம்மன் - திருவேற்காடு

பூக்காட்டில் மணம் பரப்பி புகழ்க் காட்டில் வீற்றிருக்கும்
பொன்னாரம் அன்னைமாரி
புகழான திரிசூலம் புவனத்தை வாழ்விக்கும்
பொற்புடைய தேவிமாரி

வேற்காட்டில் வாழ்ந்திருந்து வேதனைகள் தீர்க்கின்ற
வெண்குடை முத்துமாரி
வித்தை பல செய்துமே சித்து விளையாடிடும்
வெற்றி நகை கண்டமாரி

சாக்காட்டுச் சிந்தைகளை சாகடித்து இன்பத்தைத்
தருகின்ற பொன்னி மாரி
சக்தி தனை உண்டாக்கும் சக்தியவள் என்று மனம்
சாற்றுகிற அன்னைமாரி

ஆக்கங்கள் பலகூட்டி ஆற்றல்கள் பலவூட்டி
அன்பு தரும் சக்திமாரி
அழகான வேற்காட்டில் சுடராக வாழ்கின்ற
அன்னை கருமாரி யுமையே!

## 11. மாரியம்மன் - சமயபுரம்

இமயத்தில் பிறந்தாலும் இதயத்தில் வாழ்கின்ற
இணையற்ற தாயமுதே
இல்லாமை இல்லாமல் எல்லோரும் வாழ்ந்திட
எழுந்தருளும் அருளமுதே

சமயத்தில் வரும் இன்னல் தகர்த்திடும் அன்னையே
சமயபுரம் மாரியம்மா
சஞ்சலம் நீங்கிடச் செஞ்சுடர் காட்டிடும்
சக்தியே தேவியம்மா

உமையவளின் மறுவுருவாய் உலகத்தைக் காக்கின்ற
ஓங்காரவல்லி நீயே
உன் அருளில் பிள்ளைகள் உயர்வோடு வாழ்ந்திட
உற்றவழி சொல்லுவாயே

அமைந்திட்ட வாழ்க்கையும் சக்கரமாய்ச் சுற்றிட
ஆறுதல் செப்புவாயே
ஆறுதல் கூறியே மாறுதல் தருகின்ற
அம்மையே மாரியுமையே!

## 12. துர்க்கை அம்மன் - சிவகங்கை

சிங்காரச் சிற்றாடை சிகப்பு நிறப்பட்டாடை
தேவியவள் திருக்காட்சியே
சிவகங்கைச் சிற்றூரில் சீரான அலங்காரம்
தெவிட்டாத கண்காட்சியே

மங்காத புகழுக்கும் மலர்கின்ற வாழ்வுக்கும்
மாயவளின் அரசாட்சியே
மருவிடும் தீவினை மாய்ந்துமே மறைந்திட
மாதவளின் அருளாட்சியே

கங்கையில் குளித்திட்டு காவிரியில் பொட்டிட்ட
காவியப் புகழாட்சியே
கன்னியர் மணமாலை கனிந்துமே சூட்டிடும்
கருணை மழை பொற்காட்சியே

மங்கள முழக்கங்கள் தங்கியே ஒலித்திடும்
மங்கையின் எழிலாட்சியே
மலர்கின்ற புகழாரம் என்றுமே தந்திடும்
மாதேவி துர்க்கையுமையே!

## 13. கற்பகாம்பாள் - மயிலை

தித்திக்கும் திருக்கோயில் சிங்காரப் பொற்கோயில்
சிறக்கின்ற மயிலையூரே
திருநீற்றுப் பாமாலை தினம்பாடி அதிகாலை
செப்புவர் சிவனின் பேரே

முத்துஒலி வைரவிழி முழுநிலவு முத்தின்ஒளி
முருகவேள் தரும் புன்னகை
முதலிறைக் கணபதியின் மோகனத் துதிக்கையோ
முழு வெற்றி தரும் பொன்னவை

சத்தியின் திருக்காட்சி சரித்திரப் புகழ் மாட்சி
சாற்றிடும் அற்புதங்கள்
தங்க உடல் அங்கமதில் தவழ்கின்ற சிங்காரம்
தமிழ் தந்த பொற்பதங்கள்

எத்திசைக்கும் மறையாக ஏழையரின் இறையாக
இருப்பவள் கற்பகாம்பாள்
எல்லோரும் எல்லாமும் என்றுமே பெற்றிட
எழில் கூட்டும் அம்மையுமேயே!

## 14. அலமேலு மங்கை - திருச்சானூர்

மாலவன் மலைவீட்டில் மணிச்சங்குப் பூபாளம்
மலர்கின்ற சுப்ரபாதம்
மங்கையவள் அலமேலு தங்கவிரல் மீட்டிடும்
மதுரமொழி வீணைநாதம்

கோலவிழி இரண்டிலும் கொஞ்சிடும் அருள்மணம்
கோமகள் தரும் சீதனம்
கோமகன் மாதவனின் குளிர்கொண்ட திருமார்பு
கோதையின் அழகாசனம்

சீலங்கொன் சங்கமும் சிறக்கின்ற சக்கரமும்
திருமகளை நிதம் பாடுமே
செவ்வுடல் மாதரசி சிந்ததைகொள்ள நாவரசி
திருவடியை மனம் நாடுதே

காலத்தை வென்றிடக் கருணைவழி பல காட்டிக்
காக்கின்ற அன்னை நீயே
கார்முகில் வண்ணனின் கண்கவர் நாயகி
களிப்பூட்டும் மங்கையவளே!

## 15. தையல் நாயகி - வைத்தீஸ்வரன் கோவில்

கொஞ்சிடும் நெல்வளம் கொழித்திடும் பல்வளம்
குவித்திடும் கொடை நாயகி
கொடுமைமிகு நோய்தீர கோலமிகு திருச்சாந்து
கொடுத்தருளும் புகழ்நாயகி

வஞ்சியவள் பூவரசி வைத்தீசன் துணையரசி
வற்றாத கங்கை நதியே
வாடிடும் பக்தர்க்கும் பாடிடும் சித்தர்க்கும்
வழிகாட்டும் சங்க நிதியே

நெஞ்சமலர் கோயிலில் நீதந்த 'ஓம்சக்தி'
நீ புகழ் ஓங்காரமே
நீங்காத அன்புக்கும் பாங்கான தமிழுக்கும்
நெறியூட்டும் அலங்காரமே

தஞ்சமென உன்வாசல் தங்கவரும் பிள்ளைக்கு
தருகின்ற அருள் ஞானமே
தங்கமுகம் காட்டித் தரணியை காத்திடு
தாய்சக்தி தையல் உமையே!

## 16. பகவதி அம்மன்

வைரமுடி கிரீடங்கள் வானத்தை முத்தமிட
வஞ்சியவள் ஆட்சி செய்வாள்
வட்டமிடும் முத்துவிழி பொட்டிட்ட முகத்தினில்
வண்டாடும் காட்சி தருவாள்

மொய்குழலி மொழியரசி முத்தமிழ்க் கலையரசி
முனிவரின் வேதமானாள்
மூலக்கனலாகி முடியாத முதலாகி
முழங்கிடும் நாதமானாள்

நாயகி நான்முகி நளினி நந்தினி
நலங்கூட்டும் பெயர் சூடுவாள்
நவில்கின்ற உள்ளத்தில் நல்லவர் இல்லத்தில்
நயமுடன் வர நாடுவாள்

மாயவன் உலகமே மந்திரத் திலகமே
மங்கலத் தங்கமயிலே
மக்களின் குறைகளை தீர்த்திடும் பாவையே
பகவதி அம்மை யுமையே!

## 17. திருவெற்றியூர் வடிவுடையம்மன்

சந்தனம், குங்குமம் சவ்வாது திருநீரில்
தவழ்ந்திடும் சக்தி வடிவே!
தங்கமுக ஒளியிலே தரணியை வாழ்விக்கும்
தாயமுத அன்பு வடிவே!

செங்கனிச்சிரிப்பிலே செவ்வானம் பொழிகின்ற
செம்பவள முத்து வடிவே!
செங்கதிர் ஒளி கூட்டி சிங்காரப் புகழ்சூடும்
செப்பரிய அழகு வடிவே!

கந்தனைக் கணபதியை தந்துமே வாழ்வித்த
கற்கண்டு கனிவு வடிவே!
காற்றையும் மழையையும் கதிரவன் ஒளியையும்
கலந்து தரும் இயற்கை வடிவே!

சிந்தனைச் சோலையில் தென்றலாய் உலவிடும்
தெய்வ வொளி சிற்பவடிவே!
சிவனாரின் துணையாக திருவெற்றியூர் வாழும்
வடிவுடையம்மை உமையே!

## 18. பெரியபாளையம் பவானி அம்மன்

உள்ளத்தின் ஆசையை ஒப்பற்ற ஓசையாய்
ஒலித்திடும் ஓங்காரியே!
உலகத்தின் ஆணையை உதிக்கின்ற அருளாக
ஒளிர்கின்ற ஓங்காரியே!

பள்ளத்தில் விழாமல் பாவங்கள் செய்யாமல்
பண்பாக்கும் சிங்காரியே!
பாசமுடன் கருணையை பாகாக குழைத்துமே
பசிதீர்க்கும் அலங்காரியே!

கொள்ளைகள் கொடுமைகள் இல்லாத வாழ்வுமழை
கொடுத்திடும் மின்னல் ஒளியே!
கொஞ்சிடும் குழந்தைகள் கோரிடும் வரங்களைக்
கொடுக்கின்ற அன்னைவிழியே!

வெள்ளையம் பாளையம் வேப்பிலை ஆலயம்
வெகுவாகப் பெற்றதாயே!
வினைதீர்க்கும் சோலையாம் பெரிய நற்பாளையம்
வீற்றிடும் பவானியுமையே!

## 19. அருள்மிகு முத்துமாரியம்மன் - காரைக்குடி

கற்கண்டுத் தமிழ்ச் சோலை காரையம் பதியாளும்
கருமுகில் முத்துமாரி!
காற்றாகி கனலாகி கருணையின் ஊற்றாகிக்
காக்கின்ற சித்துமாரி!

அற்புத வேப்பிலைகள் ஆடிடும் சன்னதியில்
அமர்கின்ற அழகுமாரி!
ஆயிரமாய்க் கருவாகி அருள்சிந்தும் உருவாகி
ஆள்கின்ற உலகுமாரி!

நற்பாளை மதுக்குடம் நலம்பாடும் பாற்குடம்
நனைந்தாடும் சின்னமாரி!
நாள்தோறும் உன்வீடு நாடுவார் அருள் கூட
நலம்காக்கும் அன்னைமாரி!

பொற்கரத்து முத்திரை புவியினைக் காத்திடும்
பூங்குழலி பொன்னிமாரி!
பொன்னொளி அலங்காரம் புகழ்கொண்ட ஓங்காரம்
பூணும் தாய் அம்மையுமையே.

## 20. அருள்மிகு முத்தாளம்மன் - காரைக்குடி

வித்துக்கு வித்தாக வேதத்தின் சொத்தாக
விளங்கிடும் முத்து முகமே !
வெற்றிகள் பல கோடி வேண்டுவோர் உனைநாடி
வினைதீர்க்கும் சக்தி அகமே !

சத்தியப் பொங்கலில் தர்மத்தின் கட்டிலில்
தவழ்ந்திடும் தங்க நிலவே !
தரணிக்கு திரிசூல சக்திகள் மூன்றையும்
தருகின்ற தாயின் கரமே !

சித்திரைப்பாவையே செவ்வுடைப் பூசையே
சிங்காரப் புற்று வடிவே !
சிங்கத்தில் ஏறிவரும் தேவியின் திருக்கோலம்
சிந்தனை ஊற்று வடிவே!

முத்துநகை பூட்டிய மோகன ரதமேறும்
முக்கனி அமுத மலையே !
முறையாக வணங்குவோர் குறையாவும் தீர்ந்திடும்
முத்தாளம்மையுமையே !

## 21. அருள்மிகு திரிபுரசுந்தரி - திருவான்மியூர்

விரிசடை வேந்தனின் வேல்விழி நாயகி
வேதத்தின் நாதமானாள்
விண்ணுக்கும் மண்ணுக்கும் விரிகின்ற புகழாகி
வெற்றியின் கீதமானாள்

அரிதிரு மாயோனின் அழகுமிகு தங்கையே
அகிலத்தின் தாயுமானாள்
ஆனந்தத் தாண்டவம் ஆடிடும் ஈசனின்
அபிநயப் பாவையானாள்

பெரிதினும் பெரிதான பெம்மானின் பாலாவே
பெருமைமிகு ஸ்ரீ சக்கரம்
பிள்ளைக்கு ஞானப்பால் பேணியே புகட்டிடும்
பேரன்பு தங்கக்கரம்

திரிபுரசுந்தரி திரிசூல சௌந்தரி
திருக்கரம் நமைக்காக்குமே
திருவடித் தாமரையில் செல்வங்கள் பொழிகின்ற
திரிசூல அம்மையுமையே!

## அருள்மிகு கோட்டை அம்மன் பாமாலை

கோட்டைவாழ்  நகரத்தார் கொண்டாடிப் போற்றிடும்
குழந்தை வடிவழகின் உருவே
கோடி பேர் வாழ்க்கையை கோபுரமாய் உயர்த்திட்ட
கொஞ்சுமெழில் தங்க நிலவே
வணங்குவோர் வாழ்க்கையில் வளங்களைச் சேர்த்திடும்
வண்ண வடிவான ஒளியே
வளமான பக்தியினை வகையாகத் தந்திட்ட
வற்றாத கருணைக் கடலே
உளமார துதிப்போரை உயர்ந்தோங்க செய்திட்ட
உணர்வான இமையமலையே
உலகமே போற்றும்எம் உயர்வான தெய்வமே
உன் பாதம் பணிந்தோம் தினமே
மறுக்காது உடன் வந்து மங்காத புகழ் தந்து
மனை காக்கும் தெய்வம் நீயே
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில்உறை கோட்டை உமையே

ஆடியின் முதல்திங்கள் அம்மையே உன்னையிங்கு
அழைத்துமே மேடை அமைப்போம்
அதுதொட்ட செவ்வாயில் அனைவரும்உன் வாசலில்
அணி அணியாய் பொங்கல் வைப்போம்
அன்றாடம் இருவேளை காலையிலும் மாலையிலும்
அன்பொழுக பூஜை செய்வோம்
அழகான மேடையிலே அமர்ந்திட்ட உந்தனுக்கு
அபிஷேகம் செய்து பணிவோம்
பட்டாடைகள் உடுத்தி பகட்டாக நகை பூட்டி
பரவசமாய் பார்த்து மகிழ்வோம்
பாராளும் சக்தியே பண்பான பக்தர்கள்
பாவாலே வாழ்த்திசைப்போம்
எங்களது இல்லத்தில் இனிமைகளை சேர்த்துமே
ஏற்றமுற செய்யும் தாயே
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில்உறை கோட்டை உமையே

நகரத்தார் எல்லோரும் நயமான முதல் வெள்ளி
நகர சிவன்கோவில் சேர்வோம்
நானிலம் செழிக்கவே நன்மைகள் கொழிக்கவே
நாடிஉன் தாள்கள் பணிவோம்
விரதங்கள் இருந்துமே வேண்டினேன் பிரார்த்தனைகள்
விரைந்தோடி உமக்குச் செய்ய
விழாநாளில் பால்குடம் விரும்பியே எடுத்திடுவோம்
வீடுகளில் நன்மை சேர்ப்பாய்
ஆயிரமாய் பூத்தட்டு அணிஅணியாய் நடைபயின்று
ஆத்தாளின் மேனி தவழும்
அரசாளும் தேவிக்கு அலங்காரம் பல செய்து
அவளழகை கண்டு மகிழ்வோம்
மாமலையாய் குவிந்திட்ட மலர்களில் அவளுருவை
மனதிலே நிறைந்து வைப்போம்
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில்உறை கோட்டை உமையே

தரணிபுகழ் கோட்டையம்மன் திருவிழா முதல் நாளில்
தானியங்கள் விதைத்து வைப்போம்
தழைத்து வரும் முளையுமே தவறாது அவள் பெருமை
தாங்கியே நிமிர்ந்து நிற்கும்
அதிகாலை நேரம் முதல் அர்த்த ஜாமம் வரையில்

அன்பர்கள் தொழுது நிற்போம்
அம்பிகையின் அருள் வேண்டி அடிவைத்து பிரகாரம்
அமைதியுடன் செய்து மகிழ்வோம்
கும்பிடு கரணங்கள் கோவிலை வலம் வந்து
குறைவின்றி உனக்கு சேர்ப்போம்
கூடிடும் பக்தர்யாம் ஆயிரத்து எட்டுமுறை
குமரியுனை வலங்கள் வருவோம்
மழலைக்கு கரும்பிலே மகத்தான தொட்டில் கட்டி
மாயவளை போற்றி பணிவோம்.
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில்உறை கோட்டை உமையே

மறுசெவ்வாய் நாளிலே மனைபுள்ளி பெருக்கவே
மனமுருகி பொங்கல் வைப்போம்
மணமுடித்து புள்ளிகளை மனமுவந்து எம்மில்லம்
மகிழ்வோடு சேர்க்கும் தாயே
முறையான வாழ்க்கையில் முழுமையாய் வென்றிட
முதல்முடியை உனக்கு தருவோம்
முத்தான இளநீரின் மூன்றுகண் திறந்துமே
முழுமனதாய் உன்னை தொழுவோம்
தேனும் தினை மாவும் தேவியவள் வேப்பிலையும்
தெவிட்டாத அமுதாகுமே
தினம் கரைக்கும் பானக்கம் தித்திப்பை நம் வாழ்வில்
திகழ்ந்தோங்க செய்துவிடுமே
மனம் குளிர அம்மைக்கு மாவிளக்கு ஏற்றியே
மறவாது வணங்கி வருவோம்
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில்உறை கோட்டை உமையே

ஆனைமா முகனுக்கும் அழகுமிகு வேலுக்கும்
அனுதினமும் பூஜை வைப்போம்
அபிஷேகம் இருகாலம் அன்னையவள் மேடையிலே
அமுதாக கண்டு வியப்போம்
பால்தயிர் மஞ்சளுடன் பஞ்சாமிர்தமும்
மணக்கும் நற்சந் தனமும்
மணம் வீசும் பன்னீரும் வெள்ளமென இளநீரும்
மங்கை மனம் குளிர வைக்கும்
மஞ்சள் உருண்டையில் மகிமைஎலு மிச்சையால்
மகராசி உருவை அமைப்போம்

மங்களமாம் குங்குமத்தை மாதாவின் மேனியிலே
மலையாக சொரிந்து மகிழ்வோம்
மஞ்சள் நிற பட்டாடை மலர்களால் அலங்காரம்
மனங்களிலே நிறைந்துவிடுமே
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில்உறை கோட்டை உமையே

உடற் பிணிகள் நீங்கவே உருவங்கள் சாற்றியே
ஊரார்கள் வணங்கி வருவோம்
உப்புடன் மிளகையும் உன் வாசல் சேர்ப்போமே
உனதருளால் நோய்கள் தீர்ப்பாய்
வீடு மனை வேண்டுவோர் விண்ணப்பம் தாம்செய்து
வேண்டியே தொழுது நின்றால்
விரைவாக இல்லத்தை நிறைவாக தந்திடுவாள்
வேப்பிலையில் திளையும் மாறி
கல்யாணம் நடக்கவே கழுத்தூறு வாங்கியே
கடவுளுக்கு சாற்றி மகிழ்ந்தால்
காலத்தில் திருமணமும் காவியமாய் நடக்குதே
கண்கண்ட தெய்வம் அருளால்
மனமுருகி உடல்மீது மாவிளக்கு ஏற்றினால்
மருந்தாகி நலங்கள் சேர்ப்பாய்
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில் உறை கோட்டை உமையே

அலையான எண்ணத்தை நிலையாக்க செய்திடும்
அழகிய கோட்டை அம்மா
அன்பர்கள் தேகத்தில் ஆற்றல்களைக் கூட்டியே
ஆண்டருள வேண்டுமம்மா
வரும்துயரம் போக்கியே வாழ்க்கையை வளமாக்கும்
வலிமைமிகு கோட்டையம்மா
வாழ்நாளில் நிம்மதியாய் வாழ்ந்திட எம்மையும்
வாழ்த்திட வேண்டும் அம்மா
ஆசைகளே இல்லாது அவனிதனில் யாம்வாழ
அருளுவாய் கோட்டை அம்மா
பூசைகள் உந்தனுக்கு பாசமுடன் தருவோமே
பூத்தருள வேண்டும் அம்மா
மனம் உருகி பாடுவோம் உளமுருகி வேண்டுவோம்
மனைகாக்கும் கோட்டையம்மா
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில்உறை கோட்டை உமையே

நகர்மக்கள் கூடியே நன்னாளாம் ஞாயிறில்
நாயகிக்கு பொங்கல் வைப்போம்
நாடாளும் தேவியே ஊரார்தம் வேண்டுதலை
நலிவின்றி கொடுத்து அருள்வாய்
வாழ்க்கையில் வெற்றியை வளமாக சேர்த்திடும்
வலுவான அன்னை நீயே
வழிவழியாய் தலைமுறைகள் வாழ்வாங்கு வாழ்ந்திட
வகைநெறிகள் சொல்லுவாயே
தேவைநகர் எல்லையை திடமாக காத்திடும்
தேவியே கோட்டை அம்மா
பாவையிவள் உந்தனுக்கு பாமாலை சூட்டினோம்
பக்கதுணை வருவாய் அம்மா
மகிழ்வோடு செல்வத்தை மற்றவருக்கு கொடுக்கும்நல்
மனதையும் எமக்கு தருவாய்
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில்உறை கோட்டை உமையே

தேவநகர் கோட்டையில் திருவிழா நடக்குதே
திசையெட்டும் மக்கள் வெள்ளம்
சேவைகள் செய்பவர்க்கு ஷேமங்கள் தந்திடும்
தேவியவள் கருணை உள்ளம்
பதினைந்து நாட்களுமே பக்தியுடன் பக்தர்கள்உம்
பாதம் பணிந்து நின்றால்
பறந்து வந்து நீயுமே பாரினில் அனைவருக்கும்
பலநூறு வரங்கள் தருவாய்
திருவிழா நாட்களில் தினந்தோறும் உன்பாதம்
திண்ணமுடன் பணிந்து நிற்போம்
பெருவிழா கண்டதொரு பெருமைமிகு நாயகியை
திங்களிலே நீரில் வைப்போம்
மறுவருடம் வரையிலும் மாதரசி மழலையாய்
மனைகளில் மலர்ந்து நிற்பாள்
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில்உறை கோட்டை உமையே

ஆத்தாளுன் அருளினால் அவனியில் பஞ்சங்கள்
அடியோடு அகல வேண்டும்
அனுதினமும் பகைமையை போற்றும் இவ்வுலகத்தில்
அமைதியை விதைக்க வேண்டும்
கயவர்கள் கூட்டம் உன் கண் பார்வை பட்டவுடன்
காற்றாக மறைய வேண்டும்

கைகூப்பி உன்னையே கண்ணீரால் தொழுவோரின்
கவலைகள் தீர வேண்டும்
தானென்ற ஆங்காரம் தரணியில் இல்லாது
தாய் அவளே போக்க வேண்டும்
தமிழோடு சைவநெறி தழைத்தோங்கும் அறப்பணியும்
தர்மநெறி காக்க வேண்டும்
மகிழ்வான் வாழ்விலே மனிதநேயங்களும்
மாறாது நிலைக்க வேண்டும்
மங்கலங்கள் சேர்த்திடும் மகிழ்வான அன்னையே
மனதில்உறை கோட்டை உமையே

*பாவாக்கம். மீ மீனாட்சி சுந்தரம் என்ற ரவி தேவகோட்டை*

## கோட்டையம்மன் திருவிழா

கோட்டையம்மன் திருவிழா
கோலாகலத் திருவிழா
கோடி மக்கள் கூடிமகிழும்
தேவகோட்டை பெருவிழா

எல்லை தெய்வம் ஆனவள்
எங்கள் குலம் காப்பவள்
எல்லையற்ற ஆனந்தம்
பேரருளும் தருபவள்

ஆடி மாதம் திருவிழா
அகிலமெல்லாம் மகிழவே
ஆனந்தமாய் நடக்குதே
அன்னையவள் அருளினால்

பாலும் தேனும் பன்னீரும்
மணக்கும் சந்தன மஞ்சளும்
திரவியங்கள் அபிஷேகம்
காண காண பரவசம்

அன்னையவள் சந்நிதியில்
மாவிளக்கு வேண்டுதல்
அண்டி வந்த நோய்களும்
மறைந்து போகும் அற்புதம்

கழுத்துரு சாத்திட
கூடி வரும் திருமணம்
இல்லறங்கள் தழைத்தோங்கும்
இறை சக்தி அருளினால்

நான்னிலமும் தழைத்திட
நாள்தோறும் அலங்காரம்
அழகு கொஞ்சும் அன்னையைக்
காண காண ஆனந்தம்

ஆடவரும் பெண்டிரும்
பிள்ளைகளும் சுற்றமும்
குடும்பத்துடன் வணங்கிட
குலம் தழைத்தோங்குமே

எண்ணமெல்லாம் அவள் நினைவாய்
உள்உருகி வேண்டிட
ஏற்றம் பெரும் வாழ்க்கையை
அன்னையவள் அருளினாள்

அன்னையவள் சேவையில்
ஆனந்தம் பெருகுமே
அடியவர்கள் வாழ்வினிலே
வசந்தம் பூத்து குலுங்குமே

கோட்டையம்மன் புகழ்பாடி
அன்புடனே வணங்குவோம்
இன்பம் கோடி தழைத்தோங்கி
வளமுடனே வாழுவோம்

*பாவாக்கம் கதி.பழ.லெ. சக்தி குமார் தேவகோட்டை*

## திருமகள் அருள் வேண்டல்

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்-வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு!

நின்மேலுமாணை, நின்மகன் மேலுமாணை,
நின்மாக் கொழுநன் தன்மேலுமாணை,
தமிழ்மேலுமாணை தவமாவணிகச்
சின்னஞ்சிறுவர் தெரியாத காளையர் என்செயினும்
பின்னும் பொறுத்திருப்பாயே பெரிய இலக்குமியே!

நீங்காது நின்மகனும் நெடிய திருமாலும்
பாங்காக அன்றுவந்த பாற்கடல்போல்-தேங்காமல்
நன்றாக நீயிருந்து நாளும் வளம்பெருக்கி
என்றைக்கும் நீங்கா திரு!

*-பாடுவார் முத்தப்ப செட்டியார்*

# அஷ்டலட்சுமி வருகைப் பதிகம்

வருவாயே லெட்சுமியே வந்தருள்வாயே!
உன்னை வாயாறப் பாடுகிறோம் வரம் தருவாயே!

எட்டுவகை லெட்சுமியால் ஏராளமான செல்வம்
கொட்டும்வகை நானறிந்தேன் கோலமயி லானவளே!
வெற்றியுடன் நான் வாழ வேணும் ஆதி லட்சுமியே!
வட்டமலர் மீதிருந்து வருவாய் இதுசமயம்

சிந்தனைக்குச் செவிசாய்த்து சீக்கிரமென் னில்லம்வந்து
உந்தனருள் தந்திருந்தால் உலகமெனைப் பாராட்டும்!
வந்தமர்ந்து உறவாடி வரங்கள் பல தருவதற்கே
சந்தான லட்சுமியே தான் வருவாய் இதுசமயம்

யானையிரு புறமும்நிற்கும் ஆரணங்கே உனைத்தொழுதால்
காணுமொரு போகமெலாம் காசினியில் கிடைக்குமென்பார்!
தேனிருக்கும் கவியுரைத்தேன் தேர்ந்த கஜ லட்சுமியே
வானிருக்கும் நிலவாகி வருவாய் இதுசமயம்

அன்றாட வாழ்க்கையினில் அனுபவிக்கும் துன்பமெல்லாம்
உன்றனருள் பெற்றுவிட்டால் ஓடுவதும் உண்மையன்றோ!
இன்றோடு துயர்விலக இனிய தன லட்சுமியே
மன்றாடிக் கேட்கின்றேன் வருவாய் இதுசமயம்

எங்கள்பசி தீர்ப்பதற்கு இனியவயல் அத்தனையும்
தங்கநிறக் கதிராகித் தழைத்துச் சிரிப்பவளே!
பங்குபெறும் வாழ்க்கையினைப் பார்தான்ய லட்சுமியே
மங்களமாய் என்னில்லம் வருவாய் இதுசமயம்

கற்றுநான் புகழடைந்து காசினியில் எந்நாளும்
வெற்றியின்மேல் வெற்றிபெற வேணுமென்று கேட்கின்றேன்
பற்றுவைத்தேன் உன்னிடத்தில் பார்விஜய லட்சுமியே
வற்றாத அருட்கடலே வருவாய் இதுசமயம்

நெஞ்சிற் கவலையெலாம் நிழல்போல் தொடர்ந்ததனால்
தஞ்சமென உனையடைந்தேன் தாமரைமேல் நிற்பவளே
அஞ்சாது வரம்கொடுக்கும் அழகுமகா லட்சுமியே!
வஞ்சமிலா தெனக்கருள வருவாய் இதுசமயம்

ஏழுவித லெட்சுமிகள் என்னில்லம் வந்தாலும்
சூழுகிற பகையழிக்கும் தூயவளும் நீதானே!
வாழும் வழிகாட்டிடவே வாவீர லட்சுமியே!
மாலையிட்டுப் போற்றுகின்றேன் வருவாய் இதுசமயம்.

*-கவிஞர் சிவல்புரி. சிங்காரம்*

# துக்க நிவாரண அஷ்டகம்

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி
மன்மத பாணியளே;
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே;
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல் கற்பக காமினியே;
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி;

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்;
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்;
மானுறு விழியால் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்;
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி;

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே;
பொங்கரி மாவினில் பொன்னடி
வைத்துப்
பொருந்திட வந்தவளே;
எங்குலத் தழைத்திட எழில்வடி வுடனே
எழுந்தநல் துர்க்கையளே;
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி;



தணதண தந்தண தவிலொலி
முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்;
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்;
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்;

ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி;

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே;
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக்
கொடுத்தநல் குமரியளே;
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெனும் மாயே;
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி;

எண்ணிய படிநீ யருளிட வருவாய்
எங்குல தேவியளே;
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்;
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே;
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி;

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்றுநீ சொல்லிடுவாய்;
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்;
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்;
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி;

ஜெயஜெய பாலா சாமுண் டீஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி;
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீபர மேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி;
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெயஜெய ஸ்ரீதேவி;
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி;

## படியளக்கும் நாயகி -
(மயிலை கற்பகாம்பாள்)

**கற்பகமே! கற்பகமே! கற்கண்டுப் பெட்டகமே!**
**தெப்பமுடன் தேரோடும் சிவஞான சுந்தரமே!**

கற்பகமே! கற்பகமே! கற்கண்டுப் பெட்டகமே!
தெப்பமுடன் தேரோடும் சிவஞான சுந்தரமே!

கண்ணபிரான் சோதரியே! கபாலி
காதலியே!
பண்ணளந்த கவிகளுக்குப்
படியளக்கும் நாயகியே!



ஆடிவரும் வேளையிலே! அழகுமயில்
போலாவாய்!
சாடிவரும் அசுரனுக்கோ சண்முகன்-
கை வேலாவாய்!

அள்ளிவைத்த சாம்பலையும்
ஆரணங்காய் நீ செய்வாய்!
புள்ளிவைத்தான் சம்பந்தன் புதுக்கோலம் நீதந்தாய்!

நீயிருக்கும் இடத்தினிலே நிம்மதிக்குப் பஞ்சமில்லை
போயிருக்கும் சபைகளிலே புகழ்வெற்றி கொஞ்சமில்லை!

அம்பிகையே! கற்பகமே! ஆதரிப்பாய்! ஆதரிப்பாய்!
செம்பொன்னும் நவமணியும் சேய்எனக்கு நீஅளிப்பாய்!

## சரஸ்வதி துதி

**அம்மா கலைவாணி–எனக்கு அருள்வாய் மகராணி!**
**சிம்மாசனமாய்–எந் நாவினிலே தேவி, வருவாய்நீ!**

அம்மா கலைவாணி-எனக்கு அருள்வாய் மகராணி!
சிம்மாசனமாய்-எந் நாவினிலே தேவி, வருவாய்நீ!

வேத முதல் ஆனான்-பிரமன்
வித்தை தொழில் ஆனான்! அவன்
காதல் இளங்கிளியே-என்றும்
கைதொழுவேன் உனையே!

வெள்ளை மலர்மேலே-அன்னம்
வீற்றிருந்தால் போலே,
மெள்ள எழுந்தருள்வாய்-அம்மா
வேண்டும் வரம் தருவாய்!

ஏது படித்துவிட்டேன்! பெரிதாய்
என்ன முடித்துவிட்டேன்?-உன்
பாதம் பிடித்துவிட்டேன்-அதனால்
பாடல் வடித்துவிட்டேன்!

பூவும் உனக்காக-தேடும்
பொன்னும் உனக்காக!
கூவும் எனக்காக-அருள்வாய்
கோடிக்கணக்காக!

அருளின் துடிதுடிப்பாய்-அம்மா
அமுதத் தமிழ் வடிப்பாய்!
கருணை மடைதிறப்பாய்-அம்மா
கவிதைப் பயிர் வளர்ப்பாய்!

*-அருட்கவி கு.செ.இராமசாமி, எம்.ஏ., சிவகங்கை*



# சரஸ்வதி சிந்தனை

புத்தகத்து உள்ளுறை மாதே!
பூவில் அமர்ந்துஉறை வாழ்வே!
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்!
வேதப் பொருளுக்கு இறைவி!
முத்தின் குடைஉடை யாளே!

மூவுலகும் தொழும் தேவி!
செப்பு கவித்தன முலையாய்!
வெவ்வரி ஓடிய கண்ணாய்!
முத்து நிரைத்தவெண் பல்லாய்!
முருகம்பூ மேனி நிறத்தாளே!

தக்கோலந் தின்றதுவர் வாயாய்!
சரஸ்வதி என்னும் திருவே!
எக்காலும் உன்னைத் தொழுவோம்;
எழுத்தறி புத்தி பண்ணுவிப்பாய்;
ஆக்காய் எம் பெருமாட்டி,

அழகிய பூ அணை மீதாய்,
நோக்காய் என்மிடி தீர;
நொடிக்கும் பிராமணத்தி நோக்காயே,
சாலு நெல் அரிசி கொண்டு
சரஸ்வதி பூசை பண்ணிப்

பாலொடு பழத்தை நிரப்பிப்
பராவித் தொழுவோம் நங்காய்!
நங்காய் நங்காய் நமோஸ்து!
ஞானக் கொழுந்தே நமோஸ்து!

கல்விக்கு அரசே நமோஸ்து!
கணக்குஅறி தேவி நமோஸ்து!
சொல்லும் பொருளே நமோஸ்து!
சூக்கும ரூபி நமோஸ்து!

# உலகாளும் மகாசக்தி

ராஜேஸ்வரி–அம்மா–பரமேஸ்வரி.
புவனேஸ்வரி–அம்மா–ஜகதீஸ்வரி

ஸ்ரீசக்ர பீடத்தில் ராஜேஸ்வரி
சிவசக்தி ரூபத்தில் பரமேஸ்வரி
ஓம்சக்தி ஓம்சக்தி புவனேஸ்வரி
உலகாளும் மாசக்தி ஜகதீஸ்வரி!

அருளாளர் நெஞ்சங்கள் சிம்மாசனம்
அறுபத்து நான்குகலை வெண்சாமரம்
ஒருநான்கு வேதங்கள் சங்கீர்த்தனம்
ஓங்காரநாதம் அம்மாஉன் தாண்டவம்!

பூவுக்கும் பொட்டுக்கும் துணையானவள்
பொன்மஞ்சள் குங்குமத்தில் நிலையானவள்
சேவிக்கும் பெண்களுக்குத் தாயானவள்
திருமாங்கல்யம் என்னும் வாழ்வானவள்!

குளம்போல நெய்யூற்றி விளக்கேற்றுவோம்
கும்பத்தின் பிம்பத்தில் குடியேற்றுவோம்
வளம்யாவும் தரவேண்டி மலர்தூவுவோம்
மகராணி நீயென்று கவிபாடுவோம்!

தீபத்தில் குடிகொண்ட ராஜேஸ்வரி
திலகத்தில் முகம்காட்டும் ராஜேஸ்வரி
ஆபத்தில் ஓடிவரும் ராஜேஸ்வரி
அருள்செய்ய வேண்டும் அம்மா நீயேகதி!

*அருட்கவி கு.செ.இராமசாமி*

வேலும் மயிலும் துணை

# எந்நாளும் காப்பாயம்மா

ஸ்ரீசக்ர வாசினி சிம்மாசனி
சிவசக்தி ரூபிணி கல்யாணிநீ
ஓம்சக்தி ஸ்ரீராஜ ராஜேஸ்வரி
உன்பாதம் சரணடைந்தேன் மகேஸ்வரி

இருகைகளால் தொடுத்த பூமாலைகள்
இதயத்தினால் தொடுத்த பாமாலைகள்
அருள்பொங்கும் தீபங்கள் ஏற்பாயம்மா
அடியேனை எந்நாளும் காப்பாயம்மா!

அம்மாஎன் இல்லத்தில் அடியெடுத்துவா
அழகான வெண்கொற்றக் குடைபிடித்துவா
சும்மாநீ வரலாமோ பகைமுடித்துவா
துயரங்கள் யாவினுக்கும் விடைகொடுத்துவா!

செந்தா மரைப் பூவில் ஸ்ரீதேவியாம்
சிங்கத்தில் ஏறிவந்தால் மாகாளியாம்
வெண்தா மரைப்பூவில் மகராணியாம்
விண்ணோடும் மண்ணாளும் கலைவாணியாம்!

தீர்த்தங்கள் அத்தனையும் கமலாலயம்
தீபம் தெரிந்தஇடம் அருணாசலம்
வாய்த்த சபைகள்எல்லாம் பொன்னம்பலம்
மாதா பராசக்தி நீஎன்பலம்!

தாய்நீ மனம்வைத்தால் தங்கம்வரும்
தனிவழிக்குத் துணையாகச் சிங்கம்வரும்
சேய்வீட்டில் கல்யாண மேளம்வரும்
திருநாட்டை அரசாளும் யோகம்வரும்!

*-அருட்கவி கு.செ.இராமசாமி*

## இலக்குமி வணக்கம்

**ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!**
**ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!**

செந்தாமரை மலரில் திகழ்கின்றவள்
ஸ்ரீரங்க நாதனோடு மகிழ்கின்றவள்
சந்தான சௌபாக்கியம் தருகின்றவள்
தட்டாமல் ஓடோடி வருகின்றவள்

வற்றாது பால் வழங்கும் பசுவானவள்
மடிமீது உறவாடும் சிசுவானவள்
கற்றார்க்கும் கல்லார்க்கும் உயிரானவள்
கண் போகும் இடமெங்கும் பயிரானவள்

நன்செய்யும் புன்செய்யும் தானானவள்
நவதான்யப் புலம் எங்கும் மானானவள்
பொன் செய்யும் வேளாளர் கரமானவள்
புவியோரை வாழ்விக்கும் வரமானவள்

*-கு.செ.ராமசாமி, சிவகங்கை*

# காலமெல்லாம் நமக்குத் துணையானவள்

ஒருகோடி சந்திரனின் ஒளியானவள்
உலகாளும் ஞானாக்ஷி வடிவானவள்
கருவாக்கி உருவாக்கி நமைக்காப்பவள்
காலமெல்லாம் நமக்குத் துணையானவள்

நாதத்திலே கலந்த இசையானவள்
நானென்ற மமதைக்கு எதிரானவள்
வேதத்திலே விளங்கும் பொருளானவள்
வேதனை தீர்க்கும்நல் மருந்தானவள். (ஒரு)

குறையாது அருள்வழங்கும் குருவானவள்
குலம்காத்து நலம்காக்கும் திருவானவள்
ஓமென்ற மந்திரத்தின் பொருளானவள்
ஊனாகி உடலாகி உயிரானவள். (ஒரு)

பூவாகிக் காயாகிக் கனியானவள்
பொங்கும் அருட்கடலின் வடிவானவள்
சேயாக்கி எனையெடுத்துச் சீராட்டுவாள்
சிந்தையெல்லாம் குளிரத் தாலாட்டுவாள். (ஒரு)

*லெ.சோமு,தேவகொட்டை*

# உறையூர் ஸ்ரீ வெக்காளி அம்மன்

கூரை தான் வேண்டாது, கொலு வீற்றிருக்கும் தாயே!
கூப்பிட்ட குரலுக்கு வந்து குறை தீர்ப்பவள் நீயே!
வீசிடும் கண்பார்வையில் வீழ்ந்திடும் பகையெல்லாம்.
வெக்காளி உன்அருளால், விளைந்திடும் நன்மையெல்லாம்.

எலுமிச்சம்பழம் தன்னில் ஏற்றிவைக்கும் விளக்கினிலே
சுடராக நீ இருப்பாய், இடர்தீர்க்கும் காளியே!
சிவபெருமான் சீற்றத்தால், மணல்மாரி பொழிந்ததையும்,
சினம்கொண்ட உக்கிரத்தால் தினம்வந்த வெக்கையையும்

தாயாகி சாந்தமுடன் வந்திங்கு, தன்மீது தாங்கிக்கொண்டு
உறையூரைக் குளிர்வித்த உத்தம நல்காளியே!
மனதில் உள்ளவேண்டுதலை மனமொன்றி எழுதிவிட்டால்,
காகிதத்தில் உள்ளதைக் காரியத்தில் செயலாக்கும் காளியே!

உலகத்தை ஆள்கின்ற ஒரேசக்தி என்றும் நீயே!
உள்ளக்கபடமதை ஒழிப்பாயே உறையூரின் காளி நீயே!
ஆணவம் புறமுதுகிட்டோடிட ஆரவாரம் அடங்கிப்போக
பேரருளாய் வரம்தந்து பெயர் விளங்கவைக்கும் காளியே!

*சித.அருணாசலம்.*

# அம்பாள் துதி



அம்மா மதுரை மீனாக்ஷி
அருள்வாய் காஞ்சி காமாக்ஷி
அன்பாய் எனையே ஆதரித்து
அல்லல் களைந்தே காப்பாற்று

அன்னை தேவி பராசக்தி
என்னை படைத்தது உன்சக்தி
வாழ்வைத் தந்து வளம்தந்து
வாழ்க்கைக் கடலின் கரையேற்று

தில்லைச் சிதம்பரப் பத்தினியே
நெல்லையில் வாழ்ந்திடும் உத்தமியே
திருவடி மலரினைத் தொழுதிடுவேன்
திருவருள் புரிந்தெனைக் காப்பாற்று

ஓங்காரப் பொருளும் நீதானே
உலகம் என்பது நீதானே
காணும் இயற்கைக் காட்சிகளும்
காற்றும் மழையும் நீதானே

அம்மா தாயே உனைவேண்டி
அழுதிடும் என்னைத் தாலாட்டி
அன்புடன் ஞானப் பாலூட்டி
அகத்தின் இருளைப் போக்கிடுவாய்

உள்ளக் கோயில் உன்கோயில்
உயிரும் மூச்சும் உன்வடிவம்
பேச்சும் செயலும் உன்செயலே
பெருகட்டும் உன் பேரருளே.

*-லெ. சோமு. தேவகோட்டை*

# தையல் நாயகி துதி

தையல்நாயகி அம்மா தையல்நாயகி–என்றும்
தாயாக இருப்பவளே தையல்நாயகி

தையல்நாயகி அம்மா தையல்நாயகி-என்றும்
தாயாக இருப்பவளே தையல்நாயகி
ஊர் உலகம் காப்பவளே தையல்நாயகி
உன் பாதம் சரணடைந்தேன் தையல்நாயகி

குங்குமத்தில் ஒளிவீசும் தையல்நாயகி-முத்துக்
குமரனுக்கே தாயுமானாய் தையல்நாயகி
வைத்தியத்தின் சிகரமாம் தையல்நாயகி
வைத்தியனாதனுக்கே துணையுமானாய் தையல்நாயகி

தங்கமுத்து மண்டபத்தில் தையல்நாயகி- என்றும்
சிங்காரக் கொலுவிருக்கும் தையல்நாயகி
பொங்கிவரும் காவேரிபோல் தையல்நாயகி
தங்குதடை நீக்கிடுவாள் தையல்நாயகி

காட்டுவழி ஆனாலும் தையல்நாயகி
கனிவுடனே துணைவருவாள் தையல்நாயகி
கள்ளர்பயம் ஆனாலும் தையல்நாயகி
கலங்கவே விடமாட்டாள் தையல்நாயகி

மணமுடிக்கக் கேட்டுக் கொண்டால் தையல்நாயகி
மங்களமாய் முடித்து வைப்பாள் தையல்நாயகி
மழலைச் செல்வம் வேண்டுமென்றால் தையல்நாயகி
மகிழ்ச்சியுடன் தந்திடுவாள் தையல்நாயகி

மாடுமனை வீடுசுற்றும் தையல்நாயகி நீ
மனதுவைத்தால் வளரும் அம்மா தையல்நாயகி
காடுகரை தோப்புவயல் தையல்நாயகி
உன்கண்பட்டால் பொன்விளையும் தையல்நாயகி

அம்மா என்றே உனை அழைத்தால் தையல்நாயகி
ஆறுதலே பிறக்குதம்மா தையல்நாயகி
தாயே என்றுஉனை அழைத்தால் தையல்நாயகி
நோய் நொடிகள் நீங்குதம்மா தையல்நாயகி

பேறுபெறச் செய்தவளே தையல்நாயகி-எங்கள்
பிள்ளைகளைக் காக்கவேண்டும் தையல்நாயகி
தொல்லை எல்லாம் நீக்கவேண்டும் தையல்நாயகி-வாழ
நல்லவழி காட்டவேண்டும் தையல்நாயகி

கம்பூன்றி நடைநடந்து தையல்நாயகி-உன்னை
காணவே வருகின்றேன் தையல்நாயகி
தெம்புண்டு மனதினிலே தையல்நாயகி திவ்ய
தெரிசனமே தரவேண்டும் தையல்நாயகி

செய்யும் தொழில் சிறக்க வேண்டும் தையல்நாயகி
செல்வ வளம் பெருகவேண்டும் தையல்நாயகி
ஆறுநூறு ஆகவேண்டும் தையல்நாயகி-அதில்
ஆனந்தமே பொங்கவேண்டும் தையல்நாயகி

சங்கொலி முழங்கவேண்டும் தையல்நாயகி-என்
சந்ததியும் சிறக்கவேண்டும் தையல்நாயகி
மங்களமே பொங்கவேண்டும் தையல்நாயகி-என்றும்
மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் தையல்நாயகி

அம்மா என்றே உனை அழைத்துத் தையல்நாயகி
அடிபணிந்தேன் உந்தன்பிள்ளை தையல்நாயகி
என்னகுறை எனக்கினிமேல் தையல்நாயகி
எனக்குத்துணை நீஇருக்கத் தையல்நாயகி

## அங்கயற்கண்ணி பாமாலை

அங்கயற்கன்னி அம்மா மங்களச் செல்வி
அங்கயற்கன்னி அம்மா மங்களச் செல்வி

தங்கரதம் ஏறி வரும் மங்களச் செல்வி-தமிழ்
சங்கம் வைத்த மதுரையிலே அங்கயற்கண்ணி
எங்கிருந்து நினைத்தாலும் அங்கு வருவாய்-அம்மா
எப்பொழுதும் என் நாவில் பொங்கி எழுவாய்.

சோலையிலே ஆடிவரும் நீலமயிலே-எங்கும்
சொக்கத் தங்கம் பூசி வரும் மாலை வெயிலே
பாலையிலே ஓடிவரும் ஜீவநதியே-என்
பாடலிலே ஏறிவரும் ஞான ஒளியே.

பூவிருந்த இடம் கூட கமகமக்கும்-பசும்
பொன்னிருந்த இடம் கூட பளபளக்கும்
நீ இருக்கும் இடம் எனது மனம் இல்லையா-அது
மெருகேரும் வண்ணம் இங்கே தினம் சொல்லவா.

பார்வையிலே காப்பாற்று மீன்போலே - அதிக
பாரமம்மா நீ தாங்கு தூண்போலே
வேர்வையைத் துடைத்து விடுதாய் போலே -என்
வீட்டில் வந்து விளையாடு சேய் போலே.

# தயை புரிந்தே எனை வாழவைப்பாய்

உறவை மறந்தாலும் உணவை மறந்தாலும் உன்னை நான் மறப்பதில்லை.
கனவிலும் நீயே நினைவிலும் நீயே கருணை செய்வாயே ஞானாக்ஷி

உறவை மறந்தாலும் உணவை மறந்தாலும்
உன்னை நான் மறப்பதில்லை.
கனவிலும் நீயே நினைவிலும் நீயே
கருணை செய்வாயே ஞானாக்ஷி

என் உடல் உயிர்யாவும் உனதல்லவா
நான் உலகினில் வாழ்வதுன் செயலல்லவா
கண்ணில் வழிந்தோடும் நீர்துடைத்து எனைக்
காத்தருள் செய்வதுன் கடனல்லவா (உறவை)

வேதனையோ இன்னும் தீரவில்லை அம்மா
வேறொரு வழியும் தெரியவில்லை
ஆதரவோ டென்னை காத்தருள்வாய் அம்மா
அருள்புரிந்தே யெனை ஆதரிப்பாய் (உறவை)

பிஞ்சுமனம் எந்தன் பேதைமனம் உனைப்
பிரிய நினைக்காத வெள்ளைமனம்
தஞ்சமென்றே நான் உனை அடைந்தேன்
தயைபுரிந்தே எனை வாழவைப்பாய் (உறவை)

*தேவகோட்டை லெ.சோமு*

# குங்குமத்தை அணிந்திருக்கும் தாயே

குங்குமத்தை அணிந்திருக்கும் தாயே
எங்கள் குறை களையும் நீக்க வருவாயே

மஞ்சளையும் கொண்டிருக்கும் தாயே
இங்கு மங்களமாய் வந்திடுவாய் நீயே

கை ஏந்தி வணங்குகிறோம் தாயே
எங்கள் கவலை எல்லாம் போக்கிடுவாய் நீயே

மனமுருகிப் பாடுகிறோம் தாயே - இங்கு
மனமிளகி வந்திடுவாய் நீயே

பாடித் தேடி ஓடி வந்தோம் தாயே - உன்
திருவருளைக் காட்டிடுவாய் நீயே

# காஞ்சி காமாட்சி

காஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி
காசி விசாலாட்சி
கருணாம்பிகையே தருணம் இதுவே
தயை புரிவாய் அம்மா

காஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி
காசி விசாலாட்சி
கருணாம்பிகையே தருணம் இதுவே
தயை புரிவாய் அம்மா

உன் அருள் என்றும் நிலை பெற வேண்டும்
நீ வருவாயம்மா
பொன் பொருள் யாவும் வளம் பெற வேண்டும்
வாழ்த்திடுவாய் அம்மா

ஏன் என்று கேட்டு என் பசி தீர்க்கும்
அன்னை நீ யம்மா
நின் முகம் கண்டேன் என் முகம் மலராய்
மலர்ந்தது தானம்மா

மங்களம் வழங்கிடும் மகிமையைக் கண்டேன்
உன் திருக் கரத் தினிலே
எங்கும் வருவாய் என்னுயிர் நீயே
எங்கள் குலதேவி

பயிர்களில் உள்ள பசுமையைக் கண்டேன்
பரமேஸ்வரி நீயே
உயிர்களில் உள்ள உன்னருள் உண்மை
உலக மகா சக்தி

சரண் உன்னை அடைந்தேன் சங்கரித் தாயே
சக்தி தேவி நீயே
அரண் எனக் காப்பாய் அருகினில் வருவாய்
அகிலாண்டேஸ்வரியே

# முத்துமாரி

அம்மா முத்துமாரி - எங்கள்
அழகு முத்துமாரி
ஆனந்தமாய் வீற்றிருப்பாள்
அன்னை முத்துமாரி

எங்கும் நிறைந்திருப்பாள்
எங்கள் முத்துமாரி
ஏழ்மையைப் போக்கிடுவாள்
அன்னை முத்துமாரி

இன்பத்தைத் தந்திடுவாள்
எங்கள் முத்துமாரி
ஈகையுள்ள தாயவளாம்
அன்னை முத்துமாரி

வேப்பிலைக் காரியவள்
எங்கள் முத்துமாரி
வேண்டும் வரம் தந்திடுவாள்
அன்னை முத்துமாரி

மஞ்சள் முகத்தழகி
எங்கள் முத்துமாரி
மங்காத ஜோதியவள்
அன்னை முத்துமாரி

சமயபுரம் இருப்பவளாம்
எங்கள் முத்துமாரி
குணம் நிறைந்த தாயவளாம்
அன்னை முத்துமாரி

## அம்பிகை அழகு தரிசனம் - திருக்கடவூர்

தேவியே அபிராமி திருவருள் புரிவாய் சிவகாமி
தேவியே அபிராமி திருவருள் புரிவாய் சிவகாமி

கமுகு பலாவும் வாழையும் நெல்லும்
கழனிகளாகும் கடையூரில்
அமிர்தகடேசர் அருகினில் நின்று
அழகு கொழிக்க அருள்மேவும்
உமையவள் தேவி ஒளிவிடும் கண்ணி
உதிரநிறத்து மகராணி
இளமையொரு பாதி கருணை
வணங்கும் இளகிய சக்தி அபிராமி!

வணிக குலத்துக் கோவலன் வந்து
வணங்கி விழுந்ததும் அவன் கோவில்
தணிகை குலத்து மாதவி அன்னம்
கலைகள் பயின்றதும் அவன் கோவில்

தணிகையில் வாழும் குமரனைப் பெற்ற
தாயென வந்த மகராணி
அணி அணி யாக அழகு சொலிக்கும்
அற்புத சக்தி அபிராமி!

தமிழை எடுத்துக் கவிதை தொடுத்து
தலையடி யாகப் பந்தாடி
அமுத மழைத்தேன் பட்டர் கொடுத்தார்
அவளது பேரில் அந்தாதி
குமுத முகத்து கோமள வல்லி
குறுநகை சிந்தும் மகராணி
மமதை யறுத்து மனிதனைக்
காக்கும் மந்திர சக்தி அபிராமி!

காதல் கசிந்து பக்தி மிகுத்துக்
காவிரி பாயும் நகரத்தார்
கோதி எடுத்து கோவில் படைத்து
கோடி நலத்தை அதில்வைத்தார்
நாத மொழித்தேன் நாயகியாக
ஞாயிறு பழிக்கும் மகராணி
வேத முரைக்கும் சக்தி யெல்லாம்
மிக்கவள் சக்தி அபிராமி!

குங்கும நதியில் மூழ்கி எழுந்த
கோவை நிறத்து பொன்மேனி
சங்கமமாகும் மங்கையர்க் கெல்லாம்
தத்துவம் சொல்லும் விஞ்ஞானி
கொங்கை முகத்தில் அமிர்த கடேசன்
கொஞ்சிடும் காதல் மகராணி
செங்கதிர் காட்டும் வண்ணமுகத்துச்
சித்திர சக்தி அபிராமி!

பொன்னி வறண்டு போயினும் கூடப்
பூமியின் கீழே நீரோடும்
மன்னிய சோழ மண்டலமெங்கும்
மங்கையின் கருணை வேரோடும்
பொன்னிற மார்பும் பூவென முகமும்
பூத்தவள் கடையூர் மகராணி
கன்னியின் அழகு மறையா திருக்கும்
கண்கவர் சக்தி அபிராமி!

ஆத்தாள்என்னும் செட்டிகள்சொல்லும்
அவளை சொல்லும் ஒரு சொல்லே
காத்தாள் இந்த காசினி எல்லாம்
காவல் விளைத்து செந்நெல்லே
பூத்தாள் அன்பிற் பொலிந்தாள்
இன்பப் போதையில் நிற்கும் மகராணி
பார்த்தால் போதும் பரவச மாகும்
பாரத சக்தி அபிராமி!

எப்படி நோக்கும் நோக்கிலும் அன்னாள்
என்றும் இளமை பதினாறு
சொற்படி தானே உலகை இறைவன்
சுமந்து நிற்பது வரலாறு
உப்பொடு சர்க்கரை எது வைத்தாலும்
ஒன்றாய் காட்டும் மகராணி
முப்பழமாக மார்புன் முகமும்
மூண்டவள் சக்தி அபிராமி!

வல்லிக் கொடியும் வாயிற் கனியும்
வண்ணக் கலவை விழியோடும்
கல்லைக் கனியாய் கனியச் செய்யும்
காதல் பெருகி நதியோடும்
அல்லித் தண்டு கால்க ளெடுத்து
அருள்தர ஓடும் மகராணி
சொல்லி சொல்லித் துதிப்பார்க் கெல்லாம்
சொர்க்கச் சக்தி அபிராமி!

கண்ணகி என்னும் தெய்வம் வந்து
காலடிதொட்ட ஒரு தெய்வம்
விண்ணவ ரெல்லாம் தேடி யடைந்து
வீடு நிரப்பும் ஓர் செல்வம்
எண்ணி உறங்கிக் காலை விழித்தால்
இன்பம் தருவாள் மகராணி
திண்ணம் அவளைக் கண்டால்
வெற்றி திடமுள் சக்தி அபிராமி!

*கவியரசு கண்ணதாசன்.*

வேலும் மயிலும் துணை

# கருமாரி அம்மன் பாடல்.

கற்பூர நாயகியே ! கனகவல்லி,
காளி மகமாயி கருமாரியம்மா,
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா,
பூவிருந்த வல்லி தெய்வானையம்மா,
விற்கோல வேதவல்லி விசாலாட்சி,
விழிகோல மாமதுரை மீனாட்சி,
சொற்கோவில் நானமைத்தேன் இங்கு தாயே,
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி,
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி,
நவ நவமாய் வடிவாகும் மஹேஸ்வரி,
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி,
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி,
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி,
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி,
உன்னடிமைச் சிறியேனை நீ ஆதரி

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே ! எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற,
அன்னியரை கெஞ்சிடுதல் முறையோ அம்மா,
கண்ணீரை துடைத்து விட ஓடிவாம்மா,
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா,
சின்னவளின் குரல் கேட்டு முகம் திருப்பு,
சிரித்தபடி என்னை தினம் வழியனுப்பு

கண்ணிரண்டும் உன்னுருவே காண வேண்டும்,
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்,
பண்ணமைக்கும் நா உன்னயே பாட வேண்டும்,
பக்தியோடு கை உனையே கூட வேண்டும்,
எண்ணமெல்லாம் உன் நினைவே ஆக வேண்டும்,
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்,
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா,
மக்களுடைய குறைகளையும் தீருமம்மா

நெற்றியிலே குங்குமமே நிறைய வேண்டும்,
நெஞ்சில் உன் திருநாமம் வழிய வேண்டும்,
கற்றதெல்லாம் மேன் மேலும் பெருக வேண்டும்,

கவிதையிலே உன் நாமம் வாழ வேண்டும்,
சுற்றமெல்லாம் நீடுழி வாழ வேண்டும்,
ஜோதியிலே நீயிருந்து ஆள வேண்டும்,
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லாமா?
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா?

அன்னைக்கு உபகாரம் செய்வதுண்டோ?
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமையின்றி காவலுண்டோ?
கன்றுக்கு பசுவின்றி சொந்தமுண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணைக்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நான் உந்தன் பிள்ளையன்றோ?

அன்புக்கே நானடிமை ஆக வேண்டும்,
அறிவுக்கே என் காது கேட்க வேண்டும்,
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்,
வஞ்சத்தை என் நெஞ்சம் அறுக்க வேண்டும்,
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்,
பரிவுக்கே நானென்றும் பணிய வேண்டும்,
என் பக்கம் இவையெல்லாம் இருக்க வேண்டும்,
என்னோடு நீயென்றும் வாழ வேண்டும்

கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை,
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை,
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை,
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை,
செம்பவள வாயழகி உன்யெழிலோ!
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை,
அம்பளவு விழியாளே உன்னை என்றும்!
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை

காற்றாகி கனலாகி கடலாகினாய்,
கருவாகி உயிராகி உடலாகினாய்,
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்,
நிலமாகி பயிராகி உணவாகினாய்,
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்,
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்,
போற்றாத நாளில்லை தாயே உன்னை,
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை.

# நவரத்தின மாலை

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

ஆக்கும் தொழில் ஐங்கரன் ஆற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ்வரி பால்
சேர்க்கும் நவரத்தினமாலையினைக்
காக்கும் கணநாயக வாரணமே

## 1. வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்
கண் மூடி நெடும் கனவான தவம்
பெற்றும் தெளியார் நிலை என்னில் அவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படை வாள் வயிரப்
பகைவர்க்கு எமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## 2. நீலம்

மூலக்கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
நினைவற்று எளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக்குமரி வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## 3. முத்து

முத்தேவரும் முத்தொழில் ஆற்றிடவே
முன்னின்று அருளும் முதல்வி சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாசினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய் நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறுத்திக் கிணைவாழ் வடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## 4. பவளம்

அந்தி மயங்கிய வான விதானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிரம்பவளம் பொழி பாரோர்
தேன் பொழிலாம் இது செய்தவள் யாரோ
எந்தை இடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவர்க்கு அருள் எண்ணம் மிகுந்தாள்
மந்திர வேத மயப் பொருள் ஆனாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## 5. மாணிக்கம்

காணக் கிடையாக் கதியானவளே
கருதக் கிடையாக் கலையானவளே
பூணக் கிடையாப் பொலிவானவளே
புனையக் கிடையாப் புதுமைத்தவளே
நாணித் திருநாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## 6.மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதிலயமே இசையே சரணம்
ஹர ஹர சிவ என்றடியவர் குழும
அவரருள் பெற அருளமுதே சரணம்
வர நவநிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## 7.கோமேதகம்

பூ மேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீ மேல் இடினும் ஜெய சக்தி என
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர் வான் நிலவே
குழல்வாய்மொழியே வருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே



வேலும் மயிலும் துணை

## 8.பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராக விகாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி
சாம்பவி சந்த்ரகலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத சொரூபினி நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு சிருங்க நிவாசினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## 9.வைடூரியம்

வலை ஒத்த வினை கலை ஒத்த மனம்
மருளப் பறை ஆர் ஒலி ஒத்த விதால்
நிலையற்று எளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற்று அசைவற்று அநுபூதி பெறும்
அடியார் முடி வாழ் வைடூரியமே
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## நூற்பயன்

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தினமாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எல்லாம் அடைவார்
சிவரத்தினமாய் திகழ்வார் அவரே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

# அன்னை அன்னை அன்னையே

சக்தி சக்தி சக்தி எனில் சஞ்சலங்கள் நீங்குமாம்
சக்தி சக்தி சக்தி எனில் நெஞ்சில் இன்பம் பொங்குமாம்

காணுகின்ற இடமெலாம் கலந்துநிற்கும் தேவியே!
கருதுகின்ற வேளைவந்து கைகொடுக்கும் சக்தியே!
பேணும் உன்னை அன்றியாரை நாடுவேன் உன் பிள்ளையே?
பேதை என்னை இந்தவேளை ஆதரிப்பாய் அன்னையே!

அந்திசந்தி கவிதைபாடி அர்ச்சனைகள் செய்கிறேன்!
ஆலயங்கள் தோறும் உன்னை அடிபணிந்து நிற்கிறேன்!
எந்தநாளும் உன்னை நான் மறந்ததில்லை இல்லையே!
எனது நோய் அனைத்தும்போக்க மனதுவைப்பாய்
அன்னையே!

மஞ்சளோடு குங்குமம் மலர்ந்தபுஷ்பம் சந்தனம்
வசதியுள்ள மட்டில்நான் வழங்கிடும் நிவேதனம்
நெஞ்சுகந்து கொள்ளுவாய்! நிகழ்ந்தகுற்றம் தள்ளுவாய்!
நின்னையே சரண்புகுந்தேன் என்னையாளும் அன்னையே!

சக்திசக்தி சக்தி எனில் சஞ்சலங்கள் நீங்குமாம்!
சக்திசக்தி சக்தி எனில் நெஞ்சில் இன்பம் பொங்குமாம்!
சக்திசக்தி சக்தி என்றே பக்திசெய்தேன் உன்னையே!
தாங்க வேண்டும் என்னையே; என் தங்கமான அன்னையே!

இல்லைஇல்லை என்ற சொல்லை இல்லையாக ஆக்குவாய்!
ஈன்றமக்கள் கணவர்சுற்றம் மேன்மைகொள்ள நோக்குவாய்!
அல்லல் இன்றி உன்னைநான் அகம் குழைந்து சொல்லவே
அமைதி இன்பம் தேக்குவாய் என் அன்னை அன்னை
அன்னையே!

*அருட்கவி கு.செ.இராமசாமி,எம்.ஏ.,*

# சக்தி என்றால் இன்பம்

சக்தி சக்தி சக்தி எனில் சஞ்சலங்கள் நீங்குமாம்
சக்தி சக்தி சக்தி எனில் நெஞ்சில் இன்பம் பொங்குமாம்

குங்குமத்தில் நீ குளித்து குவலயத்தை ஆள்கிறாய்
சந்தனத்தில் அலங்கரித்தால் சாந்தமுடன் பார்க்கிறாய்
பாலும் தேனும் கொண்டுவந்து தினம் தினமும் தருகிறோம்
பாசத்துடன் அரவணைத்து பாடவைப்பாய் அன்னையே!

மலர்கள் தூவி உன்னைப் போற்றி மனமுருகி வேண்டினோம்
மண்ணில் புற்று உள்ள இடம் தேடிப்பாலை ஊற்றினோம்
கண்களிலே நீர் வழிய கால மெல்லாம் பாடினோம்
கருணை கொஞ்சம் காட்டி நீயும் கை கொடுப்பாய்
அன்னையே!

தேடிவரும் ஆடியிலே கூழும் வைத்துப் படைக்கிறோம்
ஆடிவரும் தேரிழுத்து திருவிழாவை முடிக்கிறோம்
ஓடிவந்து உன்னிடத்தில் குறைகள் எல்லாம் சொல்கிறோம்
நாடிவரும் எங்களையும் காத்தருள்வாய் அன்னையே!

பால் குடங்கள் எடுத்து வந்துன் பாதங்களில் சேர்க்கிறோம்
சுடும் நெருப்பில் நடந்துவந்து உன்னை நாங்கள்
பார்க்கிறோம்!
பன்னீரும் இளநீரும் குடம் குடமாய் தருகிறோம்
பாசத்துடன் அரவணைத்து வாழவைப்பாய் அன்னையே!

எலுமிச்சம் பழம் கோர்த்து மாலை உனக்கு தருகிறோம்
பாதிப் பழம் திருப்பி நாங்கள் நெய் விளக்கும் வைக்கிறோம்
வேப்பிலையும் கட்டிவைத்து விருப்பமுடன் அழைக்கிறோம்
வேறு கதி இல்லை இல்லை ஆதரிப்பாய் அன்னையே!

சூலத்தையே கைப்பிடித்து பகை அழிக்க ஓடிவா
உடுக்கையிலே ஒலி எழுப்பி உலகை ஆள ஆடிவா
எந்த திசை நோக்கினாலும் நீ இருப்பதுண்மையே
காளை எந்தன் பாடல் கேட்டு அருள்புரிவாய் அன்னையே!

*கோட்டையூர் காளை நாராயணன்*

# மாரியம்மன் துதி

மாரியாத்தா தாயே மாரியாத்தா–நல்ல
மங்களங்கள் தருபவளே மாரியாத்தா

மாரியாத்தா தாயே மாரியாத்தா-நல்ல
மங்களங்கள் தருபவளே மாரியாத்தா
சக்திமிகக் கொண்டவளே மாரியாத்தா-எங்க
சமயபுரத்தவளே மாரியத்தா

சாதிமத பேதமில்லை மாரியாத்தா -உன்
சன்னதியில் ஓர்குலமே மாரியாத்தா
மாவிளக்கு ஏற்றிவைக்க மாரியாத்தா-இந்த
மக்களையே காத்துநிற்கும் மாரியாத்தா

தீச்சட்டி கையில்ஏந்தி மாரியாத்தா-நாங்க
தீமிதித்து உனைக்காண்போம் மாரியாத்தா
அலகு குத்தித் தேர்இழுத்து மாரியாத்தா-நாங்க
ஆனைந்தமே கொண்டிடுவோம் மாரியாத்தா

மஞ்சலிலே நீராடி மாரியாத்தா-இந்த
மக்கள்நலம் காப்பவளே மாரியாத்தா
வேப்பிலையில் சுகம்தந்து மாரியாத்தா-மன
வேதனைகள் தீர்த்துவைக்கும் மாரியாத்தா

தஞ்சாவூர் தனிலமர்ந்த மாரியாத்தா-எங்க
இன்னலெல்லாம் தீர்த்துவைக்கும் மாரியாத்தா
கொன்னையூரில் பூச்சாட்டு மாரியாத்தா-எங்க
குலமெல்லாம் காத்தருளும் மாரியாத்தா

வேலும் மயிலும் துணை

கோட்டையிலே குடியிருக்கும் மாரியாத்தா-தாயே
கோடிநலந் தந்தருளும் மாரியாத்தா(செவ்வாய்)
பேட்டையிலே குடிஇருக்கும் மாரியாத்தா-நாங்க
கேட்டவரம் தந்தருளும் மாரியாத்தா

ராயவரம் புகழ்முத்து மாரியாத்தா-மன
மாயைஎல்லாம் போக்கிவைக்கும் மாரியாத்தா
சந்தனத்தால் கூப்பிடுவோம் மாரியாத்தா-எங்க
சந்ததிகள் வளரவேணும் மாரியாத்தா

வேற்காட்டில் கோயில்கொண்ட மாரியாத்தா-நாங்க
வேண்டும்வரம் தந்தருளும் மாரியாத்தா
பாட்டினிலே மனங்குளிர்ந்து மாரியாத்தா-இந்த
பக்தர்களைக் காக்கவேனும் மாரியாத்தா

பன்னாரி அம்மனான மாரியாத்தா-எம
பயமனைத்தும் போக்கி வைக்கும் மாரியாத்தா
பக்தியுடன் உனைப்பணிந்தே மாரியாத்தா-நாங்க
பாடிடுவோம் காத்திடுவாய் மாரியாத்தா

வளமுடனே நலஞ்சேர்க்கும் எங்கள் ஆத்தாள்-புகழ்
வயல்நாச்சி அம்மனான மாரியாத்தா
மது எடுத்துப் புகழ்சொல்வோம் மாரியாத்தா-உந்தன்
மக்கள்எம்மைக் காக்கவேணும் மாரியாத்தா

*அருளிசைமனி அரு.சுப்பிரமணியன் நேமத்தான்பட்டி*

## வடிவுடையம்மா

வருக வருக வருக வருக வடிவுடையம்மா–வரம்
தருக தருக தருக தருக வடிவுடையம்மா–அம்மா வடிவுடையம்மா

வருக வருக வருக வருக வடிவுடையம்மா-வரம்
தருக தருக தருக தருக வடிவுடையம்மா-அம்மா
வடிவுடையம்மா

ஈஸ்வரன் இதயத்தில் நீ எழில் ஓவியமே!
அழகைச் சொட்டும் அருளைச் சொட்டும் அருளோவியமே
மாலையின் கண் மயக்குகின்ற மணக்கும் ரோஜா நீ!
மகிழ்ச்சி பொங்க அனைவரையும் வாழவைப்பாய் நீ

சொத்து சுகம் தருபவளே சொர்ணாம்பிகே!
சொக்க நாதன் தனைக் கவர்ந்த மீனாம்பிகே
சோலை தனில் தவழ்ந்து வரும் இளந்தென்றல் நீ!
சோராது சொந்தம் எம்மைக் காப்பாயே நீ

ஐமுகனாம் முக்கண்ணன் ஈசனிடம் நீ!
அடங்கி விட்ட அழகு என்ன அர்த்த நாரியே
ஐங்கரனை அறுமுகனை அழைத்தால் நல்ல!
ஆயிரமாம் கோடிமக்கள் எம்மையும் பாரு

ஊனம் ஊமை குருடு செவிடு எல்லா நோயுமே!
உந்தன் நாமம் உரைப்பதனால் ஓடிப் போகுமே
அன்னை சக்தி உலகத்தை நீ காத்து நிற்கிறாய்!
அல்லும் பகலும் உன்னை எண்ணி பாட வைக்கிறாய்

தடையின்றி வரம் தருவாய் தயைபுரிந்தோர்க்கு!
கவிபாடி நிற்கின்றேன் காட்சி அருளுவாய்
ஓங்கார சக்தியே உன் ஓர விழியிலே!
ஒருமுறை நீ நோக்க நானும் சரண்புகுந்தேனே (வருக வருக)

## கனகதாரா ஸ்தோத்திரம்.

நல்லதே நடக்க வேண்டும் நல்லதே நடக்க வேண்டும்
அல்லவை எல்லாம் நீங்கி நல்லதே நடக்க வேண்டும்

மாலவன் மார்பில் நிற்கும் மங்கலக் கமலச் செல்வி
மரகத மலரில் மொய்க்கும் மாணிக்கச் சுரும்பு போன்றாய்
நீலமா மேகம்போல நிற்கின்ற திருமால் உந்தன்
நேயத்தால் மெய்சிலிர்த்து நிகரிலாச் செல்வம் கொண்டான்

மாலவன் மீது வைத்த மாயப்பொன் விழியிரண்டை
மாதுநீ என்னிடத்தில் வைத்தனை என்றால்- நானும்
காலமா கடலில் உந்தன் கருணையால் செல்வம் பெற்று
கண்ணிறை வாழ்வு கொள்வேன் கண்வைப்பாய்
கமலத்தாயே

நீலமா மலரைப் பார்த்து நிலையிலா(து) அலையும் வண்டு
நிற்பதும் பறப்ப தும்போய் நின்விழி மயக்கம் கொண்டு
கோலமார் நெடுமால் வண்ணக் குளிர்முகம் தன்னைக்
கண்டு, கொஞ்சிடும், பிறகு நாணும் கோதையார் குணத்தில்
நின்று

ஏலமார் குழலி அந்த இருவிழி சிறிது நேரம்
என்வசம் திரும்பு மாயின் ஏங்கிய காலம் சென்று
ஆலமா மரங்கள் போல அழிவிலாச் செல்வம் கொண்டு
அடியவன் வாழ்வு காண்பேன் அருள்செய்வாய் கமலத்தாயே

நற்குடி பிறந்த பெண்கள் நாயகன் தனைப் பார்த்தாலும்
நாணத்தால் முகம்புதைத்து நாலிலோர் பாகம் பார்ப்பார்!
பற்பல நினைத்தபோதும் பாதிக்கண் திறந்துமூடி
பரம்பரைப் பெருமை காப்பார் ! பாற்கடல் அமுதே நீயும்

அற்புத விழிகளாலே அச்சுத முகுந்தன் மேனி
அப்படிக் காண்பதுண்டு ஆனந்தம் கொள்வதுண்டு !
இப்பொழு(து) அந்தக் கண்ணை என்னிடம் திருப்பு தாயே !
இருமையும் செழித்து வாழ இகத்தினில் அருள்வாய் நீயே !

மதுஎனும் பெயரில் வாழ்ந்த மனமிலா அரக்கன் தன்னை
மாபெரும் போரில் வென்ற மாலவன் மார்பி லாடும்
அதிசய நீலமாலை அன்னநின் விழிகள் கண்டு
அண்ணலும் காலந்தோறும் ஆனந்தம் கொள்வதுண்டு !

பதுமநேர் முகத்தினாளே! பதுமத்தில் உறையும் செல்வி!
பாற்கடல்மயக்கும் கண்ணை பதியின்மேல்
பாய்ந்த கண்ணை பேர்த்தெடுத்தென்மேல் வைத்தால்
பிழைப்பன்யான் அருள்செய்வாயே,
பேரருள் ஒருங்கேகொண்ட பிழையிலாக் கமலத்தாயே !

கைடப அரக்கன் தன்னை கடிந்தநின் கணவன் மார்பு
கார்முகில் என்னத்தோன்றி கருணைநீர் பொழியுங் காலை
மைதவழ் மார்பில் வீசும் மயக்குறும் மின்னல் ஒன்று!
மயங்குவான் திருமால் பின்னர் மகிழ்வநின் விழிதானென்று!

செய்தவப் பிருகு வம்சச் சேயெனப் பிறந்து எங்கள்
திருவென வளர்ந்தநங்காய்
தினமும்யாம் வணங்கும் கண்ணாய்!
கொய்தெடு விழியைஎன்மேல்கொண்டுவந் தருள்செய்வாயே
கொற்றவர் பணிகள் செய்யும் கோலமார் கமலத் தாயே !

போரினில் அரக்கர்கூட்டம் புறங்கண்ட நெடியோன் தன்னை
போரின்றிக் குருதி யின்றிப் புறங்காணத் துடித்து வந்த
மாரனை ஊக்குவித்த வாளெது கமல நங்காய் ?
மங்கையின் விழிகளன்றோ ! மாலவன் தன்னை வென்ற

தேரிய மாரன் உன்னைத் தேரெனக் கொண்டதாலே
திருமலை வேங்க டேசன் திறத்தினை வென்றான் அன்றோ!
கூரிய விழியாய் உன்றன் குறுவிழி தன்னை என்பால்
கொண்டுவந் தால்யான் உய்வேன் கொடுத்தருள்
கமலத் தாயே !

மந்திரம் உரைத்தால் போதும் மலரடி தொழுதால் போதும்
மாந்தருக்(கு) அருள்வேன் என்று மலர்மகள் நினைத்தால்
போதும்
இந்திர பதவி கூடும்; இகத்திலும் பரங்கொண் டாடும்;
இணையறு செல்வம் கோடி இல்லத்தின் நடுவில் சேரும்

சந்திரவதனி கண்கள் சாடையிற் பார்த்தாற் போதும்
தாய்விழிப் பட்ட கல்லும் தரணியில் தங்கமாகும் !
எந்தவோர் பதவி வேண்டேன்! எளியனுக்(கசு)
அருள் செய்வாயே!

இகத்தினில் செல்வம் தந்து இயக்குவாய் கமலத் தாயே!
எத்தனை பேர்க்குக் கிட்டும் இறையருள் ஆன்மசாந்தி ?
இகமெனும் கடலில் வீழ்ந்து எவர்பிழைத் தார்கள் நீந்தி ?
தத்துவப் படியே யாவும் தலைமுறை வழியே கிட்டும் !
தவமெனும் முயற்சியாலே பவவினை தணிந்து போகும் !

அத்தனை முயற்சி என்ன அன்னல்மா தேவி கண்ணில்
அருள்மழை வந்தாற் போதும் அகம்புறம் முக்தி யாகும் !
இத்தனை சொன்ன பின்னும் இன்னுமா தயக்கம் தாயே !
இல்லத்தைச் செல்வ மாக்கி இன்னருள் புரிவாய் தாயே !

நீருண்ட மேகக்கண்கள் நிழலுண்ட கரிய கூந்தல்
நேர்கொண்ட மாந்தர்வீட்டில்
நிலைகொண்ட செல்வப் பந்தல்!
சீர்கொண்ட அமுதச்செல்வி சில்லென்ற காற்றுப் பாய்ந்தால்
சேர்கின்ற மேகத் தண்ணீர் சிதறுண்டு பாய்வதைப் போல்

வேர்கொண்ட பாவமேனும் வினைகொண்ட பாவமேனும்
வேய்கொண்ட தோளினாய் உன் விழிகண்டால்
தீர்ந்து போகும்!
தேர்கொண்டேன் புரவி இல்லை; செல்வமாம் புரவியாலே
திருவருள் செய்வாய் நீயே தேப்பெரும் கமலத்தாயே !

ஆக்கலும் அழித்தல் காத்தல் அருள்நிறை இறைவன் சக்தி!
அன்னவன் தோளில் நீயே அனைத்துமாய் விளங்கும் சக்தி !
ஆக்கலில் வாணியாவாய்; அளித்தலில் திருவாய் நிற்பாய்!
அழிக்கின்ற வேளை வந்தால் அந்தமில் துர்க்கை யாவாய்!

தீக்கொண்ட கரத்து நாதன் திருப்பரா சக்தி யாக
திரிபுரம் ஏழுலோகம் திருவருள் புரிந்து நிற்பாய்!
வாக்குயர் கமலச் செல்வி வாடைநீ, தென்றல் நீயே !
வளமென இரப்போர்க்கெல்லாம் வந்தருள் புரிகின்றாயே!

வேதத்தின் விளைவே போற்றி !
வினைப்பயன் விளைப்பாய் போற்றி !
சீதத்தா மரையே போற்றி ! செம்மைசேர் அழகே போற்றி !
கோதைப்பண் புடையாய் போற்றி !
குளிர்ந்தமா மழையே போற்றி !

ஓர்தத்துவத்தில் நிற்கும் உமையவள் வடிவே போற்றி !
பாதத்தைக் கமலம் தாங்கப் பல்லுயிர் காப்பாய் போற்றி !
நாதத்து நெடியோன் கொண்ட நங்கை நீ போற்றி ! போற்றி !
பாதத்தில் சிரசை வைத்துப் பணிகின்றேன் போற்றி ! போற்றி

மாதத்தில் ஒருநாள் கூட மறந்திடாய் போற்றி ! போற்றி !
அன்றலர் கமலம் போன்ற அழகிய வதனி போற்றி !
அலைகடல் அமுதமாக அவதரித் தெழுந்தாய் போற்றி !
குன்றிடா அமுதத் தோடு கூடவே பிறந்தாய் போற்றி !
குளிர்ந்தமா மதியி னோடும் குடி வந்த உறவே போற்றி !

மன்றத்து வேங்கடேசன் மனங்கவர் மலரே போற்றி !
மாயவன் மார்பில் நின்று மயிலெனச் சிரிப்பாய் போற்றி !
என்றைக்கும் நீங்காதாக இருக்கின்ற திருவே போற்றி !
எளியவன் வணங்குகின்றேன் இன்னருள் போற்றி ! போற்றி !

தாமரை மலரில் நிற்கும் தளிரன்ன திருவே போற்றி !
தாமரை வதனங் கொண்ட தங்கமா மணியே போற்றி !
தாமரை கரத்தில் ஏந்தித் தவமென நிற்பாய் போற்றி !
தாமரைக் கண்ணன் காக்கும் தரணியைக் காப்பாய் போற்றி

தாமரை போலே வந்த தவமுனி தேவர்க்கெல்லாம்
தாமரைக் கைகள் காட்டி தயைசெயும் திருவே போற்றி !
தாமரைக் கண்ணால் செல்வம் தந்தருள் புரிவாய் போற்றி !
தாள், மறை, நானோ வார்த்தை; தர்மமே போற்றி ! போற்றி !

பெண்ணெனப் பிறந்தாயேனும்
பெரும்திறன் கொண்டாய் போற்றி!
பிருகுவம் சத்தில் வந்த பீடுடை வதனம் போற்றி!
தண்ணளி வேங்க டத்தான் தழுவிடும் கிளியே போற்றி!
தத்துநீர்க் குளத்தில் ஆடும் தருணியே லக்ஷ்மீ போற்றி!

சித்திரக் கொடியே போற்றி! செம்மணி நகையே போற்றி!
ஸ்ரீதரன் திருப்பா தங்கள் சேவைசெய் குயிலே போற்றி!
பத்தினிப்பெண்டிர்தம்மைப்பார்வையில்வைப்பாய் போற்றி!
பக்தருக்(கு) அருள்வாய் போற்றி! பணிந்தனம் போற்றி!

கண்களைப் பறிக்கும் காட்சி கவிந்தநின் வடிவம் போற்றி!
கமலப்பூ வதனம் போற்றி! கமலமா விழிகள் போற்றி!
மண்ணிலும் விண்ணு ளோர்க்கும்
மங்கலம் நிறைப்பாய் போற்றி!
மண்டல இயக்கத் திற்கே மந்திர(ம்) ஆனாய் போற்றி!

விண்ணவர் வணங்கும் தேவி விந்தையின் மூலம் போற்றி!
விரிமலர் கண்ணன் தேவன் விரும்பிடும் நகையே போற்றி!
எண்ணிய படியே உன்னை ஏத்தினேன் போற்றி! போற்றி!
இசைபட வாழ வைப்பாய் இலக்குமி போற்றி! போற்றி!

மைவழிக் குவளைக் கண்ணாய் வரையிலாத் திருவே போற்றி
வானவர் மண்ணோர்க் கெல்லாம்
வணக்கமாய் நின்றாய் போற்றி
மெய்வழி செவிவாய் நாசி விழைந்திடும் இன்பம் போற்றி !
விரித்தமேற் புலனுக் கெல்லாம்
விளங்காத பொருளே போற்றி !

கைநிறை செல்வம் யாவும்
கடைக்கணால் அருள்வாய் போற்றி !
காக்கையை அரச னாக்கும் கைமலர் உடையாய் போற்றி !
செய்ததீ வினையை எல்லாம் தீர்க்கின்ற நெருப்பே போற்றி !
சிறுமையைப் பெருமை யாக்கும் திருப்பதம் போற்றி !

மோகனன் துணையே போற்றி ! முழுநிலா வடிவே போற்றி !
மூவுல கங்கள் தேடும் முதற்பெரும் பொருளே போற்றி !
தேகத்தே ஒளியை வைத்த செம்மணிக் குன்றே போற்றி !
தீராத ஆசைக் குள்ளே திருவென நிற்பாய் போற்றி !

ஓர்கணம் தொழுதாற் கூட ஓடிவந் தளிப்பாய் போற்றி !
ஊர்ந்தமா மேக வண்ணன் உவப்புறச் சிரிப்பாய் போற்றி !
தாள்களில் பணிந்தே னம்மா தண்ணருள் தருவாய் போற்றி !
தலைமுதல் பாதம் மட்டும் தாழ்கின்றேன் போற்றி ! போற்றி !

கண்பட்டால் மனது பாடும் கார்குழல் அலையே போற்றி!
காதள வோடும் கண்ணால் காசினி அளந்தாய் போற்றி!
வெண்பட்டால் அழகை மூடும் வியத்தகும் சிலையே போற்றி!
வெண்மல்லி கைப்பூ மாலை விளையாடும் தோழி போற்றி!

பண்பட்டார் இல்லா தார்தம் பக்குவம் அறிவாய் போற்றி!
பணிப்பவர் இதயத் துள்ளே பாசுரம் படிப்பாய் போற்றி!
விண்முட்டும் ஞானம் பெற்ற வேதநா யகியே போற்றி!
வேயிரு தோளின் சக்தி விரித்தருள் போற்றி! போற்றி!

மண்டலத் திசைகள் தோறும் மதகரி குடங்கள் ஏந்தி
மங்கைக்கு நன்னீராட்ட கங்கைநீர் குடத்தில் மாந்தி
தண்டலக் கூந்தல் ஊற சர்வமங் களநீ ராட்டி
தாமரைப் பூவின் மேலோர் தாமரைப் பூவைச் சூட்டி

மண்டிய தூய்மைத் தாய்க்கு மற்றுமோர் தூமை நல்கி
மறுவிலாப் பளிங்கின் மேனி மாசறத் துலங்கச் செய்யும்
அண்டமா நெடியோன் தேவீ, அலைகடல் அரசன் பெண்ணே!
அரிதுயின் கொள்ளும் காலை அடியவன் வணங்குகின்றேன்!

பூவினில் உறையும் பூவே!
பொன்னிடை உறையும் பொன்னே!
பூஜைக்கே உரியோன் பூஜை புரிகின்ற காதற் செல்வீ!
ஏவுமோர் உலகத் துள்ளே இன்மையான் ஒருவ னேதான்
இவனுனை இரந்து நிற்க இதுவொரு நியாயம் போதும்!

தாவுநீர்க் கடலை போல தண்ணருள் அலைகள் பொங்கும்
சந்திரப் பிறைப்பூங் கண்ணி சற்றுநீ திரும்பிப் பார்த்தால்
மேவிய வறுமை தீர்ப்பேன் மெல்லிடைப் பூங்கோதாய், நின்
மின்னிடும் விழிகள் காண விழைந்தனன் போற்றி! போற்றி!

முப்புவி ஈன்ற தாயே, மோகனச் சிரிப்பின் செல்வி!
மூவிரண் டொன்றாய் வந்த பிரமத்தின் மொத்தமாக
அற்புதம் காட்டி நிற்கும் அழகிய சிற்பச் சோதி
ஆனந்தத் தெய்வமாதா அரும்பெறல் அன்னை பேரில்

இப்பொழுது ரைத்த பாடல் எவரெங்குபா டினாலும்
இப்புவி உளநாள் மட்டும் இன்பமும் அறிவும் சேரும்;
நற்பெரும் பேறும் கிட்டு! நன்னிலை வளரும்; என்றும்
நாட்டுக்கே ஒருவ ராக நாளவர் உயர்வார் உண்மை!



# உமையவள் வணக்கம்

அரகர சங்கர ஜெயஜெய சேகர ஆதி பராசக்தி உமையவளே
அரகர சங்கர ஜெயஜெய சேகர ஆதி பராசக்தி உமையவளே

செங்கதிர் ஒளிர்சிவ கங்கையாம் சீமையில் எங்களைக்
காத்திடும் வாயில் இது
சரித்திரம் பேசிடும் தனிப்புகழ் தாங்கிய
சாக்கை நகருறைக் கோயில் இது
காலங்கள் கடந்து சேகரன் உமையொடு
கருணையைப் பொழியும் பூமி இது
அரகர சங்கர ஜெயஜெய சேகர
ஆதி பராசக்தி உமையவளே

வந்தவர் போவதும் போனவர் வருவதும்
வாழ்க்கை நடைமுறை நாமறிவோம்
தந்தையர் வழியினில் முந்தையர் ஆயிரம்
வந்து வணங்கிய தாய்அறிவோம்
அன்னை உமையவள் ஆண்டவன் சேகரன்
அடிமலர் தினமும் தொழுதிடுவோம்
அரகர சங்கர ஜெயஜெய சேகர
ஆதி பராசக்தி உமையவளே

ஆனைக்காவிலும் ஆருர்க்கோயிலும்
ஆடிய தில்லையும் அதிசயமே
அண்ணாமலையதும் அழகிய காஞ்சியும்
எண்ணிய பொழுதே நலம் தருமே
வெண்பாப் புலவரை வேந்தரை மாந்தரைத்
தன்பால் ஈர்த்திடும் தாய் உமையே
அரகர சங்கர ஜெயஜெய சேகர
ஆதி பராசக்தி உமையவளே

வறுமையில் பெருமையும் வளர்ச்சியில் பணிவையும்
தருவது எங்கள் தாய் அருளே .
பெறுவதும் தருவதும் பெரியதாய் என்றும்
அருள்பவள் எங்கள் அம்பிகையே
குருகுல வாசமும் குழந்தைகள் நேசமும்
பெருகிட உதவிடும் பேரருளே
அரகர சங்கர ஜெயஜெய சேகர
ஆதி பராசக்தி உமையவளே

ஆண்டவன் சேகரன் பாண்டிய நாடிதில்
வேண்டும் வரம்தினம் தந்திடுவான்
அன்னை உமையவள் பொன்னையும் பொருளையும்
அலுத்திடும் வரையில் கொடுத்திடுவாள்
அருள்மழை பொழிவதில் அன்னையும் ஐயனும்
ஒருவரை ஒருவர் மிஞ்சிடுவார்
அரகர சங்கர ஜெயஜெய சேகர
ஆதி பராசக்தி உமையவளே

எங்கோ இருக்கிறோம் எதற்கோ உழைக்கிறோம்
எல்லையில்  ஒருநாள் கூடுகிறோம்
திங்களைச் சிரசினில் தாங்கிய சேகரன்
திருவடி மலர்களைப் பாடுகிறோம்
எங்களின் அன்னையை ரங்கனின் தங்கையைக்
கண்களில் இருத்திக் கரம் குவிப்போம்
அரகர சங்கர ஜெயஜெய சேகர
ஆதி பராசக்தி உமையவளே

நான் எனும் வேட்கையும் நமதெனும் வாழ்க்கையும்
மானுடப் பிறப்பினில் மரணம் வரை
நலம் பல விழைவதும் சுகங்களில் இழைவதும்
நாடியில் துடிப்பு உள்ள வரை
ஆத்திரம் கோபம் ஆசைகள் இவைகள்
அடங்கிடத் தொழுவோம் உமையவளை
அரகர சங்கர ஜெயஜெய சேகர
ஆதி பராசக்தி உமையவளே

நல்லதும் அல்லதும் நன்றதும் தீயதும்
சொல்லிக் கொடுப்பதில் வருவதில்லை
நாடகவாழ்விதில் வேடங்கள் ஏற்றுநாம்
நடிக்கிறோம் என்பதை உணர்வதில்லை
சொன்னதில் கேட்டதில் உண்மையைத் தெளிந்து
சுயமாய்ச் செயல்படத் தெரிவதில்லை
அரகர சங்கர ஜெயஜெய சேகர
ஆதி பராசக்தி உமையவளே

வென்றவர் தோற்பதும் தோற்றவர் வெல்வதும்
இன்றைய வாழ்வினில் எளிதாகும்
வெற்றிகள் என்றும் நிச்சயம் என்று
தத்துவம் பேசுதல் தவறாகும்
இன்றும் நேற்றும் இனிமேல் என்றும்

இறைவியைத் தொழுவதே நலமாகும்
அரகர சங்கர ஜெயஜெய சேகர
ஆதி பராசக்தி உமையவளே

அன்னையும் தந்தையும் உன்னடி மலர் தனில்
பன்னெடுங்காலம் வாழ்ந்திடவும்
அருமைக் குழந்தைகள் பெரும் பொருள் சுகமுடன்
ஆயுளும் நூறாய் அமைந்திடவும்
கண்ணெதிர் தெய்வம் என்னுயிர்த் தாயைக்
கவிமலர் தூவி வணங்குகிறேன்
அரகர சங்கர ஜெயஜெய சேகர
ஆதி பராசக்தி உமையவளே

*பாடல் : வைரம்*

## ஸ்ரீ சாரதா தேவி பதிகம்

சக்தி சக்தி சக்தி எனில் சஞ்சலங்கள் நீங்குமாம்
சக்தி சக்தி சக்தி எனில் நெஞ்சில் இன்பம் பொங்குமாம்

ஆதியாய் அநாதியாய் அமைந்ததேவ தேவியே!
பாதியான ஈசனோடு பூமியாளும் சக்தியே!
ஓதி யார் அழைத்தபோதும் ஓடும் அன்பின் அன்னையே!
ஜோதிரூப சாரதை, நின் பாதம்வாழி வாழியே!

ஞானவாணி நீஎன நயந்துமாலை சூட்டுவேன்!
தேனுவான திருவுமாய்த் தெளிந்துதூபம் காட்டுவேன்!
ஊனமோட்டும் துர்க்கையாய் உவந்துதீபம் ஏற்றுவேன்!
ஆனசக்தி மூவராய் அணைந்துவாழி வாழியே!

செங்கரும்பு பூங்கணை, சொறிந்த பாசம், அங்குசம்
அங்கைதங்க - அரியணை அமர்ந்தஞான ஜோதியே!
திங்கள், கங்கை, மூன்றுகண் திகழவந்த தேவியே!
மங்கலங்கள் யாவையும் வழங்கிவாழி வாழியே!

ஆம்பலென்ற பூவிலே அமர்ந்தும்நின் ரூபமே!
பாம்பின்மீதில் அலையிலே படுத்தும்நின் கோலமே!
சாம்பல்பூசி மலையிலே தனித்திருந்த சீலமே!
ஆம்பொருள்கள் யாவுமான அம்மைசக்தி வாழியே!

அழகுபொங்கு வதனமும், அகன்றமர்ந்த நயனமும்,
தழுவிவாணி திருவும் வந்து தலைவணங்கு சரணமும்,
தொழுதுபாடும் என்குலம் துலங்கவந்த தேவியே!
பழுதிலா வளங்கள்தந்து பரிவுசெய்து வாழியே!

தொட்டஎந்தச் செயலையும் தொடர்ந்துநீ நடத்துவாய்!
வட்டமாய் அணைந்துநீ வரும்பகை துரத்துவாய்!
மட்டிலா அருள்சுரந்து வாழ்த்தும்மகா ராணியே!
தட்டிலாத வாழ்வுதந்து சாரதைநீ வாழியே!

யோகம், யாகம் அறிகிலேன்! உபாசனைகள் புரிகிலேன்!
ஈகை, தியாகம், பக்தி, தொண்டு இயற்றவும் நினைந்திலேன்!
மோகமான பாடலன்றி மூடனேதும் தருகிலேன்!
நாகவல்லி, என்னையும் நலம்புரிந்து வாழியே!

தானலால் தனக்குவேறு நேரிலாத தத்துவம்!
வானமீன் சுடர்கள் ஐந்து பூதமாம் மகத்துவம்!
ஞானவாணி திருமடந்தை சூழவந்த சித்திரம்!
தேனளவு கவிதைகொண்டு சாரதைநீ வாழியே!

நீஎன் அன்னை அல்லவோ? நினக்கும்இன்னும் சொல்லவோ?
தாய்என் இல்லம் வாழவேறு தயவுதேடிச் செல்லவோ?
மாயலீலை போதும், போதும் வா, என்கண்கள் அல்லவா?
ஆயுள், செல்வம், கல்வி, ஞானம் அமைதிதந்து வாழியே!

முல்லை, மல்லி, செண்பகம், முருக்கவிழ்ந்த தாமரை -
அல்ல அல்ல அல்ல என்சொல் நெல்லினூடு சேர்களை!
கல்லும், முள்ளும், புல்லுமாய்க் கலந்துவந்து வீசினேன் -
இல்லம்மேவு சாரதை, இவைபுனைந்து வாழியே!

*அருட்கவி கு.செ, இராமசாமி*

## ஆதிபராசக்தி அம்மா அருள்வாய் தாயே நீ

ஆதிபராசக்தி அம்மா அருள்வாய் தாயே நீ
தேவிபராசக்தி உன்னை தேடி சரண் அடைத்தோம்

ஆதிபராசக்தி அம்மா அருள்வாய் தாயே நீ
தேவிபராசக்தி உன்னை தேடி சரண் அடைத்தோம்
அம்மா தேடி சரண் அடைத்தோம்
ஆதிபராசக்தி அம்மா அருள்வாய் தாயே நீ

தேவிபராசக்தி உன்னை தேடி சரண் அடைத்தோம்
அம்மா தேடி சரண் அடைத்தோம்
காஞ்சியிலே நீ காமாட்சி, காசியிலே நீ விசாலாட்சி
மதுரையிலே நீ மீனாட்சி, காஞ்சனபுரியில் ஞானாட்சி

ஆனைமுகனின் அன்னையம்மா,
அறுமுகனும் உன் பிள்ளையம்மா
சுடலைநாதனில் பாதியம்மா,
சுடலையிலே முழு ஜோதியம்மா

எல்லை இல்லா தொல்லைகளும்,
தில்லை வந்தால் தீர்ந்துவிடும்
எல்லை காளி சக்தியடி,
தில்லை காளி வாடியம்மா

காட்டுத்தீயில் காளியம்மா,
வீட்டுத்தீயில் தீபமம்மா
ஏற்றித்தொழுவோர் யாவரையும்,
போற்றிக்காப்பாய் சக்தியடி

வேப்பிலையில் நீ மாரியடி,
கருவேப்பிலையில் நல் வாசமடி
விரும்பினருக்கு அன்னமடி,
நெருங்கினவர்க்கு சொந்தமடி

*அருண் வீரப்பா, காரைக்குடி.*

## ஆலயத்தை சுற்றிவந்தால் அருள்கிடைக்குமடி

ஆலயத்தை சுற்றிவந்தால் அருள்கிடைக்குமடி
அம்மாஉன் கண்பார்த்தால் பொருள்கிடைக்குமடி

ஆலயத்தை சுற்றிவந்தால் அருள்கிடைக்குமடி
அம்மாஉன் கண்பார்த்தால் பொருள்கிடைக்குமடி
தீராத வினைகளெல்லாம் தீர்த்துவைப்பவளே
மாறாத மனத்துயரை மாற்றிவைப்பவளே

ஏழுலகை ஆளுகின்ற ஈஸ்வரிதாயே
எங்கள்குலம் வாழவைக்கும் தெய்வமும் நீயே
தேவாதி தேவிஉன்னை தேடிவருகிறோம்
திருவருளை வேண்டுமென்று கேட்க வருகிறோம்

பூமியாக உருவெடுத்து பொருத்திருப்பவளே
பொங்கும்கடலை ஆடையாக உடுத்திருப்பவளே
சந்திரனும் சூரியனும் உன்னிருகண்கள்
சங்கரிஉன் ஆபரணம் நான்குவேதங்கள்

அர்த்தனாரியாயிருந்து அருள் புரிபவளே
அண்டிவரும் பக்தருக்கு வாழ்வளிப்பவளே
ஸ்ரீசக்ர பீடமதில் வீற்றிருப்பவளே
சிவபெருமான் சக்தியாக வடிவெடுத்தவளே

*பெங்களூர் லெ. சோமசுந்தரம், தேவகோட்டை*

## உன்னெழில் கோலம், என்னிரு கண்ணில், என்று தெரிந்திடுமோ

உன்னெழில் கோலம், என்னிரு கண்ணில்,
என்று தெரிந்திடுமோ
உன் மலர்ப்பாதம், என் தலைமீதில், என்று பதிந்திடுமோ
அம்மா என்று பதிந்திடுமோ

அன்னை உன்னருளால், என்னை மறந்து,
இருந்திடும் நாள்வருமோ
பொன்னையும் பொருளையும், பூமியில் வாழ்வையும்,
வெறுத்திடும் நாள்வருமோ அம்மா வெறுத்திடும்
நாள்வருமோ

ஆசை என்னும், பேய்தனை விரட்டி,
அருள்தர வருவாயா
அலைகடல் போலே, அலையுமென் வாழ்வில்,
அமைதியைத் தருவாயா அம்மா அமைதியைத் தருவாயா

உலையினிலிட்ட, மெழுகாய் நானும்,
உருகித் தவிக்கின்றேன்
உன்னருள் வேண்டி, ஒவ்வொரு நாளும்,
பாடி துதிக்கின்றேன் அம்மா பாடி துதிக்கின்றேன்

ஊரும் பேரும், உறவும் வேண்டேன்,
உன்னருள் வேண்டுகின்றேன்
உலகினிலிருக்கும், காலம் வரைக்கும்,
உன்துணை வேண்டுகின்றேன்
அம்மா உன்துணை வேண்டுகின்றேன்

*பெங்களூர் லெ. சோமசுந்தரம், தேவகோட்டை*

# காரைக்குடி கொப்புடைய நாயகி அம்மன்

அன்னையென மதுரையில் அருளாட்சி செய்கின்ற
ஆலவாய் அழகி நீயே
ஆனையுடன் சிலந்திக்கு அருள்முக்தி நல்கிய
ஆனைக்கா அரசி நீயே
கன்னியென குமரியில் கடுந்தவம் புரிகின்ற
கன்னியா குமரி நீயே
கம்பன்புகழ் பாடியே காரைநகர் வளர்கின்ற
கன்னியெனும் தமிழும் நீயே
என்வாழ்வு சிறக்கவே எதுவேண்டும் என்பதை
இனிதருளும் தாயும் நீயே
இருந்தாலும் சிறுபிள்ளை ஏக்கமுடன் அழைக்கின்றேன்
எனைக் காக்க வேண்டும் தாயே
கொன்றையுடன் சிறுமதியை கூந்தலணி ஈசனின்
குறையாத பாகம் நீயே
குன்றாத வாழ்வினை எந்நாளும் வழங்கிடும்
கொப்புடை யம்மை உமையே !

பகலிலே கதிராக இரவிலே மதியாகப்
பவனிவரும் ஜோதி நீயே
பகலவன் முன்னாலே பனியதைப் போலவே
பாவங்கள் நீக்கு வாயே
அகலிலே ஒளியாக அடுப்பிலே நெருப்பாக
ஒளிர்கின்ற ஆற்றல் நீயே
அகிலத்தில் என்றுமே அன்னபூ ரணியாகி
அரும்பசி போக்கு வாயே
நிகழ்வுகள் யாவுமே நிச்சயம் செய்துமே
நிலத்தினில் நடத்து வாயே
நீங்காத துயரையும் ஓங்கார ஒலியினால்
ஓட்டிடும் சக்தி நீயே
திகழுமோர் மதிசூடித் திருநடனம் புரிகின்ற
தில்லை நடராஜன் துணையே
குன்றாத வாழ்வினை எந்நாளும் வழங்கிடும்
கொப்புடை யம்மை உமையே !

வீழ்ந்தாலும் குற்றாலத் தருவியைப் போலவே
புகழோடு வீழ வேண்டும்
வீரமுடன் போராடி மீண்டுமே வாழ்கையில்
வெற்றியுடன் மீள வேண்டும்
தாழ்ந்தாலும் எனதுமுடி தாயுனது திருவடித்
தாள்களிலே படவும் வேண்டும்
தரணியிலே வேறொருவர் தாள்களை நாடாத
தன்மான வாழ்வு வேண்டும்
வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் வாய்மையே பேசிடும்
வரமொன்று அருள வேண்டும்
வாய்மையென்னும் படகேறி வற்றாத பிறவியெனும்
கடலினைக் கடக்க வேண்டும்
சூழ்ந்தவோர் துன்பத்தைச் சூலத்தால் நீக்கிடும்
சுந்தரனின் அன்பு மனையே
குன்றாத வாழ்வினை எந்நாளும் வழங்கிடும்
கொப்புடை யம்மை உமையே !

ஆசையெனும் கடலிலே அலையாது என்மனதை
அன்னைநீ காக்க வேண்டும்
அளவோடு செல்வங்கள் நிறைவாகத் தந்துமே
ஆசையை நீக்க வேண்டும்
ஓசையின்றிப் பேசியே ஒருநூறு சொந்தங்கள்
உருவாக உதவ வேண்டும்
ஒருவருமே பொல்லாங்கு சொல்லாத நல்லோனாய்
உலகினிலே வாழ வேண்டும்
பாசமெனும் மலமகற்றிப் பசுவான என்னையும்
பதியோடு சேர்க்க வேண்டும்
பற்றினையும் விட்டேநான் பற்றற்ற இறைவனடி
பற்றிடவும் அருள வேண்டும்
கூசுமொளி மதிசூடிக் கூத்தாடும் ஈசனின்
குறையாத பாகம் நீயே
குன்றாத வாழ்வினை எந்நாளும் வழங்கிடும்
கொப்புடை யம்மை உமையே !

அந்தமொடு ஆதியும் இல்லாத பரமனவன்
அகலாத பாக மானாய்
அலையாழி தன்னிலே அறிதுயிலும் மாயனவன்
அன்புடைத் தங்கை யானாய்
கந்தனொடு கணபதியைக் காசினியில் தந்துமே

கருணைமிகு  தாயு மானாய்
காயான மனத்தையும் கனியாக மாற்றிடும்
கற்பகத் தருவு மானாய்
மந்தையிலே ஆடாகி மருளுமோர் சிந்தையை
மாற்றிடும் சக்தி ஆனாய்
மனிதரொடு தேவருக்கும் மற்றுமுள்ள யாவருக்கும்
ஆதியெனும் தேவி யானாய்
சொந்தமென நூறுபேர் சுற்றியே இருந்தாலும்
சுகமான உறவு மானாய்
குன்றாத வாழ்வினை எந்நாளும் வழங்கிடும்
கொப்புடை யம்மை உமையே !

## சிறுவயல் பொன்னழகி அம்மன்

மண்ணிலே ஏர்கொண்டு மனிதர்கள் உழும்போது
மாணிக்க முகம் காட்டினாய்
மதிகெட்ட மகிஷனை வதம்செய்யும் தேவியென
மர்த்தனி வடி வாகினாய்
கண்ணிலே நீரோடு கதறியழும் பிள்ளைக்குக்
கனிவோடு பாலுட் டினாய்
காணாத துன்பங்கள் கரைபுரண்டு வந்தாலும்
கண்களால் அதை ஓட்டினாய்
தண்ணீரில் திரியிட்டுத் தீபத்தை ஏற்றினால்
தயவோடு ஒளி சிந்தினாய்
தரணியிலே மனிதர்குலம் தழைத்தினிது வாழுதற்குத்
தாய்மையுடன் வழி காட்டினாய்
பொன் அள்ளித் தந்தார்க்கும் பூமாலை இட்டார்க்கும்
பொதுவாக அருள் நல்கினாய்
பொருளோடு புகழ்நல்கும் சிறுவயல் நாயகியே
பொன்னழகி அம்மை உமையே!

## காரைக்குடி முத்துமாரி அம்மன்

பொங்கிவரும் காவிரியாய் பூங்கருணை தன்னையே
பொழிகின்ற முத்து மாரி
பூமாரி பொழிந்தாற்போல் புகழ்மாரி என்வாழ்வில்
பெய்கின்ற முத்து மாரி
எங்கிருந்து அழைத்தாலும் என்மனக் கோவிலிலே
எழுந்தருளும் முத்து மாரி

ஏழைகளின் வாழ்க்கையில் இன்பங்கள் வழங்கியே
எழில்கூட்டும் முத்து மாரி
சங்கடங்கள் அத்தனையும் சொல்லியழும் பக்தர்க்குச்
சாந்திதரும் முத்து மாரி
சன்னதிக்கு பாற்குடங்கள் ஆயிரமாய்ப் பவனிவர
சாந்தமுறும் முத்து மாரி
வெங்கொடுமை அம்மைநோய் வேப்பிலையால் நீக்கியே
வினைதீர்க்கும் முத்து மாரி
வளர்காரை முத்துநகர் வாழ்கின்ற சக்தியே
அருள்முத்து மாரி உமையே !

## காரைக்குடி முத்தாள அம்மன்

அரும்பாக மனத்திலே முளைத்திடும் ஆசைகள்
மலராக மாற வேண்டும்
அன்றாடம் போராடும் ஏழைகள் வாழ்விலே
அநியாயம் தீர வேண்டும்
கரும்பிலே தூளியிட்டுக் கோவிலை வலம்வரும்
கண்மணிகள் வாழ வேண்டும்
கற்கண்டுப் பொங்கலை கனிவோடு படைக்கின்ற
கன்னியர்க்கு மாலை வேண்டும்
வருகின்ற நாளெல்லாம் வளமான நாளாக
வாழ்வினை ஆக்க வேண்டும்
வடிவான மேடையில் வளமாகத் தானமர்ந்து
வருத்தங்கள் போக்க வேண்டும்
திருநாளாம் வைகாசித் திங்களின் வெள்ளியில்
திருவிழாக் காணும் உனையே
முழுதாக நம்பியே மனதார வேண்டினேன்
முத்தாள அம்மை உமையே !

## இராங்கியம் ஏகம்மன்

சிற்றாடை இடையுடுத்திச் சிறுகுழந்தை கையெடுத்துச்
சிங்கார மாக நின்றாய்
சீரிளமைத் திறம்வேண்டித் திருமுன்பு நின்றார்க்குச்
செல்வங்கள் வழங்கு கின்றாய்
வற்றாத வெள்ளமென வருகின்ற துயரினிலும்
வாழவழி காட்டு கின்றாய்

வந்துனது அடிதொழுது வாழ்த்தியே நின்றாரின்
வாழ்வில் ஒளிகூட்டு கின்றாய்
பற்றுடனே பாச்சோறு பள்ளயம் இடுவோர்க்குப்
பரிவுடனே அருளு கின்றாய்
பாங்காக உனைவேண்டும் பக்தருக் கருள்புரிய
ராங்கியப் பதியில் நின்றாய்
முற்றான ஏவல்பில்லி சூனியங்கள் யாவையும்
முனிந் தோட்டும் கருப்பருடனே
முன்னோடி சப்பாணி உறங்காப் புளியோடும்
உறைகின்ற ஏகம் மனே !

## நெய்வாசல் உலக நாயகி அம்மன்

அஞ்சுமுகம் தோன்றுகையில் ஆறுதல் கரம்நீட்டி
அன்னைமுகம் காட்டு வாயே
அன்னையென நீமாறி ஆதரவு இல்லார்க்கு
அருளமுதம் ஊட்டு வாயே
கெஞ்சியழும் பக்தருக்குக் கேட்டவரம் அத்தனையும்
கேட்டபடி வழங்கு வாயே
கேள்விக்குப் பதிலாகி வாழ்வுக்குப் பொருளாகி
கீர்த்தியுடன் விளங்கு வாயே
மஞ்சளணி மங்கையரின் மாங்கல்யம் தன்னிலே
மங்களமாய்த் தங்கு வாயே
மக்களோடு அவர்வாழ்வில் மாடுமனை செல்வங்கள்
மகிழ்ச்சியுடன் நல்கு வாயே
நெஞ்சமெனும் கோவிலிலே நெய்வாசக் குழலோடு
நிறைவாக அமர்ந்த தாயே
நெய்வாசல் எனும்பதியில் மெய்வாசம் செய்யுலக
நாயகியே சக்தி உமையே !

## வேலங்குடி வயல்நாச்சி அம்மன்

பற்றொன்று இல்லார்க்கே வீடருள் பரமனவன்
பாகமாய் அமர்ந்த தாயே
பக்கத்தில் சிவனின்றி மொத்தத்தில் சக்தியென
தனியாட்சி புரிகின் றாயே
சுற்றியுள்ள ஏழூரும் மதுவோடு தேரிழுக்க
சுந்தரமாய் விளங்கு வாயே

சோகமில்லை இனியென்றும் சுகம்மட்டும் சொந்தமென
நல்வரங்கள் வழங்கு வாயே
கற்றவர்கள் கவிபாட மற்றவர்கள் துதிபாட
களிப்புடனே மலரும் தாயே
கரையெல்லாம் நீருயர காடெல்லாம் நெல்லுயர
கருணைமழை பொழிவாய் நீயே
வெற்றிமீது வெற்றியினை வேண்டுவோர் பெற்றிடவே
வேலங்குடி அமர்ந்த தாயே
வயல்சூழும் கோவிலிலே வாழ்வென்னும் பயிர்வளர்க்கும்
வயல்நாச்சி அம்மை உமையே

## சாந்தி துர்க்கா பரமேஸ்வரி

மந்திரமும் தந்திரமும் மருந்துமாய் ஆகியே
மக்களைக் காக்கும் தாயே
மனத்தையே மாலையாய் சூட்டுவார் வாழ்க்கையை
மகிழ்ச்சியாய் ஆக்கு வாயே
பந்தயமாய் ஓடிடும் பாசமிகு உலகிலே
பரிவோடு அருளு வாயே
பரிவோடு பாதமலர் பணிவாரின் நெஞ்சினிலே
பாசமுடன் அமரு வாயே
கந்தனுக்கும் கலியுக வரதனுக்கும் நடுவிலே
களிப்புடன் நின்ற தாயே
கருணையுடன் கவுண்டம் பாளையம் தனிலே
கோவில் கொண்டருளு வாயே
சந்ததிகள் வாழவே சந்ததமும் வணங்கிடும்
சகலரையும் காக்க வேண்டி
சங்குடனே சக்கரம் சடக்கரம் ஏந்திடும்
சாந்தி துர்க்கா பரமேஸ்வரியே

## இராங்கியம் அங்காள பரமேஸ்வரி

அரியோடு பிரம்மனும் அறியாத சிவனாரும்
அண்ணா மலை யாகினார்
அண்ணா மலையினை அழகாக வலம்வந்து
அவர்பாகம் நீ யாகினாய்
விரிசடை வேந்தனை மதியாத தட்சனின்
வேள்வியைத் தூளாக் கினாய்
விண்ணுறை தேவர்க்கும் மண்ணுறை மாந்தர்க்கும்
வாழ்வருள் தாய் ஆகினாய்

பரியேறும் கருப்பண்ணன் படிவாசல் அருகிருந்து
பாராளும் திரு வாகினாய்
படியேறி வந்துனது பாதம் பணிவோரின்
பாவங்கள் தான் போக்கினாய்
திரிபுரம் தன்னையே சிரிப்பாலே பொடிசெய்த
தீரனின் அன்பு மனையே
சிங்கைநகர் மேவிய அங்காள ஈஸ்வரி
அன்னையே சக்தி உமையே

## நாயகியே நாயகியே

நாயகியே நாயகியே சங்கரனார் நாயகியே
நாயகியே நாயகியே நலமருளும் தாயும்நீயே

எங்கெங்கும் நிறைந் திருக்கும்
இறையருள் சக்தி தனையே
சங்கம்வளர் தமிழாலே அம்மா அம்மா - நான்
சாற்றிடவே அருள்புரிவாய் அம்மா அம்மா

இமயத்தின் கயிலை தன்னில்
ஈஸ்வரனின் பாகமாகி
உமையவளாய் இருப்பவளே அம்மா அம்மா - இந்த
உலகனைத்தும் காப்பவளே அம்மா அம்மா

கங்கைநதி பாயும் ஊராம்
காசிநகர் என்னும் பேராம்
மங்கைவிசா லாட்சியென்று அம்மா அம்மா - நீயும்
மானிடரின் பாவம் தீர்ப்பாய் அம்மா அம்மா

அத்திமுதல் எறும்பு ஈறாய்
அத்தனைக்கும் மகிழ்ந் தளிக்கும்
பித்தருக்கும் பிச்சையிட்டு அம்மா அம்மா - அன்ன
பூரணியாய் இருப்பவளே அம்மா அம்மா

எழில்கொஞ்சும் காஞ்சி நகரில்
ஏகாம்பரர் துணையாய் அருளைப்
பொழிபவளே காமாட்சி அம்மா அம்மா - புவியில்
யோகமெல்லாம் அளிப்பவளே அம்மா அம்மா

அருளோடு சுயம்பாய் தோன்றி
ஆதிபரா சக்தி என்றே
மருவத்தூர் கோயில் கொண்டாய் அம்மா அம்மா - மக்கள்
மயக்கங்கள் போக்கிடுவாய் அம்மா அம்மா

சிதம்பரமாம் தில்லை மன்றில்
நடமாடும் ஈச னருகில்
சிவகாமிஎன்று நின்று அம்மா அம்மா - தினம்
சீர்பெருக்கும் நாயகியே அம்மா அம்மா

அம்மை தையல் நாயகியாய்
அருள் வைத்திய நாதருடன்
இம்மைநோய் தீர்க்குமிடம் அம்மா அம்மா - அந்த
புள்ளிருக்கும் வேளூரே அம்மா அம்மா

பட்டருக்கு நிலவைக் காட்டி
பக்தருக்கு திருவடி காட்டும்
கட்டழகு அபிராமியாய் அம்மா அம்மா - திருக்
கடையூரில் வாழ்பவளே அம்மா அம்மா

பகல்பூசை பரமன் தனக்கு
பகட்டாகத் தினம் நடத்தும்
அகிலாண்ட ஈஸ்வரியே அம்மா அம்மா - திரு
ஆனைக்கா அமர்ந்தவளே அம்மா அம்மா

கண்ணபுரம் சமய புரம்
காளமேகம் போற்றும் புரம்
அன்னைமாரி அருள்மழையால் அம்மா அம்மா - உலகில்
அனைத்துயிரும் தழைத்திடுமே அம்மா அம்மா

பாட்டரசன் கம்பன் தூங்கும்
நாட்டரசன் கோட்டை தனிலே
கண்ணாத்தா என்னும்பெயரில் அம்மா அம்மா - நீயும்
கண்ணொளி வழங்குவாயே அம்மா அம்மா

எப்படிநான் இருந்த போதும்
என்மனக் கோவில் தன்னில்
கொப்புடைய நாயகியாய் அம்மா அம்மா - எந்தன்
குலம்காக்கத் தோன்றிடுவாய் அம்மா அம்மா

பொன்னழகி என்னும் பெயரில்
புகழோடு சிறுவயல் தன்னில்
தண்ணீரில் விளக்கெரித்த அம்மா அம்மா - உன்
தயவாலே வாழ்ந்திடுவோம் அம்மா அம்மா

வயல்சூழக் கோவில் கொண்டு
வயல்நாச்சி யம்மன் என்று
ஏழூரும் தேரிழுக்க அம்மா அம்மா - தேரில்
எழிற்கோலம் காட்டுகின்றாய் அம்மா அம்மா

முக்கோடி தேவர்கள் போற்ற
சொக்கனவன் கைத்தலம் பற்றி
மணக்கோலம் கொண்டவளே அம்மா அம்மா - மதுரை
மண்ணாளும் மீனாட்சி அம்மா அம்மா

முக்கடலும் ஒன்றாய்க் கூட
மூக்குத்தி விளக்கங் காட்ட
அக்கரையாய் நிலத்தைக்காக்கும் அம்மா அம்மா - எங்கள்
கன்னியா குமரித்தாயே அம்மா அம்மா

ஏகாந்த நாயகியாய்
எழிலாகக் கொல்லூர் வாழும்
மூகாம்பிகைத் தாயவளே அம்மா அம்மா - நீயும்
முக்திநலம் தருபவளே அம்மா அம்மா

ஆயிரமாய் நாமம் கொண்டு
ஆங்காங்கே கோவில்கண்டு
தாயெனவே கருணைசெய்யும் அம்மா அம்மா - உந்தன்
தாள்பணிந்தே வணங்குகின்றோம் அம்மா அம்மா

## சமயபுர அம்மன்

ஓம் ஓம் சக்தி ஓம்சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்சக்தி
ஓம் ஓம் சக்தி ஓம்சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்சக்தி

காவிரி நதியின் கரையினிலே
கண்ண புரத்து நகரினிலே
ஆயிரம் கரங்கள் தான்கொண்டே
அன்பர் துயரம் களைபவளே

அழகு முடியினைக் கொடுத்திடுவார்
அங்கம் போட்டுப் புரட்டிடுவார்
விளங்கு திரியால் மாவிளக்கு
வேதனை தீர ஏற்றிடுவார்

அக்னி பொங்கும் தீச்சட்டி
அங்கையில் தாங்கித் தூக்கிடுவார்
கொக்கியில் பறவைக் காவடியாய்
தொங்கியே வலமும் வந்திடுவார்

எத்தனை எத்தனை பிரார்த்தனைகள்
ஏக்கம் தீர்த்திடத் தோத்திரங்கள்
அத்தனையும் அவள் கேட்டிடுவாள்
அபயக் கரமதை நீட்டிடுவாள்

கோரிக்கை தன்னை மனம்கொண்டு
கோவில் வாசல் வந்தவரை
வாரியே அனைத்து மாரியவள்
வளங்கள் கொழிக்கச் செய்திடுவாள்

நோய்கள் நொடிகள் தீர்த்திடுவாள்
நொந்தவர் மனத்தைத் தேர்த்திடுவாள்
பாயும் கருணை வெள்ளத்தால்
பயங்கள் யாவும் போக்கிடுவாள்

இன்பம் துன்பம் எதுவரினும்
எல்லாம் அவளின் கருணையென
அன்புடன் ஏற்பவர் மனத்தினிலே
அன்னை தோன்றிச் சிரித்திடுவாள்

இமயம் பிறந்த பார்வதியும்
இலக்குமி சரஸ்வதி யாவருமே
சமயபுரத்துக் கோவில் வந்து
சகல நலனும் அளித்திடுவர்

நாளும் கோளும் நலிந்தோர்க்கு
நல்லருள் வழங்கும் வாசலிலே
நாளும் பொழுதும் திருநாளே
நாயகி அன்பைப் பெரும்நாளே

## ஆதிபராசக்தி

மேல் மருவத்தூரில் எங்கம்மா ஆதிபராசக்தி – நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே

மேல் மருவத்தூரில் எங்கம்மா ஆதிபராசக்தி - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
பால்போல் பொங்கிவரும் உந்தன் கருணைத் திறத்தாலே
ஆல்போல் குலம்தழைக்க அம்மா அருளைப் பொழிவாயே

காஞ்சி நகர்தனிலே எங்கம்மா காமாட்சித் தாயே - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
அஞ்சேல் எனச்சொல்லும் உந்தன் அபயக்கரங்களிலே
தஞ்சம் எனஅடைந்தோம் அம்மா தயவுடன் காப்பாயே

திருவேற்காட்டினிலே எங்கம்மா தேவி கருமாரி - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
அருமைத் தாயாகி இங்கே அன்புப் பயிர்வளர்க்கும்
பெருமை கொண்டவளே அம்மா பேணிக் காப்பாயே

வைத்தீஸ்வரன் கோவிலிலே அம்மா தையல் நாயகியே - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
சித்தாமிர்தம் எனும் அருள்மேவிய தீர்த்தமதால்
சித்தம் தெளிவோமே அம்மா சிந்தை குளிர்வோமே

மதுரையம்பதியில் எங்கம்மா மீனாட்சித் தாயே - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
கதிரைக் கண்டவுடன் அங்கே கரையும் பனிபோல
எதிர்வரும் வினைகளைந்து அம்மா ஏழையைக் காப்பாயே

சமயபுரத்தினிலே எங்கம்மா மாரியம்மன் தாயே - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
அபயம் அபயமென்று உந்தன் அடிமலர் தொழுதோரை
சமயத்தில் காத்திடுவாய் அம்மா சஞ்சலம் போக்கிடுவாய்

காரைக்குடிதனிலே எங்கம்மா கொப்புடை நாயகியே - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
பாறை நெஞ்சத்தில் ஊறும் பாவம் நீக்கி அங்கே
சீரைக்கொடுப்பவளே அம்மா செல்வம் அளிப்பவளே

முத்துப்பட்டினத்தில் எங்கம்மா முத்துமாரித் தாயே - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
வித்தகி உன்பாதம் நாங்கள் வேண்டித் தொழுகின்றோம்
சத்திய நாயகியே அம்மா சங்கரி சாம்பவியே

சிறுவயல் நகர்தனிலே எங்கம்மா பொன்னழகித்தாயே - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
வருவாய் நீயென்று நாங்கள் வாசலில் கோலமிட்டோம்
திருவாய் நீவந்து அம்மா திருவருள் தருவாயே

கொங்குத்திருநாட்டில் எங்கம்மா
கோனியம்மன் தாயே - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
எங்கும் நிறைந்தவளே எங்கள் இல்லம்தான்வந்து
மங்கலம் அருள்வாயே அம்மா மகிழ்ச்சியைத் தருவாயே

சூலூர் நகர்தனிலே எங்கம்மா சுந்தர மாகாளி - நான்
உன்னை மறந்தாலும் நீ என்னை மறக்காதே
வேலும் மயிலும்கொண்ட அந்தவேலவன் தாயுனையே
நாளும் வணங்கிடுவோம் அம்மா நலங்கள் புரிவாயே

# கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்

கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாய் அம்மா!

கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாய் அம்மா!
பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட

நீ இந்த வேளைதன்னில் சேயன் எனை மறந்தால்
நான் இந்த நாநிலத்தில் நாடுதல் யாரிடமோ
ஏன் இந்த மௌனம் அம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளும் அம்மா!

எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி
என்றும் நல்லாசி வைத்திடும் நாயகியே
நித்ய கல்யாணியே கபாலி காதல் புரியும்
அந்த உல்லாசியே உமாஉனை நம்பினேன் அம்மா!

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீஸ்வரி மாயே வாராய் இது தருணம் பாகேஸ்ரீ
தாயே பார்வதியே இந்த லோகேஸ்வரி
நீயே உலகினில் துணையம்மா!

அஞ்சன மை இடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம் –
அருள் தஞ்சம் என அடைந்தேன் தாயே
உன் சேய் நான் ரஞ்சனியே
ரட்சிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா!

வேலும் மயிலும் துணை

# முருகன் பாடல்கள்

## ஆறுமுக சுவாமி விருத்தம்

ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் வேலும்
அலங்கார ஆபரண மணிந்த மார்பும்
திருமுகமும் வெண்ணீரும் புனைந்த மெய்யும்
ஜெகமெலாம் புகழ்படைத்தாய் சுப்பிரமண்யா
முருகாசர வணபவனே கார்த்தி கேயா
முக்கணனார் புத்திரனே உக்ர வேலா
இருவருமே உனைப்பணிந்தோம் பழநிவேலா
இதுசமயம் அடியாரை ரட்சிப் பாயே

மயிலேறி விளையாடும் சுப்பிரமண்யா
வடிவேலா உன்பாதம் நம்பி னேனே
உயிரிழந்து அபகீர்த்தி யாகும் வேளை
உன்செயலால் இதுசமயம் உயிரைக் காத்தாய்
தயவாக இனிமேலும் உயிரைக் காத்து
சண்முகனே அடியார்தம் துயரம் தீர்ப்பாய்
வைபோக மானமலை பழநி வேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப் பாயே

வருந்துமடியார் உயிரைக் காக்கும் தெய்வம்
வையகத்தில் வேறொரு வரில்லை யென்று
அறிந்துநான் உனைப் பணிந்தேன் சுப்பிர மண்யா
ஆதரித்துப் பிராணபயம் தீருமையா
திரிந்தலைந்து அறுமூன்று திங்களாகச்
சிறையிலிருந்து தளைப்பூண்டு சின்னமானேன்
பறந்துவரும் மயிலேறும் பழநி வேலா
பண்பாக உயிர்காத்து ரட்சிப் பாயே

பெருவேங்கை புலிபிடித்த பசுவைப் போல
பிதுர் கலங்கி மனம்தளர்ந்து புலம்பினோமே
இருவருமே உனைக்கூவச் செவி கேளாதோ
இதுசமயம் தாமதமா யிருக்க லாமோ
குருவாகித் தந்தை தாய் நீயேயாகில்
குமரேசா பிராணபயந் தீரு மையா
முருகேசா இதுசமயம் பழநி வேலா
முன்வந்து உயிர்காத்து ரட்சிப் பாயே

பாம்பின்வாய் சிக்கியதோர் தேரைப் போல
பதைபதைத்து வாடுகிறோம் பாலர்நாங்கள்
தேம்பியே புலம்புகிறோம் துயர மாகி
தென்னவனே உன்செவிக்குக் கேளா தோதான்
நான்புவியில் உனைநம்பி மகிழ்ந் திருந்தேன்
நாயேனுக்கு அபாயம் வரநியாய மோதான்
சாம்பசிவன் புத்திரனே பழநி வேலா
சமயமிது உயிர்காத்து ரட்சிப் பாயே

வலையிலகப்பட்ட உயிரது போல் மயங்கு கிறோமே
வடிவேலா இதுசமயம் துயரம் தீர்ப்பாய்
கொலைகளவு பாதகங்கள் பொய்யிருந்த தெல்லாம்
கொடும்பழிகள் வஞ்சனை பில்லி சூனியமெல்லாம்
தொலையாத சிறுபிணிநோய் வல்வினை களெல்லாம்
துறத்து மையா மயிலேறும் சுப்பிரமணியா
மலையிலுறை வாசனே பழநி வேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே

நாகமது கெருடனைக்கண்டலைந்தாற் போல
நான்பயந்து அலைதுரும்பாய் அலைகிறேனே
தாகமது தீருமையா தவிக்கும் வேளை
சண்முகனே இதுசமயம் அடியேனுக்கு
மேகமது பயிர்க்குதவி செய்தார் போல
வேலவனே பிராணபயந் தீருமையா
வேகமுடன் வரவேணும் பழநி வேலா
வினைதீர்த்து உயிர்காத்து ரட்சிப்பாயே

பூனைகையில் சிக்கியதோர் கிளியைப் போல
புலம்புகிறோம் பிராணபயம் மிகவுமாகி
நானடிமை உனைநம்பி யிருக்கும் வேளை
நாயகனே பாராமுகமாய் இருக்க லாமோ
மானீன்ற வள்ளியம்மை தெய்வயானை
மணவாளா சரவணனே கருணை செய்வாய்
கானமயில் வாகனனே பழநி வேலா
கடவுளே உயிர்காத்து ரட்சிப்பாயே

தூண்டிலகப்பட்ட உயிரது போல் துடிக்கிறேனே
சுப்பிரமணியா இதுசமயம் அடியேனுக்கு
வேண்டும்வரம் கொடுப்பதற்குப் பார்த்து நீயே
வேறொரு வரில்லையென்று நம்பினேனே
மீண்டுவரும் வினைதீர்த்து துயரம் தீர்ப்பாய்
வேலவனே சூரசம்கார வேலா
ஆண்டவனே உனைப்பணிந்தோம் பழநி வேலா
அடியார்கள் உயிர்காத்து ரட்சிப் பாயே

நஞ்சுபட்டு விஷமேறி மயங்கு மாப்போல்
நடுநடுங்கி கிடுகி டென்று பயந்து நாங்கள்
தஞ்சமென்றே உனைப்பணிந்தோம் தணிகை வாசா
சற்குருவே பிராணபயந் தீரு மையா
பஞ்சகனைச் சிறைவிடுத்துத் தலையை வாங்கி
பரிகரித்து உன்னிருதாள் பதமே தந்து
வஞ்சனைகள் செய்யாமல் பழநி வேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே

அத்திமுகனே முக்கண்ணனுக்கு இளைய வேலா
அறுமுகனே தணிகையிலே அமர்ந்த வாசா
வித்திறத்திற் பேசாத மூடன் நானும்
வேலவனே நின்னருளால் கவியைப் போல
பத்துமே பதிகமாய்ப் பாடிச் சொன்னேன்
என்மீதில் பிழைகள்மனம் பொறுத்தே யாள்வாய்
சத்தியமாய் உனைப்பணிந்தோம் எங்கள் அய்யா
சண்முகனே அடியாரை ரட்சிப் பாயே



# அவனாசி பத்து

வற்றாத பொய்கை வளநாடு கண்டு
மலைமேலிருந்த குமரா
உற்றார் எனக்கு ஒருபேரு மில்லை
உமையாள் தனக்குமகனே
முத்தாடைதந்து அடியேனை யாளும்
முருகேசன் என்றனரசே!
வித்தார மாக மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே!

ஆலால முண்டோன் மகனாகி வந்து
அடியார் தமக்கும் உதவி
பாலூர(ல்) உண்டு கனிவாய் திறந்து
பயனஞ் செழுத்தை மறவேன்
மாலான வள்ளி தனைநாடி வந்து
வடிவாகி நின்ற குமரா!
மேலான வெற்றி மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே!

திருவாசல் தோறும் அருள்வே தமோத
சிவனஞ் செழுத்தைமறவேன்
முருகேசரென்று அறியார் தமக்கு
முதலாகி நின்றகுமரா
குருநாத சுவாமி குறமாது நாதர்
குமரேச(ர்) என்ற பொருளே!
மறவாமல் வெற்றி மயில்மீதிலேறி
வரமேணு மென்றனருகே!

உதிரந் திரண்டு பனியீர லுண்டு
உருவாசல் தேடிவருமுன்
ததிபோ லெழுந்த திருமேனி நாதர்
கடைவீடு தந்து மருள்வாய்
முதிரஞ் சிறந்த வயல்வீறு செங்கை
வடிவேல் எடுத்தகுமரா!
யதிராய் நடந்து மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே!

வேலும் மயிலும் துணை

மண்ணாடு மீசன் மகனாரை யுந்தன்
மலைவீடு தந்து மருள்வாய்
வண்டூரல் பாயும் வயலூரில் செங்கை
வடிவேல் எடுத்தகுமரா!
நன்றாக வந்து அடியேனை யாண்டு
நல்வீடு தந்தகுகனே!
கொண்டாடி வெற்றி மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே!

நீலஞ் சிறந்த குறமாது வள்ளி
நின்பாகம் வைத்தகுமரா
காலனெழுந்து வெகுபூசை செய்து
கயிறுமெடுத்து வருமுன்
வேலும் பிடித்து அடியார் தமக்கு
வீராதி வீரருடனே
சாலப் பரிந்து மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே!

தலைகட்ட நூலின் நிழல்போல நின்று
தடுமாறி நொந்து அடியேன்
நிலைகெட்டு யானும் புவிமீதில் நின்று
நெடுமூச் செறிய விதியோ
அலைதொட்ட செங்கை வடிவேற் கடம்பா
அடியேனை ஆளுமுருகா!
மலையேறி மேவுமயில்மீ திலேறி
வரவே ணுமென்றனருகே!

வண்டுண்டு பூவில் மதுவூரில் பாயும்
வயலூரில் செங்கை வடிவேல்
கண்டொன்று சொல்லித் திரிவார்கள் வாசல்
கடனென்று கேட்கவிதியோ?
வண்டூறு பூவிலிதழ் மேவும் வள்ளி
தெய்வா னைக்குகந்த வேலா
நன்றென்று சொல்லி மயில்மீ திலேறி
வரவே ணுமென்ற னருகே!

விடதூத ரோடி வரும் போது உம்மை
வெகுவாக நம்பினேனே
குறமாது வள்ளியிடமாக வைத்து
மயிலேறி வந்தகுமரா
திடமாகச் சோலை மலைமீ தில்வாழும்

திருமால் தமக் குமருகா!
வடமா னபழநி வடிவேல் நாதா
வர வேணு மென்றனருகே!

ஓங்கார சக்தி உமைபால் குடித்து
உபதேச முரைத்தபரனே!
பூங்கா வனத்தில் இதழ் மேவும் வள்ளி
புஜமீ திருந்தகுகனே
ஆங்கார சூரர் படைவீடு சோர
வடிவேல் விடுத்த பூபா
பாங்கான வெற்றி மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே!

ஆறாறு மாறு வயதான போது
அடியேன் நினைத்தபடியால்
வேறேது சிந்தை நினையாம லுந்தன்
ஆசாரசங்கமருள்வாய்
அசுரேசர் போல யமதூத ரென்னைத்
தொட்டோட கட்ட வருமுன்
மாறாது தோகை மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே!

கையார உன்னைத் தொழுதேத்த மனது
கபடேது சற்றுமறியேன்
அய்யா உனக்கு ஆளாகும் போது
அடியார் தமக்கும் எளியேன்
பொய்யான காயம் அறவே ஒடுங்க
உயிர்கொண்டு போகவருமுன்
வையாளி யாக மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே!

ஏதேது ஜென்ம மெடுத்தேனோ முந்தி
யிந்தப் பிறப்பிலறியேன்
மாதாபி தாநீ மாயன் தனக்கு
மருகா குறத்திக ணவா
காதோடு கண்ணை யிருளாக மூடி
உயிர்கொண்டு போகவருமுன்
வாதாடி நின்று மயில்மீ திலேறி
வரவேணும் மென்றனருகே!

# வெள்ளிமலை கந்தர் விளக்கம்

அரனுடைய நெற்றியில் அறுபொறிக ளாகவே
ஆங்கார மாயுதித் தாய்
அண்டம் நடுங்கிடவே சண்ட மாருதம் கிடுகிடென
அகில புவனங்கள் சுற்றி
அறம்பொருள் விளங்கவே உமையவள் கரத்தினில்
ஆறுமுக னாயுதித் தாய்
அன்பான கார்த்திகை பாலமிர்தம் உண்டவா
அழுகுபெற வந்த பாலா
சரவணப் பொய்கையில் பலவித லீலையும்
சரச உல்லாச குமரா
தரணி புகழ் மெய்யனே தாமரை இலையினில்
சரவணனே துயில் கொண்டவா
வீரசெக நாதனே ஞானப்பிர காசனே
வந்திடுங் கந்த வேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே

தங்கமுடி கிரீடமும் சென்னியில் சொலிக்கவே
செங்கைவடி வானதுரையே
சிங்கார வேல்முதல் பன்னிரண் டாயுதம்
செல்வனே தாங்கி நின்றாய்
அங்கமதில் வெண்ணீரும் சந்தனக் கதம்பமும்
அணியும்பட் டாடை ஒளியும்
அழகான மார்பினில் மோகனப் பதக்கமும்
அரும்புமண மாலையுடனே
செங்கடகம் தண்டைமணி கிண்கிணிச் சதங்கையும்
செவிகளணி குண்டலங்கள்
செம்பவள வாயனே எங்கள்குல தெய்வமே
செந்தா மரைப்பாதனே
வேங்கைமலை கங்கையும் தாங்கிவரும் காங்கேயா
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே

சீனிகற் கண்டுடன் அவல்பொரி கடலையும்
தேன்பாலும் முக்கனிகளும்
சீரான கொடிமுந்திரி ஆரஞ்சுக் கனிகளும்
திராட்சையும் இளநீருடன்

இனிப்பான எலுமிச்ச மாதுள விளங்கனி
இன்பரச கொளஞ்சிப்பழமும்
இனமுல்லை மல்லிகை செண்பகம் சாமந்தி
எவரோஜா பன்னீருடன்
மாநிலம் துதிக்கவே புனுகு சவ்வாதுடன்
மருவும் மருக்கொழுந்தும்
அபிஷேகம் செய்யவே தீபதூ பங்களுடன்
மனமகிழ வேபோற்றுவேன்
இனியவடி வேலனே கலிகாலன் ஓடவே
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

பிரணவ வேதத்தின் பொருள்கூறத் தெரியாத
பிரமனைச் சிறையில்வைத்தாய்
பரமனுக் குபதேச சிவஞான மூர்த்தியே
பாராள வந்தஅரசே
முறைகளது தவறாத சகல லோகங்களும்
முத்தொழில் புரிந்த தேவா
முனிவர்கள் தேவர்கள் கண்டு தயங்கிட
முச்சுடராய் நின்றதேவா
சூரனைச் சிதைக்கவே இந்திரன் முதலான
தேவர்கள் முறைகூறவே
சாரதி ஆகவே மாருதம்தேர் கொண்டு
செல்கிறார் முருகையனும்
வீர பட்டங்களும் நெற்றியில் துலங்கவே
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே

கனபேரிகை நாதசுரம் சங்கு சேகண்டியும்
கனகவாத்தியம் முழங்க
கயிலைமலை விட்டுநீ தேவர்படை சூழவே
கதிர்வேல் எடுத்து வந்து
மனவேக ரதமேறி வீரர்படை சூழவே
மகேந்திரம் அமர்ந்தவாசா
மாயா விதாரகன் சூரபத்மன் முதல்
மாவேலால் சம்கரித்தாய்
வனமயிலின் கர்த்தனே தெக்ஷிணாமூர்த்தி என்
வறுமையைத் தீர்க்கவருவாய்

வலியாரை வாட்டியே எளியாரை ரஷிக்க
வரவேணும் குகநேசனே
வானவரிடர் களைந்தவா இந்திரன் முடியேற்றி
வைத்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

அன்னையாள் குறைதீர நந்தவனம் காக்கவே
ஆறுமுகம் காத்தலிங்கம்
ஆனமுதல் மந்திரம் மலையாளச் சின்னானை
அடிமையாய்க் கொண்டலிங்கம்
உன்னையே யான்விட கதியொன்று மில்லையே
உத்தகண்ட காரவீரா
உள்ளன்பு கொண்டுதான் உந்தனது இணை அடியை
ஒருபோதும் மறவேன்அய்யா
துன்னவயிற் மேருகிரி செந்திநகர் எட்டுக்குடி
சென்னிமலை மேவுமுருகா
சுக்கிலமும் சஷ்டிதிதி ஐப்பசித் திங்களில்
சூரசம் காரமுருகா
விண்ணதிரு பண்டிதர் கண்டிகதிர் காமனே
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

சோலைகிளி வேல்விழியாள் வள்ளி பங்காளனே
துள்ளி மயிலேறு முருகா
துஷ்டரிடம் சிக்கிநான் தவித்திடும் வேளையில்
துணைபுரிய வாமுருகா
அலைகடல் சூழ்புவனம் மாங்கனிக் கிசைந்துவலம்
அரைநொடியில் வந்தமுருகா
அய்யன் பிடாரியொடு கும்பபடை யாவரையும்
அடக்கி வசமாளுமுருகா
காலந் துலங்கி வரமேலமுக வாசகா
நீல மயிலேறு முருகா
ஔவையார்க் கருள்புரிய கோவைகளை மேய்த்துநீ
நாவல்மரம் ஏறுமுருகா
வாலைமகன் சீலனே தணிகாசலம் விட்டுநீ
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

அம்புவியர் கொண்டாடும் ஆண்டிப் பண்டாரனே
அஞ்ஞானம் தீர்த்தாளுவாய்
அத்திமுக னுக்கிளைய சக்திவேலா யுதா
அசுரரைப் பொடிசெய்தவா
இன்ப துன்பங்களால் இறப்பும் பிறப்புமே
எந்நாளும் மாறிவருகுதே
இனிபிறப் பில்லாமல் பேரின்ப வீடடைய
மெய்ஞ்ஞானம் தாருமுருகா
செம்புலிங் கையனே தேவாதி தேவனே
செகமாளும் மயில்வீரனே
சீர்மேவும் சரவணையில் மச்சமாத் திரிந்திடும்
தேவர்களின் சாபம்தீர்த்தாய்
வெம்புனித வளர்நாடு திருவேளூர் மேவிய
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

எத்திசையோர்களும் உன்னையே புகழ் வாரே
எங்கும் நிறைந்த பொருளே
ஈராறு கையனே பன்னிரு விழியனே
ஏழைபங் காளவீரா
சித்துவிளை யாடுவாய் முத்துலிங் கையனே
செச்சைவாகனா வருகுவாய்
சடாக்ஷர மந்திர இருமூன்று அக்ஷரா
சங்கீத வீணையழகா
பக்தியுடன் தினகாலம் கடுகளவு நினைவோர்க்குப்
பாலன்வடி வேலன்வருவான்
பித்தனவன் புத்திரா சப்த சங்காரனே
புலவருனைப் போற்றுமுருகா
வாத்தியம் முழங்கவே கையிலைமலை விட்டுநீ
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.
பேயிருளன் காட்டேரி சடாமுனி இராக்ஷதர்
பூதப் பிசாசுகளுமே
பேதமுறும் சாமுண்டி சங்கிலிக் கருப்பனும்
பாதகமாய் எனைமிரட்ட
தயவாக உன்பெயரைச் சண்முகா வென்றிடச்
சாட்டையால் ஓட்டிவிடுவாய்

தம்பனம் மாரணம் வசியமுதல் பில்லியும்
சூனியம் வைத்தபேரைத்
தீயவன் வேரற சிவசுப்ர மணியனே
சூரமயிலேறி வந்து
சூலத்தால் குத்தியே மீளாத நரகினில்
செல்லவே தள்ளிடுவாய்
வாய்வேக மாகவே சேவல்கொடி பறக்கவே
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே

முந்தி முதலாகவே தாரகனைக் கொன்றவா
மூர்த்தியே கார்த்திகேயா
முன்செய்த வினையினால் வறுமையது கொண்டுமே
மேனியது வாடுதையா
கந்தனே காணாமல் கடைந்த தயிர்போலவே
கலங்கிநான் நிற்கும்வேளை
காலனை உதைத்தவன் குழந்தை வடிவேலனே
காட்சிஅளிக்க வருவாய்
வெந்தணல் மேனியாய் சுந்தர மூர்த்திக்கு
வேடரூப மானதேவா
வெண்ணீ றணிந்துமே ருத்ராஷ மாலையோடு
வேலுடனே நின்றமுருகா
வேதாந்தத் தம்பிரான் கடம்பவனம் விட்டுநீ
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

தேன்பாலும் சர்க்கரையுமினிய சுவை கனிரசமே
தெவிட்டாத செழுங்கரும்பே
தென்னாடு மேவுகுண சாதி மாணிக்கமே
தெள்ளமுதமான திருவே
அன்புருக கொடிய நோய் விஷகடிகள் தீர்க்கநீ
அருமருந்தான மணியே
அய்வேலன் காயுனுள் அமர்ந்தவன் மைந்தனே
அருஞ்சுடரான மணியே
நன்மணியே பொன்மணியே எனதுகண் கருமணியே
ஞானமணி தெய்வமணியே
நவமணியே தவமணியே குருமணியே சைவமணி

நயனசிவ சுப்ரமணியே
வின்புருவ தண்டமணி வீரபட்டாணி துரை
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

மாதாவின் கரமதால் தண்டித்த சேயுமே
மருகவே வந்துநிற்கும்
மரக்கலம் தங்கியே காகம் பறந்தாலும்
மீளவும் வந்து சேரும்
காதமலர் மெய்யனே பலதுறைகள் சென்றாலும்
கரையேற வழியில்லையே
கந்தா கடம்பனே சொந்தமாய் எந்தனைக்
கருணையுடன் ஆளவருவாய்
சதமென்று உன்னைநான் நம்பினேன் அப்பனே
சஞ்சலம் தீர்க்கவருவாய்
சம்பந்தராய் வந்து வாதுகள் புரிந்துமே
சமணரைத் தொலைத்ததேவா
வேதங்கள் போற்றிடும் கல்விக் கழகமே
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

தந்தைதாய்க் கன்பனே கந்தமலை வீட்டு நீ
தென்பழனி வந்தகுமரா
தினைப் புனத்திலே குறவள்ளியை மணந்திட
தேன்தினை மாவுண்டவா
நந்தி முதல் தேவரும் நாரதர் பிர்மாதி
நாதனைப் பணிந்துபோவார்
நாதமும் கீதமும் பரிமள வாசமும்
நறுமலரும் மணம்வீசுமே
பூந்தடம் சோலையும் தீர்த்தக் குளங்களும்
பார்க்கவெகு கண்காட்சியும்
புண்ணியம் பெருகவே பாவம் பறக்கவும்
புல்லாங்குழல் ஊதுவார்
வேந்தற்கு வேந்தனே நந்த கோவிந்தனே
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே

சித்திரக் கோபுரமும் தங்கக் கலசங்களும்
சிங்காரக் கொலுமேடையும்
சுற்றுமதிற் கோட்டையும் மாட கூடங்களும்
தென்பழனி மலைமீதினில்
சித்தர்கள் முத்திபெற வைத்த குமரேசனே
ரத்தினமணி தீபவொளியே
செல்வகுரு நாதனே சுவாமிமலை சண்முகா
சிவாலயமும் நின்றமுருகா
தோத்திரம் செய்கிறேன் நல்வர மளிக்கவே
தோகைமயி லேறிவருவாய்
தொண்டர்கள் வினைதீர்க்கும் சோலைமலை நாயகா
தெண்டனிடுவேன் சண்முகா
வெற்றி வேலாயுதா விராலிமலை விட்டுநீ
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே

முருகனைப் பணிந்திடும் இடும்பனுக் காகவே
முன்பூசை தானளித்தாய்
மூவாசை விட்டுமே முருகனை நினையவே
முக்தியும்தான் தருகுவார்
பாருலகிற் பங்குனி உத்திரம் நடக்குதே
பழனிக்கு இணையில்லையே
பக்தர்கள் காவடிகள் பாலாமிர்தங் கொண்டுமே
பலகோடி வருகிறார்கள்
பாரொழுகும் பஞ்சா அமிர்தமே உண்கினும்
பாவம் பறந்தோடுமே
பளபளென ஒளிவீசப் புரவிமே லமர்ந்துநீ
பசிப்பிணியைத் தீர்க்கவருவாய்
விருதுடனே தில்லைநகர் நடனபதி சேயனே
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

திருமாலின் மருகனே குருநாத மூர்த்தியே
செவ்வேள் தரித்தமுருகா
தேவர்கள் சிறைமீட்ட சூர சங்காரனே
தெண்டாயுத பாணியே
பொறுமையுடன் நினைவோர்க்குப் பொருளதவி சூழ விதரும்

பெருமிளகு முத்தையனே
போதக மாமுனிக்குத் தமிழ்ஞான உபதேசனே
சோதி மயமானதேவா
வரும்பிணிகள் நீங்கவே மருந்தொன்று மில்லையே
வெண்ணீறு தாருமுருகா
வேலவர்க் கிணையாக வேறொருவ வரில்லையே
வேங்கை மரமானதேவா
வீரர்படை துணைவர்கள் லட்சத்து ஒன்பதுமே
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

வானவர்க ளமுதமே அமணரை வதைத்திட
மகுடி குழலூதும்முருகா
வள்ளிக் கிசைந்துநீ தள்ளாத கிழவனாய்
வளையலிடும் செட்டிமகனாய்
ஜனனமுதல் காலம்வரை செய்திடும் பாவங்கள்
தீர்த்துமே வரமளிக்க
சச்சிதா னந்தனே சண்முகா எனக்குநீ
சாயுச்சபதவி தருவாய்
எனதுயிர் பிரியுமுன் நினைவு தடுமாறிடும்
உன்னையே நினைக்கமாட்டேன்
என்குறைகள் உந்தனிடம் அப்போது சொல்வதை
இப்போதே சொல்லிவைத்தேன்
உனதுகண் பார்வைதர தருணமிது எனைநாடி
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

வேலும் மயிலும் துணை

அழகான காவடிக ளானந்த மாகவே
ஆடிவருகுதே உன்சந்நிதி
அருகண்ட காவடிகள் அலகுகள் பூட்டியே
ஆவேசங் கொண்டுவருக
அழகுமயில் நடனமிட வள்ளிதெய் வானையுடன்
அருகில்வா சுப்பிரமண்யா
அனுதினமும் மனதினுள் உனைத்துதிய வழியறியா
அசடனையும் ஆளுமுருகா
கழுகுமலை சிவகொடிய எளியவன் புலம்புவது
கந்தனே உன்செவிகேளாதோ

கதிர்வேல் எக்குற்ற மெத்தனை இருப்பினும்
சித்தம்வை முத்தய்யனே
வேழமுகனுக் கிளைய வாலகும ரேசனே
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே

அல்லலும் தொல்லையும் வல்வினைகள் தீர்த்துமே
ஆதரித் தெனையாளுவாய்
அருணா சலத்தினில் அண்ணாமலைக் கதிபன்
அன்னக்கிளி யீன்றபாலா
நல்லோர்கள் நினைவினில் நடனமிடு முருகனே
நற்சுக மளிக்கவருவாய்
நானுனை நம்பினேன் சச்சிதா னந்தனே
நற்கோண மணிமார்பனே
சல்லாபச் செந்தமிழில் வில்லாள சொற்பிழை
எல்லாம் பொறுத்தருளுவாய்
சேல்விழியால் வேடச்சி திருக்கோவை கனிவாயாள்
தெய்வானை சிரோன்மணிகளும்
வல்லகதிர் வேலுடனே செம்பொன் மயிலேறியே
வந்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே.

## செந்தில் ஆண்டவன் தரிசன மகிமை

வீதிசுற்றிக் கீழ்புறமும் கடலுங் கண்டேன்
விஸ்தாரக் கொடிமரமு மங்கே கண்டேன்
ஆதியெனும் மூலமதை அங்கு கண்டேன்
அடியேனும் செந்தில்நகர் வலமாய் வந்தேன்
நீதிபுகழ் கோபுரமேற் புரத்திற் கண்டேன்
நிச்சயமாய் உனதழகைக் காண வேண்டி
ஆதியெனுங் கடற்கரையில் வந்து நின்றே
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே!

மந்தாரை பிச்சிமுல்லை வனமும் கண்டேன்
மணல்மேட்டு குவட்டழகு மலையுங் கண்டேன்
வந்தவர்நோய் பிணிதீர்க்கும் வளமுங் கண்டேன்
வருந்துகின்ற அடியார்க்கு வரமீயக் கண்டேன்

சிந்தா நவமணிவிளக்கு ஒளியுங் கண்டேன்
திருச்செந் தூராதிபனைக் காணவென்று
அந்தரமாய்க் கடற்கரையில் வந்து நின்றே
அதிரூப தெரிசனங்கண்டருள் பெற்றேனே!

நாழிநல்ல கிணறுதன்னை நானுங் கண்டேன்
நன்மைபெற தீர்த்தமது ஆடிக்கொண்டேன்
வாழிசொலு மறையோர்கள் தன்னைக் கண்டேன்
மண்டபமுந் திருமதிலுஞ் செந்தூருங் கண்டேன்
கோழியெனுஞ் சேவல்மயில் தன்னைக்கண்டேன்
குமரனிரு தாளிணையைக் காண வென்று
ஆழியெனும் கடற்கரையில் வந்து நின்றே
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே!

மூன்றுசுத்து மண்டபமுஞ் சுற்றிப் பார்த்தேன்
முன்னாலே வீரபத்ரன் தன்னைக் கண்டேன்
நானுமே மலைக்குடவு பெருமாள் கண்டேன்
நல்லவள்ளி சன்னதியும் பிறகு கண்டேன்
தேனுடன் பாலபிஷேகம் செய்யக் கண்டேன்
சிவனார் தம் பாலகனைக் காணவேண்டி
ஆனதொரு கடற்கரையில் வந்து நின்றே
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே!

ஆறுமுக நயினார் தன்னழகு கண்டேன்
அவருடைய சண்முகவி லாசங் கண்டேன்
கூறுமடி யார்கள் வினை தீர்க்கக் கண்டேன்
குன்றுருவ வேல்வாங்கி நிற்கக் கண்டேன்
வேறுவினை யணுகாம லிருக்கக் கண்டேன்
வேலவனார் தம்பதத்தைக் காண வென்று
ஆறுதலாய் கடற்கரையில் வந்துநின்றே
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே!

மங்களம்சேர் தெய்வானை தன்னைக் கண்டேன்
மதகரியும் வாசலிலே வரவுங் கண்டேன்
பங்கயஞ்சேர் பன்னிருகை வேலுங் கண்டேன்
பதைக்கமுத்து சரப்பளிகள் தன்னைக் கண்டேன்
தங்கமயக் கோபுரத்தில் தீபங் கண்டேன்
சங்கரனார் பாலகனைக் காண வேண்டி
அங்கசங்கமான கடற்கரையில் வந்து நின்றே
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே!

மாசி மாதம் திருவீதி சுத்திவரவுங் கண்டேன்

மனிதர்க்கெல்லாம் மடத்திலன்னம் வழங்கக் கண்டேன்
தேசிக்காய் சப்பரத்தின் சாயல் கண்டேன்
தினந்தினமும் பூச்சரங்கள் தூவக் கண்டேன்
வாசனையாம் பெரியோர்கள் தன்னைக் கண்டேன்
வள்ளியுட கணவனை நான் காணவென்று
ஆசையாய் கடற்கரையில் வந்து நின்றே
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே!

மாசிமகம் ரதமேறி வரவுங் கண்டேன்
மனிதரெல்லாம் கூடிவடம் பிடிக்கக் கண்டேன்
தேசிக்காய் சப்பரத்தின் சாயல் கண்டேன்
திருவருளும் பூச்சரங்கள் தொங்கக் கண்டேன்
நீதிபுகழ் சண்முகவி லாசங் கண்டேன்
நிச்சியமாய் உனதழகைக் காண வேண்டி
ஆதியெனும் கடற்கரையில் வந்து நின்றே
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே!

கஞ்சமலர்த் தாளிணையை நானுங் கண்டேன்
கதிர்வேலுஞ் சூலமுமுன் கையிற் கண்டேன்
செஞ்சமதிர் வேதியர்சம் பத்துங் கண்டேன்
தினந்தினமும் சந்தனாபி ஷேகம் கண்டேன்
வஞ்சமெனும் மாயமதை நீக்கக் கண்டேன்
மனதறிய வுந்தனை நான் காண வேண்டி
அஞ்சலெனும் கடற்கரையில் வந்து நின்றே
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

செகத்திலுள்ளோ ருன்பாதம் பணியக் கண்டேன்
தினந்தினமும் மறையோர்கள் துதிக்கக் கண்டேன்
சுகத்திலேநா னடியேனிருக்கக் கண்டேன்
துயரமெல்லா முன்பாதம் செல்லக் கண்டேன்
மகத்திலே ரதத்திலே வருமழகு கண்டேன்
மனதறிய உனதழகைக் காண வேண்டி
அகத்தியமாய்க் கடற்கரையில் வந்து நின்றே
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

வண்ணமயில் வாகனத்தில் வரவுங் கண்டேன்
மறையோர்கள் தினமுமன்னம் புசிக்கக் கண்டேன்
திண்ணமுடன் வள்ளிமனை தனையுங் கண்டேன்
தினந்தினமும் பள்ளியறை சேரக் கண்டேன்
கின்னரர்தம் பூர்வீணை முழங்கக் கண்டேன்
கிலேசமெல்லாம் தீர்ந்து உன்னைக் காண வேண்டி

அன்னம்போல் கடற்கரையில் வந்து நின்றே
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

## வாவா முருகா

கையகல நெஞ்சுண்டு ஆனால் உள்ளே
கடலளவு ஆசைபொங்கும் இருந்தபோதும்
ஐம்புலனும் முறையோடு அடக்கி வைத்தே
அனுதினமும் உன்நினைவே போற்றிக்காத்து
பையநடை போட்டுவுனைக் காண நாங்கள்
பழகுதமிழ்ப் பாட்டிசைத்து வந்தோம் எங்கள்
செய்தவறு பலவுண்டு இருந்தபோதும்

சீர்வேலா எமக்கருள ஓடி வாவா.
ஆடுமயிலேறி விளையாடும் உந்தன்
அழகுமிகு சுவாமிமலை அங்கே வந்தால்
காடுநடமாடு சிவன் ஐயம் தீர்க்கக்
காதோடு பேசி நிற்பாய் என்றே நாங்களும்
வாடுமெங்கள் உள்ளத்தின் ஏக்கம் நீங்க
வளர்சிங்கைபதி நோக்கி நடந்தே வந்தோம்
கோடியுண்டு எம்குற்றம் இருந்தபோதும்
குருநாதா எமக்கருள ஓடி வாவா.

எந்நாளும் உன்னருமை புகழே சொல்லி
இசையோடு கடல்பாடும் வீடாம் உந்தன்
செந்தூரில் வந்துமுறையிட்டால் எங்கள்
சிறுகுரல்கள் செவிகேளாதென்றே நாங்கள்
நெஞ்சுநிறை துன்பமெல்லாம் நீக்க வேண்டி
நெடுநடையாய் சிங்கையை நோக்கி வந்தோம்
தஞ்சமுற்ற எங்கள்பிழை நீக்கி இன்றே
தமிழ்வேலா எமக்கருள ஓடி வாவா.

பரங்குன்றம் மணமேடை ஆனதாலே
பலவேலை உனக்கிருக்கும் அங்கு வந்து
சுரங்கமெனும் எங்களுள்ளத் துள்ளே உள்ள
துயரத்தைச் சொன்னால் அதனைக் கேட்டு
இரங்கியுடன் வரமாட்டாய் என்றே நாங்களும்
எழிற்சிங்கைபதி நோக்கி நடந்து வந்தோம்
பெருந்தவறு பலசெய்தோம் ஆனபோதும்
பெருமானே எமக்கருள ஓடி வாவா.

முனிஞானி வள்ளியெழில் கூறக்கேட்டு
மூத்தாளைப் பரங்குன்றில் தனியே விட்டு
மனம்போல வள்ளியுடன் தணிகைக் குன்றில்
மகிழ்ந்திருக்கும் அந்நேரம் நீயும் எங்கள்
மனத்துயரம் கேட்டருள வாராயென்றே
வழிநடையாய் சிங்கையை நோக்கி வந்தோம்
கணக்கற்ற எங்கள்குற்றம் பொறுத்துக்காத்தே
கதிர்வேலா எமக்கருள ஓடி வாவா.

நலமாடும் தெய்வானை வள்ளியோடு
நாளெல்லாம் மகிழ்ந்தாட உள்ள வீடாம்
பலகனியும் மணமலரும் பூத்துச் சிந்தும்
பழமுதிரும் சோலையங்கு வந்து எங்கள்
பலகவலை சொல்லியழக்கூடாதென்றே
சிங்கையை நோக்கி நடைப் போட்டு வந்தோம்
பலதவறு நாங்கள் செய்தோம் ஆனபோதும்
பழம்பொருளே எமக்கருள ஓடி வாவா.

கன்றுவந்து மடிமுட்டி கத்தும் போது
கனிந்திரங்கி சுரக்கின்ற பசுவைப்போல
உன்னடியே கதியென்று கொண்ட எங்கள்
உளத்துயரம் தீர்த்தருள வேண்டும் ஐயா.
இன்னலுற்ற நாங்களுமே உன்னைக் காண
எழிற்சிங்கைபதி நோக்கி நடந்தே வந்தோம்
எம்தவறு எல்லாமும் பொறுத்துக் காத்தே
எழில்வேலா எமக்கருள ஓடி வாவா.

ஒருகனியை கணபதியும் பெற்றதாலே
உடன்கோபம் கொண்டவனே பழநிவேலா
பெருந்துயரம் தினம்பெருகி வந்த போதும்
பிறவொன்றும் எண்ணாது நாங்களும் உந்தன்
திருவடியே சரணமெனப் பற்றிக்கொண்டோம்
சிறியவருக் கருள்புரிந்து காக்க வேணும்
இருமாதர் புறமாடும் தங்க வேலா
ஏறுமயில் மீதேறிக் காக்க வாவா.

*திருவையாறு மீ.சேவுகஞ் செட்டி (1977 பதிப்பிலிருந்து எடுத்தது)*

# ஸ்ரீ சுப்ரமண்ய ஸப்தகம்

**வேலனே சக்தி மகனே! வேலனே சக்தி மகனே!**

கந்தனே! கடம்பனே! கருத்தினில் உறைந்திடும்
கருணை வடிவான குகனே!
கண்களோ பன்னிரண்டிருந்திடினும் ஏழையைக்
காக்க ஒரு கண்ணுமிலையோ!
சிந்தனை முழுவதும் சிதறிடா வண்ணமுன்
செம்மலர்ப் பாதங்களே
சரண் என்று கொண்டுனைச் சந்ததம் பாடினேன்
செவிகளில் விழவில்லையோ
வந்தனை செய்துனை வாழ்த்தியே நாளெல்லாம்
வணங்கிடும் சிறுவன் என்னை
வாழவே வைப்பதும் வேலனே உனக்கு ஒரு
விளையாட்டுச் செய்கை யன்றோ!
வந்தெனை இக்கணம் வலியவந்தே
அருள வேண்டியே பணிந்து நின்றேன்
வளமான திருத்தணியில் வந்து நிதம்
வாழ்கின்ற வேலனே! சக்தி மகனே! (வேலனே)

எத்தனை விதங்களில் என் அப்பனே!
உன்னையான்! எப்படிப் பாடினாலும்
எத்தனை இடங்களில் என்ஜயனே!
உன்னையான்! எப்படி நோக்கினாலும்
எத்தனைபேர் சொல்லி என் குறைகள் யாவுமே
எடுத்து நான் கதறினாலும்
ஏலாமல் இன்னுமேன் என்னையே சோதித்து
எள்ளி நகையாடுகின்றாய்!
உத்தமன் உன்னையே ஓர் துணை என்று நான்
உறுதியாய் பற்றி நின்றேன்
உடனே உன்மயில்மீது ஓடோடி வந்தெனது
உறுவினைகள் யாவும் களைவாய்
பித்தனின் மைந்தனே! பக்தியாற் பிதற்றுமிப்
பித்தனையும் ஆண்டருள் வாய்!
பெருமைபொலி செந்தூரில் புகழ்சேர ஒளிர்கின்ற
பாலனே சக்தி மகனே! (வேலனே)

கதியாக உன்பதங் கருத்தினில் கொண்டு நான்
கதறியே அழுகின்றதும்
கொடுமையாம் வறுமையிற் குமைந்து நான்
உன்னருளைக் கூவியே தொழுகின்றதும்
பதியான உன் செவிகள் பன்னிரண்டிலொன்றிலுமே
பதியாமல் இருப்பதேனோ
படுதுயரம் இனிமேலும் படமுடியாதப்பனே
பார்த்தருள் புரிகுவாயே!
விதியான தென்னைமிக வாட்டியே வதைத்திடவும்
வேறொன்றும் செய்வதறியேன்
விழிகளில் நீர் பெருக வீழ்ந்துநான் கதறுவதை
வேடிக்கை பார்ப்பதழகோ
துதிபாடி உன்னையே தொழுகின்ற என்துயர்
துடைப்பதுன் கடமையன்றோ!
தூய்மைசேர் பழநிதனில் தனியாகத் தவங்கொண்ட
தூயனே! சக்திமகனே! (வேலனே)

மாயவன் மருகனே! மாகாளி மைந்தனே!
மனத்தினில் என்றும் வதியும்
மாயா சொரூபிணியும் மலையரசன் மகளுமாய்
மாசக்தி வேல் கொண்டவா
தூயவன் உன்னையான் தினமுமே பாடியும்
திருவுளம் இரங்க விலையோ!
துதிப்பதில் பிழையேது மிருப்பினும் தயவாகப்
பொருத்தருள் தள்ளிடாதே!
நீயெனைத் தள்ளிடினும் நானுனது பாதமே
நம்பினேன் நாளும் ஐயா!
நெஞ்சமும் உருகியே நீராக விழிகளில்
நாளெல்லாம் ஓட நானும்
ஐயனே உன்னடிகள் அடைக்கல மென்றடைந்திட்டேன்
ஆண்டரும் செய்குவாயே!
அழகான ஏரகத்தது அமருமொரு குருவே! என்
அன்னையாம் சக்தி மகனே! (வேலனே)

பாரதனில் பிறந்திட்டுப் பலகஷ்டம் தான்பட்டுப்
பாவியேன் மிகவும் நொந்தேன்
பார்த்தருள் புரிகுவாய்! பார்வதியின் மைந்தனே
பாலனே! கருணை செய்வாய்!
பேரெதுவும் வேண்டிலேன்! புகழ் வேண்டேன்

உன்பாதப் புகலொன்றே போதுமப்பா!
பேதை நான் படுந்துயரைப் புரிந்து நீ
அருள் புரிந்து பாரெல்லாம் வாழவைப்பாய்
ஆரெதும் சொல்லிடினும் அத்தனையும் உன்னடியின்
அர்ப்பணித் தமைதி கொள்வேன்
ஆதரவு நீயன்றி யாருமெனக் கில்லையென
அன்றே நான் கண்டுகொண்டேன்
ஊரதனில் உறைந்தாலும் உள்ளத்தில்
என்றுமே உன்னை நான் சிக்கவைத்தேன்
உயர்வான பழமுதிர் சோலைதனில் உறைகின்ற
ஒருவனே சக்தி மகனே! (வேலனே)

அஷ்டமா சித்திகளும் அண்டியுன் பாதமே
அடைபவர்க்கருள விலையோ!
அற்புதங்கள் பலவாக அனுதினமும் உன்னருளால்
அகிலத்தில் அமைவ திலையோ?
கஷ்டமே நிறைந்திட்ட கர்மவினையாமென்னும்
கடலிலே தள்ளிவிட்டாய்!
கடக்குமொரு தோணியாய்க் காட்சியும் தந்தெனைக்
காப்பதுன் கடமை ஐயா!
துஷ்டனாம் சூரனைத் துண்டு துண்டாக்கியே
தேவர்கள் துயர்தீர்த்தவா!
தொல்வினைகள் சூழ்ந்தெனைத் தொல்லை செய்யாமலே
தடுத்தெனைத் தாங்கி நிற்பாய்!
இஷ்டமாய் உன்னை என் இதயத்தில் என்றுமே
ஏற்றனன் என்னை ஏற்பாய்!
இலகுபுகழ் பரங்குன்றில் இருமாதர் இணைந்துறையும்
இன்பனே! சக்தி மகனே! (வேலனே)

வேலும் மயிலும் துணை

எத்தனை ஜென்மங்கள் எடுத்தேனோ தெரியாது
இப்பூமி தன்னில் ஐயா
இனியேது ஜென்மமும் இவ்வேழைக் கில்லையென
இரங்கிநீ அருள வேண்டும்
முக்திநீ தரவேண்டி முழுவதுமே உன்னை நான்
முக்காலும் நம்பி வாழ்வேன்
முன்பின்னும் தெரியாது! மூவாசை ஒழித்து நான்
முடிவினில் உன்னைச் சேரவே
அத்தனே! அருட்பதம் அண்டினேன்! அடியனை
ஆண்டருள் செய்கு வாயே!
அன்புடன் என்னை நீ அரவணைத் திகபரம்

இரண்டிலும் வாழ வைப்பாய்
பித்தனாம் எளியேனின் பிதற்றமிலாப் பனுவல்
பாடும் உன் பக்தர் எல்லாம்
பாரிலே சீர்பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடவே
போற்றினேன்! சக்தி மகனே! (வேலனே)

## சிங்கை முருகன் பாமலை

ஒருகால் நினைத்தாலும் இருகால் சிலம்பதிர
ஓடோடி வரும் ஐயனே
ஓராறு படைவீடு போதாமல் ஏழாக
என்னுள்ளம் சேர்ந்து விட்டாய்.
கருவாய் புகுந்த நாள்முதலாய் இந்நாள்வரை
கருத்திலே கலந்து விட்டாய்.
காதலால் உன் பெருமை ஓதுவேன் இனி
எதிர்காலமுனது வசமே
வருவாய் தொழில்தேடி வந்தவர் மலர்மாலை
வரிசைபெற வைத்த பொருளே
வந்த இடம் நிலையான சொந்த இடம்
ஆக்கிய வள்ளலே மூலமுதலே
வருவாய் எழுந்தருளி தருவாய்என்விண்ணப்பம்
செவி ஏற்றருள் முருகனே
சிங்கப்பூர் நகரிலே குடிகொண்ட தெய்வமே
தெண்டாயுதக் கடவுளே!

கால் நோகும் எங்களது மேல் நோகும்
என்றுதான் காடுமலை நீக்கினாயோ
கருத்தாய் உனைப்போற்றும் திருத்தன வணிகரின்
கவின் கோயில் தங்கினாயோ
வேல்நோக்கி வள்ளியின் மேல்நோக்கம் கொண்டநீ
வேலிலே விந்தை செய்து
மீனாட்சி சொக்கருடன் தானாட்சி செய்யவே
மேன்மையாய் இங்கு வந்து
பால்பழம் தேனுடன் பன்னீரும் கொண்டுமே
நீராட்டும் பக்தருக்குப்
பரிவாகப் பலகோடி வரம்தரப் பாங்குடன்
பால தெண்டாயுதனென
சேல்நோகு கன்னியாள் திருப்பரங்குன்றிலே
தெய்வானை காத்திருக்க

சிங்கப்பூர் நகரிலே குடிகொண்ட தெய்வமே
தெண்டாயுதக் கடவுளே!

அப்பனே உனைநான் காண வருவேன்நெஞ்சினிலே
அன்புமலர் கொண்டு வருவேன்
அதுவேண்டும் இதுவேண்டும் எனஉன்னை ஒருபோதும்
அல்லல் செய்யாது தொழுவேன்
தப்பாமல் உன்னையே ஏத்துவேன் தயாமுதல்
என்றுனைச் சாற்றி நிற்பேன்
தெண்டாயுதத்தானின் தாள்மலர் சதமென
தஞ்சமாய்ப் பற்றி நிற்பேன்.
எப்போதும் உன்னையே நம்புவேன் வம்புஏன்
ஏது செய்தாலும் அகலேன்
என்னையும் திருவடிக் கன்பனாய் என்றுமே
எண்ணுவாய் வேறு புகலேன்
செய்யாதமேனிலை சிந்தை யார்தனவணிகர்
திருவுள்ளம் கொண்ட குமரரா
சிங்கப்பூர் நகரிலே குடிகொண்ட தெய்வமே
தெண்டாயுதக் கடவுளே.

ஆற்றுப் படைகேட்டு அன்று நக்கீரனை
அருஞ்சிறை திறந்து விட்டாய்
அருணகிரி நாவிலே அழகுத் தமிழாகநீ
அட்டமா சித்தி தந்தாய்
பேற்றியலுயர் ஔவைப் பிராட்டியுடன் விளையாட
பிள்ளையாய்க் கனிகள் தந்தாய்.
பொய்யாத கானத்திலே பொய்யாமொழிப் புலவன்
பேதமை நீக்கி விட்டாய்
சாற்றுக்கவி மாலைதரு கூத்தர்க்கு அன்றுநீ
தங்க மணிமாலை தந்தாய்
சாமிஉன் அருளாலே வந்ததொரு ஊமையை
சகலகலை உணர வைத்தாய்
தேற்றிஎமை ஆட்கொள்ளும் தெய்வமே எம்மீது
திருவுள்ளம் இறங்கி அருளாய்
சிங்கப்பூர் நகரிலே குடிகொண்ட தெய்வமே
தெண்டாயுதக் கடவுளே.

கருணாகரக் கடவுள் எனவேதம் போற்றிடும்
கந்தனே உமை மைந்தனே
கவியுகக் கடவுளே கண்கண்ட தேவனே

கருணை முகஅர விந்தனே
அருணகிரி பாவிலே நடமிடும் பாதனே
ஆனந்த சங் கீதனே
ஆதாரம் ஆறினும் மேலான தத்துவ
அதிதீதனே குரு நாதனே
சரணமென வந்தவர் மரணபயம் போக்கிடும்
கிரணக் கலாப மயிலாய்
தருணமிது எமையாள வருகவெனப் போற்றினோம்
சாமிநீ தங்கி அருள்வாய்
திரணமென யாவையும் உதறி உன்பதமலர்
திடமாகப்பற்றி நின்றோம்
சிங்கப்பூர் நகரிலே குடிகொண்ட தெய்வமே
தெண்டாயுதக் கடவுளே.

*-திருமதி சரஸ்வதி இராமனாதன்*

## சிங்கை ஸ்ரீ தண்டாயுதபாணி

சிங்கை நகராளும் ஸ்ரீதண்ட பாணியே
சிரம்தாழ்த்தி வணங்கி நின்றோம்
சிக்கலைத் தீர்த்திடும் சிங்கார வேலனே
உன்னையே வேண்டி நின்றோம்.
கடல்கடந்து வந்தோரைக் காத்திடும் தெய்வமே
கவலையைப் போக்க வருக
கதியென்று உன்னையே வணங்கிடும் பக்தரைக்
காத்திட விரைந்து வருக!
அன்னையாய் தந்தையாய் அனைத்துமாய் நிற்கின்ற
ஆறுமுக வேலன் நீயே
அண்டிவரும் நோய்களை அடியவரின் துயரத்தை
அனுதினமும் நீக்கு வாயே!
உனையன்றி வேறொருவ ரிலைஎன்று உணர்ந்தஎன்
உணர்வினைக் காத்த ருள்க
உண்மைப் பரம்பொருளே உலகத்தைக் காக்கின்ற
உயர் தண்டபாணி துணையே!

தரணியில் உதித்த நாள்முதல் உனையன்றி
வேறோருவர் அறிந்தது இல்லை!
தண்டாயுதம் அன்றி தெய்வங்கள் வேறில்லை
என்றே வாழ்ந்து வந்தேன்!
அறியாத பருவத்தில் தெரியாமல் செய்த
தவறுகளும் உன் செயலே!

அறிந்த பருவத்தில் அறிவு தெளியாமல்
அலைந்ததும் உன் செயலே!
புரியாத பிறப்பினில் புரிந்தது போலவே
நடித்ததும் உன் செயலே!
இருப்பதும் இறப்பதும் பிறப்பதும் நடப்பதும்
பரம்பொருள் உன் அருளே!
உன்னருள் என்றுநான் அறிந்த பின்னர்
என்னால் நடப்பது ஏது!
உன்னடிமை என்னையே ஆட்கொண்டு காத்திடுவாய்
உயர் தண்டாயுதபாணி துணையே

பாரெல்லாம் வாழவும் பாவிகள் மாறவும்
பரமனே அருள் புரிவாய்!
ஆசைகள் அனைத்துமே அடியோடு அழிந்திட
ஆறுமுகனே அருள் புரிவாய்!
ஆறுபடை வீடுகள் அன்புடனே கொண்டவா
அகிலத்தைக் காத்து அருள்வாய்!
நல்லோர்கள் வாழவும் தீயோர்கள் திருந்தவும்
நல்ல வழி காட்டிடுவாய்!
அன்பான பெரியவர்கள் செழிப்பாக வாழ்ந்திட
செல்வனே வழி வகுப்பாய்!
அன்போடும் பண்போடும் அகிலத்தில் வாழவே
ஆறுமுகனே அருள் தருவாய்!
அன்போடு பணிந்திடும் அன்பரின் வாழ்க்கையில்
சுகம் அனைத்தும் வழங்கிடுவாய்!
சிரம்தாழ்த்தி வணங்கிடும் அடியவரைக் காத்திடுவாய்
உயர் தண்டாயுதபாணி துணையே

திரைகடல் தாண்டியே திரவியம் தேடவே
திக்கெட்டும் சென்ற போதும்!
ஏழைப் பங்காளனே எம்குல நாயகா
உன்னையே தொழுது நின்றோம்!
ஓமென்ற மந்திரத்தை ஓயாமல் செபித்துமே
உன்னடியைப் பணிந்து நின்றோம்!
ஓங்காரப் பொருளாக ஓராறு முகம்கொண்ட
ஒப்பற்ற தேவன் உன்னை!
வாயாரப் பாடியே மனதார வணங்கியே
வளம்வேண்டி வணங்கி நின்றோம்!
வற்றாத அருட்கடலே வளமான வாழ்க்கையினை
வழங்கிடவே எழுந்து வருவாய்!

காவடி தாங்குவோர் கேட்டதை ஈந்திடும்
கருணை வடிவான பொருளே!
சிங்கை நகர்தனிலே சிறப்பாக வீற்றிருக்கும்
உயர் தண்டாயுதபாணி துணையே

பலகல்வி கற்றாலும் பலநாடு சென்றாலும்
மனம் உன்னை மறந்ததில்லை!
போதைகள் தலைக்கேறி பேதையாய் அலைந்தாலும்
உன்னை நினையாமல் இருந்ததில்லை!
இன்பமும் துன்பமும் வாழ்க்கையினைச் சூழ்ந்தாலும்
வணங்காமல் இருந்தது இல்லை!
சிற்றின்பம் பேரின்பம் என்று சுகமனைத்தும்
வாய்த்தாலும் தொழாமல் இருந்ததில்லை!
எத்தனை சோதனைகள் எத்தனை இன்னல்கள்
எனைவாட்டி வதைத்த போதும்!
என் நண்பனாம் துணைவனாம் இறைவனாம்
முருகனை அழைக்காமல் இருந்ததில்லை!
இருக்கின்ற போதிலும் இறக்கின்ற போதிலும்
என்னருகே இருக்க வேண்டும்!
நண்பனாய் துணையிருந்து நல்வழிகள் காட்டிடுவாய்
உயர் தண்டாயுதபாணி துணையே.

அழகு காவடிகள் தாங்கியே அடியவர்
உன்னையே தேடி வருவார்!
ஆணி செருப்புடன் அடிமேல் அடிவைத்து
உன்னையே நினைத்து வருவார்!
அகமெல்லாம் உன்நினைவால் அங்கமெல்லாம் துடிதுடிக்க
உன்னையே வேண்டி வருவார்!
வேண்டிவரும் அடியவரின் விருப்பத்தை நிறைவேற்ற
அழகுமயில் ஏறி வாவா!
இயந்திரமாய் சுழன்றிடும் இவ்வுலக வாழ்க்கையின்
இச்சையைத் தீர்க்க வாவா
இச்சகத்தில் அடியவர் அனுபவிக்கும் இன்னலைக்
கண்டுமனம் இரங்க வில்லையா
யாரிடம் முறையிடுவோம் எங்ஙனம் தொழுதிடுவோம்
ஏறுமயில் ஏறி வாவா
ஏறுமயில் ஏறிவந்தே எங்களைக் காத்திடுவாய்
உயர் தண்டாயுதபாணி துணையே

தைப்பூச நாயகா தரணிபுகழ் ஐயனே
தமிழாலே பாடு கின்றோம்
தளராத மனத்தோடு அடுநோய்கள் அண்டாத
வாழ்க்கையினைத் தந்து அருள்வாய்
விதியாலே மதியிழந்து செய்த பாவங்களை
மன்னித்தே ஏற்று அருளுவாய்
அண்டிவந்த பயமனைத்தும் ஆறுமுகா என்றிட
அடியோடு விலக வேண்டும்
அன்போடு உன்னையே அனுதினமும் பணிந்து
நான் உன்னருள் பெறவும்வேண்டும்
அன்றாட ஆசைகளில் சிக்கி தவியாமல்
அனைவருக்கும் உதவ வேண்டும்
அன்பான மனைவியோடும் பண்பான பிள்ளைகளோடும்
சிறப்பாக வாழ வேண்டும்
வேண்டுவரம் அத்தனையும் மறுக்காமல் தரவேண்டும்
உயர் தண்டாயுதபாணி துணையே

வேலாக நின்றவன் வேண்டுவரம் தருபவன்
சிங்கை நகர் தண்டபாணி
வழிவழியாய் வணங்குபவர் வாழ்க்கையினை
வளமாக்கிடுவான்
சிங்கை நகர் தண்டபாணி
அடிபணிந்து வணங்கிவிட்டால் அன்போடு கூப்பிட்டால்
ஓடோடி வந்து நிற்பான்
அயராமல் அவன் நாமம் பாடித்துதிப்போரை
அனுதினமும் காத்து நிற்பான்
ஆறுமுகனே கதியென்று அவன் திருவடிபற்றிவிட்டால்
அல்லல்கள் இல்லை அப்பா
அச்சுறுத்தும் நோய்களும் பயமுறுத்தும் இன்னல்களும்
அடியோடு விலகும் அப்பா
மாசில்லா மனத்தோடு மன்னவன் முருகனை
வணங்குபவர் உயர்வு காண்பர்
எல்லா வளங்களும் ஏற்றமுற தந்திடுவான்
உயர் தண்டாயுதபாணி துணையே

*லெ. சக்தி குமார்*

வேலும் மயிலும் துணை

## குன்றக்குடி குமரன்

மன்றாடி ஈன்றமகன் குன்றக்குடி முருகன்
மலைமீது நிற்கின்றானே
மன்றாடி நாமவனைக் கொண்டாடி வழிபட்டால்
மடிமீது நிற்பான் தானே
நின்றாடி வணங்கிடுவோம் நிதம் அவனைத்
தொழுதிடுவோம்
நீங்கிவிடும் துயர மெல்லாம்
நீலமயில் ஏறிவரும் பாலகனைத் துதித்திடுவோம்
நிதம் நமது வாழ்க்கை எல்லாம்
குன்றாடி வரும் வேலா குன்றக்குடி பாலா
குழந்தை வடிவேலா வா! வா!
குறையெல்லாம் போக்கி நிதம் கோபுரமாய்
வளங்களெல்லாம்
குறையாமல் தருக வா! வா!
இன்றோடி வருகின்றோம் இருமாதர் புடைசூழ
எழுந்தோடி விரைந்து வருவாய்
இன்றோடு துயரெல்லாம் எமைவிட்டு அகன்றுவிட
இருவிழியால் வரங்கள் தருவாய்

*-கவிஞர் மா. கண்ணப்பன்*

## தண்ணி மலையே!

அலைகடலுக்கப்பாலே மலைநாட்டில் அமைந்திருக்கும்
அழகான தண்ணி மலையே!
அலைபாயும் மனத்திடையே சிலநேரம் துதித்தாலும்
அருள்வானே தண்ணி மலையே!
விலைபோட முடியாத மலையளவு வளங்கொண்ட
பினாங்கு நகர்த் தண்ணி மலையைத்
தலையாட மனமாடத் தமிழ்பாடித் துதிப்போர்க்குத்
தலையாய செல்வம் வருமே!
கலம் ஏறிப் பினாங்குநகர் கண்டார் தமையெல்லாம்
காப்பாற்றும் தண்ணி மலையே!
நலம்தந்து நிலம்தந்து அருள் தந்து பொருள் தந்து
பாலிப்பான் தண்ணி மலையே!
மலைநாட்டில் அமர்ந்தவனை மனவீட்டில் கண்டவர்க்கு
மயிலேறும் தண்ணி மலையான்
கலையாத பெருவாழ்வும் நிலையான சுகவாழ்வும்
கண்முன்னே கொண்டு தருவான்!

*-கவிஞர் மா. கண்ணப்பன்*

## பொறுமைக்கும் எல்லை உண்டே

சிறுவயது முதற்கொண்டே திருச்செந்தூர் முருகனை நான்
தினந்தோறும் வணங்கி வந்தேன்
இருவிழிகள் திறந்தவுடன் பழநிமலை ஆண்டியை நான்
இதயத்தில் வணங்கி வந்தேன்
பொறு மனமே பொறு அந்த அறுமுகத்தின் அருளாலே
போயொழியும் துன்பம் என்று
பொறுத்தேனே! பொறுத்தேனே! பொன்பழநி ஆண்டவனே
பொறுமைக்கும் எல்லை உண்டே
ஒருபதிலும் கூறாமல் அருள் எமக்குத் தாராமல்
ஓடினால் என்னசெய்ய
ஓயாமல் நடக்கின்றேன் தாயான பெருமானே
வழிகாட்டு நானும் உய்ய
உறவினரும் உனையன்றி உதவுதற்கு ஒருவரில்லை
ஓடிவா! பழநி வேலா!
ஓடோடி நீ வந்து உன்பாதம் தொழுவோரை
உய்விப்பாய் குழந்தை வேலா!

*கவிஞர் மா. கண்ணப்பன்*

## மலைமேவு முருகன்

துன்ன கயிலாய கிரி மேருகிரி கந்தமலை
தோகைமலை கயிலை மலையான்
சோலைமலை மேவிய விராலி மலை மன்னிய
சுவாமி மலையுஞ் சிறந்த
சென்னிமலை வேளுர் கடம்ப வனமேல் வயல்
திருவருணையின் கோபுரமும்
திரு வாவினன்குடி பரங்கிரி திருத்தணி
சிவாலயம் திருவேரகம்
இன்னில மதிக்குந் திருச்செந்தில் முதலான
எண்ணப் படாத கோடி
எத்தலமும் நின் கருணை வைத்து விளையாடல் விதம்
எத்தனை யெனச் சொல்லுவேன்
தன்னை நிகரொவ்வாத பன்னிருகை வேலவனே
சரச கோபாலன் மருகா
சதுர் மறைகளே தந்த பரமகுரு வாய்வந்த
சரவண பவா னந்தனே!

## சண்முகா வருக வருக

சரவணையி லேபிறந் தாறுமுக வடிவான
சண்முகா வருக வருக!
தர்க்கமிடு சூரனை திக்கவேல் விட்டதொரு
சுவாமியே வருக வருக!
அரவணையில் மால்மருக குமரகுரு பரனெங்கள்
ஆறுமுகா ஓடிவருக!
அலைகடலின் மகரமீன் ஓடி விளையாடிய
அமரர்பதி வருக வருக!
கருவணையில் நற்சதுரமேல் நின்று நடனமிடும்
கணபதி துணைவன் வருக!
கடிய எண்ணாயிரம் சமணரை வதைத்திடும்
கந்தனே ஓடி வருக!
மருவணையில் பெண்ணாட உலகமது காக்கின்ற
வடிவேல் இலங்கு கரமும்
வாலவய தாயுனது வாழ்மயில் ஏறிநட
மாடிவரு முருகேசனே!

## சரவண முருகன்

தரணிதனில் அறுபத்து அறுகோடி தீர்த்தமும்
சரவ ணத்துள் அடக்கம்
சாற்றுமோர் எழுகோடி மந்திரங் களுமுன்
சடாக்ஷ ரத்துள் அடக்கம்
விரதமிகு நவகோடி சித்தர்களும் உனதுசுப
வீக்ஷணத் தனில் அடக்கம்
மேலான தேவால யங்களும்உன் ஆறுபடை
வீட்டி னிற்குள் அடக்கம்
இரவிமுதல் முப்பது முக்கோடி தேவருமுன்
இதயக் கமலத் தடக்கம்
ஈரேழு புவனமுதல் அண்டங்கள் பலவும்உன்
இடத்தினில் அடக்கம் ஐயா
வரிசைமிகு பக்தஜன பரிபால னாமோக
வள்ளி குஞ்சரி மணாளா
வனசமலர் அயன்மதனை அருள்சரச கோபாலன்
மருகசர வண முருகனே

## ஆறுபடை வீடமர்ந்த ஆறுமுகன்

செந்தூரில் விளையாடிச் சிறப்புக்கள் பலசெய்து
சிந்திக்கவைத்த முருகா!
பந்தங்கள் போக்கியென் பாவங்கள் நீக்குவாய்
பழநிவாழ் இனிய குமரா!
அந்தமிழ் வாழ்க்கையில் அல்லல்கள் போக்கிடும்
அழகர்மலை யாளுமுருகா
உந்தனடி பாடுதற்கு எந்தன்மன மேடையமர்
திருமால் தனக்கு மருகா
கயிலாய வாசன் மகிழ் கல்யாணக் கோலம்
திருப்பரங்குன்றத்தில் வாழும் குகனே!
உயிருக்கு மூலமாம் ஓமென்ற பொருளுரைத்த
உன்கோலம் சுவாமிமலையில்
ஒயிலாக வேல்கொண்டு உன்கருணை விழியாலே
உலகாளும் தணிகை யோனே!
மயிலேறி வருவாய்நீ மக்கள் நலம்சேர
மலைதோறும் ஆடுமெழிலே!

## தண்டாயுதபாணி துணையே

ஆனைமுகன் தம்பியே அம்பிகை பாலனே
அடியாரைக் காக்கும் பாலா!
ஆறுமுக வேலனே அகிலத்தைக் காக்கவே
அவனிதனில் உதித்த தேவா!
தேவர்க்குத் தேவனே தெய்வானை மணவாளா
தேடிவந்து உனைப் பணிந்தோம்!
பணிந்தவர் துயரத்தைப் பறந்துவரும் மயிலேறி
பாலிக்கும் தேவன் உன்னை
மனதாரப் பாடுவோர் மனையினில் எழுந்தருளி
மகிழ்ந்தாட வைக்கும் பொருளே!
சிங்கை நகர்தனிலே சிறப்பாக வீற்றிருக்கும்
தண்டா யுதபாணி துணையே!
சிங்கப்பூர் நகர்தனிலே செம்மையுடன் நகரத்தார்
சிறப்புடனே போற்றி வந்தார்!
சீரான திருப்பணிகள் சிங்காரமாய்ச் செய்து
சிரம்தாழ்த்தி வணங்கி நின்றார்!
வணங்கிடும் அடியார்க்கு வளங்கள் பலதருகின்ற
வள்ளலே எம்குல தெய்வமே!
சோதனைகள் வந்தாலும் வேதனைகள் தொடர்ந்தாலும்

வேல் விடுக்கும் கவியமுதமே!
உளமுருகிப் பாடுவோர் உளமெலாம் எழுந்தருளி
உயர்ந்தோங்க வைக்கும் அரசே!
சிங்கை நகர்தனிலே சிறப்பாக வீற்றிருக்கும்
தண்டா யுதபாணி துணையே!

*லெ. சக்திகுமார்*

## தண்டாயுதத்தானைக் கொண்டாடு மனமே

ஆலோலம் பாடுகுற வள்ளியம்மை கழுத்தில்
அணியாரம் இட்ட பெருமான்
ஆகாயம் பூமியிடை நீராவிபோல் வடிவில்
ஆதாரமான பெருமான்

மேலாளர் கீழாளர் பேதங்கள் இல்லாது
மெய்யாள வந்த பெருமான்
மின்னாகி இடியாகி மழையாகிக் காற்றாகி
விளைவாகி நின்ற பெருமான்

கோலாலம் பூரில்வளர்கோன் தண்டபாணி இவன்
கோவில் கொண்டாடு மனமே
கூற்றேதும் வாராது கொடுநோயும் சேராது
குறையாத வாழ்வு மிகுமே!

'ஓம்'என்ற சிறுமுட்டை உள்வீடு அவன்வீடு
உன்வீடும் அந்த இடமே
ஓசைக்கு மணியுண்டு பூசைக்கு மணமுண்டு
உன்வாழ்வு கந்தன் வசமே

நாமென்ற ஆங்காரம் நமதென்ற எக்காளம்
நடவாது வேலனிடமே
நடக்கட்டும் பார்ப்போ மென்றிருக்கட்டும் உன்உள்ளம்
நலம் யாவும் வீடுவருமே

கோமன்னன் வாழ்கின்ற கோலாலம்பூர் செந்தூர்
கொடிகட்டி ஆள விடுமே
கொண்டாடு கொண்டாடு தண்டாயுதத் தானைக்
குறையாத செல்வ மிகுமே!

*-கவியரசு கண்ணதாசன்*

# தென்பரங்குன்றம்

வேலாவா கந்தாவா குமரா வாவா
மெஞ்ஞானப் பொருளேவா மீனாள் ஈன்ற
பாலாவா எனது கலி துன்பம் தீர
பன்னிரண்டு கண்ணதனால் பார்க்க வாவா

சேலாடும் நயனவள்ளி பங்கா வாவா
திருமால் தன் மருகாவா சேவலாய் வாவா
ஆலாலம் உண்ட கண்டன் புதல்வா வாவா
அரகரா தென்பரங் குன்றையா போற்றி

வண்டாடும் மலர்சோலை உன்னதானால்
வள்ளியம்மை யெனையீன்ற தாயுமானாள்
தண்டாயுதம் உனது கையில் வேலுமானால்
தெய்வானை யெனை ஈன்ற தாயுமானாள்

கொண்டாடும் மாதுகுற வள்ளி தன்னை
கோலமணம் சூட்டிவைத்த குழந்தை யாண்டி
பண்டாரம் நீருமானால் என்னைக் காரும்
பச்சைமயில் வாகனரே பாதம் போற்றி.

ஈராறு காதிலே நான்சொன்ன மொழியெலாம்
யெள்ளளவும் கேட்கவிலையோ
இக்கலி யுகத்திலே பற்பல கிரியிலே
யென்னென்ன புதுமைசெய்தாய்

பாருலகில் பெரியமெய்ஞ் ஞானபண் டிதாவுந்தன்
பன்னிருகண் ணில்லையோசொல்
பாவையர்கள் மோகமாய் அருணகிரி செந்தமிழ்
பாட்டுமேல் நினைவுற்றவா

தீரனே பொற்கடக மணியுமணி மார்பனே
தேவர்பணி பொற்பாதனே
செட்டி மகனே தங்கக் கட்டி மணியே யிந்த
தந்திரம் செய்யலாமா

தீர வொய்யாரா செந்தூரா சங்கரா
சேவற் கொடிக்கதிபா
தேவர்சிறை மீட்டுஞ் செல்வாஎன் திருமுகம்
பார்த்தருள் தென்பரங் கிரிவேலனே!

# கவலையைத் தீர்க்கும் கடவுள்

ஆர் ஆர் இருக்கினும் என் கவலை மாற்றுவது
ஆறுமுகக் கடவுள் என்று
அவனிமுதல் ஐம்பத்து அறுகாத தேசமும்
அறியாதவரும் உண்டோ
ஈராறுகையனே இருமூன்று முடியனே
இனியகனி வாய் அழகனே
எட்டு எட்டு அறுபத்து நாலான தோளனே
ஏக கண போகமான
கார் ஆறும் மேனிகரிமுகனுக்கு இளையனே
கழுகாசல ஆறுமுகனே
கற்றறிஉற்றனே சித்தப்ர சித்தனே
கந்தப்பன் ஆதி தேவே
தார் ஆறும் ஐயனே துய்யனே ஐயனே
சரிசரி வரவேணுமே
தரணிதனில் மயில் மீதில் விளையாடி வருகின்ற
சண்முகக் குமர குருவே

எத்தனை கவியமுதம் பாடியும் தேடியும்
இரங்காத வாறும் ஏது
ஏழைக்கு இரங்குவது சரவணப் பெருமாள்
இருக்கிறார் என்று உரையும்
சித்தர் முதல் வாக்கியம் கூறியது பொய்யோ
சிவ சுப்பிரமணிய நாதா
தென்பொதிகை மாமுனிக்கு உபதேசம் அன்றுநீ
செப்பியதும் யான் அறிகுவேன்.
முத்தனே முதல்வனே முடியனே அடியேனை
முன்னின்று காக்க வாவா
முச்சுடருக்கு உரிய திருநாதனே வேதனே
முப்புராதி அன்பர் குருவே
சப்தரிஷிமாதவா தாதவா கீதவா
தமிழ்நாடும் வாக்கு முதலே
தரணிதனில் மயில் மீதில் விளையாடி வருகின்ற
சண்முகக் குமர குருவே.

ஈராறு காதிலே யான்சொன்ன மொழியிலே
எள்ளளவும் கேட்க வில்லையோ
இக்கலியுகத்திலே பற்பல கிரியிலே
என்னென்ன புதுமை செய்தாய்

பாரதனிற் பெரிய மெய்ஞான பண்டிதா
பன்னிரு கண்ணில்லையோ
பாவையர்கள் மோகமாய் அருணகிரி செந்தமிழ்
பாட்டின்மேல் நினைவுற்றவா
தீரனே பொற்கடகம் அணியும் அணிமார்பனே
தேவர்பணி பொற்பாதனே
செட்டிமகனே தங்கக்கட்டிமணியே இந்தத்
தந்திரம் செய்யலாமா
திராகெம் பீரா ஒய்யாரா செந்தூரா செஞ்
சேவற் கொடிக்கதிபா
செம்பொன் அம்பல சீலசண்முகம் அருள்பாட
தென் பரங்கிரி வேலனே.

## காவிரிபோல் வளர்வோம்

அள்ளிக் கொடுப்பதில் வல்லமை பெற்றவன்
அப்பன் பழனியப்பன் - தினம்
அச்சம் தவிர்ப்பவன் ஆறுதல் சொல்பவன்
அப்பன் பழனியப்பன்

கள்ளம் கபடம் இலாதவர் தம்மிடம்
காவலில் நின்றி ருப்பான் - அங்கு
கால்நடை யாய்வரும் மானிட ஜாதியைக்
கண்டுகளித்தி ருப்பான்.

துள்ளிவரும் வடிவேலுக்கு மேலொரு
ஜோதிப் பிழம்புமுண்டோ? - அந்தச்
சுப்பையன் போலொரு அற்புத தெய்வத்தைச்
சொல்ல மொழியுமுண்டோ!

வெள்ளிமுகம் பனிரெண்டையும் கண்டபின்
வேறொரு சொர்க்கமுண்டோ? - ஆண்டி
வேஷத்திலாயினும் வீரத்திலாயினும்
வேலனை வெல்வதுண்டோ!

சித்தர் வணங்கிய சேவற் கொடியோனைச்
சேர்ந்து வணங்கிடுவோம் - அந்தச்
சிக்கலிலாயினும் செந்திலிலாயினும்
சென்று கனிந்து நிற்போம்!

பக்தருக்கென்று திறந்திருக்கும் தென்
பழனியைக் கண்டுகொள்வோம் - அங்கு

பாலாபிஷேகமும் தேனாபிஷேகமும்
செய்து பணிந்திடுவோம்!

செட்டி முருகன் எனும் பெயர்பெற்றவன்
தண்டாயுத மல்லவோ - அந்தச்
சித்திர வள்ளியும் சாடையில் மற்றொரு
செட்டி மகளல்லவோ!

கொட்டிக் கொடுப்பவன் கோவிலைப் பார்த்திட
கோஷ மிட்டோடிடுவோம் - முள்ளும்
குத்தட்டுமே கல்லும் தட்டட்டுமே வலி
கொஞ்சமும் கண்டுகொள்ளோம்!

ஆறும் அறுபதும் ஆனஇருபதும்
ஆடிநடந்து செல்வோம்-சில
ஆனந்தப் பாடல்கள் வேலனைப் பாடட்டும்
அன்புடன் ஊர்ந்து செல்வோம்!

ஊறுகள் நேரட்டும் உமையவள் மைந்தனை
உச்சத்தில் வைத்திருப்போம் - கையில்
உள்ளதை அன்னவன் கோவிலுக்கே தந்து
மிச்சத்தில் வாழ்ந்திருப் போம்!

வேலன் குமரன் முருகன் திருச்செந்தில்
வேட்டுவன் கந்தனுக்கு - இரு
கால்கள் நடக்கின்ற நடையினில் தானுயர்
கனிவு நிறைந்திருக்கு!

காலம் வழிவிடும் கச்சிதமாய் சென்று
கால்களிலே விழுவோம் - அவன்
கால்களிலே விழ கால்கள் நடக்கட்டும்
காவிரிபோல் வளர்வோம்!

*கவியரசு கண்ணதாசன்*

## ஆறுமுகம் ஓடிவருக!

ஆனைமுக வாயும்மை அனுதினம் நம்பினேன்
ஐங்கரன் ஓடிவருக
ஆறுமுக சுவாமியின் பேரினில் கதைபாட
அன்புடனே ஓடி வருக

சதுரமனை பிரம்மனும் அன்னவாகன மேறி
சரஸ்வதியுடன் வருக வருக
பரமனும் பார்வதி சிவபகவான் மேறிய

பண்புடன் வருக வருக

சேவிசயனத்தில் ரெங்கரும் அலமேலு மங்கையும்
சீக்கிரம் வருக வருக
தசரதர் புத்திரர் பரிராமர் லெஷ்மணர்
சீதையுடன் வருக வருக

கெருட வாகனமேறும் ராதா ருக்மணியுடன்
கிருஷ்ணனும் வருக வருக
சிங்க வாகனமேறும் சிங்கள நாச்சியம்மனும்
வினத்தில் வருக வருக!

சிங்கம்புணரி வாழ் சேவுக மூர்த்தியே
சீக்கிரம் வருக வருக
அங்கேயே குடியிருக்கும் எங்கள் பொன் தேவதையும்
அருகினில் வருக வருக

செகுட்டையனாரும் சேவுகப்பெருமானும் என்
முன்னமே வருக வருக
அண்ணனும் தம்பியும் அழகான புரவிஏறியே
யந்திரங்க வருக வருக

சொக்கநாதர் வாழுகின்ற சோனைக்கருப்பரும்
ஐயனாரும் வருக வருக
கள்ளிச்சி காளியும் கருப்பனோடு முன்னோடி
கூடவே வருக வருக

மந்தையிலே குடியிருக்கும் எங்கள்
மாரியும் வருக வருக
சிந்தையிலே வீற்றிருக்கும் சிவசொக்கரும்
துணையுடன் வருக வருக

மொட்டை அம்மனும் முண்டகக் கன்னியும்
கைகோர்த்து ஆடி வருக வருக
கோட்டையம்மனும் கொப்புடை அம்மனும்
கூடவே வருக வருக

வலங்கையில் குடியிருக்கும் பாடைகட்டி
மாரியும் வருக வருக
சலங்கை ஒலி கேட்கவே சந்தனமாரியும்
சடுதியில் வருக வருக

கண்ணையே காக்கின்ற கண்ணாத்தாள்
தாயும் வருக வருக

புஷ்பச் சீவிகையின் மீதினில் விளங்கும்
அம்பாளும் மாரியும் அருகினில் வருக வருக

அக்கின பானத்தை அதிரவே பொடி செய்யும் அன்னை
காமாட்சி வருக வருக
அஷ்டதிக்கிலுள்ள துஷ்டரை அதம் செய்யும்
அங்காளி அம்மன் வருக வருக

முப்பத்து முக்கோடி தேவர்கள் முனிவர்கள்
என் முன்னமே வருக வருக
நாற்பத் தொன்னாயிரம் ரிஷிகளும் முனிவரும்
நடனப் பெண்ணாடி வருக வருக

எமதர்மராஜனும் எருது மேலேறியே
என் முன்னமே வருக
ஆனை வாகனம் அமரும் ஐயனாரும், முனிவரும்
ஆடியே வருக வருக!

இத்தனை பேர்களும் இங்கு வந்திருக்கையில் ஏனோ
ஆறுமுகம் வரவேயில்லை
எங்கேயோ ஞாபகம் எவ்விடத்தில் சிந்தையோ
என்மேல் மனஸ்தாபமோதான்

நாலைந்து வருடமாய் நித்திரை இல்லையே
நாதனைப் பார்க்க வேண்டி
அன்னம் புசிக்கலை தண்ணீர் குடிக்கலை
நற்சுகம் பெறவேயில்லை

வருகிறார் வருகிறார் வருகிறார் வருகிறார்
வண்ணமயிலேறியே கந்தன்
சங்கு நாதங்களும் எங்கேயோ கேட்குதே
சண்முகம் வருவதாக

காலினில் வெண்டயம் கலகலவென தண்டையும்
கனகமணி சத்தத்தோடு
காவியுடை யணிந்து கவச குண்டல மணிந்து
கான மயிலேறிக் கந்தன்

கடம்பனொரு காவடி இடும்பனொரு காவடி
காணாத லட்சம் கோடி
கண்டவர்கள் பாடவும் கைகொட்டி ஆடவும்
கந்தவேல் நின்றாடவும்

வேலும் மயிலும் துணை

கடம்பவனத்தை அதம் செய்த ஐயனே
கதிர் கொடுத்து நீயும்
கடகடென மயிலேறி வள்ளி தெய்வானையுடன்
வருவாய் கதிர்காமவேல் முருகனே

அடிபடுது அடிபடுது மேலதாளங்களும் ஆறுமுகம் வருவதாக
இடிபடுது இடிபடுது மத்தளம் பேரிகை
எமலோகம் கிடுகிடுங்க மயில் வருது மயில் வருதுமன்ன
ஆருடை வாகனம் திடுதிடுக்க

வேல்வருது வேல் வருது வீரகண்டாமணி
விண்ணுலகம் நடுநடுங்க
அதிர்வேட்டு பீரங்கி அசுரவே விழுகுது
அமரலோகம் கிடுகிடுங்க

திருதாமரை சங்குநாதம் சத்தமும் பொழியுது
சிவலோகம் நடுநடுங்க
பிசாசுகள் பிணிகளும் பேரழிவென்றோடுது
பீரங்கி சத்தம் கேட்டு

வேதாளம் பேதாளம் பூதமும் ஆடுது
வேட்டுடை வோசை கேட்டு
கதறுகிறேன் பதறுகிறேன் ஓலமிட்டழுகிறேன்
கந்தனே கண் திறந்து

கடகடென மயிலேறி வள்ளி தெய்வானையுடன்
வருகுவாய் கதிர்காம வேல்முருகனே
ஈசன் மகிழ்பொதிகை முனிக்குருவுமாகி
ஈராறு கையினில் வேலுமேந்தி

பாசமுடன் மயிலேறி அசுரரைவென்று பண்பான
அமருடை துயரம் தீர்த்து கவி நான்சொல்ல
தேசினார் கதிர்காம வேலவர் மீதில் தீர்க்கமுள்ள
மாசில்லா பரஞ்சோதி ஒற்றைக் கொம்பன்
மலரடியை அனுதினமும் வணங்குகிறேனே.

*புலவர் கந்ததாசன்*

# தமிழாலே அழைத்தவுடன் தாவும் பாலா

தமிழாலே அழைத்தவுடன் தாவும் பாலா
தங்க நிறச்செங்கதிர் போல் மின்னும் வேலா
அமிழ்தூறும் ஆறுமுகம் அமைந்த கோவே
அன்பூறும் மனந்தோறும் மலரும் பூவே
உமிழூறும் உன் பெயரைச்சொல்லிச் சொல்லி
உள்ளுருகி வருகின்றோம் வினையைத்தீர்க்க
சிமிழுக்குள் குங்குமம் போல் பழனியப்பா
சிந்தைக்குள் முகம் காட்டி சிரிப்பாயப்பா

விலைவாசி போலுயர்ந்த மலைகள் தோறும்
வினைவாசி குறைந்தொழிய விளங்கும் வேலா
அலைவீசும் திருச்செந்தூர்க்கடலைப் போல
ஆயிர நூறாயிரமாய் அன்பர் கூடி
மலைவாழும் உனைக்காண நடையைக் கொண்டோம்
மனவாழை அன்பென்னும் கனியைச் சிந்தக்
கலைவாழும் பழநி மலை ஆண்டியப்பா
கதிகாட்டி மனங்களிலே கனிவாய் அப்பா

சீர்தோறும் சிறந்து வரும் தமிழுக்குள்ளே
தினந்தோறும் குளிப்பதனால் சிவந்த வேலா
கார்தோய வளர்ந்து வரும் மலையின் மேலே
கணந்தோறும் வாழ்வதனாற் பொழியும் கையா
நீருயர மலர்கின்ற பூவைப் போல
நெஞ்சுயர மலர்பவனே உன்னைக் காண
ஊர் கூடி வருகின்றோம் பழநியப்பா
உளந்தேடி கால்பாவி ஒளிர்வாய் அப்பா

வழிநெடுகப் பலகாரம் தந்து நிற்பார்
வாயார உன் புகழே பாடி நிற்பார்
ஒளி பெறவே உன்னருளைப் போலி னிருக்கும்
உண்ணீரும் இளநீரும் உதவி நிற்பார்
களிபெருகி உன்னடியார் செல்லும் காட்சி
கலி தீர்க்கும் உன் இனிய காட்சி என்பார்
வழி நடப்பார் எல்லோரும் பழநி யப்பா
வழிநடக்க மனந்தோறும் மலர்வாய் அப்பா

முருகப்பா வேலப்பா பழனியப்பா
முத்தமிழால் வைதாலும் உவந்து நெஞ்சம்
பருகப்பா தருகின்ற பாடல் எல்லாம்
பண்புடையார் சிறந்தோங்க பார்ப்பாயப்பா

முருகப்பா கந்தப்பா உயிருக்குள்ளே
உயிரப்பா என விளங்கும் ஒப்பில்லப்பா
திருகப்பா வேரோடு வினையை என்று
சேவிப்பார் சிந்தையிலே திகழ்வாயப்பா

கதிர்காட்டும் பச்சை நிறக் கழனியெல்லாம்
கண்காட்டும் உன் மயிலின் தோகை காட்டும்
முதிர்காட்டும் தன் குலையால் வளைந்த தென்னை
முனவணங்கும் உன்னடியார் முதிர்ச்சி காட்டும்
புதிர்காட்டும் உலகத்தில் அன்பே ஆண்டால்
புழுவுடலும் உன்னருளின் புனிதம் காட்டும்
குதிகாட்டும் நீரருவி மலையில் வாழ்வாய்
குறை நீக்கும் உன்னருளிற் குளிக்கச் செய்வாய்

பாலான வெண்ணீற்றில் படியும் போது
பழமான உன் மேனி பளிங்காய்த் தோன்றும்
மேலான சந்தனத்தில் விளங்கும் போது
விரிகதிரோன் முகஞ்சிவந்து வெட்கிப்போவான்
காலான தாமரையில் பாலும் தேனும்
கரைபுரண்டு நிற்கையிலே கடலுந் தோற்கும்
வேலா உன் பேரழகைப் பழநிக் குன்றில்
விரைந்துண்ண வருகின்றோம் விருந்து வைப்பாய்

தாய் பிரிந்த குழந்தைக்குத் தாயே ஆவாய்!
தாளிழந்த முடவனுக்குக் காலே ஆவாய்!
வாயிழந்த ஊமைக்கு வாயே ஆவாய்!
வகையிழந்த ஏழைகளின் வங்கி ஆவாய்!
நோயுற்ற உடலுக்கு மருந்தே ஆவாய்
நொந்தழுதால் முந்தி வரும் கந்த வேளே!
சேய்காண வருகின்ற தாயைப் போலத்
திசைநோக்கி வருகின்றோம் தினமும் காப்பாய்

வடிவேலா என்னாத வாயும் வாயோ?
மயிலேறும் உனைக்காணாக் கண்ணும் கண்ணோ?
படியேறி வாராத காலும் காலோ?
பண்பாளன் பெயர் கேளாக் காதும் காதோ?
அடிமலரை வணங்காத கையும் கையோ?
அருள் மணத்தை நுகராத மூக்கும் மூக்கோ?
படிமீது மானிடராய் வாய்த்த தோற்றம்
பயன் பெறவே அருள் கொடுப்பாய் பழநி யப்பா
வேலெடுத்த உன்னருமைப் பெயரெடுத்தால்

வினையெடுத்த இப்பிறவி நடையெடுக்கும்
பாலெடுத்த உன்முகத்தைப் பார்த்திருந்தால்
பசியெடுத்த அன்பருயிர் பண்பெடுக்கும்
வாலெடுத்த உன்மயிலின் வனப்பைக் காண
வனமெடுத்து வாழ்க்கையிலே வண்மை மயங்கும்
காலெடுத்தான் திருமகனே பழநியப்பா
கையெடுத்து வருவோரைக் காப்பாயப்பா

*முனைவர் அர. சிங்காரவடிவேலன், கண்டனூர்*

## செந்தூரில் வாழும் முருகா!

வண்டாடும் குழல்மாதர் கண்டாடும் மயில்மீதில்
வந்தாளு கின்ற குமரா!
வங்காளக் கடல்மீதில் தன்காவல் முறைகாக்கும்
சிங்கார வடிவே லவா!
பண்டாரம் எனவாகிப் பழனியில் மலைஏறிப்
பாலிக்க வந்த முருகா!
பண்பாளும் நிலைகூடிப் பல்லாண்டு நினைவாகி
பணி செய்தோம் பழனி வேலா
தண்டாயு தம்கொண்டு தன்னேரில் அருளார்வம்
தந்தாளும் கார்த்தி கேயா!
தந்தான தனதான சந்தங்கள் தமிழோசை
தந்தாள ஓடி வா வா!
செண்டாடு மாதிருவர் சீராடிக் கலைகூட்டச்
செந்தூரில் வாழும் முருகா
சிரித்தாலும் சினந்தாலும் சேர்ந்தாலும் பிரிந்தாலும்
செம்மையாய்க் காக்க வா வா!

*-கவிஞர் அரு. நாகப்பன், உ.சிறுவயல்.*

## கொடுமளூர் முருகன் பதிகம்

பூ மேவு சண்முக விலாசமும் மீராறு
புருவமும் கிரீடமுடியும்
பொட்டுநுத லும்கனக குண்டலமும் அருண்மாரி
பொழியும் ஈராறு விழியும்
வாய்மேவு செம்பவள வாய்மந்த காசமும்
மாலையணியுங் கழுத்தும்
வாகுகே யூரமும் ஈராறுபுய முங்கையும்
வடிவேலும் அபயகரமும்
தாமேவு மெஞ்ஞோப வீதமணி மார்பும்
சாத்துதிரு வுத்தரியமும்

தாமரைப் பாதமுந் தமியனேன் காணப்ர
சன்னமாய்க் காட்சி தருவாய்
கோமேவுமி ந்திரன் முதலமரர் தொழவவுணர்
கோனுயிர் குடித்ததளவாய்
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே

வளர்தரு திருப்பரங் குன்றுதிரு வேரகம்
வயலூர் திருக்குடந்தை
மாயூர கிரிகுன்று தோறாடல் சோலைமலை
வளர் சுப்ரமணிய பேரூர்
களந்தையரு ணாசலம் விராலிமலை தோகைமலை
கதிர்காமம் வையாபுரி
கங்கைநதி பாய் பழநி செந்தூர் திருத்தணிகை
கல்லூர் விருபாட்சி சீர்
அளந்திடுங் காவளூர் வேங்கட செங்குளஞ்(ம்)
(அ)மைந்தபே ரூராதியாம்
அற்புதத் தலமேவு நாயகா தற்சமயம்
அன்புவைத் தெனையாளுவாய்
குளந்தரு கணானுக்கு மெஞ்ஞான தேசிகா
கூவிடும் காலாயுதா
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே

சரவணபவா கனகமயில் வாகனா அசுர
சங்கார கோலாகலா
தகரேறு காங்கயா பரமகுரு நாயகா
சண்முகா கார்த்திகேயா
அரவணை முராரி மருகா கோடி சூரியப்ர
காசவருள் வாசாலகா
யானைமுகனுக்கிளைய வேலாயுதா தெய்வ
யானை புணர் சுப்ரமணியா
பிரணவச டாட்சர மகா மந்தர தந்திர
ப்ராதாபா குறத்தி கணவா
பெண்ணரசி கன்னிதிரு சூலிநெடு நீலியுமை
பெற்றபுத் திரவிசாகா
குரவணையு நின்பாத சேவைதந் தென்னையாட்
கொள்ளுகதிர் காமநாதா
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே

சந்தன விருட்சமும் கற்பக விருட்சமும்
தங்கப்ர காசமான
சந்தான தாருவும் மந்தாரமும் தெய்வ
தாருவும் பாரிசாத
சுந்தர விருட்சமும் சண்பக விருட்சமும்
சோதியும் சாம்பிராணியும்
சூதமர மும்பலா வாழைமர முக்கனி
துலங்குவட வாலெனச் சொல்
பைந்தரு விருட்சமும் குங்கும விருட்சமும்
பார்த்திப விருட்சவகையும்
பாதிரி விருட்சமுங் மொட்டுடை விருட்சமாப்
பாரிற்ப்ர சித்தியாகிக்
கொந்தமர் விருட்ச நிழல் வந்துவிளை யாடுனது
கோலத்தை யென்ன சொல்வேன்
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே

நக்கனரு ளால்வந்து மனவேக ரதமேறி
நால்வாய் முகத்தாருகன்
நல்வச்ர வாகங்கி முகவனுட னேமேக
நாதனாம் பானு கோபன்
எக்கலிடு மூவாயி ரம்புதல்வர் மந்திரிகள்
ஏழாயிரத்து நால்வர்
எதிரேறு சிங்கமுகன் சதிசூரன் சுரேந்
திரன் படைத் தலைவர் முதலோர்
திக்கதல மிக்கவரு அசுரரொடு சூரரைச்
செயித்து நட மாடுமயில்மேல்
தேவர் சிறை மீட்கவேயேறி வரு நின்மகிமை
செப்புதற் கெளிதாகுமோ
குக்குடவி நோதனே (ஆ) யாறுமுக கம்பீர
கோதண்ட பாணிமருகா
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே

ஆடாது சித்து விளையாடலாம் திக்கு விச
யம் செய்து வெற்றிபெறலாம்
ஆசுகவி மதுரகவி சித்ரகவி தாரகவி
யானந்த மாய்ப் பாடலாம்
ஈடாரு மில்லாத தேவரை யழைத்துடன்
இரும்பையும் பொன்னாக் கலாம்

இந்தர சாலத்துடன் மயேந்திரசா லங்கள்செய்
தெங்கும்ப்ர சித்திபெறலாம்
தாடாவு மிருகத்தின் வாய்கட்டி வேட்டையின்
தந்திரங்களும் புரியலாம்
தாழாத இவையெலாம் அய்யநின் னருள் பெறுந்
தன்மைக்கு நிகராகுமோ?
கோடானு கோடிமனு வந்தடி பணிந்திடுங்
கோதகல் சுயம்பிரகாசா?
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே

சம்புவுக் குபதேசம் வைத்தாய் அன்றியுஞ்
சம்பந்த மூர்த்தியாகிச்
சமணர்களை வெங்கழுவி லிட்டவா ! நித்தியத்
தத்துப்வப்ர காசமாக
நம்பினவர் அன்புகொண்ட அவரவர் நினைத்தவரம்
நல்கியே ஆதிரித்தாய்
நக்கீர தேவர்சிறை மீட்டாய் சிறைக்குளே
நான்முகத் தவனைவைத்தாய்
உம்பருக் கும்தயவு செய்தாய் குறத்திபால்
ஓங்குசெவ் வேங்கைமரமாய்
உற்றருளி னாய்அருண கிரிநாதர் செந்தமிழ்
உகந்தாய் உளத்திருந்து
கும்பமுனி வனதனக் கருள் செய்தாய் நின்மகிமை
கூறுதற் கெளிதாகுமோ?
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே

சித்திமதி லுந்திருப் பாதமே கெதியென்று
சிந்திக்கும் அன்பருக்குச்
செல்வமுண் டாம்சகல கல்வியுண் டாம்புவன
தேசப்ர சித்தியுண்டாம்
நித்திய சரீர்முண் டாம் இலக் குமிகருணை
நிலவுங் கடாட்சமுண்டாம்
நிகரில் பலலெட்சசது ரங்கபல முண்டாம்
நெடுஞ்சமரில் வெற்றி யுண்டாம்
புத்ரசந் தானமுண் டாம்சகல பாக்கியப்
போக போக்கிய முண்டாம்
புத்தியுண் டாநல்ல முத்தியுண் டாமுனது
புகழினை யுரைக்கலாமோ

கொத்தடிமை குடியடிமை யாமுழுது என்னையாட்
கொண்ட கதிர் காமவேலா
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே

பாரமாய் உன்பாத சேவைசெயும் அன்பரைப்
பாவந் தொடர்ந்திடாது
பஞ்சகலி நாடாது கண்ணேறு நாவேறு
பஞ்சபா வந்தொடாது
சோரசா ரக்கிரியை சாமானி யப்பில்லி
துட்டமிரு கம்தொடாது
சொற்பனமு மாதாளி பண்ணாது பொறிவிடந்
தொடராது பூதம் அகலும்
கூரான வன்பிணிகள் நேராது நின்மகிமை
கூறுதற் கெளிதாகுமோ
குக்குட விநோதனாஞ் சமரமுக கெம்பீர
கோலவடி வேலாயுதா !
கோரரண வீர செய நீர வடியார்க்குதவு
குல தெய்வ மெஞ்ஞானமே
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே

கையிலாச நாதர்நித் தியகலி யாணிபதம்
கருணா கடாட்சமுண்டாம்
கல்வாச னாட்டிளசி மேவுபெரு மருதூர்
கதிக்குநக ரப்ரதாபன்
செயலாளி திண்ணப்ப வணிகன் அருளால் வந்து
சென்மித்த வெள்ளையப்பன்
செம்மைசேர் தருராம் நாதமதி யூகிதரு
செல்வவான் பழனியப்பன்
தயைமேவு சுப்ரமணி யாவென்று கூப்பிடச்
சந்தான பாக்யநல்கிச்
சந்தாங்க முங்கொடுத்து எத்தேச காலமும்
தற்காத்த தெய்வம் நீயே
குயில்கூவு சோலைமலை செந்தூர் திருப்பரங்
குன்றிலுறை யுங்க டம்பா
கோகனக வாவிபுடை சூழ்கொடு மளூர்மேவு
குமரகுரு பரமுருகனே

*சவ்வாது புலவர் இயற்றியது*

# சிங்கார மாலை

வானோங்கு தென்பழனி வளர்ந்தோங்கும் மன்னவனே
தேனோங்கு செந்தமிழால் தினமோங்கத் தெண்டனிட்டோம்
மானோங்கு மாதருடன் மயிலேரும் வானவனே
வானோங்கும் செங்கதிரே வருவாய் இதுசமயம்,

கையிற் பழமேந்திக் கருத்தில் உனையேந்தி
மெய்யாக வழிபடுவார் மேலாக்கும் வேலவனே
வெய்யிலுக்கு விரிநிழலே வினைநீக்கும் மாமருந்தே
வையா புரிநாடா வருவாய் இதுசமயம்,

மஞ்சாடும் மலைதோறும் மயிலேறும் வேலவனே
நெஞ்சாடும் கவலை எல்லாம் நீதீர்க்க வேண்டுமையா
தஞ்சமென வந்தவரை தாயெனவே ஆதரிக்க
வஞ்சியரின் நாயகமே வருவாய் இதுசமயம்,

காளைத் தவிசோறும் கண்ணுதலான் கண்மணியே
பாளைச் சிரிப்பழகா பழனிமலை ஆண்டவனே
ஆளை அளக்காமல் அன்பை அளந்ததுடனே
வாளைபுரள் வாயா வருவாய் இதுசமயம்,

அப்பா எனக்கூவி அழைப்பதுவும் இப்புவியில்
தப்போயான் கூறும் தமிழும் கசப்பதுவோ
ஒப்பாரும் இல்லாத ஓங்கார வேலவனே
சுப்பையா மயிலேறி தோன்றிடுவாய் இதுசமயம்,

முல்லை மலர்போன்ற முத்துசிரிப்பழகா
எல்லை வருவோரின் இடர் தீர்க்கும் வேலவனே
கல்லான வன்மனமும் கனியாக்கி வைப்பதிலே
வல்லவனே வடிவேலா வருவாய் இதுசமயம்,

தெள்ளு தமிழுக்கும் தினைப்புனத்தில் கிளிபயிலும்
வள்ளி மயிலுக்கும் வசமாகி விட்டவனே
அள்ளூறிப் பாடிவரும் அடியவரின் மிடிதீர்க்கும்
வள்ளல் மனத்தரசே வருவாய் இதுசமயம்,

வானேறும் கற்புடைய மாதரசி தெய்வானை
கூனேறும் நெற்றிக்கே குழைந்துருகும் வேலவனே
தேனேரும் செந்தமிழால் தெண்டனிடும் மெய்யடியார்
வானேற வைப்பவனே வருவாய் இதுசமயம்,

மங்கை சிவகாமி மைந்தா வார்ந்தொழுகும்
கங்கை வளர்சடையான் கண்மணியே வடிவேலா

அங்கங் குழைந்துருகி அடிபரவும் அன்பெரெனும்
வங்கக் கடல்நடுவே வருவாய் இதுசமயம்,

என்ன முருகா எழுந்துவரத் தாமதமேன்
சொன்ன தமிழில் சுவைகுறைவோ சொன்னவனும்
சின்னவனோ வள்ளி திசைமாற்றி விட்டாளோ
மன்னவனே குடிகாக்க வருவாய் இதுசமயம்,

பண்ணொழுகும் செந்தமிழாற் பாடிவரும் உன்னடியார்
கண்ணொழுக நிற்பதையும் கண்டுமனம் இரங்கலையோ
என்னபிழை நானுடையேன் எப்படிநான் கூப்பிடுவேன்
வண்ணமயில் வாகனனே வருவாய் இதுசமயம்,

ஐயா திருக்குமரா அடியேன் கதறுவதும்
பொய்யோ நானுரைக்கும் புகழும் இகழாமோ
செய்யான சிந்தையிலே செழித்தோங்கும் தாமரையே
வையா புரிக்கரசே வருவாய் இதுசமயம்,

கந்தா எனக்கதறும் கவிஉனக்குக் கேட்கலையோ
சந்தையிலே நாய்போலத் அடியேன் அலைவதுவோ
சிந்தாமணியே செல்வக்களஞ்சியமே
வந்தருளத் தாமதமேன் வருவாய் இதுசமயம்,

அஞ்சித்தலை குனிந்தும் அடிமைப்போல் வாய் புதைத்தும்
கெஞ்சி அழைத்தால் கேளாதோ உன்செவிக்கு
வஞ்சியரின் கண்வலையில் மானாகி விட்டாயோ
மஞ்சுலவு மலைநாடா வருவாய் இதுசமயம்,

பாடாத பாட்டெல்லாம் பாடி அழைத்தாலும்
ஆடாதிருப்பதுவோ அருளும் வறண்டதுவோ
வாடா மருக்கொழுந்தே மலைப்பழனி வேலவனே
வாடா என அழைத்தேன் வருவாய் இதுசமயம்,

கோவணத்தும் எழில்குலுங்கும் குழந்தைவடி வேலவனே
காவணம் போல் நிழல்கொடுக்கும் கருணைவடி வானவனே
பூவனத்தில் துள்ளிவரும் புள்ளிமயில் வாகனனே
வாய்மணக்கக் கூவுகிறேன் வருவாய் இதுசமயம்,

தீராநோய் தீர்த்தருளும் தென்பழனி மருத்துவனே
கூறாமல் குறைதீர்க்கும் குறிப்பறிந்த மன்னவனே
ஓராறு முகங்காட்டி ஓங்கார உருக்காட்டி
வாரா திருப்பதுவோ வருவாய் இதுசமயம்,

கல்லாப் பிழைகளையும் கற்றவர்கள் கற்றபடி
நில்லாப் பிழைகளையும் நெஞ்சுருகி உன்பெயரைச்
சொல்லாப் பிழைகளையும் சோதிவடி வானவனே
இல்லாப் பிழையாக்க வருவாய் இதுசமயம்,

எல்லாத்துறையினிலும் ஏமாற்றும் புனைசுருட்டும்
பொல்லாத சூரனைப்போல் புகுந்துவரும் இந்நாளில்
பொல்லாரும் மனந்திருந்திப் புத்தியிலே தெளிவுபெற
வல்லானே வேலெடுத்து வருவாய் இதுசமயம்,

சொல்லாலே மாலையிட்டு துனையடியில் தெண்டனிட்டு
நல்லாரும் நாட்டாரும் வழிநெடுக ஒலிமட்டும்
கல்லாய் இருப்பதுவோ கவலைகளைத் தீர்த்தருள
வல்லாய் திருக்குமரா வருவாய் இதுசமயம்,

தங்கநிற வேலவனே தமிழருந்தும் பாலகனே
சிங்கார வடிவேலவனின் செந்தமிழைக் கேட்டுவைக்க
இங்குவர வேண்டுமென எல்லாரும் வேண்டுகிறோம்
மங்கையரின் காதலனே வருவாய் இதுசமயம்,

*அர.சிங்காரவடிவேலன்.*

## தெண்டாயுதபாணி பாமாலை

### காப்பு

சீருலவுந் தென்பழனித் தெண்டா யுதபாணிப்
பேருலவும் மாலைதனைப் பிரபஞ்சத் திற்பாடப்
பாருலவும் மேருதனிற் பாரதத்தை நேர்வரைந்த
காருலவுந் தொந்திக் கணபதிதாள் காப்பாமே 1

### பதிகம்

வையா புரிநாட்டில் வளர்ந்திடுமென் னையனுக்கு
ஐயாயி ரஞ்சரண மடிபணிந்து தெண்டனிட்டேன்
மெய்யான தேசிகனே வேலாயு தம்படைத்த
வையா புரிக்கரேச வருவாயிது சமயம் 2

ஆறாறு நூறூறு அஷ்டமங்க லஞ்சூழ்ந்த
வீரா சிவகிரியின் வேலாயு தச்சாமி
சூராதி படைவென்ற சுப்பையா இப்போது
வாரா திருப்பதென்ன வருவாயிது சமயம். 3

தஞ்சமென்றே நின்பதத்திற் சரணம் புகுந்த எந்தன்
நெஞ்சிற் கவலையெல்லாம் நீதீர்க்க வேணுமையா
அஞ்சலென்று வந்தவர்க்கு ஆதரவு சொல்லுமிப்போ
மஞ்சரி மணவாளா வருவா யிதுசமயம். 4

மங்கை நகரிதனில் மறையோதும் வேதியராய்
அங்கசனைக் காய்ந்த அரனார் திருமகனே
சங்கரநா ராயணர் சொல்சண்முகனே கந்தையா
மங்கைவள் ளிபங்காளா வருவா யிதுசமயம். 5

ஏன்தான் முருகா இரக்கமில்லை யோஉனக்கு
நான்தா னுரைப்பதும் நற்செவியிற் கேட்கிலையோ
சார்ந்தோடும் வாவித் தடாகமும் வையாபுரியின்
மாந்தோப்பும் விட்டு வருவா யிதுசமயம். 6

ஜெகமே யளந்த அருள் திருமால் மருகோனே
அகமே வுருகுதையா ஆற்றுதற்கு நீ இரங்காய்
குகனே முருகையா குழந்தையைத் தேடிஇப்போ
மகனே யெனஓடி வருவா யிதுசமயம். 7

சின்னவய தெந்தனது சிந்தை மெலிவதற்கு
என்ன விதிப்பயனோ ஏதறிய மாட்டேன்கேள்
உன்னையே யான்துதித்து உன்பத மேபணிய
வண்ணமயி லேறியே வருவா யிதுசமயம். 8

தீராத நோய்களையும் தீர்த்துமே ஆளாக்கி
மாறாத செல்வமுறும் வரமெனக்கு நீயருளி
ஓராறு முகங்குளிர உத்தரவு நீ கொடுக்க
வாராயோ கந்தா வருவா யிதுசமயம். 9

மார்க்கண்டனுக் காகவளர்ந்த சொக்கலிங்கர் முன்னே
பார்க்குள் திருப்பணியை பான்மையாய்ச் செய்வதற்கு
ஆர்க்குவிரைந்தோ மெனவே அஞ்சலிட்டு சொல்லிவைத்த
மார்க்கமென்ன கந்தா வருவா யிதுசமயம். 10

கனத்தவுன்திருப் பணியைக்கட்டி வைத்தபேர் தமக்கு
நினைத்தபடி யேதான் நிறைவேற்ற வேண்டுமையா
இனத்தார் நகைத்தென்னை ஏளனங்கள் செய்யாமல்
மனத்துய ரந்தீர்க்க வருவா யிதுசமயம். 11

உகந்த திருப்பணியை உண்டாக்கி எந்நாளுஞ்
ஜெகந்தனில் வாசமாய்ச் செப்புதற்கு நீ இரங்காய்
தகுந்தவசுராதிகளைத் தட்டழியக் கைவேலால்
வகுந்துவிட்ட கந்தா வருவா யிதுசமயம். 12

நாடு நகரிழந்த ராஜாக்கள் போலவேதான்
வாடுவ துனக்கழகோ மனதுமி ரங்கலையோ
பேடைமயில் வள்ளியுடன் பேருற்ற மயிலேறி
வாடை யதுதுலங்க வருவா யிதுசமயம். 13

சாதியுஞ் சமயமென்று தானினைத்துப் பாராமல்
நீதிபெற நெஞ்சினிலே நீ இருந்து கொண்டாட
ஏதுமறி யேனெனக்கு இவ்வேளை யேயருள
வாதுசெய்ய வேண்டாம் வருவா யிதுசமயம். 14

பருவகாலத்தி லெண்ணிப் பாராமல் யான்செய்த
கரும வினையகலக் கனத்ததிருக் கோயில் செய்தேன்
தருமங்கள் தானோங்கச் சாமிநீ கிருபைசெய்ய
அருள்சிவ கிரிமுருகா வருவா யிதுசமயம். 15

கல்லாதிருக்குங் கசடனெனக் கண்டாலும்
நல்லா தரவுசொல்லி ரட்சிக்க வேணுமையா
எல்லாருங் கொண்டாட என்னிடத்தி லன்புவைத்து
வல்லாளா இப்போது வருவா யிதுசமயம். 16

அடியார் வினையகற்றும் ஆறுமுகத் தெய்வமேகேள்
அடியேனும் உமக்கடிமை ஆகினேன் கிருபை செய்வாய்
துடியாய் மயிலேறிச் சூரர்களைச் சம்ஹரித்த
வடிவேற் கரக்குமரா வருவா யிதுசமயம். 17

உச்சிதமா யானும் உமக்கே அபயமென்றேன்
இக்கணமே யென்னிடத்தில் இப்போது மேஎதிராய்
பச்சைமயி லேறிவந்து பக்தனெனை ரட்சித்தருள்
வச்சிர வேலாயுதனே வருவா யிதுசமயம். 18

சிங்கமுக அசுரன் சிரம்வீழ முன்னாளில்
செங்கையில் வேல்விட்டசேவற் கொடியோனே
மங்கையரும் மோகிக்க மயில்வீரா உந்தனது
மங்களதெய் வானையுடன் வருவா யிதுசமயம். 19

பாலசமுத் திரஞ்சூழ் வயலுஞ் சிவகிரியாய்
பாலனுனைத் தெரிசிக்கப் பரகதியைத் தாருமையா
மூலமென யானைசொல்ல முதலையைச் சம்கரித்த
மாலவர் மருகோனே வருவா யிதுசமயம். 20

அண்டர்தொழுஞ் சொக்கருக்கு மைந்தராய் வந்துதித்த
கொண்டல் முருகா எனது குலமுழுதும் உன்னடிமை
செண்டு முலைவள்ளி தெய்வானைக் குகந்தகந்தா
மண்டலங்கள் மெச்ச வருவாயிதுசமயம். 21

ஞாலமதில் எந்நாளும் நம்பினே னுன்பாதம்
ஓலமென்றே னென்முன்னே ஓடிவந்தா லாகாதோ

பாலனெனக் குங்கிருபை பாலிக்க வையகத்தில்
வாலையருள் கந்தா வருவா யிதுசமயம். 22

சொக்கலிங்கர் மீனாட்சி சுந்தரர்க்கு முன்பாக
மிக்க திருப்பணியை விதவிதமாய் யான்நடத்த
பக்கத் துணையிருந்து பாலனென்னை யேகாக்க
மைக்கண் வள்ளிபங்காளா வருவா யிதுசமயம். 23

குருமுனிக்கு நீகுருவாய் குவலயத்தில் எந்நாளும்
தருமநெறி தவறாச் சண்முகனே இப்போது
சிறுமை செய்யும் பிணியைச் சிதறடித்து வேல்விடுத்தே
வறுமையெல்லாந் தீர்க்க வருவா யிதுசமயம். 24

காப்புடனே ஐயைந்தெனும் கண்யநிறை பாடல்களும்
ஏற்படுத்தி நின்றேன்யான்இச் சமயமாலை தமிழ்
நேர்புனைந்தே னென்பிழையை நீ பொறுத்தே யிப்போது
மாப்புசெய்ய வேணுமினி வருவா யிதுசமயம். 25

## வருகைப் பத்து

### காப்பு

தங்கத்தில் காப்பு தரள மணிக்காப்பு
பொங்கும் கடல்முத்துப் காப்பென்ற - இங்குள்ள
எத்தனை காப்பும் எனைக்காவா ஆதலினால்
முத்தய்யன் காப்பே முதல்

### பதிகம்

வீடு விளங்கிடவே வெற்றிக் கொடிபெறவே
நாடு நலம்பெறவே நாளும் வளம்பெறவே
பாடும் தமிழ்கேட்டுப் பக்தருக்கு அருள்புரிய
ஆடும் மயிலேறி அய்யா வருவாயே!

எங்கும் துணையின்றி எப்பொழுதும் வாடுகின்றேன்
அங்கும் இங்குமாக அலைந்தே தேடுகின்றேன்
பொங்கும் தமிழ் கேட்கும் பொன்பழநி ஆண்டவனே
தங்க மயிலேறித் தங்க வருவாயே!

எத்தனைநாள் எதிர்பார்த்தோம் ஏன்இன்னும் வரவில்லை!
சித்தத்தில் உனைத்தானே தினந்தோறும் சித்தரித்தோம்
பள்ளத்தில் கிடக்கும்எங்கள் பாவத்தைப் போக்கிடவே
வெள்ளி மயிலேறி விரைந்து வருவாயே!

ஏலம் கூவுகின்றார் என்பெயரை உறவினர்கள்
ஓலம் இடுவதும் உன்செவியில் உரைக்கலையோ?

ஆலம் உண்டவனின் அழகுத் திருக்குமரா!
நீல மயிலேறி நீந்தி வருவாயே!

ஏறுமயில் ஏறிவினை மாறுபட அருள்பொழியும்
ஆறு முகம்அன்றி வேறுமுகம் கண்டதில்லை
அச்சத்தை நீக்கி அடியவர்க்கு வாழ்வுதரப்
பச்சை மயிலேறிப் பறந்து வருவாயே!

வள்ளி மயிலவளின் வாட்டத்தைத் தீர்த்தவனே!
கள்ளமிலாக் கன்னியர்கள் கல்யாணம் ஆகாமல்
உள்ளம் வருந்தி உருக்குலைந்தார் துயர்நீக்கப்
புள்ளி மயிலேறிப் புறப்பட்டு வருவாயே!

நாகைப் பட்டினத்தில் நங்கூரம் பாய்ச்சிநிற்கும்
வாகைக் கப்பலேறி வளர்வணிகம் செய்குலத்தின்
பாகம் நிலை பெறவே பழநிமலை வேலவனே!
தோகை மயிலேறித் தொடர்ந்து வருவாயே!

தண்டா யுதபாணி தனைநாங்கள் குன்றேறிவந்து
கண்டு மனம்மகிழ்ந்து கண்ணீர் அபிஷேகம் செய்து
கொண்டாடும் முன்பே கந்தா உனைவணங்கக்
கொண்டை மயிலேறி இங்கே வருவாயே!

நாளும் ஒவ்வொன்றாய் நடக்கிறது உலகிலெந்த
ஆளும் உதவவில்லை அச்சம் அகலவில்லை
வேலவனே! எம்வாழ்வில் வெற்றிகளை விரைவாகக்
கோல மயிலேறிக் கொடுக்க வருவாயே!

நிலவு முகமுடையாய்! நீங்காமல் எம்வாழ்வில்
உலவும் துயரத்தை ஒருநொடியில் மாற்றிவிட
பழகு தமிழாலே பாப்பாடிக் கூப்பிட்டோம்
அழகு மயிலேறி அய்யா வருவாயே!

*கவிஞர் மா. கண்ணப்பன்*



# கதிராய் எழுந்தாய் கதிரேசா!

## காப்பு

ஆனைமுக நாயகனே அருமருந்தே அற்புதமே
மோனைத்த மிழ்காக்கும் மூவாமுதல் நிலையே
சேனைமண வாளனைச் சேய்மொழியில் நான்பாட
தானைத் தளபதியே தாள்பணிந்தேன் கணபதியே!

## எழுந்தாய் இது சமயம்

விண்ணாடும் நிலவொளியே
வேல்பிடிக்கும் செஞ்சுடரே
பண்ணோடு நிலவிவரும் பால்தமிழே ஆரமுதே
கண்ணான முருகனுனைக் கைகூப்பி நானழைக்க
வெண்ணீறு பூமுகமாய் எழுந்தாய் இதுசமயம்

கிள்ளைமொழி சொல்லிவனம் காத்துநின்ற கள்ளியந்த
வள்ளிமன வேலவனே வண்ணமயில் வாகனனே
முள்ளையெடுத் தாலுமதை முல்லையென மாற்றிவைத்து
பிள்ளைக்கு அருளியநீ எழுந்தாய் இதுசமயம்

கண்ணுதலான் நல்மணியே கார்த்திகைநல் நாயகனே
மண்ணிலத்தார் மன்றாடும் மாழைமயில் வாகனனே
பண்ணிவைத்த பார்விதியில் பாலனிவன் மேன்மைபெற
அண்ணலென்றே ஆறுதலாய் எழுந்தாய் இதுசமயம்

பொல்லாத்தி சைகளைந்து பொய்கையென வார்த்தருளும்
புல்லார்ப கையழிக்கும் புள்ளிமயில் வேலவனே
செல்லாத காசெனவே சேய்நிலையும் மாறும்முன்னே
வில்லார்வ டிவழகா எழுந்தாய் இதுசமயம்

வானோர்கு லம்காக்க வண்ணமயி லேறிவந்தாய்
தானவர்தி ரளழிக்க தற்பரமாய் நீயிருந்தாய்
மானாமென் மிடிதீர்க்க மன்னவனே நீயிசைந்தாய்
தேனாந்தமிழ் தொடுத்தேன் எழுந்தாய் இதுசமயம்

தாலாட்டும் நேரமிதில் தாயெனவே நீயும்வந்தாய்
பாலூட்டும் வேளைதனில் பக்கமாக நீயிருந்தாய்
வேலாட்டம் விழியிரண்டால் வேண்டுவரம் நீயருள
கோலாட்டம் ஆடியிங்கு எழுந்தாய் இதுசமயம்

அள்ளிக்கொ டுத்ததெல்லாம் ஆர்வலனே பெருகியதே
புள்ளியெனப் பாங்குயர்த்திப் பிள்ளைநிலை காப்பவனே

கள்ளிமலர்ப் பூத்ததுபோல் கார்முகில்தான் பெய்ததுபோல்
வெள்ளிமயில் ஏறியிங்கு எழுந்தாய் இதுசமயம்

ஆலைக்க ரும்பாக ஆகிநின்ற என்னிலையைச்
சோலைக்க ரும்பாக்கிச் சுந்தரமாய்த் தந்தவனே
காலைப்பி டித்துவிட்டேன் கண்ணிரண்டால் பாரும்மென்றே
வேலைக்க ரம்பிடித்தே எழுந்தாய் இதுசமயம்

பாளையிலே நீசிரிப்பாய் பச்சைகளில் நீதுளிர்ப்பாய்
நீளுகின்ற சென்மமிதில் நீயுமென்னை நன்கறிந்தாய்
நாளையெனத் தேதிசொல்லி நாட்களைக்க டத்தாமல்
வேளைபி றந்ததென்று எழுந்தாய் இதுசமயம்

ஒப்பேதும் இல்லையென்று உன்னடியை நம்பிவந்து
எப்போத ழைத்தாலும் இன்முகமாய்த் தோன்றுகிறாய்
அப்பாற்க டலுக்குள்ளே ஆனிமுத்தே அங்கிருந்தும்
தப்பாம லேஇணங்கி எழுந்தாய் இதுசமயம்

வாடாம லர்க்கரத்து வஞ்சியரின் நாயகனே
பாடாத செந்தமிழே பார்த்தருளும் தாயகமே
தேடிவரும் பாலகரைத் தேம்பிடவி டாமலேநீ
நாடிக்கு றைதீர்க்க எழுந்தாய் இதுசமயம்

கல்லிற்சி லைவடித்துக் கந்தாவு னைத்தொழுது
சொல்லாத என்னிலையைச் சொல்லிவிட்டே னிப்போதும்
எல்லாவ ரம்மருளி ஏற்றந்தரும் வேல்முகமே
நல்லார்ம னங்குளிர எழுந்தாய் இதுசமயம்!

*மீ.மணிகண்டன்*

## வருகைப் பத்து

மலைமாதின் மகனாகி மயிலேறி விளையாடி
மலைவீடு கொண்ட குமரா
மதிசூடும் பெருமானின் வளர்காதில் உபதேசம்
வளமோடு சொன்ன குருவே
அலைபாயும் செந்தூரில் அரசாளும் சிங்கார
அலங்கார மான திருவே
அசுரேசர் தலைசீவ அணிதேவர் துணைபோன
அதிருப வெற்றி யறிவே

நிலையான தமிழாலே நிதம்பாடித் தொழுவோர்க்கு
நிறைவோடு தருக நலமே
நின்பாதம் எந்நாளும் நினைவாகித் துதிப்போரை
நீகாக்க வேணுந் தினமே

உலைவாயில் உணவாகி உலகோரின் பசியாற்றும்
உன்பாதம் மென்மை இதமே
உறவாடுந் தேவானை குறமாதுன் உடனாக
ஓடோடி வருக நிதமே

மன்றாடுஞ் சிவனாரின் மலரான விழிசீற
வடிவோடு எந்தக் குமரா
மலைதோறும் படைவீடு மனைகாக்க இருமாதர்
மயிலேறி ஆடும் அரசே
கன்றாடி வரும்போது கறவாத பசுவேது
காத்தாள நேர மிதுவே
கண்ணாலே இருளோட்டிக் கருத்தோடு அருளூட்டிக்
கனிவோடு செய்க நலமே

நன்றான தமிழ்பாடும் நல்லோரின் மனைதோறும்
நலந்தூவ ஏறுமயிலே
நற்றாயின் வேலேந்தும் நல்லோனே குமரேசா
நடமாடும் ஆறுமுகமே
ஒன்றான பெற்றோரின் உளமாடும் எழிலான
உன்பாதம் மென்மை இதமே
உறவாடுந் தேவானை குறமாதுன் உடனாக
ஓடோடி வருக நிதமே

ஆங்காரன் உடல்கீறி அணிசேவல் மயிலாக்கி
அருளீந்த சுப்ரமணியே
அன்பான தேவானை அழகான குறமாதின்
அகமாளும் இன்ப ஒளியே
வாங்காவின் ஒலியோடு வழிப்பாதை நடைபோட்டு
வருவோரை¨ காக்க நிதமே
வகையான இறையென்ற மகிழ்வோடு உனைத்தேடி
வரங்கேட்கும் கோடி மனமே

தீங்கேதும் அறியாத சீரான அடியாரைச்
சிறந்தோங்கச் செய்த தமிழே
திருவேலைக் கையேந்திச் சிலம்பாட மயிலேறி
செகமாள வந்த எழிலே
ஓங்காரப் பொருளேதும் உமையீன்ற திருவான
உன்பாதம் மென்மை இதமே
உறவாடுந் தேவானை குறமாதுன் உடனாக
ஓடோடி வருக நிதமே
கயிலாயச் சிவனாரின் கண்தோன்றிஉருவான

கதிர்வேலா தங்க வடிவே
கனியீந்த நாரதனும் கலகத்தை வளர்த்தானே
காசினியோர் அறிந்த கதையே
வயிறோங்கு கணபதியும் வாயாடிப் பெற்றானாம்
வளமான மாவின் கனியே
வடிவாகப் புவிசுற்றி நீயோடி வரும்போது
வாய்மூடி நின்றான் சிவனே

மயிலோடு வேலோடு மாங்கனியே நீவேண்டி
வன்கோபம் உள்ள திருவே
மனந்தேடும் பழமான மலையேறி உடைமாறி
வடிவோடு நின்ற குமரா
ஒயிலோடே எந்நாளும் உலகாளும் எழிலான
உன்பாதம் மென்மை இதமே
உறவாடுந் தேவானை குறமாதுன் உடனாக
ஓடோடி வருக நிதமே

தென்கூடல் நகராளும் திருமீனாள் உனைத்தேடித்
திருவீதி சுற்றி வருவாள்
சீர்காசித் தாயாராம் சிறப்பான சாலாட்சி
தினம் நாடித் தேடி வருவாள்
மன்றான தில்லையிலே மாதாவாம் சிவகாமி
மனம்வாடி நின்றாள் மிகவே
மகிழ்வான ஐயாற்று வாழ்வான தருமாம்பாள்
மனந்தேடும் உன்றன் முகமே

குன்றேறிக் கனிதேடும் குகநேசா வரவேணும்
குணமோங்கு தாயின் இடமே
குறையாத அன்போடு கூர்வேலும் தருவாளாம்
குணம்மாறி விடுக சினமே
உன்மேனி பொன்னாகும் உமைநாடும் எழிலான
உன்பாதம் மென்மை இதமே
உறவாடுந் தேவானை குறமாதுன் உடனாக
ஓடோடி வருக நிதமே.

வானோரின் முறையீடு தனைக்கேட்டுச் சரியான
வழிகூற வந்த குமரா
வன்சூரர் தலைவாங்கி வானோரின் முடியேற்ற
வடிவேலை ஏந்தும் முருகா
தேனூறும் பூமாலை திருமார்பில் அசைந்தாடத்
திருநீறு பூசும் அழகே

தேவகுலப் பரிசான தேவானை தனையேற்றுத்
திருவாழ்வு தந்த எழிலே

தானேறும் மயிலாடத் தனிவேலும் தானாடத்
தமிழ்கூறும் மூல முதலே
தளராத மதியோடு சரியாத நிதிகூட்டித்
தரவேணும் கோடி நலமே
ஊனோடு உயிராகி உணர்வாகி உலகாளும்
உன்பாதம் மென்மை இதமே
உறவாடுந் தேவானை குறமாதுன் உடனாக
ஓடோடி வருக நிதமே.

அடையாத திருவீதி அழகான நின்கோயில்
அதைநாடும் என்றன் மனமே
அபிஷேகம் பன்னீரால் அலங்காரம் வெண்ணீறால்
அதிரூபம் உன்றன் எழிலே
கடலாளும் கலமாகும் கனவான என்வாழ்வு
கரையேறக் காட்டு வழியே
கரும்பூறும் இனிப்பாகக் கசப்பூறும் வேம்பாகும்
கதிர்வேலா கந்த வடிவே

மடைமீறும் புனல்போல மனம்நாளும் அலைபாயும்
மதிவாணா காக்க எனையே
மனத்தூறும் பயம்போக்கி மாளாத துயரோட்ட
மயிலேறி வருக துரையே
உடைமாறிக் கோலேந்தி உருமாறி நின்றாடும்
உன்பாதம் மென்மை இதமே
உறவாடுந் தேவானை குறமாதுன் உடனாக
ஓடோடி வருக நிதமே

பொய்யான என்வாழ்வு புவிமீது உழன்றாடும்
புகழான தெய்வம் நீயே
புரியாத எளியோனும் பொல்லாங்கு செய்தாலும்
பொறுத்தாள வேண்டும் இனிதே
மெய்யான அருளூற்றே மிதமான இளங்காற்றே
மீட்டாளும் கந்த வடிவே
மேலான எழிலோனே மீனாளின் மகனான
மெய்ஞ்ஞான மான பொருளே.

அஞ்ஞானம் மிகப்பேசும் அறியாதப் புல்லர்க்கும்
அறிவூட்ட வந்த குமரா
அடியேனின் குலங்காக்க அடுங்காலன் தனையோட்டி

அணைத்தாள வந்த முருகா
ஒய்யார மயிலேறும் உமையின்ற எழிலான
உன்பாதம் மென்மை இதமே
உறவாடுந் தேவானை குறமாதுன் உடனாக
ஓடோடி வருக நிதமே.

நினைகாக்கப் பண்பாடிச் சிறகாடும்பு ள்ளோடக்
செய்வாளாம் வள்ளி எழிலே
திருவள்ளி எழில்தன்னைத் திரிலோக முனிகூறத்
தினைக்காடு நாடும் அழகே
வினையேதும் வாராமல் வெற்றியது கைகூட
வேழமுகன் செய்தான் வழியே
வெண்தாடிக் கிழமாகி வெறுங்கோலைக் கையென்றும்
விளையாட்டிற்கு இல்லை இணையே

தினைமாவை மிகமாந்திச் செவியாற இசைகேட்டுச்
சீராடி வந்த திருவே
சீர்யானை தனைக்காட்டிக் குறமாதை மணஞ்சூடிச்
சிறப்போடு கொஞ்சும் குமரா
உனைநாடி வருங்கோடி உயிர்காத்து நலமீயும்
உன்பாதம் மென்மை இதமே
உவாடுந் தேவானை குறமாதுன் உடனாக
ஓடோடி வருக நிதமே.

விண்ணாகி நிலவாகி வெயிலாகி மழையாகி
விருதோடு ஆடும் அழகே
விதியாகி மதியாகி விருந்தாகி மருந்தாகி
வினையோட வைத்த குமரா
மண்ணாகி நதியாகி விதையாகிப் பயிராகி
வளங்கூடச் செய்யும் அரசே
மலையாகிக் கடலாகி மலராகி மணமாகி
வடிவாகி நின்ற முருகா

பெண்ணாகி ஆணாகிப் பிறப்பாகி இறப்பாகும்
பெருவாழ்வு உன்றன் வசமே
பேச்சாகிச் செயலாகி மூச்சாகி உயிராகிப்
பிழைப்போக்குஞ் செந்தூர் வளமே
ஒன்றாகிப் பலவாகி ஒருகோடி நூறாகும்
உன்பாதம் மென்மை இதமே
உறவாடுந் தேவானை குறமாதுன் உடனாக
ஓடோடி வருக நிதமே.

# சிங்கை நகர் முருகனே வருக

சிக்கலைத் தீர்க்கின்ற சிங்கைநகர் முருகனே
சீக்கிரம் வருக வருக!
எக்கலைக்கும் மன்னனா எம்தலைவன் முருகனே
எழுந்தோடி வருக வருக!
இஷ்டமாய் வணங்குவோர், இல்லறம் செழித்திட
இருமாதர்புடைசூழ வருக வருக!
கஷ்டமென வந்தவரின் கதறலை நிறுத்திட
கணப்பொழுதில் வருக வருக!
நாட்டமுடன் நகரத்தார் ஏற்றம்பல கண்டிட
ஏறுமயிலேறி வருக வருக!
பாட்டமுதைத் தருவோரின் பார்வையில் நின்றிட
பறந்தோடி வருக வருக!
விழிநீரால் வணங்குவோர், வேதனையைத் தீர்த்திட
வெள்ளிரதமேறி வருக வருக!
வழிவழியாய் வம்சங்கள் வளர்ந்தோங்கியே வாழ்ந்திட
வடிவேலேந்தி வருக வருக!

# இல்லம் வா முருகா

கடல் தாண்டி வருவோரின் கண்ணீரைத்
துடைக்கின்ற கதிர்காமனே வருக! வருக!!
தடைகளைத் தகர்த்தெறிந்து தைரியம்
தருகின்ற தங்கநிற வேலவனே வருக! வருக!!
பன்னிருவிழி கொண்டு பாவத்தைப் பொடியாக்கும்
பழநியம்பதியனே வருக! வருக!!
கண்ணீரில் மூழ்கியுன் காலடியில் கிடப்போரைக்
காப்பாற்றவே வருக! வருக!!
நின்றாடி வணங்குவோர் நிற்கதி நீக்கிட
நித்தமும் வருக! வருக!!
மன்றாடிப் பாடுவோர் மனக்கவலை போக்கிட
மயிலேறி வருக! வருக!!
ஏவல்களை இடைநிறுத்தி இன்னல்களைக்
களைகின்ற ஈராறுகையனே வருக! வருக!!
எல்லைக்குக் காவலாய் எம் இல்லத்துப்
பிள்ளையாய் இப்போதே வருக! வருக!!

*வி.ஆர்.பழனியப்பன்*

# வேல் வேல் வடிவேல் வேதாந்த வடிவேல்

**வேல் வேல் வடிவேல் வேதாந்த வடிவேல்**
**நாதாந்த முடிமேல் நான்மறைகள் போற்றும் வேல்**

வேல் வேல் வடிவேல் வேதாந்த வடிவேல்
நாதாந்த முடிமேல் நான்மறைகள் போற்றும் வேல்
தேவியவள் தந்த வேல் தேவர் மூவர் போற்றும் வேல்
குழந்தைக் குமாரவேல் குன்று தோறுமாடும் வேல்
பாலகனின் கைவேல் பாவவினை தீர்க்கும் வேல்
கந்தன் கதிர்வேல் கவலைகளைப் போக்கும் வேல்
வேல் வேல் வெற்றிவேல் தேவர்சிறை மீட்ட வேல்
வாரி வழங்கும் வேல் வள்ளல் குணம் கொண்ட வேல்
ஆடும்பரிவேல் ஆபரணம் தரித்த வேல்
அழகன் முருகன் வேல் அள்ளியள்ளித் தந்த வேல்
மின்னும் கதிர்வேல் சண்முகன் சதுர்வேல்
சங்கடங்கள் தீர்க்கும் வேல் சத்ருசங்கார வேல்
முத்துக்குமார வேல் முன்னின்று காக்கும் வேல்
வானோர் தொழுத வேல் ஞானம் அருளும் வேல்

## மரத்தாண்ட ஆண்டவா

**மரத்தாண்ட ஆண்டவா மனமிரங்கி அருளப்பா**
**மரமாக நின்றவா மரத்தாண்ட ஆண்டவா**

மரத்தாண்ட ஆண்டவா மனமிரங்கி அருளப்பா
மரமாக நின்றவா மரத்தாண்ட ஆண்டவா

உள்ளம் உருக வேண்டியே உன்னைத் தேடி வருகின்றோம்
மரமாக நின்றவா மரத்தாண்ட ஆண்டவா
அடிபணிந்து வணங்கவே அன்போடு வருகின்றோம்
அனைவரையும் காத்திடுவாய் ஆறுமுக வேலவா

பழனியிலே ஆண்டியாய் நின்றவனும் நீயப்பா
பாரெல்லாம் கோவில் கொண்ட பரம்பொருளும் நீயப்பா
மரத்தாண்ட ஆண்டவா மனமுருகிப் பாடுகின்றோம்
மகிழ்ந்து எம்மைக் காத்திடுவாய், வளம் எல்லாம்
அருளிடுவாய்

கந்தன் என்று சொல்லுவார் கடம்பன் என்று சொல்லுவார்
வேலன் என்று சொல்லுவார் முருகன் என்று சொல்லுவார்
விதவிதமாய் நாமங்களில் போற்றி உன்னை வணங்குவார்
கண்கண்ட தெய்வம் நீ கண் திறந்து பாரப்பா.

மரமாக நின்றாலும் வேலாக நின்றாலும்
தனியாக இருந்தாலும் தம்பதியாய் இருந்தாலும்
தரணியைத் தழைக்க வைக்கும் தனிப்பெரும் தெய்வமே
தரணி புகழ் வாழ்க்கையைத் தந்தருள்வாய் வேலவா

*லெ. சக்தி குமார்*

## எட்டடிக் குச்சு

### வேல் முருகா வேல் வேல்-முருகா வேல் முருகா வேல் வேல்

எட்டடிக் குச்சுக்குள்ளே-முருகா
எப்படி நானிருப்பேன்?
கொட்டி முழக்குகிறாய்!-முருகா
கும்பிட நீவருவாய்.

சோற்றுத் துருத்தியப்பா-முருகா
சொக்கத் தங்கமில்லை!
காற்றும் ஓடிவிட்டால்-முருகா
கட்டை விழுந்துவிடும்.

ஓட்டைக் குடிசையப்பா!-முருகா
ஒன்பது வாசலப்பா!
வேட்டை ஆடுகிறேன்-முருகா
வேதனை தீரவில்லை!

பாட்டைப் பாடுகிறேன்-முருகா
பக்திக்கு நீவருவாய்!
கோட்டை கொத்தளங்கள்-முருகா
கொடிகட்டிப் பறக்குதப்பா!
ஊத்தைத் தேகமப்பா-முருகா
உள்ளத்தில் வேகமப்பா!
பாத்து நடந்திடவே-முருகா
பாதையைக் காட்டிடுவாய்!

கண்ணுக்கு மையெழுதி-முருகா
கருத்துக்குப் பொய்யெழுதி
வண்ணக் கலவையிலே-முருகா
வழியும் தவறிடவோ?

சொல்லுக்குள் ஓடிவந்து-முருகா
சூட்சமம் ஆனவனே!
கல்லுக்குள் காந்தமய்யா!-முருகா
கட்டுக்குள் நிற்பவனே!

காவடிஆடயிலே-முருகா
காலடி ஆடுதய்யா!
பூவடி மணக்குதய்யா!-முருகா
புண்ணியம் கிட்டுதய்யா!

*கவிஞர் சி. என். நாச்சியப்பன்*

## காவடிப்பாட்டு

**காவடியாம் காவடி கந்தவேலன் காவடி**
**கண்கொள்ளாக் காட்சிதரும் கடம்பனுக்குக் காவடி**

காவடியாம் காவடி கந்தவேலன் காவடி
கண்கொள்ளாக் காட்சிதரும் கடம்பனுக்குக் காவடி

வேல்முருகன் நாமத்திலே விதவிதமாய்க் காவடி
வெற்றிவேலன் காவடி கூர்வேலன் காவடி

சிங்கார வேலனுக்குச் சின்னச் சின்னக் காவடி
வண்ணமயில் தோகையோடு ஆடிவரும் காவடி

பழநிமலை பாலனுக்குப் பால்குடத்தால் காவடி
தென்பழநி வேலனுக்குத் தேன் குடத்தால் காவடி

சுவாமிநாத வேலனுக்குச் சந்தனத்தால் காவடி
பாலசுப்பிரமணியனுக்குப் பஞ்சாமிர்தக் காவடி

ஆறுமுக வேலனுக்கு அழகுமயில் காவடி
வண்ண வண்ணக் காவடி வெற்றிவேலன் காவடி

மயூர நாதனுக்கு மச்சத்தால் காவடி
குன்றக்குடி குமரனுக்குக் குறைவில்லாத காவடி

பக்தரெல்லாம் கொண்டாடும் காவடியாம் காவடி
பாமாலை பாடிஆடி நாடிவரும் காவடி

வேலும் மயிலும் துணை

கண்கொள்ளாக் காட்சி தரும் கந்தவேலன் காவடி
காவடியாம் காவடி காணவேண்டும் கண்கோடி

## சின்னச் சின்ன காவடி

**சின்னச் சின்னக் காவடி செந்தில் நாதன் காவடி**
**வண்ண வண்ணக் காவடி வள்ளிநாதன் காவடி**

சின்னச் சின்னக் காவடி செந்தில் நாதன் காவடி
வண்ண வண்ணக் காவடி வள்ளிநாதன் காவடி
அங்கும் இங்கும் காவடி அழகு வேலன் காவடி
இங்கும் அங்கும் காவடி ஏர கத்தான் காவடி
ஆட்டம் ஆடும் காவடி ஆண்டியப்பன் காவடி

பாட்டுப் பாடும் காவடி பழநி யப்பன் காவடி
முன்னும் பின்னும் காவடி முருக வேலன் காவடி
கண்ணும் மனமும் காவடி கந்த வேலன் காவடி
இரத்தினவேல் காவடி இன்ப மூட்டும் காவடி
பழநி மலைக் காவடி பஞ்சந் தீர்க்கும் காவடி
சென்னி மலைக் காவடி சேவற் கொடியோன் காவடி
தண்ணீர் மலைக் காவடி தாகம் தீர்க்கும் காவடி
பாலும் பழமும் காவடி பஞ்சாமிர்தக் காவடி
வேலும் மயிலும் காவடி வினைகள் தீர்க்கும் காவடி

## பழனிமலைக் காவடி

**காவடிஇது காவடி பழனிமலைக் காவடி**
**காவடிநம்ம காவடி கந்தவேலன் காவடி**
**காவடிஇது காவடி பழனிமலைக் காவடி**
**காவடிநம்ம காவடி கந்தவேலன் காவடி**

அகலமான பன்னாங்குடன் அணிவகுக்கும் காவடி
அகவுமயில் தோகையுடன் அழகுமிளிரும் காவடி
வேல்துணையுடன் தோளினிலே தூக்கிவைப்போம் காவடி
விருத்தங்களைப் பாடப்பாட வேகமாகும் காலடி

முன்னும்பின்னும் முத்திரையாம் முருகனுக்கு யாத்திரை
முறையாகக் கட்டியமும் கூறிநடக்கும் யாத்திரை
விரதமுடன் பூசையிட்டுப் புறப்படுவோம் யாத்திரை
வேல்பிடித்த முருகனுக்கு விருப்பமாக யாத்திரை;

கண்மாய் மேடு வயல்வரப்பில் காவடிகள் வரிசையாம்
கண்களுக்கு விருந்தளிக்கும் காட்சியிது அருமையாம்
சாலையோரம் சாரைசாரை யாய்நடக்கும் காட்சியும்
செந்திலவன் ஆண்டுக்கொரு முறைநடத்தும் மாட்சியாம்

குன்றக்குடி தாண்டவரும் கண்டவரா யன்பட்டி
குளிருமிரவில் பூசையிட்டு தங்கணு(ம்)ம ருதுப்பட்டி
சிங்கம்புணரி சேவுகக்ச் சேவிக்கணும் காலையில்
சிறப்பாகும் மணப்பச்சேரி சனங்களோட குலவையில்

ஆனந்தமாய் ஆடிடுவார் பண்டாரம் தன் ஊருக்குள்
அருள்மணக்கப் பூசைவைப்போம் சமுத்திராப் பட்டியில்
அதிகாலை நத்தத்திலே ஆகும்பூசை பானகம்
அதிகவெயில் காட்டிடாமல் குடைபிடிக்க வேண்டணும்

குமரனவன் அருள்சுரக்க அரோகரா போடணும்
கோபால்பட்டி தாண்டிநாம உப்பாற்றை அடையணும்
ஈரவேட்டி காயுமுன்னே இடைச்சிமடம் தெரிந்திடும்
எழிலாக மூன்றாம்நாள் பூசையுந்தான் இருந்திடும்

திண்டுக்கல் ஊருக்குள்ளே தெரியுமழகு ஆலயம்
தேவிஅபி ராமிஅங்கே கொலுவிருப்பாள் பார்க்கணும்
நரசிங்கப் பெருமாளை வழிநடையில் வணங்குவோம்
நலமாகச் சேர்ந்திடுவோம் ரெட்டியார் சத்திரம்

மாலைநேரம் காலாற மகிழ்ச்சியாக நடக்கணும்
வள்ளியம்மை சடையப்பர் மண்டபத்தை அடையணும்
ஒளிவெள்ளத் தில்முருகன் செம்மடைப் பட்டியில்
ஊஞ்சலிலே திகழ்வானே நான்காம்நாள் பூசையில்

செம்மடையில் காலையிலே பானகத்துப் பூசையும்
செய்துநாங்க புறப்படத்தான் விடிந்துவிடும் காலையும்
சின்னப்பிள்ளை குழந்தைவேலர் சன்னதிக்கு அருகினில்
சேர்ந்திடுவார் உறவுமக்கள் வேல்வணங்கும் ஆசையில்

விருப்பாச்சி ஏத்தத்திலே வேகநடை போடணும்
வேல்நின்று பழனிமலை அடையாளம் காட்டிடும்
காற்றுவீசும் வயல்வரப்பு ஓரத்திலே பூசையும்
கலிங்கப்பையா ஊரணியில் ஐந்தாம்நாள் பார்க்கணும்

ஆறாம்நாள் நடைதுவங்கும் அதிகாலைப் பனியினில்
ஆயக்குடிப் பெருமாளின் ஆசிபெற்று மகிழ்ச்சியில்
இடும்பன்குளம் நீராடி இளைப்பாறும் வேளையில்
இணைவார்கள் நெற்குப்பை நகரத்தார் பிள்ளைகள்

பள்ளயமும் பக்தியுடன் காவடிக்கு நடந்திட
பழனிவாழும் நகரத்தார் வருவாரே அழைத்திட
மேளதாள நாதசுரம் வரவேற்பில் இணைந்திட
வேலுடனே காவடிகள் விரைவாரே புறப்பட

வான்தொடுமே அரோகரா அரோகரா ஒலியுமே
வழங்கிடுவார் சாமியாடி ஐயாவும் அருளுமே
வலம்வந்து பழனிமலை காவடிகள் ஆடுமே
வந்தசனம் பார்த்திடத்தான் அடிவாரம் கூடுமே

அன்னதான மடம்நோக்கி அழகுப்பயணம் தொடருமாம்
அங்கேதான் அனுதினமும் அருளாட்டம் பூசையாம்
மகத்தன்று பட்டுடுத்தி மலைநோக்கிப் பயணமாம்
மகத்தான முருகனுக்குக் காவடிச் செலுத்தணும்

பழக்கமான முருகனிடம் மனதுகொஞ்சிப் பேசுமே
பங்காளி வரமருள்வான் பக்தியோடு வணங்குமே
ஆழ்மனமும் இப்பொழுது அழுதிடத்தான் துவங்குமே
அடுத்தஆண்டு யாத்திரைக்கு நாட்காட்டி தேடுமே

*மீ.மணிகண்டன்*

## கந்தப் பலகாரம்

**வேல்வேல் முருகா வேல்முருகா-வடி**
**வேல்வேல் முருகா வேல்முருகா**
**வேல்வேல் முருகா வேல்முருகா-வடி**
**வேல்வேல் முருகா வேல்முருகா**

ஆண்டிமேல் ஆசையாய் ஓடையிலே-நல்ல
ஆகாரம் சேருது கூடையிலே
பக்தியாம் பசிவெறி போதையிலே-இந்தப்
பலகாரம் போதுமோ பாதையிலே

கந்தனின் பூமுகம் மாவுருண்டை-அவன்
காலடித் தண்டையோ முறுக்குவடை
கைகளின் கங்கணம் தேன்குழலாம்-எங்கள்
கந்தனே நெய்வழி அதிரசமாம்.

தாமரை முகங்களோ தெங்கிளநீர்-நம்மை
தாங்கிடும் கைகளோ செங்கரும்பாம்
கந்தனின் கால்விரல் தேன்கதலி-அவன்
கைவிரல் யாவுமே சீனிமிட்டாய்.

சட்டியில் வெந்ததை தின்பவரே-கந்த
சஷ்டியில் வந்ததை உண்பதற்கே
எட்டடியில் நாலடி போடுங்களே-வேல்வேல்
என்றோங்கி எல்லோரும் பாடுங்களே.

## எங்கள் குல விடிவிளக்கே

**சரஹணபவனேசரஹணபவனே**
**சரஹணபவனேசண்முகனே**
**சரஹணபவனேசரஹணபவனே**
**சரஹணபவனேசண்முகனே**

திருமகள் கலைமகள் மலைமகள் வடிவே
திருப்பரங் குன்றின் வடிவேலா
திருமால் நான்முகன் பரமசிவமானாய்
திருநிறை வாழ்வின் கதிர்வேலா!

பெருமையின் வடிவேபெருந்தவத் தணியே
பெருமான் முருகா முருகேசா
சரஹணபவனே! சங்கரிமகனே!!
சற்குரு ஜயஜய சண்முகனே!!!

செந்திற் கரையினிற் சமரிட்டு வென்றாய்
செந்தமிழ் மகனே வடிவேலா!
விந்தைகள் செய்தாய்விரி தமிழ்தந்தாய்
விண்ணவர் விளக்கே கதிர்வேலா!
கந்தனே கடம்பனேகருணை செய்குகனே
எந்தையே எங்கள் முருகேசா!
சரஹணபவனே சங்கரிமகனே!!
சற்குரு ஜயஜய சண்முகனே!!!

ஆவினன்குடியினில் ஆண்டியாய் நின்றாய்
ஆனந்த மயனே வடிவேலா
கூவிடும்கோழிக் கொடியுடையோனே
கூர்தவத் தொளியே கதிர்வேலா!
தாவிய துயரைத்தடி கொண்டுதாக்கித்
தாயெனக் காத்தாய் முருகேசா!
சரஹணபவனே! சங்கரிமகனே!
சற்குரு ஜயஜய சண்முகனே!!

ஏரகம் வந்தாய் ஏழிசை மணியே
ஏகனேயானாய் வடிவேலா!
தாரகன் சிங்கனைத்தானெனும் சூரனைத்
தாக்கி நீ வென்றாய் கதிர்வேலா!
தாரகப்பொருளே! தார்முகவடிவே!
தாபங்கள்தீர்த்த முருகேசா!
சரஹணபவனே! சங்கரிமகனே!
சற்குரு ஜயஜய சண்முகனே!!

குன்றுதோராடிய குமரனே!குகனே
குறைகளைத் தீர்த்தருள் வடிவேலா!
என்றுமே உன்னடிஎங்கணும் பணிந்திட
எனக்கருள் செய்வாய் கதிர்வேலா!
நன்று நீ சொல்வாய் நன்மையாய் வருவாய்
நலந்தரு நாயகா முருகேசா!
சரஹணபவனே சங்கரிமகனே
சற்குரு ஜயஜய சண்முகனே!!!

பழமுதிர்ச் சோலை மலையுறைவோனே
பண்டிதர்பண்டித வடிவேலா!
குழம்பிடும் உள்ளக்கவலைகள் தீர்த்துக்
குறைவில்லை என்றாய் கதிர்வேலா!
பழவினை இல்லைபயமெதும் இல்லை
பக்கலில் நின்றாய் முருகேசா!
சரஹணபவனே சங்கரிமகனே
சற்குரு ஜயஜயசண்முகனே!!

பற்பல தலங்களில்பண்பொடு இருந்தாய்
பகையிருள் தீர்த்த வடிவேலா!
கற்பவர் உள்ளம்கனிந்திட இனித்தாய்
கண்மணி கனிமொழிக் கதிர்வேலா!!
அற்புததேவா அருகினில் வாவா
அறுமுக அதிசய முருகேசா!
சரஹணபவனே சங்கரிமகனே
சற்குரு ஜயஜய சண்முகனே!!!

ஜய ஜய முருகா குககாங்கேயா
ஜய ஜய பாலா வடிவேலா
ஜய ஜய முருகா சுப்ரமண்யா
ஜய ஜய கந்தா கதிர்வேலா!
ஜய ஜய முருகா சிவனருட்குமரா
ஜய ஜயமங்கள முருகேசா!
சரஹணபவனே சங்கரிமகனே
சற்குருஜயஜய சண்முகனே!!! -

*துர்க்கைச்சித்தர்*

## ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

வேலும் மயிலும் துணை

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அய்யா முருகா ஆடுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அய்யா முருகா ஆடுகவே

ஆழிப் படுக்கை கொண்டோனின்
அருமை மருகா ஆடுகவே
ஊழி தாண்டி நிற்பானின்
உத்தமச் செல்வா ஆடுகவே

வாழும் மனிதர் யாவருக்கும்
வழிக்குத் துணையாம் வேலவனே

ஆளும் கவலை ஓடிடவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

ஆடகப் பொன்னால் ஊஞ்சலிட்டு
அதற்கு வயிரக் கயிறுமிட்டு
கூடிடும் அடியார் ஆட்டிடவே
குமரா ஊஞ்சல் ஆடுகவே
பாடுகள் குறைந்தே மாந்தரெல்லாம்
பண்பாய் வாழ்ந்து உயர்ந்திடவே
வாடிடும் பயிர்கள் வளம் பெறவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

முன்னே பின்னே சென்றாலும்
மூளையில் ஒன்றி நின்றிடுமே
என்னே வாழ்க்கை என்றாலும்
எல்லாம் உன்னைச் சுற்றியதே

குன்றாக் குடியாய் எமைகாக்கும்
குன்றக் குடியின் வேலவனே
கண்ணே மணியே கதிர்வேலா
கவினார் ஊஞ்சல் ஆடுகவே

விண்ணவர் செல்வி தெய்வானை
வேடவர் மகளாம் வள்ளியுடன்
மண்ணகம் சுற்றும் மயிலேறி
மேதகு சேவற் கொடியாட

கொண்டிடுங் காதல் உணர்வோடு
கனிந்த நெஞ்சத் தூஞ்சலிலே
அன்புடன் ஏறி இனிதமர்ந்தே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

மண்ணைப் பிளந்து பெரும்பேட்டில்
மாபெரும் அருளுடை வடிவுடனே
பெண்ணின் நல்லார் இருவருடன்
பெருமயில் ஏறி வந்தவனே

கண்ணே தெரியாக் காட்டிடையே
கலங்கித் தவிக்கும் எங்களுக்கே
உன்னால் வழியும் தெரிந்துயர
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

ஆறடி நெடிதாம் உருவுடனே
அடியார்பக்தி உறுவேற

பேரருள் கொண்டாய் பெரும்பேடா
பிள்ளைகள் நலிவினைப் போக்கிடவே

சீரடி வணங்கிட வந்துள்ளோம்
செல்வா அருளைத் தந்திடுவாய்
ஆரிருள் விலகி ஒளிபெறவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!

*மெய்யப்பன், காரைக்குடி*

## சகல நலனும் தந்திடுவான்

**ஆடுக ஊஞ்சல் ஆடுகவே**
**அய்யா முருகா ஆடுகவே**
**ஆடுக ஊஞ்சல் ஆடுகவே**
**அய்யா முருகா ஆடுகவே**

தேவ கோட்டை நன்நகராம்
தெய்வக் கோயில் பற்றவராம்
கோவில் தோறும் ஊருணியும்
குறைவிலா தன்றே கட்டினாராம்

வெள்ளையன் ஊருணி கீழ்கரையில்
பிள்ளை யாருக்கென ஓர்கோவில்
மேல்கரை தன்னில் இராமருக்கும்
மாலவன் தனக்கும் இருகோவில்

வெள்ளையன் ஊருணி தென்கரையில்
வேட்டு வள்ளி வேலவனும்
வெள்ளி ஊஞ்சல் தானமர்ந்து
வெகுநலந் தரவே ஆடிகிறான்

சிங்கை நகரில் தானமர்ந்து
சிந்தை மகிழ ஆடிவர
எங்கள் வேலன் கொண்டுசெல்லும்
ஏறார் வெள்ளி ஊஞ்சலிதாம்

வண்ணவண்ண மலர் தொடுத்து
மாலை சூட்டி அலங்கரித்து
எண்ணம் போல வாழ்வளிக்க
இசைந்து முருகா ஆடுகவே

சுபஜெய ஆண்டு தைமாதம்
அவிட்ட நல்ல நட்சத்திரம்
துவிதியை திதியாம் வளர்பிறையில்
அமரும் ஊஞ்சல் வேலவனாம்

குருவாய் வந்த வேலவனே
குறிப்பாய் இந்த குருநாளில்
திருவார் வெள்ளி ஊஞ்சலிலே
சிந்தை மகிழ ஆடுகவே

பழனி யப்பர் ஆனந்தி
பகதியோட தான் அமைத்த
அழகிய வெள்ளி ஊஞ்சலிலே
அய்யா முருகா ஆடுகவே

சேவுகன் செட்டி கவிமயங்கி
செவ்வேல் தானும் அருள்தரவே
தாவி இங்கே வந்திடுவான்
சகல நலனும் தந்திடுவான்

*மீ. சேவுகன் செட்டி, தேவகோட்டை*

## வெள்ளி ஊஞ்சல்

ஆடுதய்யா ஆடுதய்யா வெள்ளி ஊஞ்சல்
அழகாக ஆடுதய்யா வெள்ளி ஊஞ்சல்
உள்ளமெல்லாம் நாடுகின்ற வெள்ளி ஊஞ்சல்
ஓம்முருகன் ஆடுகின்ற வெள்ளி ஊஞ்சல்

தெள்ளமுதச் சந்தப்பாட்டு வெள்ளி ஊஞ்சல்
தென்பழனி வேந்தன் பாட்டு வெள்ளி ஊஞ்சல்
சக்திமகன் சரவணத்தின் வெள்ளி ஊஞ்சல்
சண்முகனின் பொன்முகமே வெள்ளி ஊஞ்சல்

பக்திக்கடல் ஓசைஒலி வெள்ளி ஊஞ்சல்
பார்புகழும் வேலன்ஒளி வெள்ளி ஊஞ்சல்
செம்படையின் பட்டிபுகழ் வெள்ளி ஊஞ்சல்
சிங்கார வேலன் ஆடும் வெள்ளி ஊஞ்சல்

எட்டுதிக்கும் புகழ்மணக்கும் வெள்ளி ஊஞ்சல்
ஏழிசையின் கலைமணக்கும் வெள்ளி ஊஞ்சல்
செட்டிமகன் புகழ்பாடும் வெள்ளி ஊஞ்சல்
செல்வமகன் வரம்நாடும் வெள்ளி ஊஞ்சல்

சடையப்பர் மண்டபத்தில் வெள்ளி ஊஞ்சல்
சஞ்சலத்தைப் போக்குகின்ற வெள்ளி ஊஞ்சல்
நடைப்பயண இடர்நீக்கும் வெள்ளி ஊஞ்சல்
நாதமயில் அண்ணாமலை வெள்ளி ஊஞ்சல்

## நகரத்தார் ஊஞ்சல்

**ஆடுக ஊஞ்சல் ஆடுகவே**
**ஐயா முருகா ஆடுகவே**
**ஆடுக ஊஞ்சல் ஆடுகவே**
**ஐயா முருகா ஆடுகவே**

செட்டி நாட்டு நகரத்தார்
சேர்ந்து செய்த ஊஞ்சலிலே
சீரும் சிறப்பும் தந்திடவே
செட்டி முருகா ஆடுகவே

வெள்ளியில் செய்த ஊஞசலிலே
வள்ளி தெய்வயானையுடன்
புள்ளி மையிலில் ஏறிவந்து
துள்ளி துள்ளி ஆடுகவே

அண்ணன் கணபதி துனையாளே
அன்னை வள்ளியை அடைந்தவனே
உந்தன் துனையாள் நாங்களுமே
உயர்வே அடைந்திட ஆடுகவே

தந்தையின் கண்ணில் உருவானாய்
தாய் உன்கையில் வேலானாள்
செட்டி மக்களின் குருவானாய்
கட்டி கரும்பே ஆடுகவே

ஞானப் பழமும் வேண்டியே நீ
ஆண்டியாய் மலையில் நின்றாயே
வாழ்வில் நாங்கள் வளமாக
அழகா முருகா ஆடுகவே

*அருண் வீரப்பா, காரைக்குடி*

## வர வேண்டும் வர வேண்டும்

**வரவேண்டும் வரவேண்டும் செந்தில் வடிவேலா-வரம்**
**தரவேண்டும் தரவேண்டும் செந்தில் வடிவேலா**

தாங்கரிய துன்பம் வந்தால் செந்தில் வடிவேலா-நீ
தாயாக வரவேண்டும் செந்தில் வடிவேலா
ஏங்கியழும் போது தேற்ற செந்தில் வடிவேலா-நீ
எந்தையாக வரவேண்டும் செந்தில் வடிவேலா!

வருகின்ற நோய் தீர்க்க செந்தில்வடிவேலா-நீ
மருந்தாக வரவேண்டும் செந்தில் வடிவேலா

அருவினையைத் தீர்ப்பதற்குச் செந்தில் வடிவேலா-நீ
ஆள்வினையாய் வரவேண்டும் செந்தில் வடிவேலா!

மயங்கு வயதடையும் காலம் செந்தில் வடிவேலா-நீ
மகவாக வரவேண்டும் செந்தில் வடிவேலா
தயங்குநிலை வந்தநேரம் செந்தில் வடிவேலா-என்
தம்பியாக வரவேண்டும் செந்தில்வடிவேலா!

அவலம்வரும் நேரம்கண்டு செந்தில் வடிவேலா-என்
அண்ணனாக வரவேண்டும் செந்தில் வடிவேலா
தவழுமுள்ளக் கருத்தைச்சொல்ல செந்தில் வடிவேலா-நீ
தமிழாக வரவேண்டும் செந்தில் வடிவேலா.

வானம் பார்க்கும் உழவருக்குச் செந்தில் வடிவேலா-நீ
மழையாக வரவேண்டும் செந்தில் வடிவேலா
நானடையும் தீங்ககல செந்தில் வடிவேலா-என்
நண்பனாக வரவேண்டும் செந்தில் வடிவேலா

அறியாமை சூழ்ந்தபோது செந்தில் வடிவேலா-நீ
அறிவாக வரவேண்டும் செந்தில் வடிவேலா
நெறியாவும் முடியும்போது செந்தில் வடிவேலா
நீயேதான் வரவேண்டும் செந்தில் வடிவேலா!

கடலோடி மயங்குவார்க்கும் செந்தில் வடிவேலா-நீ
கலமாக வரவேண்டும் செந்தில் வடிவேலா
உடல்வாடும் ஏழைவாழ செந்தில் வடிவேலா-நீ
உறுதுணையாய் வரவேண்டும் செந்தில் வடிவேலா!

## அப்பன் பழநி அப்பனடா

**சரணம் சரணம் சரணமய்யா-சாமி சரணம் சரணம் சரணமய்யா!**

அப்பன் பழநி அப்பனடா-அவன்
அரும் பெரும் திரவியக் கப்பலடா
அற்புதம் காட்டும் தலைவனடா-அவன்
அன்புக்குப் பணிசெய்யும் இறைவனடா!

காண்போம் நாம்அவன் படைவீடு-தம்பி
கால்வலி மறந்து நடைபோடு
கண்டால் நமக்கில்லை ஒருகேடு-நீ
காவடி எடுத்து நடமாடு!

வணிகர் குலத்துக்குத் தாயாவான்-அவன்

வளைவினில் ஓடிடும் சேயாவான்!
கவிஞர்கள் பாட்டுக்கு வாயாவான்-எங்கு
கடும்பகை கண்டாலும் தீயாவான்!

ஆண்டிக்குப் பாரடி சாத்துபடி-நாம்
ஆடிடப் பழனியில் தீர்த்தமடி
வேண்டிடும் வரம் தரும் தீபமடி-இதில்
வேதனையே இலை லாபமடி

பழனிக்குப் போவதில் சுகம் அதிகம்-அவன்
பார்வையில் நிற்பதில் குணமதிகம்
விழுந்து வணங்கினால் வயததிகம்-அந்த
வீரன் தருவான் பணமதிகம்.

செட்டிமக்கள் இந்தப் பூமியிலே-பல
தெய்வத்துக் களித்தது கோடியம்மா
கட்டிய கோயில்கள் ஆயிரமே-அதில்
கந்தனின் கோயில்கள் யாவையுமே
முருகப்ப னில்லாத ஊருமில்லை-ஒரு
முத்தப்ப னில்லாத வீடுமில்லை
பழனியப்ப னின்றி வம்சமில்லை-எங்கள்
பரம்பரைக் கவனின்றி அம்சமில்லை

கால்நடைப் பயணத்தில் ஓடிவந்தோம்-உன்
கருணைக்குத் தானுனைத் தேடிவந்தோம்
வேலெமைக் காக்கட்டும் வேலவனே-உன்
விழிஎமைக் காக்கட்டும் நாயகனே.

*- கவியரசு கண்ணதாசன்*

## தண்ணீர் மலையான்

வேலும் மயிலும் துணை

**கந்தனுக்கு வேல் வேல் செந்தூர் வேலனுக்கு வேல் வேல்**
**கந்தனுக்கு வேல் வேல் செந்தூர் வேலனுக்கு வேல் வேல்**

துள்ளி விளையாடும் சின்னப் பிள்ளைமுகம் மறந்து
வெள்ளி விளையாடும் மலேயா சீமை தன்னையடைய
நாகைபட்டினத்துக் கடலில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும்
செட்டிக் கப்பலுக்குத் துணையாம் செந்திலாண்டவனே

**செந்தில் ஆண்டவனே! ஐயா! செந்தில் ஆண்டவனே!**
**செந்தில் ஆண்டவனே! ஐயா! செந்தில் ஆண்டவனே!**

கப்பல் ஏறுகையில் முதலில் கடல் முகம் தெரியும்
கண்களில் நீரோடு நிற்கும் மனைவிமுகம் தெரியும்

அன்னைமுகம் தெரியும் அன்புப்பிள்ளைமுகம் தெரியும்
அந்தமுகங்களிடைச் செந்தூர் கந்தன் முகம் தெரியும்

**செந்தில் வடிவேலா ஐயா செந்தில் வடிவேலா**
**வந்தவினை தீர்க்கும் எங்கள் செந்தில் வடிவேலா!**

பினாங்குத் துறைமுகத்தைக் கப்பலும் பிடித்து விட்டதையா
கப்பல் அடியினிலே கூட்டம் கண்டிடவந்திருக்கு
தண்ணீர்ப் பூமலையில் நிற்கும்
தண்ணீர்மலையானே எங்கள்
பெண்டு பிள்ளைகளைக் காக்கும் பெரிய மலையானே

**தண்ணீர் மலையானே நெஞ்சின் தாகம் தீர்ப்பானே**
**கண்களில் நீர்வழிய நாமும் கைகளைக் குவிப்போமே**

தைப்பூச நாளினிலே அவனும் தங்கரதமேறி
நகரத்தைப் பார்க்கத் தேரில் நகர்ந்து வந்திடுவான்
பார்க்கும் மிடமெல்லாம் தமிழர் பக்திமுகம் தெரியும்
காவடி ஆடிவரும் சீனர்காலடியும் தெரியும்

**கந்தனுக்கு வேல்வேல் செந்தூர் வேலனுக்கும் வேல் வேல்**
**கடலைத் தாண்டி எடுக்கும் எங்கள் காவடிக்கும் வேல் வேல்**
**கந்தனுக்கு வேல் வேல் கந்தன் காவடிக்கும் வேல் வேல்**

கந்தனுக்கு வேல் வேல் கந்தன் காவடிக்கும் வேல் வேல்

*கவிஞர் மா. கண்ணப்பன்*

## அழைக்கட்டுமா அழைக்கட்டுமா!-

**அழைக்கட்டுமா சாமி அழைக்கட்டுமா!-அந்த**
**ஆறுமுக வேலவனை அழைக்கட்டுமா!**

அழைக்கட்டுமா சாமி அழைக்கட்டுமா!-அந்த
ஆறுமுக வேலவனை அழைக்கட்டுமா!

ஆறுபடை வீட்டோனை அழைக்கட்டுமா!-
சாமி அழைக்கட்டுமா!- அந்த
ஆனைமுகன் தம்பியை அழைக்கட்டுமா!

இனிய வடிவேலவனை அழைக்கட்டுமா!
சாமி அழைக்கட்டுமா!-அந்த
அந்த இடும்பாயுதனை அழைக்கட்டுமா!

ஈராறு கையனை அழைக்கட்டுமா!-
சாமி அழைக்கட்டுமா!-அந்த
ஈசனுமை பாலகனை அழைக்கட்டுமா!

உள்ளங்கவர் கள்வனை அழைக்கட்டுமா!-
சாமி அழைக்கட்டுமா!-அந்த
உல்லாச குமரனை அழைக்கட்டுமா!

ஊமைக்குபதேசித் தோனை அழைக்கட்டுமா!-
சாமி அழைக்கட்டுமா!-அந்த
ஊனமெல்லாம் அழிப்போனை அழைக்கட்டுமா!

எட்டுக்குடி வேலவனை அழைக்கட்டுமா!-
சாமி அழைக்கட்டுமா!-அந்த
எங்கும் நிறை இறைவனை அழைக்கட்டுமா!

ஏறுமயில் வாகனனை அழைக்கட்டுமா!-
சாமி அழைக்கட்டுமா!-அந்த
ஏழைப்பங்காளனை அழைக்கட்டுமா

ஐங்கரனுக்கிளையவனை அழைக்கட்டுமா!-சாமி
அழைக்கட்டுமா!- அந்த
அன்பர்கள் நேயனை அழைக்கட்டுமா!

ஒப்பில்லா மணியை அழைக்கட்டுமா!-சாமி
அழைக்கட்டுமா!- அந்த
ஒய்யார நாதனை அழைக்கட்டுமா!

ஓங்காரப் பொருளோனை அழைக்கட்டுமா!-சாமி
அழைக்கட்டுமா!- அந்த
ஓம் என்ற மந்திரத்தை அழைக்கட்டுமா!

ஔவைக்கு உபதேசித்தோனை அழைக்கட்டுமா!-சாமி
அழைக்கட்டுமா!- அந்த
ஆவினன்குடியோனை அழைக்கட்டுமா!

கண்கண்ட தெய்வத்தை அழைக்கட்டுமா!-சாமி
அழைக்கட்டுமா!- அந்த
கருணைக் கடலை அழைக்கட்டுமா!

சிங்கார வேலவனை அழைக்கட்டுமா!-சாமி
அழைக்கட்டுமா!- அந்த
சிவகுருநாதனை அழைக்கட்டுமா!

பக்தர்கள் அனைவரும் அழைக்கட்டுமா!-
சாமி அழைக்கட்டுமா!-அந்த
பழநியம் பதியோனை அழைக்கட்டுமா!

வேலும் மயிலும் துணை

# சிங்கார வேலு!

அலங்காரம் செய்திட்ட மயிலு -நம்ம
முருகனின் கையிலே சிங்கார வேலு!
வேலுக்கு இடுவோமே பூசை - பாதை
மீதினில் வந்திடும் பக்தியெனும் ஆசை!
மணியோசை கேட்போமே மலையில் - அங்கே
மலையாண்டி நிற்பானே அலங்கார நிலையில்!
வேல்வழியே பால்வழியும் காட்சி - நம்ம
முருகனவன் வினைதீர்க்க ஓடிவரும் மாட்சி!
சரவணனின் ஆறுமுகத் தோற்றம் - நல்ல
சம்காரம் செய்தோனின் புனிதத்தின் மாற்றம்!
தந்தைக்கு வேதத்தைச் சொன்னான்-வள்ளி
தனக்காக மரமாகிச் சோலையிலே நின்றான்!
ஒருமுகத்தைப் பழநியிலே பார்ப்போம்-அந்தத்
திருமுகத்தின் பூமலரின் வேதனையைத் தீர்ப்போம்!
தினையூட்டிப் பசி தீர்த்தாள் வள்ளி - முருகன்
தினந்தோறும் பசிதீர்க்க வருவாளே துள்ளி
அடிவாழைக் கன்றாகி வாழ்வோம் - நம்ம
குடிவாழக் குமரனின் பாதத்தைச் சார்வோம்!

## மயில்

**மயில் வந்து ஆடுது மலைமேலே**
**குயில் வந்து பாடுது சிலைபோலே**
**வேல் வந்து மின்னுது கண்ணெதிரே - என்**
**வேலனைக் காணேனோ என்னெதிரே?**

மயில் வந்து ஆடுது மலைமேலே
குயில் வந்து பாடுது சிலைபோலே
வேல் வந்து மின்னுது கண்ணெதிரே - என்
வேலனைக் காணேனோ என்னெதிரே?

திருப்புகழ் பாடியே கைதொழுதேன்
கருப்புகள் நீக்கிட மெய்தொழுதேன்
விருப்புடன் வேண்டியே பாடுகிறேன்
விராலிமலை நோக்கி ஓடுகிறேன்.

சோலையில் வந்தால் குறைதீரும் -அந்தச்
சுந்தரப் புன்னகை நிறைவாகும்
மாலையில் மயங்கியே வாடுகிறேன்
மையலில் உன்னையே தேடுகிறேன்.

வள்ளிக்கு வாய்த்த வடிவழகா!
அள்ளிடஆவி துடிக்குதப்பா
சொல்லிச் சொல்லி என்ன பயன்?
நில்லு நில்லு என்கண்ணெதிரே!

*அழ. ரெத்தினம் தேவகோட்டை*

## ஓம் முருகா ஓம் ஓம்

**ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா ஓம் ஓம்**
**ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா ஓம் ஓம்**

தேவியை மணந்த இடம் பரங்கிரியாம் தேசம்
அது தேவ கைலாசம் - அங்கு
சிறக்குதையா மார்பினிலே செண்பகத்தின் வாசம்

கந்தனவன் வென்ற இடம் கடல்பாடும் தேசம்
அது கருணைக் கைலாசம் -அங்கு
கமழுதையா மார்பினிலே கடம்பமலர் வாசம்

பழத்துக்காகப் போட்டியிட்டது தென்பழனி தேசம்
அது பக்தர் கைலாசம்-அங்கு
பகட்டுதய்யா மார்பினிலே பாரிஜாத வாசம்

ஆசானாய் வந்த இடம் சுவாமிமலை தேசம்
அது அறிவுக் கைலாசம்-அங்கு
அடிக்குதய்யா மார்பினிலே அல்லிமலர் வாசம்

குன்று தோராடுவது குமரனது தேசம்
அது கோடிக் கைலாசம்-அங்கு
கொஞ்சுதய்யா மார்பினிலே குறிஞ்சிமலர் வாசம்

வேலும் மயிலும் துணை



# என்னோடும் பேசு சாமிநாதா

**ஈசனோடு பேசியது போதுமே**
**என்னோடும் பேசுசாமி நாதனே**
**ஆசையோடு தமிழெடுத்துப் பாடினேன்**
**ஐயாஉன் திருவடியை நாடினேன்**

ஈசனோடு பேசியது போதுமே
என்னோடும் பேசுசாமி நாதனே
ஆசையோடு தமிழெடுத்துப் பாடினேன்
ஐயாஉன் திருவடியை நாடினேன்

கண்சீறும் பொறியூறிற் பிறந்தவா
கமலத்தில் அன்று நீயும் தவழ்ந்தவா
தண்ணீரில் சளியுனக்குப் பிடிக்குமே
சரவணத்துப் பொய்கைவிட்டு எழுந்துவா

கடலோரம் நிற்பவனே சண்முகா
கடல் நீரால் உடல் அரிக்கும் அல்லவா
நடமாடும் மயிலேறி இங்குவா
நல்ல மனக் கோயிலுண்டு தங்கவா

குன்றத்திலே கல்யாணம் ஆனதால்
குவலயத்தை நீமறத்தால் நியாயமா
குன்றத்தையும் விட்டிறங்கி ஓடிவா
கொஞ்சு தமிழ் இசைகேட்டு ஆடிவா

பன்னிரண்டு கண்களாடுந் தெய்வமே
என்னை மட்டும் காணமனம் இல்லையோ
உன்னை விட்டு யாரை இனி நம்புவேன்
சண்முகனே என்னுடனே வம்புஏன்

ஒன்றிரண்டு விழியேனும் திறந்திடு
ஓரவிழிப் பார்வையேனும் புரிந்திடு
என்றுமுனை நம்பிநின்றேன் வரங்கொடு
ஏற்றமுடன் யான் வாழ வரங்கொடு.

*மீ. சேவுகஞ்செட்டி*

# விதி மாற்றி புது வாழ்வு தருக

**வேலாட மயிலாட வேலாட மயிலாட**
**வினைபோக்கி எமையாள வருக!**
**விதி மாற்றிப் புது வாழ்வு தருக - முருகா**
**விரைந்தோடி எமைக் காக்க வருக**

வேலாட மயிலாட வேலாட மயிலாட
வினைபோக்கி எமையாள வருக!
விதி மாற்றிப் புது வாழ்வு தருக - முருகா
விரைந்தோடி எமைக் காக்க வருக

சிறியேனும் உன்பிள்ளை
உன்வீட்டின் கொடிமுல்லை
அடியேனுக் கருள் காட்சி தருக - தினம்
அயில்வேலும் மயிலோடும் வருக

விடி காலை ஜப வேளை
வடிவேலைத் தொழும் வேலை
மடி நீக்கி மனதாள வருக _ முருகா
மயிலோடும் வேலோடும் வருக

உலகாளும் தலைவா நீ
உனதாட்சி தனிமாட்சி
தேவானை குறமாதும்கூட _ முருகா
திருக் காட்சி தரவேண்டும் பாட

திருச்செந்தூர் பரங்குன்றம்
தென்பழநி சோலைமலை
திருத்தணிகை சுவாமிமலை குருவே முருகா
செவ்வேளே சிங்கார உருவே

மங்காத ஒளிவீசும்
மதிபோலும் முகமானோய்
எங்கேனும் உன் போன்ற காட்சி _ முருகா
இனிமேலும் அமையாதே மாட்சி

இடரேதும் வாராது
எனநீயும் கூறாது
இனிமேலும் விடமாட்டேன் உனையே _ முருகா
இனி நானும் போவதெங்கே தனியே

# தங்கத்தேரில் வாவா

## வேல்வேல் வேல்வேல் வேல்முருகா வேல்
## வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்

ஆடிப்பாடி உன்னைத்தானே தேடிவாரோமே
அரோகரா என்று சொல்லிப் பாடிவாரோமே
தேடி வந்தோர் வாழ்க்கையிலே நலங்கொடுத்திடும்
தண்டபாணித் தெய்வமே தங்கத்தேரில் வா வா

பார்புகழும் பழனிமலை ஆண்டவனே வா
பரங்குன்றப் பேரழகே வேலெடுத்து வா
சீர் மேவும் சரவணையில் தவழ்ந்தவனே வா
சிங்கார வேலவனே தங்கத்தேரில் வா வா!

வண்ணமயில் கொண்டவனே வா வா வா
வடிவழகே திருமுருகே ஓடோடி வா
எண்ணமெல்லாம் நிறைந்தவனே வா வா வா
எழில் நிலவே தங்கத்தேரில் ஏறிநீயும் வா வா!
பிரணவத்தின் பொருள் உரைத்துப் பெருமைகொண்டவா
திறமைமிகு சூரர்படை வென்று வந்தவா
அருணகிரி பாட்டினிலே அகமகிழ்ந்தவா
அன்பரெல்லாம் மகிழ்ந்திடவே தங்கத்தேரில் வா வா!

ஆறுமுகம் ஆகிவந்த வேலவனே வா
அன்பருள்ளம் கோயில் காணும் ஆனந்தனே வா
கூறும் வினை தீர்த்துவைக்க வேலெடுத்துவா
குன்றம் கண்ட தண்டபாணி தங்கத்தேரில் வா வா!

காவடிக்கு வழித்துணையாய் வேலைத்தந்த வா
கடம்பனோடு இடும்பனையும் காவல் தந்த வா
ஆடிவரும் காவடியைக் காணவேண்டாமா?
அழகுமுகம் காட்டி இங்கே சிரித்து மகிழ வா வா

ஆடிவரும் காவடிக்குள் சேர்ந்துவருபவன்
அழகுமுகம் காட்டி அங்கே சிரித்து நிற்பவன்
அருளாடி உருவினிலே காட்சி தருபவன்
அவரோடு தனிமையிலே பேசிப் பேசி மகிழ்பவன்!

குட்டையய்யா குடும் பத்திலே சொந்தம் கொண்டவன்
கும்பிட்டோர் நலம்காக்கப் பிரம் பெடுப்பவன்
பிரம் பெடுத்து ஆடுகின்ற பேரழகே வா
பெருமை சொன்னோம் தண்டபாணி தங்கத்தேரில் வா வா!

உன்னருளால் வாழ்வதிலே பெருமை கொள்கிறோம்
உன்வாசல் வருவதிலே சுகமும் காண்கிறோம்
எண்ணமெல்லாம் நிறைந்தவனே எழில் முருகே வா
வண்ணமயில் விட்டிறங்கித் தங்கத் தேரில் வா வா!

பழத்துக்காகச் சண்டைபோட்டுப் பழனிசென்ற வா
ஔவைப் பாடலுக்கே பழமும் தந்து ஊதச் சொன்ன வா
அள்ளித்தரும் வள்ளலே என் செந்திலாண்டவா
ஆனந்தமாய் வேல் பிடித்துத் தங்கத் தேரில் வா வா!

உன்னழகைக் காண்பதற்கே ஓடி வருகிறோம்
உன்னருளைப் பெருவதற்கே தேடி வருகிறோம்
வண்ணமயில் ஏறிவரும் வடிவழகே வா
அன்னை தந்த வேலுடனே தங்கத் தேரில் வா வா!

அன்னையவள் மீனாட்சி வாழ்த்தி மகிழ்கிறாள்
அப்பன் மதுரைச் சொக்கேசன் பெருமை கொள்கிறார்
தேவர்மகள் தெய்வயானை மெல்லச் சிரிக்கிறாள்
தினைப்புனத்துவள்ளிமயில்குலுங்கிக்குலுங்கிச் சிரிக்கிறாள்

## சிங்கப்பூரில் தெண்டபாணி சிரித்து நிற்கிறார்

**வேல் வேல் வேல் வேல் வேல்முருகா வேல்**
**வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்**

சிங்கப்பூரில் தெண்டபாணி சிரித்து நிற்கிறார்
செல்வவளம் தந்து நம்மை காத்து வருகிறார்
அள்ளிதரும் வள்ளலான செந்திலாண்டவர்
அலைகடலை தாண்டி இங்கே வந்து நின்று மகிழ்கிறார்

சிங்கப்பூரில் கோயில் கொண்ட தெண்டபாணியே
செல்வ நலம் தந்தருளும் தெண்டபாணியே
எல்லையில்லா பேரழகே தெண்டபாணியே
தாள்பணிந்து வணங்குகின்றோம் காத்திடுவாய் வேலவா

வள்ளி தெய்வயானையுடன் மலையும் விட்டுமே
வந்துவிட்டார் தெண்டபாணி சிங்கப்பூருக்கே
கொண்டாடி மகிழ்ந்திடுவோம் தெண்டபாணியை
அழகுத்தேரில் ஏற்றி போற்றிடுவோம் என்றும் எப்போதும்

செட்டிமுருகன் தெண்டபாணி தேரில் வருகிறார்
செல்வசுகம் தந்திடவே நேரில் வருகிறார்
சிங்கைவளர் தெண்டபாணி சிரித்து வருகிறார்
சிங்காரவேல் பிடித்துப் பவனி வந்து மகிழ்கிறார்

பார்புகழும் பழனிமலை தேர்ந்தெடுத்தவா
பஞ்சாமிர்த குளியலிலே திளைத்து மகிழ்பவா
போற்றி வளரும் செட்டிமக்கள் குலம் தழைக்கவே
கடல்கடந்து சிங்கப்பூரில் கோயில் கொண்ட மன்னவா

குழந்தைபோலக் குன்றத்திலே சிரித்து நிற்பவன்
மழலையென்று மகிழ்ந்து சொன்னால் குலுங்கிச் சிரிப்பவன்
செட்டிமகன் நீதானப்பா என்று சொன்னாலே
சிங்கார சிரிப்புடனே வந்தே காட்சி தருபவன்

காவடிகள் ஆடிவரும் அழகை ரசிப்பவன்
அந்தக் காவடிக்குள் வந்து முகம் காட்டிச் சிரிப்பவன்
சேவடியே சரணமென வணங்கி வாழ்ந்திடும்
இந்தச் செட்டிமக்கள் குலம்தழைக்க வேல்பிடித்து நிற்பவன்

பால்குடங்கள் காவடிகள் சேர்ந்தே வந்திட
பக்தரெல்லாம் அரோகரா என்றே முழங்கிட
சிங்கப்பூரில் நின்றருளும் தெண்டபாணியும்
அழகு சிங்காரத்தேரில் வந்து கண்டு கண்டு மகிழ்கிறார்

ஊஞ்சலிலே ஆடுகின்ற பேரழகே வா
உன்னடியார் மகிழ்ந்திடவே வேல்பிடித்து வா
தஞ்சமென்று உனைப்பணிந்தோம் சிங்கையாளும் மன்னவா
சிங்காரவேல் பிடித்து நேரில் நீயும் வா வா

பழம்கேட்டு சண்டைபோட்டு பழனி வந்தவா
அங்கே பக்தர் போற்ற கோஹூன்றி நிற்கும் ஆண்டவா
கடலும் தாண்டி சிங்கப்பூரில் கோயில் கொண்டவா
எங்கள் கஷ்டம் கவலை தீர்த்திடவே நீயும் நேரில் வா வா

குன்றம் எல்லாம் கோயில் கொண்ட தெண்டபாணியும்
வந்தமர்ந்தான் சிங்கப்பூரில் வளங்கள் பெருகவே
போற்றி நாமும் வணங்கிடுவோம் என்றும் எப்போதும்
அவன் கேட்டதெல்லாம் தந்திடுவான் நாமும்
மகிழவேண்டியே

வட்டி தொழில் செய்யவந்த எங்களுக்கேதான்
வளமோடு வேலைவாய்ப்பை தந்தவன் நீயே
செட்டிமக்கள் குலம் காக்கும் சிங்கை வேலைய்யா
உன் சேவடியே சரணமய்யா சரணம் சரணம் முருகைய்யா

*அருளிசைமணி நேமத்தான்பட்டி அரு.சுப்பிரமணியன்*

# அப்பா என்றால் முருகப்பா

**அப்பா என்றால் முருகப்பா அய்யா என்றால் வேலய்யா**
**அம்மா என்றால் சண்முகம் அத்தனையும் உன்முகம்**

அப்பா என்றால் முருகப்பா அய்யா என்றால் வேலய்யா
அம்மா என்றால் சண்முகம் அத்தனையும் உன்முகம்

என்னபேரு சொல்லி உன்னைக் கூப்பிட்ட போதும்
என்மனமும் இனிப்பதென்ன நினைத்திட்ட நேரம்
செந்தமிழும் போதுமா
தேன் தினைமா வேணுமா

கண்ணாலுன்னைக் காண்பதிலே பேரானந்தமே
கால்அழகு ஒன்றுமட்டும் கருத்தில் மேவுமே
கன்னித் தமிழ் போதுமா
காவடியும் வேணுமா

வேல்அழகைப் பார்ப்பவர்கள் வேதனைமாறும்
விழிஅழகு வினையறுத்துச், சாதனைகூறும்
பாட்டு மட்டும் போதுமா
பால்பழமும் வேணுமா

மயிலாட்டம் மக்களுக்கு ஒரே கொண்டாட்டம்
மகுடமணி ஒளியழகோ என்றும் கொண்டாட்டம்
பாட்டு மட்டும் போதுமா
பஞ்சாமிர்தம் வேணுமா

சேவல்கொடி அசைவதிலோர் சிங்காரச் சிறப்பு-அது
ஜெகத்தினையே எழுப்பிவிடும் சேதியின் பிறப்பு
பாட்டு மட்டும் போதுமா
பன்னீருனக்கு வேணுமா

வலதுபுறம் வள்ளியம்மை சூரியனாமே
இடதுபுறம் தேவயானை சந்திரனாமே
ஒளியழகே வேலய்யா
ஓடிவாராய் முருகய்யா

# எத்தனை அலங்காரம்

**எத்தனை அலங்காரம் முத்தமிழ் முருகனுக்கு**
**எத்தனை அலங்காரம்**
**சக்தியின் பிள்ளை சரவண முத்துக்கு**
**எத்தனை அலங்காரம்**

எத்தனை அலங்காரம் முத்தமிழ் முருகனுக்கு
எத்தனை அலங்காரம்
சக்தியின் பிள்ளை சரவண முத்துக்கு
எத்தனை அலங்காரம்

சித்தம் போற்றும் சிவனார் பிள்ளைக்கு
எத்தனை அலங்காரம்
குழந்தை அலங்காரம் கோடிப் புன்னகை
கூடும் அலங்காரம்

மழலை அலங்காரம் மங்கையர் தாலாட்டி
மகிழும் அலங்காரம்
சிறுவன் அலங்காரம் சிவனுக்கு மந்திரம்
செப்பும் அலங்காரம்

குமரன் அலங்காரம் கோதையர் இருவர்
கொஞ்சும் அலங்காரம்
வேலன் அலங்காரம் வேல் கொண்டு சூரனை
வீழ்த்தும் அலங்காரம்

வேடன் அலங்காரம் வேல்விழி வள்ளியை
விரும்பும் அலங்காரம்
விருத்தன் அலங்காரம் வினாயகர் துணையின்
வெற்றி அலங்காரம்

வேலும் மயிலும் துணை

அரசன் அலங்காரம் அனைத்துச் செல்வமும்
அளிக்கும் அலங்காரம்
ஆண்டி அலங்காரம் ஆசையை நீக்கிய
அழகு அலங்காரம்

சந்தன அலங்காரம் சகலப் புகழையும்
தந்திடும் அலங்காரம்
திருநீறு அலங்காரம் தீவினை போக்கிடும்
திவ்விய அலங்காரம்

மலர்கள் அலங்காரம் மங்களம் தருகின்ற
மகிழ்ச்சி அலங்காரம்

திருமண அலங்காரம் தேவியர் இருவர்
திருப்பூட்டும் அலங்காரம்

நண்பர்கள் அனைவரும் நடத்தும் பஜனையில்
எத்தனை அலங்காரம்
நாடும் வீடும் போற்றும் நல்ல
கந்தர் அலங்காரம்

*குறள் இலக்குவன், காரைக்குடி*

## அகிலலோக நாயகனைப் பாடுங்கள்

**அரோகரா அரோகரா சொல்லுங்க-அந்த
அகிலலோக நாயகனைப் பாடுங்க**

அரோகரா அரோகரா சொல்லுங்க-அந்த
அகிலலோக நாயகனைப் பாடுங்க

திருவளரும் பழனி ஆண்டி வந்தானே-அவன்
திக்கெல்லாம் புகழ் பரப்பி நின்றானே
வேலை மட்டும் கையிலேந்தி வாரானே-நம்ம
வினைகள் எல்லாம் களையெடுக்க போரானே

துடுப்பில்லாமல் படகு நல்லா போகுமா-நம்
துயரமெல்லாம் துடுப்பு போல ஆகுமா
துன்பமென்று நடந்திட்டோம் தூயவனே காத்திடு-நான்
துணையிருப்பேன் என்று சொல்லி என் மனதைத்தேத்திடு

காவடியை தோளில் ஏந்தி வாரோமே-எங்கள்
கவலையெல்லாம் தீர்த்து வைப்பாய் ஐயாவே
ஜாதிமத பேதமில்லை சமத்துவம் தான் பாடுது
ஐங்கரனுக் கிளையவனை உலகமெல்லாம் புகழுது

ஆழ்கடலில் கண்டெடுத்த முத்துதான்-ஐயா
அனைவருக்கும் நீயும் நல்ல சொத்துதான்
ஆண்டவனைப் பார்த்திட்டோம் ஆறுதலை சொல்லிவிட்டான்
அனைவருக்கும் அவன் காட்சி அற்புதமாய் தந்திடுவான்

கண்டனூர் சாமி ஆடி வராங்க-நம்ம
கதிர்வேலன் புகழை நல்லா சொல்வாங்க
சொந்தமெல்லாம் மறக்கணும் பந்தமெல்லாம் துறக்கணும்
ஐயா உன் புகழை நான் என்றென்றும் பாடனும்

# கந்தன் தாலாட்டு

**ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ**
**ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ**

ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ

தாயரசி பார்வதியாள் தரவில்லையோ பாலுமென்று
தங்கமகன் அழலாமோ சண்முகனே கண்ணுறங்கு

ஒய்யாரப் பாற்குடங்கள் ஒருகோடி தானெடுத்து
மெய்யன்பர்கள் வருவார்கள் மீன்விழியே கண்ணுறங்கு

ஆடிவிளை யாடுதற்கு அழகுப் பொருளில்லையென்று
அழலாமோ வேலவனே ஆரமுதே கண்ணுறங்கு(ஆராரோ)

ஆயிரமாம் காவடிகள் ஆடிவரும் கூடிவரும்
ஆனந்தமாய் ஆடிடலாம் அழகமுதே கண்ணுறங்கு

மாம்பழத்தை அண்ணனுக்கு மாயவனும் தந்ததனால்
மயிலேறி வலம்வந்த மால்மருகா கண்ணுறங்கு

தேன்கொட்டும் அபிஷேகம் செங்கதலிப் பழச்சாறு
சேர்ந்துநிதம் குளித்திடலாம் செவ்வேளே கண்ணுறங்கு

வஞ்சிக் கொடி வள்ளியம்மை வாஞ்சைக்கிளி தெய்வானை
வந்திடுவார் கொஞ்சிடுவார் வடிவேலா கண்ணுறங்கு

வேலும் மயிலும் துணை

கொஞ்சிவிளை யாடுதற்கு மஞ்சள்முக மில்லையென்று
கோமகனே அழலாமோ குமரவேளே கண்ணுறங்கு

ஏறுமயில் ஏறுதற்கும் எங்கும் விளையாடுதற்கும்
ஏங்கியேநீ அழலாமோ எழிலரசே கண்ணுறங்கு

ஆறுபடை வீடிருக்கு அழகுமயில் நூறிருக்கு
ஆடிடலாம் பாடிடலாம் ஆறுமுகா கண்ணுறங்கு(ஆராரோ)

*கவிஞர் குறள் இலக்குவன்*

# பழனிமலை காவடி

## வேல் முருகா வேல் முருகா வேல் வேல்
## வேல் முருகா வேல் முருகா வேல் வேல்

குன்றக்குடியினிலே காவடி அந்தக்
கூர்வேலான் குமரனுக்குக் காவடி
கோடிக்கரை காவடி கூர்வேலான் காவடி
குன்றிலாடும் குமரனுக்குக் குறைவில்லாத காவடி

ஆடிக்கிருத்திகையில் காவடி எங்கள்
அய்யனுக்குத் தைப்பூசக் காவடி
ஆடிவரும் காவடி அழகு மயில் காவடி
அரோகரா பாட்டுக்கென்றும் ஆடிவரும் காவடி

பழனிமலை மேலே காவடி அந்தப்
பஞ்சாமிர்தப் பிரியனுக்குக் காவடி
பாட்டுக்கு ஆடிவரும் காவடி பன்னீரில் குளித்துவரும் காவடி
பஞ்சத்தைத் தீர்க்குமிந்த சண்முகனின் காவடி

நீண்ட மலையோரம் காவடி அந்த
நீலமயில் சாமிக்குக் காவடி
சந்தனத்தில் காவடி சர்க்கரையில் காவடி
சங்கடங்கள் தீர்க்குமிந்தச் சண்முகனின் காவடி

எட்டுக்குடி முருகனுக்குக் காவடி தினம்
எங்கும் நிறை அழகனுக்குக் காவடி
ஏறிவரும் காவடி ஏற்றம் தரும் காவடி
எங்கள் குல முருகனுக்கு என்றென்றும் காவடி

ஓங்கார ரூபனுக்குக் காவடி அந்த
ஓம் உரைத்த அய்யனுக்குக் காவடி
ஒய்யாரக் காவடி ஒயிலான காவடி
அண்டிவந்த அனைவரையும் ஆளவைக்கும் காவடி

*சித. சம்பந்தம்*

# மயிலே மயிலே நீ ஆடு

மயிலே மயிலே நீ ஆடு
மயிலே மயிலே நீ ஆடு-எங்கள்
மன்னவன் புகழை நீ பாடு

மயிலே மயிலே நின்றாடு
மன்னவன் முருகனை மன்றாடு

தென்னவன் மகிழ்ந்திட நீ பாடு
சேவற்கொடியுடன் சேர்ந்தாடு!

செந்தமிழ் கீதம் நான் பாட
சந்தனக் காவடி தானாட
இந்திரன் கொலுவில் மீனாட
தந்தன தாளங்கள் சேர்ந்தாட

கல்லும் மரமும் கனிந்தாட
காவிரி வெள்ளம் புரண்டோட
உள்ளும் புரமும் ஒன்றாகப்
புள்ளி மயிலே நின்றாடு!

துன்புரு நாரதர் வந்தாட
துவாரகை கண்ணன் குழலூத
பண்பாய் வேலவன் கலந்தாட
படை வீடாறிலும் நின்றாடு

தங்கச் சரப்பளி பூண்டவனை
தணிகை மாமலை ஆண்டவனை
திங்களை அணிந்தோன் திருமகனை
தினமும் போற்றி நின்றாடு!

கலைமகள் நாவில் கனிந்தாட
நிலமகள் தரையில் புரண்டாட
அலைமகள் அச்சுத னுடனாட
மலைமகள் சரவணன் விளையாட

சரவணப் பொய்கையில் நானாட
சண்முக நதியினில் அவனாட
வையாபுரியில் நீயாட
வருவான் சரவணன் விளையாட

வேலும் மயிலும் துணை

குயில்கள் பாடும் குரலோசை
கோகுல கிருஷ்ணன் குழலோசை
பஜனை பாடும் பண் ஓசை
பழநிக் கோயில் மணியோசை

பாடலைப் படித்தால் பலனுண்டு
படிப்பதைக் கேட்டால் நலமுண்டு
தினமும் படித்தால் செல்வமுண்டு
பழநி முருகனின் அருளுண்டு

*-எஸ். இராஜலெக்ஷ்மி, காரைக்குடி.*

# லண்டன் வடிவேலன்

**சரணம் சரணம் முருகையா - சாமி**
**சரணம் சரணம் முருகையா**
**சரணம் சரணம் முருகையா - சாமி**
**சரணம் சரணம் முருகையா**

மலைக்குடி வேலன் இன்று கடல்தாண்டினான்-லண்டன்
மாநகரில் வந்து குடியேறினான்
சிலைவடிவாக வந்து வரம் நல்கினான்-தமிழர்
திருவருள் கொள்வதற்குத் துணையாகினான்

எங்கிருந்தும் அவனை மறப்பதில்லை-தமிழர்
ஏற்றும் திருவிளக்கு அணைவதில்லை-பொங்கும்
தரும வெள்ளம் குறைவதில்லை-தமிழர்
புகழும் பொருளும் என்றும் அழிவதில்லை

நாகரிகம் வளர்ந்த மேற்கினிலே-குமர
நாயகன் கோவில் கண்டார் ஆசையிலே
தேக உழைப்பைச் சிலர் உவந்து தந்தார்-சிலர்
திரவியம் தந்ததுடன் தமையும் தந்தார்

ஆறுபடை வீடு என்று அழைத்து வந்தோம்-ஒரு
அற்புத வீட்டை இங்கே படைத்துவிட்டோம்
ஏழுபடை வீடு என்று தொடர்ந்து செல்வோம்-லண்டன்
எழும்பிய கோவிலையும் சேர்த்துக்கொள்வோம்

இலங்கை முருகனுக்கோர் கதிர்காமம்-பொருள்
இலங்கும் மலேசியாவில் பலகிராமம்
துலங்கிடும் லண்டனுக்குத் தொடர்ந்து வந்தான்-எங்கள்
சுவாமிநாதன் அருளைச் சுரக்க வந்தான்

அருணகிரி ஒருநாள் வரைந்து வைத்தார்-அவர்
அடிச்சுவட்டில் பலபேர் எழுதிவைத்தார்-கருணை
முருகன் தன்னை ஏற்றி வைத்தார்-கவிஞர்
கண்ணதாசன் இதனைப் பாடி வைத்தார்

*கவிஞர் கண்ணதாசன்*

# நலம் தரும் நாயகன்

## தென்பழனி ஆலயம் தேவதேவன் கோபுரம்
## அன்பழகன் சந்நிதியில் வைபோகம் - அவன்
## அடியார்கள் கொண்டாடும் தைப்பூசம்

தென்பழனி ஆலயம் தேவதேவன் கோபுரம்
அன்பழகன் சந்நிதியில் வைபோகம் - அவன்
அடியார்கள் கொண்டாடும் தைப்பூசம்

ஆறெழுத்து மந்திரம் அங்கமெல்லாம் சந்தனம்
நீறெடுத்துப் பூசிவரும் திருக்கூட்டம் - அதன்
நெஞ்சமதில் ஆடிவரும் சதிராட்டம்

ஆலவட்டம் தோரணம் அன்னதானம் பானகம்
காலெடுத்து வைக்க வைக்க உபசாரம் - இது
கந்தவேலன் தண்டபாணி தரும்யோகம்

வேல்முருகன் சேவடி வேண்டிவரும் காவடி
பால்குடங்கள் பன்னீரும் அபிஷேகம் வண்ணப்
பட்டாடை நவரத்ன அலங்காரம்

கற்பூர தீபமாம் கண்கவரும் ரூபமாம்
தற்பரனாய் நிற்பவனே நம்தெய்வமாம் - அந்தச்
சரவணனைப் பாடுவதே பேரின்பமாம்

பழனிமலை வாசனே பஞ்சாமிர்த நேசனே
அழகுமயில் வாகனத்தில் வருவாயப்பா எங்கள்
அல்லல்களைப் போக்கி நலம் தருவாயப்பா

ஆறுபடை வீடுகள் அழகுமலை நாடுகள்
ஏறுமயில் ஏறுபவன் அரசாங்கமாம் அவன்
இசைபாடி ஆடுபவர் புகழோங்குமாம்

தேவயானை திருமணம் தேவர்தரும் சீதனம்
பாவாணன் நக்கீரன் அருட்கவிமன்றம் முதல்
படைவீடு மதுரையிலே திருப்பரங்குன்றம்

வடிவேலை வீசுவான் வாகைமலர் சூடுவான்
அடியார்கள் புலவோர்கள் நெஞ்சில் வாழ்பவன் அவன்
அலையாடும் கடலோரம் செந்தில் ஆண்டவன்

தண்டாயுதம் ஏந்துவான் ஜபமாலை தாங்குவான்
கொண்டாடும் கவிமாலை அடிசூடுவான் எழில்
கூத்தாடும் பழநியிலே குடியேறுவான்

சிவஞான சுந்தரம் செவியோடு மந்திரம்
உபதேசக் குருநாதன் சாமிநாதன் அவன்
உலகாளும் சக்தி சிவ காமிபாலன்

அடிவாரம் மாமனாம் மலைமேலே மருகனாம்
இடையினிலே ரகுராமன் உறவினர்சேனை அது
எம்பெருமான் விளையாடும் பழமுதிர்ச்சோலை

வள்ளிமலை வடமலை மருதமலை சிவமலை
கொல்லிமலை பொதிகைமலை பற்பலமலைகள் ஐயா
குமரமலை தணிகை மலை கற்பகச்சுனைகள்

தண்ணீர்மலை முருகனே தைப்பிங்கில் குமரனே
கண்ணபிரான் மருமகனே கதிர்காமனே ஏழு
கடல்தாண்டி லண்டனிலே சிவபாலனே

போதுமய்யா சோதனை பொறுக்கவில்லை வேதனை
ஆதரித்துக் காப்பாற்றத் தாமதமேனோ என்
அல்லல்வினை நோய்உனக்குச் சம்மதம்தானோ

ஆறுமுக வேலனே அழகுமயில் வீரனே
ஏறுமுகம் நீதருவாய் பழநி மலையிலே இனி
எப்போதும் துணைவருவாய் எனது வழியிலே

வைத்தீசன் மைந்தனே வயலூரில் கந்தனே
தைப்பூசம் காணவந்தோம் தண்டபானிநீ
தங்கரதம் ஏறவேண்டும் எங்கள்சாமி

அருணகிரி தோழனே அடியவர்சகாயனே
சரணம் உன்னை அன்றி இல்லை சண்முகநாதா துணை
தந்துமனை மக்கள்சுற்றம் எம்குலம் நீகா

*அருட்கவி கு. செ. இராமசாமி*

வேலும் மயிலும் துணை

## ஆறுபடை வீடழகா

ஆறுபடை வீடழகா முருகா
ஆனந்தனே மால்முருகா –
அழகுமயில் ஆடிவரச் சேவல்கொடி முன்னே வர
இன்னும் வரத் தாமதமேன் - முருகா
இன்னும் வரத் தாமதம் ஏன்?

ஏறுமயில் ஏறிவந்தே - முருகா
எங்கள் குறை தீர்ப்பவனே (வேல் வேல்)
கூறுவினை தீர்த்து வைக்கக் கோலமயில் ஏறி நீயும்
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)

குன்றக்குடி வேலவனே - முருகா
குறைகளெல்லாம் தீர்ப்பவனே (வேல் வேல்)
குன்றம் விட்டு நீ இறங்கித் தஞ்சமென்றோர் தாழ்வகற்ற
இன்னும்வரத் தாமதமேன் (முருகா)

எட்டுக்குடி வேலவனே - முருகா
எங்கள் குலம் காப்பவனே (வேல் வேல்)
செட்டி மகன் ஆனவனே செங்கதிர் வேல் நீ எடுத்து
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)

செந்தூரில் வாழ்பவனே - முருகா
செல்வ நலம் தருபவனே (வேல் வேல்)
எங்கள் குறை தீர்த்திடவே தங்கரத மீதமர்ந்து
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)

பழனிமலைப் பேரரசே - முருகா
பாரெல்லாம் ஆள்பவனே (வேல் வேல்)
பக்தர் குறை தீர்த்திடவே பச்சைமயில் மீதமர்ந்து
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)

சிங்கார வேலவனே - முருகா
சிக்கலெல்லாம் தீர்ப்பவனே (வேல் வேல்)
தங்கமனம் கொண்டவனே தாழ்வகற்றி வாழ்வுதர
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)

பன்னிருகை நாயகனே - முருகா
பக்கத்துணை வருபவனே (வேல் வேல்)
பக்கமிரு மாதிருக்கச் சொக்கத் தங்கவேலெடுத்து
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)

காவடிகள் ஆட்டத்திலே - முருகா
கவலையெல்லாம் தீர்ப்பவனே (வேல் வேல்)
சேவடிகள் சரணமென ஆவலுடன் காத்திருக்கோம்
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)

சொந்தமுடன் நானழைக்க - முருகா
கந்தவடி வேலவனே (வேல் வேல்)
தங்கரதம் கொண்டவனே எங்கள் குலம் காப்பவனே
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)

கொஞ்சு தமிழ் பாடல் கேட்கும் - முருகா
குழந்தை வடிவேலவனே (வேல் வேல்)

தஞ்சமென்றே தாள் பணிந்தோம் பஞ்சம் பிணி போக்கிடவே
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)

சொன்ன தமிழ்க் குறையுளதோ - முருகா
சொன்னதெல்லாம் கேட்கலையோ (வேல் வேல்)
அன்னை தந்த வேல் எடுத்து அழகு மயில் மீதமர்ந்து
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)

அலையாடும் செந்தூரிலே முருகா நின்று
விளையாடும் செல்வ மகனே (வேல் வேல்)
நிலையான செல்வந் தந்து வளமான வாழ்வுதர
வரவேணும் எந்தனருகே (முருகா வரவேணும் எந்தனருகே)

## ஸ்ரீ பழநியாண்டவர் திருப்பதிகம்

**வேல் முருகா, வேல் முருகா, வேல்முருகா, வேல் வேல்**
**வேல் முருகா, வேல் முருகா, வேல்முருகா, வேல் வேல்**

மோதகம் நிவேதனம்: முஷிகம் உன் வாகனம்:
முரங்கள் போல் செவித்தலம்: வரம் கொடுக்கும் ஐங்கரம்:
போதகம்: கஜானனம்: புராணஞான வாரணம்:
போற்றி போற்றி உன்பதம் காக்கவேண்டும் என்குலம்!

வேல்பிடித்த கையிலே, செங்கோல்பிடித்து நின்றவா!
வேண்டிவந்த யாவையும் விரைந்தளிக்கும் மன்னவா!
கால்பிடித்தேன்: என்மனக் கலக்கம் நான் உரைக்கவா?
கண்திறக்க வேண்டும் வேண்டும் தென்பழநி ஆண்டவா!

எனது பக்கம் நீயிருக்க எங்கிருந்து பகைவரும்!
நானிருந்த மனைநடுங்க எவ்விதம் துயர்வரும்?
மனது நொந்து நொந்து வந்த மைந்தனை நீ தாங்கவா
வாழிவாழி தென்பழநிக் கோவில் கொண்ட ஆண்டவா!

ஆதிநாளில் சூரனை அழித்ததெய்வம் நீயெனில்
அடுத்துவரும் பகையெலாம் முடித்ததுண்மை தான் எனில்
மோதி நிற்கும் என்பகை முடிக்கவேல் எடுத்துவா
முருகனே தென் பழநிகொண்ட அழகனே என் ஆண்டவா!

பன்னிரண்டு கைத்தலத்தில் பளபளக்கும் ஆயுதம்
பாய்ந்து செல்லத் துடிதுடிக்கும் பச்சைமயில் வாகனம்!
இன்னல் செய்யும் பகைமுடிக்க இன்னும் என்ன தாமதம்?
என்னையாளும் மன்னனான தென்பழநி ஆண்டவா!

ஈசனே உன் மனைவிபேரும் தேவசேனை என்கிறார்!
இன்னொருத்தி விழியிரண்டும் ஈட்டியென்று சொல்கிறார்!

வாசம் செய்யும் இடமெலாமுன் பாசறைகள் அல்லவா?
மைந்தனே என் பகைமுடிப்பாய் தென்பழநி ஆண்டவா!

எம்பிரானே ஒன்பதுபேர் தம்பிமாரை நம்பினேன்!
எனது காவல் இவர்கள் என்று கவிதை பாடிச் சொல்கிறேன்!
நம்பினாரைக் காக்கவேறு நாதன் ஏது சண்முகா?
நவிலொணாப் பகைமுடிப்பாய் தென்பழநி ஆண்டவா!

ஆறுபடை வீடிருக்க வேறுபடை ஏனடா?
அழிக்கொணாத கோட்டைநின் சடக்கரங்கள் தாமடா!
மாறிலாத கவசமாய் வரும் சுழன்று வேலடா!
வல்வினை பகைமுடிப்பாய் தென்பழநி ஆண்டவா!

ஆரவாரமாய் எழும் அகப்பகை புறப்பகை
அறியொணாத மந்த்ர யந்த்ர தந்த்ரமாய் வரும் பகை
வேர்விடும் குலப்பகை வினைப்பகை கிரகப்பகை
வேறுபல் பகை முடிப்பாய் வேள் பழநி ஆண்டவா!

எந்த வேளை யானபோதும் கந்தவேளைப் பாடுவேன்!
இந்த வேளை உன்னையன்றி எந்த ஆளைநாடுவேன்!
வந்தவேளை நல்ல வேளை வாகை கொண்ட வேலவா
வன்பகை ஒழித்தருள்வாய் தென்பழநி ஆண்டவா

*அருட்கவி கு.செ.இராமசாமி*

## ஶ்ரீ செந்திலாண்டவர் பதிகம்

பேர்படைத்த கந்தனே! பிரான்படைத்த செல்வனே
சூர்படைத்த ஆணவத்தைத் தூள்படைத்த வீரனே!
சீர்படைத்த செந்தமிழ் தினம்படைக்க அருளுவாய்
கூர்படைத்த வேலவனே! குலாவு செந்தில்நாதனே! 1

ஆறுகோணச் சக்கரம்; அமைந்த ஆறும் அட்சரம்;
ஆறுவாசல் தத்துவம்; அவைகடந்த அற்புதம்
ஆறும், ஆறும், ஆறும், ஆறும், ஆறும், ஆறும் ரூபனே
ஆறுதாயார் பாலனே! கண் பாரும் செந்தில் நாதனே! 2

அகம்குழைந்த சங்கரன் புயங்கமாலை பாடினான்
புகுந்த ஏவள் காசநோய் அகன்றுநன்மை எய்தினான்
இகம்பரம் இரண்டிலும் நலம்தரும் மகேசனே!
சுகந்த கந்த புஷ்பமே உவந்த செல்தில் நாதனே! 3

ஆதிநாதன் மறைத்திறம் அறிந்திலேன் அறிந்திலேன்;
காதலான செந்தமிழ்க் கருத்தையும் உணர்ந்திலேன்;

பேதைநான் தினம்தினம் பிதற்றலும் தணிந்திலேன்;
ஈதுநீ பொறுத்தருள் இசைந்த செந்தில் நாதனே! 4

மூங்கைபால் இரங்கியே முழங்கவைத்த தேவனே!
தாங்கொணா வயிற்று நோய் தனித்தசக்தி பாலனே!
ஏங்கி, ஏங்கி, ஏங்கி, ஏங்கி எய்தினேன் என் ஈசனே!
தீங்கெலாம் விலக்குவாய் சிறந்தசெந்தில் நாதனே! 5

தொல்லைசெய்யும் நோய் இல்லை;
துயர்பகை வினை இல்லை;
அல்லல் செய்யும் தீயசக்தி அட்டமத்துச் சனி இல்லை;
இல்லைஇல்லை என்றுபூசும் இலையில்நீ றிலாமலே
செல்வமேதும் இல்லையே திகழ்ந்தசெந்தில் நாதனே! 6

வேறுவேறு மந்திரங்கள் ஆறெழுத் தடக்கமாம்;
மாறுதேவ தேவியர்நின் வடிவிலே அடக்கமாம்;
கூறுபத்தும் ஆறுமான பேறுநல்கும் ஈசனே!
தேறும் என்னை ஆதரிக்க வாரும்செந்தில் நாதனே! 7

தொட்ட தொட்ட இடமெலாம் துலங்கு கின்ற ஜோதியே!
முட்டமுட்ட மடியிலே முகந்தளிக்கும் தேனுவே!
எட்டஎட்ட நிற்பதென்ன ஏழைகள்பங் காளனே!
கிட்ட கிட்ட வாரும் என்னை ஆளும் செந்தில் நாதனே! 8

மாரனைத் தகித்த எந்தை மைந்தனான கந்தனே!
சூரனைக் கிழித்துவாகை சூடும்வெற்றி வேலனே!
சோரணை, எனைவருத்தும் துட்டனைத் தொலைக்க நீ
வீரவேல் எடுத்தல்வேண்டும் வேண்டும் செந்தில்நாதனே!9

அஞ்சிநான் நடுங்கும் போதில் அழகுவேல் எடுத்துவா
வஞ்சமாம் அகப்பகை புறப்பகை மடித்துவா!
சஞ்சலங்கள் போக்கிவா! என் நெஞ்சில் இன்பம் தேக்கிவா!
தஞ்சமென்று சேடன்வந்(து) இறைஞ்சும் செந்தில்நாதனே!10

ஆழிவாய் இருந்தவா! அருந்தவா ஆண்டவா!
காழிவாய்ப் பிறந்து ஞான காணமே பொழிந்தவா!
வாழி! தாயார் சூழவேண்டும் வரமெலாம் வழங்கவா!
ஊழிநாதன் பூசனை உவந்த செந்தில் நாதனே! 11

*-அருட்கவி கு.செ. இராமசாமி*

# ஆறுபடை வீடு

**திருத்தணி முருகன் நமக்கு வழித்துணை வருவான்**
**வருத்தத்தைப் போக்க நல்ல வழிகளைத் தருவான்**

திருத்தணி முருகன் நமக்கு வழித்துணை வருவான்
வருத்தத்தைப் போக்க நல்ல வழிகளைத் தருவான்
புள்ளி மயிலேறிக் குறவள்ளி மயிலோடு
துள்ளித் துள்ளி குதிப்பான் நம் தொல்லைகளை அழிப்பான்

பூமிமலைகளிலே சிறந்தது சாமி மலை அய்யா
சாமி மலை மேலே குரு சாமி இருக்காராம்
காட்டும் அன்பாலே நாம் கேட்கும் வரம் தருவான்
கேட்டபடி தருவான் நாம் நினைத்தபடி வருவான்

என்று வருவானோ பரங் குன்றின் வடிவேலன்
அன்னை வயிற்றினிலே நானும் சின்ன உருவெடுத்து
உன்னை நினைத்தேனே நீயும் என்னை நினைப்பாயோ
என்று வருவாயோ என்றன் துன்பம் தவிர்ப்பாயோ

அஞ்சு வயதினிலே என்றன் பிஞ்சுக் கரத்தினிலே
செந்தூர் கடலோராம் வந்து சீரலை தொட்டேனேன்
அந்த முகம் பாரும் செந்தூர் ஆறுமுகசாமி
என்றன் துயர்போக்க நீயும் வழிகொஞ்சம் காமி

பழமுதிர் சோலையிலே ஒருநாள் அந்தி மாலையிலே
கந்தப் பழம்பறிக்க நானும் முந்தி வழிநடந்தேன்
கந்தப் பழம்தந்து எந்தன் அன்புப்பழம் கேட்டான்
சிந்தைப் பழம்எடுத்து நானும் செலுத்தி வீடடைந்தேன்

இரவு நேரத்திலே பழநி மலையின் மீதினிலே
எத்தனை எத்தனை வண்ண விளக்குகள்
கண்ணைப்பறிக்குதடி
எண்ணம் நிறையுதடி முருகன் ஏற்றம் புரியதடி
அன்றும் இன்றும் என்றும் பழநி ஆண்டி முகம் தெரியும்

*கவிஞர் மா. கண்ணப்பன்*

# வினை தீர்க்கும் கந்தன்

**திருத்தணி மலைமேல் இருப்பவனே-எங்கள்**
**தீராத வினைகளைத் தீர்ப்பவனே**
**கந்தா கடம்பா வேல்முருகா கார்த்தி கேயா வேல்முருகா**

திருத்தணி நோக்கி வருகின்றோம்-உந்தன்
திருவடி காண வருகின்றோம்

கந்தா கடம்பா வேல்முருகா
கார்த்தி கேயா வேல்முருகா

பழநியை நோக்கியும் செல்கின்றோம்-அவன்
பாதத்தைக் காணவும் செல்கின்றோம்
கந்தா கடம்பா வேல்முருகா
கார்த்தி கேயா வேல்முருகா

பங்குனி உத்திரத் திருநாளில்-உனக்குப்
பாலா பிஷேகம் செய்யவாரோம்
கந்தா கடம்பா வேல்முருகா
கார்த்தி கேயா வேல்முருகா

பாதங்கள் தேய நடந்துவாரோம்-உந்தன்
பாதத்தைக் காண ஓடிவாரோம்
கந்தா கடம்பா வேல்முருகா
கார்த்தி கேயா வேல்முருகா

காவடி தாங்கிக் கால்கடுக்க-உந்தன்
காலடி நோக்கி நடந்துவாரோம்
கந்தா கடம்பா வேல்முருகா
கார்த்தி கேயா வேல்முருகா

குன்றுகள் தோறும் குடியிருப்பான்-அவனைக்
கும்பிடக் கும்பிட அருள்புரிவான்
கந்தா கடம்பா வேல்முருகா
கார்த்தி கேயா வேல்முருகா

ஆவினன் குடிவாழ் அழகனவன்-இந்தப்
பாவியைக் காத்து அருள்புரிவான்
கந்தா கடம்பா வேல்முருகா
கார்த்தி கேயா வேல்முருகா

வருடத்துக் கொருமுறை உனைத்தேடி-எங்கள்
வறுமையைத் தீர்க்க நடந்துவாரோம்
கந்தா கடம்பா வேல்முருகா
கார்த்தி கேயா வேல்முருகா

காணும் பக்தர் அனைவரையும்-அவன்
பேணிக் காத்து அருள்புரிவான்
கந்தா கடம்பா வேல்முருகா
கார்த்தி கேயா வேல்முருகா

**வீரவேல் வெற்றிவேல்**

சுட்டதிரு நீறெடுத்துத் தொட்டகையில் வேலேடுத்துத்
தோகைமயில் மீதமர்ந்த சுந்தரம்-அந்தக்
கட்டழகு கொண்டதொரு கந்தவடி வேலவனைச்
சாற்றுவது ஆறெழுத்து மந்திரம்

ஆறெழுத்து மந்திரத்தைத் தந்ததொரு சுந்தரத்தை
அந்திபகல் சிந்தனைசெய் நெஞ்சமே-அந்த
ஆறெழுந்து மந்திரத்தை யாரெடுத்து ஓதினாலும்
ஆறுமுகம் வந்துநிற்கும் முன்னமே

கந்தனடியே நினைந்து சங்கத்தமிழ் மாலைகொண்டு
வந்தனை செய்வோர்கள் மனம் ஆறுமே-பரங்
குன்றுவளர் குகனோடு தங்கிவரவே நமக்குள்
பொங்கிவரும் செல்வம் பதினாறுமே

## ஆண்டி உடையில் அரசன்

பக்கமிரு மாதிருக்கச் சொக்கவெள்ளி வேலெடுத்துப்
பச்சைமயில் உச்சிவரும் வேலனே!-உன்றன்
பஞ்சடியை நெஞ்சழுத்திப் பாற்குடத்தைத் தோளெடுத்தால்
அஞ்சிமிகக் கெஞ்சிடுவான் காலனே

பழநிமலை மீதமர்ந்து பாட்டமுதை வேட்டருந்திப்
பாருலகை காத்தருளும் கந்தனே!-உன்றன்
பால்வடியும் பூமுகத்தை நாள்முடியப் பார்த்திருந்தால்
வேல்முடித்து வைத்துவிடும் பந்தமே

ஆறுபடை வேலனும் ஏறுமயில் மீதெழுந்தால்
கூறுமடி யார்வினைகள் மாறுமே-அந்த
ஆறுமுக வேலவனை ஆண்டியுடை கொண்டவனைப்
பழநிமலை மீதுவந்து பாருமே

ஆண்டியுடை கொண்டிருந்தும் அரசமனம் கொண்டவனை
அண்டியதும் நொண்டிவிடும் துன்பமே-அவன்
ஆறெழுத்து மந்திரத்தின் ஓரெழுத்தை ஓதிடினும்
பாரனைத்தும் பெற்றுயரும் இன்பமே

*டாக்டர் அர. சிங்காரவடிவேலன்*

# கொஞ்சுதமிழ்ப் பாமலை

கொஞ்சுதமிழ்ப் பாமலைக்கும் நெஞ்சமெனும் பூமலைக்கும்
கோலமயில் ஏறிவரும் வேலவன்-அந்தப்
பிஞ்சுமன வேலவனைச் சஞ்சலம் தீர்மூலவனைப்
பேசுவது ஆறெழுத்து மந்திரம்

வெள்ளமெனப் பாடிவரும் வேலவனை நாடிவரும்
வெற்றிமிகு மாந்தரது கூட்டமே-தினம்
கள்ளமிலா உள்ளமெல்லாம் மெள்ள மெள்ள ஓடிவரக்
கால்நடையில் புள்ளிமயில் ஆட்டமே

சாலையிலே தூங்குவதும் காலையிலே தாங்குவதும்
சண்முகனுக் கேற்றதொரு காவடி-நம்
வேலையெல்லாம் விட்டுவிட்டுக்
காலைபகல்மாலை யெல்லாம்
வீரநடை போடுவதும் சேவடி

பள்ளயங்கள் போடுவதும் பந்தயமாய் ஓடுவதும்
பாலனுக்குப் போட்டதொரு பாலமே-தினம்
துள்ளிவரும் வேலெடுத்துப் புள்ளிமயில் வாகனுக்குத்
தோலுரியக் கால் நடக்கும் சீலமே

தாங்குவதும் தூங்குவதும் தாளெடுத்துப் போடுவதும்
தந்தினத்தோம் போடுகின்ற தாளமே-தினம்
சங்குமுகம் பாடுவதும் சிங்கமுகன் ஓடுவதும்
சண்முகனுக் கேற்ற தொரு மேளமே

ஆண்டியென உள்ளவனும் தூண்டிலிலே வந்திடுவான்
ஆறுமுக சாமியினைப்பாடு-அவன்
கண்டிக்கதிர்காமமுடன் அண்டியவர் உள்ளமெல்லாம்
காத்திருப்பான் ஆறுபடை வீடு

சாமிமலை பழனிமலை சார்ந்ததொரு தணிகைமலை
சண்முகவி லாசமெனக் கூறு-இந்தப்
பூமியிலே உள்ளவர்கள் சாமியெனப் போற்றிநிதம்
பூசுவதும் ஆறுமுகன் நீறு

பாரி வளம் மீறிவரப் பக்தரெல்லாம் கூடி வர
பழமுதிரும் சோலையை நீ பாடு-தினம்
ஊறிவரும் பக்தியிலே ஏறிவரும் சக்தியினால்
உயர் அழகர்மலையினையே நாடு

*பொற்கிழிக் கவிஞர் காசி ஸ்ரீ அரு. சோ*

# ஆறெழுத்து மந்திரமாய் ஆனவன்

முத்துமணி மண்டபத்து மெத்தனவே பூவிரித்து
மத்தியிலே வீற்றிருக்கும் மன்னவன்-அவன்
சித்துவிளை யாட்டினிலே சேர்ந்தவர்கள் வெற்றிபெற
சத்தியமாய்க் கைகொடுக்கும் மன்னவன்

மன்னவனின் மாமலையில் மாமுனிவர் சூழவர
மந்திரங்கள் போற்றுகிற மூலவன்-அந்த
மந்திரத்து மூலமதைத் தந்திரமாய் தந்தையர்க்கு
மந்திரித்துச் சொல்லிவைத்த வேலவன்

வேலெடுத்து வீறுகொண்டு வீணர்களும் ஓடவென்று
வெற்றிகண்டு விம்முகின்ற தோள்களே-அந்த
வேலவனை வேண்டிநிதம் வெற்றிகண்டு வாழவென்று
வேகமாகப் போகுதய்யா கால்களே

கால்கடுக்க நீநடந்த காரணத்தைக் கண்டுமிக
காரியமாய்க் கையினையே காட்டுவான்-அந்தப்
பால்கொடுக்கப் பாய்ந்துவரும் பாசமிகு தாயினைப்போல்
பார்வையினால் பாவங்களை ஓட்டுவான்

ஓட்டுகின்ற ஓசையிலே ஓமென்ற பாஷையிலே
ஓட்டுமொத்த மாயடங்கிப் போச்சுது-அதைக்
காட்டுகின்ற பாவனையில் காட்சிதரும் கந்தனையே
கால்கடுக்கக் கண்டுவர லாச்சுது

கண்டுவந்த காட்சியினைக் கந்தனவன் மாட்சிதனைக்
காணவந்த கண்களிங்கு கோடியே-நாம்
கொண்டுவந்த கோட்டையெல்லாம் கோலமயில் வாகனிடம்
கொட்டிவைத்துக் கும்பிடுவோம் நாடியே

நாடிவரும் நம்மளுக்கு நல்லகதிதான் கொடுக்க
நின்றபடி தண்டபாணி நிற்கவே-நிதம்
பாடிவரும் பக்தர்களும் பாவிசைக்க நாவசைக்க
பாலரிடம் பைந்தமிழைக் கற்கவே

கற்றவரும் மற்றவரும் உற்றவரும் ஓதுவது
கந்தனவன் ஆறெழுத்து மந்திரம்-கதி
அற்றவரும் அன்பொழுக ஆறுமுகம் பேருசொல்ல
அத்தனையும் அள்ளித்தரும் சுந்தரம்

சுந்தரத்து நாயகனை மந்திரத்து மாமணியைச்
சொல்லயினி வார்த்தைகளுமில்லையே-திரு
மந்திரத்து மாமணியை மால்முருகன் நல்மணியை
மண்டியிடச் சங்கடமும் இல்லையே

ஆறெழுத்து மந்திரத்தை நூறுதரம் சொன்னவர்க்கு
ஆறுமுகம் நேரில்வந்து தோன்றுமே-அவன்
ஈரெழுத்துப் பேருரைக்க ஈண்டுவரும் தொல்லைகளும்
இல்லையென்று இன்முகமும் தோன்றுமே

மூன்றெழுத்து மூலமதை முத்தமிழின் கோலமதை
முப்பொழுதும் கூறிவர வெற்றியே-தலை
தோன்றெழுத்து நேசமதும் தாண்டிவிடும் வேண்டியவை
தேடிவந்து சேரும் நம்மைச் சுற்றியே

வீறுபடை கொண்டுஅவன் வீணர்களை வீழ்த்திவிட்டு
வெற்றியொடு வந்தமர்ந்த வேலனே-அவன்
ஆறுபடை வீடுகளை நாடிவர நன்மைதரும்
ஆதிசக்தி பெற்றெடுத்த பாலனே
பாலகரும் பாவையரும் பால்முகத்துப் பேதையரும்
பாடிவந்து போற்றுவதும் உன்முகம் நாங்கள்
ஆலவட்டம் ஆடுவதும் அந்திசந்தி வாடுவதும்
ஆகாதென வேண்டுகிறோம் சண்முகம்

முத்துமணி ரத்தினங்கள் முன்முகப்புச் செம்பவள
மண்டபத்துக் கண்டயிரு தேவியே-உடன்
கொத்துமணி நாமமொடு கோலமயில் வேலுமோடு
கண்டவனை நாடிடுவோம் மேவியே.

*சோலை இராமச்சந்திரன், பள்ளத்தூர்*

வேலும் மயிலும் துணை

## காண்போம் அவன் சேவடி – (சுட்டதிரு மெட்டு)

எங்கள் குறை தீர்த்திடவே எந்நாளும் காட்சிதரும்
சிங்கைநகர் தண்டபாணி தெய்வமே - என்றும்
மங்காத புகழுடனே மாறாத செல்வம் வந்து
சங்கமிக்க உந்தன் அருள் வேண்டுமே.

வேண்டுமென கேட்டவுடன் கேட்டவரம் அத்தனையும்
தந்துவிடும் உனை நிதம் போற்றுவோம் - தினம்
சந்தமிகு செந்தமிழில் சர்க்கரை தேன் கலந்து
உந்தன் புகழ் என்றுமே போற்றுவோம்.

போற்றுகின்ற எங்கள் துயர் வேரோடு அறுத்துவிட்டு
வெற்றிகளை அள்ளித்தரும் வள்ளலே - உனைப்
பற்றவரும் பக்தர் கூட்டம் பாடிவரும் பாட்டினிலே
ஏற்படும் நெஞ்சினிலே துள்ளலே.

துள்ளி வரும் மக்கள் நெஞ்சில் ஆனந்தத்தை
அள்ளி தினம் தந்துவிடும் உந்தனது அற்புதம் - நிதம்
வேலுடனே நின்று எமைக்காத்து விடும் உந்தனையே
உள்ளுருகி வேண்டுவோம் உன் பொற்பதம்.

பொற்பதத்தின் அற்புதத்தை போற்றி உனைப்பாடிச்
சுற்றிவரும் எங்களது பால்குடம் - எம்மை
ஏற்றிவரும் உந்தனது ஆலயத்தின் வாசலிலே
முற்றிலுமே அன்பரது கால்தடம்

கால்தடத்தைப் பாதையிலே வேகமாக விட்டு விட்டு
வேலனுக்குத் தந்திடுவோம் காவடி - அந்தப்
பாலகனை பார்க்க வேண்டி கால் கடுக்க ஓடிவந்து
ஆலயத்தில் காண்போம் அவன் சேவடி.

சேவடியைக் காணவந்த எங்களது சந்ததியை வாழவைக்கும்
சிங்கைநகர் தண்டபாணி தெய்வமே - எங்கள்
கவலைகளைப் போக்கி நிதம் ஆறுதலைத் தந்துவிட
உந்தனது பார்வை மட்டும் வேண்டுமே.

*அழகு சுந்தரம், நாச்சியாபுரம்.*

## ஒயிலாட்டம்

**கந்தனுக்கும் வேல் வேல்**
**முருகனுக்கும் வேல் வேல்**
**கந்தனுக்கும் வேல் வேல்**
**முருகனுக்கும் வேல் வேல்**

பச்சை மயில் வாகனம்
பச்சை வள்ளி மோகனம்
கச்சை கட்டி ஆடுங்கடி ஒயிலாட்டம்
கால்மாறி ஆடுங்கடி மயிலாட்டம் (கந்தனுக்கும்)

தேவயானை கண்ணரசி
தேவேந்திரன் பெண்ணரசி
பூ மகளின் மருமகளே ஒயிலாட்டம்
புண்ணியத் தவசீலன் மயிலாட்டம் (கந்தனுக்கும்)

பச்சமலை பவளமலை

இச்சை மலை பழநிமலை
இன்பமலை எமது நிலை ஒயிலாட்டம்
ஏகபோக தரிசனமாம் மயிலாட்டம் (கந்தனுக்கும்)

தங்கப்புள்ளி அங்கமது
தாவித் தாவி ஆடுமது
எங்களது முருகனுக்கு ஒயிலாட்டம்
எல்லையற்ற பேரழகே மயிலாட்டம் (கந்தனுக்கும்)

கொண்டை குலுங்குதடி
கூவியே ஆடுதடி
மண்டலமே மயங்குதடி ஒயிலாட்டம்
மாலவனும் மயங்குகிற மயிலாட்டம் (கந்தனுக்கும்)

முத்து நகை மோக நகை
பித்துநகை பெரியநகை
சித்துகளாம் செந்திலவன் ஒயிலாட்டம்
சிங்கார வேலனுக்கு மயிலாட்டம் (கந்தனுக்கும்)

குலுங்கிச் சிரிக்குமிந்தக்
குழந்தை ஏறி நின்று
அலுங்காமல் ஆடுதய்யா ஒயிலாட்டம்
ஆனந்த காட்சியம்மா மயிலாட்டம் (கந்தனுக்கும்)

சலங்கை குலுங்குதம்மா
சங்கீதம் பாடுதம்மா
நலுங்காய் ஒலிக்குதம்மா ஒயிலாட்டம்
நாயகனின் பேரருளே மயிலாட்டம் (கந்தனுக்கும்)

உடம்புக்குள் ஆடுவதும்
உயிராகக் கூடுவதும்
கடம்பனின் பேரருளே ஒயிலாட்டம்
கந்தனின் பேரழகே மயிலாட்டம் (கந்தனுக்கும்)

விராலிமலை பழநிமலை
விரும்புகின்ற ஆறுபடை
வெற்றியுடன் ஆடுகின்ற ஒயிலாட்டம்
வேண்டுவரம் தந்திடுமே மயிலாட்டம் (கந்தனுக்கும்)

பன்னீர் மணக்குதய்யா
கண்ணீர் பெருகுதய்யா
எந்நேரம் நீவருவாய் ஒயிலாட்டம்
எல்லையிலாப் பேரழகே மயிலாட்டம் (கந்தனுக்கும்)
சிந்துகளோ செந்தூரரோ

முந்துங்களே பக்தர்களே
வந்துவந்து ஆடுகின்றான் ஒயிலாட்டம்
வரம்தரவே கூடுகின்ற மயிலாட்டம் (கந்தனுக்கும்)

தந்தனத்தான் பாடுகின்றான்
தாளமிட்டுக் கூடுகிறான்
கந்தனவன் ஆடுகின்றான் ஒயிலாட்டம்
கற்பனையைப் பாடுங்களே மயிலாட்டம்(கந்தனுக்கும்)

*நாச்சியப்பன்*

## செந்திலாண்டவா

**செந்தி லாண்டவா! திருச்செந்தூர் ஆண்டவா!**
**உந்தன் பெயரில் சிந்தைவைத்துச் சந்தம் பாடவா?**
**ஐயா சந்தம் பாடவா?**

செந்தி லாண்டவா! திருச்செந்தூர் ஆண்டவா!
உந்தன் பெயரில் சிந்தைவைத்துச் சந்தம் பாடவா?
ஐயா சந்தம் பாடவா?

சின்னவயதில் அன்னை சொன்னாள்
உன்னைத் தெரிந்தேன் நான்
தந்தையோடு செந்தூர்வந்து உன்னைக்கண்டேன் நான்
அன்று தொட்டு இன்று வரையில் உன்னை மறந்தேனா?
கந்தா நீயும் என்றுவந்து கருணை காட்டுவாய்?
ஐயா கருணை காட்டுவாய்!

எண்ணும் எழுத்தும் கற்கும்முன்னால் உன்னைக்கற்றேனே
அன்னை பெயரை அறியுமுன்பே உன்னை அறிந்தேனே
இன்றும்கூட உன்றன் கருணை இல்லையே முருகா!
என்றுவந்து என்னைக் காப்பாய் செந்தூர்வாழ் முருகா!
ஐயா செந்தூர்வாழ் முருகா!

காலை கண்ணைத் திறந்த உடனே கந்தா என்பேனே!
வேலை முடித்துத் துயிலும்போதும் வேலா என்பேனே
ஏழை என்னைக் காக்கநீயும் என்று வருவாயோ?
அந்த நாளை இன்றே தருவாய் செந்தூர் வாழ்முருகா!
ஐயா செந்தூர் வாழ் முருகா!

*-மா. கண்ணப்பன்*

# முருகா உன்னை அழைக்கின்றேன்

**வேல்வேல் முருகா வேல்முருகா**
**வேல்வேல் முருகா வேல்முருகா**
**வேல்வேல் முருகா வேல்முருகா**
**வேல்வேல் முருகா வேல்முருகா**

முருகா உன்னை அழைக்கின்றேன்
முத்தமிழ் பாடித் துதிக்கின்றேன்
மருகா உன்னை அழைக்கின்றேன்
மறைகள் பாடித் துதிக்கின்றேன் (வேல் வேல்)

கந்தா உன்னை அழைக்கின்றேன்
கவசம் பாடித் துதிக்கின்றேன்
மன்னா உன்னை அழைக்கின்றேன்
மந்திரம் பாடித் துதிக்கின்றேன் (வேல் வேல்)

வேலா உன்னை அழைக்கின்றேன்
விருத்தம் பாடித் துதிக்கின்றேன்
மாலா உன்னை அழைக்கின்றேன்
மயிலைப் பாடித் துதிக்கின்றேன் (வேல் வேல்)

சண்முகா உன்னை அழைக்கின்றேன்
சரணம் பாடித் துதிக்கின்றேன்
கண்ணின் மணியை அழைக்கின்றேன்
காவியம் பாடித் துதிக்கின்றேன் (வேல் வேல்)

*குறள் இலக்குவன், காரைக்குடி.*

## வேல்வேல் முருகா

ஆடும் மயிலும் வாகனம் தான்
ஆறுமுகமும் மோகனம் தான்
பாட்டும் கூத்தும் அவன்வேதம்
பாடித் தொழுவோம் அவன்பாதம் (வேல் வேல்)

காலும் கையும் நடைபோடும்
கந்தன் முருகன் படைகூடும்
நாளும் பொழுதும் அவன் நாமம்
நாயகன் வீடே கதிர் காமம் (வேல் வேல்)

ஆணும் பெண்ணும் பெரும் கூட்டம்
அவனைக் காண வரும்கூட்டம்
ஊனும் உயிரும் ஓராறு
உண்மைப் பொருளே திருநீறு (வேல் வேல்)

வேலும் மயிலும் துணை

கல்லும் மலரும் ஒன்றாகும்
கந்தன் கோவில் ஒன்றாகும்
உள்ளும் புறமும் தவமயமே
உமையாள் செல்வன் சிவமயமே (வேல் வேல்)

அல்லும் பகலும் நெய்வாசம்
அடியார் போற்றும் தைப்பூசம்
சொல்லும் பொருளும் விளையாடும்
சொர்க்கம் பழநி மலையாகும் (வேல் வேல்)

வேலும் மயிலும் துணையாகும்
வினைகள் தீர்க்கும் மருந்தாகும்
பாலும் பழமும் உணவாகும்
பழநி மலையே உயிராகும். (வேல் வேல்)

## எழில் முருகன்

சிங்கை நகரில் வீற்றிருக்கும்
ஸ்ரீதண்ட பாணியின் திருநாமம்
சிந்தை மகிழப் போற்றிடுவார்
சிறப்புகள் யாவும் பெற்றிடுவார்! (வேல் வேல்)

தைப்பூச நாளாம் திருநாளில்
தலைவனின் கோவில் தேடிவரும்
தன்னிகரில்லா பெருங் கூட்டம்
தண்டனிட்டே தினம் வணங்கிடுமே! (வேல் வேல்)

சீனரும் காவடி தூக்கிடுவார்
சிங்காரன் திருப்புகழ் பாடிடுவார்
சேவற்கொடி யோன்பதம் பணிவார்
சேர்ந்தே நின்று வணங்கிடுவார்! (வேல் வேல்)

பாற்குடம் காவடி பலவாகும்
பார்ப்பவர் கண்ணிற்கு விருந்தாகும்!
பாலகன் பெயரைப் போற்றிதினம்
பாரினில் நலமுடன் வாழ்ந்திடுவார்! (வேல் வேல்)

தங்கரதத் தில்வலம் வருவான்
தங்கிடவளங் கள்தான் தருவான்
தரணியில் நன்மைகள் தான்நடக்க
தயங்காமல் அவன் வந்திடுவான்! (வேல் வேல்)

வேழமுகன் தம்பி வேலவனை
வேண்டும் வரம்தர பணிந்திடுவார்!
வேளை தவறாமல் வந்திடுவார்
வேலை வணங்கி வழிபடுவார்! (வேல் வேல்)

ஏழாம் படையாய் வீற்றிருக்கும்
எங்கள் எழிலே முருகேசா
எண்ணிய செயல்கள் கூடிடவே
எமக்கருள் புரிந்து காப்பாயே! (வேல் வேல்)

*தேவகோட்டை, மீ.மீனாட்சி சுந்தரம்*

## வா வா முருகா வடிவேலா

குன்றக்குடியில் அமர்ந்தவனே
குறைகளை எல்லாம் தீர்ப்பவனே
குன்றாக்குடியாய் எமை ஆக்கி
குமரா வந்தெமைக் காப்பாயே (வேல் வேல்)

வள்ளி தெய்வயானையுடன்
தணிகைமலையில் அமர்ந்தவனே
துள்ளிவந்திடும் எங்களுக்குத்
துணையாய் வந்து நீ இருப்பாயே (வேல் வேல்)

சூரனை அழித்துச் சினம் தணிந்து
செந்தூர்க் கடற்கரை அமர்ந்தவனே
ஷஷ்டி கவசம் படிப்பவர்க்குச்
சகல செள பாக்கியம் அருள்பவனே (வேல் வேல்)

பழத்திற்குப் பழனியில் அமர்ந்தவனே
பழமுதிர் சோலையை ஆள்பவனே
பாடி வந்திடும் எங்களுக்குப்
பக்கத் துணையாய் இருப்பவனே (வேல் வேல்)

தந்தைக்குப் பிரணவம் சொன்னவனே
தகப்பன் சாமி ஆனவனே
சுவாமி மலையில் வாழ்பவனே
சுவாமி நாதனே அருள்வாயே (வேல் வேல்)

திருமணக் கோலத்தில் இருப்பவனே
திருப்பரங்குன்றினில் வாழ்பவனே
திருமால வனின் மருகோனே
சீக்கிரம் வந்தெமைக் காப்பாயே (வேல் வேல்)

எட்டுக்குடியில் இருப்பவனே
எங்கள் குறைகளைத் தீர்ப்பவனே
பட்டி தொட்டியில் அமர்ந்தவர்க்குப்
பக்கத்தில் அமர்ந்து அருள்பவனே (வேல் வேல்)

சிக்கல் நகரில் வாழ்பவனே
சிங்காரமாக இருப்பவனே
சிக்கித் தவித்திடும் எங்களையே
சீக்கிரம் வந்தே காப்பாயே (வேல் வேல்)

தனித்துப் பழனியில் இருப்பவனே
பனித்த சடையனுக்கிளையவனே
(உனை) நினைத்து வந்திடும் எங்களுக்கு
அனைத்தும் தந்தே அருள்வாயே (வேல் வேல்)

*கோட்டையூர் சித. சம்பந்தம்*

## ஆறு படை முருகா

செந்தூர் கடலலை ஓரத்திலே
சிவனார் பாலன் நின்றிடவே!
கந்தா என்றே கவி பாட;
கவலையும் சற்றே தீருதைய்யா! (வேல் வேல்)

பாலால் தினமும் குளிக்கின்ற
பழமுதிர் சோலை முருகனையும்
நாளும் வணங்கி வழிபட்டால்
நாதன் தருவான் பணம் நமக்கே! (வேல் வேல்)

திருமணக் கோலத்தில் வீற்றிருக்கும்
திருப்பரங் குன்ற முருகனையும்
திருநீறிட்டு வணங்கி வந்தால்
தீரா வினையும் தீருமைய்யா! (வேல் வேல்)

தந்தைக்கு மந்திரம் சொன்னதனால்
தனக்கென ஓரிடம் பெற்றவனே
மந்திரம் சொல்லி உனைவணங்க
மனத்தில் வலிமையும் கூடுதைய்யா! (வேல் வேல்)

தங்க ரதத்தில் பவனி வரும்
தணிகை மலை முருகனையும்
சொந்தம் கூட்டி வழிபட்டால்
சொர்க்க வாழ்வும் கிடைக்குமைய்யா! (வேல் வேல்)

குழந்தை வடி வேலவனாய்
குன்றத்தூரில் கொலு விருக்கும்
பழனி மலை முருகனையும்
பாதம் போற்றி வணங்கிடுவோம்! (வேல் வேல்)

*வி.ஆர்.பழனியப்பன்*

## தண்ணீர் மலை ஆண்டவனே

தண்ணீர் மலை ஆண்டவனே
தர்மம் தழைக்கச் செய்பவனே.
நெஞ்சின் தாகம் தீர்ந்திடவே
உன்னைத் தேடி வருகின்றோம். (வேல் வேல்)

காவடி தாங்கி வருகின்றோம்
கால் நடையாக வருகின்றோம்.
தண்ணீர் மலையில் இருப்பவனே
உன் திருவருள் தந்துகாத்திடுக. (வேல் வேல்)

உலகம் முழுதும் உன்கோயில்
திருப்பணி செய்து வழிபட்டோம்.
உள்ளக்கோயில் உன் கோயில்
உன்னை நினத்தே வழிபட்டோம். (வேல் வேல்)

உள்ளம் தெளிவினை பெற்றிடவே
உள்ளளி பூக்கச் செய்திடுவாய்.
உலகம் காக்கும் பரம்பொருளே
தண்ணீர் மலை ஆண்டவனே. (வேல் வேல்)

உலகம் முழுதும் வாழுகின்ற
உன்னருள் பெற்ற பக்தர்களும்
உன்னை காண வருகின்றார்
உன்புகழ் பாடி பரவுகின்றார். (வேல் வேல்)

உள்ளம் உருகி வேண்டுகின்றார்
காவடிதாங்கி ஆடுகின்றார்.
உலகம் தழைத்து உயர்வுறவே
எழுவாய் தண்ணீர் மலையானே. (வேல் வேல்)

வாழ்வில் சோதனை எத்தனையோ
வறுத்தும்நோய்கள் எத்தனையோ.
வாட்டும் பயங்கள் எத்தனையோ
ஆசை பேய்கள் எத்தனையோ. (வேல் வேல்)

எத்தனை எத்தனை இன்னலப்பா
ஒரு எல்லைக்குட்பட்ட வாழ்க்கையினில்.
அத்தனை இன்னலும் அகன்றுவிட
உன் திருவருள் தந்துகாத்திடுக. (வேல் வேல்)

தண்ணீர் மலை ஆண்டவனே
திருவடி பணிந்து வணங்குகின்றோம்.
மனத்தின் மாசுகள் களைந்திடப்பா
மகிழ்ச்சிகள் பொங்க செய்திடப்பா (வேல் வேல்)

நானிலம் போற்றும் நல்லவராய்
திருப்பணிகள் செய்து வாழ்ந்திடவே
உன்னருள் ஈந்து காத்திடுக
தண்ணீர் மலை ஆண்டவனே. (வேல் வேல்)

*லெ.சக்திகுமார்.டிசம்பர் 2006.*

## திருத்தணிகை முருகன்

வருவாய் முருகா வந்திடுக
வள்ளி மணாளா வந்திடுக
உருவாய் அருவாய் தணிகையிலே
உயிராய் அமர்ந்தோய் வந்திடுக

வேலும் மயிலும் விளையாட
வெயிலும் மழையும் மலையாடப்
பாலும் தேனும் சிலையாடப்
பதமும் இதழும் கவிபாட (வருவாய்)

மாலை மார்பில் அசைந்தாட
மறையும் புகழும் இசைந்தாட
வாலைக்குமரி அருகாட
வளரும் களபம் மார்பாட (வருவாய்)

தண்டை செங்கழல் தவிலாகத்
தமிழும் மறையும் இசையாகக்
கெண்டை கருவிழி நடமாடக்
கேட்கும் பக்தர்கள் மனமாட (வருவாய்)

எங்கோ வாழும் பக்தரெலாம்
எடுத்தார் காவடி முத்திரைகள்
மங்காப் புகழின் திருத்தணிகை
மலைமேல் அமர்ந்தே அருள்புரிவாய்! (வருவாய்)

தொண்ணூற்றாறூர் கூடிவரத்
தொண்டர்கள் நாடி ஆடிவர
எண்ணூற் றோடிரு நூற்றெட்டு
இசைத்தமிழ் மாலை பாடிவர (வருவாய்)

பாலின் குடங்கள் பன்னீரு
பச்சைக்காவடி சந்தனங்கள்
வாழும் முருகா உன்னடியில்
வணங்கும் பங்குனி உத்திரத்தில் (வருவாய்)

*'காசி, ஸ்ரீ' அரு. சோமசுந்தரன்*

## வளரும் தமிழே சிவபாலா

வாவா முருகா வடிவேலா
வளரும் தமிழே சிவபாலா
கருணை பொழியும் கதிர்வேலா - எனைக்
காக்கும் துணையாய் வருவாயே (வேல் வேல்)

சக்திக் கனலாய் உருவாகி
சரவணப் பொய்கை மலராகிக்
கார்த்திகை பெண்கள் தாலாட்டக்
கருணை வடிவாய் வளர்ந்தவனே (வேல் வேல்)

தங்க ரதங்கள் கொண்டவனே
தரணி புகழும் ஆண்டவனே
சரவணபவ ஓம் மந்திரத்தில்
சகலமும் அடக்கி ஆள்பவனே (வேல் வேல்)

பஞ்சாமிர்தம் பன்னீரு
பாலுடன் தேனுடன் திருநீறு
சந்தனம் மணக்கும் உந்தன்மேனி
ஷ்ண்முகநாதா உன்புகழ் சொல்லும் (வேல் வேல்)

கால்நடை வருவோர் ஒருபக்கம்
காவடி சுமப்போர் மறுபக்கம்
இடுமபன் காவல் இப்பக்கம்
கடம்பன் காவல் எப்பக்கம் (வேல் வேல்)

அன்னை தந்த வேலடுத்து
அசுரர் குலத்தை அழித்தொழித்து
சேவலை மயிலை உன்னிடமாக
ஜெகமே புகழக் கொண்டவன் நீயே (வேல் வேல்)

தேவர் மூவர் சிறைமீட்டு
தெய்வானை கரம் பிடித்துத்
திருப்பரங்குன்றத் திருமணக்கோலம்
தினமும் காட்சி தருபவன் நீயே (வேல் வேல்)

பழமுதிர்ச் சோலை மரமாகிப்
பார்த்தவர் மயங்கும் கிழமாகி
வம்புக்கார வள்ளிப் பெண்ணின்
வளைக்கரம் பற்றிய பெருமான்நீயே (வேல் வேல்)

வள்ளியம்மை சடையப்பர்
வழங்கிய நல்ல மண்டபத்தில்
அள்ளித் தந்திடும் வள்ளல் முருகன்
ஆடுகின்றார் பொன் ஊஞ்சல் (வேல் வேல்)

செம்மட பட்டி ஊஞ்சலிலே
சின்னக் குழந்தை வடிவேலன்
வண்ணப் பூக்கள் தொட்டுத்தழுவ
வடிவேலுடன் ஆடுகின்றான் (வேல் வேல்)

செம்மட பட்டி ஊஞ்சலிலே
ஜெகமே புகழும் உன்னழகை
கண்டால் போதும் கவலைதீரும்
கஷ்டம் எல்லாம் ஓடிப்போகும் (வேல் வேல்)

வண்ண மயிலும் அகம்கிழ்ந்தே
அப்பா முருகா உனக்கென்றே
செய்து வைத்த வெள்ளிஊஞ்சல்
புள்ளி மயிலாய் ஆடுதய்யா (வேல் வேல்)

மழலைச் சிரிப்பு அழகோடு
மாதா தந்த வேலோடு
அழகிய ஊஞ்சல் ஆடிமகிழ்ந்திடும்
ஆனந்த காட்சிக்கு ஈடே இல்லை (வேல் வேல்)

அய்யா என்றே பெருமையுடன்
அடியவர் வணங்கும் அருளாடி
அள்ளித் தந்திடும் திருநீற்றில்
அப்பா உன்முகம் கண்டோமே (வேல் வேல்)

காவடி ஆடிடும் அழகினிலே
கலந்து நின்று சிரிப்பவனே
திருவடி சரணம் சரணமென்றே
தினமும் பணிவேன் நலந்தருவாயே (வேல் வேல்)

சந்தத் தமிழில் நான்பாட
ஷண்முக நாதா வந்திடுவாய்
வந்தென் இல்லம் தங்கியிருந்தே
வளங்கள் எல்லாம் தருவாயப்பா (வேல் வேல்)

செய்யும் தொழில்கள் சிறந்திடவே
சிறப்புடன் வளங்கள் பெருகிடவே
தொட்ட தொழிலில் நட்டம் வராமல்
தொடர்ந்து லாபம் தருவாயப்பா (வேல் வேல்)

ஆடிடும் காவடி அழகினிலே
அற்புதம் காட்டும் வேலவனே
ஆடும்மயிலும் அற்புத வேலும்
உன்னுடன் காண வந்திடு முருகா (வேல் வேல்)

அன்ன தானம் செய்திடுவோம்
அப்பா உன்னைப் புகழ்ந்திடுவோம்
பண்ணை எல்லாம் செல்வம் கொழிக்க
பழம் நீ அப்பா வருவாயே (வேல் வேல்)

அப்பா முருகா என்போமே
ஆனந்த முருகா என்போமே
எப்பொழுதும் என்பக்கம் இருந்து
எல்லா நலமும் தருவாய்யப்பா (வேல் வேல்)

தங்கத் தேரில் பவனிவரும்
ஷண்முக நாதன் திருமுகத்தைக்
கண்டால் போதும் கவலைதீரும்
கஷ்டம் எல்லாம் ஓடிப்போகும் (வேல் வேல்)

*அருளிசைமணி அரு.சுப்பிரமணியன், நேமத்தான்பட்டி*

வேலும் மயிலும் துணை

## நாளை வருவதை யாரறிவார்?

நாளை வருவதை யாரறிவார்?
நன்றே செய்வோம் இன்றைக்கே;
கோளை நம்பி இருப்பாரோ
குகனே உன்னைத் தொழுவோர்கள்
வேளை நல்ல வேளையென
வேலை செய்வோம் வாருங்கள்;
தோளை வலிமை ஆக்கிநல
வாழ்வைத் தருவாய் செந்தூரா;

வாழ்வே எங்கள் வளரொளியே;
வண்ணத் திருமயில் வாகனனே;
வீழ்ந்தவன் எழுந்தேன் உன்னாலே;
வெற்றியை நோக்கி ஓடுகிறேன்;
மூழ்கிய கப்பல் கிளம்பியது;
மூழ்கா தினிமேல் ஒருநாளும்;
ஆழ்நல் லறிவுத் தேனமுதை
அளித்தாய் எனக்கே செந்தூரா;

அளித்தாய் எனக்கே ஆனந்தம்;
ஆற்றல் பெருகிய தய்யாவே;
ஒளியும் நலமும் பொங்கியதே;
உன்னை மறந்தால் வாழ்வேது?
ஒளிவும் மறைவும் இல்லாத
உண்மை வாழ்வே வேண்டுமடா
தெளிவின் தெளிவே இன்பமடா
தினமும் இங்கே செந்தூரா;

தினமும் தினமும் உன்புகழே
திருவாய் மணக்கப் பாடுகிறேன்;
மனமும் உடலும் அதனாலே
மகிழ்வாய் இருக்கக் காணுகிறேன்
கனவும் நனவும் மெய்ப்படுமே
கந்தா உன்அருள் எனக்கிருக்க
நினைவில் உயிரில் நீ இருக்க
நிதமும் ஒளியே செந்தூரா;

நிதமும் ஒளியின் பாடலடா
நெஞ்சில் இனிமையின் ஆடலடா
இதந்தரும் சந்தனக் கோலமுகம்
இன்னொளி கூட்டிக் கண்டேனே;
சுதந்திரச் சங்கொளி முழங்கிடவே
சுந்தரன் வருவதைப் பாருங்கள்;
விதந்தரு கோடி இன்பமெனும்
விளைந்திட வைத்தார் செந்தூரா;

விளைவோ அழிவோ அறியேன்நான்
வீணே பொழுதைக் கழிக்காமல்
இளமை தவழும் உன்அழகில்
என்னைக் கொடுத்திட விரும்புகிறேன்;
அளப்பரும் கருணைப் பெருங்கடலே

அழியா கவிதை நீயானாய்
ஒளிவளர் விளக்கே பூரணமே
உன்னால் உயர்ந்தேன் செந்தூரா;

உன்னால் வளர்ந்த சிறுவன் நான்
உன்னைப் பாடிக் களிக்கின்றேன்
மன்னே எந்தன் உயிர்க்குயிரே
மனத்தே ஒலித்திடும் மாமணியே;
பொன்னே முத்தே ரத்தினமே
போற்றிப் போற்றிப் புகழ்ந்தாலும்
என்னால் முடியாதப் பாவுன்
எழிலைக் கூறிடச் செந்தூரா;

எழிலைக் கூறிடச் சொல்தேடி
எங்கே போவேன் ஐயாவே
மொழிக்கோர் அரசே என் தமிழே
முருகா முருகா பேரறிவே
அழியாக் கவிதை நீயானாய்
அன்பே அருளே உனைக்கான
விழிகள் இரண்டும் போதாதே
வேண்டும் ஆயிரம் செந்தூரா

வேண்டும் வேண்டும் நீ வேண்டும்
வேலும் மயிலும் வரவேண்டும்
நீண்ட பொழுதினில் பேரின்பம்
நெடுகத் தந்தால் ஆகாதோ?
யாண்டும் உன்அருள் வேண்டுமென
பாடும் பாட்டொலி கேட்பாயோ?
மீண்டும் மீண்டும் கேட்டாலும்
திகட்டா இசையே செந்தூரா

திகட்டா தெனக்குத் திகட்டாதே
திருச்செந் தூர்நீர் திகட்டாதே
அகத்துள் பொங்கும் கலிப்பதனைச்
சொன்னால் யாருக்கும் விளங்காதே
முகத்தைப் பாருங்கள் பெருநிலவரம்;
முழுதும் பாருங்கள் திருஉலகாம்
இகமும் பரமும் எதுவென்றால்
இதுவே என்பேன் செந்தூரா

## மயிலுமே சாட்சி பழனிமலை

மாம்பழம் கேட்டது இருபிள்ளை  - அதை
மதியால் வென்றது முதல்பிள்ளை
மலைமேல் நின்றது மறுபிள்ளை
மயிலுமே சாட்சி பழனிமலை

சுப்பன் சொன்னான் மந்திரத்தை - அதை
சொக்கன் கேட்டான் தலைகுனிந்து
இப்புவி மயங்குது காட்சிகண்டு
இதற்கு சாட்சி சுவாமிமலை

தீயவன் சூரனைக் கொன்றவனே
செந்தூர்க் கடலினைக் கொண்டவனே
மாயவன் மருகனே முருகையனே
மலரொன்று சாட்சி சீரலையே

செந்தமிழ் பாவை தெய்வானை
செங்கதிர் வேலனின் கைபிடித்தாள்
பைந்தமிழ் வாழ்த்திடும் மணக்காட்சி - திருப்
பரங்குன்றத்தின் திருக்காட்சி

கோதையர் இருவர் அருகிருக்க
குமரனும் மலைமேல் கொலுவிருக்க
மாமனும் அன்பாய் வாழ்த்திசைக்க
மங்கலக் காட்சி சோலை மலை

## சாய்ந்தாடு முருகா சாய்ந்தாடு

சாய்ந்தாடு முருகா சாய்ந்தாடு
சந்தனக் குடமே சாய்ந்தாடு
கோல மயிலே சாய்ந்தாடு
கொஞ்சும் புறாவே சாய்ந்தாடு

நெற்றியில் பிறந்த நித்திலமே
நீரினில் வளர்ந்த சித்திரமே
சுற்றிச் சுற்றி வருகின்றோம்
சுந்தர நிலவே சாய்ந்தாடு

கார்த்திகைப் பெண்கள் பாலூட்ட
கன்னித் தமிழால் தாலாட்ட
கீர்த்தி மிகவும் கொண்டவனே
சித்திரை நிலவே சாய்ந்தாடு

பிரணவப் பொருளை அறிந்தவனே
பிரம்மனைத் திருத்தும் பேரறிவே
சரவணப் பொய்கை வாழ்பவனே
சண்முக சிவனே சாய்ந்தாடு

தந்தைக்கு மந்திரம் சொன்னவனே
தாயாய் அன்பைப் பொழிபவனே
மந்திரப் பொருளே மரகதமே
மடிமேல் ஏறி சாய்ந்தாடு

அண்ணன் வயிறோ பெரிதாகும்
அவனே கனியை உண்ணட்டும்
பின்னால் உனக்கு உதவிடுவான்
பொன்னே மணியே சாய்ந்தாடு

வெண்ணெய் தருவான் மாமனுமே
வேலைத் தருவாள் அன்னையுமே
பண்பைத் தருவான் அப்பனுமே
பாடல் தருவோம் நாங்களுமே

சிட்டே சிமிழே முருகய்யா
செந்தூர் வாழும் கந்தய்யா
எட்டுக் குடியாய் வேலய்யா
ஏரகத் துரையே சாய்ந்தாடு

அன்பும் பண்பும் வளர்ந்திடவும்
ஆணவம் பொய்யும் நீங்கிடவும்
இன்பம் உலகத்தில் நிலைத்திடவும்
இடைக்கழி முருகா சாய்ந்தாடு

## குன்றக்குடியில் முருகோனே!

சொல்லச் சொல்ல நாவினிக்கும்
சொக்கும் கண்கள் நீர்துளிக்கும்
கல்லும் கனிந்து கவிபடைக்கும்
காடும் மேடும் கமகமக்கும்
அல்லும் பகலும் ஓதுகிறேன்
அய்யா உன்னைப் பாடுகிறேன்
கொல்லும் கவலை களைவோனே
குன்றக்குடியில் முருகோனே!

வேறு கடவுள் நினைந்தறியேன்
வேறு கோவில் பணிந்தறியேன்
வேறு கல்வி பயின்றறியேன்
வேலும் மயிலும் மறந்தறியேன்
தேறி என்னைத் தெளியாயோ?
சிறிதும் கருணை புரியாயோ?
கூறும் அடியார் துணைவோனே
குன்றக்குடியில் முருகோனே!

தேனும் பாலும் நதியோடும்
சிதறும் தேங்காய் மலையாகும்
கூனும் நிமிர்ந்து குதிபோடும்
குருடும் செவிடும் குறைதீரும்
வானும் மண்ணும் துதிபாடும்
வருவார் பண்டை வினைமாறும்
கோனும் தானாய் வளர்வோனே
குன்றக்குடியில் முருகோனே!

மருது பூபன் பேர்சொல்லும்
மலையில் விளங்கும் சித்திரமே
கருத இனிக்கும் கற்பகமே
காலம் கடந்த தத்துவமே
'வருதி வருதி' என வழங்க
மணிவாய் திறந்த பெட்டகமே
குருதிச் செம்பூ புனைவோனே
குன்றக்குடியில் முருகோனே!

பகழிக் கூத்தன் கவிதைகளில்
பாதச் சதங்கை பதித்தாயாம்
புகழும் பாம்பன் அடியவன்பால்
புள்ளி மயில்மேல் குதித்தாயாம்
நெகிழும் என்முன் கூத்தாட
நினையா தெங்கே ஒளிந்தாயாம்
குகனே திருமால் மருகோனே
குன்றக்குடியில் முருகோனே!

வடலூ ரார்க்குக் கண்ணாடி
வள்ளல் உனது முகம்காட்டும்
கடல்போல் கல்வி கச்சியப்பர்
கவி ஏடுன்கை நலன்காட்டும்
அடியேன் மனமோ பேய்காட்டும்

அதுஎந் நாள்உன் தாள்காட்டும்?
குடநீர் ஆடும் குமரோனே
குன்றக்குடியில் முருகோனே!

இழியும் காமம் ஓவியமாய்
இசையாய், கதையாய் விலையாகும்
பழியும் வெறியும் அரசியலாய்ப்
பார்எங் கணுமே அலைமோதும்
அழியும் உலகைக் காவாயோ?
அறிவு திருந்த வாராயோ
கொழிசெந் தமிழின் இறைவோனே
குன்றக்குடியில் முருகோனே!

துணிவோ முதுகில் தாக்குவதாம்
சுகமோ திருடித் தேக்குவதாம்
உணவோ நஞ்சில் ஊறியதாம்
உள்ளும் புறமும் நாறியதாம்
அணுவும் பணமும் ஆயுதமாம்
அகிலம் என்று வழுவாதாம்
குணமே விழையும் அழகோனே
குன்றக்குடியில் முருகோனே!

திருமா முகங்கள் ஓராறும்
திருக்கண் திருக்கை ஈராறும்
இருமா தரும் என் கலிதீர
ஏறும் மயிலும் சேவலுமாய்ச்
செருமா உகைக்கும் வேலோடு
சேராய் தண்டைக் காலோடு
குருமா மணியின் குடையோனே
குன்றக்குடியில் முருகோனே!

உச்சி குளிர உடல்குளிர
உருகும் அடியார் களிபெருக
பச்சை மயிலும் வேலோடும்
பன்னீர் ஆடும் பெருமானே
அச்சம் அகற்றி என்னையும்உன்
ஆளாய்க் கொண்ட தலைவோனே
கொச்சைத் தமிழும் அணிவாயோ
குன்றக்குடியில் முருகோனே

# பழனிமலை நடந்து செல்வோம்

**முருகா முருகா வேல்முருகா**
**முருகா முருகா வேல்முருகா**

நல்ல தமிழ்ச் சொல் லெடுத்து நாளும் பாடு
நம் தலைவன் முருகனையே நாடி ஓடு
வல்ல கதிர் வேலவனும் வள்ளி யோடு
வந்து நலம் தந்தருள்வான் வாகை யோடு

அஞ்சு வகைக் கனியெடுத்து அமுது செய்வோம்
ஆறுமுகன் மேனியிலே தொழுது பெய்வோம்
கொஞ்சு மெழில் குமரனுக்குப் பூக்கள் கொய்வோம்
கூறுதமிழ்ச் சொல்லெடுத்துப் பாக்கள் நெய்வோம்

தண்ணாரும் பழநி மலை நடந்து செல்வோம்
சாலை வழித் துன்பமெல்லாம் கடந்து செல்வோம்
கண்ணான முருகனையே கொஞ்சி மகிழ்வோம்
கருணை மழை பொழிகவெனக் கொஞ்சிக் கேட்போம்

கல்லமுத்தித் தாரரித்துத் தோலுந் தேயும்
காலிரண்டும் கொப்பளித்துக் கன்றிப் போகும்
வெல்ல மெனும் கந்தனவன் பேரைக் கூவ
வேதனைகள் தீர்ந்து நடை வேகங்கூடும்.
கந்தனையே சொந்தமென எண்ணும் போது
கவலையெனும் கடலதுவும் வற்றிப் போகும்
சிந்தனையிற் தெளிவு வரும் செல்வஞ் சேரும்
செரு முனையில் பகையழிந்து வெற்றி கூடும்.

அண்ணனுக்கும் யானையெனும் மாறுதலை
அப்பனுக்கும் கங்கையெனும் மாறுதலை
சண்முகனாம் கந்தனுக்கு மாறுதலை
தந்தருள்வான் எந்தனுக்கு மாறுதலை.

*மீ. சேவுகன் செட்டி*

# செந்தில் வளர் கந்தன்

சந்தமிகு செந்தமிழில் மாலை தொடுத்தேன்
செந்தில் வளர் கந்தனிடம் தூதுவிடுத்தேன்
அந்தமிகு குகன்நெஞ்சில் இடம் பிடித்தேன்
ஆறுமுகம் பேரழகைப் படம் பிடித்தேன்

வண்ணமயில் வாகனத்தில் வேல் முருகன்
வள்ளி தெய்வயானையுடன் மால் மருகன்

தென்னகத்தில் வாழுகின்ற சிலையழகன்
என்னகத்தில் காட்சிதந்தான் கலை அழகன்

வெண்ணீறு நெற்றியிலே பளபளக்க
வெண்ணிலவு கண்களிலே சிலுசிலுக்க
பன்னீரும் மார்பினிலே கமகமக்க
பார்வதியின் பாலன் வந்தான் மனம் களிக்க

ஓராறு முகம் கண்டேன் உள மகிழ்ந்தேன்
ஈராறு விழி கண்டேன் எனை மறந்தேன்
சீராளன் உருக்கண்டேன் செயலிழந்தேன்
செந்தாமரைப் பதத்தில் சரணடைந்தேன்

முருகா என அழைத்தேன் முறுவல் கண்டேன்
குமரா என அழைத்தேன் குளுமை கொண்டேன்
கந்தா என அழைத்தேன்கனிந்து நின்றான்
கடம்பா என அழைத்தேன்கருணை கொண்டான்

பழநி பரங்குன்றம் திருச்செந்தூர்
பழமுதிர் சோலையுடன் சுவாமி மலை
அழகிய திருத்தணிகை மருதமலை
ஆலயங்கள் யாவையும் காட்டுவித்தான்

*அ. மருதகாசி*

## தங்க ரதம்

தங்கரதம் ஒன்று இங்கு அசைந்து வரச்
செந்தில் வளர் கந்தனுமே கொலுவிருக்க
நங்கை மலர் தெய்வானை வள்ளியுடன்
நான் வணங்கும் திருக்கோலம் காணுங்களேன்

தேவரெல்லாம் கூடி நின்று வடம் பிடிக்க
தென்பழநி வலம் வரும் தங்கரதமாம்
தங்கரத மீதமர்ந்து கொலுவிருக்கும்
தண்டபாணித் தெய்வமே சரணமய்யா

பன்னீரும் சந்தனமும் பாற்குடமாம்
பஞ்சாமிர்தம் விபூதி அபிஷேகம்
கொஞ்சு தமிழ் பாலனுக்குப் பழநியிலே
கோடிக்கண்கள் வேண்டுமய்யா காண்பதற்கே

காவடிகள் உன்னைத் தேடி ஆடிவரும்
கால்நடையாய் பக்தர் கூட்டம் கோடிவரும்
சேவடியே சரணமென வாழ்பவர்க்கே
செல்வநலம் தந்தருளும் கந்தவேளே

கொக்கரக்கோ சேவல் ஒன்று கூவிவர
கோலமயில் நின்று நடமாடி வர
சுப்பையா நானடிமை பாடிவர
சொக்கன் மகன்நீ அதனைக் கேட்டுவர

## சிங்கை முருகன் சிறப்பு

வேண்டும் வரம் தருவதில்வல்லவனாம்
தண்டாயுதபாணி எங்கள்மன்னவனாம்
கண்டவுடன் காதல் கொள்ளும்உன் அழகை
கண்டிடவே நாங்கள் கிளம்பிவந்தோம்

மாதந்தோறும் கார்த்திகைஉன் திருநாள்
பாதையிலே பக்தர் கூட்டம்கூடி நிற்கும்
மேளங்களின் மங்கள இசையுடனே
ஆலயத்தைச் சுற்றியே நீவருவாய்

தங்கரதம் ஏறியே ஒயிலாகப்
புனர்பூச நாளதனில்புறப்படுவாய்
போற்றிடும் பக்தரைக் காணநீயும்
சுற்றிட ரதமேறிகிளம்பிடுவாய்

அண்ணன் அவன் ஆலயத்தில்ஆரம்பித்து
அன்னை அவள் வாசலிலே ஆசிபெற்று
மன்னன் அவன் நகர்வலம்வருமழகை
காண கண்கள் கோடிவேண்டுமப்பா

வேலன் செல்லும் பாதையிலேஇடர் வராமல்
சாலை செல்லும் வாகனங்கள்மாறிவிட
காவலர்கள் சிறப்புடன்பாதை தரவே
கந்தன் செல்லும் பேரழகைகாணுங்களேன்

சட்ட திட்டம் போற்றுகின்றசிங்கை நகரில்
வட்டமிட்டு சுற்றி வரும்கந்தவேளே
ஆட்டத்துடன் காவடிகள் ஆடிவரவே
பாட்டிசைத்து உமை நாம்பாடிவருவோம்

தைப்பூச நாளதுவும்வந்துவிட்டால்
பாசத்துடன் மக்கள் கூட்டம்பெருக்கெடுக்கும்
படைபோன்ற அன்பர்களின் உழைப்பாலே
தடையின்றி அன்னதானம்நடந்திடுமே

சொல்லெடுத்து உனையேபாடிடுவோம்
கால்கடுத்து உனையேகாணவருவோம்
வேளையிது வேலமுருகன்வந்திடுவாய்
வேலெடுத்து என்றும் எம்மைகாத்திடுவாய்

*அழகு சுந்தரம், நாச்சியாபுரம்*

## ஒன்றுமில்லை என்று நினைத்தேன்!

கல்லுக்குள்ளே ஒன்றுமில்லை என விருந்தேன்
உள்ளுக்குள்ளே தேரை என்று கண்டுவியந்தேன்
அங்கும் உண்டு ஈரம் என்று இன்று உணர்ந்தேன்
அன்பிருந்தால் எங்கும் உண்டு என்று தெரிந்தேன்

இல்லை, இல்லை, இல்லை என்று பகன்றேன்
எல்லாம் கல்லு செம்பு என்று சொல்லி இகழ்ந்தேன்
வெண்ணெய் பாலுக்குள்ளே என்று கண்டு வியந்தேன்
வேலா! உன்னைக் காணும் வழி இன்று அறிந்தேன்

எங்கே எங்கே எங்கே என்று கேட்டுத் திரிந்தேன்
இல்லா இடம் எங்கும் சென்று தேடி அலைந்தேன்
அங்கும் இங்கும் எங்கும் உள்ள உண்மை அறிந்தேன்
இங்கே உன்னைக் கண்டு போற்ற எண்ணி நடந்தேன்

ஆண்டு தோறும் கார்த்திகையில் மாலை அணிந்தேன்
ஆறுமுகம் உன்னை எண்ணிப்பாடி மகிழ்ந்தேன்
வேண்டி வரும் அன்பருடன் கூடி நடந்தேன்
வெய்யில் பனி எண்ணவில்லை தாங்கித் தொடர்ந்தேன்

நெஞ்சுறுதியை அளக்க நீ நினைத்தாயோ
நேற்றுவரை சோதித்து நீ முடித்தாயோ
தஞ்சமென்று வந்த பின்பும் தவிக்க விட்டாய்
சன்னதியின் முன்பு நின்றும் புலம்ப விட்டாய்

சோதனையைப் பேதை மனம் உணரவில்லை
துன்பத்தையே கண்ட உள்ளம் பொறுக்கவில்லை
நீ துணை என்றே நடத்தும் உறுதியில்லை
நெஞ்சம் தளர்ந்தேன் நிலைமை அறியவில்லை

படிப்படியாக என்னை உயர்த்திவிட்டாய்
பையப்பையவே இருளை அகற்றி விட்டாய்
வெடிக்கசையாத கல்லு மனதை எல்லாம்
வெயில்பட்ட நெய் யெனவே உருக வைத்தாய்

பகல் கனவைக்கூடப் பலிக்க வைத்தாய்
பட்ட மரமும் தழைத்துச் செழிக்க வைத்தாய்
அகல் விளக்காய் இருந்த என்னை எடுத்தாய்
அண்ணாமலை விளக்காய்த் திகழ விட்டாய்

நினைத்ததை எல்லாமே நடத்தி வைத்தாய்
நீண்ட துன்பம் தொடர்கதை முடிய வைத்தாய்
இணையடித் தாமரையில் விழுந்து விட்டேன்
இன்று உன்னை ஏதோ கொஞ்சம் உணர்ந்துவிட்டேன்

உந்தனருள் இன்னதென்று உணர்த்தி விட்டாய்
உள்ளத்துள் கோவில் ஒன்று அமைக்க வைத்தாய்
சுந்தர வேலோடு அங்கே எழுந்தருள்வாய்
தோகை மயில் வாகனனே சரணம் கந்தா

## எல்லாமுண்டு

அன்பு செயச் சக்தியெனும் அன்னையுண்டு
ஆலமுண்ட கண்டனெனும் தந்தையுண்டு
தன் வயிறு சாயவரும் அண்ண னுண்டு
சாரங்க பாணியெனும் மாம னுண்டு

ஆடகத்தில் செய்ததொரு தேருமுண்டு
அழகு மிகு தோரணங்கள் யாவுமுண்டு
ஆடிவரத் தோகை மயில் தானுமுண்டு
ஆதிசக்தி தந்ததொரு வேலுமுண்டு

கட்டியங்கள் கூவி வரச் சேவ லுண்டு
கடம்பனுடன் இடும்பனுமே காவலுண்டு
கட்டி வருங் காவடிகள் ஆடலுண்டு
கறந்த பசும் பாற்குடங்கள் கூடவுண்டு

வேலும் மயிலும் துணை

பார்புகழும் ஆறுபடை வீடும் உண்டு
பட்டாடை ஆபரணங் கோடியுண்டு
மார்பினிலே கடப்ப மலர் மாலையுண்டு
மணியினையும் செஞ்சதங்கை காலிலுண்டு

வள்ளிமயில் தெய்வானை கொஞ்சலுண்டு
மலைவண்ண எங்கெங்கும் மஞ்சமுண்டு
உள்ளுருகி அடியவர்கள் கெஞ்சலுண்டு
உனையென்றும் மறவாத நெஞ்சுமுண்டு

சேவற் கொடி கொண்டவடி வேலனுக்குத்
தேவையான யாவுமுண்டு என்று சொல்லும்

சேவுகனின் கவியெடுத்துப் பாடி வருவார்
சிங்கார வேலனருள் நாளும் பெறுவார்

*-மீ. சேவுகஞ் செட்டி*

## அன்பும் அருளும் வேல்முருகா

**முருகா முருகா வேல்முருகா**
**அன்பும் அருளும் வேல்முருகா**

முருகா முருகா வேல்முருகா
அன்பும் அருளும் வேல்முருகா
வினைகள் தீர்க்கும் வேல்முருகா - அனைத்து
வளங்களும் தருவாய் வேல்முருகா

சிங்கையில் இருக்கும் வேல்முருகா
சிக்கலை தீர்க்கும் வேல்முருகா
வெற்றியைத் தந்திடும் வேல்முருகா - நல்ல
கல்வியைத் தருவாய் வேல்முருகா

உறவுகள் தந்த வேல்முருகா
உலகம் காக்கும் வேல்முருகா
உண்மைப் பொருளே வேல்முருகா - எம்மை
காத்து அருள்வாய் வேல்முருகா

*மீனாட்சி சுந்தரம் சக்திகுமார், ஜனவரி 2008.*

## சிங்கைநகர் முருகா

**சிங்கைநகர் முருகா சிங்கைநகர் முருகா**
**சீக்கிரம் வருவாயே**
**சிங்கைநகர் முருகா சிங்கைநகர் முருகா**
**செல்வவளம் தருவாயே**

தங்கரதம் ஏறியே தைப்பூச நாளிலே
சிங்கையை வலம் வருவான்
காவடிகள் தாங்கியே கால்நோக வருவோரைக்
காலமும் காத்து நிற்பான்

புனர்பூச நாளிலே காவடி பூசையும்
பொலிவுடனே நடத் திடுவோம்
லயன்சித்தி ஆலயத்தில் ஆறுமுகன் அண்ணனை
வணங்கியே புறப்படு வோம்

சிங்கையின் அன்னையைச் சௌத்பிரிட்ஜ் மாரியை
வணங்கியே ஆசி பெற்று
தர்மம் தழைத்திட தீமிதி நடக்கின்ற
ஆலயத்தை வலம் வருவோம்

சீனரும் வியந்திட சிங்கார வேலனின்
சிறப்புகளைப் பாட் டிசைப்போம்
சிங்கைநகர் வாழ்கின்ற ஶ்ரீதண்டா யுதபாணி
பெருமைகளைச் சொல்லி நிற்போம்.

ஆடிவரும் காவடியில் அவனுருவை கண்டந்த
அழகான சிங்கை வியக்கும்!
இந்தியன் வங்கியின் இனியவர் பலர்கூடி
இடையினில் வணங்கி நிற்பர்.

டாங்க்ரோடு ஆலயத்தை நெருங்கிட நெருங்கிட
மனதினில் அருள் பிறக்கும்
தங்கரதம் மீதினில் தமிழ்க்கடவுள் முருகனைக்
கண்டதும் இருள் விலகும்

நலங்கள் தழைத்தோங்க நன்மைகளைச் செய்கின்ற
நகரத் தார்பின் தொடர
நயமாக உயர்ந்திருக்கும் வியப்பான கட்டடங்கள்
நாற்புறமும் எழுந்து நிற்க

விண்ணோரும் மண்ணோரும் போற்றிநிதம் வணங்கிடும்
தண்டபா ணியின் பெருமையினை
வியத்தகு தைப்பூச நாளினில் காண்பதற்குக்
கண்களோ கோடி வேண்டும்

வேலும் மயிலும் துணை

அன்புடன் அவனருளை வேண்டியே வந்திடுவோர்
அகமெலாம் மகிழ்ந்து நிற்கும்
செல்வம் பதினாறும் செழிப்புடன் நல்வாழ்வும்
சத்தியமாய் வந்து சேரும்

சிங்கைநகர் வாழ்கின்ற தண்டபாணி தெய்வத்தின்
திருப்பாதம் பணிந்திடுவோம்
சீரான நல்வாழ்வும் சிறப்பான பெருவாழ்வும்
சீக்கிரமே பெற்று உயர்வோம்.

*லெ. சக்திகுமார், தேவகோட்டை*

# சிங்கை முருகன் வருகை

**பவனி வருகிறார் சுவாமி பவனி வருகிறார்**
**தங்கரதம் மீதமர்ந்து பவனி வருகிறார்.**

ஆனைமுகன் தம்பியவர் பவனிவருகிறார்
அகிலத்தைக் காத்தருள பவனிவருகிறார்
அம்பிகை பாலன் அவன் பவனிவருகிறார்
அடியவரைக் காத்திடவே பவனிவருகிறார்.

தைப்பூச நாளினிலே பவனிவருகிறார்
தரணியை வாழவைக்க பவனிவருகிறார்
காவடிகள் ஆடிவர பவனிவருகிறார்
கவலைகளைப் போக்கிடவே பவனிவருகிறார்.

தேவர்க்குத் தேவன் அவன் பவனி வருகிறார்
தேடிவரும் பக்தர்குறை தீர்க்க வருகிறார்
ஆடிவரும் காவடிக்குள் ஆழ்ந்து வருகிறார்
அடிபணிந்து நிற்போரை வாழ்த்த வருகிறார்.

சூழுகின்ற துன்பம்யாவும் துரத்த வருகிறார்
சூரர் படை வேர் அறுக்க சுற்றி வருகிறார்
வேலுருவாய் நின்று நம்மை காக்க வருகிறார்
வேண்டுவரம் கொடுப்பதற்கு விரைந்து வருகிறார்.

கடல் கடந்து வந்தோரைக் காக்க வருகிறார்
காலம் முழுதும் வழிநடத்த ஓடிவருகிறார்
வடிவேலன் முருகன் இங்கு வந்து நிற்கிறார்
வளம்தந்து காத்திடவே பவனி வருகிறார்.

சிங்கை நகர் முழுவதையும் சுற்றி வருகிறார்
சிங்காரக் காவடியில் ஆடிவருகிறார்
தண்டபாணித் தெய்வமின்று தேரில் வருகிறார்
தெண்டனிட்டோர் அன்பை மெச்சி காக்க வருகிறார்.

தங்கமயில் வாகனத்தில் தவழ்ந்து வருகிறார்
தந்தினத்தோம் தாளம்கேட்டு தாவி வருகிறார்
அழகான காவடியில் ஆடி வருகிறார்
ஆனந்தமாய் பால்குடத்தில் அமர்ந்து வருகிறார்.

பாடிவரும் பக்தரைக் கண் பார்க்க வருகின்றார்
பார்புகழும் வாழ்க்கை தர பறந்து வருகின்றார்
அவனியெல்லாம் அவன்புகழை நாம்பாடவே.
அளவில்லா வரங்களெலாம் அளித்து நிற்கின்றான்.

*லெ. சக்திகுமார்*

# கந்தவேலை வணங்கு

**கந்த வேலை வணங்கு**
**நம் கவலையெல்லாம் போக்க**
**கந்தவேலை வணங்கு**
**நம் கவலைஎல்லாம் போக்க**

கந்த வேலை வணங்கு நம் கவலையெல்லாம் போக்க
நாளும் பொழுதும் தீபம் ஏற்றி கந்த வேலை வணங்கு
நன்மை யாவும் வீடுசேரும் பக்தியை நீ விரும்பு
பிறப்பு என்பது ஒரு முறை அது
வேண்டாம் நமக்கும் மறுமுறை (2)
இருக்கும் வரையில் முருகன் நினைவில்
வாழ்வதில் நிம்மதி உண்டாகும்
நாம் வாழ்வதில் நிம்மதி உண்டாகும்

**கந்தவேலை வணங்கு**
**நம் கவலைஎல்லாம் போக்க**

உண்மை அன்பு கொண்ட நெஞ்சில் வாழுகின்ற தெய்வம்
உள்ளம் உருகி அழுபவர் தமக்கு உதவுகின்ற தெய்வம்
கருணை பொங்கும் ஒரு முகம்
அது கந்தன் குமரன் திருமுகம் (2)
இருக்கும் வரையில் முருகன் நினைவில்
வாழ்வதில் நிம்மதி உண்டாகும்
நாம் வாழ்வதில் நிம்மதி உண்டாகும்

**தினம் கந்தவேலை வணங்கு**
**நம் கவலைஎல்லாம் போக்க**

பாதம் நோக பயணம் போக பழனியப்பன் வருவான்
விதியை மாற்றி வினைகள் அகற்றி புதிய வாழ்வு தருவான்
ஆறெழுத்து மந்திரம் (ஓம் சரவண பவ)
அதைச் சொன்னால் சுகம் தரும் (2)

இருக்கும் வரையில் முருகன் நினைவில்
வாழ்வதில் நிம்மதி உண்டாகும்
நாம் வாழ்வதில் நிம்மதி உண்டாகும்

தினம் கந்தவேலை வணங்கு நம் கவலைஎல்லாம் போக்க
நம்ம கந்தவேலை வணங்கு நம் கவலைஎல்லாம் போக்க

# படைவீட்டு வேலன்

### வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்-வெற்றி
### வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்

ஆறுமுக வேலவா அழகுமுகம் காட்டிவா
ஆனந்தமாய் ஓடிவா அருள் கொடுக்க இங்குவா
ஆறுபடை நாயகா அழகுமயில் வாகனா
பாருடைய பக்தரைப் பாதுகாக்க நீயும் வா
பாதமெலாம் நோகுது பழநிமுகம் காணுமுன்
பாதைவழி வேலவா பார்த்துவர நீயும்வா
வள்ளியம்மை பெண்ணொருத்தி வந்தாள் உந்தன் நாயகி
தெய்வானை தேவியோ தேடிநின்றாள் வீட்டிலே
ஏனொசென்றாய் வேலவா எங்குசென்றாய் வேலவா
தேடிவரும் பக்தர்குறை ஓடிவந்து காக்கவா
காவடிகள் ஆடிவரக் கந்தன்மயில் ஆடுது
பாவடிகள் பாடிவந்து பாதைவழி கடக்குது
கோடிக்கோடி பக்தர்கள் கூடிவந்த யாத்திரை
நாடிநீயும் ஓடிவந்து நலமே தந்தருளுவாய்

*வாஸன்ஸ் காபி எஸ்.எம். அழகப்பன்*

## சிங்கைநகர் வாழ்கின்ற சிங்கார வேலவா

செட்டிமக்கள் நாங்களெல்லாம் செந்தமிழால்
அழைக்கிறோம்
செம்மைசேர் வாழ்க்கையினை வழங்கிடவே இங்கு வா
அன்பர் எல்லாம் நோன்பிருந்து உன்னை காண
வருகின்றோம்
அடியவரைக் காத்திடவே அன்புடனே இங்கு வா
வேழமுகன் சோதரனே வேல் வடிவாய் நின்றவா
வேண்டுவரம் நல்கவா வளமெல்லாம் அருள வா
அரோகரா முழக்கம் இங்கே விண்ணை பிளக்குது
அழகு காவடிகள் ஆனந்தமாய் ஆடி வருகுது
உன்புகழைப் பாடபாட உள்ளமெல்லாம் உருகுது
உன்னருளை வேண்டி வேண்டி பிள்ளைமனம் ஏங்குது
பக்தியாலே மனமிங்கே துள்ளிதுள்ளி ஆடுது
பரவசத்தால் மெய்சிலிர்த்துக் கண்ணில் நீர் பெருகுது
உன்னழகை கண்டவுடன் உள்ளம்தெளிவு பெருகுது
உன்நாமம் சொல்ல சொல்ல உயர்வுதானாய் வருகுது.

*லெ.சக்திகுமார். தேவகோட்டை, ஜனவரி 2008.*

# சிங்கைநகர் வேலவா சிக்கலெல்லாம் தீர்க்கவா

சிங்கைநகர் வேலவா சிக்கலெல்லாம் தீர்க்கவா
சத்தியமாய் நீயும்வா சந்ததிகள் காக்கவா
டாங்க்ரோடு நாயகா தண்டாயுதபாணி வா
தமிழாலே அழைத்தவுடன் தாவி நீயும் ஓடிவா
அன்னைதந்த வேலெடுத்து என்றும் எமை காக்கவா
அழகுமயில் ஏறியே அற்புதமாய் இங்குவா
செட்டிமக்கள் நாங்களெல்லாம் செட்டுசெட்டாய் வருகிறோம்
செம்மையான வாழ்வுதர செந்தில்நாதன் ஓடிவா
லயன்சித்தி ஆலயத்தில் சர்க்கரையைக் கட்டினோம்
நயமான காவடிகள் நகரத்தார் ஏந்தினோம்
சௌத்ப்ரிட்ஜ் அன்னையின் ஆசிபெற்று வருகிறோம்
சௌபாக்ய வாழ்வுபெற உன்னைத்தானே நம்பினோம்
வருகிறோம் வருகிறோம் டாங்க்ரோடு வருகிறோம்
பெறுகிறோம் பெறுகிறோம் உன்னருளைப் பெறுகிறோம்
காவடிகள் ஆட்டம் காண கானமயில் ஏறிவா
கண்கொள்ளா காட்சியிது கண்டிடவே இங்குவா
உன்னைவிட்டு வேறுயாரை இந்தவேளை தேடுவோம்
உரிமையோடு உன்னைத்தானே என்றும் நாங்கள்
நாடுவோம்

*அழகு சுந்தரம், நாச்சியாபுரம், 2012*

# தேனால் அபிஷேகம்

தேனால் அபிஷேகம் நான் செய்ததின் பலனாலோ
தானாக பாமாலை உன் மீதே பாடுகிறேன்
வானாதி தேவர்களும் பல வரம் பெற்ற முனிவர்களும்
வந்தே பழனியிலே உன்னை வணங்கியே வழிபடுவார்
தும்பிக்கையான் தம்பியாய் நீ பொய்கையில் அவதரித்தாய்
உன்னை நம்பியே ஓடிவந்தேன் ஆறுமுக வேலவனே
மானிடராய் பிறந்து மந்த மதியால் அலைந்த என்னை
வந்தே கைகொடுத்துச் சன்மார்க்கத்தைத் தந்தருள்வாய்
தேர்ஒன்று செய்திடுவேன் அதில் தீபங்கள் ஏற்றி வைப்பேன்
பொய்கை ஆற்றினிலே அதைப் பாங்குடன் அனுப்பி
வைப்பேன்.
ஊன் உடல் மறைந்தாலும் என்உயிர் உந்தன் பாதம் வரை
வான்புகழ் கொண்டவனே இந்த வரங்களைத் தந்தருள்வாய்

# திருத்தணி முருகன்

**முருகய்யா முருகய்யா முத்துக்குமரன் நீயய்யா!**
**முருகய்யா முருகய்யா முத்துக்குமரன் நீயய்யா!**

திருத்தணி மலையில் அருத்தமாய் நின்று
திருப்புகழ் கேட்கும் வடிவேலா
ஒருத்தரும் இல்லை உதவியும்-இல்லை
உன்பதம் ஒன்றே துணையாகும்

வெறுத்தவர் கோடி செருத்தவர் கோடி
விளைத்ததும் என்ன தெரியாது
பொறுத்ததும் நீயே மறுத்ததும் நீயே
பொற்பதம் தந்து காப்பாயே!

நெஞ்சினில் வைத்த சந்தனத் தாலே
நெருப்பெனும் நோய்கள் நீக்காயோ!
தஞ்சமாய் வந்துன் தாள்பணி கின்றோம்
தயவுகள் செய்யத் தாமதமோ;
பஞ்சமும் நோயும் பனியென நீக்கிப்
பாற்குடம் காவடி ஏற்றவனே!
அஞ்சிட வில்லை அறுமுகம் காட்டி
ஆதரித் திடநீ வரவேணும்

நவமணி வீரர் சூழ்ந்திட நிற்கும்
நாயகனே நீ அருள்வாயே!
தவமென வந்த வள்ளியும் தெய்வ
யானையுடன் நீ வரவேணும்

உவர் நிலமெல்லாம் விளைந்திடும் வண்ணம்
உரமென முறுவல் செய் வோனே!
தவறுகள் கோடி செய்திடும் போதும்
தணிகையில் நின்று காப்பாயே!

அறுமுக மான மரகத அணியை
அழகுடன் மார்பில் அணிவோனே
பெருமித மான ஒருதிரு மார்க்கம்
பிரணவம் என்ற பெருமானே!

அருமணிகடுக்கை திருமணி வேய்ந்த
அரும்பவ ளக்கால் சபையினிலே
இருமணி யோடு காட்சிகள் தந்தே
எழுமையும் காக்கும் வடிவேலா!

பங்குனி உத்திரத் திருநாள் எல்லாம்
பக்தர்கள் நெஞ்சில் பாலாவாய்
சங்குகள் ஊதி சமரசம் ஓதி
சாத்திரம் எல்லாம் நீயாவாய்

தங்கிட நீயே தருநிழல் ஆவாய்
தணிகையில் எழுந்த பெருமானே!
பொங்கிடும் கண்ணீர் அன்பினால் உன்னைப்
போற்றிடு கின்றோம் காப்பாயே!

*பொற்கிழிக் கவிஞர் காசி ஸ்ரீ அரு. சோ*

## தேவனவன் காட்சி

**வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்**
**வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்**

பழனி என்றசொல் எனக்கு ஜீவமந்திரம்-அதைப்
பாடப்பாட எனக்கு வரும் வென்றிடும் திறம்
அழகுமுருகன் ஆண்டருளும் அழகு மாமலை
அவனிதனில் அதற்கிணையாய் ஏது மாமலை

ஞானத்திற்கும் மோனத்திற்கும் விளக்கம் பழனியில்
நாடுநலம் அத்தனையும் கிடைக்கும் பழனியில்
தேனமுத அபிஷேகம் தெய்வப் பழனியில்
தேவனவன் காட்சியதோ தினமும் பழனியில்

திருப்புகழின் முழக்கமெல்லாம் மேவும் பழனியில்
தேவன் நாமம் சொல்லிக் குயில் கூவும் பழனியில்
விருப்புடனே தொழுதவர்க்கோ வெற்றி பழனியில்
விளங்கும் நெற்றி நீறுமணக்கும் வேந்தன் பழனியில்

## ஜெயதி ஷண்முகம்

**ஜெயதி ஷண்முகம்-ஜெய ஜெயதி ஷண்முகம்**
**ஜெயதி ஷண்முகம்-ஜெய ஜெயதி ஷண்முகம்**

பரம தெய்வதம்-பசுபதி அனுக்ரஹம்
பதித பாவனம்-பரிபால ஸ்ரீகரம்
சரணதாரகம்-தேவ தேவ நாயகம்
சிவசுதம்குகம் ஜெயஜெயதி ஷண்முகம்

ஹரிஹ ராஸ்யம்-கன ஹார நூபுரம்
ஹஸ் த்வாதசம்-ஹர ஹரப ராத்பரம்
சிரஷ்டானனம்-ஜெய செந்தி லாதிபம்
சிவசுதம்குகம்-ஜெயஜெயதி ஷண்முகம்

ஆபத் பாந்தவம்-அனாத ரட்சகம்
அபய ஜீவிதம்-க்ருபானந்தம் சிவம்
தீபதரிசனம்-ஜெய ஜெயம னோகரம்
சிவசுதம்குகம்-ஜெய ஜெயதி ஷண்முகம்

கஜஸ கோதரம்-கலி கல்மிஷம்ஹதம்
கவிக லாதரம்-சங்கடஹ ரம்சுகம்
ஜெய லப்தரம்-சக்தி சிகித ரம்ப்ரபும்
சிவசுதம்குகம்-ஜெயஜெயதி ஷண்முகம்

சரவனோத்பவம்-ஷடாக்ஷரம்விபும்
தார காந்தகம்-ஸர்வ ஸத்ரு ஸம்ஹரம்
த்ரிலோக காரஸம் -சுசீலம்மங்களம்
சிவசுதம்குகம்-ஜெய ஜெயதி ஷண்முகம்

குக்கு டத்வஜம்-குங் குமதி வாகரம்
குமார வாரஸம்-குருத்வ பூரஸம்
தித்ஜ யம்சுபம்-தீர தீர சம்பரமம்
சிவசுதம்குகம்-ஜெய ஜெயதி ஷண்முகம்

ஆறு மாமுகம்-எனை ஆளும் பூமுகம்
அஞ்சும் நெஞ்சகம்-திரு வடிஅடைக்கலம்
சீறு பாதகம்-மயில் சேவ லாய்வரும்
சிவசுதம்குகம்-ஜெய ஜெயதி ஷண்முகம்

எந்தை உன்பதம்-அன்றி இல்லை யேசதம்
இசைப டைத்தனம்-உனை ஏத்தி நின்றனம்
சிந்தை உன்வசம்-என் செயல்கள் உன்வசம்
சிவசுதம்குகம்-ஜெய ஜெயதிஷண்முகம்

பல்வ கைக்கலம்-பல பல்வ கைநலம்
பல்வ கைத்திறம்-பல பல்வ கைத்தலம்
சில்த மிழ்ப்பதம்-தந்து சேவிப் பேன்தினம்
சிவசுதம்குகம்-ஜெயஜெயதி ஷண்முகம்

மலை பிளந்தவேல்-கடல்வயிற எந்தவேல்
மகிமை கொண்டவேல்-அறம் வாழ நின்றவேல்

சிலைஎழிற்கைவேல்-வாழ்கதிரு அருட்கைவேல்
சிவசுதம்குகம்-ஜெய ஜெயதிஷண்முகம்

வெல்க குஞ்சரி-வெல்க வேடர்மஞ்சரி
வெல்கபூமுடி-வெல்க வெல்க சேவடி
செல்கதுயரெலாம்-வந்து சேர்க நலமெலாம்
சிவசுதம்குகம்-ஜெய ஜெயதி ஷண்முகம்

ஜெயஷ டானனம்-ஜெயஜெயபு யாசலம்
ஜெயப தாம்புயம்-ஜெய ஜெயஷ டாக்ஷரம்
ஜெயப்ர பாகரம்-ஜெய ஜெயக்ரு பாகரம்
சிவசுதம்குகம்-ஜெய ஜெயதி ஷண்முகம்.

## ஆழவந்தவா என்னை ஆழவந்தவா

**ஜெயதி சண்முகம் ஜெய ஜெயதி சண்முகம்**
**ஜெயதி சண்முகம் ஜெய ஜெயதி சண்முகம்**
**ஜெயதி சண்முகம் ஜெய ஜெயதி சண்முகம்**
**ஜெயதி சண்முகம் ஜெய ஜெயதி சண்முகம்**

ஆழவந்தவா என்னை ஆழவந்தவா
வேலை கொண்டு வா வடிவேலை கொண்டுவா
பகையை வென்று வா என் பகையை வென்று வா
செந்திலாண்டவா திருச்செந்திலாண்டவா

நாளை கொண்டு வா திருநாளை கொண்டுவா
நேரம் கொண்டுவா நல்ல நேரம் கொண்டுவா
மாலை கொண்டுவா மணமாலை கொண்டுவா
குன்றினாண்டவா பரங்குன்றினாண்டவா

கனியைக் கொண்டுவா அறிவுகனியைக் கொண்டுவா
பணிவைக் கொண்டுவா நல்ல பணியைக் கொண்டுவா
அனைத்தும் கொண்டுவா மயிலை அணைத்துக்கொண்டுவா
பழனியான்டவா பல மலையினாடவா

பிராணம் தந்தவா பிரணவ பொருளைத் தந்தவா
பாதம் காட்டவா பொற்பாதம் காட்டவா
ஞானம் தந்தவா என் ஞானபண்டிதா
மலையினாண்டவா சுவாமி மலையின் ஆண்டவா

வீரம் கொண்டவா இரு தாரம் கொண்டவா
கோரம் செய்த அசுரர் நெஞ்சை துவாரம் செய்தவா
தனிமை கொண்டவா சுவாமி துணிவைக் கொண்டுவா
தனிகை ஆண்டவா திருத்தனிகை ஆண்டவா

வேதம் தந்தவா வேடன் உருவில் வந்தவா
அகமழித்தவா அவ்வை அகமழித்தவா
தமிழைத் தந்தவா பாடல் எழுத வைத்தவா
சோலை ஆண்டவா பழஞ்சோலை ஆண்டவா

*வெங்கட் கணேசன், நாச்சியார்புரம்*

## பதினாறு பேறு செல்வம் தா தா

**கந்தனே உன்னை நான் கனவிலும் மறவாத**
**காரணம் கண்டு கொண்டேன்**
**காத்திடும் தெய்வமே நீ யென்று உறுதியாய்க்**
**கண்டு தான் இங்கு வந்தேன்**

வண்ணமயில் ஏறிடும் வள்ளி மணவாளனே
மாறாத அன்பு கொண்டேன்
மலை மீதில் வாழ்கின்ற எங்கள் குலதெய்வமே
வந்தெனக் கருள் செய்குவாய்

தந்தையும் தாயுமாய் உன்னையே எண்ணியே
தளராத பக்தி கொண்டேன்
தனயனைக் காத்திட உயர்வினைத் தந்திட
தாமதம் ஏன் சொல்லுவாய்

பன்னிரு கண்களால் பார்த்து நீ என்னிடம்
பாசாங்கு செய்யலாமா
பழனிமலை வாழ்கின்ற எங்கள் குலதெய்வமே
பக்தர்க் கருள் மெய்யனே

அருணகிரிப் பாட்டினை அகமகிழ்ந்தே கேட்டு நீ
அவனுக்கு அருள் புரிந்தாய்
ஆசையும் மோகமும் அணுகாமல் என்னையும்
ஆதரித்தருள் செய்குவாய்

மங்காத உள்ளமும் மாறாத கொள்கையும்
வாய்த்திட வேண்டி நின்றேன்
மலையாண்டியாகிய எங்கள் குலதெய்வமே
மனம்மகிழ வர வேண்டுமே

அன்றொன்றும் இன்றொன்றும் அனுதினம் பேசியே
ஆயுளைப் போக்கிடாமல்
அவனியில் மாந்தர்கள் நல்வாழ்வு பெற்றிட
ஆசியை நாடி வந்தேன்

பண்ணோடு இசைபாடும் நகரத்தார்கள் உனை
பாடாத நாளும் உண்டோ?
பரங்குன்றில் வாழ்கின்ற எங்கள் குல தெய்வமே
பதினாறு, பேறு செல்வம் தா.

## நவரத்தின ஜோதி

**சத்திய ஜோதி தெரியுதையா**
**நித்திய வாழ்வு மலருதையா**
**பழநி மலைதான் தெரியுதையா**
**பந்தபாச மெல்லாம் மறையுதையா**

சத்திய ஜோதி தெரியுதையா
நித்திய வாழ்வு மலருதையா
பழநி மலைதான் தெரியுதையா
பந்தபாச மெல்லாம் மறையுதையா

கார்த்திகை மாதம் விரதங்கொண்டேன்
காலையும் மாலையும் பூஜையிட்டேன்
தைத்திரு நாளில் மலை அடைந்தேன்
தைப்பூசத்தில் எனை மறந்தேன்!

வேலின் துணையோடு செல்கையிலே
வேதனை எல்லாம் நீங்குதையா
காவடி கூடப் போகையிலே
கவலைகள் எல்லாம் மறையுதையா

ஓரடி ஈரடியாய் நடந்தேன்
ஒவ்வொருவூராய் கடந்து வந்தேன்
காவடிதாங்கி நடந்து வந்தேன்
திருவடிகாண தேடி வந்தேன்

மாமலை ஏறிப் போகையிலே
மனதில் இன்பம் தோன்றுதையா
உப்பாற்று பாலத்தைக் கடக்கையிலே
உள்ள(ம்) எல்லாம் மகிழுதையா

செந்தூரா உன் வடிவழகை
செந்தமிழில் நான் பாடிவந்தேன்
ஊஞ்சலில் நீயும் ஆடயிலே
உள்ளம் உன்வசம் ஆகுதையா

இடும்பன் குளத்தைத் தாண்டையிலே
பக்தியும் எல்லையைத் தாண்டுதையா
கார்த்திகை குழந்தையைப் பார்க்கையிலே
சிந்தையில் சொர்க்கம் தோன்றுதையா

அறனுடைய நெற்றியினில் உதித்தவனே
அருளையும் பொருளையும் அருள்பவனே
தங்க ரதத்தில் வருபவனே
தந்தையும் தாயும் ஆனவனே!

*தேவகோட்டை அரு.மெய்யப்பன்*

## முருகையா

பாசி படர்ந்த மலை முருகையா
பங்குனித்தேர் ஓடும் மலை முருகையா
ஊசி படர்ந்த மலை முருகையா
உருத்திராக்ஷம் காய்க்கும் மலை முருகையா

மலைக்குள் மலை நடுவே முருகையா
மலையாள தேசமப்பா முருகையா
மலையாள தேசம் விட்டு முருகையா
மயிலேறி வருவாயிப்போ முருகையா

அந்த மலைக்குயர்ந்த மலை முருகையா
ஆகும் பழநி மலை முருகையா
எந்த மலையைக் கண்டு முருகையா
ஏறுவேன் சந்நிதி முன் முருகையா

ஏறாமல் மலை தனிலே முருகையா
ஏறி நின்று தத்தளிக்க முருகையா
பாராமல் கைகொடுப்பாய் முருகையா
பழநிமலை வேலவனே முருகையா

வேலெடுத்துக் கச்சை கட்டி முருகையா
விதவிதமாய் மயிலேறி முருகையா
கோலா கலத்துடனே முருகையா
குழந்தை வடிவேலவனே முருகையா

உச்சியில் சடையிருக்க முருகையா
உள்ளங்கை வேலிருக்க முருகையா
நெற்றியில் நீறிருக்க முருகையா
நித்தமய்யா சங்குநாதம் முருகையா

தேரப்பா தைப்பூசம் முருகையா
தேசத்தார் கொண்டாட முருகையா
இடும்பன் ஒரு புறமாம் முருகையா
இருபுறமும் காவடியாம் முருகையா

ஆற்காட்டு தேசத்திலே முருகையா
ஆறு லட்சம் காவடிகள் முருகையா
தென்னாட்டு சீமையிலே முருகையா
தேசமெங்கும் காவடிகள் முருகையா
கடம்ப வனங்கண்டு முருகையா

காட்சிதர வருவாயிப்போ முருகையா
பாவிநான் என்றுசொல்லி முருகையா
பாராம லிருக்கிறாயோ முருகையா
பழநி நான் வருகிறேனே முருகையா
பார்த்துவரம் தந்திடுவாய் முருகையா

## ரோஜாப்பூ மணக்குதென்று

ரோஜாப்பூ மணக்குதென்று ராஜாவுக்கு வாங்கிவந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

மல்லிகைப்பூ மணக்குதென்று மன்னனுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

சம்பங்கிப்பூ மணக்குதென்று
ஷண்முகனுக்கு வாங்கிவந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

பிச்சிப்பூ மணக்குதென்று பிள்ளைக்கு நான் வாங்கி வந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

முல்லைப்பூ மணக்குதென்று முருகனுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

தாமரைப்பூ மணக்குதென்று தங்கத்துக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

குறிஞ்சிப்பூ மணக்குதென்று குமரனுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

விபூதி மணக்குதென்று வேலனுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

சந்தனம் மணக்குதென்று ஷண்முகனுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

குங்குமம் மணக்குதென்று குமரனுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

பன்னீரும் சவ்வாதும் பாலனுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

சிங்கக்ச் சட்டை ஒன்று சீமானுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் இருக்கும் அழகினைத்தான்
என்ன சொல்வேன்

வைரக்கிரீடம் ஒன்று வள்ளலுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் ஜொலிக்கும் அதிசயத்தை
என்ன சொல்வேன்

மணக்கும் மலர்களெல்லாம் மன்னனுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் மணக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

இனிக்கும் பழங்களெல்லாம் இறைவனுக்கு வாங்கி வந்தேன்
அதைவிட அவன் இனிக்கும் அதிசயத்தை என்ன சொல்வேன்

*இசைத்தொண்டர் சுப.சுப.நாராயணன்*

## சிந்தை இரங்காதோ? சேதி வழங்காதோ?

சிறுவா புரியில் முருகா உனது
சிந்தை இரங்காதோ?-நல்ல
சேதி வழங்காதோ?-நீ
பெறுவாய் தமிழை! தருவாய் அருளை!
பேரம், சரியிலையோ?-எனது
பெருமான் நீஇலையோ?

வாய்பே சாத ஊமையும் உனது
வாசலில் பேசியதாம்!-கவிதை
வண்ணம் பாடியதாம்!-இந்தச்
சேய்பே சிவரும் பேச்சில் முருகா,
சிலையாய் ஆயினையோ?-ஊமைச்
செவிடாய்ப் போயினையோ?

வேலால் நடந்த கதைஉன் கதைஅது
விந்தை கதையாகும்!-உலகம்
வியந்து துதிபாடும்!-இன்று
காலால் நடந்த கதைஎன் கதைஅது
கண்ணீர்க் கதையாகும்!-உலகம்
கண்டு நகையாடும்!

எத்தனை எத்தனை தாயர் வயிற்றில்
ஏழை கிடந்தேனோ?- முருகா
இங்கு பிறந்தேனோ?-நான்
எத்தனை எத்தனை மாதர் சுகத்தில்
இதயம் களித்தேனோ?-இடர்
எய்தித் துடித்தேனோ?

## ஆதிமூல முருகா

ஆதிமூல முருகா, முருகா
ஆண்டியான முருகா
உன் துதிகள் பாடி வந்தேன்
எந்தன் குறைகள் தீர்க்க வருவாய்

உன் வேலும் ஆட வேண்டும், முருகா
மயிலும் ஆட வேண்டும்
நீயும் ஆட வேண்டும், முருகா
நானும் ஆட வேண்டும்.

என் தந்தை ஆக வேண்டும். நீயே
தாயும் ஆக வேண்டும்
உன் பிள்ளையாக வேண்டும், முருகா
உலகம் வாழ வேண்டும்.

## ஆறுமுகன் பேரில் ஆனந்தக் களிப்பு

ஆடுமயில் ஏறிவிளை யாடும் வேலவன்
ஆனந்தக் களிப்பிதனைச் சேவுகனும் பாட
ஆனைமுக நாயகனே காப்பு-என்றும்
அணிதமிழாய் வந்திடுவான் அடியேனைக் காத்து 1

பழகுதமிழ் தந்தவனாம் வேலன்-ஔவைப்
பாட்டிக்குக் கனிதந்து பாடவைத்த பாலன்
அழகுமிகு முகங்களோர் ஆறு-அதில்
அருள்சிந்தும் விழிகளோ-ஆறோடு ஆறு 2

அப்பச்சி ஆத்தாளும் சொன்ன-தேவ
யானையெனும் பெண்ணவளை மணந்தானாம் முன்னம்
ஒப்பில்லா நாரதனும் மெல்ல-வந்து
ஓவியமாய் வள்ளியெழில் என்றவனும் சொல்ல 3

ஆடுமயில் வாகனமும் ஓட-மன
அரங்கத்தில் வள்ளியம்மை மோகமிக ஆட
வேடமிட்டுத் தினைக்காடு சென்றான்-வேலன்

வேழமுகன் துணையோடு வள்ளி மணங்கொண்டான். 4

தெய்வானை தேவருட மாது-சண்டை
செய்யாத உளங்கொண்ட தெய்வீகச் சாது
நெய்வாசக் குழலாடும் வள்ளி-என்றும்
நேருக்கு நேர்நின்று வழக்காடுங் கள்ளி 5

தெய்வானை தாய்வீடு போக-வேலன்
தென்பரங் குன்றகன்று தணிகைமலை போக
கொய்யாத மலர்மேனி வள்ளி-எங்கள்
குமரேசன் வரவாலே மகிழ்ந்தாளே துள்ளி 6

இன்பமுடன் வேலவனைக் கொஞ்சி-நல்ல
இனியமொழி பலபேசி இழந்தாளே வஞ்சி
குன்றமரும் நாயகனும் நெகிழ்ந்து-வள்ளிக்
குறமகளே வேண்டுவது கேளென்றான் மகிழ்ந்து 7

இப்போது கேட்டாலே ஆச்சு இந்த
எழில்வேலன் பின்னாளில் மறப்பானிப் பேச்சு
இப்படியே வள்ளியவள் எண்ணி வேலன்
எழில்மார்பில் இருகரத்தால் மாய்மாலம் பண்ணி 8

எப்போதும் இங்கிருக்க வேணும்-நீரும்
என்னோடே இம்மலையிற் குடியிருக்க வேணும்
அப்பப்பப் பரங்குன்றம் போங்க-பாவம்
யானைதன் அணங்குமனக் கிலேசமது நீங்க 9

என்றவளும் வேலனிடம் சொல்ல-இதை
ஏன்கேட்டோம் என்றெண்ணி வேலவனும் மெல்ல
நன்றுநீ நவின்றமொழி மானே-நாட்டு
நடப்பையும் அனுசரித்து நடக்கோணும் நானே 10

பின்னாலே யோசிப்போம் வாடி-என்று
பிடித்தவனின் கைதட்டி வள்ளியவள் ஓடி
முன்னாலே வந்தவள் மீதில்-மோகம்
மிகக்கொண்டீர் என் பேச்சு ஏறுமோவுங் காதில் 11

நாடதனில் நடப்பதைக் கூறி முன்னம்
நவின்றமொழி மறப்பதென்ன ஞாயமது மாறி
காடதனிற் சொன்னமொழி என்ன-இன்று
கைப்பிடித்த பின்னாலே நடப்பதுவும் என்ன 12

சண்டைக்கு நான்போக மாட்டேன்-வந்த
சண்டையினைச் சத்தியமாய் நான்விடவும் மாட்டேன்

கண்சிவக்க ஆத்திரமும் ஏற-வள்ளி
கந்தனிடம் இவ்வாறு கத்திமிகக் கூற 13

ஓங்காரச் சக்திபெற்ற பாலன் உள்ளில்
உருவான கோபமொடு சொல்லுவான் வேலன்
ஆங்காரம் அதிகமாய்ப் போச்சோ-உன்னை
அடிக்காத நானுனக்கு இளக்கமாய்ப் போச்சோ 14

தினையோடு கிழங்கையே தின்று காட்டில்
திரிந்தகதை மறந்தாயோ வள்ளி நீ யின்று
உனை நானும் மணந்ததால் தானே-இன்று
உன்னையுமே என்னடியார் போற்றுகிறார் தாயாய் 15

கவண்வீசி நின்றதுவும் மாறி-இன்றே
கண்ணேநீ அமர்வதுவும் தங்கரதம் ஏறி
நவமணியும் பட்டாடை தந்து உன்னை
நன்றாக நடத்தினாலும் பொறுமுவதேன் வெந்து 16

மாமியார் ஏச்சுனக்கு இல்லை-நாத்தி
மாரென்று உனக்கிங்கே எவருமே இல்லை
ஓவியமே உண்மைகளை மறந்து-நீயும்
உளராதே உன்கீர்த்தி ஓடுமே பறந்து 17

கணவனையுந் திட்டாதே பெண்ணே-உந்தன்
கசடான குறப்புத்தி மாறலையா இன்னும்
உனக்கென்ன குறையிருக்கு வள்ளி நெஞ்சில்
ஊறுகிற ஆத்திரத்தை உதறிநீ தள்ளு 18

என்றெங்கள் வேலவனுங் கூற-வள்ளி
இருவிழியிற் கனலாடக் கோபமது சீற
என்னகுறை என்றவரே கேளும் நானும்
இயம்பிடுவேன் அதுகேட்டு ஆத்திரமே மூளும் 19

கானகத்தில் நின்றயெனைத் தேடி-அன்று
காவியுடைக் கிழவனாக வந்தீரே நாடி
தேனொத்த தினைமாவை வாங்கி-பின்னர்
தினைதந்த எனையுடைய மனதுமிக ஏங்கி 20

தாகமடி பெண்ணே என்றீர்-நீயுந்
தருவாயோ நானருந்த ஒருகுவளைத் தண்ணீர்
தண்ணீரைக் குடித்தபின் நீரும்-என்னைச்
சலியாமற் பார்த்ததுமேன் சண்முகரே கூறும் 21

மோகமடி உன்மீதில் என்றீர்-நீயும்

முறையாக எனைமணக்க வரவேணும் என்றீர்
வேழமது துரத்தவே தானே-அன்று
விதிவசத்தால் மாலையிடச் சம்மதித்தேன் நானே 22

குறச்சாதி என்றென்னை ஏசும்-உங்கள்
குலம்பற்றிச் சொல்வேனே கேளுமிப் போதும்
குறமகளும் இவ்வாறு மொழிந்து-வேலவன்
குலம்பற்றிக் கவிபாடத் துணிந்தாளே முனைந்து 23

கூத்தாடித் திரிபவனாம் தந்தை-சிவனுக்குக்
கூடெரியும் சுடுகாட்டின் மீதுதான் சிந்தை
ஆத்தாளோ மலைநாட்டுக் கூளி-அவளின்
அவதார வடிவமே ஆங்காரக் காளி 24

அம்மானாம் மாய்மாலக் கண்ணன்-குளிக்கும்
அணங்குகளின் சேலைகளைத் திருடுவதில் மன்னன்
அப்பாவிப் பிள்ளையார்உன் அண்ணன்-அவன்
அழகுக்குக் கிடைக்கலையோ எங்குமொரு பெண்ணும்25

யானைமுகன் வயசென்ன கூறும்-இன்னும்
அவனுக்கேன் மணமாக வில்லையெனக் கூறும்
பானைபோல் வயிறதுவுங் கொண்டு-ஆற்றுப்
படியமர்ந்து பெண்களையே பார்ப்பதுமேன் இன்னும் 26

உமக்குதவி செய்துமே அன்று-என்னை
உரிமையால் நீரடைய அருளியது கண்டு
நமக்குமே உதவுவார் என்றே-மக்கள்
நம்பியே துதிக்கிறார் அவரடியில் முன்னே 27

கைப்பிடித்த நாள்தொட்டு நீரும்-என்னுடன்
கடைகண்ணி எங்கேனும் வந்ததுண்டோ கூறும்
வைவார்கள் சுற்றத்தார் என்றே-நாளும்
தெய்வானை யோடுநீர் சுற்றுவதும் என்ன? 28

வீட்டுக்குப் பயந்தவர் என்றால் என்னை
வேலவரே நீரெதற்கு மணந்தீரோ அன்று
காட்டுக்கே போவோமே வாங்க-குறவர்
கலையாத அன்போடு நமையாதரிப் பாங்க 29

இளையவனின் மனம்நோகச் செய்த-கணவர்
இருந்ததாய்க் கதைகூட இல்லையே ஐயா
விளையாட்டுப் பிள்ளையா நீரும்-வெற்றி
வேலவரே இங்கிருந்து எனக்கின்பந் தாரும் 30

பெரியவளைத் தேடிநீர் போக-நானும்
பேதையல்ல உமையனுப்பி வைக்க இசை வாக
பெரியவளாம் தெய்வானை இனிப்போ-வள்ளிப்
பெண்யானும் இனிப்பின்றிப் போனவளோ கசப்போ 31

மூத்தாளின் பேரில்நீர் மோகம்-என்றும்
மிகக்கொண்டு திரிந்தாலே எனக்குவருங் கோபம்
காத்திருக்கேன் காதலுடன் நானும்-என்னைக்
கண்டாலே நீரொதுங்கிப் போவதுமேங் காணும் 32

என்றுகுற வள்ளிபல வாக-ஏசி
இயம்பிடக் கேட்டுமே வேலர்விரை வாக
தன்முதுகு தெரியாது தனக்கு-வள்ளி
சற்றமைதி கொண்டாலே புரியுமடி உனக்கு 33

புனையாத ஓவியமே மானே-உன்னைப்
புகழ்ந்தாலே எந்நாவில் ஊறுஞ்செந் தேனே
நினையாத நேரமில்லை உன்னை-உனக்கு
நிகரில்லை எவருமே பொய்யில்லை உண்மை 34

தைமாதத் திருநாளிற் பூசம்-நம்ம
தமிழ்ச்செட்டி நகரத்தார் நடைபயிலும் மாசம்
மெய்யான பக்தியோடு என்னை-நாளும்
வேண்டியே பழநிக்கு வருவாரே ஒன்றாய் 35

கூட்டமாய் நடந்துவாரார் இன்று-நெஞ்சில்
குறையாத பக்தியது என்மீதிற் கொண்டு
நாட்டமுடன் நகரத்தார்கூடி-குன்றை
நகரிருந்து வாராரே தென்பழநி ஓடி 36

குன்றக் குடியிருந்து தொடங்கி - வேலைக்
கும்பிட்டு பக்தியொடு நீரணிந்து நடந்து
இன்றமிழ்க் கவிதையாற் பாடி - என்னை
இசையென்னும் மலராலே எழிலாகச் சூடி 37

எங்ககுறை தீர்த்திடவே வேணும் - நாட்டில்
எல்லோரும் நலமோடு வாழ்ந்திடவே வேணும்
தங்கரதம் ஏறிவர வேணும் - எங்கள்
சங்கடங்கள் தீர்ந்திட அருள்புரிய வேணும் 38

என்றபெருங் குரலதுவும் வள்ளி - உந்தன்
எழிலான செவியதனிற் கேட்கலையோ துள்ளி

நன்றுநான் போய்வாரேன் முன்னே - நம்ம
தெய்வானை யோடு நீ வரவேணும் பின்னே 39

போய்வாரேன் விடைதாடி கண்ணே - வள்ளி
போகுமுன் சிரிக்கோணும் சித்திரமே பொன்னே
வாய்மலரச் சிரிக்கோணும் வள்ளி - என்று
வடிவேலன் கொஞ்சவே பூத்தாளே துள்ளி 40

பிள்ளையது கதறுவது கண்டு - ஏதும்
பேசாமல் இருக்கின்ற தாயெங்கும் உண்டோ
வள்ளிநான் மனைவிதான் உமக்கு - ஆனால்
வருகின்ற பக்தரெலாம் பிள்ளைகளாம் எனக்கு 41

ஆய்மயில் மீதேறி இன்றே - சுவாமி
அடியாரைக் காத்தருள விரைவீரே நன்றே
போய்வாரும் வேலவரே என்று - வள்ளி
புன்முறுவல் பூத்ததால் வேலனுமே நன்று 42

போய்வாரேன் என்னழகு வள்ளி - என்று
பொன்மயில் மீதேறி அமர்ந்தானே துள்ளி
சேய்தேடி வருகின்ற குன்று - அது
திருவாவினன் குடியெனும் பழநி மலைக் குன்று 43

கோவணத்தில் நிற்கின்ற ஆண்டி - அவனைக்
குறையாத பக்தியொடு மனத்தாலே வேண்டி
காவடிகள் ஆடிவரும் கோடி - மக்கள்
கால்நடையாய் வந்திடுவார் கந்தனையே பாடி 44

நடந்துவரும் அடியவர்கள் துன்பம் - தீர்த்து
நலமோடு தருவானே குமரேசன் இன்பம்
நல்லமலை பழநிமலை நின்று - எங்கும்
நலம்பூக்கச் செய்வானாம் வேலனென் றென்றும் 45

நகரத்தார் பலகாலம் வாழி - என்றும்
நம்மகதிர் வேலவனின் அருளோடு வாழி
அகவுமயில் வாகனமும் வாழி எங்கள்
ஆறுமுகன் தெய்வானை வள்ளியுமே வாழி 46

சேவலுடன் மயிலுமே வாழி - எங்கள்
செவ்வேளின் கைவேலும் சிறந்துமே வாழி
சேவுகஞ் செட்டியான் சொன்ன - இந்தச்
செந்தமிழின் கவியதுவும் எந்நாளும் வாழி! 47

*மீ. சேவுகன் செட்டி*

# நன்மையில் முடிந்த கலகம் –

(ஆனந்த களிப்பு மெட்டு)

**நாதந்த நாதந்த நாநா, தந்த நாதந்த நாதந்த நாதந்த நாநா**

சிவனுக்கு அழகான குடும்பம் - பெற்றோர்க்கும்
பிள்ளைகளுக்கும் எப்பொழுதும் இன்பம்.

நாரதரும் ஓர்நாளில் வந்தார் - கூடவே
ஒற்றைப்பழத்தையும் கொண்டிங்கு தந்தார்.

நலம் தரும் பழமிது என்றார் - இதனால்
பற்பல நன்மைகள் வரும்தானே என்றார்.

சிவனுமே மகிழ்ச்சியிலே திளைத்தார் - நம்
குடும்பத்திற்கு இதனால் நன்மையென்று நினைத்தார்.

அய்யாவே கொஞ்சம் பொறுங்கள் - நான்
சொல்வதை முழுதாக இப்பவே கேளுங்கள்.

ஒற்றைப்பழமிது என்றார் - இதை
ஒருவரே உண்பது முறையென்று சொன்னார்.

சிவன் மனதில் வந்ததே குழப்பம் - இரண்டு
பிள்ளைகளில் யாருக்கு யாரிங்கே இளப்பம்.

நாரதர் வந்தாலே கலகம் - நம்ம
குடும்பத்துக்கு வந்ததே சோதனைக்காலம்.

பிள்ளைகளுக்குப் போட்டியை வைப்போம் - இதில்
எவர் வென்று வருகிறார் என்றுதான் பார்ப்போம்.

உலகத்தை மூன்று முறை சுற்றி - யாரிங்கு
வருவாரோ அவருக்குத்தான் வெற்றி.

முருகனும் மயில் மீதில் ஏறி - உலகத்தைச்
சுற்றி வர சென்றாரே தாவி.

அப்பாவி பிள்ளையார் முழித்தார் - எலிமீதில்
ஏறியே நகர்வதற்கு முயன்றார்.

எலியுமே நகருவதாய்க்காணோம் - எப்படித்தான்
போட்டியிலே வெற்றி பெறப்போறோம்.
தாய்தந்தை தானே என் உலகம் - அவர்களைச்
சுற்றி நான் வந்தாலே போதும்.

சிவனுமே உளமகிழ்ந்து போனார் - பிரியமுடன்
பிள்ளயாருக்குப் பழத்தையும் தந்தார்.

பிள்ளையார் போட்டியிலே வென்றார் - மகிழ்வாகப்
பழத்தையும் உண்டுதான் களித்தார்.

முருகனும் திரும்பியே வந்தார் - நடந்ததைக்
கேட்டு கோபம் மிகக் கொண்டார்.

இப்பக்ச் செய்வதா நியாயம் - முருகன்
நெஞ்சிலே நேர்ந்ததே மாறாத காயம்.

இளையவன் என்பதால் தானே - இப்படிச்
செய்தீரே எல்லோரும் என்னை.

தாய்தந்தை அண்ணனையும் மறந்தான் - உறவென்று
உள்ளவர் அனைவரையும் துறந்தான்.

பூண்டான் ஆண்டியின் கோலம் - அவன்
பழநி மலை தேடி சென்றது வேகம்.

அன்றுமுதல் இன்றுவரை முருகா - பக்தருக்கு
வேண்டும்வரம் தருபவன் நீதானே மருகா.

கலகமும் நன்மையிலே முடிந்து - நாம்
படிப்பதற்கு நல்ல பாடங்கள் தந்து.

அதனாலே பிள்ளைகளே கேளும் - தாய் தந்தை
போற்றினால் வெற்றியே சேரும்.

*அழகு சுந்தரம், நாச்சியாபுரம், 2009*



# வண்ண மயிலேறி வருக

**வேல் வேல் வேல் வேல் வேல் வேல் வேல்**

ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுக வேலா
அன்னைசிவ காமிபெற்ற சக்திஉமை பாலா
அன்புமயி லேறிநீயும் என்று வருவாயோ

பாடுமடி யார்மொழியில் பாசமிகு பாலா
பண்ணெடுத்து மாலையிட்டு பாடுகின்றோம் வாவா
பச்சைமயி லேறிநீயும் என்றுவரு வாயோ

மாடமனை மாநிதியும் வேண்டுவதும் இல்லை
மன்னவனே நீசிரித்தால் வாழ்விலேது தொல்லை
மாமயிலின் மீதிலேறி என்று வருவாயோ

மாறுபடு வாழ்வுஎன்னை மாற்றுவதேன் சீலா
மந்தமதி மாயைநீக்கும் மாப்பழநி வேலா
புள்ளிமயி லேறி நீயும் என்றுவரு வாயோ

மாமயிலின் மீதமர்ந்து மா நிலத்தைக் காக்க
மன்னவனே வந்தருள்வாய் தொல்லைகளைப் போக்க
வள்ளிதெய்வ யானையுடன் என்றுவரு வாயோ

வீரவேலை நீயெடுத்து வீசிவிளை யாடு
விண்ணவரைக் காத்தது போல் தூயஅன்பி னோடு
வண்ணமயி லேறிநீயும் என்றுவரு வாயோ

# பினாங்குத் தண்ணீர் மலையான்

**வேல் வேல் முருகா – வேல் வேல் முருகா**
**வேல் வேல் முருகா – வேலையா**

செந்தமிழ் நாட்டுப் பக்தர் காணத்
தென் பழனிப்பதி தைப்பூசம்
சந்தத் தமிழர் சீனர் காணத்
தண்ணீர் மலையில் தைப்பூசம்!
கந்தா என்றே செந்தூர்த் தமிழர்
காவடி ஏந்தி ஆடுகிறார்
சந்தத் தோடும் மலேயர் சீனர்
தண்ணீர் மலையில் ஆடுகிறார்! 1

பாடப் பாடப் பாட்டுக் குள்ளே
பரமன் வந்தே ஆடுகிறான்
ஆடும் அடியார் காலில் கொஞ்ச
அவனே சதங்கை ஆகின்றான்

கூடும் கூட்டம் கடலைப் போலே
குமரன் தன்னைத் தொழுகிறது
கொஞ்சும் முருகன் கருணை கேட்டுக்
குழந்தை நெஞ்சம் அழுகிறது! 2

அன்னை தந்தை நம்துணையல்ல
அவனே என்றும் துணையாவான்
கன்னித் தமிழில் பாடப் பாடக்
கந்தன் கருணைக் கடலானான்
தன்னைப் பாடும் அடியார்க் காகத்
தண்ணீர் மலையான் நிற்கின்றான்
மன்னும் பழனி செந்தூர்க் காட்சி
மலேயர் காணத் தருகின்றான்! 3

நாட்டில் கண்டு தண்ணீர் மலையான்
நயத்தை உரைத்தோர் பேரவையில்
பாட்டில் மட்டும் தண்ணீர் மலையைப்
பார்த்தேன் வந்து பாடுகிறேன்
ஆட்டம் எல்லாம் அடங்கும் முன்னால்
அவனைக் காணத் தருவானோ?
பாட்டுக் குள்ளே வண்ணத் தமிழில்
பார்த்தது போதும் என்பானோ? 4

இந்தப் பிறவி காணா விட்டால்
இனியொரு பிறவி எடுத்திடுவேன்
வந்து பிறந்து நேரில் தண்ணீர்
மலையான் தன்னைத் தரிசிப்பேன்
அந்தப் பிறவி கிட்டா விட்டால்
அடுத்த பிறவி பெற்றிடுவேன்
வெந்தே போனால் அதன்பின் கூட
வேலன் தன்னை விடமாட்டேன்! 5

தண்ணீர் மலையில் ஆண்ட வனே
தமிழில் உன்னைப் பாடுகிறோம்
கண்ணீர் தன்னை அற மாற்றிக்
கழலில் சேர்க்க வேண்டுகிறோம்
மண்ணில் இன்று பல துன்பம்
வருத்த நாங்கள் வாடுகிறோம்
எண்ணத் துள்ளே நீ வந்தே
எம்மைக் காக்க வேண்டுகிறோம்! 6

*பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ.சுந்தரம்*

# குமரனுடைய வேலு இது

குன்றுதோர் ஆடிவரும் குமரனுடைய வேலுஇது
கூடிவரும் பக்தர்களின் குறைதீர்க்கும் வேலுஇது
குன்றுதோர் ஆடிவரும் குமரனுடைய வேலுஇது
கூடிவரும் பக்தர்களின் குறைதீர்க்கும் வேலுஇது

மயூர வாகனனின் மரகத வேலுஇது
மருதமலை ஆண்டவனின் மகத்தான வேலுஇது
கார்போலப் பொழிகின்ற கார்த்திகேயன் வேலுஇது
கூறும் அடியார்கள் வினைதீர்க்கவரும் வேலுஇது

சங்கடங்கள் தீர்க்கவரும் சண்முகனின் வேலுஇது
தண்டனைகள் அகற்றிவிடும் தண்டபாணி வேலுஇது
குன்றக் குடிதனிலே குடியிருக்கும் வேலுஇது
மன்றம் விளங்கவரும் மன்னனுட வேலுஇது

பழநிமலை நோக்கிப் பறந்துவரும் வேலுஇது
கழநியிலே நிற்போரின் கண்துடைக்கும் வேலுஇது
ஊஞ்சலிலே ஆடிவரும் ஓம்கார வேலுஇது
மாஞ்சோலை வாழுகின்ற மன்னனுட வேலுஇது

அடையாளம் காட்டிநிற்கும் அழகான வேலுஇது
கடையாணி இல்லாமல் கரைசேர்க்கும் வேலுஇது
வையாபுரியோரம் வந்துநிற்கும் வேலுஇது
வாழ்வாங்கு வாழ வைக்கும் வடிவேலன் வேலுஇது

எட்டுக்குடி நகர்க்கு எழுந்தருளும் வேலுஇது
கட்டிவரும் காவடியில் காட்சிதரும் வேலுஇது
சிக்கல் நகர்தனிலே சிரித்துவாழும் வேலுஇது
எக்கலைக்கும் மன்னனான நம்தலைவன் வேலுஇது

அண்டிவந்த பேருக்கெல்லாம் அபயமளிக்கும் வேலுஇது
கண்டி கதிர்காமத்தோன் கனிவான வேலுஇது.(குன்றுதோர்)

*கும. கரு. ராம. சொக்கலிங்கம் செட்டியார்*

# மலரில் பிறந்து மலரில் வளர்ந்தவன்

**மலரில் பிறந்து மலரில் வளர்ந்தவன் மன்னவன் முருகனடி**
**அவன் மலர்முகம் கண்ட திருநாளாக**
**மனமே உருகுதடி – என் மனமே உருகுதடி**

மலரில் பிறந்து மலரில் வளர்ந்தவன்
மன்னவன் முருகனடி
அவன் மலர்முகம் கண்ட திருநாளாக
மனமே உருகுதடி – என் மனமே உருகுதடி

கார்த்திகை மைந்தன் களித்துத் தவழ்ந்து
கமல மலரினிலே - தன்
மடியில் முருகன் தவழ்ந்ததினாலே
மலருக்குப் பெருமையடி - தாமரை
மலருக்குப் பெருமையடி. (மலரில்)

காந்தமாய் நம்மை கவர்ந்திடும் கண்கள்
கந்தன் மலர்களடி
நம்மை காக்கும் முருகன் கைகள் வாடா
கமலமலர்களடி - வாடா
கமலமலர்களடி. (மலரில்)

பன்னிரண் டாண்டுக்கு ஒருமுறை மலரும்
பாரில் குறிஞ்சிமலர்
அந்தப் பன்னிருகையன் முருகன் என்பதை
பகரும் அழகுமலர் - கைகள்
பகரும் அழகுமலர். (மலரில்)

பூத்தநல் மலரில் அழகிய மலர்போல்
புனிதன் அவன் சிரிப்பு - அந்தப்
புவனத்தை எல்லாம் இழுக்கும் அதுவே
அன்பின்வலை விரிப்பு - அதுவே
அன்பின்வலை விரிப்பு. (மலரில்)

பலமலரில் ஒன்றாய் மலர்ந்தது போலப்
பரமன் மகன் அழகு - அவன்
பாதமலரின் பக்த மலர்தனைப்
படைத்திட தினம் பழகு - நீ
படைத்திட தினம் பழகு. (மலரில்)

# வேதனை தீர்ப்பாய் வேலவனே

### அன்பு மனக் கோயிலிலே அய்யா உன்னை நானும் வைத்தேன்
### ஆறுமுக வேலவனே அருள்தரவே வந்திடுவாய் !

எத்தனையோ பிறவி பெற்று இன்னல் மிக நானும் பெற்றேன்
இன்னலின்றி வாழ்வுதர இதுதருணம் வந்திடுவாய் !
நீயிருக்குமிடம் தேடி நானும் வரத் தெரியவில்லை
நீலமயில் மீதமர்ந்து நீயுமிங்கே வந்திடுவாய் !

பாராளும் உந்தனுக்கு நானும் ஒரு பாரமில்லை
பார்வதியின் திருக்குமரா பாலன் எனைக் காத்திடுவாய் !
பால் குடத்தைப் பார்த்தவர்கள் பாவமெல்லாம் பறந்தோடும்
பழனிச்சாமி உன்னைத் தொழும் பக்தர்களின் மனம் குளிரும்.

காவடியைக் கண்டவர்கள் கண்களிலே நீர்பெருகும்
கந்தா உன் திருப்புகழில் காலமெல்லாம் வாழுகின்றோம்
வேதப் பொருள் உரைத்தவனே வேழ முகன் சோதரனே
வேகமுடன் நீயும் வந்து பாலனெனைக் காத்திடுவாய்.

*தேவகோட்டை லெ.சோமு.*

# சிங்கைமுருகா வருவாய் இதுசமயம்

அன்புமனம் கொண்டவனே ஆனைமுகன் சோதரனே
இன்னல்கள் களைகின்ற ஈடில்லா பெருமானே!
உளமாறப் பாடுகின்றேன் ஊரெல்லாம் மெச்சிடவே
எங்குலநாயகனே அருள்தரவே வந்திடுவாய்!

காவடிகள் ஏற்பவனே கருணையுள்ளம் கொண்டவனே
கடல்கடந்து வந்தோரைக் காலமெல்லாம் காப்பவனே
கவிபாடி மகிழ்கின்றேன் கவலையெல்லாம் தீர்த்திடவே
கந்தவடிவேலவனே கனப்பொழுதில் வந்திடுவாய்!

பார்வதியின் பாலகனே பரமசிவன் புத்திரனே
பாவமெல்லாம் தீர்க்கின்ற பன்னிருகை வேலவனே
பண்ணிசைத்துப் பாடுகின்றேன் பாலனெனக்கு அருளிடவே
பாராளும்நாயகனே பறந்து வந்திடுவாய்!

தங்கத்தேரில் வருபவனே தாயான மன்னவனே
தரணியெல்லாம் காக்கின்ற தென்பழனி ஆண்டவனே
தாளமிட்டுஅழைக்கின்றேன் தாழ்வகற்றிகாத்திடவே
தாமதமேதுமின்றி இதுதருணம் வந்திடுவாய்!

வேலுருவாய் இருப்பவனே வேதனைகள் தீர்ப்பவனே
வேண்டும் வரம்தருகின்ற வள்ளல்குணம்படைத்தவனே
வேகத்துடன்கவியுரைத்தேன் விழிநீரைத் துடைப்பதற்கே
வண்ணமயிலேறி விரைந்து வந்திடுவாய்!

சிங்கையில் வாழ்பவனே சிங்கார வேலவனே
செல்வநலம் தந்துவிடும் சிவன்மகனே சண்முகனே
சந்தத்திலே உனைவைத்தேன் சங்கடங்கள் நீக்கிடவே
சிங்கைமுருகா நீயுமிங்கே வந்திடுவாய்!

*அழகு திருநாவிற்கரசு.*

## பழனிமலை மேலே

**பழனிமலை மேலே, ஓர் அழகுச் சித்திரம் !**
**பாடப்பாட நெஞ்சத்திலே பரவ சம்வரும் !**

பழனிமலை மேலே, ஓர் அழகுச் சித்திரம் !
பாடப்பாட செஞ்சத்திலே பரவ சம்வரும் !
குழந்தையாகக் காட்சி தரும்கனிந்த தத்துவம் !
கொள்ளைகொள்ளை யாய்வழங்கும் அன்புப் பெட்டகம் !

தாயுமுண்டு; தந்தையுண்டு; கோபம் என்னவோ ?
சம்சாரம் இருவருண்டு; தாபம் என்னவோ ?
தேசம் எங்கும் செல்வமுண்டு; பிள்ளைகள் உண்டு,
சிவனாண்டி ஆனதென்ன கூறுக இன்று !

பட்டாடை எங்களுக்குப் பலப்பல தந்தாய் !
பகவானே ஒரு முழத்தில் கோவணம் கொண்டாய் !
கட்டான கனதனங்கள் வாகனம் இருக்க,
கந்தா, நீ திருநீற்றுக் காப்பொடு நின்றாய் !

சக்திவேல் விடுத்த சூரசம்ஹார மூர்த்தி,
தண்டாயுதம் எடுத்ததிலே என்னய்யா கீர்த்தி ?
அத்தனையும் துறந்தவர்க்கே ஆனந்தம் என்றே
ஆண்டியாக நின்றாயோ, அய்யனே இங்கே !

உலகமெல்லாம் புகழுகின்ற உன்னெழில் தோற்றம் !
ஓத ஓத வாழ்க்கையிலே உண்டாகும் ஏற்றம் !
அலைபாயும் பேதைமனம் உன்னிடம் தஞ்சம் !
அதிலே நீ விளையாடுதினம் தினம் கொஞ்சம் !

அய்யா, நீ மெய்யான ஆனந்தத் துறவி !
அடியேனோ ஊஞ்சலாடும் ஆசையின் பிறவி !
தெய்வ ஞான முனிவர்க்கு நீ தேனோடும் அருவி !
சிதறும் துளியில் ஆடட்டுமே
சின்னஞ்சிறு குருவி - இந்தச் சின்னஞ்சிறு குருவி !

*அருட்கவி கு.செ.இராமசாமி.*

## முத்தான முத்துக்குமரா

**முத்தான முத்துக் குமரா முருகையா வா வா**
**சித்தாடும் செல்வக்குமரா சிந்தை மகிழ வா வா**

முத்தான முத்துக் குமரா
முருகையா வா வா
சித்தாடும் செல்வக்குமரா
சிந்தை மகிழ வா வா

வள்ளி மணாளா வடிவேலழகா
வேலய்யா வா வா
கந்தா கடம்பா கதிர் வடிவேலா
கந்தையா வா வா

நீ ஆடும் அழகைக் கண்டு
வேலாடி வருகுதைய்யா
வேலாடும் அழகைக் கண்டு
மயிலாடி வருகுதய்யா

மயிலாடும் அழகைக் கண்டு
மனமாடி வருகுதையா
மனமாடும் அழகைக் கண்டு
மக்கள் கூட்டம் பெருகுதையா

பன்னீரால் குளிக்க வைத்து
பட்டாடை உடுக்க வைத்து
சந்தனத்தால் சாந்தெடுத்து
அங்கமெல்லாம் பூசி வைத்து

நீறுப் பூசி திலகம் இட்டு
நெஞ்சத்தில் உன்னை வைத்து
இன்று பூத்த மலரால் உன்னை
அர்ச்சிப்பேன் வருவாயப்பா

# அரகரோகரா

**அரகரோகரா சுவாமி அரகரோகரா**
**அரகரோகரா சுவாமி அரகரோகரா**

அரகரோகரா சுவாமி அரகரோகரா
அரகரோகரா சுவாமி அரகரோகரா
பழனிமலை ஆண்டவரே அரகரோகரா
பால சுப்ரமண்யனே அரகரோகரா
குன்றக் குடி குமரனே அரகரோகரா
குமர குரு பரனே அரகரோகரா

ஆறுமுக வேலவனே அரகரோகரா
ஆறுபடை வீடுடையாய் அரகரோகரா
எட்டுக்குடி வேலவனே அரகரோகரா
ஏறுமயில் வாகனனே அரகரோகரா
மருதமலை ஆண்டவரே அரகரோகரா
மலையாண்டி சாமியே அரகரோகரா

திருச்செந்தூர் முருகனுக்கு அரகரோகரா
திருப் பரங்குன்றனுக்கு அரகரோகரா
பச்சை மயில் வாகனனே அரகரோகரா
பழமுதிர்ச் சோலையோனே அரகரோகரா
சுவாமி மலை நாதனே அரகரோகரா
விராலி மலை வேலனே அரகரோகரா

சக்தி வடிவேலனுக்கு அரகரோகரா
சண்முக நாதனுக்கு அரகரோகரா
சோலை மலை கிழவனுக்கு அரகரோகரா
சொகுசுகார முருகனுக்கு அரகரோகரா
வேலெடுத்த வேந்தனுக்கு அரகரோகரா
விளங்கு வள்ளி காந்தனுக்கு அரகரோகரா

கதிர்காம வேலனுக்கு அரகரோகரா
காருண்ய மூர்த்திக்கு அரகரோகரா
திருத்தணி வேலனுக்கு அரகரோகரா
வள்ளி மணாளனுக்கு அரகரோகரா
தண்ணீர் மலை செம்மலுக்கு அரகரோகரா
பன்னிருகை வேலனுக்கு அரகரோகரா

தகப்பன் சுவாமி ஆனவனே அரகரோகரா
தந்தை தாயும் நீதானப்பா அரகரோகரா
சக்தி உமை பாலனுக்கு அரகரோகரா

சத்தியமாம் வேலனுக்கு அரகரோகரா
பாலேடுக்கு நெஞ்சனுக்கு அரகரோகரா
பார்புகழும் மன்னனுக்குக் அரகரோகரா

## தங்கமுத்துப் பழனியப்பன்

**சிங்கார சிங்கையிலே சீமானாம் பழனியப்பன்**
**செட்டியார்கள் கொண்டு வந்த செல்வ முத்துப் பழனியப்பன்**

சிங்கார சிங்கையிலே
சீமானாம் பழனியப்பன்
செட்டியார்கள் கொண்டு வந்த
செல்வ முத்துப் பழனியப்பன்

தைப்பூசம் கண்டு வரும்
தங்க முத்துப் பழனியப்பன்
தரணியெல்லாம் புகழ் மணக்கும்
தனிகைமலை வாசனவன்

மாரியம்மன் பூசையுடன்
மாமனின் துணை கொண்டு
மக்களெல்லாம் தூக்கிடுவார்
மயில் தோகைக் காவடிகள்

நவரத்தின நகையணிந்து
நவராத்திரி திருநாளில்
நவரசமாய் காட்சி தரும்
நல்ல முத்துப் பழனியப்பன்

கப்பலிலே பயணம் செய்து
கடல் கடந்து இங்கு வந்து
கந்தனாய் அருள் கொடுக்கும்
கட்டிமுத்துப் பழனியப்பன்

வெள்ளிரதம் விரைந்துவர
வேலுமே தொடரந்து வர
விதவிதமாய்க் காவடிகள்
வேகமாய் வருகுதப்பா

பாற்குடங்கள் ஆயிரமாம்
பரவசமாய் பொங்கி வர
காவடிகள் கோடியம்மா
கண்கொள்ளா காட்சியம்மா

மீனட்சி அருகிருக்க
சோமனுமே துணையிருக்க
இடுமபனுமே அடுத்திருக்க - எடுப்பாகக்
காட்சிதரும் செல்வமுத்து பழனியப்பன்

கந்தனவன் அருளவேண்டி
கவலையுடன் வருவோர்க்குத்
தண்டுடனே அருள் கொடுக்கும்
தெண்டபாணி தெய்வமப்பா

டாங்ரோடு கோயிலையே
நாடிவரும் பக்தருக்கு
நலம் அனைத்தும் நல்கிடுவான்
நல்ல முத்துப் பழனியப்பன்.

## நாள் தோறும் வா முருகா வா!

### வா முருகா வா முருகா வா முருகா வா வா

வெள்ளிக்கிழமை பூஜையிலே வா முருகா வா! உனக்கு,
வெள்ளிரதம் வாங்கித்தாரேன் வா முருகா வா!

சனிக்கிழமை பூஜையிலே வா முருகா வா!உனக்குச்
சந்தனத்தால் அபிஷேகம் வா முருகா வா!

ஞாயிற்றுக்கிழமை பூஜையிலே வா முருகா வா! உனக்கு,
ஞானப்பழம் வாங்கித்தாரேன் வா முருகா வா!

திங்கட்கிழமை பூஜையிலே வா முருகா வா!உனக்குத்
திருநீறால் அபிஷேகம் வா முருகா வா!

செவ்வாய்க்கிழமை பூஜையிலே வா முருகா வா! உனக்குச்
சேவலும் மயிலும் வாங்கித்தாரேன் வா முருகா வா!

புதன்கிழமை பூஜையிலே வா முருகா வா! உனக்குப்
புஷ்பத்தால் அலங்காரம் வா முருகா வா!

வியாழக்கிழமை பூஜையிலே வா முருகா வா! உனக்கு,
வேண்டியதை வாங்கித்தாரேன் வா முருகா வா!

*வி.ஆர்.பழனியப்பன்*

# தென்பழனி ஆண்டவன்.

**தென்பழனி ஆண்டவனைத் தேடிவந்தோமே - எங்கள்**
**கண்மணியாம் ஆண்டவனைக் கண்டுகொண்டோமே**
**தென்பழனி ஆண்டவனைத் தேடிவந்தோமே - எங்கள்**
**கண்மணியாம் ஆண்டவனைக் கண்டுகொண்டோமே**

தென்பழனி ஆண்டவனைத் தேடிவந்தோமே - எங்கள்
கண்மணியாம் ஆண்டவனைக் கண்டுகொண்டோமே
தென்பழனி ஆண்டவனைத் தேடிவந்தோமே - எங்கள்
கண்மணியாம் ஆண்டவனைக் கண்டுகொண்டோமே

செட்டிநாட்டு காவடிகள் செலுத்தவந்தோமே - எங்கள்
பட்டி தொட்டி அத்தனையும் படைத்து வந்தோமே
கட்டி வந்த காளை அரோகரா சொல்லுதே - அந்த
மாட்டு வண்டி சிவா சிவா சொல்லுதே.

படுத்திருக்க கொண்டு வந்த சாக்கு பாடுதே - எங்கள்
பழனி மலை ஆண்டவனின் நோக்கு நாடுதே
உடுத்தி வந்த ஒற்றை ஆடை ஓங்கரிக்குதே - எங்கள்
உச்சி முதல் பாதம் வரை உயிர் களிக்குதே

அன்னதான மடத்தினில் ஐயாயிரம் பேரே - எங்கள்
அய்யா கண்டனூருசாமி அருள் முகம் பாரே
வண்ண வண்ணக் காவடிகள் வரிசைகள் பாரே -இங்கே
வடித்துப் போடும் அன்னதான பூஜைகள் பாரே.

செட்டி முருகப்பன் முகம் ஜொலிக்குது பாரே - இங்கே
செட்டுச் செட்டாய் வந்து மனம் களிக்குது பாரே
அட்டியில்லை ஆறுகாலு சவுக்கையின் மேலே - எங்கள்
ஆறுமுக வேலவனின் ஆட்டத்தினாலே

மேள தாள நாதசுரம் மேல் முழக்கமே - சுற்றி
மேவி உள்ளோர் அரோகரா கீழ் முழக்கமே
தாளமோடு ஆடுகின்ற சாமியாட்டமே - எங்கள்
தமிழ் முருகன் நாமத்திலே பாடும் கூட்டமே

வரம் கொடுக்கும் சாமி காலில் வந்து விழுகிறார் - இந்த
வையாபுரி நாதனடி வந்து தொழுகிறார்
கரங்களிலே நீறுபெற்று பலம் விளைகிறார் - இந்தக்
கழனி கொஞ்சும் பழனி மலைக்கு குலம் தழைக்கிறார்

# பரம்பொருளாய் ஆனவனே

**அரோகரா அரோகரா அரகரோகரா**
**அரோகரா அரோகரா அரகரோகரா**

எங்கும் நிறைந்தவனே அரகரோகரா.
பரம்பொருளாய் ஆனவனே அரகரோகரா.
பார்வதியின் மைந்தனே அரகரோகரா.
பரமசிவன் புத்திரனே அரகரோகரா.

ஒருகை முகன் தம்பியே அரகரோகரா.
ஓம்கார நாயகனே அரகரோகரா.
வள்ளி மணாளனே அரகரோகரா.
தெய்வானையை மணம் புரிந்தவனே அரகரோகரா.

பழனி மலை ஆண்டவனே அரகரோகரா
பாவங்களை ஓட்டிடுவாய் அரகரோகரா
குன்றகுடியில் இருப்பவனே அரகரோகரா
குறைகள் எல்லாம் தீர்த்துவைப்பாய் அரகரோகரா

சிங்கையில் வீற்றிருப்பவனே அரகரோகரா.
செல்வ நலம் தருபவனே அரகரோகரா.
ஆறுபடை வீட்டோனே அரகரோகரா.
ஆறுதலை அளித்துடுவாய் அரகரோகரா.

காவடிகள் ஏந்திவாரோம் அரகரோகரா.
கவலைகளைத் தீர்த்துவைப்பாய் அரகரோகரா.
பண்ணிசைத்து பாடிவறோம் அரகரோகரா
பெண்டுபிள்ளைகளைக் காத்திடுவாய் அரகரோகரா

அங்கே பாரு இங்கே பாரு அரகரோகரா.
முன்னே பாரு பின்னே பாரு அரகரோகரா.
எங்கே பார்த்தாளும் உந்தன் திருப்புகழையே
பாடி வாரோம் அரகரோகரா.

*அழகு திருநாவிற்கரசு, நாச்சியாபுரம்*

# சிங்கப்பூர் தண்டபாணி வருகவே

**சிங்கப்பூர் தண்டபாணி வருகவே - எங்கள்**
**சிந்தை என்ற கோயிலுக்குள் வருகவே**
**சிங்கப்பூர் தண்டபாணி வருகவே - எங்கள்**
**சிந்தை என்ற கோயிலுக்குள் வருகவே**

சிங்கப்பூர் தண்டபாணி வருகவே - எங்கள்
சிந்தை என்ற கோயிலுக்குள் வருகவே!
மங்கலங்கள் கோடிநல்க வருகவே - அன்னை
வள்ளிதெய்வ யானையோடு வருகவே!

காலடியில் தொண்டுசெய்யக் கூடினோம் - நல்ல
கந்தரனு பூதியினைப் பாடினோம்
வேலெடுத்த பிள்ளையுனைத் தேடினோம் - என்றும்
வெற்றிதரும் பாதமலர் நாடினோம்!

கங்கையிலே ஆறுமுகம் காட்டினாய் - அன்னை
கைகளிலே ஒருவடிவம் காட்டினாய்
சிங்கையிலே வேல்முகத்தைக் காட்டினாய் - எங்கள்
தீவினைகள் யாவினையும் ஓட்டினாய்!

வெள்ளித்தேர் ஏறிவரும் வேலனே - முன்பு
விண்ணோர்கள் சிறைமீட்ட பாலனே
உள்ளத்தேர் காத்திருக்க லாகுமோ - நீயும்
ஓடிவரத் தாமதமேன் ஐயனே

லயன்சித்தி கணபதியை வேண்டினோம் - உன்னை
நாடிவர யாவரையும் தூண்டினோம்
தயவாகக் கேட்கின்றோம் தேடிவா - எங்கள்
தமிழ்க்கேட்டு தலையசைக்க ஓடிவா

ஆடுகின்ற காவடிகள் தூக்கினோம் - இனி
ஆடாமல் நெஞ்சையுனக்கு ஆக்கினோம்
பாடிப்பாடிப் பாடிப்பாடிப் போற்றினோம் - தமிழ்ப்
பாட்டுக் காசைப்படுபவனே ஓடிவா

அணியணியாய்க் கொண்டுவிற்க வந்தவர் - முன்னர்
ஆண்டிவடி வாகஉன்னைக் கண்டனர்
மணமுடித்துக் குடும்பத்தோடு வாழ்கிறோம் - இன்று
வள்ளிமண வாளனாக ஓடிவா

நம்பிஉந்தன் திருப்புகழைப் பாடுவோம் - எங்கள்
நாயகனே வேறுயாரை நாடுவோம்
கும்பிட்ட கைகளுக்குள் இன்பமாய் - வந்து
குடியிருக்கும் வேல்முருகா வருகவே

களவுமணம் கற்புமணம் கண்டவா - அந்தக்
கன்னியர்மேல் காதல்மிகக் கொண்டவா
வளமிகுந்த சிங்கப்பூர் காணவே - உந்தன்
வள்ளி  தெய்வ யானையரைக் கூட்டிவா

தைப்பூசக் காவடிகள் காணவா - எங்கள்
தமிழ்ப்பாட்டைச் செவிகுளிரக் கேட்கவா
கைப்பிடிக்குள் சிக்கிவிட்டாய் கந்தனே - உந்தன்
கால்பிடித்தோம் நீதான்எம் சொந்தமே

கால்கடுக்க ஓடிவந்தோம் பாரையா - எங்கள்
கந்தா! உன்நெஞ்மென்ன பாறையா?
பால்கொடுக்கத் தாய்மறுக்க லாகுமோ - இந்தப்
பாரிலிந்தப் பிள்ளைஎங்குப் போகுமோ

சார்ந்தவரைக் காப்பாற்றும் சாமியே - உந்தன்
தாள்மலரில் சுற்றுதிந்தப் பூமியே
சேர்ந்திருக்க வேண்டுமென்ப திச்சையே - எங்கள்
செல்வமெல்லாம் நீகொடுத்தப் பிச்சையே

*சொல்லோவியர், விரிவுரை வித்தகர், திருமந்திரச்*
*சொல்மணி, நற்றமிழ் நாவலர்,  திருக்கயிலை மணி,*
*பொற்கிழிக் கவிஞர்- சொ.சொ.மீ.சுந்தரம், 2008*

## சிங்கை வேலனே - எங்கள் பாலனே

**கருணைமனம் கொண்ட எங்கள் சிங்கைவேலனே**
**அருள்புரிய வேண்டுமய்யா எங்கள்பாலனே.**

ஆடிவாரோமே உன்னைத்தேடி பாடிவாரோமே
கால்நாடையாய் உன்னடியைக் காணவாரோமே
கருணைமனம் கொண்ட எங்கள் சிங்கைவேலனே
அருள்புரிய வேண்டுமய்யா எங்கள்பாலனே.

காவடியை தோளினிலே ஏந்திவருகிறோம்
கந்தாஉன் காலடியை நாடிவருகிறோம்
வேல்வடிவாய் காட்சிதரும் சிங்கைவேலனே
அருள்புரிய வேண்டுமய்யா எங்கள்பாலனே.

பழனியிலே ஆண்டியாய் நிற்பவனே
பஞ்சம்பிணி அத்தனையும் தீர்ப்பவனே
தங்கமயில் ஏறிவரும் சிங்கைவேலனே
அருள்புரிய வேண்டுமய்யா எங்கள்பாலனே.

பரங்குன்றில் தெய்வானையை மணந்தவனே
வளமெல்லாம் வாழ்க்கையில் தருபவனே
காவடிகள் கண்டுமகிழ் சிங்கைவேலனே
அருள்புரிய வேண்டுமய்யா எங்கள்பாலனே.

செந்தூரில் சூரனை வென்றவனே
சோதனைகள் அனைத்தையும் களைபவனே
கடல்நோக்கி அமர்ந்திருக்கும் சிங்கைவேலனே
அருள்புரிய வேண்டுமய்யா எங்கள்பாலனே.

பழமுதிரும் சோலையினில் வள்ளிகணவனே
பாவமெல்லாம் போக்குகின்ற பரந்தாமனே
பாருலகைக் காக்கின்ற சிங்கைவேலனே
அருள்புரிய வேண்டுமய்யா எங்கள்பாலனே.

சுவாமிமலையில் குருவடிவாய் இருப்பவனே
ஓம்மென்ற மந்திரத்தைத் தந்தவனே
ஓங்காரப் பொருளான சிங்கைவேலனே
அருள்புரிய வேண்டுமய்யா எங்கள்பாலனே.

தணிகையினில் கண்டுவந்தோம் மணக்கோலமே
தமிழ்கடவுள் உன்னைநாங்கள் பாடிவந்தோமே
உன்னருளால் உயர்கின்றோம் சிங்கைவேலனே
அருள்புரிய வேண்டுமய்யா எங்கள்பாலனே.

சிங்கைநகர் வீற்றிருக்கும் எங்களய்யனே
செல்வநலம் தந்தெம்மை காக்கும்வேலனே
சிரம்தாழ்த்தி வணங்குகின்றோம் சிங்கைவேலனே
அருள்புரிய வேண்டுமய்யா எங்கள்பாலனே.

*லெட்சுமணன் சக்திகுமார். ஜனவரி 2008.*

வேலும் மயிலும் துணை

# கந்தனுக்கு நன்றி மாலை !

**கந்தனுக்கு நன்றிசொல்ல வார்த்தையுமில்லை - சிங்கை**
**கந்தனருள் பெறுவதுதான் வாழ்க்கையின் எல்லை - முருகா**

கந்தனுக்கு நன்றிசொல்ல வார்த்தையுமில்லை - சிங்கை
கந்தனருள் பெறுவதுதான் வாழ்க்கையின் எல்லை - முருகா !

மேன்மைமிகு மானிடப் பிறவியும் தந்தாய்
மேலான பெற்றோர்கள் உயிரெனக் கொடுத்தாய்
உற்றதுணை உடன்பிறந்தோர் சேர்த்தும் வைத்து
உத்தமனே யாம்வளர உறவுகள் கொடுத்தாய் - முருகா !

உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் அறிய வைத்தாயே
விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் புரிய வைத்தாயே
ஆற்றல்பல அளித்தாலும் போதா தென்று
ஓவியமே நற்குணங்கள் பற்பல தந்தாய் - முருகா !

வலுவான வாழ்க்கைத்துணை வரமும் கொடுத்தாய்
அழகான பிள்ளைவரம் அன்புடன் கொடுத்தாய்
நல்லோரை நண்பராக நன்றே கொடுத்து
நல்லவனே யாம்மகிழ உறவுகள் வளர்த்தாய் - முருகா !

நல்லபடி இவ்வாழ்வக்கை இனிதே தொடர
நாயகனே உந்தனருள் என்றும் வேண்டும்
திருப்பணிகள் தொண்டுகள் பற்பல செய்ய
திருமகனே சிவன்மகனே அருளிக் காப்பாய் - முருகா !

கள்ளமற்ற எண்ணங்கள் உள்ளம் கொண்டு
கபடமற்ற வார்த்தைகள் நாவில் ஏற்றி
பண்பான நற்செயல்கள் அனுதினம் செய்ய
பகவானே பரம்பொருளே பலமே அருள்வாய் - முருகா !

சிங்கையிலே வீற்றிருக்கும் அழகு வேலனே
சிந்தையிலே கொலுவிருக்கும் எங்கள் பாலனே
உள்ளமெல்லாம் உவகைபொங்கி உன்னைப் போற்றிட
உயர்ந்தோனே அருட்கடலே வரமே அருள்வாய்- முருகா !

இளை.சரவணன், 28–01–2009.

# மாமலையே மாமலையே

**மாமலையே மாமலையே தென் பழநி மாமலையே**
**மாமலையே மாமலையே தென் பழநி மாமலையே**

ஞானம் செறிந்த மலை நல்லோர்கள் நாடுமலை
தானம் சிறக்குமலை தருமமிகுந்தோங்கும் மலை
மோனத் திருமுனிவர் முற்றுதவம் செய்த மலை
தீனர்க் கருளுமலை தென்பழநி மாமலையே

நாட்டில் சிறந்த மலை நானிலமும் போற்றுமலை
பாட்டில் சிறந்த திருப்புகழ் பாடிப் பரவுமலை
வீட்டைக் கொடுக்குமலை மெய்ஞானம் நல்குமலை
தேட்டைக் கொடுக்குமலை தென்பழநி மாமலையே

ஒருமாங் கனிபெறவே உலகமெல்லாம் சுற்றிவந்து
அருமா  தவக்கோலம் பூண்டிருக்கும் ஆண்டிமலை
பருமா மதகரிகள் பசியகழை உண்டுமகிழ்
திருவா  வினன்குடியாம்  தென்பழநி மாமலையே

சீதையினைத் தேடிவந்த ஸ்ரீராம தூதரினம்
பாதையினைத் தான்மறந்து பசிக்குணவு தேடுகையில்
மாது வள்ளி தான்புகுந்த மால்மருகன் வீடறிந்து
போதும் வரை உண்டுமகிழ் பொன்பழநி மாமலையே

எந்தாயும் நீயல்லவோ எனக்குற்ற துயரனைத்தும்
அந்தாரணி யினிலே  யாரிடத்தில் போயுரைப்பேன்
கந்தா எனக்கதறி கசிந்துருகி வேண்டுபவர்க்கு
இந்தா பிடிவரமென்  றீயுமலை பழநிமலை

சந்தனம் மணக்குமலை ஜவ்வாது கமழுமலை
செந்தமிழ்ப் பாமுழக்கம் திக்கெட்டும் எட்டுமலை
கந்தருவர் வந்தினிய கானம் இசைக்குமலை
சிந்தைக்கினிய மலை தென்பழநி மாமலையே

பேராளும் மாவணிகப் பிள்ளைகளும் பெரியோரும்
ஏராள மானவர்கள் இருந்தொலை தூரம் நடந்து
சீராகக் காவடிகள் செலுத்த நல்லருளுமலை
பேரார் பழநியப்பன் பிறந்தத் தமிழ்மலையே

இடும்பன் எடுக்குமலை இன்னலெல்லாம் தீர்க்குமலை
கடம்பன் இருக்குமலை கருணைமழை பெய்யுமலை
தடம்புரளா வாழ்க்கையினைத் தனவணிகர்க்கீந்து மனம்
திடம்படவே வைக்குமலை தென்பழநி மாமலையே

வீடெல்லாம் பக்திமனம் வீதியெல்லாம் பக்திமனம்
காடெல்லாம் பக்திமனம் கழனியெல்லாம் பக்திமனம்
நாடெல்லாம் பக்திமனம் நாடிவருவோர்கள்
பாடெல்லாம் நீக்கியிருள் பாலிக்கும் பழநிமலை

அண்ணாமலைக் கவிஞன் அருள்காவடிச் சிந்தை
பண்ணோடு பாட பலர் காவடியாட
தன்னார் தடங்கருணை தான்புரிந்து வாழ்வளிப்பான்
கண்ணா ரிரண்டுடைய கவின்பழநி வேலவனே

## பழனிமலை பாதயாத்திரை

**வேல் முருகா வேல் முருகா வேல் முருகா வேல்**
**வேல் முருகா வேல் முருகா வேல் முருகா வேல்**

ஒண்ணு ரெண்டு மூணு நாலு அஞ்சு ஆறுங்க
ஓம் முருகன் மந்திரங்கள் வந்து பாடுங்க
கண்ணு ரெண்டைக் காக்கும் இமை போலக் காக்கிறான்
கந்தன் நம்மைக் கைவிடாமல் பாதுகாக்கிறான்

சேவல்மயில் வேலும் வந்தால் சிக்கல் தீருமே
செந்தமிழில் பாட்டுப் பாடச் சிரமம் போகுமே
ஆவலோடு பெண்ணும் ஆணும் ஆடிப் பாடுங்க
ஆறுபடை வீடுகளும் போய்ப் பாருங்க

பாதம் தேயப் பாதம் தேயப் பாதயாத்திரை
பழநி மலை முருகனுக்குக் கோடி யாத்திரை
மாதம் தோறும் கார்த்திகையில் பஜனை செய்கிறோம்
மாசி மகப் பூசை ஐந்து நாள் சிறக்கிறோம்

கொண்டு வந்ததென்ன இந்தக் குவலயத்திலே ?
கோடிப் பணம் சேர்ந்துமென்ன கும்பிடாமலே
பெண்டு பிள்ளை பேரன் பேத்தி வம்சம் எல்லாமே
பேணிக் காக்கும் முருகன் நாமம்பேச வாழுமே

பக்தியோடு பழநி மலை பாதயாத்திரை
பஜனையோடு விரதம் காத்தால் பழநி ஆண்டவன்
சக்தியெல்லாம் தந்திடுவான் சரணம் போடுங்க
சரவணனின் சடாட்சரத்தை நெஞ்சில் சாற்றுங்க

வேலை கேட்கும் பிள்ளைகட்கு வேலை தருகிறான்
விதவிதமாய் அனைவருக்கும் உதவி செய்கிறான்
மாலை கேட்கும் அனைவருக்கும் மணம் முடிக்கிறான்
மாமுருகன் பதம்பணிந்தால் மார்க்கம் காட்டுறான்

பிள்ளை இல்லாப் பேர்களுக்குப் பிள்ளை தருகிறான்
பேச வாரா மக்களுக்கும் பேச்சுத் தருகிறான்
கொள்ளை இன்பம் தரும் முருகன் வியாதி தீர்க்கிறான்
குடும்பம் எல்லாம் வாழ்வதற்கு அருள் சுரக்கிறான்

*- காசி ஸ்ரீ அரு. சோமசுந்தரன்*

## பழநி ஆண்டவர் பவனி வருகிறார்

**பழநி ஆண்டவர் பவனி வருகிறார் தங்கத்தேரினிலே**
**தங்கத்தேரினிலே, தங்கத்தேரினிலே**

மொட்டை போட்ட பக்தர் கூட்டம்,
திருப்புகழ் பாடும் அன்பர் கூட்டம்
தோளில் காவடி ஆடும் அழகு,
தலையில் பால் குடம் போடும் நடனம்
உடலால் சுற்றும் அன்பர் கூட்டம்,
காணவேண்டியே இரதத்தில் ஏறியே

வேல்வேல் முருகா வெற்றிவேல் முருகா
என்றே பக்தர்கள் சேர்ந்தே சொல்ல
வா வா முருகா வடிவேல் அழகா,
என்றே நாமும் சேர்ந்தே அழைக்க
கைகள் இரண்டும் சேர்த்துக் கும்பிட,
காண வேண்டியே இரதத்தில் ஏறியே

புஷ்பக் காவடி பன்னீர் காவடி
பறவைக் காவடி அக்கினிக் காவடி
மச்சக் காவடி மற்றய காவடி,
சுற்றும் காவடி சழலும் காவடி
செட்டிக் காவடி சர்க்கரைக் காவடி ,
காண வேண்டியே இரதத்தில் ஏறியே

குடம் குடமாகப் பால்கள் சேர,
பன்னீர் அங்கே மணக்க மணக்க
அரைத்த சந்தனம் வாசனை கூட,
திருநீர் அங்கே சேர்ந்தே இருக்க
அனைத்தும்  அவன்மேல்சொறிந்த பின்னரே,

அருள வேண்டியே இரதத்தில் ஏறியே!
தேனும் நெய்யும் வாழைப் பழமும்,
கற்கண்டு சர்க்கரை பேரீச்சம் பழம்
போட்டே பிசைந்த பஞ்சா அமிர்தம்,
அண்டா நிறைய வழிய வழிய
அவனுக்குத் தரவே பக்தர்கள் ஏங்க,
ருசிக்க வேண்டியே இரதத்தில் ஏறியே

செல்வங்கள் வேண்டி வரங்கள் கேட்க,
நோய்கள் தீர வழியைக் கேட்க
குழ்ந்தை வேண்டி வரமும் கேட்க,
நிம்மதி வேண்டி நெஞ்சம் கேட்க
எல்லாம் வேண்டும் என்றே கேட்க,
கொடுக்க வேண்டியே இரதத்தில் ஏறியே

அருணகிரியின் திருப்புகழ் ஒலிக்க
கண்ணதாசனின் தமிழும் முழங்க
செட்டிக் கவிகள் செப்பிடும் மொழிகள்
சேர்ந்தே நான்கு வேதமும் ஒலிக்க
காளை நானும் பாடல்கள் பாட,
கேட்க வேண்டியே இரதத்தில் ஏறியே

*அருளிசை மணி - காளை சித. நாராயணன், கோட்டையூர்*

## கந்தன் போட்ட கணக்கு

**கந்தன் போட்ட கணக்கு தெரியவில்லை நமக்கு**
**வேலன் போட்ட கணக்கு விதவிதமாய் இருக்கு**

கந்தன் போட்ட கணக்கு தெரியவில்லை நமக்கு
வேலன் போட்ட கணக்கு விதவிதமாய் இருக்கு
ஒன்றும் ஒன்றும் இரண்டு ஓம் எழுத்தும் இரண்டு
இரண்டும் இரண்டும் நான்குஇனிய வேதம் நான்கு
மூன்றும் மூன்றும் ஆறுமுருகன் முகமும் ஆறு
நான்கும் நான்கும் எட்டுநமக்குத் திசைகள் எட்டு

ஐந்தும் ஐந்தும் பத்துஅவன் அரும்பெரும் சொத்து
சுப்பன் போட்ட கணக்கில்தப்பு ஏதுமில்லை
கணக்குப்படி நடந்தால்பிணக்கு ஏதுமில்லை
எனக்கு அவனும் சொன்னான்உனக்கு நானும் சொன்னேன்.

*கவிஞர் குறள் இலக்குவன்*

# சரணம் முருகையா

**சரணம் முருகையா சாமி சரணம் முருகையா**
**சரணம் முருகையா சாமி சரணம் முருகையா**

தில்லை நாயகன் விழிப் பிள்ளையானவன்
வல்ல வேலவன் மிக நல்ல காவலன்
வள்ளி நாயகன் நமை வாழ்த்தும் தாயவன்
வள்ளல் ஆனவன் வரம் வாரித் தருபவன்

ஆதி யானவன் அருட் சோதி யானவன்
வேத மானவன் குற மாது மோகனன்
தீது தடுப்பவன் நலஞ் செய்து கொடுப்பவன்
நீதி யானவன் மிக நேர்மையானவன்

விதியு மானவன் அதன் விளைவு மானவன்
புதிரு மானவன் ஐம் புலனும் மானவன்
மதியு மானவன் ரவிக் கதிரு மானவன்

கதியு மானவன் பெருங் கடவுள் ஆனவன்
ஊனு மானவன் என் உயிரு மானவன்
உள்ளம் ஆனவன் எழும் உணர்வு மானவன்
நாவும் ஆனவன் சொல் நயமும் ஆனவன்

நாசி யானவன் என் சுவாச மானவன்
கந்த வேலவன் அருள் சிந்தும் பாலகன்
சொந்த மானவன் என் சுற்ற மானவன்
பந்த மானவன் மிகப் பாச மானவன்
விந்தை யானவன் வெகு விவர மானவன்

தாயு மானவன் என் தந்தை யானவன்
சேயு மானவன் குலச் செல்வ மானவன்
அண்ண னானவன் தரும் ஆசி யானவன்
தன்மை யானவன் ஒரு தம்பி யானவன்

மனைவி யானவன் மிக இன்ப மானவன்
உண்மை யானவன் வெகு உரிமை யானவன்
வண்ண வேலவன் என் வழக்கி லாடுவான்
எண்ணம் போலவே ஜெயம் பண்ணி ஆளுவான்

செந்தில் ஆண்டவன் செந்தீயில் மூண்டவன்
எந்த வேளையும் சுகம் தந்தே ஆள்பவன்
செட்டி சேவுகன் தமிழ்க் கொட்டும் பாவிலே
தொட்டில் ஆடியே சுகம் தந்து ஆள்பவன்

*திருவையாறு மீ. சேவுகன் செட்டி*

# ஆனந்தம் ஆனந்தமே

**ஆனந்தம் ஆனந்தமே முருகா ஆனந்தம் ஆனந்தமே**
**முருகா ஆனந்தம் ஆனந்தமே முருகா ஆனந்தம் ஆனந்தமே**

அலங்கார மண்டபத்தில் மணியோசை கேட்குது
ஆனந்தம் ஆனந்தமே
அந்த மணியோசை கேட்டதும் மயில் ஒன்று ஆடுது
ஆனந்தம் ஆனந்தமே

மயிலாட்டம் காணவே வடிவேலன் வருகிறான்
ஆனந்தம் ஆனந்தமே
அந்த வடிவேலன் துணையோடு வாழ்கின்ற நமக்கென்றும்
ஆனந்தம் ஆனந்தமே

அலையாடும் செந்தூரில் விளையாடி நிற்பதும்
ஆனந்தம் ஆனந்தமே
நீ அற்புத பழனியில் கோலூன்றி நிற்பதும்
ஆனந்தம் ஆனந்தமே

பழமுதிற்சோலையில் மரமாகி நின்றதும்
ஆனந்தம் ஆனந்தமே
நீ பரங்குன்றில் தெய்வானை கரம்பற்றி நிற்பதும்
ஆனந்தம் ஆனந்தமே

சுவாமிமலை உலகப்பன் தோளிலே அமர்ந்ததும்
ஆனந்தம் ஆனந்தமே
சுந்தரத் திருத்தணிகை திருமணக் கோலமும்

ஆனந்தம் ஆனந்தமே
செம்மடைப்பட்டியில் புதியதோர் மண்டபம்
ஆனந்தம் ஆனந்தமே
அங்குச் சிங்கார ஊஞ்சலில் உன்னையே காண்பதும்
ஆனந்தம் ஆனந்தமே

வண்டாடும் மலர்ச்சோலை கண்டாலும் உனக்குமே
ஆனந்தம் ஆனந்தமே
அங்கு வடிவேலும் மயிலுமே ஆடிடக் கண்டிட
ஆனந்தம் ஆனந்தமே

கண்டனூர் சாமியாடி கைபட்ட திருநீறும்
ஆனந்தம் ஆனந்தமே
அது வந்தவினை போக்குதே வள்ளலே உன்பெருமை
ஆனந்தம் ஆனந்தமே

ஆடிவரும் காவடியில் அழகுமுகம் தெரிவதும்
ஆனந்தம் ஆனந்தமே
அந்த ஆடிவரும் காவடிக்கு வேலும் ஒரு துணையாகும்
ஆனந்தம் ஆனந்தமே

ஊஞ்சலில் ஆடிடும் உன் அழகு கண்டிட
ஆனந்தம் ஆனந்தமே
அந்த ஒய்யார சிரிப்பிலே என்னை நான் மறப்பதும்
ஆனந்தம் ஆனந்தமே

பாலாறு தேனாறு பழனிமலை ஓடுது
ஆனந்தம் ஆனந்தமே
அங்குப் பஞ்சாமிருத குளியலில் உன்னைக் காண்பதும்
ஆனந்தம் ஆனந்தமே

தென்பழனி மலைமீது தங்கரதம் பவனிவர
ஆனந்தம் ஆனந்தமே
அதில் சிங்கார வேலுடன் உன்னையே காண்பதும்
ஆனந்தம் ஆனந்தமே

ஆறுகால் சவுக்கையில் அய்யா உன் ஆட்டங்கள்
ஆனந்தம் ஆனந்தமே
நான் நூறு வயதானாலும் ஓடிவர மாட்டேனோ
ஆனந்தம் ஆனந்தமே
கோடான கோடி மக்கள் தேடியே வருகிறார்
ஆனந்தம் ஆனந்தமே
நம்ம கொடை வள்ளல் முருகனுக்கு அரோகரா என்றால்
ஆனந்தம் ஆனந்தமே

வேலும் மயிலும் துணை

**வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா ,**
**தெண்டபாணித் தெய்வத்துக்கு அரோகரா,**
**அள்ளித்தரும் வேலனுக்கு அரோகரா ,**
**சிங்கை வடிவேலனுக்கு அரோகரா , என்று**

கோடான கோடி மக்கள் தேடியே வருகிறார்
ஆனந்தம் ஆனந்தமே
நம்ம கொடை வள்ளல் முருகனுக்கு அரோகரா என்றால்
ஆனந்தம் ஆனந்தமே

*அருளிசைமணி நேமத்தான்பட்டி அரு.சுப்பிரமணியன்.*

# பண்டாரமாம் பண்டாரம்

**பண்டாரமாம் பண்டாரம் பழனிமலை பண்டாரம்**
**பண்டாரமாம் பண்டாரம் பழனிமலை பண்டாரம்**

பண்டாரமாம் பண்டாரம் பழனிமலை பண்டாரம்
சின்னச் சின்ன பண்டாரம் சிரித்து மகிழும் பண்டாரம்
வண்ணமயில் ஏறிவரும் வடிவழகுப் பண்டாரம்

கன்னித்தமிழ் பாட்டினிலே கனிந்துருகும் பண்டாரம்
காவடிகள் ஆட்டத்திலே மயங்கிவரும் பண்டாரம்

காவடிக்கு முன்னே வந்து காவலாகும் பண்டாரம்
காலமெல்லாம் துணையிருக்க ஆடி மகிழும் பண்டாரம்

அன்னை தந்த வேலுடனே ஆடி வரும் பண்டாரம்
அழகுமயில் மீதமர்ந்து பவனிவரும் பண்டாரம்

குழந்தையாய் பழனியிலே குலுங்கிச் சிரிக்கும் பண்டாரம்
கும்பிட்டோர் நலம் காக்க எங்கும் வரும் பண்டாரம்

வள்ளியிடம் கிழவனாய் வம்பு செய்த பண்டாரம்
சூராதிசூரர் குலம் வேரறுத்த பண்டாரம்

பழத்துக்காகச் சண்டை போட்ட பாலமுருகப் பண்டாரம்
பார்வதியாள் தந்த சக்தி வேலெடுத்த பண்டாரம்

சிங்காரப் பொன்னூஞ்சல் ஆடுகின்ற பண்டாரம்
செல்வநலம் தந்தருளும் செந்தூரு பண்டாரம்

செந்தூரில் வாள்வழங்கி ஜெகம்காத்த பண்டாரம்
தேடிவந்தோர் வாழ்க்கையிலே வளம் கொடுக்கும் பண்டாரம்

நெற்றிக்கண்ணில் பிறந்துவந்த வெற்றிவேலுப் பண்டாரம்
வெற்றிகளைத் தந்தருளும் சக்திவேலுப் பண்டாரம்

தங்கத்தேரில் பவனிவரும் தருமதுரை பண்டாரம்
தரணி எங்கும் கோயில் கொண்ட தெண்டபாணி பண்டாரம்

அன்னதானம் செய்யச்செய்ய அகமகிழும் பண்டாரம்
பண்ணையெல்லாம் வளரச்செய்யும் பழனிமலை பண்டாரம்

பிரம்பாட்டம் ஆடுகின்ற பேரழகு பண்டாரம்
ஆறுகால் சவுக்கையிலே ஆடி மகிழும் பண்டாரம்

தென்றலென ஆடி வரும் தென்பழனி பண்டாரம்
தேடிவந்தே நலம் கொடுக்கும் தெண்டபாணி பண்டாரம்

வேலெடுத்து ஆடி வரும் வேலுப்பிள்ளை பண்டாரம்
வேண்டும் வரம் தந்தருளும் ஞானப்பிள்ளை பண்டாரம்

சிங்கார வேல்தாங்கி சிரித்து மகிழும் பண்டாரம்
வண்ணமயில் மீதமர்ந்து உலகாளும் பண்டாரம்

ஆடிவரும் காவடிக்கு அழகுவேலை துணையாக்கி
ஆனந்தமாய் கூட்டிச்செல்லும் பழனிமலை பண்டாரம்

*அருளிசைமணி நேமத்தான்பட்டி அரு.சுப்பிரமணியன்.*

## பச்சை மயில் வாகனனே சிவ

**பச்சை மயில் வாகனனே சிவ**
**பால சுப்பிரமணியனே வா - இங்கு**
**இச்சை இல்லாம் உன்மேல் வைத்தேன்**
**எள்ளளவும்ஐயமில்லை**

கொஞ்சும் மொழியானாலும் - உன்னைக்
கொஞ்சிக் கொஞ்சிப் பாடிடுவேன் - இங்கு
சர்ச்சை எல்லாம் மறைந்ததப்பா - எங்கும்
சாந்தம் நிறைந்ததப்பா - (பச்சைமயில்)

வெள்ளமது பள்ளந்தனிலே பாயும்
தன்மை போல உள்ளந்தனிலே - நீ
மெள்ள மெள்ள புகுந்து விட்டாய் எந்தன்
கள்ளமெல்லாம் கரைந்ததப்பா - (பச்சைமயில்)

நெஞ்சமதில் கோவில் அமைத்தேன் அதில்
நேர்மை என்னும் தீபம் வைத்தேன் - நீ
செஞ்சிலம்பு கொஞ்சிட வா மருகா
சேவற் கொடி மயில் வீரா - (பச்சைமயில்)

ஆறுபடை வீடுடையவா எனக்கு
ஆறுதலைத் தருந் தேவா - நீ
ஏறுமயில் ஏறிவருவாய் - மருகா
எங்கும் நீறைந்தவனே- (பச்சைமயில்)

அலைகடல் ஓரத்திலே எங்கள்
அன்பான சண்முகனே - நீ
அலையா மனந் தந்தாய் - உனக்கு
அனந்த கோடி நமஸ்காரம் - (பச்சைமயில்)

# மூன்றாம் படைவீடு

## படைநடக்குது படைநடக்குது வந்து பாருங்க-மூன்றாம் படைவீட்டைப் பார்க்கப் போகுது நின்று பாருங்க

படைநடக்குது படைநடக்குது வந்து பாருங்க-மூன்றாம்
படைவீட்டைப் பார்க்கப் போகுது நின்று பாருங்க
கண்மாய்க்கரை வரப்பினிலே கரியிருட்டிலே
கட்டெறும்பு போல்வரிசை ஊர்ந்து செல்லுதே

கைவிளக்கு வெளிச்சம் மட்டும் சைகை காட்டுதே
காற்றுவேக நடைநடந்து படைகள் செல்லுதே
கொட்டும்பனி குளிர்காற்றை புறக்கணிக்குதே
கொடியவெய்யில் மழையைக் கூட எதிரடிக்குதே

எட்டும்வரை வரிசையாகத் தலைகள் தெரியுதே-இதற்கு
எந்த நாட்டு ராணுவமும் ஈடு இல்லையே
பட்டினியைப் பசியைக் கூடப் பார்க்கவில்லையே-இங்குப்
பட்டாளத்தின் விதிகளுக்கு மாறு இல்லையே

சிட்டுப் போலச் சிறகடித்துச் செல்லும் வித்தையே-அதைச்
செப்புதற்குச் செந்தமிழில் வார்த்தை இல்லையே
கட்டாந்தரையில் படுக்கக்கூட நேரம் இல்லையே
காலக்கணிதம் கொஞ்சம்கூடத் தப்பவில்லையே

சிட்டுப்பெண்டிர் முதியவர்கள் சின்னப் பிள்ளைகள்
சீனநாட்டு ராணுவத்தில் கூட இல்லையே
காடுமலை வனாந்திரம் கடந்து செல்லுதே-அதைக்
காலணிகள் இல்லாத கால்கள் சொல்லுதே

ஓடுவதும் நடப்பதுமாய்ச் செல்லும் படைக்கு
உடுத்தக்கூட மாற்றுத்துணி கையில் இல்லையே
வழக்கமான படையெடுப்பு எதிரி நாட்டிலே
வகைவகையாய்ப் படையணிகள் சேர்ந்து செல்லுதே

பழக்கமான எளியமக்கள் படையெடுப்பிலே
பயிர் விளைந்தால் போதும் ஏழைப் பஞ்சம் தீருமே
படையுடனே வழக்கமாகத் தளபதி வருவார்-இங்குப்
பழநியிலே தளபதியாய் வீற்றிருக்கின்றார்

பாட்டுப்பாடி அழைத்தாலோ ஓடி வருகின்றார்
பக்கபலமாய் எப்போதும் கூட வருகின்றார்
முப்படைக்குச் சீருடையோ மூன்று நிறத்திலே
முருகன்படைச் சீருடையோ காவி ஒன்று தான்

எப்படைக்கும் விதவிதமாய் ஆயுதம் இருக்கும்
எழில் இறைவன் ஆயுதமோ வேலும்மயிலும் தான்
காயம் நோய்க்குத் தடவ வழியில் மருந்துகள் இல்லை
தளபதியின் மருந்து திருநீரு ஒன்றுதான்
இதனைப்போல அதிசயம் நான் பார்த்ததில்லீங்க - எங்கும்
பார்த்திருந்தால் அதனைக் கொஞ்சம் எனக்குச் சொல்லுங்க

*ஆரை தமிச்செல்வன்*

## கந்தசாமியே எங்கள் சொந்தசாமியே

**கந்தசாமியே எங்கள் சொந்தசாமியே**
**கந்தநாதனே எங்கள் சொந்தநாதனே**
**கந்தசாமியே எங்கள் சொந்தசாமியே**
**கந்தநாதனே எங்கள் சொந்தநாதனே**

கந்தசாமியே எங்கள் சொந்தசாமியே
கந்தநாதனே எங்கள் சொந்தநாதனே
கந்தசாமியே எங்கள் சொந்தசாமியே
கந்தநாதனே எங்கள் சொந்தநாதனே

காளிபட்டியில் இவர் கந்தசாமியாம்
கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாம்
கவலையெல்லாமே போக்கும் தெய்வமாம்
கந்தசாமியாம் நம் சொந்தசாமியாம்

மன்னாதிமன்னர் இங்கே மண்டியிடுகின்றார்
மண்மீதினிலே தலைவைத்துப் பணிகின்றார்
உண்மை சொல்லுவேன் பல நன்மை சொல்லுவேன்
உங்கள் கனவெல்லாம் இங்கே நல்ல நினைவாகும்

பச்சைமயில் மீதமர்ந்த பாலகன்தானே
நம் இச்சையெல்லாம் தீர்ப்பதற்கு இங்குவந்தானே
சக்திதந்த வேலெடுத்த தங்கமகனாம்
காளிபட்டி கோவில் கொண்ட கந்தசாமியாம்

பழத்துக்காக மலை சென்ற பாலகன்தானே
ஞானப்பழமாகி மலைமேலே கோவில் கொண்டானே
மலைமேலே கோவில் கொண்ட பழனிச்சாமியே
காளிபட்டி கோவில் கொண்ட கந்தசாமியாம்

# அப்பனும் சுப்பனும்

அப்பன் பெற்ற பிள்ளை ஒப்பு ஏதும் இல்லை
சுப்பனென்ற பேரைச் சொல்லி சொல்லிப்பாடு. (அவன்)

அம்மா கொடுத்த வேலு அரக்கருக்கே ஆளு!
நம்ம நாட்டு முருகு நாதம் கேட்டு உருகு (அப்பன்)

ஆறுமுகம் அழகு அடியெடுத்துப் பழகு
பாரு பாரு பழநி பருகப் பருக இளநி (அப்பன்)

வேதம் படித்த பிள்ளை வேறு ஏதும் இல்லை
வேற் பிடித்த பிள்ளை வேண்டு வரம் கொள்ளை (அப்பன்)

கருணை மனம் தங்கம் கண்ணில் அருள் பொங்கும்
சிறுவன் இந்த வேலன் சிந்தனை தந்த பாலன் (அப்பன்)

புகழில் ஆடும் குமரன் புவியில் கூடும் அமரன்
சிவமும் நாடும் விமலன் சித்திர முத்துக் கமலன்(அப்பன்)

வசந்தராகம் பாடி வருவோம் உன்னைத் தேடி
வசந்தம் பூத்துக் குலுங்க வரங்கள் தரும் முருகா(அப்பன்)

காவடிச் சிந்து பாடும் கருணை மனம் கூடும்
பாவடி கேட்டு மயங்கும் பாதம் கண்டு வணங்கும்(அப்பன்)

தேரில் ஏறி வருவான் தெள்ளு தமிழ் தருவான்
பாரில் முருகன் தெய்வம் பாடிப் பாடி உய்வோம்(அய்யன்)

## வண்ண மயிலேறி வருக

**வேல் வேல் வேல் வேல்**
**வேல் வேல் வேல்**

ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுக வேலா
அன்னைசிவ காமிபெற்ற சக்திஉமை பாலா
அன்புமயி லேறிநீயும் என்று வருவாயோ

பாடுமடி யார்மொழியில் பாசமிகு பாலா
பண்ணெடுத்து மாலையிட்டு பாடுகின்றோம் வாவா
பச்சைமயி லேறிநீயும் என்றுவரு வாயோ

மாடமனை மாநிதியும் வேண்டுவதும் இல்லை
மன்னவனே நீசிரித்தால் வாழ்விலேது தொல்லை
மாமயிலின் மீதிலேறி என்று வருவாயோ

மாறுபடு வாழ்வுஎன்னை மாற்றுவதேன் சீலா

மந்தமதி மாயைநீக்கும் மாப்பழநி வேலா
புள்ளிமயி லேறி நீயும் என்றுவரு வாயோ

மாமயிலின் மீதமர்ந்து மா நிலத்தைக் காக்க
மன்னவனே வந்தருள்வாய் தொல்லைகளைப் போக்க
வள்ளிதெய்வ யானையுடன் என்றுவரு வாயோ

வீரவேலை நீயெடுத்து வீசிவிளை யாடு
விண்ணவரைக் காத்தது போல் தூயஅன்பி னோடு
வண்ணமயி லேறிநீயும் என்றுவரு வாயோ

## நல்ல நேரம்

**தந்தனத்தான் தந்தனத்தான் தாளம் போடுங்க**
**சங்கரன்பெத்த புள்ளையெப்பத்தி ராகம்பாடுங்க**

தந்தனத்தான் தந்தனத்தான் தாளம் போடுங்க
சங்கரன்பெத்த புள்ளையெப்பத்தி ராகம்பாடுங்க
பொறந்ததையா நல்லநேரம் எழுந்து பாருங்க,
போய்வரலாம், பழனிமலை நடந்து வாருங்க!

நடந்ததெல்லாம் நடந்ததையா மறந்துபோடுங்க!
நடக்கப்போற காரியத்தை நினைத்து வாழுங்க
சேவல்கூவி அழைக்குதுகண் திறந்து பாருங்க!
சிங்கார வேலன் புகழ் உணர்ந்து பாடுங்க!

காவல்செய்யும் முருகன் மலை அருகில் தானுங்க - அந்தக்
கடவுள்பெயர் சொல்லச்சொல்லி உருகி ஆடுங்க!
ஆணும் பெண்ணும் கூட்டம்கூடி பாட்டுப்பாடுங்க-வரம்
ஆறுமுகச் சாமியிடம் கேட்டு வாங்குங்க

வேணுமுந்தன் காட்சிஎன்று சொல்லிப்போடுங்க-அவன்
வேறுவார்த்தை சொல்லவந்தா தள்ளிப்போடுங்க!
அரோகரா சொல்வதற்குத் தொங்கிப்போடுங்க - வரும்
அசுரப்பய கொட்ட மெல்லாம் அடங்கிப்போகுங்க!

மோதவந்த துன்பமெல்லாம் முடங்கிப்போகுங்க -ஒரு
மோதகத்தான் தம்பிபலம் விளங்கிப் போகுங்க!
தந்தனத்தான் தந்தனத்தான் தாளம் போடுங்க
சங்கரன்பெத்த புள்ளையெப்பத்தி ராகம் பாடுங்க

கந்தனுக்கும் நெஞ்சினுக்குள் கோலம்போடுங்க
கண்ணில்வரும் நீரைக்கொண்டு பாலம் போடுங்க

*வீர. மெய்யப்பன்*

# சிறுவாபுரிப் பதிகம்

## காப்பு

சிவனாரின் பிள்ளை கணநாத வள்ளல்
திருப்பாதம் முந்தித் தொழுது
புவியாளக் குன்றந் தனிலாடும் வேலன்
புகழ்பாட நல்ல தமிழைச்
சுவையோடு தந்து நிறைவாகச் செய்ய
துணையாக வேண்டும் எனவே
கவிபாடி வேண்டிக் கசிந்தேத்து கின்றேன்
கணநாதன் என்றும் துணையே!

## பதிகம்

கல்லாத பேர்க்கும் கவிபாடும் ஆற்றல்
கடல்போலத் தந்து விடுவான்
வெல்லாத கோழை வெகுவீரனாக
விதிமாற்றி வைத்து விடுவான்
நில்லாதச் செல்வம் நிலையாக இல்லில்
நிதங்கூடச் செய்து விடுவான்
செல்வாக்கும் வீடும் சீரோடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே!

எனக்காக இல்லம் இல்லையேஎன்று ஏங்க
எழில்வீடு ஐயன் தருவான்
பணக்காரன் என்றும் பரதேசி என்றும்
பார்த்தாள எண்ணி அறியான்
தனைக்கான வந்து தமிழ்பாடும் அன்பர்
துணையாக என்றும் வருவான்
தினைக்காட்டு வள்ளி தனைநாடும் வள்ளல்
சிறுவாபுரிக் குமரனே!

நெல்லோடு வாழை நிறைவோடு சூழும்
நிலமோங்கு நல்ல பதியாம்
வில்லேந்தும் ராமர் வைதேகி பாலர்
வென்றாடி நின்ற இடமாம்
பொல்லாத சூரன் புறமோட்டி வேலன்
பொழுதோடு தங்கும் இடமாம்
செல்வாக்கும் வீடும் சீரோடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே!

தவம் ஓங்குதந்தை செவியோடு பேசிச்
சதுர்வேதம் சொல்லி விடவே
சிவசாமி நீயும் தென்சாமி மலையில்
திருவீடு கொள்ள விலையோ
புவிவாழும் யானும் புதுவீடு ஒன்றில்
புகவேணும் நல்ல குடியே
சிவபாலத் தேவன் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே!

எட்டாத வானோர் எழிலான வீட்டில்
எக்காளம் இட்டுப் புகுந்து
கொட்டாடும் சூரர் குலநாசம் ஆகக்
கூர்வேலைத் தொட்ட குமரன்
தட்டாமல் தேவர் தன்வீடு தன்னில்
தான் ஆள விட்ட குகனாம்
செட்டாய் எனக்கும் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே!

சூராதி சூரன் தூளாகிப் போகச்
சுகமேவு தேவர் மகிழ்ந்து
காராருங்கூந்தல் தெய்வானைதன்னைக்
கல்யாணஞ் செய்து தருவார்
ஏராரும் வேலன் இல்வாழ்க்கை காணும்
இனியபரங் குன்றம் எழிலாம்
சீராய் எனக்கும் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே!

ஒருயானை போன்ற கணநாத வள்ளல்
ஒப்போடு அன்று உதவ
குறமாது தன்னை மணமாலை சூடிக்
கொண்டாடும் இன்ப நினைவில்
தருமேவு நல்ல தணிகாசலத்தில்
தனிவீடு கொண்ட குகனாம்
சிறியேன் எனக்கும் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே!

சிறகாட வானில் பறந்தாடும் புள்ளும்
சிறுகூடு கட்டி வளரும்
குறியாய்ப் பணத்தைக் கொள்ளாது விட்ட
அறியாத பிள்ளை எனையும்
உறவோரும் என்றும் ஒப்போடு காண
உடனோடி வந்து அருளி
சிறியேன் எனக்கும் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே!

ஏராளச் செல்வம் இருந்தாலும் எல்லாம்
எல்லார்க்கும் வாய்ப்ப திலையே
பாராளும் கந்தன் பார்த்தாலே கிட்டும்
பாரோங்கும் உண்மை நிலையே
ஊராரும் போற்றும் பேரோடு வாழ
உடனோடி வந்து அருளி
சீரான இல்லம் தோதாய் அருள்வான்
சிறுவாபுரிக் குமரனே!

மெய்பேச வாழ்வில் விளையாது துன்பம்
விதிகூறும் உண்மை இதுவே
பொய்பேசிச் செல்வம் புகழோடு யாரும்
புவிவாழ்ந்த தென்றும் இலையே
கையாற வேலன் கால்தேடிப் பற்றக்
கவினாடும் இன்ப நிலையே
தெய்வானை நாதன் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே!

இப்பாடல் பத்தும் எப்போதும் பாட
எந்நாளும் இன்பம் மிகுமே
செப்பாத போதும் தப்பேதும் இல்லை
செவியாறக் கேட்பின் நலமே
தப்பாது தேடும் தரமான வீடு
தனதாக வந்து விடுமே
அப்பாவின் பிள்ளை அழகேச வள்ளல்
அவனாசி உண்டு நிதமே!

*மீயன்னா சேவுகன் செட்டி*

# வாருங்கள்! பாடுங்கள்!

**வாருங்கள் தோழர்களே நீங்கள் பாடுங்கள் பாடல்களே**
**வாருங்கள் தோழர்களே நீங்கள் பாடுங்கள் பாடல்களே**

வாருங்கள் தோழர்களே நீங்கள் பாடுங்கள் பாடல்களே
வாருங்கள் தோழர்களே நீங்கள் பாடுங்கள் பாடல்களே

இரவும் பகலும் பாடும் பாடல்
திருமுரு கன்பாடல்-கண்
எதிரே தெரியும் காட்சிகள் எல்லாம்
ஈசன் விளையாடல்!
வரவும் செலவும் பார்த்தது போதும்
வாருங்கள் தோழர்களே!-புது
மலரைத் தூவிப் பாடுங்கள், நீங்கள்
முருகன் பாடல்களே!
வாருங்கள் தோழர்களே-நீங்கள்
பாடுங்கள் பாடல்களே!

துள்ளித் திரியும் பள்ளிப் பருவம்
தூரம் போயாச்சு-அந்தத்
துடுக்குப் பேச்சும், அடிக்கும் கூத்தும்,
தொலைந்த காசாச்சு!
அல்லும் பகலும் கொல்லும் கவலை
ஆயிரம் வந்தாச்சு-அவனை
அண்டிய உடனே நெஞ்சினில் கொஞ்சம்
அமைதியும் உண்டாச்சு!
வாருங்கள் தோழர்களே!-நீங்கள்
பாடுங்கள் பாடல்களே!

வேலும் மயிலும் துணை

மாலை அணிந்த வேளையி லேபுது
வலிமை சேர்கிறது-நம்
வலிகளும் நெஞ்சில் கிலிகளும் கூட
மறைந்து போகிறது!
பாலைச் சொரிந்து வேலை வணங்கும்
பரம்பரை வாழ்கிறது-தினம்
பாடிய பாட்டும் வீசிய சீட்டும்,
பலிதம் ஆகிறது!
வாருங்கள் தோழர்களே-நீங்கள்
பாடுங்கள் பாடல்களே!

அதிலும் இதிலும் அலைமோ தாமல்
அவனை நம்புங்கள்
அனுபவம் எல்லாம் அவனருள் என்றே
ஆறுதல் கொள்ளுங்கள்!
பதிலும் அவனே கேள்வியும் அவனே
பக்குவம் அடையுங்கள்-நீங்கள்
பழமுதிர் சோலை மலைமுரு கேசன்
பாதம் பணியுங்கள்!
வாருங்கள் தோழர்களே-நீங்கள்
பாடுங்கள் பாடல்களே!

*பேராசிரியர் அருட்கவி கு.செ. இராமசாமி. எம்.ஏ.*

## வருவாய் வருவாய் வடிவேலா

**வருவாய் வருவாய் வடிவேலா**
**வள்ளி மணாளா வடிவேலா**
**நலமா நலமா வடிவேலா**
**நடை தான் சுகமா வடிவேலா**

ஆண்டுகள் தோறும் தவறாமல்
ஐயா உன்னை மறவாமல்
வேண்டி உன்னிடம் வருபவர்க்கு
வேண்டியதெல்லாம் தருவாயே (வருவாய்)

கால்கள் நடந்திட மறுத்தாலும்
களைப்பால் நெஞ்சம் துடித்தாலும்
முருகா என்றுனை அழைப்பவர்க்கு
வருவாய் மயிலுடன் துணையாக (வருவாய்)

வேங்கை மரமாய் நின்றவனே
வேதம் யாவும் கற்றவனே
தேனில் குளிக்கும் தெள்ளமுதே
தேவா ஊஞ்சல் ஆடுகவே (வருவாய்)

தேசிகன் தோளில் சுமந்துவரத்
தெம்புடன் பெண்கள் தொடர்ந்து வர
ஆயிரம் பக்தர்கள் நடந்து வர
ஐயா முருகா காட்சி தர (வருவாய்)

கண்டேன் முருகனின் காலிரண்டு
கண்ணும் தோளும் பன்னிரண்டு
வேலும் மயிலும் தானுண்டு
வெற்றி முகங்கள் ஆறுண்டு (வருவாய்)

வாழ்வில் ஆயிரம் விதமுண்டு
வருவதும் போவதும் பலவுண்டு
சிந்தையில் ஆயிரம் நினைவுண்டு
செயலில் காட்டிட நீ உண்டு (வருவாய்)

வேலும் மயிலும் துணையுண்டு
வெற்றி பெற உன் அருளுண்டு
நாளும் நினைத்திடும் மனமுண்டு
நலியா வரம்தர நீ உண்டு (வருவாய்)

பொன்னும் பொருளும் வேண்டாமல்
எண்ணிய தெல்லாம் தருபவனே
கண்ணில் மணியாய் ஒளிர்பவனே
தண்ணீர் மலை வாழ் வேலவனே (வருவாய்)

தன்னைத் தானே மறந்தாலும்
தாகம் பசிதான் எடுத்தாலும்
உன்னை மறவா வரந்தருவாய்
கந்தா முருகா கதிர்வேலா (வருவாய்)

அருட்பெரும் ஜோதி நீயப்பா
அன்பின் ஊற்றே தேனப்பா
சடுதியில் வந்தென்னை ஆளப்பா
சடையன் மகனே வேலப்பா (வருவாய்)

வென்றிடும் படைவீடு ஆறுண்டு
விரைவாய் சென்றிட மயிலுண்டு
பழமுதிர் சோலையும் அதிலொன்று
பழநியில் நிற்பாய் வேல்கொண்டு (வருவாய்)

தாயும் நீயே வடிவேலா
தந்தையும் நீயே கதிர்வேலா
சேயும் நானே செல்வாளன்
சிந்தையில் ஊஞ்சல் ஆடுகவே (வருவாய்)

சேரன் காவடி கோடி வரும்
தெருவினில் ஆயிரம் ஆடிவரும்
தேன்போல் இனித்திடப் பாடிவரும்
தேவா உனையே நாடி வரும் (வருவாய்)

தத்திடும் மயிலில் வருபவனே
சக்தி உமையவள் திருமகனே

இருப்பாய் பழனியில் இருப்பவனே
திருப்பதி மலையான் மருமகனே (வருவாய்)

ஐயா பழனியில் நீராடி
பொய்யா மணியில் உனைத்தேடி
மெய்யாய் துதிப்பேன் கவிபாடி
பொய்யா வரமருள் எனைநாடி (வருவாய்)

அல்லல் தீர்ப்பது இரண்டு முகம்
அருளைப் பொழிவது இரண்டு முகம்
ஆனந்தம் அளிப்பது இரண்டு முகம்
அன்பின் வடிவம் ஆறுமுகம் (வருவாய்)

ஆசையில் விளைவது பொய்யப்பா
அனைத்தும் நீயே மெய்யப்பா
அடிமையின் பால்மனம் வையப்பா
அன்புடன் கருணை செய்யப்பா (வருவாய்)

போதும் சோதனை வேண்டாம் வா
போகரின் பொக்கிஷக் கனியே வா
பொதுநடப் புண்ணியன் மகனே வா
பொய்கையில் பூத்த மலரே வா (வருவாய்)

மேலைச் சிவபுரி வேலவனே
வேழ முகத்துக் கிளையவனே
கூவும் சேவற் கொடியோனே
குமரா ஊஞ்சல் ஆடுகவே (வருவாய்)

தஞ்சம் நீயே வடிவேலா
தணிகைக்கரசே வடிவேலா
கொஞ்சும் சதங்கை ஓசையுடன்
நெஞ்சில் ஊஞ்சல் ஆடுகவே (வருவாய்)

குற்றம் எத்தனை செய்தாலும்
குமரா நீயே பொறுத்தருள்வாய்
கருணைக்கடலே உனதடிமை
கலியுக வரதா கதிர்வேலா (வருவாய்)

கல்வியும் செல்வமும் தருவாய் நீ
கவலைகள் யாவும் தீர்ப்பாய் நீ
மாணிக்கம் இயற்றிய கவிதையினைக்
காணிக்கையாகவே ஏற்றிடுவாய் (வருவாய்)

# முருகன் என்ற சொல்லிலுள்ள மகிமை அறிந்தேன்

**முருகன் என்ற சொல்லிலுள்ள மகிமை அறிந்தேன்**
**கருணையுள்ளம் கொண்ட அவனை என்றும் மறவேன் -**
**நான் என்றும் மறவேன்**

கருவறையில் முதன் முதலில் அவனை அறிந்தேன்
அன்னைவழி அவன் புகழை நாளும் உணர்ந்தேன்
தமிழ்க்கடவுள் முருகன் என்று கேட்டு வளர்ந்தேன்
அவனருளைப் பெற வேண்டி தினமும் முயன்றேன்

அழகன் அவன் உருவினிலே மனமும் மயங்கும்
ஆறுபடை வீடு சென்றால் உண்மை விளங்கும்
அற்புதமாய் அலங்காரம் அழகு ஜொலிக்கும்
முத்தமிழால் போற்றுகையில் உள்ளம் இனிக்கும்

பகையழித்துத் தீமைகளை அகல வைத்தவன்
அசுரர்களைக் களையெடுக்க வேல் எடுத்தவன்
இடரகற்றி காத்து நிற்கும் மயில் வாகனன்
சிக்கலின்றி வாழவைக்கும் சிங்கார வேலன்

பக்தர்களின் பாசத்திலே மனம் களிப்பவன்
வளமனைத்தும் தந்து வாழ்வில் உயரவைப்பவன்
அபயமென்று குரல்கொடுத்தால் ஓடி வருபவன்
யாமிருக்க பயமேன்? என்று காத்து நிற்பவன்

கார்த்திகைக்கும் சஷ்டிக்கும் விரதம் ஏற்பவன்
யாத்திரைக்கும் காவடிக்கும் காவல் நிற்பவன்
விசாகம் தைப்பூசம் உத்திரம் என
விதவிதமாய் விழாக்காணும் அழகு வேலவன்

நேர்வழியில் சென்றால் அவனை நெருங்கமுடியும்
அன்பின் வழி அவனைத் தினம் அணுகமுடியும்
நல்லெண்ணம் கொண்டால் அவனை அறியமுடியும்
காலமெல்லாம் அவன் துணையை உணரமுடியும்

அவன் நினைவில் வாழுவதில் ஆனந்தம்கொள்வோம்
அவன் பாடல் பாடுவதில் பரவசம்கொள்வோம்
அருள் வேண்டி தினமுமவன் காலடி தொழுவோம்
வள்ளல் அவன் தரும்வரத்தால் வாழ்வில் உயர்வோம்

*வெ.இராகவன், 12 ஜனவரி, 2011.*

# வந்தான் வேலன் விளையாட

**வந்தான் வேலன் விளையாட**
**வேலும் மயிலும் உடனாட**
**வந்தான் வேலன் விளையாட**
**வேலும் மயிலும் உடனாட**

வந்தான் வேலன் விளையாட
வேலும் மயிலும் உடனாட
வந்தான் வேலன் விளையாட
வேலும் மயிலும் உடனாட

வேலின் உருவில் இருப்பவனாம்
வேதனை எல்லாம் களைபவனாம்
வாரி வாரி தருவதனால்
வள்ளல் முருகன் ஆனவனாம் (வந்தான்)

சிங்கை நகரில் வாழ்பவனாம்
சிந்தை முழுவதும் நிறைந்தவனாம்
செல்வ வளங்கள் தருபவனாம்
செட்டி மகனாய் திகழ்பவனாம் (வந்தான்)

காவடி பிள்ளைகள் யாவரையும்
காலமும் காக்கும் கந்தனவன்
சேவடி நம்பி வருவோரின்
சந்ததி காக்கும் வேலவனாம் (வந்தான்)

படைவீடு ஆறு கொண்டவனாம்
பக்தரின் குறையைத் தீர்ப்பவனாம்
எழாம் படையாம் சிங்கையிலே
தெண்டாயுதம் ஏந்தி நிற்பவனாம் (வந்தான்)

காவடி தோள்களில் ஆடிவர
பால்குடம் அருகினில் பவனிவர
கந்தன் புகழைப் பாடிவர
வந்தான் வேலன் விளையாட (வந்தான்)

அன்பால் நாமும் கூடிடுவோம்
அவனருள் வேண்டி வணங்கிடுவோம்
பஜனைகள் செய்து மகிழ்ந்திடுவோம்
அவன் புகழ்பாடிப் பணிந்திடுவோம் (வந்தான்)

*அழகு திருநாவிற்கரசு, நாச்சியார்புரம், ஜனவரி, 2011.*

# பழனிமலை படியேறு

## படியேரப்பா படியேறு பழனிமலையதன் படியேறு
## படிப்படியாக நீயேறு பல படியாக முன்னேறு

படியேரப்பா படியேறு பழனிமலையதன் படியேறு
படிப்படியாக நீயேறு பல படியாக முன்னேறு

ஒரு படியேறிட முருகன் அவன்
உயர்படியில் நம்மை ஏற்றிடுவான்
மறுபடி மறுபடி மலையேற
மலைக்கும்படி நம்மை மாற்றிடுவான்

நித்தமுமே திருப்புகழைப் படி
நிலைத்த உறுதியைக் கொண்டபடி
உத்தம அடியார் சென்றபடி
உள்ளத்தில் முருகனை நினைத்தபடி

அகத்தைக் கெடுக்கும் ஆசைப்படி
அதனை முதலில் வாழ்வில்படி
புகழைக் கொடுத்தே காக்கும்படி
புண்ணிய பழனியின் திருப்படி

சர்க்கரைகாவடி எடுத்தபடி
சண்முகன் திருவருள் தொழுதபடி
சந்ததி மறுபடி தழைக்கும்படி
சரவணன் பாடல்கள் தினமும்படி

வேலனை நினைப்போர் எண்ணப்படி
வேண்டுவதெல்லாம் நல்லபடி
வாழ்வில் வசந்தம் வந்தபடி
பணிவும் பதவியும் வந்தபடி

செய்யும் தொழில்கள் சிறக்கும்படி
சிந்தையில் முருகன் இருந்தபடி
தருவான் அருளை நல்லபடி
பெற்றே வாழ்வோம் சொல்லின்படி

வள்ளிக் கணவன் அருளின்படி
வாடாமல் பயிர் தழைக்கும்படி
அள்ளித் தந்திடும் வள்ளல்படி
அகிலெமெல்லாம் அருள்பழனிப்படி

வேலும் மயிலும் துணை

# வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை

**வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை**
**குகனுண்டு குறையில்லை மனமே**
**கந்தனுண்டு கவலையில்லை மனமே**

வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறையில்லை மனமே
கந்தனுண்டு கவலையில்லை மனமே

நீலகண்டன் நெற்றிக் கண்ணில் நெருப்பு வடிவாகத் தோன்றி
நிருதர் குலத்தை அழித்த நிர்மலன் - முருகன்

விழிகளொரு பன்னிரண்டு உடையவனே என்று சொல்லி
விழிகளிலே நீர்  பெருக்கி நின்றேன் - முருகா

உலகமென்னும் கடல் தனிலே உடல் என்னும் ஓடமது
உன்னடிக் கரை அடைய அருளுவாய் - முருகா

ஓயாது ஒழியாது உன் நாமம் சொல்பவர்க்கு
உயர் கதிதான் தந்திடுவான் - முருகா

கருணையே வடிவமான கந்தசாமித் தெய்வமே உன்
கழலடியைக் காட்டி என்னை ஆளுவாய் - கந்தனே

நெற்றியிலே நீறணிந்து நெறியாக உனை நினைத்து
பற்றினேன் உள்ளமதில் உன்னடி - முருகா

நெஞ்ச மதில் வஞ்சமின்றி நிர் மலனே நின்னடியைத்
தஞ்சமென நெஞ்சமதில் எண்ணினேன் - முருகா

ஆறுபடை வீட்டினிலே ஆறுமுக வேலவனே
ஆதரித்து எனை ஆளும் ஐயனே - முருகா

வடிவேலா என்று தினம் வாழ்த்துகின்ற அடியவர்க்கு
கொடிய வினை தீர்த்திடுவான் பாருமே - முருகா

## திருத்தலத்தை மறக்க முடியுமா!

**பழனிமலைக்கு நான் வராமல் இருக்க முடியுமா - உன்**
**பால்வடியும் திருமுகத்தை மறக்க முடியுமா!**
**முருகா மறக்க முடியுமா!**

பழனிமலைக்கு நான் வராமல் இருக்க முடியுமா
உன் பால்வடியும் திருமுகத்தை மறக்க முடியுமா!

ஆண்டுதோறும் ஆண்டுதோறும் பழனி வருகிறேன் - என்
ஆண்டவனே உனதருளை வேண்டி வருகிறேன்
தெய்வயானை வள்ளியுடன் நீவருவாயா - உன்னைத்
தேடிவரும் எங்களுக்கு அருள்தருவாயா!

காவடியைக் கண்டவுடன் பக்தி பெருகுது - என்
கால்வலியும், மேல் வலியும் பறந்து செல்லுது
கட்டிவரும் காவடியில் வீற்றிருப்பவனே - அதைச்
சுமந்து வரும் தோள்களுக்குத் துணை இருப்பவனே!

வெற்றியுடன் எனது வாழ்வு நடைபெற வேணும் - நான்
வேண்டும் வரம் தந்து எனைக் காத்திட வேண்டும்
அன்னதானமடத்தினிலே கொலு விருப்பவனே! - அங்கே
ஆறுகாலு சவுக்கையிலே ஆடிநிற்பவனே!

அருளாடி வடிவினிலே நேரில் வந்திடுவாய் - உன்
அடியவர்க்கு பொன் பொருளை அள்ளித் தந்திடுவாய்
தங்கரதம் ஏறி இங்கே நீவருவாயா - பெற்ற
தாய்போல எங்களுக்குத் துணை இருப்பாயா

*அருளிசைமணி, லெ. சோமு, பெங்களூர்.*

## செல்வ முத்துகுமரன்.

முத்துக்குமரா முத்துக்குமரா முத்துக்குமரா வா வா
செல்வக்குமரா செல்வக்குமரா செல்வம் அள்ளித்தா தா

புள்ளூர் வாழும் முருகனை மனதில் எண்ணிக் கொள்ளுங்கள்
பொன்னும் தருவான் பொருளும்
தருவான் அள்ளிக் கொள்ளுங்கள்

புள்ளி மயிலோன் வள்ளி மணாளன் புகழைப் பாடுங்கள்
வள்ளிக் கணவன் அள்ளித் தருவான் வாங்கிக் கொள்ளுங்கள்

காட்டுப் பாதை வண்டிகள் கட்டி கால்நடை போடுங்கள்
காட்டுவான் பாதை கந்தன் வாழ்வில்
கவலையைத் தள்ளுங்கள்

செந்தூர் கந்தன் சீரலை வாயில் சிரிப்பதைப் பாருங்கள்
இந்தூர் கந்தன் இன்பம் தருவான் ஏற்றுக் கொள்ளுங்கள்

சக்தியின் மைந்தன் சண்முக நாதனை
அர்ச்சனை செய்யுங்கள்
வைத்திய செல்வன் வளமாய்த் தருவதை
வாங்கிக் கொள்ளுங்கள்

சித்திரை மாதம் பௌர்ணமி நிலவாய்
சிரிப்பதைப் பாருங்கள்
பத்தரை மாற்றுத் தங்கம் அவனை பற்றிக் கொள்ளுங்கள்

*அருண் வீரப்பன், காரைக்குடி,*

## செல்வமகன் பிறக்க வேண்டும் பழனியாண்டவா

பழனியாண்டவா முருகா பழனியாண்டவா - இந்தப்
பாரெல்லாம் ஆள்பவனே பழனியாண்டவா
குன்றக்குடி வேலவனே பழனியாண்டவா - எங்கள்
குலமெல்லாம் காப்பவனே பழனியாண்டவா

கொஞ்சுதமிழ்ப் பாடல் கேட்கும் பழனியாண்டவா - எங்கள்
குழந்தைவடி வேலவனே பழனியாண்டவா
தஞ்சமென்றே தாள்பணிந்தேன் பழனியாண்டவா - நீ
கொஞ்சம்கண்ணைத் திறந்துபாரேன் பழனியாண்டவா

முத்தான முத்தல்லவோ பழனியாண்டவா - செல்வ
முத்துக்குமர தெய்வமே என் பழனியாண்டவா
சக்திவேலைப் பெற்றவரே பழனியாண்டவா - ஒரு
சந்ததியைத் தந்தாலென்ன பழனியாண்டவா

பழனிமலைப் பேரரசே பழனியாண்டவா - இந்தப்
பக்தர்குறை தீர்ப்பவரே பழனியாண்டவா
பாலதெண்டபாணியே என் பழனியாண்டவா - சிவ
பாலன் வந்து பிறக்கவேணும் பழனியாண்டவா

ஷண்முகமாய் ஒளிவீசிப் பழனியாண்டவா - மனச்
சஞ்சலங்கள் தீர்ப்பவரே பழனியாண்டவா
குன்றுதோர் ஆடிவரும் பழனியாண்டவா - நல்ல
குமரன்வந்து பிறக்கவேணும் பழனியாண்டவா

மயிலேறி விளையாடிப் பழனியாண்டவா - எங்கள்
மனக்குறையைத் தீர்ப்பவரே பழனியாண்டவா
மங்கலங்கள் பெருகிவரப் பழனியாண்டவா - நல்ல
மகன்வந்து பிறக்கவேணும் பழனியாண்டவா

சேவல்கொடி கொண்டவரே பழனியாண்டவா - வளர்
சிங்கார வேலவரே பழனியாண்டவா
செந்தில்வளர் ஆண்டவரே பழனியாண்டவா - ஒரு
செல்வமகன் பிறக்கவேணும் பழனியாண்டவா

தங்கரதம் ஏறிவரும் பழனியாண்டவா - புகழ்
தெண்டபாணித் தெய்வமே என் பழனியாண்டவா
ஆடுமயில் ஏறிவரும் பழனியாண்டவா - ஒர்
அருமைமகன் பிறக்கவேணும் பழனியாண்டவா

காவடியில் நின்றாடிப் பழனியாண்டவா - மனக்
கவலையெல்லாம் தீர்ப்பவரே பழனியாண்டவா
திருவடியே சரணமெனப் பழனியாண்டவா - உனைத்
தினம்தொழுவேன் மகன்தருவாய் பழனியாண்டவா

வயலூரில் வாழ்பவரே பழனியாண்டவா - எங்கள்
துயரமெல்லாம் தீர்ப்பவரே பழனியாண்டவா
வடிவழகே பேரழகே பழனியாண்டவா - நல்ல
வரம்தருள்வாய் மகன்பிறக்க பழனியாண்டவா

*அருளிசைமணி நேமத்தான்பட்டி அரு.சுப்பிரமணியன்.*

## எண்ணிட எண்ணிட ஆனந்தம்

**சாமியே முருகையா ! சாமியே சரணம் முருகையா !**

எனதென எனதென எத்தனையோ
பல எண்ணங்கள் தோன்றி மறைந்திடினும்
உனதென யாவையும் உணர்கையிலே
தான் உண்மையில் நிம்மதி உண்டாகும்
சினமதை நீக்கி இனிமையை நல்கும்
சக்தியின் மைந்தா முருகேசா!
மனத்தினில் உன்னை நித்தமும் வைத்து
எண்ணிட எண்ணிட ஆனந்தம்

அந்தமும் ஆதியும் யாவையு மான
உனை வந்தடைந்திட மனிதர்குலம்
சொந்தமும் பந்தமும் யாவையும் நீக்கி
துறந்திட வேண்டும் எனுமுலகம்
எந்தன துறவுகள் அத்தனைப் பேரும்
உந்தன் வடிவே என்பதனைச்
சிந்தையில் வைத்தால் சீருடன் ஊறும்
எண்ணங்கள் எல்லாம் ஆனந்தம்

சூரிய னாக வலம்வரும் நீயோ
பூமியில் உயிர்களுக் காதாரம்
பாரினில் நானோ பனித்துளி பலவுள்
ஒன்றாய் வாழ்வது சிலகாலம்
பெருமிதத் தோடே ஒளிவிட மிளிர்வதும்
பேரருள் புரிவோய் உன்னாலே
உருகியே ஒருநாள் மறைந்தே போவதும்
உன்னால் என்பதில் ஆனந்தம்

கற்றவை யெல்லாம் கணக்கினில்
வைத்தால் சிறுகை மண்ணள வெனவாகும்
முற்றிலும் உணரா உண்மைகள் மட்டும்
எண்ணில் அடங்கா ஏராளம்
உற்றதை வைத்து உன்னையே நம்பி
பயமதை நீக்கி வாழ்கின்றேன்
மற்றவைக் கெல்லாம் நீதுணை
என்பதை மனத்தினில் வைத்தால் ஆனந்தம்

காரண மேபல நானறி யாமல்
என்மனத் துள்நீ வைத்திட்டாய்
காரிய மாக  கடமைகள் பலவும்
எனக்கே என்று விதித்திட்டாய்
பூரண பலனை நன்கறிந் தேநீ
காரணம் வைத்திடும் விளையாட்டில்
நேரிடும் முடிவுகள் தனைநினை யாமல்
கடன்செய் திருப்பதில் ஆனந்தம்

நாற்பரி மாண வெளியினில் நானோ
நூலாய் ஓடும் ஒருகோடு
பார்ப்பவர் பார்வையில் நன்மையும் தீமையும்
தெரிவது வெல்லாம் உன்பாடு
காப்பவன் நீயே அழிப்பவன் நீயே
என்செய லெல்லாம் நீயேதான்
தோற்பதும் வெல்வதும் உனையே சேர்ந்திடும்
என்பதை நினைக்கையில் ஆனந்தம்

*லெ. சுப்பிரமணியன், தேவகோட்டை. ஜனவரி 2012.*

# கண் எதிரே வருவாயா கடவுளே

கந்தனுக்கு அரோகரா - முருகனுக்கு அரோகரா
கந்தனக்கு அரோகரா கந்தையா -
முருகனுக்கு அரோகரா முருகையா

பழனியிலே சன்யாசம் - பரங்குன்றில் கல்யாணம்
புரியலியே உன்கணக்கு முருகையா -
புவியிறங்கி என் தமிழில் உருகையா

பழனிமலை அடிவாரம் - பாடுகின்றோம் புது ராகம்
அழகுமயில் வேலவனே கந்தையா -
அருளை அள்ளித் தரணும் இங்கு வந்தையா

மருத மலை பழனி மலை - மயிலாடும் சுவாமிமலை
தணிகை மலை நாயகனே வேலைய்யா -
தமிழ்க் கேட்க இன்று நல்ல நாளைய்யா

ஆழிக்கரை நாழிச்சுனை - அழிந்தது பார் சூரப் படை
அலையாடும் செந்தூரின் குமரைய்யா -
விளையாடி வெற்றிகொண்ட சமரைய்யா

சிக்கலிலே சிங்காரம் - சொக்க வைக்கும் அலங்காரம்
பக்கமிரு தேவியுடன் வேலவா
பளபளக்கும் பரிதியினைப் போலவா

குன்றக்குடி ஆறுமுகம் - கொடியவர்க்கு வேறுமுகம்
என்றைக்கும் வணங்கிடுவோம் சண்முகம்
எதிரிகளும் பெறுவாரே மென்முகம்

வடபழனி வடிவேலன் - வழி நடத்தும் சிவபாலன்
அனுதினமும் தொழுதிடுவோம் ஆண்டியே
அறம் பொருள் இன்பமெலாம் வேண்டியே

தகப்பனுக்கே குருவானாய் தமிழ்முருகப் பெருமானாய்
மனக்கவலை தீர்க்கும் மயில் வாகனா
மாதிருவர் மயங்குகின்ற மோகனா

சென்னையிலே கந்த சுவாமி  சிங்கையிலே தண்டபாணி
கணஎதிரே வருவாயா கடவுளே
காத்திடுவாய் உனது மயில் சிறகிலே

பத்துமலை முத்துக்குமார் பக்தர்களை ரட்சிக்கிறார்
சக்தி உமை பாலகனே  சரவணா
சாம்பசிவன் மைந்தனுக்கு அரஹரா

*பாடல் : வைரம்*

# எங்கள் வீட்டில் ஒருவன் நீ

**வேலா வேலா வடிவேலா**
**வேண்டும் வரங்கள் தருவாய் நீ**
**கந்தா கடம்பா கதிர்வேலா**
**தமிழால் அழைத்தோம் வருவாய் நீ**

சிங்கை நகரின் வேலவனே
வேலில் தோன்றிய அழகன் நீ
நகரத் தாரின் காவலனே
முத்தமிழ் போற்றும் முதல்வன் நீ (வேலா)

தைப்பூச நாளும் வந்துவிட்டால்
நாளும் பொழுதும் நினைவில் நீ
பாற்குடம் காவடி யாத்திரையில்
கூட்டிச் செல்லும் பாடல் நீ (வேலா)

அறுபடை வீட்டில் குடிகொண்டு
அகிலம் காக்கும் நாயகன் நீ
அன்பு நிறைந்த நெஞ்சத்தை
அனுதினம் படிக்கும் வாசகன் நீ (வேலா)

அறியாப் பிழைகள் அத்தனையும்
அன்பாய்த் திருத்தும் அன்னை நீ
தெரிந்தே செய்யும் தவறுகளைத்
தட்டிக் கேட்கும் தந்தை நீ (வேலா)

சுவாசம் திணறும் தருணத்தில்
உயிரை நிரப்பும் காற்றும் நீ
உண்மை நிறைந்த உள்ளத்தில்
உதிக்கும் உயர்ந்த எண்ணம் நீ (வேலா)

வேலும் மயிலும் துணை

கவலைகள் தைக்கும் வலியதனைக்
களைந்திடும் நெஞ்சத் திறமும் நீ
கண்ணீர் பொங்கும் விழியதனைத்
துடைத்திடும் அன்புக் கரமும் நீ (வேலா)

வாழ்க்கை ஓட்டம் துவங்கையிலே
வேகம் கொடுக்கும் சக்தி நீ
ஓடிக் களைத்து நிற்கையிலே
தாகம் தணிக்கும் தண்ணீர் நீ (வேலா)

மலையென மயக்கும் பணியினையும்
பனியெனக் கரையச் செய்பவன் நீ

தனியாய்த் தவிக்கும் கணங்களிலே
துணையாய் நிற்கும் தோழன் நீ (வேலா)

சிந்தை மயங்கும் மணித்துளியில்
ஜொலிக்கும் அறிவுச் சுடரும் நீ
வாழ்வில் தோல்வி தழுவுகையில்
அனுபவ வடிவில் ஞானம் நீ (வேலா)

சிக்கல்கள் புயலாய்ச் சீறுகையில்
தெளிவைக் கூட்டும் தென்றல் நீ
திக்குத் தொலைந்து தவிக்கையிலே
திசையைக் காட்டும் வெளிச்சம் நீ (வேலா)

எங்கள் வீட்டில் ஒருவன் நீ
எல்லோருக்கும் தலைவன் நீ
எல்லாம் தந்த வள்ளல் நீ
எம்குலம் காக்கும் கடவுள் நீ (வேலா)

*வெ.–ராகவன், 12.12.2012*

## ஞானமலை

**நீயாளும் ஞானமலை வடிவானவா**
**நெஞ்சத்தில் குடிகொண்டு அரசாளவா - 2**

கலையான உன்னழகு கவியாகுமே
கனிவான புன்சிரிப்புக் கலந்தாடுமே
சிலையான உன்வடிவம் சிறப்பாகுமே
சிந்திகச் சிந்திக்க அருள் கூறுமே

புகழுக்கும் புகழ்ச்சிக்கும் அருளானவா
புண்ணியம் உனைக் கண்டால் அதைக் கூறவா
சிவன்சக்தி உன்னோடு இணை காணவா
அவன்சக்தி உன்மயில் அதைக் கூறவா

உள்ளங்கள் செழித்தோங்க உனைத் தேடுமே
உனைப்பாடும் நாவிற்குச் சுகமாகுமே
அன்னையின் அன்பாகத் தாலாட்டுமே
அதைக் கேட்டு என்நெஞ்சம் பாலாகுமே

நோயில்லா வாழ்க்கைக்குத் துணை யானவா
நொடிப் பொழுதில் வினைதீர்க்கும் மருந்தானவா
வடிவான தெய்வானை இடமானவா
வலமாக வள்ளிக்கு வளமானவா

செல்வங்கள் செல்வாக்குச் சிறந்தோங்குமே
சிறப்பான வாழ்க்கைக்கு வழி கூறுமே
துன்பங்கள் நமைவிட்டு விரைந் தோடுமே
துணையாக உனைக் கண்டால் நலமாகுமே

*கந்தன் அருள் ஆர்.வீ. இராமநாதன்*

## மலையாண்டி

ஆவினன் குடியிலோர் ஆண்டி - நம்
ஆவியில் மேவியே குடியிருப் பான்டி
பூவினைப் போல்மனம் வேண்டி - நம்
புத்தியை நித்தமும் பார்த்திருப் பான்டி

நெஞ்சிலே மாசினைப் போக்கு - அந்தச்
சண்முகன் காவடி தோளிலே தூக்கு
காயத்தைப் பிறருக்கே ஆக்கு - நம்மைக்
காப்பது முருகனின் சத்திய வாக்கு

தமிழினால் முருகனைப் பாடு - அந்தச்
சங்கரன் பிள்ளையை நாடியே ஓடு
பாதைகள் முள்நிரை காடு - தென்
பழநியைக் கண்டவர் அடைவது வீடு

பிள்ளையும் குட்டியும் பந்தம் - தெய்வப்
பிள்ளையாம் முருகனே பிரியாத சொந்தம்
மல்லிகைப் பூவென நெஞ்சம் - என்றும்
வாய்த்திட மலையாண்டி பாதமே தஞ்சம்

*டாக்டர். அர. சிங்கார வடிவேலன் கண்டனூர்*

## அனைத்தும் நீயே

**வேலலோடும் மயிலோடும் வருவாயப்பா!**
**வேதனைகள் தீர்த்து நலம் தருவாயப்பா!**

உண்ணும்போது நீதானே சுவையைத் தருகிறாய்
உறங்கும்போது முருகய்யா கனவாய் வருகிறாய்
எண்ணும்போது நீதானே இதயம் ஆகிறாய்
எழுதும்போது முருகய்யா கவிதை ஆகிறாய்

உழைக்கும் போது நீதானே உதிரம் ஆகிறாய்
ஓய்வினிலும் முருகய்யா தென்றல் ஆகிறாய்
களைக்கும் போது நீதானே வலிமை தருகிறாய்
கடமையினை நினைவூட்ட கதிரோன் ஆகிறாய்

பள்ளியிலே படிக்கையிலே பாடம் ஆகிறாய்
பள்ளியறை படுக்கையிலே வாழ்வுதருகிறாய்
துள்ளிவரும் பருவத்திலே தொண்டன் ஆகிறாய்
தோல்விவரும் நேரத்திலே துணைவன் ஆகிறாய்

வணிகத்திலும் முருகய்யா கணிதம் ஆகிறாய்
வறுமையிலும் என் அய்யா பொறுமை தருகிறாய்
துணிவினுக்கு முருகய்யா வேலைத் தருகிறாய்
தோழமைக்கு நீதானே நேசம் தருகிறாய்

சேயாய் நான் தவக்கையிலே தாயாய் வருகிறாய்
செந்தமிழைப் படிக்கையிலே தந்தை ஆகிறாய்
பாயும் நீரில் முருகய்யா குளிர்ச்சி தருகிறாய்
பாடும்போது நீதான் ராகம் ஆகிறாய்!

காட்டினிலே முருகய்யா சந்தனம் ஆனாய்
கடலினிலே நல்முத்து, பவளமும் ஆனாய்
நாட்டினிலே நீதானே நம்பிக்கை ஆனாய்
நல்லோர்கள் வாழ்வினிலே எல்லாமும் ஆனாய்!

*புதுவயல் வீரப்பன் - வாவீ*

## நாற்பத்தெட்டு சீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

காருற்றதென்பரங் குன்றமதில் விளையாடும்
கருணையா னந்தகுருவே
காரணம தானபரி பூரணக்ரு பாகரா
கடல்வண்ண னுக்குமருகா
கமலத்தல் வந்தவய னைச்சிறையில் வைத்தவா
கமழ்பழனி யம்பதியனே
கயலொத்த விழிமா தென்னுங்குறப் பெண்ணுக்குக்
கான்வேங்கை மரமானவா

கதியான பொதிகைவரை தனிலுறையு மிருடிக்குக்
கலையேற் றியபண்டிதா
கங்கா தரன் செவியில் ஓங்கார பிரணவம்
கற்பித்த சாமிநாதா
கன்னல்வில் லிக்கருமை மைத்துனா சமணரைக்
கழுமுனையில் விட்ட குமரா
கண்ணா யிரம்பெற்ற அண்மர்கோ னுக்குவரும்
கலியகற் றியதெய்வமே

சீருற்ற நின்மகிமை தெண்டனிட்ட டியவர்கள்
செப்புவிண் ணப்பமதுகேள்
செய்வினை கொண்டதாற் கருவிலுருவாகிய
சென்மித்து வந்தபின்
சிசுவென்று முலையுண்டு பதினாறு வயதினிற்
செந்தமிழ்க் கலைபடித்துன்
செகமீதின் மெய்ஞ்ஞான தெய்வமே யுன்றனைத்
தேடிவந் தேனடுத்தும்

தேனுற்ற தாமரைச் சரவணப் பொய்கைதனில்
தீர்த்தமதுதா னாடியும்
சிங்கார மாகளவர் கிரியைவல மாவந்து
சிந்தையின் துயரமெல்லாம்
செப்பியுங் கேளா திருப்பதே னோவுனது
சிந்தையி லிரக்கமில்லையோ
திரமாக வுன்றந்தை மார்கண்ட னுக்கச்
சிரஞ்சீவி கொடுக்க வில்லையோ

ஏருற்ற பன்னிரு புயத்தனே தெந்தினம்
செய்தென்னை யேக்கிறாயோ
இதுவென்ன கலியுகக் கொடுமையோ வுனையன்றி
யின்னமொரு தெய்வமுண்டோ
ஏதாயி னுஞ்சற் றிரங்காத நெஞ்சமோ
என்மீதில் என்ன வாதா
இன்பமிகு கும்பமுலை மங்கையரிடந்தனி
லிணங்கவே வைத்தநினைவா

ஈராறு காதுக்கு ளேழைநான் சொன்னமொழி
எள்ளளவும் கேட்க விலையோ
எண்டிசையு மண்டபகி ரண்டமு முன்றனரு
ளில்லால் நிலை நிற்குமோ
இடையுடை நிகழ்ந்திடி லிருக்கை முபசார
மேவரா கிலுஞ் சொல்வரோ
ஏழைக் கிரங்குமுரு கேசனென் றுன்னையே
இவ்வுலகெ லாஞ்சொல்லுதே

மேருற்ற புயசுரன் மார்பைத் தொளைத்திட
வேல்தொட்ட ரணசூரணே
வித்தா கடம்பா அத்திமுக னுக்கிளையா

வித்தாக சக்திபுதல்வா
வேலைக்கு ளேமகர மீனாக வந்தன்று
விளையாடி நின்றபரனே
விந்தையுட னேசைவமந்திரம் விளங்கவே
விபூதியணி சம்பந்தனே

மேதினியில் ஆதாரம் உன்றருளிய பாதாரம்
மெய்யன்றி வேறில்லையே
வேண்டிய வரந்தந்து தொண்டரைக் காத்தருள
வேளையிது நல்லசமயம்
வெள்ளுரை திருப்புகழ் அருணகிரி மகிழவே
விளையாடு மயில்வாகனா
விஞ்சமுனி வோர்கள்தொழு மஞ்சலென் றருள்புரியும்
வேலா யுதக்கடவுளே.



# ஆறுபடை வீட்டுமாலை

ஆறார் படைவீட்டில் அமர்ந்திடும் என் அய்யனுக்கு
நூறாயிரம்சரணம் நொடிப்பொழுதில் தெண்டனிட்டேன்
காரார் குழலுடையாள் கான்வள்ளி தெய்வானை
மாரால் உகந்தவனே! வருவாய் இதுசமயம்.

பாராளும் மாமுருகா! பரங்குன்றின் வேலவனே!
சீராளும் நாயகமே! சேல்புரளும் தாயகமே!
பேராளும் விண்ணவனே! தெய்வானை மன்னவனே!
வாராமல் நிற்பதேனோ? வருவாய் இதுசமயம்.

உப்பலையும் செந்தூரில் உற்றதிருச் சுப்பையா!
ஒப்பெதுவும் இல்லாத ஒண்டமிழின் நற்றலைவா!
கப்பலுக்குச் செந்தூரின் கண்மணியே! தாமதமேன்?
எப்பய்யா நீ வருவாய்? எழுவாய் இதுசமயம்.

மாம்பழத்தின் ஒன்றாலே மார்தட்டி முன்னாளில்
தேன்பிழியும் தென்பழனி தேர்ந்தெடுத்த வேலவனே
காம்பெடுத்த பூமழையும் கற்றெடுத்த பாமழையும்
வேம்பெடுத்துப் போனதுவோ? விரைவாய் இதுசமயம்.

அப்பனுக்குத் தோள்மீதில் அற்புதமாய் அன்றமர்ந்த
சுப்பையா! ஓங்காரச் சோதிவடி வானவனே!
செப்புமொழி ஆயிரத்தில் செந்தமிழால் ஏரகத்தில்
ஒப்பில்லா ஒமுரைக்க உதிப்பாய் இதுசமயம்.

வெற்பெடுத்த சூர் அழிக்க வேலெடுத்த வேலவனே
அற்புதமே! தேவசேனா பதியாம் கந்தய்யா!
பொற்பாதங்கள் சிவப்பேற போரெடுத்த சினம்தணிய
நற்றணிகை மாமலையாய்! நடப்பாய் இதுசமயம்.

சிலம்பாறு கொஞ்சிவரச் செந்தமிழும் மிஞ்சிவரப்
பழந்தூங்கும் சோலைமலைப் பாலகனே! நீர்நிலத்தால்
நலந்தூங்கும் கள்ளழகர் நயனங்கள் பார்த்திருக்க
வளந்தூங்கும் மாமலையாய்! வருவாய் இதுசமயம்.

அறுபடை வீடுதந்த அய்யாவே! உன்னடிக்குச்
சேறுவழி தாருவழி சேர்ந்துவந்த பாலைவழி
நூறுவழி கால்நடந்து நோன்புதவம் மேல்இருந்து
தீரும்வழி காட்டவந்து (உ)திப்பாய் இதுசமயம்!

எத்தனைநாள் காத்திருந்தேன் ஏறுமலை பூத்திருக்கும்
சித்துவிளை யாடிவரும் செல்வா! திருக்குமரா!

கத்துகுரல் கேட்கலையோ? கடைக்கண்கள் பார்க்கலையோ?
வித்துவிளை வானவனே! விரைவாய் இதுசமயம்!

ஏறாத மாமலைகள் ஏறிவர ஆயிரமாய்
ஊரார்கள் கூடிவர உன்னதமாய் வேலவனே!
நீராக நீபொழிந்து நிர்மலமாம் நெஞ்சளித்த
வீறாக வாழ்வளிக்க விரைவாய் இதுசமயம்.

கையில் ஒரு மூட்டையுடன் கால்கடுக்க வந்தவர்க்கு
மெய்யில் ஒரு மூட்டைபணம் மேலாக்க வந்தவனே!
தையில் ஒரு பொங்கலுக்குத் தடையில்லா வேலவனே
நெய்யில் நிதம் பொங்கலிட நெகிழ்வாய் இதுசமயம்.

ஏடெடுத்த பிள்ளையெலாம் எங்கெங்கோ போகாமல்
நாடெடுத்துப் போற்றிடவே நல்லவடி வேலவனே!
கூடெடுத்துப் போனமனம் கொண்டாடிக் கல்விபெறப்
பாடெடுத்த வேலவனே கண்பார்ப்பாய் இதுசமயம்.

சக்கரங்கள் சுற்றாமல் சத்தியமும் முற்றாமல்
எக்கணமும் ஒத்துழையா மையிருளில் மூழ்கிவரும்
துக்கசாகரம் போயொழியத் தொழிலாளி முன்னேற
முக்கண்ணன் புத்திரனே! முகிழ்ப்பாய் இதுசமயம்.

தோப்பாகி எங்களுக்குத் தொன்றுதொட்டு வந்தவனே
சாப்பாடு பாதையிலே சரிபாதி தந்தவனே!
பூப்போட்டுத் தெண்டனிட்டோம் புள்ளிமயில் வாகனனே!
காப்பாற்ற வேண்டுமய்யா கைகொடுப்பாய் இதுசமயம்!

ஆளான பெண்களெலாம் அன்புமண மாலையினைக்
கேளாமல் கேட்டுவந்தார் கிளையான வேலவனே
தூளாக ஏழ்மையினைத் தூக்கிஎறி வேல்காட்டி
ஆளாக்க வந்திடுவாய் அய்யா இது சமயம்.

பாக்கியமாய்க் கற்றவரும் பட்டங்கள் பெற்றவரும்
நாக்கினிலே கொண்டாடி நாடிவரும் வேளையினை!
சீக்கிரத்தில் நீகொடுத்துச் சீதனங்கள் கேட்காமல்
ஆக்கிடவே வந்திடுவாய் அய்யா! இதுசமயம்.

எத்தொழிலைச் செய்பவரும் ஏமாந்து போகாமல்
முத்தமிழால் காத்துவரும் முருகைய்யா வேலவனே!
எத்தனையோ பேர்வாழ ஈந்தவர்கள் நோகாமல்
வித்தார மாய்த்தருவாய்! விரைவாய் இதுசமயம்.

ஆராரோ பாடிவர அஞ்சுகமாய்க் கண்வளரும்
சீரார் தவப்புதல்வா! சித்தம் இரங்கலையோ
நாராய் இருந்தவர்கள் நன்மலராய் ஆகிவந்தோம்
வாரா திருப்பதுவோ? வருவாய் இதுசமயம்.

காடான பாதையெல்லாம் கால்கடுக்க வந்ததெல்லாம்
மேடான மாமலையில் மேவிஉள்ள வேலவனே
சூடாற ஈரமில்லை சோறுதின்ன நேரமில்லை
வாடா திருப்பதற்கே வருவாய் இதுசமயம்.

நெஞ்சாரப் பக்தியினால் நித்தநித்தம் பாடுகிறோம்
பிஞ்சுமன பாலகர்க்குப் பேசிவரும் வேலவனே!
தஞ்சாவூர் நீர்வளமே! தாலாட்டுப் பாவளமே!
செஞ்சாலி ஆனவனே! சேர்வாய் இதுசமயம்.

காற்றாகி வந்தபுயல் காலனென மாறியதும்
நேற்றாகிப் போனகதை நீமறந்து போனதுவோ?
ஆற்றாத மக்களெலாம் ஆர்வமுடன் ஓங்கிவர
ஊற்றாகி வந்தவனே! உதிப்பாய் இதுசமயம்.

கூடிவரும் செல்வங்கள் கோடிபணம் ஆனாலும்
நாடிவரு வோர்களுக்கு நல்லபணி செய்யாமல்
ஆடிவரும் ஈகையிலார் அத்திமனம் பூத்திடவே
பாடிவரும் வேலவனே! பார்ப்பாய் இதுசமயம்.

கோயிலுக்குள் வாழ்ந்தாலும் கோட்டையிலே வாழ்ந்தாலும்
தாயினுக்குக் கன்றெனவே தாவிவரும் வேலவனே!
நாயினுக்கும் கீழாக நாடுதினம் போகாமல்
சேயினுக்கருள்கொடுக்கச் சேர்வாய் இதுசமயம்.

தத்தளிக்கும் உள்ளங்கள் தான்மணக்கப் பாடியதும்
சித்தத்தில் ஏறலையோ? தென்பழனி வேலவனே!
மத்துதயிர் போலுடைந்தால் மனமென்ன மாமலையா?
புத்துயிரைத் தந்திடுவாய் புரப்பாய் இதுசமயம்.

தாமதமும் ஆவதுவோ? தரிசிக்க வந்தவர்க்குச்
சேமமுற வந்திடுவாய் சேவற் கொடியழகா!
சோமசுந்த ரன்பாட்டில் சொக்கேசன் புத்திரனே!
நாமணக்கப் பாடுகிறோம் நடப்பாய் இதுசமயம்.

*- அருள்நெறித் தொண்டர் 'காசிஸ்ரீ அரு. சோமசுந்தரம்*

# பழனி பயணம்.

## சாமியே முருகையா
## சாமியே சரணம் முருகையா.

முந்நூறாண்டாய் முருகனைத் தேடி
பெண்ணும் ஆணும் பிள்ளையும் கூடி
கண்ணுக் கினிய கடவுளைப் பாடி
நண்ணும் பயணம் நன்மையே ஆக

பழநிக் கடவுள் பாதம் பணியக்
கழனி வரப்பும் கண்மாய்க் கரையும்
நிழலும் காணா நெடுங்கற் பாதை
தழலைத் தாங்கும் தாள்கள் காப்பாய்

பிஞ்சுக் கல்லும் பெரும்பனிக் காற்றும்
கொஞ்சம் கூடக் கொடுமை செய்யாமல்
பஞ்சம் நோய்கள் பகை அணுகாமல்
நஞ்சும் இன்றி நடைவழிக் காப்பாய்

குற்றம் குறைகள் குழந்தைகள் செய்தால்
முற்றும் துறந்த முருகா வேலா
சற்றும் அதனைச் சட்டை செய்யாமல்
வெற்றி அளித்தே வேலா காப்பாய்

வாடைக் காற்றும் வழிநடைச் சோர்வும்
கோடை வெயிலும் கொட்டும் பனியும்
பீடை பிணியும் பிசாசும் திருட்டும்
சோடை செய்யாமல் சுகம் அருள்வாயே.

ஏரிக்கரையில் ஏறி இறங்கித்
தாரின் சாலைத் தடம் வழியாக
ஊரின் பொட்டலில் உறங்கி எழுந்து
பாரில் பழநிப் பயணம் சிறக்க

வண்டிகள் கட்டி வழி நடையாக
பெண்டிரும் பிள்ளையும் பெரியருமாக
அண்டி நெருங்கி ஆண்டிகளாக
உண்டி மறந்த யாத்திரை ஓங்க

தோளில் மூட்டை தொங்கிடு மாறும்
தாளில் ஊக்கம் தழைத்திடு மாறும்
மேலில் போட்ட முதல் துணியோடும்
நாளில் ஏழு நடையும் வெல்ல

நூற்றுப்பத்து மைல்கள் நொடியில்
காற்றுப் போலக் கலந்திடுமாறும்
சாற்றும் சரணம் சங்சலம் நீக்கிக்
கூற்றை வெல்லம் குமரா காப்பாய்

எண்ணெய் காணா ஈர முடியாக
மண்ணே தோய்ந்த மலரடி யாகப்
பண்ணே பாடும் பஜனை களோடு
தன்னிக ரில்லாப் பயணம் சிறக்க

குன்றக் குடியில் கூட்டம் கூடி
நன்றாய்ப் பக்தர் நாற்பதாயிரம் பேர்
ஒன்றே உடலும் உள்ளமு மாக
சென்றே பழநிப் பயணம் சிறக்க

அரண்மனைப் பொங்கல் கலிங்கப் பையா
கரங்களில் நீறு கண்டனூர் சாமி
பரம்பரை யாகப் பழநிப் பயணம்
வரங்கள் தந்து வாழ்த்திடு வாயே

குன்றக் குடியில் முதல் நாள்கூடி
மருதுபட்டியில் மறுநாள் தங்கி
சமுத்திரப் பட்டியில் சற்றே தூங்கி
வேலாம் பட்டியில் துயிலை விரட்டி

செம்மடை ஊரில் சிறிதே தங்கி
சம்மத மாகச் சத்திரப் பட்டி
நம்மவர் பழநிப் பயணம் ஏழ்நாள்
இம்மையின் பயனை இனிதே அருள!

காவடி தூக்கும் கால்நடைப் பயணம்
பூவடி பாடும் புனிதப் பயணம்
சேவடி சற்றும் சிவந்திடாவாறு
பாவடி பாடும் பயணம் சிறக்க

நடப்போர் பசியால் நலியா வாறு
தடத்தில் நீரும் உணவும் தந்து
கடப்போர் சிந்தை களித்திடுமாறு
திடத்தை அருளித் தேவா காப்பாய்

பள்ளயம் இட்டு வேலினைப் பாடி
புள்ளினம் போலப் பயணிகள் கூடி
வெள்ளி முளைத்த வேலையில் உண்டு
துள்ளி நடக்கும் பயணம் சிறக்க

பாதையில் சற்றே பாதம் தளர்ந்தால்
வாதைகள் தீர்க்கும் நீறு வழங்கி
போதைகள் நெஞ்சப் பணிகளை நீக்கி
மேதைகளாக்கி மேன்மைகள் செய்வாய்

பழனியை நோக்கிப் பயணமதாகிக்
குழந்தை வேலன் சன்னதி வணங்கி
பழநி ஆண்டவர் பாதம் போற்றும்
பழநிப் பயணம் பயனாய் முடிய

## குன்றக்குடி பதிகம்

### காப்பு

இன்பம் பெறுவரிசை பொருள்ஞா னம்பெறுவர்
மன்புகழ மக்களுடன் மன்னிடுவர் அன்புடனே
தோகையடி யைங்கரன்றாள் தோத்தரிப்போ ரெஞ்ஞான்றும்
வாகையுடன் நீடுழி வாழ்ந்து.

### வேறு

அப்பனே தந்திமுகத் தரசே வாவா
ஆதியந்த மில்லாத மயமே வாவா
ஒப்பிலாத் தொந்தி வயிற் றுடையா வாவா
உமையரனா ஈன்றெடுத்த வொளியே வாவா
முப்பழந்தேன் அவல்கடலை மோத கந்தான்
முழுதுமுண்ட மோகனமும் தாமே வாவா
சுப்பிரமணிய சுவாமியுடனிப்போ வந்து
தூயமல ரிணையடியே துணைசெய் வாயே.

பூரணி பராசக்தி தேவி அம்மை தரும்
புதல்வனே பொதிகை மலைவாழ்
புகலரிய குறுமுனிக்கு முத்தமிழ் உரைத்திடும்
புலவனே புலவர்கோனே
காரணி கரைகண்ட ருக்கு உபதேசமது
கருது மெய்ஞான குருவே
கண்கள் ஈராறுடைய கர்த்தனே சுத்தனே
கரிய வண்டார் கடப்பம்
தாரணியும் மார்பனே தமிழ்கொண்டு நக்கீரர்
தன்துயர் தவிர்த்து அருள்செய்
சத்தி வடிவேல் கரத்து அணியும் முருகையனே
தனையர் தந்து அருள்புரிகுவாய்!

கோரமிகு சூரசம்கார சிங்காரனே
குறவள்ளி மணவாளனே!
கொன்றை சூடிய கோல மன்றுளாடுவர் பால
குன்றைமா நகர்வேலனே.

கந்தா சிலம்பா கரங்கள் ஈராறுடைய
காங்கேயா கார்த்திகேயா
கருணை தருமுகா குகா சண்முகா விசாகா
வேல் அணிந்த குழகா
மந்தாகினிக்கு இனிய மைந்தா மயூரகிரி
வாசா உயர்ந்த தோகை
மயிலேறு சேவகா அயில்போலும் இருநயன
மாது தெய்வானைக் கணவா
செந்தாமறை தெரிவை கேள்வயனும்
துதி செய் திவ்ய சரணாகர விந்தா
சீலாமை அன்பர் அனுகூலா எனக்கு
நற்சிறுவர் தந்து அருள்புரிகுவாய்
கொந்தார் கடப்ப மலர் மாலைஅணி மார்பனே
குற வள்ளி மணவாளனே
கொன்றை சூடிய கோல மன்றுளாடுவர் பால
குன்றைமா நகர்வேலனே.

அமராவதித் தலைவன்ஆன முருகையனே
ஆதி பன்னிரு கையனே
ஆறுமுகனே உமாதேவி மகனே
அரவணைச் செல்வனார் மருகனே!
சமராடிய சூரபத்மன் முதல் அசுரரைச்
சம்காரமே செய்தவா
தாரணி வணங்கு பரிபூரணா காரணா
சரவணபவா கடம்பா!
எமராஜனுக்கு அஞ்சாமல் எதிர்வார்த்தைகள்
இயம்பவா அது தந்திடும்
எந்தையே சந்ததிகள் தந்துனது தாளினைக்
கேவல் கொண்டருள்புரிகுவாய்!
குமரா குறிஞ்சிக்கும் இறைவனே குரவனே
குறவள்ளி மணவாளனே!
கொன்றை சூடிய கோல மன்றுளாடுவர் பால
குன்றைமா நகர்வேலனே.

வேலும் மயிலும் துணை

பாகனைய கிளிமொழித் தெய்வ குஞ்சரி மாது
பாகனே வாகனேபொன்
பங்கயத் தயனை முன் சிறைவைத்த குமர
குருபரனே பரஞ்ஜோதியே!
நாகாரீகமான நவவீரர்க்கு முன்னவா
நாக முகவன் பின்னவா!
நலமான அருணகிரி யானையாட் கொண்டகுரு
நாதனே வேதமுதலே!
மாகனக வரைமுதற் குன்று தோராடல் புரி
மயில்வாகனக் கடவுளே
வரதனே குகனே சண்முகனே எனக்கு
நன்மைந்தர் தந்து அருள் புரிகுவாய்!
கோகனக மாது மணவாளன் மகிழ் மருகனே குறவள்ளி
மணவாளனே!
கொன்றை சூடிய கோல மன்றுளாடுவர் பால குன்றைமா
நகர்வேலனே.

தஞ்சமென அன்பினுடன் வந்தடையும் மெய்யன்பர்
தமை ஆதரித்தருள் செய்யும்
சண்முகா சதகோடி சூர்யப்ரகாசனே
சந்தரவதனச் சுந்தரா!
கஞ்சமலர் வாழுமுகம் ஒருநாலும் இருநாலும்
கண்ணும் உள வேதனுக்கும்
காமன்மிகு கானன் தனக்குமுயர் மைத்துனா
கலச முனவன் கும்பிடும்
செஞ்சரண பங்கேரு கர்த்தனே சுத்தனே
செல்வச் சிகண்டி மலைவாழ்
தேவாதி தேவனே என்றனுக்கு அறிவுடைய
சிறுவர் தந்தருள் புரிகுவாய்!
குஞ்சர முதற்கிளைய பச்சைமயில் வாகனா
குறவள்ளி மணவாளனே!
கொன்றை சூடிய கோல மன்றுளாடுவர் பால
குன்றைமா நகர்வேலனே.

விண்டலத்தினி மேவு முப்பத்து முக்கோடி
விண்ணவரும் முனிவோர்களும்
வெள்ளை வாரணமீதில் ஏறுகுலி சாயுதனும்
விஞ்சையறும் அளகேசனும்
மண்டலத் தவரும் நீள் பாதலத் தவருமுடி

மன்னரும் விளங்க நன்னாள்
மறையு மறையோனும் அம்புலியும் ஆதித்தனோடும்
மதனனும் பேய் முலைப்பால்
உண்டவச் சுதனும் மலர் தூவித்தினம் பணியும்
உபய சரணார விந்தா
உன்னையே நம்பினேன் என்றனுக்குச் சிறுவர்
உதவியே அருள் புரிகுவாய்!
கொண்டல் ஒத்திடு கருங்குழல் நூல் இடையுமுள்ள
குறவள்ளி மணவாளனே!
கொன்றை சூடிய கோல மன்றுளாடுவர் பால
குன்றைமா நகர்வேலனே.

முடியாறு உடைக் குமரகுருபரா சதுர் வேத
முதல்வனே கருணாநிதியே
மும்மதம் பொழி வேழமுகவன் தனக்கிளைய
முருகேசனே பரவைசூழ்
படியார் வணங்கு பொற் பாதாரவிந்தனே
பட அரவின் மேல்நடக்கும்
பச்சைமால் மருகனே நெக்குநெக் குருகியே
பக்தியுடனே துதிசெய்யும்
அடியார் உளத்தினிற் குடிகொண்டிருக்கும்
எனதப்பனே ஒப்பில்லாத
ஐயனே துய்யனே அறிவுடைய சிறுவர்
தந்தருள்புரிகுவாய்! சேவலம்
கொடியா கடப்ப மலர் மாலையணி மார்பனே
குறவள்ளி மணவாளனே!
கொன்றை சூடிய கோல மன்றுளாடுவர் பால
குன்றைமா நகர்வேலனே.

வேலும் மயிலும் துணை

சுந்தர நிறைந்திலகு கந்தவேளே பால
சுப்ரமண்யக் கடவுளே!
துரிய வடிவே அரியபெரிய பொருளே
பரஞ்ஜோதியே கோதிலாத
மந்திரகிரிக்கு நிகர் பன்னிரு புயத்தனே
மாயூர கிரிவாசனே!
மாசிலா மணியே மிகுங்கருணை வெள்ளமே
வளர் சேவலங் கொடியனே!
அந்தரத் துறையா இறங்குமால் மருகனே
அகிலம் முழுதும் துதிக்கும்

ஆதியே ஜோதியே அறிவுடைய சிறுவர்
தந்தருள்புரிகு வாய்! மஞ்செனும்
கொந்தளகமும் பவளவாயும் வேல்விழியும்
உளகுறவள்ளி மணவாளனே!
கொன்றை சூடிய கோல மன்றுளாடுவர் பால
குன்றைமா நகர்வேலனே.

வம்பனாகிய சூரபத்மனொடு சிங்கமுகன்
வலியதுய பானுகோபன்
வஞ்சக்ர உஞ்சன்முதல் அசுரர் தமையெலாம்
வடிவேலினால் மடித்து
உம்பரானவர்கள் சிறைமீட்டும் இந்திரனுக்கு
உயர்ந்த மணிமுடி தரித்து
ஓதரிய வானாடு குடியேற்றி வைத்தஜய
உல்லாச மிகுவாசனே
செம்பவள வாயனே! அன்பர்கள் சகாயனே!
தேடுதற் கரியபொருளே!
தேவாதி தேவனே! என்றனுக்கு அறிவுடைய
சிறுவர்தந்தருள் புரிகுவாய்!
கும்பமுனிவர்க் அருள் புரிந்த குமரேசனே
குறவள்ளி மணவாளனே!
கொன்றை சூடிய கோல மன்றுளாடுவர் பால
குன்றைமா நகர்வேலனே.

திருவேவு உயர்ந்த நவரசமிகும் தேனே
தெவிட்டாத தெள்ளமுதமே!
தித்திக்கும் மதுர முக்கனியே கரும்பே
சிறந்த முத்தே ரத்னமே!
அருவே விளங்கி வளர் அரியவுருவே நல்ல
கண்டவடி வேலப்பனே!
ஆதிநடு முடிவாகி எங்குநிறை ஜோதியே
அன்பர்வேண்டிய தளிக்கும்
தருவே சிகண்டிமலை தனில் வீற்றிருக்கின்ற
சாமியே முத்திவித்தே!
சண்முகா சரவணபவா கடம்பா சிறுவர்
தந்தருளு வாய்! சிவாய
குருவே மயூரவா கனஅகில நாயகா
குறவள்ளி மணவாளனே!
கொன்றை சூடிய கோல மன்றுளாடுவர் பால
குன்றைமா நகர்வேலனே.

# பாலனைப்போல் தோன்றுகின்றாய் பழநிவேலா

**பாலனைப்போல் தோன்றுகின்றாய் பழநிவேலா**
**நீயும் பண்டாரம்போல் நிற்பதேனோ பழநிவேலா**

பாலனைப்போல் தோன்றுகின்றாய் பழநிவேலா
நீயும் பண்டாரம்போல் நிற்பதேனோ பழநிவேலா

வேலையேந்தும் கரங்களிலே பழநிவேலா
கூட வேறுகுச்சி இருப்பதென்ன பழநிவேலா
கூடவரும் மயிலுமெங்கே பழநிவேலா
உந்தன் கோபத்தினால் ஓடியதோ பழநிவேலா

தேடிப்பிடித்து வந்திடுவேன் பழநிவேலா
நீயும் தீந்தமிழால் பேசிடுவாய் பழநிவேலா
உலகமுழுதும் சுற்றினாலும் பழநிவேலா
அய்யா உனக்குபழம் கிடைக்கவில்லை பழநிவேலா

அந்தகோபத்தினால் நீயுமெங்கள் பழநிவேலா
ஆண்டி வேடம் பூண்டுகொண்டாய் பழநிவேலா
அப்பா உன்னைத்திட்டினாரோ பழநிவேலா
உந்தன் அண்ணன்வம்பு செய்தனரோ பழநிவேலா

எப்பொழுது வீடுசெல்வாய் பழநிவேலா
விடை எங்களுக்குச் சொல்லிடுவாய் பழநிவேலா
உண்டியலில் பணமிருக்குப் பழநிவேலா
நல்ல உடைகள்தைத்து அணிந்தாலென்ன பழநிவேலா

துண்டுகட்டி நிற்பதேனோ பழநிவேலா
பட்டுத் துணிகள்வாங்கி தைத்திடலாம் பழநிவேலா
அன்னை உமாதேவியாரும் பழநிவேலா
உனக்கு அழகழகாய் அலங்கரிப்பார் பழநிவேலா

சும்மாஏனோ செலவுஎன்று பழநிவேலா
மொட்டை நீயும் அடித்துக்கொண்டாய் பழநிவேலா
உன்னைக்காணவரும் பக்தரெல்லாம் பழநிவேலா
பூணுகிறார் மொட்டைதனை உன்னைப்போலே

ஏனோஇந்தக் கோலமெல்லாம் பழநிவேலா
நீயும் இறங்கிக்கீழே வந்திடுவாய் பழநிவேலா
பழனிமலை ஆண்டவனே பழநிவேலா
உந்தன் பக்தர்களைக் காத்திடுவாய் பழநிவேலா

பால்குடங்கள் கொண்டுவந்து பழநிவேலா
உந்தன் பாதமலர் சேர்த்திடுவோம் பழநிவேலா
காவடிகள் கொண்டுவந்து பழநிவேலா
உந்தன் காலடியில் சேர்த்திடுவோம் பழநிவேலா

ஒத்தயடி பாதையெல்லாம் பழநிவேலா
நாங்க உன்னைப்பார்க்க நடந்துவறோம் பழநிவேலா
கல்லும்முள்ளும் காலில்குத்த பழநிவேலா
உந்தன் கருணைவேண்டி நடந்துவறோம் பழநிவேலா

கல்லும்முள்ளும் காலில்குத்த பழநிவேலா
உந்தன் காவடியைச் சுமந்துவாறோம் பழநிவேலா
பழனிமலை ஆண்டவனே பழநிவேலா
உந்தன் பக்தர்களைக் காத்திடுவாய் பழநிவேலா

*பெங்களூர் லெ. சோமசுந்தரம், தேவகோட்டை*

## அப்பா அப்பா முருகப்பா

**அப்பா அப்பா முருகப்பா அண்ணன் தம்பிகள் நாமப்பா**
**சுப்பா சுப்பா வேலப்பா சொல்வதைக் கொஞ்சம் கேளப்பா**

அப்பா அப்பா முருகப்பா
அண்ணன் தம்பிகள் நாமப்பா
சுப்பா சுப்பா வேலப்பா சொல்வதைக் கொஞ்சம் கேளப்பா

சேவடி சரணம் வேண்டுமென
காவடி தாங்கி வருகின்றோம்
சேவலும் மயிலும் உடனிருக்க
சேர்ந்து இங்கே ஆடப்பா

சீனரும் காவடி ஏந்திவர
சிங்கை நகரே வியந்துநிற்க
சாமரம் வீசிப் பாடுகின்றோம்
சங்கொலி முழங்க ஆடப்பா

வெள்ளிக் கிழமை விளக்கேற்றி
வெள்ளி (இ)ரதத்தில் உனையேற்றி
வேண்டும் அனைத்தையும் தருகின்றோம்
விரைந்து எம்மைப் பாரப்பா

கார்த்திகை வந்தால் உனைக்காணக்
கால்கள் நோக வருகின்றோம்
காவடி எடுத்தும் வருகின்றோம்
கவலை தீர ஆடப்பா

வேலும் மயிலும் துணை

புனர்பூச நாளில் இரதமேற்றி
பூஜை செய்து வருவோர்க்குப்
புள்ளி மயிலின் மீதேறி
புன்னகை நாளும் சிந்தப்பா

நகரத்தார் எல்லாம் கூடியிங்கு
நாளும் உன்னைப் பாடிவர
வேலும் பிடித்து ஆடப்பா
வேட்கை தனிய ஆடப்பா

சஷ்டியில் விரதம் ஏற்கின்றோம்
சண்முகக் கவசம் படிக்கின்றோம்
சந்தனக் காவடி எடுக்கின்றோம்
சங்கடம் தீர்ந்திட ஆடப்பா

பாலரும் காவடி ஏந்திவரப்
பன்னீர்க் காவடி எடுத்துவரப்
பாட்டுப் பாடி ஆடுகின்றோம்
பாவம் போக்க அருளப்பா

*வீர.பழநியப்பன், தேவகோட்டை.2012*

## ஹர ஹர சுப்ரமண்யம்

சுப்ரமண்யம் சுப்ரமண்யம்
ஷண்முகநாதா சுப்ரமண்யம்
சுப்ரமண்யம் சுப்ரமண்யம்
சபரிகிரீசா சுப்ரமண்யம்

ஹர ஹர ஹர ஹர சுப்ரமண்யம்
சிவ சிவ சிவ சிவ சுப்ரமண்யம்

ஹர ஹர சிவ சிவ சுப்ரமண்யம்
சிவ சிவ ஹர ஹர சுப்ரமண்யம்

குஹ சரவண பவ சுப்ரமண்யம்
குரு சரவண பவ சுப்ரமண்யம்

சிவ சிவ சிவ சிவ சுப்ரமண்யம்
ஹர ஹர ஹர ஹர சுப்ரமண்யம்

சிவ சரவண பவ சுப்ரமண்யம்
சிவ சரவண பவ சுப்ரமண்யம்

# காவடிக்குள் ஆடிவரும் கந்தன்

அரோகரா அரோகரா என்று சொல்லுங்கள்
ஆறுமுகன் பேரழகைப் பாடிச் செல்லுங்கள்

காவடிக்குள் ஆடிவரும் கந்தனையே பாருங்கள்
கவலையெல்லாம் தீர்ந்திடவே கந்தன் நாமம் சொல்லுங்கள்

சேவடியே சரணமென சேர்ந்து சொல்லுங்கள்
சிக்கலெல்லாம் தீர்ந்துவிடும் நின்று பாருங்கள்

காலையிலும் மாலையிலும் கந்தன் புகழ் பாடுங்கள்
வேலையோடு வேலவனைத் தொழுது வாருங்கள்

சோலைமலை வேலவனைச் சொல்லிசொல்லிப் பாடுங்கள்
சொர்க்க வாழ்வு கிடைத்திடவே சுப்ரமணியை நாடுங்கள்

பாலிலே குளிக்கின்ற பரம்பொருளைப் பாருங்கள்
பாலரின் காவடிக்குப் பாட்டுப் பாட வாருங்கள்

சிங்கைநகர் அழகுதனை வியந்து பாருங்கள்
சீனரின் காவடியைக் கண்டு மகிழுங்கள்

பார்வதியின் பாலகனைப் பார்க்க வாருங்கள்
பாவமெல்லாம் நீங்கிடவே பகவான்னாமம் சொல்லுங்கள்

வேலைஎந்தும் அழகுதனை வேடிக்கை பாருங்கள்
வெற்றிவேலன் திருமுகத்தை வேட்கையுடன் நாடுங்கள்

சோலையிலே வள்ளியினைச் சுமந்தவனைப் பாருங்கள்
பழத்துக்காகப் பழனி மலை சென்றவனை நாடுங்கள்

மயிலேறி சுற்றுக்கின்ற மாமணியைப் பாருங்கள்
மணக்கோலம் கொண்டவனை மாலையிட்டு வணங்குங்கள்

தனக்கெனவே ஓரிடத்தைப் பெற்றவனைப் பாருங்கள்
தங்கரதம் ஏறிவரும் பேரழகைப் பாருங்கள்

சிங்கைநகர் வேலவனின் சிரிப்பழகை ப் பாருங்கள்
சிந்தனைக்குச் செவிசாய்க்கும் சிங்காரனைப் போற்றுங்கள்

மங்கைவள்ளி காதலனை மனமுருகி பாடுங்கள்
மனக்கவலை போக்கிடவே மன்னவனை நாடுங்கள்

*வீர.பழநியப்பன், தேவகோட்டை*

# சிங்காராமாய் அசைந்து வரும் ரதத்தைப் பாருங்க

சிங்காராமாய் அசைந்து வரும் ரதத்தை பாருங்க -
அதில் சிட்டுபோல நிற்கும் எங்கள் முருகன் காணுங்க
சிரித்துச் சிரித்து மயக்குகின்ற வேலன் அவனுங்க -
அவன் சிங்கப்பூரில் கோவில்கொண்ட முருகன் தானுங்க

பூசத்தன்று பவனிவரும் ரதத்தைப் பாருங்க -
அதில் புன்னகைக்கும் தெண்டபாணி தெய்வம் காணுங்க
நம்மையெல்லாம் இரட்சித்து அருளும் வேலன் அவனுங்க -
அவன் சிங்கப்பூரில் கோவில்கொண்ட முருகன் தானுங்க

ஆடிவரும் காவடிகள் அழகைப் பாருங்க -
அதை எந்திவரும் செட்டிமக்கள் மகிழ்ச்சி காணுங்க
அழகுதமிழ் பாடல் கேட்கும் வேலன் அவனுங்க -
அவன் சிங்கப்பூரில் கோவில்கொண்ட முருகன் தானுங்க

வருடம் முழுதும் விழாக்கொண்ட கந்தன் அவனுங்க -
வந்து வணங்குகின்ற பக்தர் வம்சம் காக்கும் வேலனுங்க
வளமான வாழ்வு நல்கும் வள்ளல் அவனுங்க -
அவன் சிங்கப்பூரில் கோவில்கொண்ட முருகன் தானுங்க

அருகிருந்து காத்துநிற்கும் அழகு முருகனுங்க -
நம்ம அசுரப்பய சேட்டையெல்லாம் அடக்கி வைப்பாங்க
அன்புகொண்ட பக்தரை வழிநடத்தும் வேலன் அவனுங்க -
அவன் சிங்கப்பூரில் கோவில்கொண்ட முருகன் தானுங்க

*லெ. சக்தி குமார், தேவகோட்டை*

வேலும் மயிலும் துணை



# காரைக்குடி - பழனி காவடிப் பயணம்

**வேல் வேல் முருகா வேல் முருகா**
**வேல் வேல் முருகா வேல் முருகா**
**வேல் வேல் முருகா வேல் முருகா**
**வேல் வேல் முருகா வேல் முருகா**

காவடி அமுதே பழந்தமிழே
உன் சேவடி காண வருகின்றோம்
பூவடி காட்டி அருள்புரிவாய்
அப்பா குமரா பழனியப்பா

காரைச் சுற்றி நெடும்பயணம்
கனிவில்லாத கடும்துயரம்
அப்பா குமரா பழனியப்பா
சோதனை ஓட்டம் முடிந்ததப்பா

கொப்புடயாளின் பார்வையிலே
காவடி தோளில் ஏறியதே
உன் பெயர் கோஷங்கள் ஓதியதே
அப்பா குமரா பழனியப்பா

அப்பன் உன்னை நினைத்தபடி
காரைக் காவடி கிளம்பியதே
அப்பா குமரா பழனியப்பா
தோளில் ஏறி வந்திடப்பா

குன்றக்குடிக்குக் குறும்பயணம்
நடு நித்திரையில் தான் நடைபயணம்
வழித்துணையாக வந்திடப்பா
அப்பா குமரா பழனியப்பா

குன்றக்குடியை அடைந்துதுவிட்டோம்
சிறுபிள்ளைகள் உன்னைக் காணவந்தோம்
அப்பா குமரா ஷண்முகனே
மலையை விட்டு இறங்கிடப்பா

செட்டி காவடி கூடியாதே
வேலை தொடர்ந்து ஓடியதே
முருகா முருகா எனும் கோஷம்
அப்பா குமரா பழனியப்பா

பிள்ளையார்பட்டி கடந்துவந்தோம்
வரப்பினில் நாங்களும் நடந்துவந்தோம்

அப்பா குமரா பழனியப்பா
கம்மாய் கண்ணில் தெரிந்ததப்பா

மருதுபட்டி தோப்பிடையே
குளிரும் எங்களை வாட்டிடவே
உன் பெயர் தானே கம்பளியே
அப்பா குமரா பழனியப்பா

சேவுகபேருமான் மாமனையும்
சிங்கம்புணரியில் தரிசித்தோம்
அப்பா குமரா பழனியப்பா
அருளை வாங்கித் தந்திடப்பா

கொட்டாம்பட்டி ரோட்டிடயே
சில காவடி பிந்தி வருகையிலே
வாயும் புரளி பேசுதப்பா
அப்பா குமரா பழனியப்பா

மனப்பசேரி வருகையிலே
தொண்டை வறண்டு போனதப்பா
அப்பா குமரா பழனியப்பா
தண்ணீர் தந்து உதவிடப்பா

சமுதிராபட்டியும் வந்ததப்பா
கொப்பளம் சிறிதாய் பிறந்ததப்பா
என் விரதப்பலனும் புரிந்ததப்பா
அப்பா குமரா பழனியப்பா

பதினெட்டு மைல் தொலைதூரத்திலே
உப்பார் மையம் கொண்டிருக்க
அப்பா குமரா பழனியப்பா
தூக்கம் கன்றிப்போனதப்பா

பானக்க பூஜையும் முடிந்ததப்பா
மாப்பிள்ளை அழைப்பும் நடந்ததப்பா
நத்தமும் விடையைக் கொடுத்ததப்பா
அப்பா குமரா பழனியப்பா

எத்தனை விரைவாய் சென்றாலும்
குதிரை முன்னே சென்றதப்பா
அப்பா குமரா பழனியப்பா
கருப்பர் குதிரையை நிருத்திடப்பா

வேலும் மயிலும் துணை

தோள்களும் ரணமாய் ஆனதப்பா
கால்களும் முழுதாய் தேய்ந்ததப்பா
கொப்பளம் பெரிதாய் ஆனதப்பா
அப்பா குமரா பழனியப்பா

உடம்பில் தண்ணீர் இல்லையப்பா
கண்களின் வழியே கரையுதப்பா
அப்பா குமரா பழனியப்பா
உந்தன் சோதனைப் போதுமப்பா

கருப்பர் குதிரையே முந்திவிட்டோம்
கோபால்பட்டி வந்தடைந்தோம்
உப்பார் நோக்கி வருகின்றோம்
அப்பா குமரா பழனியப்பா

பன்னீர் தெளிக்க ஒருகூட்டம்
இளநீர் கொடுக்க மறுகூட்டம்
அப்பா குமரா பழனியப்பா
என்னைத் தாங்கி பிடித்திடப்பா

இடச்சீ மடமும் கமகமக்க
அன்னதானமும் தலைசிறக்க
நடுவினில் நீயும் அமர்ந்திருக்க
அப்பா குமரா பழனியப்பா

அதிகாலையிலே நடைகிளம்ப
தூங்கியபடியே நான்நடக்க
அப்பா குமரா பழனியப்பா
பையக்கூட்டி சென்றிடப்பா

இழந்த சக்தி திரும்பிடவே
அபிராமியிடம் சக்தி வேண்டி வந்தோம்
சக்தியை வாங்கி தந்திடப்பா
அப்பா குமரா பழனியப்பா

எத்திசை நோக்கி பார்த்தாலும்
பாலைவனம்போல் தெரியுதப்பா
அப்பா குமரா பழனியப்பா
நீ மரமாய் நிழலும் தந்திடப்பா

வெள்ளை கோட்டின் துணையுடனே
எறும்பை போல பின்தொடர்தோம்
தாரைப் பூவாய் மாத்திடப்பா
அப்பா குமரா பழனியப்பா

கண்ணில்பட்ட மனிதரிடம்
எங்கே எங்கே எனக் கேட்டறிந்து
அப்பா குமரா பழனியப்பா
ரெட்டியார் சத்திரம் வந்ததப்பா

செம்மடபட்டி உஞ்சலிலே
சம்மனம்கட்டி அமர்ந்திருந்து
உன் வைர ஊஞ்சலைக் கண்டோமப்பா
அப்பா குமரா பழனியப்பா

அடியேன் ஊஞ்சலை ஆட்டிடவே
மகிழ்ச்சியில் நீயும் ஆடிடவே
அப்பா குமார பழனியப்பா
என் கால்வலி பஞ்சாய் பறந்ததப்பா

அவரவர் குறைகள் திர்ந்திடவே
மிட்டாய் வாங்கி தருகின்றோம்
ஒவ்வொன்றாகச் சுவைத்திடப்பா
அப்பா குழந்தை வேலப்பா

மிட்டாய் அலையாய் பெருகிடவே
அடியவர் குறைகள் உருகிடவே
அப்பா குழந்தை வேலப்பா
விருப்பாச்சியில் என்னை ஏத்திடப்பா

வேலை முன்னே ஊன்றிவிட்டாய்
மலையைப் பின்னே காட்டிவிட்டாய்
பழநிமலையும் ஜொலிக்குதப்பா
அப்பா குமரா பழனியப்பா

களிங்கப்பையா ஊரணியில்
குளிரும் அதிகம் ஆனதப்பா
அப்பா குமரா பழனியப்பா
தூங்க இடமும் காட்டிடப்பா

துன்பங்கள் கடுகாய் மாறுதப்பா
வலிகளும் பனியாய் உருகுதப்பா
பழனியின் உள்ளே வருகையிலே
அப்பா குமரா பழனியப்பா

மலையின் அடியில் குளமிருக்க
இடும்பனும் அங்கே அமர்திருக்க
அப்பா குமரா பழனியப்பா
நன்றிகள் சொல்லி வந்தோமப்பா

அரண்மணை அய்யா அருகிருக்க
நெற்குப்பை அய்யா கவியுரைக்க
கண்டனூர் அய்யா பிரம்பெடுக்க
அப்பா குமரா பழனியப்பா

காவடிசிந்து ஒலித்திடவே
அடியவர்கள் உன்னை அழைத்திடவே
அப்பா குமரா பழனியப்பா
நல்மொழி சொல்லி சென்றிடப்பா

அன்னதான மடத்தினிலே
காவடி இறக்கும் இடத்தினிலே
வைரவேலுடன் வந்திடப்பா
அப்பா குமரா பழனியப்பா

சரவணபொய்கை குளத்தினிலே
ஷன்முக நதியின் கரையினிலே
அப்பா குமரா பழனியப்பா
மயிலுடன் வந்து அருளிடப்பா

கட்டியம் கூற வருவாய்
காவடி ஆட்டம் புரிவாய்
மலையினில் ஏற்றிவிடுவாய்
அப்பா குமரா பழனியப்பா

அடிவாரத்தில் கணபதியும்
அழகாய் காட்சி தருகின்றார்
அப்பா குமரா பழனியப்பா
உன் கை கொடுத்து ஏற்றிடப்பா

யானைபாதையின் வழியாகக்
குதுரை போல வருகின்றோம்
ஆயத்தமாக இருந்திடப்பா
அப்பா குமரா பழனியப்பா

மலையில் அதிர்வும் நிறைத்திருக்க
உடம்பும் தானாய் மெய்சிலிர்க்க
அப்பா குமரா பழனியப்பா
மலையினுள் பாதம் பட்டதப்பா
கண்களில் நீரும் நிறைந்ததப்பா

வேண்டிய வரங்கள் மறந்ததப்பா
உந்தன் திருமுகம் பார்க்கயிலே
அப்பா குமரா பழனியப்பா

எத்தனைப் பிறவி எடுத்தாலும்
உன்னைத் தோளில் சுமப்பதற்கு
அப்பா குமரா பழனியப்பா
அந்த வரத்தினை எனக்கு அருளிடப்பா

உந்தன் பிள்ளைகள் நாங்களுமே
பிழைகள் ஏதொன்று செய்திருந்தால்
பொறுத்தே காத்து அருளிடப்பா
அப்பா குமரா பழனியப்பா

காவடி பிள்ளைகள் நாங்களுமே
முத்திரை கொண்டு வந்துள்ளோம்
அப்பா குமரா பழனியப்பா
உன் பஞ்சாமிர்தம் தந்திடப்பா

பழநியில் ஆண்டியும் நீதானே
பழநியில் ராஜனும் நீதானே
இதை என்னவென்று உணர்த்திடப்பா
அப்பா குமரா பழனியப்பா

எத்தனை எத்தனை அபிஷேகம்
எத்தனை எத்தனை அலங்காரம்
அப்பா குமரா பழனியப்பா
உன் பழநி மலையே சொர்க்கமப்பா

வந்தவழியே திரும்புகிறோம்
வழிகள் நெடுவே வருந்துகிறோம்
பழநிமலையைப் பிரிந்ததினால்
அப்பா குமரா பழனியப்பா

காரைக்குடிக்குள் வந்துவிட்டோம்
கொப்புடயாள் முன் நின்றுவிட்டோம்
அப்பா குமரா பழனியப்பா
காவடியாத்திரை சுவைத்ததப்பா

*வெங்கட் கணேசன், நாச்சியார்புரம்*

# ஷண்முக குரு நாதனே

**ஷண்முக குரு நாதனே**
**ஷண்முக குரு நாதனே**
**குன்றக்குடி மலைதனிலே**
**காட்சிதர வேணுமே**

ஷண்முக குரு நாதனே
ஷண்முக குரு நாதனே
குன்றக்குடி மலைதனிலே காட்சிதர வேணுமே
ஷண்முக குரு நாதனே
ஷண்முக குரு நாதனே
எங்கள் வினை தீர்த்திடவே கண்திறக்க வேணுமே

வள்ளி தெய்வயானையுடன்
ஷண்முக குரு நாதனே
பால் நிலவாய் குன்றக்குடியில்
காட்சிதர வேணுமே
உன்னை எந்த நாளுமே
என் சந்ததிகள் பாடவே
குன்றக்குடி மலைதனிலே
காட்சிதர வேணுமே

தண்டையணி வெண்டயன்
கிண்கிணி சதங்கையும்
அருணகிரி பாடியதை
நானும் பாட வேணுமே
செந்திலில் நீ ஆடியதை
நானும் காண வேணுமே
குன்றக்குடி மலைதனிலே
நீ வேலெடுத்து ஆடுமே.

ஷண்முக குரு நாதனே
ஷண்முக குரு நாதனே
குன்றக்குடி மலைதனிலே நீ வேலெடுத்து ஆடுமே.
ஷண்முக குரு நாதனே
ஷண்முக குரு நாதனே
எங்கள் வினை தீர்த்திடவே கண்திறக்க வேணுமே

*வெங்கட் கணேசன், நாச்சியார்புரம்*

# நடக்க நடக்க சுகம் வேண்டும்

**நடக்க நடக்க சுகம் வேண்டும்**
**நடையினில் வேலவன் வரவேண்டும்**
**கொடுக்க கொடுக்கும் மனம் வேண்டும்**
**கோமகன் அதையும் தரவேண்டும்**

நடக்க நடக்க சுகம் வேண்டும்
நடையினில் வேலவன் வரவேண்டும்
கொடுக்க கொடுக்கும் மனம் வேண்டும்
கோமகன் அதையும் தரவேண்டும்

பார்வதி பாலகன் துணை வேண்டும்
பாதை வழியெல்லாம் வரவேண்டும்
நினைக்க நினைக்க பலம் வேண்டும்
நிம்மதியை அவன் தரவேண்டும்

காவடி தோழ்களில் ஆடிவர
கந்தன் புகழைப் பாடிவர
காவடி எடுப்போர் மகிழ்ந்திருக்க
கந்தா உனது அருள் வேண்டும்

நடப்போர் சிந்தனை உனதாக
நடக்கும் தூரம் அறியாது
சிறக்கும் பயணம் சிங்கைக்கே
செல்வா அருளைத் தந்திடுவாய்

மனிதன் இன்னும் மாறவில்லை
மழைநீர் அதற்குச் சான்றாகும்
விலையே இல்லா மகத்துவத்தை
விளங்கச் சொன்னாய் பழனியப்பா

காசு பணமும் பெரிதல்ல
கற்பணைக் கோடி புதிதல்ல
நேசம் மட்டும் நிலைக்குமென்று
நெகிழச் சொன்னாய் பழனியப்பா

# காவடிக் கதை கேளு

**காவடிக் கதை கேளு**
**காவடிக் கதை கேளு - குமரனின்**
**காவடிக் கதை கேளு**
**காடு மலை கடக்கும் கந்தனின்**
**காவடிக் கதை கேளு**

காவடிக் கதை கேளு
காவடிக் கதை கேளு - குமரனின்
காவடிக் கதை கேளு
காடு மலை கடக்கும் கந்தனின்
காவடிக் கதை கேளு

சுப்பிரமணியவன்- போரினிலே
சூரனை வென்றானாம்
சூர தோழன் இடும்பன் - கந்தனின்
பக்தனும் ஆனானாம்
மாமுனி அகத்தியன் - இடும்பனை
நியமனம் செய்தாரே
சக்தி சிவ கிரியை - பொதிகையில்
சேர்த்திடச் சொன்னாரே

காவுதடி சுமந்தான் - இடும்பன்
காவுதடி சுமந்தான்
சக்தி சிவ கிரியைத் - தடியிலே
கட்டிக்கொண்டு சுமந்தான்
"கா" என்ற சொல்லின் பொருள்
தமிழினில் "மரம் " என்பதாகுமே
"காவுதடி" மருவி "காவடி" -
என்றான கதை கேளு

வேலும் மயிலும் துணை

காவடி தூக்கிக்கொண்டே - இடும்பன்
பழனி மலை சேர்ந்தான்
சேர்ந்த பொழுதினிலே - மலையின் சுமை
சோர்வினைத் தந்ததுவாம்
சோர்வு கொண்ட இடும்பன் - இளைப்பாற
எண்ணமும் கொண்டானாம்
காவடிச் சுமைதனைப் பழனியிலே
இறக்கி வைத்தானாம்
ஓய்வு பெற்றவுடனே - காவடியைத்
தூக்க முயன்றானே

காவடியதன் சுமை - கூடிவிட்ட
உண்மைக் கதை கேளு
பாலன் ஒருவன் நின்றான் -மலையின்மேல்
பாலன் ஒருவன் நின்றான்
குன்றினில் நின்றுகொண்டு - இடும்பனைக்
கண்டு நகைத்தானே

கோபம் கொண்ட இடும்பன் - பாலன்மேல்
பாய முற்பட்டானே
பாயும் பொழுதினிலே - தவறி
மலையின்கீழ் வீழ்ந்தானே
மீண்டும் எழுந்தானே - இடும்பன்
மீண்டும் எழுந்தானே
வெற்றி வடிவேலன் - தெய்வத்திரு
காட்சியைக் கண்டானே

கோலமயில் குமரன் - இடும்பனை
ஆட்கொண்டு விட்டானே
காவடி தூக்கிவரும் பக்தர்களை
ஆட்கொண்டுவிடுவானே
கோலமயில் குமரன் - நம்மையெல்லாம்
ஆட்கொண்டு விட்டானே
காவடி தூக்கிவரும் பக்தர்களை
ஆட்கொண்டுவிடுவானே

*நித்யா அருணாச்சலம்*



# அழகு அழகு அழகு நம் முருகன் அழகு

**அழகு அழகு அழகு நம் முருகன் அழகு**
**அழகு அழகு அழகு அவன் கருணை அழகு**

அழகு அழகு அழகு நம் முருகன் அழகு
பழநியிலே நிற்கின்ற ஆண்டியும் அழகு- அவன்
பிடித்திருக்கும் தண்டத்தின் பெருமையும் அழகு
ராஜவேடம் காண்பதில் தான் எத்தனை அழகு - நம்மை
ராஜாவுக்கும் அவன் கருணை அதை விட அழகு

உபதேசம் உரைக்கின்ற சுவாமியும் அழகு- அவன்
சிவன்மடியில் அமர்ந்திருக்கும் சிறப்பும் அழகு
மௌனமொழி மந்திரத்தின் பெருமையும் அழகு - அதை
உணர்ந்தால் நாம் அடையும் நிலையும் அழகு

மாயை அழித்த மன்னவனின் கோலம் அழகு- அவன்
பூஜை செய்யும் விதம் என்றும் காண்பதற்கழகு
செந்தூரின் கடற்கரையும் கோவிலும் அழக -அவன்
கமல மலர் தாழ்வருடும் அலைகளோ அழகு

குன்றம் அமர் குகனோ நல்ல மாப்பிள்ளை அழகு
அவனைச் சூழ்ந்திருக்கும் தேவர்களின் மனம் நிறைவும் அழகு
தெய்வானை திருமணமோ நித்திய அழகு - அதைக்
காணுகின்ற நம் கண்கள் என்றும் அழகு

தணிகையிலே நிற்கின்ற குமரனும் அழகு
அவன் கொண்ட சாந்தமோ அகிலத்தில் அழகு
திருப்படியின் உற்சவமோ முதல் நாள் அழகு - அதில்
அவன் உணர்த்தும் நம் வாழ்வின் ஏற்றம் அழகு

மாமன் வீட்டில் அவனிருக்கும் அழகோ அழகு
அதைக் காணும் பக்தர்களின் ஆனந்தம் அழகு
சோலைமலைக் காட்சிகளோ இயற்கையின் அழகு - அங்கு
சோர்வகற்றி பொலிவுதரும் கிழவோன் அழகு

ஆறுபடை வீடுகளோ நாட்டின் அழகு - அதில்
அவன் நடத்தும் ஆட்சியோ தர்மத்தின் அழகு
முருகன் இருக்கும் இடமெல்லாம் இளமையின் அழகு - அவன்
வீற்றிருக்கும் நம்மனமோ விந்தையின் அழகு

# அழகைப் பாருங்கள் முருகன் அழகைப் பாருங்கள்

**அழகைப் பாருங்கள் முருகன் அழகைப் பாருங்கள்**
**அவன் ஆனந்தமாய் காட்சிதரும் அழகைப் பாருங்கள்**

அழகைப் பாருங்கள் முருகன் அழகைப் பாருங்கள்
தங்கரதம் அசைந்து வரும் அழகைப் பாருங்கள் - முருகன்
சிங்காரமாய் கொலுவிருக்கும் அழகைப் பாருங்கள்
காலமெல்லம் துணையிருக்கும் அழகைப் பாருங்கள்
முருகன் காவடியில் ஆடிவரும் அழகைப் பாருங்கள்

கருணையே வடிவான் முருகன் பாருங்கள்
நம் கவலையெல்லம் தீர்க்க வரும் அழகைப் பாருங்கள்
சண்முகமாய் ஒளிவீசும் அழகைப் பாருங்கள்
முருகன் சங்கடங்கள் தீர்த்துவைக்கும் அழகைப் பாருங்கள்

அரோகரா என்று சொல்லிப் பாட்டுப்பாடுங்கள்
அவன் ஆனந்தமாய் காட்சிதரும் அழகைப் பாருங்கள்
வேலும் மயிலும் துணையெனவே அழைத்துப் பாருங்கள்
முருகன் வேலெடுத்து ஆடிவரும் அழகைப் பாருங்கள்

குன்றுதோறும் ஆடிவரும் குமரன் பாருங்கள்
அவன் கன்றுபோலத் துள்ளிவரும் ஆட்டம் பாருங்கள்
பழத்துக்காக்ச் சண்டைப் போட்ட பாலன் பாருங்கள்
முருகன் பண்டாரமாய் வந்துநிற்கும் கோலம் பாருங்கள்

பொட்டியிலே ஜடையிருக்கும் அழகைப் பாருங்கள்
முருகன் உள்ளங்கையில் வேலிருக்கும் அழகைப் பாருங்கள்
நெற்றியிலே நீர் இருக்கும் அழகைப் பாருங்கள்
அந்த வெற்றிவடிவேலன் வரும் அழகைப் பாருங்கள்

உண்டியலில் பணமில்லையா செந்தில் நாயகா
உனக்கு உடுத்திக்கொள்ள பட்டில்லையா பழனியாண்டவா
ஏனென்று கேட்டுபார்க்க சேர்ந்து வாருங்கள்
முருகன் எல்லாத்திற்கும் சிரித்து நிற்கும் அழகைப்
பாருங்கள்

வேலெடுத்து ஆடிவரும் வேலன் பாருங்கள்
முருகன் விதவிதமாய் மயிலேறும் அழகைப் பாருங்கள்
வண்ண மயிலாடிவரும் ஆட்டம் பாருங்கள்
குறவள்ளி மணவாளன் வரும் அழகைப் பாருங்கள்

தள்ளாத கிழவன் வாரார் விலகி நில்லுங்கள்
அவன் தாடிமீசை நரைத்திருக்கா பார்த்துச் சொல்லுங்கள்

பல்லுப்போன கிழவன் வாரார் பாரார் உஷாரு
அவர் பக்கதிலே வள்ளியம்மை ரெம்பவும் ஜோரு

வள்ளி தெய்வானையுடன் முருகன் பாருங்கள்
அவன் வண்ணமயில் ஏறிவரும் அழகைப் பாருங்கள்
முல்லைப் பூபோல் சிரித்துவரும் காட்சி பாருங்கள்
அதில் எல்லையில்லா பேரின்பமும் இங்கே பாருங்கள்

கோலாகல வள்ளியம்மை கூடப் பாருங்கள்
நாம் கொண்டாடும் தெய்வானை அருகில் பாருங்கள்
சக்தி அவள் தந்ததிருவேலைப் பாருங்கள்
முருகன் சந்தோஷமாய் காட்சிதரும் அழகைப் பாருங்கள்

ஆலோலம் பாடுகின்ற வள்ளி பாருங்கள் - அங்கே
அவளுக்காக ஆட்டமாடும் கிழவன் பாருங்கள்
தாலாட்டு பாடலாமா கேட்டுப் பாருங்கள்
நம்ம தர்மதுறை சிரித்தும் மகிழும் அழகைப் பாருங்கள்

## சின்ன சின்ன முருகா

**சின்னச் சின்ன முருகா முருகா சிங்கார முருகா**

பாலும் தேன் அபிஷேகமும் பக்தர்களின் காவடியும்
பார்ப்பவர்கள் உள்ளமெல்லாம் பரந்தநீ தேவனாகி

செந்தூர் கடற்கரையில் தேவர்களைக் காத்திடவே
பார்ப்பவர்கள் மனம் மகிழ சூரனைச் சம்ஹாரம் செய்தாய்

ஆண்டவனே அலங்காரானே அண்டமெல்லாம் வலமும் வந்தாய்
அடியார்கள் காணும்போது ஆண்டியாய் நீ காட்சி தந்தாய்

அப்பனுக்கு உபதேசித்தாய்-என் அருமை குருநாதனுமாய்
ஸ்வாமி மலையில் அமர்ந்தவனே சுவாமினாதா குருவே அப்பா

சேனைக்கு அதிபதியாய் தேவசேனைக்கு அதிபதியாய்
தேவர்களைக் காத்திடவே திருத்தணி மலைதனிலே
திருமணக் கோலம் கொண்டாய்

முக்திக்கு வழி தேடியே முதியோரும் இளைஞர்களும்
மலைகளெல்லாம் ஏறி வந்தோம் மாதவன் மறுகனே நீ வா

## வேலோடு மயிலாட கிரி நின்றவா

வேலோடு மயிலாட கிரி நின்றவா
வினை தீர்க்கும் மருந்தாக வா ஷண்முகா

வேலோடு மயிலாட கிரி நின்றவா
வினை தீர்க்கும் மருந்தாக வா ஷண்முகா
வா ஷண்முகா வா ஷண்முகா

வினையாவும் ஒருசேர தவித்தேனய்யா
வேலோடும் திருக்கரத்தைக் கொடுப்பாயய்யா
வா இங்கு வா என் ஷண்முகா

கொடுநோய்கள் பொடியாக்கும் திறம் கொண்டவா
சேய் நானும் விளையாட மயில் கொண்டுவா
வா இங்கு வா என் ஷண்முகா

அறம் காக்கும் அடியாரை அனைக்கின்றவா
மகள் என்னை தனியாக்கும் மனம்வந்ததா?
வா இங்கு வா ஷண்முகா

## அழகான பழநி மலை ஆண்டவா

அழகான பழனி மலை ஆண்டவா
உன்னை அனுதினமும் பாட வந்தேன் வேலவா
அழகான பழனி மலை ஆண்டவா
உன்னை அனுதினமும் பாட வந்தேன் வேலவா

வள்ளி மயில்நாதனே வா வடிவேலனே
வள்ளி மயில்நாதனே வா வடிவேலனே
வரவேண்டும் மயில் மீது முருகைய்யனே
முருகா முருகா முருகா முருகா

உள்ளம் உருகியும் , கண்ணீர் பெருகியும் தேடிவந்தோமே
வெல்லம்யேனும் உந்தன் திருப்புகழைப் பாடி நின்றோமே
நான் பாடும் பாடல் ஏதும் கேட்கவில்லையா?
கேட்டாலும், அருள்புரிய மனமும் இல்லையா?

ஆனைமுகன் தம்பி , ஆறுமுகம் கொண்ட ஆதி நாயகா
அமிர்தவள்ளிக்கும் சுந்தரவள்ளிக்கும் அருளும் வேலவா
பிறவாத நிலை வேண்டும் பழநியாண்டவா
பிறந்தாலும் மலராக பாதம் சேரவா ?

# காவடியைச் சுமந்து வந்தேன் பழநியாண்டவா

**காவடியைச் சுமந்து வந்தேன் பழநியாண்டவா**
**உந்தன் காலடியை நாடி வந்தேன் பழநியாண்டவா**
**காவடியைச் சுமந்து வந்தேன் பழநியாண்டவா**
**உந்தன் காலடியை நாடி வந்தேன் பழநியாண்டவா**

கருணையின் உருவாய் நின்ற பழநியாண்டவா
உன் கதிர்முக அழகைக் கண்டேன் பழநியாண்டவா
என்நிலை மறந்து நின்றேன் பழநியாண்டவா
எமை ஆள வேண்டுமப்பா பழநியாண்டவா
நீ எமை ஆள வேண்டுமப்பா பழநியாண்டவா..

முன் வினைகள் பல சுமந்து வந்தேன் பழநியாண்டவா
நான் பிழைகள் பல செய்துவிடடேன் பழநியாண்டவா
பகைகள் என்னைச் சூழும் முன்னே பழநியாண்டவா
பாரில் என்னைக் காத்தருள்வாய் பழநியாண்டவா
இப் பாரில் என்னைக் காத்தருள்வாய் பழநியாண்டவா..

எதிர்வரும் காலம் யாவும் பழநியாண்டவா
நான் உன்புகழ் பாடவேணும் பழநியாண்டவா
நெறிகளது தவறாமல் நான் பழனிஆண்டவா...
பெருவாழ்வு வாழவேனும் பழநியாண்டவா
நான் பெருவாழ்வு வாழவேனும் பழநியாண்டவா ...

செந்தமிழ் பதிகம் நாடும் பழநியாண்டவா
நீ என் தமிழ் பிழைகள் ஏற்பாய் பழநியாண்டவா
சுந்தர பதியில் வாழும் பழநியாண்டவா
சந்ததிகள் காக்கவேணும் பழநியாண்டவா
என் சந்ததிகள் காக்கவேணும் பழநியாண்டவா..

- *வெங்கட் கணேசன், நாச்சியார்புரம்*

# ஆதிமூல இறைவா முருகா

**ஆதிமூல இறைவா முருகா ஜோதிரூப அழகா**
**ஆதிமூல இறைவா முருகா ஜோதிரூப அழகா**

கோள்பிடித்த இறைவா முருகா பழநி பால குமார
வேல்பிடித்த கையால் எங்கள் வாழ்வை உயர்த்திவிடுவாய்
உன் கால்பிடித்த எம்மை முருகா, கரையும் சேர்த்துவிடுவாய்
ஆதிமூல இறைவா முருகா ஜோதிரூப அழகா

நாதவிந்தின் பொருளே முருகா வேதமந்த வடிவா
ஞானம் கூற வருவாய் முருகா என்னை ஈன்ற இறைவா
கோடி மக்கள் நடுவே என்னைக் கொடியில் ஏற்றிவிடுவாய்
ஆதிமூல இறைவா முருகா ஜோதிரூப அழகா

வள்ளி தேவயானை துணைவா தணிகை வாழும் அழகா
துள்ளும் மானைப் போல என்னுள் என்றும் இளமை தருவாய்
எங்கள் குடியில் இன்றும் என்றும் மகிழ்ச்சி பொங்க அருள்வாய்
ஆதிமூல இறைவா முருகா ஜோதிரூப அழகா

மூவர் போற்றும் இறைவா திருசெந்தில்வாழும் அழகா
நால்வர் போல என்றும் எங்கும் பாடும் புலமை அருள்வாய்
வினையைத் தீர்க்கவருவாய் எங்கள் பிணியைத் தீர்க்கவருவாய்
ஆதிமூல இறைவா முருகா ஜோதிரூப அழகா

- *வெங்கட் கணேசன், நாச்சியார்புரம்*

# செந்திலுரை கந்தன்

**வேல்முருகா வேல்முருகா வேல்முருகா**
**வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வடிவேலா(2)**

மங்கலங்கள் பொங்கிவர சஞ்சலங்கள் அந்து விழ
செந்திலுரை கந்தனையும் பணிவோமே(2)
மந்திரத்தின் நாயகனின் மந்திரத்தை நெஞ்சுரைக்க
மந்தநிலை மங்கி விழ பணிவானே.

எப்பெரிய நோய்களேனும் ஷண்முகரின் பேருரைக்க
நொந்து வெந்து மங்கிடவே பணிவானே (2)
அப்பெரிய தெய்வமவன், பன்னிருகை வேலனவன்
சிறு திருநீறாய் நம்மை வந்தடைவானே

வாயார வயிறார வைபவர்கள் அசுரநிலை
செந்தூரா என்றுசொல்ல களைவானே
உயிராக,உணர்வாக, ஷண்முகரின் கழல் தொழுதால்
சீரலைவாய் செந்தில் நம்மில் இணைவானே

செந்தில் நிழல் நம்மில்விழ, சுந்தரதமிழ் எடுத்துக்
கந்தன் புகழ் நாம்வடிக்க, அருள்வானே
சந்ததிகள் வாழ்வதற்கும் நற்கதியும் அடைவதற்கும்
சீரலைவாய் ஷண்முகனைப் பணிவோமே

பச்சை, வெள்ளை- செவ்வரளி சாத்துப்படி ஷண்முகனை ,
மாசியிலே சென்றுநாமும் பணிவோமே
பச்சை வண்ணன் மருகன் அவன் நாமம் தினம்
ஓதுபவர் கர்மவினை வேரறுத்து மகிழ்வானே

ஆறு தலை , ஆறு இரு தோள்கள் கொண்ட, ஷண்முகனை
ஐப்பசியில் ஷஷ்டி அன்று பணிவோமே
ஆணை பலம் கொண்ட அந்தச் சுரனையும் போரில் வென்ற
செந்தில்வடிவேலன் நம்மை அருள்வானே

- *வெங்கட் கணேசன், நாச்சியார்புரம்*

## ஆறுமுகம் பேரைச் சொல்லி காவடிய ஏந்து

**அரஹரோஹரா முருகா அரஹரோஹரா**
**அரஹரோஹரா கந்தப்பா அரஹரோஹரா**

ஆறுமுகம் பேரைச் சொல்லி காவடிய ஏந்து.
ஆதிமலை சாமியும் தான் கூடவரும் சேர்ந்து
வேலையும் தான் பின்தொடர்ந்து போகவேணும் ஊர்ந்து.
பழனியப்பன் அருள்தருவான் விரதத்தையும் சார்ந்து
குன்றக்குடி பிள்ளையாரு பட்டியையும் தாண்டி
கம்மாயக் கடக்கவேணும் காவடியை ஏந்தி
மருதுபட்டி தோப்பிடையே குளிரையுமே
வேலுக்குத்தான் பூஜை செய்வோம் முருகனையும் வேண்டி

சேவுகனைப் பார்த்து நாம கோஷங்களைச்
போகவேணும் மனபச்சேரி ரெம்ப தூரம் தள்ளி
சமுத்திரா பட்டிக்கும் தான் போகவேணும்
ஏன்னா பாதத்தையும் தாண்டி வாரும் கொப்பளங்க தள்ளி

பானக்கத்துப் பூஜையத்தான் நத்தத்துல பார்த்து
போறவழி கருப்பருக்கும் மாலையும் தான் சாத்து
கோபாலு பட்டியத்தான் கடக்கும்போது சோர்ந்து
உப்பாறு இடைச்சிமடம் தத்தி தத்தி ஊர்ந்து

அபிராமி அம்மனுக்குப் பாட்டுகளை பாடி
திண்டுக்கல்ல கடக்கவேணும் நாமுத்தனே ஓடி
ரெட்டியாறு சத்திரத்தை அங்கும் இங்கும் தேடி
காலும் தோளும் விட்டுப்போகும் ஊரு ஒரு கோடி

செம்மட பட்டியிலே கொஞ்ச நேரம் தூங்கி
ஊஞ்சலிலே ஆட்டிடுவோம் முருகன தான் தாங்கி
தங்க முகம் ஜொலிக்கும் போது நம்ம மனம் ஏங்கி
பழனியப்பன் நாமத்தை தான் சொல்லிடுவோம்

குழந்தை வடிவேலனையும் கொஞ்சி கொஞ்சி பாட
நாமளும் தான் ஏறிடலாம் விருப்பாச்சி மேட அந்த
அடையாள வேல தாண்டி பழநிமலய தேட
அழகு மலை தெரிய தெரிய நடையில் வேகம் கூட

கலிங்கப்பையா, கனக்கன்பட்டி,ஆயக்குடி கடந்து
பெருமாளைச் சேவிக்கணும், நம்மளத்தான் மறந்து
இடும்பன் குளம் போகும்போது காலாற நடந்து
காவடியை இறக்கிவைப்போம் தோப்புல தான் மகிழ்ந்து

அன்னதான மடத்திலதான் பூச பல கண்டு
ஏறவேணும் பழனிமலை தை மகத்தினன்று
பழனியப்பன் திருமுகத்தை மனங்குளிர கண்டு
உள்ளுருகி சொல்லவேணும் அரோஹரா என்று

ஆனந்தமா முத்திரையப் பார்த்து நிற்பதாரு
கலியுகத்தின் அரசனான ஆண்டியினு கூறு
வேண்டிவந்த வரத்தையெல்லாம் அவனிடத்தில் கேளு
உன் சந்ததிக்கே வரத்தை தந்து வாழ வைப்பான் பாரு

## விளையாட வேலேந்தும் வேலன்

### வேலுண்டு வினையில்லை மண்மே – என்றும் வேலுண்டு வினையில்லை

விளையாட வேலேந்தும் வேலன்
கொஞ்சி விளையாட வேலேந்தும் வேலன்
விளையாட வேலேந்தும் வேலன்
கொஞ்சி விளையாட வேலேந்தும் வேலன்

நம் பகைவர்கள் படையவும் பயந்தோட என்றும்
விளையாட வேலேந்தும் வேலன்
முகமாரும் மலர்ந்திடும் பாலன்
அழகு முகமாரும் மலர்ந்திடும் பாலன்

முகமாரும் மலர்ந்திடும் பாலன்
அழகு முகமாரும் மலர்ந்திடும் பாலன்
அவன் புகழ்யாவும் இசைப்பாட விசை ஈற்றபடியே
முகமாரும் மலர்ந்திடும் பாலன்

துணையாக நடமாடி வருவான்
என்றும் துணையாக நடமாடி வருவான்
என்றும் மறவாமல் துதிபாடும் நம்வாழ்வில் என்றும்
துணையாக நடமாடி வருவான்

ரதமேறி அருள்கூறி வருவான்
தங்க ரதமேறி அருள்கூறி வருவான்
வழியாவும் கொண்டாடும் அடியார்கள் இடர்தீர
ரதமேறி அருள்கூறி வருவான்

திருமேனி காட்சிகள் தருவான்
கனவில் திருமேனி காட்சிகள் தருவான்
நல்லடியார்கள் எளியோர்கள் மனதார நினைவோர்க்கு
திருமேனி காட்சிகள் தருவான்

அழியாத வரங்களும் தருவான்
என்றும் அழியாத வரங்களும் தருவான்
தன்னை தோளேந்தி வரும் பிள்ளை சந்ததிகள் சிறக்க
அழியாத வரங்களும் தருவான்.

- *க. வெங்கடாச்சலம் நாச்சியாபுரம்*

## பழனி நோக்கிப் பயணம்

நாட்டையாளும் நகரையாளும் பழனிஆண்டவா
நகரத்தாரின் நம்பிக்கையே பழனிஆண்டவா

தெய்வபக்தியிலே மயங்கியதால் பழனிஆண்டவா
தேவக்கோட்டையிலே வீற்றிருக்கும் பழனிஆண்டவா

நகரப்பள்ளிகூடம் இருந்து பழனிஆண்டவா
நகர்வலமாய் வருபவனே பழனிஆண்டவா

சிலம்பணி ஆலயத்தில் பழனிஆண்டவா
சொந்தத்திற்கு விடைகொடுக்கும் பழனிஆண்டவா

உத்தாங் கிணற்றினிலே பழனிஆண்டவா
ஊர்கூட்டி வருகின்றோம் பழனிஆண்டவா

காரைகுடியிருந்து வருபவனேபழனிஆண்டவா
கவலைகளைத் தீர்ப்பவனே பழனிஆண்டவா

குட்டையைய்யா குடும்பத்திலே பழனிஆண்டவா
குரல்கொடுத்து வருபவனே பழனிஆண்டவா

அரண்மனைபொங்கல் பூஜையிலேபழனிஆண்டவா
அன்னதானம் உண்டுமகிழும் பழனிஆண்டவா

வாங்கஒலி சத்தங்கேட்டால் பழனிஆண்டவா
வழிநெடுக எழுந்துநிற்பார் பழனிஆண்டவா

குன்றக்குடியினிலே வாழுகின்ற பழனிஆண்டவா
குறைதீர்க்கும் மன்னவனே பழனிஆண்டவா
ஊரெல்லாம் ஒன்றுசேர்ந்து பழனிஆண்டவா
உன்னைகாண வருகின்றோம் பழனிஆண்டவா

கண்டவராயன் பட்டியலே பழனிஆண்டவா
காட்சிதந்து அருள்பவனே பழனிஆண்டவா

மருதுபட்டி தோப்பினிலே பழனிஆண்டவா
மங்கைவள்ளியோடு வாழ்பவனே பழனிஆண்டவா

சிங்கம் புணரியிலே பழனிஆண்டவா
சிக்கலெல்லாம் தீர்ப்பவனே பழனிஆண்டவா

மணப்பச் சேரியிலே பழனிஆண்டவா
மக்கள்குறை கேட்பவனே பழனிஆண்டவா

சமுத்திராப் பட்டியலே பழனிஆண்டவா
சங்கடங்கள்தீர்ப்பவனே பழனிஆண்டவா

நத்தம்நோக்கி வருகின்றோம் பழனிஆண்டவா
நன்மைபல தருபவனே பழனிஆண்டவா

உப்பாற்றைக்காட்டிவிட்டு பழனிஆண்டவா
உன்காலடியை வணங்குகின்றோம் பழனிஆண்டவா

இடைச்சி மடத்தினிலே பழனிஆண்டவா
இளைப்பாறி ஒய்வுயெடுக்கும்பழனிஆண்டவா

திண்டுக்கல் கோவிலிலே பழனிஆண்டவா
தெய்வானையோடு அருள்கொடுக்கும் பழனிஆண்டவா

ரெட்டியார் சத்திரத்தில் பழனிஆண்டவா
ரெட்டைமனைவியோடு காட்சிதரும் பழனிஆண்டவா

செம்மடைபட்டி ஊஞ்சலிலே பழனிஆண்டவா
சிரித்துச்சிரித்து ஆடுகின்ற பழனிஆண்டவா

குழந்தை வேலன் சன்னதியில் பழனிஆண்டவா
குழந்தைவரம் தருபவனே பழனிஆண்டவா

கலிங்கப்பையா ஊரணியில் பழனிஆண்டவா
கடும்குளிரைத் தடுப்பவனே பழனிஆண்டவா

ஆயக்குடி கோவிலிலே பழனிஆண்டவா
அமைதியோடு வீற்றிருக்கும் பழனிஆண்டவா

இடும்பன் குளத்தினிலே பழனிஆண்டவா
இடிமுழக்க பிரம்பாட்டம் பழனிஆண்டவா

மேல்கீழ்வட்டகை சேர்ந்திருக்க பழனிஆண்டவா
மேளதாளத்தோடு அழைக்கவருவார்! பழனிஆண்டவா

பழனிமலை அடிவாரத்தில் பழனிஆண்டவா
பிரம்போடுகாவடிஆட்டமாடுகின்றபழனிஆண்டவா

அன்னதானமடம் நோக்கி பழனிஆண்டவா
ஆனந்தமாய் நடந்துவாரோம்பழனிஆண்டவா

ஆறுகாலு சவுக்கையிலே பழனிஆண்டவா
அய்யாவின் பிரம்புக்குள் பழனிஆண்டவா

ஆட்டமாடி அருள்கொடுக்கும் பழனிஆண்டவா
பாட்டுப்பாடி உனைபணிவோம் பழனிஆண்டவா

காவடிக்குள் ஒளிந்திருக்கும் பழனிஆண்டவா
பாவடித்தால் ஆட்டமாடும பழனிஆண்டவா

பன்னீரில் குளிப்பதனால் பழனிஆண்டவா
பாவத்தையே போக்கிநிற்பாய் பழனிஆண்டவா

காவடியைப் பால்குடத்தைப் பழனிஆண்டவா
மகத்தன்றே ஏற்றுக்கொண்டு பழனிஆண்டவா

நாடுநலம் பெற்றிடவே பழனிஆண்டவா
நல்லாட்சி புரிந்துடுவாய் பழனிஆண்டவா

*ஆக்கம் - வீர பழனியப்பன் - சிங்கப்பூர் (VR.PL)*

## சாய்ந்தாடு முருகா சாய்ந்தாடு

**சாய்ந்தாடு முருகா சாய்ந்தாடு சுந்தர சிமிழே சாய்ந்தாடு**

ஆயிரம் கோயில் கொண்டவனே
உள்ளக் கோவில் ஆழ்பவனே
காவடி பஜனை பூஜையிலே
மகிழ்வாய் நீயும் சாய்ந்தாடு

தாயும் தந்தையும் ஆனவனே
அன்புப் பிள்ளையும் நீயாவாய்
வாழ்வின் பொருளாய் ஆனவனே
சாய்ந்தாடு முருகா சாய்ந்தாடு

புன்னகை சிரிப்பில் மயக்கிடுவாய்
நீயே துணையும் ஆகிடுவாய்
தர்மங்கள் எங்கும் தழைத்தோங்க
மகிழ்வாய் நீயும் சாய்ந்தாடு

குழந்தை வடிவில் தோன்றிடுவாய்
மடிமேல் நீயும் விளையாடிடுவாய்
அன்பு பிள்ளை பாட்டினிலே
சாய்ந்தாடு முருகா சாய்ந்தாடு

சிட்டே சிமிழே முருகையா
சொக்க தங்கமே கந்தையா
உண்மைப் பொருளே வேலைய்யா
சாய்ந்தாடு முருகா சாய்ந்தாடு

*லெட்சுமணன் சக்திகுமார். தேவகோட்டை.*

## வேலவா ஷண்முகா

**வேலவா ஷண்முகா வேல்முருகா வா வா,**
**வேலவா ஷண்முகா வேல்முருகா வா வா,**
**வேல்முருகா வா வா, வேல் முருகா வா வா**
**வேலவா ஷண்முகா வேல்முருகா வா வா,**

*வேலவா வேலவா மெட்டு*

வள்ளி மணவாளனே, குன்றக்குடி வேலோனே
குலம் விளங்க வந்தவா, குழந்தை வரம் தந்தவா
தொட்டில் கட்டி வந்தோரின் துயர் துடைத்த ஷண்முகா.

மேருமலைவாசன் மகளை மணமுடித்த மாயனே,
பரங்குன்றமலை பரமனே, மாலை எடுத்துத் தந்தவனே
தேவசேனாபதியே உந்தன் பாதம் பணிந்து வாழ்ந்தோமே.

சூரவதம் செய்தவா, ஆழிக்கரைச் செந்தூரா
வீரம்புகட்ட வந்தவா, பகைமுடித்துத் தந்தவா
வேல் வணங்கிச் சென்றவர்க்கு ஜெயமளித்த வேலவா

ப்ரணவம் உணர்த்த உதித்தவா, ஞானமளித்த பாலகா
ஐம்புலனில் வாழ்ந்தவா, தரணி ஆழச் செய்தவா
அகந்தை நீக்கி அறிவு தந்தாய் சுவாமிமலை நாயகா

தணிகைமலை சுப்பையா, சாந்தரூபம் கொண்டாயா
மனம் அடக்க வந்தவா, அமைதி நெஞ்சில் தந்தவா
தவித்துத் தவித்துக் கலங்கினோர்க்குக்
கலங்கரையாம் தணிகேசா

குறுஞ்சி நிலக்கிழவனாம் அழகுச் சோலை நடுவிலே
நக்கீரர்பாட லயித்தவா, ஆற்றுப்படையில் குளிர்ந்தவா
தமிழ்வளர்த்த செட்டிமக்களை ரட்சித்தருள ஓடிவா வேலவா...

இத்தனையும் தந்தாயே, குறைவில்லாமல் காத்தாயே
நன்றிசொல்ல வாரோமையா, (உனை)
பார்க்க மனம் ஏங்குதையா
காவடி ஆடி வாரோமையா, சர்க்கரை அதில்
கொண்டோமையா

பழனிமலை ஆண்டவா ஏரெடுத்துப் பாராயோ
பழனிமலை ஆண்டவா தரிசனம்தான் தாராயோ வேலவா...

*பாவாக்கம்: மெய்யம்மை பெரியணன், சிங்கப்பூர்*

## சரணம், சரணம் முருகையா

**சரணம், சரணம் முருகையா,**
**நீ வரணும் வரணும் முருகையா**
**சரணம் சரணம் முருகையா,**
**வரம் தரணும் தரணும் முருகையா**

புண்ணியம் தேடி, உன் பாதத்தை நாடி,
பழனி மலைக்கு வந்தோம்.
காவடி செலுத்தி, அறுபடை வீட்டைக் கண்ட பயனும்
அடைந்தோம், கண்ட பயனும் அடைந்தோம்.

அரன்மகன் குகனே, ஷண்முகக் கொழுந்தே,
தீப்பொறியாக உதித்தாய்
கங்கையில் கலந்து, பொய்கையில் மிதந்து,
அறுமுகனாகப் பிறந்தாய்
கார்த்திகைப் பெண்கள், பாசமாய் வளர்க்க,
கார்த்திகேயனாய் நின்றாய்
அறுவரை ஒருவனாய், சக்தியும் அணைக்க,
சுப்ரமண்யனாய் மிளிர்ந்தாய்.

தமிழனே, அழகனே, ஞானானந்தனே,
போதியில் புத்தனாய் ஞானம் அளித்தாய்
வைகாசித் திங்கனின் விசாகனாய்,
உன்னைக் கொண்டாடி மகிழ்ந்திடுவோமே - உன்னைக்
கொண்டாடி மகிழ்ந்திடுவோமே.

அசுரனை அழித்து, தேவரைக் காக்க,
வெற்றிவேலனாய் வந்தாய்
போரினில் வெல்ல, அன்னையின் அருளாய்,
சக்திவேலையும் பெற்றாய்
சக்திசிவகிரியைத், தோள்களில் சுமந்து,
இடும்பனை வரச் செய்தாய்
சுமையை அழுத்தி, ஆட்கொண்டவனை,
தன்வசமாக்கி மகிழ்ந்தாய்

தமிழனே, அழகனே, காவடிப் பிரியனே, சர்க்கரை
அமிர்தத்தில் உள்ளம் கனிந்தாய்
தைப்பூச நாயகா உன் சேவடியைக் காண, ஓடோடி
வந்திடுவோமே – மலைக்கு ஓடோடி வந்திடுவோமே

செந்தூரின் கரைதனில், சூரனை வதம்செய்து,
தேவர் அவலம் தீர்த்தாய்
சேவல்-மயிலுமாய், அசுரனை அணைத்து,
கருணைக் கடலாய் எழுந்தாய்
அறுதினம் தொழுதுன்னை, வேண்டிவந்த
பக்தர்க்கெல்லாம், ஸ்கந்த ரூபனாய்த் தெரிந்தாய்
கர்ம-மாயை, அகந்தை அகற்றி, மோட்சகாரகனாய்
சிரித்தாய்.

தமிழனே, அழகனே, சம்ஹார நாயகனே,
வெற்றி கைகூடிட வழித்துணை வந்தாய்

வேலாக வந்து எம்மை, கவசமாய்க் காத்திட, விரதம்
இருந்திடுவோமே, சஷ்டி விரதம் இருந்திடுவோமே.

அதர்மம் அழிந்தது, அகமும் மகிழ்ந்தது,
தேவர் போற்ற வளர்ந்தாய்
தமக்கையில் மூத்தவள், அமிர்தவல்லி உன்னை,
மணக்கும் ஆசை அறிந்தாய்
பங்குனி மாதத்தில், மணக்கோலம் பூண்டவன்,
தெய்வானை கரம்பிடித்தாய்
கண்கோடி இருப்பினும், காணக் கிடைக்கா, தெய்வத்
திருமணம் புரிந்தாய்

தமிழனே, அழகனே, தேவசேனாபதியே,
வம்சம் தழைத்திட விருட்சமாய் நின்றாய்
உத்திர நன்னாளில், தரிசனம் கிடைக்க,
காத்துக் கிடந்திடுவோமே, பரங்குன்றத்தில்
காத்துக் கிடந்திடுவோமே.

*பாவாக்கம்: மெய்யம்மை பெரியணன், சிங்கப்பூர்*

## பாலதெண்டாயுதபாணியுடன் விளையாட்டு

### தந்தானே தந்தானே திந்தக்க திந்தக்க திந்தக்கத்தோம், திந்தக்க திந்தக்க திந்தக்கத்தோம்!!

ஆடி வரும் அழகுப் பிள்ள, யாரதுன்னு பாரம்மா –
யாரதுன்னு பாரம்மா.
என் மடியில் விளையாட வரும் அரோகரன் தானம்மா -
அரோகரன் தானம்மா!

பாடி வரும் சின்னப் பையன் யாரதுன்னு பாரம்மா –
யாரதுன்னு பாரம்மா.
எங்கிட்ட பழங்கேட்டு வம்பு பண்ண பழனியப்பன் தானம்மா
பழனியப்பன் தானம்மா!

துள்ளி வரும் தத்துப் பிள்ள யாரதுன்னு பாரம்மா –
யாரதுன்னு பாரம்மா.
என்ன தவிக்கவிட்டு தேடவைக்கும் தெண்டபாணி தானம்மா
தெண்டபாணி தானம்மா!

குதித்து வரும் குழலழகன் யாரதுன்னு பாரம்மா –
யாரதுன்னு பாரம்மா.
என்னக் குளிரவச்சு மனமுருக்கும் குமரகுரு தானம்மா -
குமரகுரு தானம்மா!

சாய்ந்தாடும் சாயக்கிளி யாரதுன்னு பாரம்மா –
யாரதுன்னு பாரம்மா
என்னச் சிரித்து மயக்கி சிலிர்க்கவைக்கும் செட்டிமகன்
தானம்மா - செட்டிமகன் தானம்மா!

தாயோடு கொஞ்சி விளையாடவந்த பாலனே –
விளையாட வந்த பாலனே!
எங்களோடும் விளையாடு குழந்தைவடிவேலனே –
குழந்தைவடிவேலனே!

காரைச்சிவன் கோயிலிலே சக்கரகட்டித் தேடினோம் –
சக்கர கட்டி தேடினோம்.
கொப்பாத்தா வாசல் வந்தும் கண்ணுல அவனக் காணல -
கண்ணுல அவனக் காணல!

குன்றத்தில் வேல்வாங்கிக் கால்நடையாய்க் கிளம்பினோம் -
கால்நடையாய்க் கிளம்பினோம்.
கம்மாய்-தாண்டி தோப்பும்-வந்தது கண்ணுல அவனக்
காணல - கண்ணுல அவனக் காணல!

உச்சிவெயில் பெரு நடையாய் உப்பாரில் தேடினோம் -
உப்பாரில் தேடுனோம்.
அபிராமிகிட்ட முறையிட்டும் கண்ணுல அவனக் காணல -
கண்ணுல அவனக் காணல!

செம்மடப்பட்டி ஜொலிஜொலிக்க கூட்டம்
அலை மோதுதே - கூட்டம் அலை மோதுதே.
அங்க ஷண்முகநாதன் மினுமினுக்க கண்கலங்கி நின்னேனே
கண்கலங்கி நின்னேனே!

அழகுபெத்த மழல-உன்ன கண்ணுல ஒத்திக்கத் தோணுதே -
கண்ணுல ஒத்திக்கத் தோணுதே.
என்னக் காத்தருள வரவேண்டும் குழந்தைவடிவேலனே –
குழந்தைவடிவேலனே!

ஆறுகால்-சவுக்கயில வேல்பூச கமழுதே - வேல்பூச கமழுதே.
மலையேறி உன்ன பார்த்ததும் இன்பம் நெஞ்சில் பொங்குதே
இன்பம் நெஞ்சில் பொங்குதே!

*பாவாக்கம்: மெய்யம்மை பெரியணன், சிங்கப்பூர்*

# வைத்தீசுவரன் கோவில் ஸ்ரீ முத்துக்குமாரசாமி பதிகம்

ஓதித்துதிக்கும் அடியார் துன்பம்யாவையும் உடனே விலக்கும்முருகா
உமையாளின் மடியிலும் இமையோரின் முடியிலும் ஓடிவிளையாடும் அழகா
சீதத்தமிழ்கொண்டு திருவருள் வழங்குவாய் தெய்வானை வள்ளிகணவா
தெய்வநாயகனோடு தையல்நாயகி மகிழும் செல்வமுத்துக்குமரனே

வான்பொய்த்த போதிலும்  தான்பொய்த்துப்போகாத வள்ளல் காவேரிதீரம்
வாழைகள் குருத்திடத்  தாழைகளும் சோறிடும் வளமான சோழதேசம்
தேன்பொய்த்துப் போகாத செல்வ மலர்ப்பாதமே சேவிப்பேன் எந்தநாளும்
தெய்வநாயகனோடு தையல்நாயகி மகிழும் செல்வமுத்துக்குமரனே
அறிவுவாராத சிறுகழுகுகளும்  உன்னையே அன்போடு தொழவில்லையோ?
ஆதவன் எரித்தசிறை மீதெழு எழுந்தசுரர் அழியவழி தரவில்லையோ?
சிறகுபெற்றடியேனும் உனதுபுகழ்பாட அருள் செய்வாய் இதென்னமலையோ?
தெய்வநாயகனோடு தையல்நாயகி மகிழும் செல்வமுத்துக்குமரனே

தொலையாத பல்பிணியும்  தூரத்தில்நின்றுகை தொழுதேகும் அந்தநோயின்
சுவடுமில்லாதபடி  அருணகிரிநாதர்க்குச் சொர்ணதேகம் கொடுத்தாய்
சிலைபோலநிற்பதோ பிணியாவும் தீர்த்தெனையும் சிவயோகி ஆக்கிவைப்பாய்
தெய்வநாயகனோடு தையல்நாயகி மகிழும் செல்வமுத்துக்குமரனே

ஒறாதுசெய்தவினை நோயாய் விளைந்தெனையும் உயிர்வாதை செய்யலாமோ?
உன்பாதபங்கயம் கொண்டாடும் என்தமிழும் உயிரின்றிப் போகலாமா?

தீராதபிணியாவும் ஓடோடிப்போக நீ
திருவுளம்கொள்கஉடனே
தெய்வநாயகனோடு தையல்நாயகிமகிழும்
செல்வமுத்துக்குமரனே

நாலூர்திரிந்தென்ன? ஊரூர்அலைந்தென்ன? நாடினேன்
உனதுவேளூர்
நாடூர்மதிக்கநான் வேறூர் புகாதபடி நல்குவாய்
பொன்பொருள்பேர்
சேலூர்கடைக்கண்கள் தோளூற இருபாலும் தேவியர்தொழும்
மன்னனே
தெய்வநாயகனோடு தையல்நாயகி மகிழும்
செல்வமுத்துக்குமரனே

ஆறுபடைவீடுகள் நூறுமலைநாடுகள் அண்ணலே
உனதுசொந்தம்
ஆசையில் விளைந்து மனஓசையில் எழுந்து நடமாடிவரும்
எனதுசந்தம்
தேறுகலைவாணனே ஏறுமயில்வீரனே தீராது நமதுபந்தம்
தெய்வநாயகனோடு தையல்நாயகி மகிழும்
செல்வமுத்துக்குமரனே

நீதான் அடைக்கலம் நீதான் படைக்கலம் நீதான்
என்இதயதெய்வம்
நீதான் இலக்கணம் நீதான் இலக்கியம் நீதான்
வைப்புநிதியும்
தீதானயாதொன்றும் வராமல் அருளுவாய்
சிங்காரவடிவேலனே
தெய்வநாயகனோடு தையல்நாயகி மகிழும்
செல்வமுத்துக்குமரனே

கொக்கரித்தண்டம் குலுங்கச் சிறைகொட்டியே கூவிவரும்
உனதுசேவல்
குதிகொண்டசேவலும்  ஜதிகொண்டமயிலும்
உன்கூர்வேலும்எனதுகாவல்
திக்கெட்டும் சென்றுநான் உனதுபுகழ்பாடுவேன்
செந்தமிழ்கலையரசனே
தெய்வநாயகனோடு தையல்நாயகி மகிழும்
செல்வமுத்துக்குமரனே

உனைநம்பினேன் நம்பினேன் நம்பினேன் என்னையே
உன்வசம் ஒப்புவித்தேன்
ஊறானயாதொன்றும் வராமல் அருளுவாய் உன்னையே
சரணடைந்தேன்
தினைமான் குறப்பெண்டு மணவாளாமுருகனே
திருமால்தன் மருகனேவா
தெய்வநாயகனோடு தையல்நாயகி மகிழும்
செல்வமுத்துக்குமரனே.

## பழனியம்பதியின் பெருமாளே

**வேல் வேல் முருகா வேல்**
**வேல் முருகா வேல்**
**வேல் வேல் முருகா வடிவேலா – x2**

திருமுடி ஆறும் இருமடமாதர்
திருவடி சேரும் வடிவேலா
திருப்பரம் குன்றில் தேவர்கோன் மகளைத்
திருமணம் கொண்ட மணவாளா
விருப்புடன் பாடும் திருப்புகழ் கேட்டு
விரைவினில் ஓடி வருவாயே
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழனியம்பதியின் பெருமாளே

சீரலை வாயாம் செந்தூர்க்கரையில்
சூரனை வென்ற வடிவேலா
நீரலைப் போல நெஞ்சலை மோத
நேர்வழி கூறும் குருநாதா
தாரலை மார்பா ஷண்முகநாதா
தமிழலை மீதில் தவழ்பாலா
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழனியம்பதியின் பெருமாளே

பழனியம் பதியில் பண்டார மாகிப்
பக்தரைக் காக்கும் வடிவேலா
இளகிய நெஞ்சே அழகிய மயிலாய்
எழுந்தருள் செய்யும் குணசீலா
கழனியில் நெல்லாய் கடலினிற் கலமாய்க்
கடுவினை மாய்க்க வருவாயே
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழனியம்பதியின் பெருமாளே

ஏரகப் பதியில் தாரகப் பொருளை
ஈசனுக் குறைத்த குருநாதா
ஈரகம் கொண்டும் சீரக மணம்போல்
இல்லறம் கண்ட பெருமானே
பாரதம் போற்றும் பைந்தமிழ் மணியே
பழ வினைமாற்றும் முருகேசா
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழனியம்பதியின் பெருமாளே

தணிகையம் பதியில் வனிதையர் உடனே
தமிழகம் காக்கும் வடிவேலா
மணிகளின் மணியே மலை மகள் மகனே
மாலவன் போற்றும் மருகோனே
அணியனி ஆகி அடியவர் பாடும்
அருந்தமிழ் காக்க வருவாயே
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழனியம்பதியின் பெருமாளே

கிழமுதிர் மந்தி கிளையுடன் திரியும்
பழமுதிர்சோலை வடிவேலா
உளமுதிர் அன்பே உய்வகை என்றே
உணர்வகை காட்டும் முருகேசா
பழவினை மாற்றி பவவினை நீக்க
பக்தரை நோக்கி வருவாயே
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழனியம்பதியின் பெருமாளே

## கேன்பெரா ஆறுபடை

தொந்தியுடன் துதிக்கையுடன் துணைவரு வாயே
வந்துபிழை தனைமாற்றும் வெள்ளைக் கொம்பே
கந்தனையும் யாம்பாடக் கணபதிக் கோவே
சந்தமொழி தந்தருளும் செய்வாய் நீயே
ஆறுமுகம் காட்டிவந்த அன்னை வேலன்
நீறுநெற்றிக் குங்குமத்தில் நேசம் சொல்வான்
நூறுபடை தேவையென்ற நோக்கம் தீரும்
ஆறுபடை அருகிருக்க அதுவே போதும்

பாட்டுசொல்லக் கேட்டிருப்பான் பிள்ளை வேலன்
மீட்டுமிசை தனிலிறங்கி முறுவல் பூப்பான்
நாட்டமுடன் நகரத்தார் நாமும் கேட்க

ஆட்டமுடன் அருள்தரவே அழகாய் வந்தான்

வள்ளியம்மை முகம்பார்க்க வந்தான் தணிகை
புள்ளிமயில் அகவிடவே புரிந்தான் லீலை
அள்ளிவரம் ஈந்திடவே அன்பால் வேண்ட
கிள்ளைமொழி கேட்டுவந்தான் கேன்பெரா தேடி

வருந்தியுடன் அழைத்தனால் வானோர் காக்க
விருப்பமுடன் வேல்பிடித்தான் வேதனை தீர்க்க
அருமைமகள் தெய்வானை அவனுள் பூக்க
திருப்பரங்கிரி காட்சியிங்கே தினமும் பார்க்க

சிங்காரன் ஓ(ம்)உரைத்தான் சிவனும் கேட்டான்
ஆங்காரம் நா(ம்)அழிக்க அதனுள் சொன்னான்
எங்களுக்காய் சாமிமலை இங்கே தந்தான்
சங்கத்தமிழ் பாவிசைக்கச் சொந்தம் ஆனான்

பழமென்னும் கருவிகொண்டு பாடம் தந்தான்
மழலையுமே அருளுருவாய் மலைமேல் அந்தப்
பழநியுடன் நாங்களுமே பலநாள் நட்பு
அழைத்தவுடன் விரைந்தானே அறுபடை இன்று

சொன்னபடி வென்றிடவே சூரன் தன்னைச்
சின்னவனும் தேர்ந்ததுவோ செந்தூர் மண்ணை
மின்னுமந்தத் தோற்றமுடன் மயிலில் ஏறி
வன்மங்களைக் களைந்துவந்தான் வரங்கள் கூறி

சோலையிலே சுந்தரனைச் சொந்தம் கொண்டார்
வாலைமயில் தெய்வானை வள்ளிப் பெண்ணார்
மாலைமணக் கோலமுடன் மலைகள் தாண்டி
காலையொளிக் கதிரவன்போல் கேன்பெரா வந்தான்

ஆறிடமும் ஓரிடமாய் ஆக்கும் ஆவல்
கூறிடவே கொக்கரித்துக் கொடியில் சேவல்
வேறிடங்கள் இதுபோலே வாரா தென்று
ஆறுபடை கொண்டானெம் அழகன் இங்கு

உத்திபல கொண்டுநிதம் உறையும் துன்பம்
அத்தனையும் உருகுமுன்னை அடையும் நேரம்
இத்தனைநாள் சோதனைகள் போகும் வண்ணம்

சித்திரமாய் வந்துவிட்டாய் சிரித்தே நீயும்

எட்டிநின்றால் விடுவோமா எங்கள் கந்தா
பட்டதுயர் மாற்றியெங்கள் பக்கம் வந்தாய்
செட்டிமக்கள் குலவிளக்கே செந்தில் வேலா
மெட்டெடுத்துப் பாடிவந்தோம் மேன்மை தாராய்

*கல்லல் மீ.மணிகண்டன்*

## கான்கார்ட் காட்சிக் குமரன்

உக்கியிட்டுக் கணபதியுன் துணையைக் கேட்டோம்
உன்பெருமை மூசிகனார் சொல்லக் கேட்டோம்
உவப்புடனே வேலனுக்குப் பாடல் நெய்வோம்
உடனிருந்து உதவிடுவாய் குருவே நீயும்

காதமைல் பழனிக்கு வருவோம் என்றால்
காடுகடல் தாண்டவேணும் கந்தா நீயும்
கானமயில் ஏறிஇங்கு வருவாய் என்றே
கான்கார்டை நோக்கிஅடி வைத்தோம் வாவா

பழநிவரும் காவடிகள் சிறிதே என்று
பக்குவமாய் தொடர்ந்தோமே படைவீ(டு) ஆறு
பார்த்ததிலே அதுகூடக் கொஞ்சம் என்று
பக்தர்களும் தொடர்ந்துவிட்டோம் கான்கார்ட் இன்று

ஆறுபடை வீடிருந்தும் ஐயா எங்கள்
ஆசைமட்டும் அகலவில்லை அழகா உன்னை
அனுதினமும் பார்த்திருக்க வேண்டும் இங்கே
ஆக்கிடுவோம் கான்கார்(ட்)ஓர் படைவீ (டு)என்றே

பழம்வேண்டிப் பழநிக்குச் சென்றாய் என்று
பலநூறு வகையுனக்குப் பழங்கள் கொய்வோம்
பலன்வேண்டித் தரவில்லை பகட்டும் இல்லை
பக்தியுண்டு உன்மேலே அதனால் செய்தோம்

சனிகேது திசைபலவும் சாந்தம் கொள்ளும்
சங்கரனார் புத்திரனுன் பார்வை போதும்
சங்கடங்கள் வந்ததிசை தேடிப் போகும்

சண்முகனே சரணமுன்னை அடையும் நேரம்

வேல்வணங்கித் தொடங்குகிற வேலை யாவும்
வெற்றிபெறும் ரகசியத்தை வேலா சொன்னாய்
வேங்கைமரம் வேடரூபம் போலே நானும்
வேண்டும்படி காட்சிவரம் எப்போ சொல்வாய்

நாருசிக்க மூவேளை உணவும் உண்டு
நான்படிக்க நல்லதமிழ் பாட்டும் உண்டு
நம்பிவந்தால் கைகொடுப்பான் கந்தன் என்று
நாட்டமுடன் நடந்துவந்தோம் பாதை கண்டு

கந்தனென்ற மந்திரத்தைக் கருத்தில் கொண்டு
கடல்தாண்டி வந்துவிட்டேன் கதிவே(று) அன்று
கரையுமிந்தக் கன்றறிந்த பசுநீ ஒன்றே
கால்சுற்றிக் குழைந்திருப்பேன் காப்பாய் நன்றே

கணக்கின்றிப் பிறந்துவந்தேன் காயம் ஆற்று
கற்பூரம் கமழ்தூபம் முருகா ஏற்று
கைப்பிடித்தேன் கவலைவிடு என்றே சொல்லக்
காட்சியருள் கான்கார்டில் மயில்மேல் வீற்று

*கல்லல் மீ.மணிகண்டன்*

வேலும் மயிலும் துணை

# சிங்கை முருகன் திருப்புகழ்

சிங்கையம்பதியில் ஆலயம் கொண்டு
சீர்மிகு வாழ்வைத் தரும்வேலா
சிந்தையில்இருந்து ஆனந்தம்
அளித்து நல்வழி காட்டும் குருநாதா

கார்த்திகைதோறும் மயில் வாகனனாய்
வளங்கள் அருளும் முருகோனே
நவராத்திரிதனிலே நவ கோலம் கொண்டு
அகயிருள் போக்கும் வடிவேலா

சஷ்டியில்விரதம் இருக்கும் அடியார்
விருப்பங்கள் அனைத்தும் அருள்பவனே
தவக்கோலம்கொண்டு தைப்பூச நாளில்
காவடி பாற்குடம் ஏற்பவனே

அல்லவைநீக்கி நல்லவை பெருக்கி
அகிலம் காக்கும் அறுமுகனே
ஞானவடிவாய் அற்புதம் காட்டி
அடியவர் காக்கும் பரம்பொருளே

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்தம் வழிபடவழிபட ஆனந்தம்
வள்ளல் முருகா சிங்கையின் அரசே
தாள்கள் பணிந்தோம் நலம்தருவாய்

*லெ. சக்திகுமார். தேவகொட்டை*



# தண்டாயுதபாணி -ஆனந்தக் களிப்பு

தண்டா யுதபாணி பாதம் - அதில்
தலைதன்னை வைப்பாரை நண்ணாது சேதம்.
கொண்டாடி நீபாடு கீதம் - உனைக்
கூடாமல் இடரெல்லாம் பறந்தோடும் காதம் (1)

வெற்றி தருகின்ற வேலன் - நம்
விண்ணப்பம் எல்லாமே கைகூட்டும் சீலன்
உற்ற இடர்கொல்லும் காலன் - நமை
உற்சாகக் கடலுக்குள் அழுத்துசிவ பாலன். (2)

அவனுக்கு வீடாகும் குன்று – நீ
அன்றாடம் நெறிதன்னில் கைகூப்பு சென்று
சிவனுக்கு மகன்தாளில் ஒன்று - உறு
சிக்கல்கள் நீவென்று வாழ்வாயே நன்று (3)

கொடிதன்னில் கொண்டானே சேவல் – அக்
குமரன்தன் அருளன்றி வேறேது காவல்?
அடிதன்னை பற்றக்கொள் ஆவல் - நிதம்
அன்போங்கி அதுசெய்தல் அன்பர்கே ஏவல். (4)

கந்தரனு பூதியைநீ சொல்லு. - அவன்
கழல்தன்னை நிதம்பற்றிக் கவலைகளைக் கொல்லு.
எந்தயிடர் என்றாலும் வெல்லு - அந்த
இனியவனின் சந்நிதியில் எப்போதும் நில்லு (5)

கொண்டானே அழகுமுகம் ஆறு – அக்
குமரன்நற் புகழன்றிக் கூறாதே வேறு;
அண்டாது தீங்கென்னும் சேறு - உள்
அன்போங்கித் அன்றாடம் அவன்செவ்வி கூறு (6)

வணிகத்தில் வல்லாரே செட்டி – அவர்
வள்ளலுக்கு நற்கோவில் வைத்தாரே கட்டி.
மணியான அருள்வெல்லக் கட்டி - மால்
மருகன்தாள் பணிதற்குக் நமக்குண்டோ அட்டி? (7)

அன்பனவன் புகழொன்றே பேசு – அவன்
அடிபற்றி உன்இன்னல் எல்லாமே வீசு;
துன்பமெனும் நஞ்சான மாசு - உனைத்
தொடராமல் கண்கொள்ளும் தூய்மையுறு தேசு. (8)

ஆறுமுகன் திருப்புகழைப் பாடு - நீ
அன்போங்கி அவனருளாம் ஆழியிலே ஆடு;
பேறுகொள அவன்கோவில் நாடு - மனம்
பித்தாகி அவனடியை எப்போதும் கூடு. (9)

தீங்கெல்லாம் போகுமுனை விட்டு - நம்
திருமுருகன் நற்பார்வை தினமுன்மேல் பட்டு;
பூங்கழலை நீநாளும் தொட்டு - அவன்
புகழ்தன்னை பறையேந்தி உலகெல்லாம் கொட்டு (10)

முருகன்மேல் பலவுண்டு பாட்டு - நீ
முறுவலுற அவைபாடித் துன்பத்தை ஓட்டு;
அருமைமிகு பாமாலை சூட்டு - அந்த
அழகனுடன் நீவைப்பாய் அன்புவழிக் கூட்டு (11)

சங்கரனின் மகன்செம்மை சாற்று - கந்த
சஷ்டியிலே நல்விரதம் பக்தியுடன் ஆற்று
பங்கமிலா சைவநெறி ஏற்று - அப்
பன்னிரெண்டு கையானைப் பணிவோடு போற்று (12)

*அ.கி.வரதராஜன்*

## சிங்கையை ஆளும் பெருமாளே!

**வேல் வெற்றி வேல் வெற்றி வேல் வெற்றி வேல்**
**வேல் வெற்றி வேல் வெற்றி வேல் வெற்றி வேல்**

அங்கையின் வேலே அங்கமாய்க் கொண்ட
அழகொளிர் தண்டா யுதபாணி!
சிங்கையில் டாங்க்ரோட் திருவளர் கோயில்
சீருறத் துலங்கித் திகழ்வோனே!
மங்கையர் இருவர் வலம்இடம் திகழ
மகிழ்மணம் கண்ட மணவாளா!
திருவுடன் கலைகள் சேர்ந்துயர் நாடாம்
சிங்கையை ஆளும் பெருமாளே! 1

கொண்டுவிற்(று) அந்நாள் குவலயம் எல்லாம்
குலத்தொழில் செய்த நகரத்தார்
தண்டினை ஏந்து தமிழவேள் நீயும்
தங்கிடக் கோயில் அமைத்தார்கள்
தொண்டினை ஏற்றாய்! துணையென நின்றாய்!
தூயனே! சக்தி உமைபாலா!
திருவுடன் கலைகள் சேர்ந்துயர் நாடாம்
சிங்கையை ஆளும் பெருமாளே! 2

அன்றைய  தொழில்விட்(டு) இன்றினுக்(கு) ஏற்ப
அலுவல கத்திற் பணியேற்றோம்
நன்றுபல் தொழில்கள் நாணய மாக
நகரத் தார்கள் செய்கின்றோம்
வென்றுபல் தொழிலால் மேவுநற் பணியால்
மேன்மைகள் ஓங்க அருள்வாயே!
திருவுடன் கலைகள் சேர்ந்துயர் நாடாம்
சிங்கையை ஆளும் பெருமாளே! 3

தமிழையும் வளர்த்தோம் சமயமும் வளர்த்தோம்
தமிழராம் நாங்கள் நகரத்தார்
சிமிழினிற் குங்குமம் திகழ்வது போலச்
சிந்தையில் அறமே கொண்டுள்ளோம்
அமிழ்தினும் இனிய தமிழ்ப்பாக் கொண்டே
ஆண்டவன் உன்னைத் தொழுதிடுவோம்
திருவுடன் கலைகள் சேர்ந்துயர் நாடாம்
சிங்கையை ஆளும் பெருமாளே! 4

சிங்கையின் தமிழர் சிங்கையின் சீனர்
சிந்தையில் வேலே நினைத்திருந்து
தங்களின் உடலில் அலகுகள் குத்தித்
தைவரு பூச நன்னாளில்
பொங்குமெய்  உணர்வில் சங்கரன் சேயுனைப்
போற்றுதல் கண்டால் மெய்சிலிர்க்கும்!
திருவுடன் கலைகள் சேர்ந்துயர் நாடாம்
சிங்கையை ஆளும் பெருமாளே! 5

கன்னியர் மற்றும் காளையர் கற்றுக்
களம்பல கண்டு சிறந்திடவும்
கண்ணிய மாகத் தம்மிள வயதிற்
கல்யாணம் கண்டு வாழ்ந்திடவும்
எந்நிலை வரினும் இணைபிரி யாமல்
இல்லறம் தழைக்கவும் அருள்வாயே !
திருவுடன் கலைகள் சேர்ந்துயர் நாடாம்
சிங்கையை ஆளும் பெருமாளே! 6

ஒற்றுமை யாக நகரமும் நாடும்
உலகமும் கூடி  வாழ்ந்திடவே
கற்றவர் நல்லார் காசினி உயரக்
கடமையை ஆற்றும் வாய்ப்புறவே
நற்றவம் ஓங்கும் நல்லறம் தழைக்கும்

நாயக! அந்நிலை அருள்வாயே!
திருவுடன் கலைகள் சேர்ந்துயர் நாடாம்
சிங்கையை ஆளும் பெருமாளே! 7

விண்ணவர் போற்(று)உன் பொன்னடி போற்றின்
வினைகளும் உடனே பறந்தோடும்
கண்ணடி நீங்கும் கவலைகள் போகும்
காசினி அன்பால் தழைத்தோங்கும்
தண்ணளி ஈந்து தமிழையும் தருவாய்
தன்னிகர் இல்லாக் கதிர்வேலா!
திருவுடன் கலைகள் சேர்ந்துயர் நாடாம்
சிங்கையை ஆளும் பெருமாளே! 8

*கவிஞர்,அருளிசைமணி அரசி.பழனியப்பன்*

## திங்கள் தோறும் திருவிழா

சிங்கை தண்ட பாணிகழல்
சேவிப் பாரின் வினைநீக்கிப்
பங்கம் வாராப் பேணுவதே
பரமன் மகனின் பணியிங்கே

தங்க மயிலில் ஏறிவரும்
தம்பி ரானைத் தோள்சுமக்க
இங்கே சூழும் பத்தகுழாம்
ஏற்கும் போட்டி பலவாகும்
பொங்கும் கந்தன் கருணையினைப்
பூரித் திங்கே அனுபவிக்க
எங்கோ தூரம் பலதாண்டி
இவனைக் காண வருவார்கள் (1)

நினைப்பில் பலவாய் கோரிக்கை
நிறுவத் தேவை நமக்கில்லை
அனைத்தும் முருகன் அவனறிவான்
ஐயம் அகற்றிச் சரணடைவோம்
இனத்தார் பலரின் வேற்றுமைகள்
இல்லா தகலும் இடமிதுவே
மனத்துள் கவலை தீர்ந்திடவே
வருவீர் ஓடி ஆலயத்தே (2)

பூசம் தையில் கூடிவரப்
போற்றிப் பஜனை குழுக்களிங்கே
ஆசை இறையை விதவிதமாய்
அலங்கா ரத்தில் அமர்த்திடுமே
பாசம் எகிரக் காவடிகள்
பண்பில் செலுத்தும் அன்பர்க்குத்
தேசு மண்டும் நல்வாழ்வு
சேர்ப்பான் வெள்ளி ரதவீரன் (3)

மகத்தை ஏத்தும் மாதமதாய்
மாசி வருமந் நாள்சென்றால்
முகத்தில் முறுவல் மலர்பூத்து
முத்து பதித்த பட்டாடை,
நிகரில் ஒட்டி யாணமுடன்
நேரில் வேலன் வலம்வருவான்
பகலாய் இரவும் காட்சிதரும்
பத்தர் அன்பு மிளிர்வதனால் (4)

துதிசெய நன்னாள் மற்றொன்று;
துணைதெவ யானை மணமுடித்தன்
மதிமுழு தினமாம் பங்குனியில்
மயிலினில் வந்தெம் மனம்பறிப்பன்;
கதிர்வடி வேலால் ஞானமென்று
கற்சிலை இல்லா வழிபாடு
அதன்வழி முருகன் திருமணம்நம்
அகத்தினில் நிறைவாய் நடைபெறுமே (5)

சித்திரை மாதப் பௌர்ணமியும்
செந்திலன் இஷ்ட நாளன்றோ!
பத்தரைக் காணப் பாசமுடன்
பன்மணி நேரம் காத்திருப்பான்
சொத்திவன் என்ற உணர்வொளிரச்
சோர்வெலாம் நம்மை விட்டோட
எத்தனை நேரம் ஆனாலும்
இவனுடன் இருக்க மனம்விரும்பும் (6)

அடுத்து வாரும் வைகாசி
அதனில் சிறப்பு விசாகதினம்
பிடித்த முருகன் பேர்சொன்னால்

பேரா னந்தம் உள்சேரும்
கொடுத்து வைத்தோம் அன்றையநாள்
கும்பிட் டிவனின் அருள்பெறநாம்
எடுத்த காரி ய(ம்)ஈடேற
இவனைக் காட்டில் உதவுவர்யார்? (7)

சேவற் கொடிஇங் கில்லையெனின்
சேவல் பலவாய் கொக்கரிக்கும்
ஆவல் தாழா அடியவர்க்கோ
அடுத்த மகிழ்வு(ம்) ஆடியிலே!
தாவித் தீமை தகர்த்திடுமத்
தாயார் தந்த வேலோடு
காவல் புரியும் கடம்பனுக்குக்
காட்டும் நன்றி வேல்பூசை (8)

கலிங்கத் துறாம்அணிந் தெழில்கோலம்
கவினாய் கொக்கிற கதன்மேலும்
ஜொலிக்கும் வைரவேல் ஒருகையில்
சுட்ட நீறணி நெற்றியில்காண்
சிலிர்க்க வைத்திடும் சலங்கைகளும்
சின்னச் சேவடிக் கெனபொருத்தம்!
பலிக்கும் இவனிடம் விண்ணப்பம்
பத்தர் சாட்சிகள் பலகேளும் (9)

ஓதுவார் பாடுவார் திருப்புகழை
உணருவோம் நெகிழ்ச்சியில் குகன்கருணை
காதிலே பத்தரின் சந்தமிகு
காவடிச் சிந்துகள் ஒலித்திடுமே.
சோதனை வரும்பல சமயங்களில்
சூடி(க்)கை இவனது துணைதேட
மாதவம் செயப்பலர் சிங்கையிலே
வசித்திவன் தாளினைத் தொழுதிடவே (10)

புரட்டா சியிலெம் பெருமானும்
புனைவான் பத்து கோலங்கள்
அருமை கலைகள் அவன்முன்னே
அரங்கேற் றம்காண் நவராத்ரி;
சருகை நீளக் கைச்சட்டை
சாட்டை பிஞ்சுக் கரம்தன்னில்
கரும்பொட் டணிந்து கடைசிதினம்
களிப்பான் குதிரை வாகனமேல் (11)

ஐப்பசி சஷ்டி ஆறுதினம்
அத்தனை அடியார் பெருங்கூட்டம்
தப்பிலா விரதம் தினந்தோறும்
தமிழினில் லெட்ச  அர்ச்சனையும்
சுப்பையன் இங்கே ஏற்றிடுவான்
துரிதமாய்க் குறையை நீக்கிடுவான்
செப்பின வற்றைச் செவிமடுத்துச்
சேவகன் குமரன் வரம்தருவான் (12)

ஒவ்வொரு வளர்பிறை சஷ்டியிலும்
உன்னத ஓமம் இவனுக்கு;
அவ்வையார் உண்ணச் சுட்டபழம்
அளித்தனுக்(கு) அன்று அபிடேகம்
செவ்விதழ் அரளி அணிவனுக்குச்
செலவிலா  முழுக்குகாண் சந்தர்ப்பம்
திவ்வியம் என்றும் சேந்தனது
சீர்பிர சாதம்  கந்தரப்பம் (13)

அண்ணா மலையின் சோதியைப்போல்
ஐயன் கோயில் கோபுரத்தில்
ஒண்ணா தொருதீ மூட்டிடுவர்
ஒய்யா ரம்திருக் கார்த்திகையில்
வண்ண விளக்கு வரிசையினை
வாரந் தோறும் திங்களிலே
எண்ணிப் பார்க்க மூச்சிளைக்கும்.
எல்லாம் இணைந்தோர் ஒளிமயமே (14)

கார்த்தி கைதோறும் குருபரனின்
கடைக்கண் பார்வை படவேண்டி
ஊர்ப்பட் டோரிங்(கு) உருகிடுவர்
உய்யும் வழிகாட்(டு) ஆறுமுகா
ஆர்ப்பாட் டமிலா அன்னதானம்
அமைதி யா(ய்)உண்ணும் பலகூட்டம்
சீராய்த் தொண்டர் பரிமாறும்
சேவை காணக் கண்குளிரும் (15)

பள்ளி யெழுச்சி அதிகாலை
பாவை இருபதும் அதன்பின்னே
கொள்ளை கொள்ளப் பாடுவரே

குன்றா ஆர்வம் கொண்டவரே.
துள்ளி வருவான் மார்கழியில்
துதியைத் தமிழில் கேட்டகணம்
அள்ள அள்ளக் குறையாமல்
அனைத்தும் தரும்பண் டாரமிவன் (16)

தொண்டர் குழாம்பணி இவனுக்குத்
தோதாய்ச் செய்திடத் தவமிருக்கும்
பெண்டி ரு(ம்)இதனில் சேர்த்தியென்று
பெருமைப் படஒரு செய்தியிங்கு
பண்டை யநாள்முதல் புத்தாண்டில்
பத்தர்க் கெழுந்தருள் நோக்கத்தில்
விண்டு சரவணன் வலம்வருவான்
விடியல் திகழ்வரு டந்தோறும் (17)

சொக்கன் மீனாள் அம்மையப்பர்
சூழ்ந்திடச் சிறுவா! மகிழ்விலுளாய்
செக்கச் சிவந்த வாய்காட்டும்
சிறியதோர் புன்னகைக்(கு) ஏங்கிடுவோம்
சிக்கல் இருந்து சிங்கையிலே
சீரடி யாரோ டிருப்பதற்குப்
பக்கம் வந்த பரிவென்னே!
பக்குவப் படுத்தெம் சிங்காரா! (18)

முழுநில வென்றால் முருகனைத்தான்
முதலினில் நினைப்போம்; கொண்டாட்டம்!
ஒழுகுவர் சீராய் வைபவங்கள்
ஒன்றுவி டாதி(வ்) ஆலயத்தில்
அழகனுக்(கு) ஓராண்(டு) இல்லவிழா
அடியவள் தொகுக்கத் திருவருளே
விழாக்களைக் காணும் வேலன்நாம்
விழாமலி ருக்கக் காப்பாவான்! (19)

*-உமையாள் இராமநாதன்*

வேலுமயிலும் துணை

# எட்டிக்குடி சுவாமிபேரில் பாடிய நொண்டிச்சிந்து என்னும் வேல் பாட்டு

## விருத்தம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழிற் கருணை போற்றி
யாவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி
காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி
யன்னான் சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

## நொண்டிச்சிந்து

சீர்மேவும் எட்டிக்குடி வாழும் வேல் வேல்
தெய்வானை தன்னுடைய மணாளனே வா வா

பார்புகழும் சிந்துதமிழ் பாட வேல் வேல்
பன்னிருகை யாண்டிநீ முன்னருள வா வா

எச்சரிக்கை யென்றிடும்பன் கூற வேல் வேல்
இருபுறம் காவடிகள் நின்றிடுதே வா வா

பச்சைமயி லேருகின்ற பாலா வேல் வேல்
பக்ஷம்வைத்து என்கலியை தீர்த்திட வா வா

அன்பான சந்நிதியில் வந்து வேல் வேல்
ஆறுமுக வேலவனே ஆதரிக்க வா வா

நாதமொடு கீதங்களு முழங்க வேல் வேல்
நாதாந்த மெய்பொருளே நம்பினனே வா வா

காணிக்கை கொண்டுவெகு கோடி வேல் வேல்
காத்திருக்கிறார் சுவாமிமலை ஆண்டவனே வா வா

மச்சங்களின் காவடிகளும் வேல் வேல்
மகிழ்ச்சியாய் வந்திருக்கு கண்டிடவும் வா வா

ஆற்றுமணல் சர்க்கரையு மாய வேல் வேல்
அன்பான காவடிகள் வந்திருக்கு வா வா

எத்தனை அலகுகளோ பூண்டு வேல் வேல்
எண்ணிரைந்த காவடிகள் வந்திருக்கு வா வா

வெள்ளிரதக் காவடிகள் கோடி வேல் வேல்
வெகுகாவடி வந்திருக்கு கண்டிடவும் வா வா

| | |
|---|---|
| மெய்முழு தலகுகளும் பூண்டு | வேல் வேல் |
| மேதினியோர் நெருங்கிட வந்திருக்கு | வா வா |
| அலகுமேல் காவடிகள் நிருத்தி | வேல் வேல் |
| ஆலவட்டம் பறக்குதே ஐயனேநீ | வா வா |
| கானமயில் காவடிகள் கோடி | வேல் வேல் |
| கொண்டுவந்து நின்றிருக்கு கண்டிடவே | வா வா |
| பூந்தேரும் ரதங்களும் வருகுதே | வேல் வேல் |
| பூமிமுழு காடுமயில் வாகனனே | வா வா |
| அபிஷேக சாமான்க ளெடுத்து | வேல் வேல் |
| ஆடிவரும் காவடிகள் கண்டிடவும் | வா வா |
| தேவர்கள் நெருங்கிவரக் கூடி | வேல் வேல் |
| தேசங்களி லுள்ளவர்கள் தெரிந்திட | வா வா |
| வேதியர்க ளொருபுறம் கூடி | வேல் வேல் |
| வீதிகளில் வேதங்களும் முழங்குதே | வா வா |
| தங்கரதக் காவடிகளும் | வேல் வேல் |
| சந்நிதியில் வந்துவிளை யாடுது | வா வா |
| ஆலவட்டம் சாமரங்கள் பிடித்து | வேல் வேல் |
| அசைந்தாடும் காவடிகள் வந்திருக்கு | வா வா |
| எத்தனைவித காவடி வருமே | வேல் வேல் |
| எண்ணிடவு முடியுமோ புண்ணியனே | வா வா |
| அன்பான சந்நிதியின் முன்னே | வேல் வேல் |
| அடியார்கள் வந்திருக்கோம் ஐயனேநீ | வா வா |
| மூலகண பதிக்கிளை யோனே | வேல் வேல் |
| முப்பொருளு மானசிவ சற்குருவே | வா வா |
| ஆண்டிமக னாண்டிமலை யாண்டி | வேல் வேல் |
| ஆண்டிசிலை யாண்டிமக னாண்டியே | வா வா |
| மந்திரஞ்சேர் மெய்ப்பொருளே உன்னை | வேல் வேல் |
| வாலையம்ம னீன்றெடுத்த மாமுனியே | வா வா |
| அன்பருள மேவுகின்ற மணியே | வேல் வேல் |
| அரகரா ஆறுமுக தெய்வமேநீ | வா வா |
| உம்பர்குலம் வாழவந்த நாதா | வேல் வேல் |
| ஓம்நமசி வாயகுரு தேசிகனே | வா வா |

வேலும் மயிலும் துணை

தென்பொதிகை அகத்தியரும் பணியும் வேல் வேல்
சிவபெருமான் செல்வனே அன்புதர வா வா

பூரணமாய் நின்றபரம் பொருளே வேல் வேல்
பூரிப்புட னிச்சமயம் புண்ணியனே வா வா

நாடுகின்ற மெய்ப்பொருளே சுவாமி வேல் வேல்
நாதாந்த வட்சணியாள் பாலகனே வா வா

தேடுகின்ற மெய்ப்பொருளே ஐயா வேல் வேல்
சீக்கிரமே எங்களுடன் சேர்ந்திடவே வா வா

சுப்பையனே சுவாமிமலை நாதா வேல் வேல்
துதிக்கின்றோம் உன்னடியார் அன்புடனே வா வா

ஆடுகின்ற நாதாந்த பொருளே வேல் வேல்
அடிமையைக் காத்தருள ஐயனேநீ வா வா

கோலமயில் மீதினிலே குமரா வேல் வேல்
குமரனே வுன்னருளைக் கொடுத்திட வா வா

ஈராறு பன்னிருகை வேலா வேல் வேல்
இருவினை நீங்கிடவும் வந்தருள வா வா

அரகரா திருச்செந்தூர் வேலா வேல் வேல்
ஆறுமுக தேசிகனே ஐயனேநீ வா வா

சரவண பவகுரு நாதா வேல் வேல்
சுவாமிமலை மீதமர்ந்த சற்குருவே வா வா

கண்டவர்கள் கன்மவினை யோட வேல் வேல்
அண்டர்களும் வந்திருக்கா ரையனேநீ வா வா

கார்த்திகையில் வந்துனது பாதம் வேல் வேல்
கண்டவர் துயரமது நீங்கிடவும் வா வா

சித்திரைப் பருவத்தில் காண வேல் வேல்
சீர்பெறவும் வந்திருக்கா ரையனேநீ வா வா

பங்குனி உத்திரமதிற் காண வேல் வேல்
தங்கி யிருக்கிறாருந்தன் சந்நிதியில் வா வா

அபிஷேகம் நடப்பதை பார்க்க வேல் வேல்
அனைவர்கள் வந்திருக்கா ரையனேநீ வா வா

எலுமிச்சம் நாரத்தம் பழங்கள் வேல் வேல்
ஏகமாக பன்னீரது வந்திருக்கு வா வா

எண்ணெயபி ஷேகமதை பார்க்க வேல் வேல்
எண்ணிரைந்த கோடிஜனம் வந்திருக்கு வா வா

சந்தனாபி ஷேகமதைக் காண வேல் வேல்
சர்வ ஜனங்கள்வந்து நிற்கிறார்கள் வா வா

விபூதி அபிஷேகமதைப் பார்க்க வேல் வேல்
வாஞ்சையர்கள் கூடிவந்து நிற்கிறார்கள் வா வா

காவி வஸ்திரமிடையி லுடுத்தி வேல் வேல்
கண்டத்தி லுத்ராக்ஷமாலை காணவுமே வா வா

கையினில் வேலாயுதத்தின் காக்ஷி வேல் வேல்
கண்டிடவுந் தேவர்களும் வந்திருக்கார் வா வா

எட்டிக்குடி சந்நிதியைப் பார்க்க வேல் வேல்
இந்திரலோகம் கயிலை ஈடல்லவோ வா வா

இடும்பன் சந்நிதியினில் வந்து வேல் வேல்
இறக்கிடும் காவடிக்கு இடமில்லை வா வா

பரம சற்குருவடி வேலா வேல் வேல்
பரம னுடையதிரு பாலகனே வா வா

தென்பொதிகை வாழும்குரு முனிக்கு வேல் வேல்
தெரிய வுபதேசமும் செய்தவனே வா வா

அண்டர்கள் கிடுகிடென நடுங்க வேல் வேல்
அசுரர்கள் வேரறுத்த ஐயனே வா வா

தேவர்கள் சேனாதிபதியும் நீயே வேல் வேல்
தெய்வானை மகிழ்ந்திடும் செல்வனேநீ வா வா

முக்கனி சர்க்கரைபாலும் திரட்டி வேல் வேல்
முனிவர்கள் கூட்டத்துடன் வந்திருக்கிறார் வா வா

முத்துக்குமரேசா முருகையா வேல் வேல்
முப்புர மெரித்தவனின் புத்திரனே வா வா

ஆறுபடை வீடதனில் மேவும் வேல் வேல்
ஆறுமுகத் தையனேநீ அன்புடனே வா வா

சத்துரு சங்கார வடிவேலா வேல் வேல்
சாமிமலை மீதமர்ந்த சற்குருவே வா வா

ஆதிசிவ ரூபமய மான வேல் வேல்
அகண்ட பரஞ்சுடரே ஐயனேநீ வா வா

ஏரகத் தமர்ந்தகுரு சாமி வேல் வேல்
எங்கள்வினை தீர்ந்திடவு மெழுந்தருள வா வா

காவியுடை தண்டுகமண்டமும் வேல் வேல்
கையில்வடி வேலுடனே காட்சிதர வா வா

தங்கவேள்பிள்ளையுன்னை ஸ்துதிக்க வேல் வேல்
தற்பரனே யென்கவலை நீங்கிடவும் வா வா.

... எட்டிக்குடி சுவாமி நொண்டிச்சிந்து முற்றிற்று ...



# கருப்பர் பாடல்கள்

## சங்கிலிக் கருப்பர்

சங்கிலிநற் கருப்பன் நீ சார்ந்திட்ட பொருளும் நீ
சடாக்ஷர மந்திரமும் நீயே
சகலரும் துதிக்கின்ற தேவாதி தேவன் நீ
சாம்பிராணி வாசனும் நீயே
எங்கெங்கு அழைத்தாலும் ஏழையின் வாசலில்
எழுந்தோடி வருபவனும் நீயே
இதயத்தில் இருப்போன் நீ இரத்தத்தில் கலப்போன் நீ
இரவு பகல் காப்பவனும் நீயே
குங்குமம் சிறக்கவும் குடியெலாம் வாழவும்
குலம் காக்கும் என் தெய்வம் நீயே
குன்றும்நீ குளமும் நீ கோலாகலனும் நீ
குன்றாவளப் பொருளும் நீயே
பங்காளி கூடிட படைப்புகள் கொண்டாடிட
பணியாரப் பிரியனும் நீயே
பதினெட்டுப் படியாளும் பக்தரின் காவலா-நீ
பாதை யெலாம் துணைக்கு வாவா

வாளாட வேலாட வளர் கொண்டை தானாட
வைகையாள் துள்ளியாட
வளர்ந்தோங்கும் புஜமாட வயிரமாம் நகையாட
வளர்ந்திட்ட பயிர்கள் ஆட
காலாட மணியாட கருங்கூந்தல் தானாட
கச்சையெலாம் பின்னிஆட
கண்ணாடப் பெண்ணாட கயவர்பயந்தாட
கருமீசை முறுக்கி ஆட
கோலாடக் குணமாட குதித்தோடி வருகின்ற
குருதியெல்லாம் ஓடிஆட
குதிரையின்மேல் வரும் கொள்ளை அழகனைக்
கும்பிடும் கரங்கள் ஆடப்
பாலாட மேனியும் பழமாடக்காணியும்
பட்டயக் கொலுசு மாட
பதினெட்டுப் படியாளும் பக்தரின் காவலா-நீ
பாதையெலாம் துணைக்கு வாவா

கார்வளர் வைரவன்கோயில்அமர் முப்பிலிக்
கருப்பருடன் தன் நகரிலே
கருணை தவழ்சப்பாணி நொண்டி பதினெட்டாய்க்
கருதுபடி நற்கருப்பும்
சீர்வளர் சின்னக் கருப்பருடன்ஆட்சிகொள்
தேவே மங்கிலிக்காரியும்
திகழ் அடைக்காத்தாள் மின்னஞ் செட்டி
காளியும் சேரமுன் ஆடல்புரிவாய்
ஏர்வளர்பணியாரம் பாற்சோறு இன்னவை
ஏந்திப்படைத்து நின்றோம்.
இன்பருள வைரவன் கோயில் சார்தனவணிகர்
ஈண்டிப்பணிந்து நின்றோம்.
பேர்வளர் குலதெய்வம் வைரவனும் நீயுமாய்ப்
பெரிதுகாப்பாற்றி அருளே.
பிறங்கு வய்யக்கரை இருந்து வெண்பரிஏறும்
பெரிய கருப்பண்ணசுவாமி துரையே.

*கவியரசு கண்ணதாசன்*

## இராங்கியக் கருப்பர்

அழகான ராங்கியக் கோயிலுள் குடிகொண்டு
அரசாள வந்த கருப்பன்
அடியடியின் வாழைபோல் எனது குலங்கோத்திரம்
அத்தனையும் காக்கும் கருப்பன்
மேலாளர் கீழாளர் பேதங்கள் இல்லாது
மெய்யாள வந்த கருப்பன்
முன்னோடி சப்பாணி இருவரையும் கொண்டிந்த
உலகாள வந்த கருப்பன்

புளியமரத் தடியில்வளர் பெரிய கருப்பண்ணனிவன்
கோவில் கொண்டாடு மனமே
புண்ணியத் தீர்த்தமும் புளியிலையும் பெற்றிட்டால்
புகழோடு வாழ்வு வருமே
கரியபெரு மீசையும் கையிலொரு அரிவாளும்
கருப்புநிறப் பட்டும் உடையான்
காலினில் சலங்கையுடன் காணக் கண்கூசவே
குதிரைமேல் ஏறி வருவான்

வேலும் மயிலும் துணை

ஏவல்பிலி சூனியம் எவர்செய்ய வந்தாலும்
இயலாது கருப்பனிடமே
எதுவந்தாலும் போனாலும் கருப்பண்ணன் கருணையால்
எல்லாம் நலமாகுமே
கருப்பண்ணன் வாழ்கின்ற ராங்கியப்பதி என்றும்
கைலாசம் போல் இருக்கும்
கொண்டாடு கொண்டாடு பெரிய கருப்பண்ணனைக்
குறையாத செல்வ மிகுமே.

*லெ.சோமு, தேவகோட்டை*

## கருப்பர் துதி

முண்டாசுக் கட்டுண்டு முழுவல்ல வெட்டுண்டு
முதிர்ந்த பிரம்பு முண்டு
முறைகாவல் செல்வதற்கே சப்பாணி தன்னுடனே
முன்னோடி யானு முண்டு
கொண்டாடும் பக்தருண்டு கோழிகிடாப் பலியுண்டு
குறையாத படைய லுண்டு
கொடுமைகள் அழித்தருளக் கொடுவாளும் அரிவாளும்
குத்தீட்டி தானு முண்டு

கண்டாங்கிச் சேலையொளிர் ஏகாத்தா ராக்கம்மை
கனிவுமிகு அருளு முண்டு
கணப்போதும் துயிலாத உறங்காப் புளியுண்டு
துணைசின்னக் கருப்ப னுண்டு
கொண்டாடிப் போற்றுவார் குறையெலாம் தீரவே
குலங்காத்து நிற்கும் அரசே
குறைவிலா ராங்கியத்தில் முறைகாக்கும் பேரரசே
பெரியகருப் பண்ண துரையே

அருளாடும் ராங்கியக் கருப்பரிவர் ஓங்கியே
அரசாளும் கோவில் வாசல்
ஆதரவு தந்தருளும் மாதிருவர் ராக்கம்மை
ஏகாத்தா அமரும் வாசல்
இருளாடும் பேயனுடன் இராக்கதப் பிசாசுகளை
எதிரடக்கி நிறுத்தும் வாசல்
ஏவலுடன் பில்லிசூன்யம் இன்னபிற மோடிகளைப்
போவெனவே விரட்டும் வாசல்

இருபேராம் சப்பாணி முன்னோடி யானென்றும்
முறைகாவல் புரியும் வாசல்
இரவுபகல் எப்போதும் உறங்காப் புளியெனும்

விருக்ஷமது வளரும் வாசல்
திருவாசல் தேடிவர பெருவாழ்வு புகழ்நல்கும்
கருப்பண்ணன் கோவில் வாசல்
சிறுபோது நினைத்தாலும் பெரும்பேறு தானருள்வான்
பெரியகருப்பண்ண துரையே.

*தேவகோட்டை மீ. சேவுகன்செட்டி*

## கருப்பர் வாரார்

**வாராரய்யா வாராரு கருப்பரிங்கே வாராரு**
**வாராரய்யா வாராரு கருப்பரிங்கே வாராரு**

அள்ளி முடிச்ச கொண்டையப்பா
அழகு-மீசை துள்ளுதப்பா
வல்ல வேட்டிப் பட்டுடனே
வாரார் ஐயா ராசாப்போலே (வாராரய்யா வாராரு...)

ஆளுயரம் அரிவாளாம்
அதுக்கேத்த கம்பீரமாம்
காலிலே முள்ளுச் செருப்பாம்
கருப்பனுக்கே தனிச்சிறப்பாம் (வாராரய்யா வாராரு...)

வீச்சரிவாள் கையிலுண்டு
வேகமான குதிரையுண்டு
சுற்றிவரும் பகையழிக்கச்
சுக்குமாந் தடியுமுண்டு (வாராரய்யா வாராரு...)

இடுப்பிலே சலங்கையுண்டு
இடிமுழக்கச் சிரிப்புமுண்டு
வாக்கிலே வலிமையுண்டு
வற்றாத கருணையுண்டு (வாராரய்யா வாராரு...)

கையிலே சவுக்குமுண்டு
கனகமணிச் சலங்கையுண்டு
பாற்கடலில் பள்ளிகொண்ட
பரந்தாமன் நாமமுண்டு (வாராரய்யா வாராரு...)

சந்தனமுண்டு ஜவ்வாதுண்டு
சாம்பிராணி வாசமுண்டு
சம்பங்கி ரோஜாமுல்லை
மணக்குதப்பா இங்கே இப்போ (வாராரய்யா வாராரு...)

*கவிஞர் ஏ.ஆர்.சுப்பையா, நேமத்தான்பட்டி*

# முன்னோடிக் கருப்பர் துதி!

## காக்கும் தெய்வமே-எங்கள் கருப்ப தெய்வமே-நாங்கள் நோக்கும் இட மெல்லாம் உந்தன் வீரத்தோற்றமே

காக்கும் தெய்வமே-எங்கள்
கருப்ப தெய்வமே-நாங்கள்
நோக்கும் இட மெல்லாம்
உந்தன் வீரத்தோற்றமே (எங்கள் காக்கும்)

அள்ளிச் சொருகிய-மலர்
அழகுக் கொண்டையும்-வளர்
துள்ளு மீசையும்-உந்தன்
எழிலைக் கூட்டுதே (எங்கள் காக்கும்)

பகையழித்திடும்-சிறந்த
பரந்த தோள்களும்-நல்ல
கருத்த மேனியும்-உந்தன்
வலிமை காட்டுதே (எங்கள் காக்கும்)

காடு வீடெல்லாம்-உந்தன்
காவலில் உண்டு-உயர்
படி பதினெட்டும்-உந்தன்
பார்வையி லுண்டு (எங்கள் காக்கும்)

ஜாதி மல்லிகை-உயர்
சாந்து ஜவ்வாது-மணக்கும்
சாம்பி ராணியும்-உந்தன்
வரவைக் கூறுதே (எங்கள் காக்கும்)

சாய வேட்டியும்-உயர்
ஜரிகைப் பட்டுமே-உந்தன்
மேனி அழகிலே-தவழ்ந்து
மின்னிச் சொலிக்குதே (எங்கள் காக்கும்)

வெள்ளைக் குதிரையும்-உயர்
வீச்சரி வாளும்-நல்ல
தண்டை கிண்கிணி முழங்க
இங்கு வாருமே (எங்கள் காக்கும்)

சுழன்றா டிடும்-அழகுச்
சுக்கு மாந்தடி-எடுத்து
விளையாடியே-ஐயா
ஓடி வாருமே (எங்கள் காக்கும்)

கெட்டி மேளமே-கொட்டி
உனை யழைக்கவே-இந்தச்
செட்டி மக்களாம்-நாங்கள்
சேர்ந்து வணங்கிடும் (எங்கள் காக்கும்)

*கவிஞர் ஏ.ஆர்.சுப்பையா, நேமத்தான்பட்டி*

## அய்யன் வாரார், கருப்பர் வாரார்

**அய்யன் வாரார் மெய்யன் வாரார்-அழகர்
கோயில் மலை இறங்கிக் கருப்பர் வாரார்-எங்கள் கருப்பர் வாரார்.**

அய்யன் வாரார் மெய்யன் வாரார்-அழகர்
கோயில் மலை இறங்கிக் கருப்பர் வாரார்-
எங்கள் கருப்பர் வாரார்.

வல்லவேட்டிப் பட்டுடுத்தி வரிசைமணி நூலணிந்து
அண்ணன் வாரார்-ஆகாயக் கருப்பர் வாரார் (அய்யன்)

வீச்சரிவாள் கையிலேந்தி வேகமான குதிரைஏறி
வள்ளல் வாரார்-ஆவடிக் கருப்பர் வாரார் (அய்யன்)

பூச்சொரியும் பார்வையுடன் புகழ்விரிக்கும் சேவையுடன்
மன்னன் வாரார்-தொட்டியக் கருப்பர் வாரார் (அய்யன்)

முறுக்குமீசை துடித்திருக்க முந்திவரும் அடியெடுத்து
அய்யன் வாரார்-வையக் கருப்பர் வாரார் (அய்யன்)

சாம்பிராணி வாசத்திலே ஜவ்வாதுப் பொட்டிட்டு
செல்வர் வாரார்-சோணைக் கருப்பர் வாரார் (அய்யன்)

செங்கரையில் மேலேநின்று செல்வமெலாம் தந்துநின்று
முன்னே வாரார்-முன்னோடிக் கருப்பர் வாரார் (அய்யன்)

*அருளிசைமணி கண்டனூர் ஓ. ப. ரெங்கநாதன்*

வேலும் மயிலும் துணை

# கோட்டைக் கருப்பர் கும்மி!

**கும்மியடி தமிழ்க் கும்மியடி-அந்தக்
கோட்டைக் கருப்பரைக் கும்மியடி!
நம்பிடக் காக்கும் தெய்வமடி!-அது
நல்லருள் தந்து வாழ்த்துமடி!**

கும்மியடி தமிழ்க் கும்மியடி-அந்தக்
கோட்டைக் கருப்பரைக் கும்மியடி!
நம்பிடக் காக்கும் தெய்வமடி!-அது
நல்லருள் தந்து வாழ்த்துமடி

திருப்புத் தூரிலே கருப்பரடி-அவர்
தித்திக்க வரும் வீரரடி!
உருவம் பெரிய கருப்பரடி-அவர்
உள்ளம் இனிக்கும் வெள்ளமடி!

வெள்ளைக் குதிரையில் கருப்பரடி-அவர்
வீரம் விளைக்கும் தெய்வமடி!
அள்ளக் குறையாக் கருணையடி-அவர்
அண்டின பேருக் கருள்வாரடி!

சுக்குமாந் தடி வெட்டருவாள்-அவர்
சுறுக்காய் எடுத்து நடைநடந்து
அக்கிமரச் செயல் அழிப்பாரடி!-அவர்
அண்டம் குலுங்கச் சிரிப்பாரடி!

குத்தீட்டி சூலம் கொண்டாடி-அவர்
குதித்து மிதித்து ஓடோடி!
ஏத்திக்கும் தீப்பொறி பரபரக்க-அவர்
எக்காள மிடுவார் புவி சிறக்க!

வானவெளிப் பொட்டல் அவர்வீடு!-நாம்
வாழ்த்தியே நின்றோம் பண்பாடு!
கான மிசைத்துக் கொட்டுங்கடி-அந்தக்
கருப்பரைக் காண முந்துங்கடி!

சேமங் குதிரைகள் சித்திரமாம்-நம்
சேம நலங்களும் பத்திரமாம்
நாமம் போற்றிடக் கும்மியடி-அந்த
நாதத் தலைவனை நம்பியடி!

இருட்டு நீக்கிய இதயத்திலே-அவர்
எல்லை காட்டுவார் உதயத்திலே!
திருட்டு வேலைகள் தீய்ந்திடவே-அவர்
தீப்பொறி பறக்க விழித்திடுவார்

மையிட்ட கருப்புத் திருமேனி-அவர்
மனமிட்ட பொறுப்பு அருள்ஞானி!
பொய்யிட்ட நெஞ்சில் அன்னியராம்-அவர்
புகழிட்ட வாழ்வின் கன்னியராம்

கோட்டைக் கருப்பரே குலதெய்வம்-அவர்
வேட்டை ஆடிட வருந்தெய்வம்
சேட்டை போக்கும் பெருந்தெய்வம்-அவர்
காட்டைக் கலக்கும் கருந்தெய்வம்!

சங்கிலிக் கருப்பரும் உடன்வருவார்-அவர்
சந்தோஷ எண்ணங்கள் தான் தருவார்!
பொங்கிட அருளும் புகழ்தருவார்-அவர்
போற்றிடக் காத்திடும் தெய்வமம்மா!

குங்குமக் காளியைக் கூப்பிடுவோம்-அவள்
குறைதீர்க்க வருவாள் வாழ்த்திடுவோம்!
பங்கமில்லா அவள் பார்வையிலே-பாவம்
பறந்தோட காண்போம் அருளினிலே!

சூலம் எடுத்தவள் மாகாளி!-அவள்
சுந்தரச் சிந்து பாடுங்கடி!
ஞாலம் காப்பவள் காளியம்மா!-அவள்
ஞானம் காப்பவள் வாழியம்மா!

செக்கச் சிவந்த சேலைகட்டி-காளி
செந்தூரப் பொட்டு நெற்றியிட்டு
பக்கத்தில் வந்து காத்திடுவாள்-பக்திப்
பாட்டுக்குள் சிந்தாய்ப்பூத்திடுவாள்!

*சி. என். நாச்சியப்பன்*

# திருநகரைக் காத்திடும் திருப்பத்தூர் கருப்பண்ணன்

அகன்ற பெரு நெற்றியும் அளவான கைகளில்
அரிவாளும் அடிபிரம்பும்
அத்துடனே உயர்புருவம் அன்பான கூர்விழிகள்
அழகான தலைப் பாகையும்
திடமான தோள்களும் திருத்திய பெருமீசையும்
திகைப்புறும் வண்ணம் கொண்டே
திருநகரை வலம்வந்து தினந்தோறும் காத்திடும் எம்
திருப்புத்தூர் கருப்பண்ணனே!
தென்பகுதி மக்கள் உன் திருநாமம் போற்றியே
தினந்தோறும் வாழுகின்றார்
அவர்உள்ளம் நோகாமல் அல்லல்கள் தொலைத்தேநீ
அழகான வாழ்வு தருவாய்
திக்கெட்டு திசைநான்கு திருமக்கள் பெருஉள்ளம்
தினமும் உன்னைக்கான வருதே
இக்கெட்டு இடையூறு இனிவாழ்வில் இல்லாமல்
என்றென்றும் காத்து அருள்வாய்!
நல்லவர்கள் நலம்பெறவும் தீயவர்கள் திருந்திடவும்
நல்ல வழி காட்டுவாயே
வல்லதிரு கோட்டைக்குள் வாழ்வாங்கு வாழ்பவனே
கருப்பண்ண சுவாமி துணையே!

*மீ. மீனாட்சி சுந்தரம், தேவகோட்டை*

## செங்கீரை முன்னோடிக் கருப்பர்

செங்கீரை என்கின்ற சிங்கார சிற்றூரில்
சீர் கொண்டிலங்கும் தேவா!
எங்குலம் காக்கவும் இன்னல்கள் தீர்க்கவும்
வெண்புரவி ஏறி வா! வா!

ஆடுடன் சேவலும் பொங்கலும் வைத்துமே
ஆண்டாண்டு பூசை வைப்போம்
பீடுடன் தரணியில் பெருவாழ்வு பெற்றிட
பேரருளை நீயும் தா! தா!

கையிலொரு அரிவாளும் கனத்த பெருமீசையும்
கண்டதும் நடுங்க வைக்கும்!
பொய்மையும் தீமையும் போயொழிந்தனுதினம்
வாய்மையே முன்பு நிற்கும்!

முன் ஓடிவரும்வினை தீர்ப்பதால் தான் உன்னை
முன்னோடி கருப்பனென்றார்!
முன்னோடி கருப்பனே! முன் வந்து பணிகிறோம்!
உன்தருள் தந்து காப்பாய்!

## பனந்தமுடைக் கருப்பர்

ஆறாவயல் விட்டு இரண்டுகல் தொலைவிலே
சீராக வீற்றிருக்கும்,
அன்பான பனந்தமுடைக் கருப்பண்ணன் அருளையே
அன்றாடம் நாடி நிற்போம்.

மாறாத செல்வவளம் மங்காத நல்லறிவு
மழைபோல பொழிந்து வருவான்!
மேலான அவன் நாமம் மெய்யாகத் துதிப் போர்க்கு
மேன்மை யோர் கோடி தருவான்!

கூரான வாளோடு தோதான அரிவாளும்
கொண்டவன் பனந்த முடையான்,
குழந்தைகள் பெரியவர் சகலரின் நலத்தையும்
காப்பவன் பனந்த முடையான்

தீராத வினைகளை ஒரிரு கனங்களில் தொலைத்திடும்
அந்தத் தெய்வம்
அவனைத் தொழுகின்ற பேருக்குத் தெவிட்டாத
இன்பங்கள் தந்திடுவான் இல்லை ஐயம்!

*மீ. வயிரவன், தேவகோட்டை*

## சங்கிலிக் கருப்பன்

வேலும் மயிலும் துணை

சங்கிலிக் கருப்பனே சாம்பிராணி வாசனே
சகமாளும் என் ஐயனே
அழகான கொண்டையும் அகண்ட பெருநெற்றியும்
அதிரூப மான வடிவம்
மதி போன்ற முகமும் மாலைகள் அணிமார்பும்
மலர்ந்த உன் பார்வை யழகும்
துடுக்கான மீசையும் எடுப்பான தோள்களும்
துடிக்கின்ற வாளின் ஒளியும்
கருப்புநிறக் கச்சையும் காலில் சலங்கையும்
கருணை பொழிகின்ற திறமும்

கண்ணனே மாயனே கார்முக வண்ணனே
கண்டவர் மெய் சிலிர்க்கும்
ஊதாரியாகி பல ஊரெல்லாம் சுற்றியும்
உன்னை நான் மறக்கவில்லை

கையெலாம் நோகவே கடுமையாய் பணிசெய்தும்
கவலைவிட் டகல வில்லை
நாடெல்லாம் சுற்றி நான் மாடாக உழைத்துமே
நன்மையது சேர வில்லை
நெஞ்சார உன்னை நான்நேசித்து வாழ்கிறேன்
நின் கருணை கிட்டவில்லை
குலதெய்வ மென்றுனைக் கொண்டாடி மகிழ்ந்தாலும்
குறைகளது மறைய வில்லை
பொல்லாத ஆசையால் புரியாத கவலையால்
பேதை நான் வாடு கின்றேன்
எக்காலமும் உன்னை ஏற்றியே தொழுகின்ற
ஏழைக் கிரங்கி அருள்வாய்
கோடானு கோடிபிழை செய்யினும் நீ என்னைக்
கொண்டாதரிக்க வேணும்

வறுமையதில் வாடாமல் வஞ்சமனம் இல்லாமல்
வாழவழி சொல்ல வேணும்
அன்புக்கு என்றுமெனை அடிபணிய வைத்து நீ
ஆட்கொண்டு அருள வேணும்
அதிகாரம் கண்டு நான் அஞ்சாமல் வாழ்ந்து
அருங்கழல் சேர வேணும்
பிள்ளை நான் உந்தனது பாதார விந்தமதை
பிரியமுடன் வணங்க வேணும்
எனது குலம் முழுவதும் உனதடிமை ஆனபின்
இரங்காதிருக் கலாமோ
கவலையைச் சொல்லுமென் கண்ணீரைப் பார்த்து
நீ கல்லா யிருக் கலாமோ
காத்தருளும் தெய்வமுன் கருணையில்லா விடின்
கதி என்ன ஆகு மய்யா
தஞ்சமென்று உனை நம்பி வந்தவர் தமக்
கெல்லாம் தயைப் புரிய வேணுமையா
கருப்பா என்றுனைக் கரங்கூப்பி அழைத்
திட்டால் காக்க வர வேணுமய்யா!

# திருப்பத்தூர் கருப்பண்ணன்

சேவைகள் செய்வோரைச் சீர்சிறக்க வைத்திடும்
சிங்காரமான கருப்பன்
தேவைமாநகர் வாழும் தொண்டர்கள் தவறாது
தெண்டனிட வந்த கருப்பன்
அகன்றபெரு நெற்றியும் அரிவாளும் கையுமாய்
ஆளவே வந்த எங்கள்
அழகான திருப்புத்தூர் கருப்பண்ண சாமியை
அருகிலே வந்து பணிவீர்
பிள்ளைவரம் வேண்டுவோர் பெரும்பணம் தேடுவோர்
பெற்றிட இங்கு வாரீர்
எல்லைக்குக் காவலாய் ஏவலுக் கெதிரியாய்
இருப்பவனை இங்கு பாரீர்
தள்ளாடி ஓய்ந்தபின் தாத்தாவாய் ஆனபின்
தரிசிக்க வாய்ப்பு மில்லை
முள்ளான வாழ்விலே நன்றாக வாழவே
முடியும்வரை வணங்கி வருவோம்.

*-மீ. வயிரவன், தேவகோட்டை*

# பெரிய கருப்பண்ணசாமி அருள்வேட்டல்

சீராரும் செந்தமிழால் தினந்தோறும் மாலைகட்டி
வீராதி வீரா! பெரிய கருப்பண்ணனே!
பாரோர் பணிந்தேத்தும் பாதமலரிற் சூட்டுகிறேன்
தீராத நோய்தீரத் திருவருளைத் தாருமய்யா!

மீசை அழகை மேல்வேட்டி ஒப்பனையை
வாசமலர் மார்பழகை வாங்கரிவாள் நேர்த்தியினை
ஓசைத் தமிழாலே உள்ளுருகித் தெண்டனிட்டேன்
வாசலுக்குக் காவலனாய் வந்தருள வேண்டுமய்யா!

பிறந்த குலத்தைப் பேணிவரும் உன்னடியை
மறந்த பிழையை மன்னித்தே உன்மகனைக்
கரந்தழுவ வேண்டுமெனக் கண்ணீரால் கவியெழுதிப்
பறந்துவரும் நாயேனைப் பார்த்தருள வேண்டுமய்யா!

அறியாமற் பிழைசெய்தால் ஆட்டிவைத்துப் பார்க்காதே!
தெரியாமற் பிழைசெய்தால் சிறியவரை வருத்தாதே!
புரியாமற் பிழைசெய்தால் புத்திரரை அலைக்காதே!
பரிமேலே வந்தருளிப் பாதுகாக்க வேண்டுமய்யா!

பிண்டம் அளிப்பவனே! பெரிய கருப்பண்ணனே!
மண்டை பெருத்தவுடன் மறந்தபிழை பெரும்பிழைதான்
சண்டையெனக் கருதாதே! சந்நிதிக்கு வந்தடியேன்
வண்டமிழாற் பாடுகிறேன் வாக்கருள வேண்டுமய்யா!

வெள்ளைக் குதிரையிலே வெட்டரிவாள் தோளேந்தித்
துள்ளிவந்து துணையிருக்கும் தோள்பெருத்த
கருப்பண்ணனே!
வெள்ளிக்கிழமைகளில் விளக்கேற்றி வணங்குகிறோம்
பிள்ளைகளைக் காப்பாற்றப் பெரியவனே புறப்படுக!

அந்தி சந்திகளில் அடியவரும் குஞ்சுகளும்
நொந்து வருந்தாமல் நோய்நொடிகள் காணாமல்
முந்திவந்து காப்பாற்றும் முத்துக் கருப்பண்ணனே!
செந்தமிழால் வணங்குகிறோம் திருவருளைத் தாருமய்யா.

வட்ட வழியுடைய வழிமறிக்கும் பிசாசுகளை
வெட்டிவிடும் வாளுடையாய்! விரைந்துவர வெள்ளைநிற
நெட்டைப் பரியுடையாய் நெடுமீசை அழகுடையாய்!
மட்டவிழும் மார்புடையாய்! மனைகாக்க வேண்டுமய்யா!

தப்பேது செய்தாலும் தாய்போல் பொறுத்திடுவாய்
முப்போதும் உன்னடியை முத்தமிழால் வாழ்த்துகிறோம்
அப்பா! கருப்பய்யா! அணைத்துவரும் நாயகமே!
எப்போதும் அருகிருப்பாய்; எங்கள்குடி காத்தருள்வாய்!

கண்முன்னே தோன்றிக் காப்பாற்றும் கருப்பய்யா!
பண்ணாலே தண்டனிட்டுப் பாதத்தைப் போற்றுகிறோம்
விண்பொழியும் மழைபோல வெயிலுக்குக் குடைபோலக்
கண்ணாலே அருள்பொழிந்து காப்பாற்ற வேண்டுமய்யா!

*டாக்டர் அர. சிங்காரவடிவேலன்*

# கருப்பர் அழைப்பு

**கருப்பா கருப்பா கருப்பய்யா கவலையைத்**
**தீர்ப்பாய் கருப்பய்யா**
**கருப்பா கருப்பா கருப்பய்யா கவலையைத்**
**தீர்ப்பாய் கருப்பய்யா**

கருப்பா உன்னை அழைக்கின்றேன்
காவியம் பாடித் துதிக்கின்றேன்
கண்ணின் மணியை அழைக்கின்றேன்
காலமும் உன்னைத் துதிக்கின்றேன் (கருப்பா)

கோட்டைக் கருப்பரை அழைக்கின்றேன்
கொடுமைகள் அழிய துதிக்கின்றேன்
வேட்டை செல்கையில் அழைக்கின்றேன்
வெற்றியைத் தந்திட துதிக்கின்றேன் (கருப்பா)

சங்கிலிக் கருப்பரை அழைக்கின்றேன்
சங்கடம் தீர்த்திட துதிக்கின்றேன்
சந்ததி தழைக்க அழைக்கின்றேன்
சரணம் பாடித் துதிக்கின்றேன் (கருப்பா)

காளி யம்மனை அழைக்கின்றேன்
கவிதைகள் பாடித் துதிக்கின்றேன்
கரங்கள் கூப்பி அழைக்கின்றேன்
கவலைகள் தீர்த்திட துதிக்கின்றேன் (கருப்பா)

சின்னக் கருப்பரை அழைக்கின்றேன்
சிறுமைகள் தீர துதிக்கின்றேன்
சிங்காரக் கருப்பரை அழைக்கின்றேன்
சிறப்புகளைத் தர துதிக்கின்றேன் (கருப்பா)

முத்துக் கருப்பரை அழைக்கின்றேன்
முத்தமிழ் பாடி துதிக்கின்றேன்
முப்பிலி கொடுத்து அழைக்கின்றேன்
முறையாய் உன்னைத் துதிக்கின்றேன் (கருப்பா)

அன்பால் உன்னை அழைக்கின்றேன்
அமைதியைத் தந்திட துதிக்கின்றேன்
மனத்தால் உன்னை அழைக்கின்றேன்
மங்களங்கள் தர துதிக்கின்றேன் (கருப்பா)

*மீ. மீனாட்சி சுந்தரம், தேவகோட்டை.*

# வந்தான் கருப்பன் விளையாட

வந்தான் கருப்பன் விளையாட
வாளில் ஏறி நின்றாட
வந்தான் கருப்பன் விளையாட
வாளில் ஏறி நின்றாட

வாளும் வேலும் விளையாட
வாளில் ஏறி நின்றாட
சுக்கு மாந்தடி சுழன்றாட
வந்தான் கருப்பன் விளையாட

காலில் சலங்கை கலகலக்க
கையில் வாளும் பளபளக்க
முறுக்கு மீசை துடிதுடிக்க
வந்தான் கருப்பன் விளையாட

பாலும் சோறும் கமகமக்க
பள்ளையம் இங்கே ஜொலிஜொலிக்க
பிள்ளைகள் நாங்கள் கொண்டாட
வந்தான் கருப்பன் விளையாட

சந்தனக் கருப்பன் தானாட
சங்கிலிக் கருப்பன் உடனாட
பதினெட்டாம் படி கருப்பனுமே
வந்தான் கருப்பன் விளையாட

முன்னோடியுமே ஓடிவர
நொண்டியுமே இங்கே ஆடிவர
பதினெட்டாம் படி கருப்பனுமே
வந்தான் கருப்பன் விளையாட

கொரட்டி எனும் ஓர் ஆலயமாம்
கூடி இருப்பவன் சாஸ்தாவாம்
தங்கையும் அங்கே அருகிருக்க
தரணியைக் காக்க வந்தவனாம்.

*கவிஞர் அருண் வீரப்பா, மதுரை*

# வந்தான் கருப்பன் விளையாட

மணக்கும் புகையில் மறைந்திருப்பான்
மணங்கள் தோறும் நிறைந்திருப்பான்
சுணக்கம் இன்றி நாமமழைக்க
வந்தான் கருப்பன் விளையாட

கன்னங்கள் மறைக்கும் மீசையுடன்
காலில் சலங்கை ஓசையுடன்
வண்ணக் குதிரை மீதேறி
வந்தான் கருப்பன் விளையாட

ஓங்கிய கையில் வாளிருக்க
ஒலிக்கும் சலங்கை காலிருக்க
ராங்கியம் என்னும் பதியினிலே
வந்தான் கருப்பன் விளையாட

சின்னக் கருப்பர் முன்னோடி
ஏகம்மன் உறங்காப் புளியோடு
அங்கா ளம்மனும் அருகிருக்க
வந்தான் கருப்பன் விளையாட

பள்ளயம் நாங்கள் போட்டுவைத்தோம்
பாலும் சோறும் கூட்டிவைத்தோம்
உள்ளம் உருகப் பாட்டிசைத்தோம்
வந்தான் கருப்பன் விளையாட

இரவும் பகலும் துணையிருக்க
ஏழைகள் எங்கள் மனையிருக்க
துரகம் மீது தானேறி
வந்தான் கருப்பன் விளையாட

பில்லி சூனியம் பயந்தோட
பிள்ளைகள் நாங்கள் மகிழ்ந்தாட
துள்ளியே வந்திடும் பரியேறி
வந்தான் கருப்பன் விளையாட

பாதங்கள் தேய நாம்நடந்தோம்
படிவாசலிலே தவம் கிடந்தோம்
சேதங்கள் இன்றி நமைக்காக்க
வந்தான் கருப்பன் விளையாட

பாட்டும் பஜனையும் ஒலித்திடவே
பன்னீர் நாமும் தெளித்திடவே
சாட்டையும் பிரம்பும் கையெடுத்து
வந்தான் கருப்பன் விளையாட

அறிந்தே நாமும் செய்தபிழை
அறியா மலுமே நடந்தபிழை
அத்தனையும் நாம் சொல்லியழ
வந்தான் கருப்பன் விளையாட

*ஊட்டி மெய்யப்பன். காரைக்குடி.*

## எதிரிலே தோன்றி வருவாய்.

கார் வளரும் மேனியாய் கருப்பண்ண சாமியே
கதிவளரும் குதிரையில் கைவளரும் வாளுடன்
கண் எதிரில் தோன்றி வருக

தேர் வளரும் கோவிலாய் திசை வளரும் புகழனே
தெரிந்தவரை நல்லதே செய்துவரும் எங்களைத்
தேடியே ஓடி வருக

மார்வளரும் மாலையாய் மனை வளரும் தெய்வமே
மடைவளரும் வெள்ளமாய் மழை பொழியும் மேகமாய்
மலையினை நோக்கி வருக

சீர்வளரும் காலிலே சேர்திடும் சதங்கைகள்
செககண செககணச் செவிபட முழங்கவே
தெருவிலே ஓடி வருக

தார் வளரும் மெய்யனே தமிழ் வளரும் ஐய்யனே
தண்டையுடன் கிண்கினி தத்தினத்தோம் என்னவே
சத்தியம் முழங்க வருக

பேர்வளரும் வீரனே புகழ் வளரும் கருப்பனே
புகை வளரும் தூபமும் பூவளரும் பூசையும்
புரிந்துமே எழுந்து வருக

ஏர்வளரும் அழகனே எங்கள் குல தெய்வமே
எப்பிழை செய்யினும் அப்பிழை நீக்கவே
எதிரிலே தோன்றி வருவாய்.

# கருப்பர் வாரப்பாட்டு.

ஆயன் என அன்றுவந்த ஆய்பாடி நந்தன் மனை
மாயன் எனும் யசோதை மகனாய் வளர்ந்தோனே
நேயமுடன் நின் பாதம் நீள் நிலத்தோர் கொண்டாட
ஞாயிறன்று நீ வருவீர் நல்ல கருப்பையாவே

சிங்கைநகர் அங்காளி தேவி திரு வாசலுக்குத்
துங்கன் என அன்று வந்த சுவாமிதள நாயகமே
எங்களுடப் பங்கில் இருந்து சந்தானம் அருள
திங்களன்று நீ வருவீர் திவ்ய கருப்பையாவே

பொய்வாக்குரைத்துப் பிடித்தாடும் பேய்கள்தன்னை
கைவாளுக்கிரை கொடுக்கும் காயாம்பு மேகவர்ணா
மெய்வாக்காய் செல்வம் விளங்கும் சந்தானம் அருள
செவ்வாய்க்கு நீ வருவீர் செல்வ கருப்பையாவே

பதகமலம் தான்பணியும் பக்தர் தமக்குரிய
சுகமருள வேண்டுமய்யா சுவாமிதள நாயகமே
பதனமுடன் எங்களுக்குப் பக்திமுக்தி தந்தருள
புதனன்று நீ வருவீர் புண்ணிய கருப்பையாவே

பேய்களுடன் பில்லி பிடித்தாடும் சூன்யத்தை
ஆயனெனப் போய்துரத்தி அஞ்சாமல் நீ காப்பாய்
தூயமறைப் பொருளின் சுருதிமொழி நீ அருள
வியாழனன்று நீ வருவீர் வேளை கருப்பையாவே

துள்ளிய மானிடரைத் தொடர்ந்தாடும் பேய்கள்தன்னை
அள்ளிநெற்றி மயிர்பிடித்து அழிஞ்சிமரத்தாணி தைத்துப்
புள்ளி படா நீரணிந்து புத்ர பாக்கியம் அருள
வெள்ளியன்று நீ வருவீர் வீர கருப்பையாவே

முனிவர் தபோதனர்கள் முன்னின்று போற்றிசெய்ய
கனிவாய் வரம் கொடுக்கும் காயாம்பு மேகவர்ணா
தனிவழிக்கு நீ துணையாய் தான்வந்தெமைக் காக்க
சனிவாரம் நீ வருவீர் சுவாமி கருப்பையாவே

# இருகருப்பண்ண சாமியே

தாராளமாகவே உந்தன் பொற்கோவிலைத்
தடையின்றி வலமதாகி
தாள்வினைகள் துதி செய்து போற்றி
அபிஷேகமும் சாம்பிராணி தூபமிட்டும்
ஏராளமாகவே கற்பூர தீபமும்
எடுக்கின்ற தீப ஒளியும்
இலங்கு மலர் அர்ச்சனை புஜைகள்
செய்துமே எப்போதும் ஏற்றி நிற்பேன்.
காராண குலவிளக் கிராமலிங்கேந்திலன்
கருது மொழி தவரிடாமல்
காத்தருள் செய்திடு வாத்தி அண்ணாமலை
கவிஞன் ஈரைந்து கவியால்
வாராத செல்வமும் வந்திட அருள்செய்யும்
வல்லையம் பதியில் மேவும்
மலைமீதில் அய்யனார் சந்நிதியில்
எந்நாளும் வாழ் கருப்பண்ணசாமியே

கருப்பனே துணையென்று இருப்பவர்கள்
நெஞ்சினில் காணாத காட்சி காணும்
கருணை சேரும்பதியை நோக்கி வருவோர்கள்
முறை கலங்கியே பாய்ந்தோடிடும்
மருப்படா மேனியாய் உன்பதம் சேவிக்க
மனத்தில் ஒரு துயர் தீர்ந்திடும்.
வாழ்வு வரும் நின்னுடைய கொலுமுகம்
காணவே மைந்தனொடு செல்வமுண்டாம்
கட்டாரில் வில் அம்பு கையினில் பந்தமும்
கலகலவென ஓசைஅதிரும்
காலிட்ட தண்டையும் நேரில்வரும் கச்சையும்
கனமான தொங்கல் அழகும்
வட்டமிடும் நெற்றியில் கஸ்தூரி பொட்டுடன்
மார்பில் பதைக்கமாட
வருடம் ஒரு நாளிலே பெரும்பூஜை
தனிலே வருகுவாய் கரியவண்ணா
இட்டமுடன் ஆசிரிய விருத்தமாய்
இயம்பினேன் எழிலார்ந்த கரிய மணியே
ஏக உல்லாசனே கொரட்டிதனில்
வாழ்கின்ற இருகருப்பண்ண சாமியே.

# கருப்பன் எங்கள் தகப்பன்

**வா கருப்பா வா கருப்பா வா கருப்பா வா வா**
**வாளெடுத்து தோளுயர்த்தி  வா கருப்பா வா வா**

வா கருப்பா வா கருப்பா வா கருப்பா வா வா
வாளெடுத்து தோளுயர்த்தி  வா கருப்பா வா வா

கறுப்பு நிறப் பட்டுக்கட்டும் கருப்பன் எங்கள் தகப்பன்
காலடியில் நாம் விழுந்தால் கோடி வரம் கொடுப்பன்

கருவிழியில் ஒளிமிளிரக் கருப்பன் எங்கள் தகப்பன்
காணவரும் அடியவர்கள் கவலை துயர் துடைப்பன்

காலிரண்டில் சலங்கையுடன் கருப்பன் எங்கள் தகப்பன்
வாசலிலும் வளவினுளும் ஆடி ஆடிக் களிப்பன்

எண்திசையும் கண்பொருத  இராங்கியத்துக் கருப்பன்
ஏவல் பில்லி சூனியத்தை ஏறிதினம் மிதிப்பன்

தேடிவந்து நாம்தொழுதால் திருப்பத்தூருக் கருப்பன்
தீமை பகை கவலைகளைத் தினம் தினமும் ஒழிப்பன்

கோடிமக்கள் தேடிவரும் கொரட்டிவாழும் கருப்பன்
கொண்டாடும் பிள்ளைகளின் குடும்பத்திலே ஒருத்தன்

கொண்டாடக் கொண்டாட கொரட்டிவாழும் கருப்பன்
கோவிலென நம் மனதில் குடித்தனமே இருப்பன்

வேலும் மயிலும் துணை

வெண்புரவி மீதேறி என் தகப்பன் கருப்பன்
கண்ணிமைக்கும் நேரத்திலே என்னருகில் வருவன்

ஆழியிலே தூளிகட்டி அமர்ந்திருக்கும் கருப்பன்
வாழி தினம் வாழி என வாழ்த்த இங்கே வருவன்

வாசலிலே வந்துஇன்று பாசத்தோடு கருப்பன்
பேசிடுவான் நம்கவலை பிணிகளையும் தீர்ப்பன்

*பாடல் :  வைரம்*

# கருப்பர் கவி மாலை

அருள்மழை மேகமே அணையிலா வேகமே
ஆண்மையின் கம்பீரமே
அலகிலா உயரமே ஆங்கார உருவமே
ஐய்யப்பன் அவதாரமே
கருவண்ண தேகமே கனல் தங்கு நயனமே
காணத்தான் கண் கூசுமே
கலையாத யவனமே கண்ணனின்அம்சமே
கருப்பனே தனித் தெய்வமே
செருவென்ற வீரமே செயல்யாவும் வேகமே
சேவகம் சிறப்பம்சமே
செல்லிலும் சொல்லிலும் செயலிலும் உயிரிலும்
ஜெயம் ஒன்றே தினம் தங்குமே
குருதெய்வ வரிசையில் ஒருதெய்வம் நீயென
கொண்டாடிப் போற்றுகின்றோம்
குலம் காக்கும் தகப்பனே கொரட்டி வாழ் கருப்பனே
குழந்தைகள் வணங்குகின்றோம்

ஊரெலாம் இருக்கிறாய் உயிர்தோறும் வசிக்கிறாய்
உலகை நீ ரட்சிக்கிறாய்
உனை நாடி வருவோரின் வினை யாவும் போக்கியே
தினந்தோறும் நீ காக்கிறாய்
பாரெலாம் மிளிர்கிறாய் பரிதியாய் ஒளிர்கிறாய்
பதினெட்டுப் படிகள் உடையாய்
படியேறி வந்திடும் அடியாரைக் காக்கவே
பரியேறி விரைந்து வருவாய்
யார்வாயில் கிடந்தென்றும் இழிவான வாழ்வொன்று
என்னை அண்டாது காப்பாய்
எழிலார்ந்த வீரனே ராங்கியம் கருப்பனே
என்றென்றும் கூட வருவாய்
கூர்வாளும் வேலோடு கோடரி ஏந்தியே
கொடுமைகள் அழித்து விடுவாய்
குலம் காக்கும் தகப்பனே கொரட்டி வாழ் கருப்பனே
குழந்தைகள் வணங்குகின்றோம்

நேரமிது நன்நேரம் நினைக்கின்றோம்
இந்நேரம் நேரில் நீ வருக வருக
நீள் நிலமும் ஆழ் கடலும் சூழ்ந்த
இப் பூமியில் நிம்மதியே என்றும் தருக

ஆரமென விட்டமென அகிலத்து
வட்டமிதில் அனைவர்க்கும் அருகில் வருக
அன்னையோடு தந்தையினை அன்பு மனை
மக்கள் தமை அன்றாடம் காத்து அருள்க
வீரமிது வீரமென வெண்புரவி ஏறியே
வெற்றிகள் அருள வருக
வெஞ்சினமும் வன்பகையும் சஞ்சலமும் சேராத
வெற்றிமேல் வெற்றி அருள்க
கூற இனி வார்த்தையிலை வேறு ஏதும் மார்க்கமிலை
குறையாவும் தீர்த்து விடுக
குலம் காக்கும் தகப்பனே கொரட்டி வாழ் கருப்பனே
குழந்தைகள் வணங்குகின்றோம்

தூர்வாரிக் குளத்தினில் நீரேற்றி முடித்தபின்
துழாவினால் கிடைப்பதென்ன
துதி பாடிப் பாடியே மதிவாணர் மேன்மைகள்
தொலைந்து தான் போனதென்ன
பேர்வாரிக் கொள்வதும் பெருவாரிச் செல்வமும்
பிறவியைத் தாண்டி வருமா
பெரும்பிழைகள் கொடும் பழிகள் பேதைமை
இவையெலாம் பெருமையைப் பேச வருமா
போர்வாளும் கேடயம் புத்தாடை தரித்து
நீ புரவி மேல் ஏறு கருப்பா
பொல்லாதோர் கொடியோர்கள் பொய்யரை அழித்து
நீ புவனதைக் காத்து விடப்பா
கூர்வாளின் மீதேறிக் குதித்தாடும் கருப்பனே
கொண்டாடிப் போற்றுகின்றோம்
குலம் காக்கும் தகப்பனே கொரட்டி வாழ் கருப்பனே
குழந்தைகள் வணங்குகின்றோம்

பெற்றவர்கள் மேன்மைபெற பெரியவர்கள் மெச்சிவர
பிள்ளை நான் வாழ வேண்டும்
பெறற்கரிய பிள்ளையென பெற்றவரும் மற்றவரும்
பெருமைகள் பேச வேண்டும்
கற்றவர்கள் சபையிலும் மற்றவர்கள் எதிரிலும்
கம்பீரம் நிலைக்க வேண்டும்
காலத்து வரம்பின்றி ஞாலத்தில் நற்பெயர்
கவிதையாய் வாழ வேண்டும்
உற்றவர்கள் உரியவர்கள் உதவியென வருபவர்கள்
உயர்ந்திட உழைக்க வேண்டும்

ஒருநாளும் உலராத அரிதான மலராக
ஒளிமுகம் அருள வேண்டும்
கொற்றவரும் கொண்டாடும் குறைவிலா மேன்மைகள்
குடும்பத்தில் நிலைக்க வேண்டும்
குலம் காக்கும் தகப்பனே கொரட்டி வாழ் கருப்பனே
குழந்தைகள் வணங்குகின்றோம்

விரட்டிடும் துயரமும் வேதனை வருத்தமும்
விலகியே ஓட வேண்டும்
விளையாட்டுப் போலவே எனை வாட்டும்
கவலைகள் வேகமாய் மறைய வேண்டும்
திரட்டிய பாவங்கள் தீமைகள் இவையெலாம்
தீக்கிரை ஆக வேண்டும்
தெய்வமே கருப்பனே தீதொன்றும் எனைஇனி
தீண்டாமல் காக்க வேண்டும்
அரட்டி யார் வந்தாலும் அரக்கர் பேய்
என்றாலும் அடங்கியே போகவேண்டும்
ஆதிக்கம் ஆணவம் அஹங்காரம் இவைஎலாம்
அழிந்துதான் போக வேண்டும்
கொரட்டியான் என்றாலே கொடும் பில்லி சூனியம்
கும்பிட்டு ஓட வேண்டும் .
குலம் காக்கும் தகப்பனே கொரட்டி வாழ் கருப்பனே
குழந்தைகள் வணங்குகின்றோம்

கொண்டாடிப் போற்றுவார் குறைகூறித் தூற்றுவார்
கூற்றுத்தான் புரிய வேண்டும்
கூடாத செயல்களை நாடாது என்னையே
குழந்தை போல் காக்க வேண்டும்
வென்றாலும் தோற்றாலும் விளைவினை எதிர்கொள்ளும்
வீரம் விவேகம் வேண்டும்
வெறுமையும் தனிமையும் வறுமையும் இனிஎமை
வெறுத்துத்தான் ஓட வேண்டும்
நன்றான வாழ்விது நான் வாழ்ந்த வாழ்வென
நல்லவர் வாழ்த்த வேண்டும்
நாளைக்கும் இன்றைக்கும் நடப்பவை எல்லாமும்
நல்லதே ஆக வேண்டும்
குன்றாத வலிமையும் குறையாத வளமையும் கொடுத்து
நீ அருள வேண்டும்
குலம் காக்கும் தகப்பனே கொரட்டி வாழ் கருப்பனே
குழந்தைகள் வணங்குகின்றோம்

ஒன்றான கணபதி உனைப்பாடும்
தமிழ் மொழி ஓடிநீ கேட்க வருக
உத்தமன் வியாசனைப் போலஎன்னை
எண்ணியே உதவுவாய் கவிதை எழுத
மன்றாடும் சேகரன் மலையரசி உமையவள்
மக்களைக் காக்க வருக
மயிலேறும் வேலவர் வள்ளிதெய் வானையும்
மகிழ்வோடு இங்கு வருக
அன்றாட வாழ்விலே நன்றாக வாழவே
ஐயப்ப சுவாமி வருக
ஆழியின் மீதிலே பாம்பின்மேல் துயில்கொளும்
அரங்கன் ஸ்ரீதேவி வருக
கொண்டாடித் துதிக்கிறோம் குரல் கூவி அழைக்கிறோம்
கொரட்டி வாழ் கருப்பு வருக
குலம் காக்கும் தகப்பனே கொரட்டி வாழ் கருப்பனே
குழந்தைகள் வணங்குகின்றோம்

காலிரண்டும் ஓடுமே கண்ணிரண்டும் தேடுமே
கருப்பா உன் தலம் நோக்கியே
கார்மேகம் போலவே போர்வேகம் கொண்டுநீ
காக்கிறாய் பயம் நீக்கியே
பாலிரண்டு பேருமே பாடவளம் பெருகுமே
பாதைகள் தெளிவு படுமே
படுந்துயரம் கொடும்பிணிகள் பாவங்கள் இவையெலாம்
பறந்தொழிய விடிவு வருமே
நாலிரண்டு திசையுமே நம் பாட்டில் இசையுமே
நலம் வீடு தேடி வருமே
நல்லவைகள் அல்லவைகள் நச்சரவு
பேய் பகைகள் நடுங்கியே ஓடி வீடுமே
கோளிரண்டு ஏழுமே கும்பிட்டு வணங்குமே
கொரட்டிக்கே ஓடி வருமே
குலம் காக்கும் தகப்பனே கொரட்டி வாழ் கருப்பனே
குழந்தைகள் வணங்குகின்றோம்

*பாடல் : வைரம்*

# திருப்புகழ்

## விநாயகர் திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் ...... அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை ...... கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய ...... மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு ...... பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய ...... முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த ...... அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை ...... இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் ...... பெருமாளே.

## பழனி

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம ...... வெகுகோடி

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம ...... பரசூரர்

வேலும் மயிலும் துணை

சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம ...... கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம ...... அருள்தாராய்

ஈத லும்பல கோலா லபூஜையும்
ஓத லுங்குண ஆசா ரநீதியும்
ஈர முங்குரு சீர்பா தசேவையு ...... மறவாத
ஏழ்த லம்புகழ் காவே ரியால்விளை

சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பிர நாடா ளுநாயக ...... வயலூரா

ஆத ரம்பயி லாரூ ரர்தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதே றிமாகயி ...... லையிலேகி

ஆதி யந்தவு லாவா சுபாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வா னதேவர்கள் ...... பெருமாளே.

## திருவருணை

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ...... பெருமாளே.

# திருச்செந்தூர்

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து ...... வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் ...... வசைகூற
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப ...... மயல்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து ...... குறுகாயோ
மறிமானு கந்த இறையோன்ம கிழ்ந்து
வழிபாடு தந்த ...... மதியாளா
மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவேலெ றிந்த ...... அதிதீரா
அறிவால றிந்து னிருதாளி றைஞ்சு
மடியாரி டைஞ்சல் ...... களைவோனே
அழகான செம்பொன் மயில்மேல மர்ந்து
அலைவாயு கந்த ...... பெருமாளே.

# சிறுவாபுரி

**வரவேண்டும் முருகா வரவேண்டும்**
**ஆடு மயிலு டனாடி வரவேண்டும்**

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ்மீற ...... வருளாலே
அந்தரியொ டுடனாடு சங்கரனு மகிழ்கூர
ஐங்கரனு முமையாளு ...... மகிழ்வாக
மண்டலமு முநிவோரு மெண்டிசையி லுளபேரு
மஞ்சினனு மயனாரு ...... மெதிர்காண
மங்கையுட னரிதானு மின்பமுற மகிழ்கூற
மைந்துமயி லுடனாடி ...... வரவேணும்
புண்டரிக விழியாள அண்டர்மகள் மணவாள
புந்திநிறை யறிவாள ...... வுயர்தோளா
பொங்குகட லுடனாகம் விண்டுவரை யிகல்சாடு
பொன்பரவு கதிர்வீசு ...... வடிவேலா
தண்டரள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப
தண்டமிழின் மிகுநேய ...... முருகேசா
சந்ததமு மடியார்கள் சிந்தையது குடியான
தண்சிறுவை தனில்மேவு ...... பெருமாளே.

# பத்மபுரி

முத்துநவ ரத்நமணி பத்திநிறை சத்தியிட
மொய்த்தகிரி முத்திதரு ...... வெனவோதும்
முக்கணிறை வர்க்குமருள் வைத்தமுரு கக்கடவுள்
முப்பதுமு வர்க்கசுர ...... ரடிபேணி
பத்துமுடி தத்தும்வகை யுற்றகணி விட்டஅரி
பற்குனனை வெற்றிபெற ...... ரதமூரும்
பச்சைநிற முற்றபுய லச்சமற வைத்தபொருள்
பத்தர்மன துற்றசிவம் ...... அருள்வாயே
தித்திமிதி தித்திமிதி திக்குகுகு திக்குகுகு
தெய்த்ததென தெய்ததததென ...... தெனனான
திக்குவென மத்தளமி டக்கைதுடி தத்ததகு
செச்சரிகை செச்சரிகை ...... யெனஆடும்
அத்தனுட னொத்தநட நித்ரிபுவ னத்திநவ
சித்தியருள் சத்தியருள் ...... புரிபாலா
அற்பவிடை தற்பமது முற்றுநிலை பெற்றுவள
ரற்கனக பத்மபுரி ...... பெருமாளே.

# பழமுதிர் சோலை

**வேல் வேல் முருகா வெற்றிவேல் முருகா**
**வாவா முருகா வடிவேல் அழகா**

வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமதொ ழிந்து ...... தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபதம ணிந்து ...... பணியேனே
ஆதியொடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று ...... தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப ...... தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலம லைந்து ...... திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று ...... தொழுகேனே
சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து ...... எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற ...... பெருமாளே.

# திருத்தணிகை

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவர் ருயிர்க்குஞ் ...... சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் ...... றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் ...... பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் ...... செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் ...... தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் ...... கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் ...... கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் ...... பெருமாளே.

## ஆறுமுகம் ஆறுமுகம்

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் ...... என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய ...... தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகுகா சரவணா எனது
ஈசஎன மானமுன ...... தென்றுமோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவிலுனை
யேவர்புகழ் வார்மறையு ...... மென்சொலாதோ
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை ...... தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும ...... டங்கல்வேலா
சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி ...... அண்டகூடஞ்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக ...... தம்பிரானே.

# அவனிதனி லேபி றந்து

அவனிதனி லேபி றந்து மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேந டந்து ...... இளைஞோனாய்
அருமழலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து ...... பதினாறாய்
சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து ...... துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை யுன்ற ...... னடிசேராய்
மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீத ணிந்த ...... மகதேவர்
மனமகிழ வேய ணைந்து ஒருபுறம தாக வந்த
மலைமகள்கு மார துங்க ...... வடிவேலா
பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படியதிர வேந டந்த ...... கழல்வீரா
பரமபத மேசெ றிந்த முருகனென வேயு கந்து
பழநிமலை மேல மர்ந்த ...... பெருமாளே.

# திருப்பரங்குன்றம்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தன் என்றென்றும் உற்று உனைநாளும்
கண்டுகொண்டு இன்புற்று இடுவேனோ
நந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கில் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங்குன்றின் பெருமாளே

# தொந்தி சரிய மயிரே

தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் ...... நகையாடி

தொண்டு கிழவ னிவனா ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு ...... செவியாகி

வந்த பிணியு மதிலே மிடையுமொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுக ...... துயர்மேவி

மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே யொழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை ...... வரவேணும்

எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக ...... அபிராம

இங்கு வருக அரசே வருகமுலை
யுண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல ...... வருமாயன்

சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய ...... அடுதீரா

திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருத
செந்தி னகரி லினிதே மருவிவளர் ...... பெருமாளே.

## தண்டை அணி (திருச்செந்தூர்)

தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் ...... கொஞ்சவேநின்
தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தொடம ணைந்துநின் ...... றன்புபோலக்
கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களுங்
கஞ்சமலர் செங்கையுஞ் ...... சிந்துவேலும்
கண்களுமு கங்களுஞ் சந்திரநி றங்களுங்
கண்குளிர என்றன்முன் ...... சந்தியாவோ
புண்டரிகர் அண்டமுங் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களங் ...... கொண்டபோது
பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கினும்வ ளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் ...... சிந்தைகூரக்
கொண்டநட னம்பதஞ் செந்திலிலும் என்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் ...... கந்தவேளே
கொங்கைகுற மங்கையின் சந்தமணம் உண்டிடுங்
கும்பமுநி கும்பிடுந் ...... தம்பிரானே

# மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம். -பெரிய புராணம்

**சிவபுராணம் –**

வெண்பா

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே-எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!

ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசன் அடிபோற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி!
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி,
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்இறந்து எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்!

புல்ஆகிப் பூடாகிப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்!
மெய்யேஉன் பொன் அடிகள் கண்டின்று வீடுற்றேன்;
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா! என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!

வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா!
பொய்யாயின எல்லாம் போய்அகல வந்தருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்!
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே!

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்! வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கும் மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

வேலும் மயிலும் துணை

தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சகம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவுஇலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே, துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்றுஇன்ப வெள்ளமே! அத்தா! மிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ஆர் அமுதே, உடையானே!
வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா! அரனே! ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே,
கள்ளப் புலக்குரம்பைக் கட்டுஅழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்றுஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே! ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்,
செல்வர் சிவபுரத்தின் உள்ளார்; சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

# கோளறு திருப்பதிகம்

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக் காட்டில் வேதாரண்யம் எழுந்தருளி இருந்தனர். பாண்டி நாட்டில் சைவம் இளைத்துச் சமணம் தழைத்திருந்த காலம். மங்கையர்க்கரசியார் மனம் வருந்தி ஞானசம்பந்தப் பெருமானை பாண்டி நாட்டுக்கு எழுந்தருளும்படி அழைப்பு அனுப்பினார். சம்பந்தரும் பாண்டி நாடு புறப்பட்ட போது நாளும் கோளும் நன்றாக இல்லை என்றார் திருநாவுக்கரசர். சிவனையே சிந்தனை செய்யும் நம்மை நாளும் கோளும் என்ன செய்யும்? யாவும் அவன் பாரமன்றோ?
அடியார்களை நவக்கிரக தோஷங்கள் அணுகாது என்றுகூறி இக்கோளறு திருப்பதிகத்தைப் பாடினார் சம்பந்தர்.
நவக்கிரகத்தால் பீடிக்கப்பட்டோர் இப்பதிகத்தைப் பக்தியுடன் பாராயணம் செய்தால் கிரகதோஷம் நீங்கும். நன்மை பெருகும்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிக
நல்ல வீனை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்து அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்போடு ஆமை இவை மார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன் பொதி மத்தமாலை புனல் சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதோடு ஒன்றோடு ஏழு பதினெட்டோடு
ஆறும் உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைத் திங்கள் முடிமேல் அணிந்து
என்உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையது ஊர்தி செயமாது பூமி திசை
தெய்வமான பலவும்

அருள்நெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 3

மதி நுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனொடு தூதர் கொடு
நோய்களான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 4

நஞ்சு அணி கண்டன் எந்தை மடவாள்
தன்னோடும் விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல்
அணிந்தென் என் உளமே
புகுந்த அதனால் வெஞ்சின அவுணரோடும்
உருமிடியும் மின்னும் மிகையான பூதமவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதள தாடை வரிகோவணத்தர்
மடவாள் தன்னோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதி சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 6

வேலும் மயிலும் துணை

செப்பிளமுலை நன்மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிளமதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்போடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்தும் நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 7

வேள்பட விழி செய்து அன்று விடைமேல்
இருந்து மடவாள் தன்னோடும் உடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர் சூடி வந்தென்

உளமே புகுந்த அதனால்
ஏழ் கடல் சூழ் இலங்கை அரையன் தன்னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 8

பல பல வேடமாகும் பரன் நாரி பாகன் பசுவேறும்
எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசையோனும் மாலும் மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையர்க்கு நல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமும் மதியும் நாக முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள் ஆலைவிளை
செந்நெல் துன்னி வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து மறைஞான
ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொல்மாலை யோதும் அடியார்கள் வானில்
அரசாள்வார் ஆணை நமதே! 11
திருஞான சம்பந்தர்

# வேல் மாறல்

**திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை**
**விருத்தன்என(து) உளத்தில்உறை**
**கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே.**

*( ... இந்த அடியை முதலில் 12 முறை ஓதவும் ... )*

( ... பின்வரும் ஒவ்வோரடியின் முடிவிலும் "திரு" என்ற
இடத்தில் மேற்கண்ட முழு அடியையும் கூறவேண்டும் ... )

திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே.

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் ( திரு ... )

திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ( திரு ... )

சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்(து)எறிய
உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் ( திரு ... )

தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ( திரு ... )

பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ( திரு ... )

சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ( திரு ... )

துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஓர் துணை ஆகும் ( திரு ... )

தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ( திரு ... )

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ( திரு ... )

திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ( திரு ... )

சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ( திரு ... )

தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ( திரு ... )

பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ( திரு ... )

திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ( திரு ... )

சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ( திரு ... )

சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ( திரு ... )

சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ( திரு ... )

சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ( திரு ... )

பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ( திரு ... )

திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ( திரு ... )

சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ( திரு ... )

தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ( திரு ... )

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ( திரு ... )

திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ( திரு ... )

துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஒரு துணை ஆகும் ( திரு ... )

தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ( திரு ... )

பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ( திரு ... )

சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ( திரு ... )

சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்(து)எறிய
உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் ( திரு ... )

தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ( திரு ... )

வேலும் மயிலும் துணை

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் ( திரு ... )

திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ( திரு ... )

தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ( திரு ... )

சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்(து)எறிய
உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் ( திரு ... )

திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ( திரு ... )

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் ( திரு ... )

தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ( திரு ... )

துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஓர் துணை ஆகும் ( திரு ... )

சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ( திரு ... )

பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ( திரு ... )

தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ( திரு ... )

சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஔளிர்
ஒளிப்பிரபை வீசும் ( திரு ... )

திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ( திரு ... )

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ( திரு ... )

சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ( திரு ... )

சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ( திரு ... )

திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ( திரு ... )

பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ( திரு ... )

திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ( திரு ... )

பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ( திரு ... )

சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ( திரு ... )

சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ( திரு ... )

திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ( திரு ... )

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ( திரு ... )

தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ( திரு ... )

சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ( திரு ... )

சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ( திரு ... )

பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ( திரு ... )

தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ( திரு ... )

துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஒரு துணை ஆகும் ( திரு ... )

திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ( திரு ... )

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் ( திரு ... )

தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ( திரு ... )

சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்(து)எறிய
உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் ( திரு ... )

திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ( திரு ... )

( ... முடிவிலும் இந்த அடியை 12 முறை ஓதவும் ... )

வேலும் மயிலும் துணை

# கந்தர் சஷ்டி கவசம்

### காப்பு நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

### அமரரிடர் தீர அமரம்புரிந்த குமரனடி நெஞ்சே குறி நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு தவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தமும் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ர ர ர ர ர ர ர
ரிஹண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி
விணபவ சரவண வீரா நமோ நம

நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக

ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்

கிலியுஞ் சௌவும் கிளிரொளி ஐயும்
நிலைபெற்றென் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்

ஆறிரு திண்புயத்தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணிமார்பும்
செப்பழ குடைய திருவயிறு ந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகன
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து தவும்
லாலா லாலா லாலா வேஷமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க

என்னுயிர்க்கு யிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகு வேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க

என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க

நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க

பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்று ணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க

வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்

பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்

என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு

கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து யரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
குலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி

பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு றவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள ரசரும் மகிழ்ந்து றவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!

பரிபுர பவனே! பவமொளி பவனே!
அரிதிரு மருகா! அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா!

ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்

பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்ற டியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க! வாழ்க! மயிலோன் வாழ்க!
வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குரு வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குற மகளுடன்!

வாழ்க! வாழ்க! வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன்நீ குரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளை யென்றன் பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீது மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத் துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்தா றுருக் கொண்டு

ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாத வரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந் துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருப்பத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்

சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

# 108 போற்றி

**போற்றி போற்றி.**

ஓம் அப்பா போற்றி
ஓம் அரனே போற்றி
ஓம் அழகா போற்றி
ஓம் உருவே போற்றி
ஓம் அபயா போற்றி
ஓம் அதிகா போற்றி
ஓம் ஆறுபடையோய் போற்றி
ஓம் ஆறுமுகத்தரசே போற்றி
ஓம் ஆதி போற்றி
ஓம் அனாதி போற்றி
ஓம் இச்சை போற்றி
ஓம் கிரியை போற்றி
ஓம் இறைவா போற்றி
ஓம் இளையோய் போற்றி
ஓம் ஈசா போற்றி
ஓம் நேசா போற்றி
ஓம் உத்தமா போற்றி
ஓம் உயிரே போற்றி
ஓம் உணர்வே போற்றி
ஓம் உமைபாலா போற்றி
ஓம் எளியோய் போற்றி
ஓம் எண்குணா போற்றி
ஓம் ஏகா போற்றி
ஓம் அனேகா போற்றி
ஓம் ஒலியே போற்றி
ஓம் சுடரொளியே போற்றி
ஓம் கந்தா போற்றி
ஓம் கடம்பா போற்றி
ஓம் கருணாமூர்த்தியே போற்றி
ஓம் கதிர்வேலா போற்றி
ஓம் காவலா போற்றி
ஓம் கார்த்திகேயா போற்றி
ஓம் குகனே போற்றி
ஓம் குமரா போற்றி
ஓம் குரவா போற்றி
ஓம் குன்றுதோர் நின்றோய் போற்றி

ஓம் சரவணா போற்றி
ஓம் சண்முகா போற்றி
ஓம் சர்வலோகா போற்றி
ஓம் சத்தியசீலா போற்றி
ஓம் சிட்டனே போற்றி
ஓம் சிவக்குமரா போற்றி
ஓம் சிவக்கொழுந்தே போற்றி
ஓம் சித்தி போற்றி
ஓம் முத்தி போற்றி
ஓம் சூரா போற்றி
ஓம் வீரா போற்றி
ஓம் சுப்பரமணியா போற்றி
ஓம் செந்தமிழா போற்றி
ஓம் செங்கல்வராயா போற்றி
ஓம் சேவலா போற்றி
ஓம் சேனாபதியே போற்றி
ஓம் ஞானபண்டிதா போற்றி
ஓம் தூயோய் போற்றி
ஓம் துரையே போற்றி
ஓம் நடுவா போற்றி
ஓம் நல்லோய் போற்றி
ஓம் நாதா போற்றி
ஓம் போதா போற்றி
ஓம் நாவலா போற்றி
ஓம் பாவலா போற்றி
ஓம் நித்தியா போற்றி
ஓம் நிமலா போற்றி
ஓம் பொன்னே போற்றி
ஓம் புலவா போற்றி
ஓம் பூரணா போற்றி
ஓம் மன்னா போற்றி
ஓம் மயிலோய் போற்றி
ஓம் மறையே போற்றி
ஓம் மனக்கோலா போற்றி
ஓம் மாசிலாய் போற்றி
ஓம் மால்மருகா போற்றி
ஓம் முருகா போற்றி
ஓம் முதல்வா போற்றி
ஓம் முத்தையா போற்றி

ஓம் மூவர்க்கும் மேலோய் போற்றி
ஓம் வரதா போற்றி
ஓம் விரதா போற்றி
ஓம் விவேகா போற்றி
ஓம் வித்தகா போற்றி
ஓம் விசாகா போற்றி
ஓம் கதியே போற்றி
ஓம் விண்ணோர் தொழும் விமலா போற்றி
ஓம் குஞ்சரி மணாளா போற்றி
ஓம் பரங்குன்றின் பரமா போற்றி
ஓம் சூரனை மாய்த்தோய் போற்றி
ஓம் செந்தில் செவ்வேலா போற்றி
ஓம் ஆண்டியாய் நின்றோய் போற்றி
ஓம் ஆவினன் குடியோய் போற்றி
ஓம் ஏரகப் பெருமான் போற்றி
ஓம் எம்பிரான் குருவே போற்றி
ஓம் வள்ளி மணாளா போற்றி
ஓம் வளர் தணிகேசா போற்றி
ஓம் சோலையிற் செல்வா போற்றி
ஓம் சுகமெல்லாம் தருவாய் போற்றி
ஓம் ஒழுக்கம் அருள்வாய் போற்றி
ஓம் உடல் நலம் தருவாய் போற்றி
ஓம் செருக்கினை அறுப்பாய் போற்றி
ஓம் சினம் காமம் தவிர்ப்பாய் போற்றி
ஓம் அவாவினை அழிப்பாய் போற்றி
ஓம் அறம் பொருள் தருவாய் போற்றி
ஓம் பிறப்பை ஒழிப்பாய் போற்றி
ஓம் பெருவாழ்வு அருள்வாய் போற்றி
ஓம் சேவலும் மயிலும் போற்றி
ஓம் அன்னை தெய்வானை போற்றி
ஓம் அருமைத்தாய் வள்ளி போற்றி
ஓம் அனைத்தும் நீயே போற்றி
ஓம் அருள்வாய் தெண்டபாணித் தெய்வமே போற்றி போற்றி.

# கட்டியம்

## எச்சரிக்கை

சீர்வள ருங்கதிர் மாமலை மேவிய
செந்தமிழின் வாசா
செந்தமிழின் வாசா - இந்தப்
பாருல கத்தில் அடியவர் போற்றிடும் பாலகுமரேசா!
வானவர் தானவர் மாமுனி வோர்தொழும்
வான்மயில் வாகனனே
வான்மயில் வாகனனே - தொந்தி
யானைமுகனுக் கிளைய பராபரமாகிய வேலவனே!
பச்சை மரகத மேனியுறும் வாலை
பார்வதி பாலகனே
பார்வதி பாலகனே - துய்ய
நச்சர வில்துயில் ராமன் மருமகனாகிய வேலவனே!
அசுரர்கள் தேகம் திடீர்த் திடீரென
அற்று விழத்தானே
அற்று விழத்தானே -அதிவீரமுள்ள
வெற்றி வேல்விட் டெறிந்தவோர் ஆறு முகத்தானே!
கந்தா கடம்பா குகா ஞான சண்முகா
காலாயுதப் பொருளே!
காலாயுதப் பொருளே! - உன்னைவந்து பணிந்த
அடியவர்க்கு வரம் தந்திடும் மெய்ப்பொருளே!

## கட்டியம்

சண்ட பிரசண்ட வீதண்ட மூதண்டகோ
தண்டபாணிக்கு மருகன்
தத்திமித்தாள மோடொத்து நின்றாடிய
சதாசிவம் பெற்ற முருகன்
தண்டமிழ் நிறைந்திடும் அண்டரும் முனிவரும்
தாள் வணங்கிய வேலவன்
சாலோக சாமீப சாருப சாயுச்ய
சகல மோட்ச அதிகார கர்த்தன்
அகோதெப்படியென்றால்
ஐங்கரற்கிளைய ஆறுமா முகவன்
ஈஸ்வரி புதல்வன் ஈராறு புயத்தோன்
வள்ளி தெய்வானை மனமகிழ் கொழுநன்
சேவற் கொடியோன் சிகிவா கனத்தோன்
கருணா கடாக்ஷ வீட்சண்ணிய அலங்காரன்

உத்தண்ட மண்டலீகரன்,
மதன மோகன வசீகரன்,
பஞ்ச பாண அவதாரன்,
அஷ்ட ஐஸ்வரிய சம்பன்னன்,
ஷ்ட நிக்ர சிஷ்டபரி பாலன்,
மந்த்ரமகா மாணிக்க மகுடாலங்காரன்,
அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன்,
ஆபத் பாந்தவன் அனாதைரட்சகன்

அனந்தகோடி அண்டங்களும்
இருநூற்று இருபத்து நாலு புவனங்களும்
சப்தசாகரஞ் சூழா நின்ற ஈரேழுபதினாலு லோகமும்
காக்கும் வேலையே கைக்கொண்டு
ஏகசக்ராதி பத்தியஞ் செலுத்தி
ஒப்பற்ற சுந்தரவட்டக் குடையின் நிழலிருந்தருளப் பெற்ற
சிவசுப்பிரமணியக் கடவுள் அன்னதான முதல்
பற்பல தானங்கள் செய்து இன்றைய தினம்
சிங்கப்பூர் வாழ் அனைவரையும்
அருள் புரிந்தோமென்றும் ஆள்கிறோமென்றும்
தீர்த்தப் பிரசாதம் திருநீறு கொடுத்துப்
பாவையராட பல்லியம் முழங்க, நாவலர் போற்ற
நல்விருதுடனே,
குவலயம் புகழும் சிங்கையம்பதியில் விண்ணளவோங்க
எண்ணிலா வணிகர் பொன்னினாற் செய்த புனித
மண்டபத்திற்
நவரத்தினமும் நனிபெற இழைத்த,
தமது ரத்தின சிம்மாசனக் கொலுவிற்கு
இதோ எழுந்தருளி வருகிறார்,
வெகுபராக் எச்சரிக்கை

## பெரிய கட்டியம்

சுத்தசாட்குண்ய, பரிபூரண,
சச்சிதானந்த, நிட்கள,
நின்மல, நிராமய,
சகள, காலகண்ட
திரிநேத்ர கங்காதர,
சந்திரசூட, இடபாரூடராகிய,
ஶ்ரீ மகாதேவபுத்திரர் அகிலாண்டகோடி,
பிரமாண்டநாயகி, சங்கரி

வரைராஜபுத்திரி, ஸ்ரீ அம்பிகைதனயர்,
ப்ரணவ சொரூப கஜானன, ஏகதந்த, அங்குசபாச,
கரடதடவிகட, விநாயகசகோதரர்,
கபடநாடக, சூத்ரதாரி,
மாயோன்மருகர், வள்ளிமனோ கரர்,
மயுரவாகனர், தேவசேனாதிபதி,
தெய்வானைநேயர், குருமுனிதேசிகர்,
குக்குடத்துவஜர், கங்காபுத்திரர்,
கார்த்திகேயர், சுவாமிநாதர்,
சடாஷரமுதல்வர், பரசமயகௌரி,
பாரிடந்தலைவர், கலியுகவரதர்,
கருணைப்பிரவாகர், சங்கத்தலைவர்,
தமிழுக்கிறைவர், ஆறுமாமுகத்தவர்,
ஆறிருதடம்புயர், பன்னிருவிழியர்,
பாதாம்பு யத்தர், கடம்பணிதோளர்
கதிரையம்பதியர், செந்திற்கிறைவர்,
செய்வேற்படையர், ஆவினன்குடியர்
அசுரகுலாந்தகர் நல்லூர்வாசர்
நான்மறைநாதர், சூரன் சிங்கன்
தாரகன் முதலிய வீரரைத்தமதொரு
வேலாற்றடிந்தோர் பக்தவத்ஸலர்
பரமதயாளராகிய, ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுள்,
வர்ணமயமாய் அமைக்கப்பெற்ற, தமது
இரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்தருளி
தம்மை வந்துதிக்கும் தாசர்களுக்குத்
தமது மெய்யன்பர்களாகிய
நகரத்தாரைக் கொண்டு
அன்னக் கொடிகட்டி அன்னதானம் முதலிய
தானங்களும் முப்பத்திரண் டறங்களும்
குறைவின்றி நடாப்பித்து விபூதிதீர்த்தப்
பிரசாதங்களும் ஈந்தருளி மெய்யடியார்
தமது திருநாமங்களைக் கூறி ஆனந்தத் தாண்டவம்
செய்துவரவும் பலவித மேளதாள
வாத்தியங்கள் ஒலிக்கவும் தமது
திருக்கல்யாண மண்டபத்திற்கு
இதோ எழுந்தருளி வருகிறார் வெகு பராக்! எச்சரிக்கை!!

# வாழ்த்து

சண்முகக் கடவுள் போற்றி சரவணத் துதித்தோய் போற்றி
கண்மணி முருகா போற்றி கார்த்திகை பாலா போற்றி
தண்மலர்க் கடப்ப மாலை தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி வேலவா போற்றி போற்றி
ஆறிருதடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செல்வேள்
ஏறியமஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலாவள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம்.

**எல்லா வளத்தோடும் என்றும் நலம்பெறவே**
**வல்லாய் திருமகளே வந்திடுக - சொல்லாலே**
**பாடிப் பரவுகின்றோம் பால்போல் எம்மனையில்**
**கூடி வருவாய் குழைந்து.**
**காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி**
**வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்-வீடுகட்கு**
**அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமியே**
**என்றைக்கும் நீங்கா திரு!**

எண்ணரும் கலைகள் வாழி
இறைவன் நான்என்னல் வாழி
உண்ணிறை சக்தி பீடம்
ஓமெனும் ஒலியில் வாழி
கண்ணிறை மணியே யான
கருமறைப் பொருளே வாழி
எண்டிரை உலக மெல்லாம்
விண்டுனை வாழி வாழி!

வான் முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க
குறை விலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

வாழி நகரத்தார் வள்ளன்மை மிக்கோர்கள்
ஊழி பலவும் உயர்ந்திருக்க ஆழிசூழ்
இத்தலத்தில் கோயில் இயற்றினோர் வாழியவே
எத்தலமும் போற்ற இனிது - - திருமுருக கிருபானந்த வாரியர்

வேலும் மயிலும் துணை

அறிந்தும் அறியாமலும்
தெரிந்தும் தெரியாமலும்
செய்த சகல குற்றங்களையும்
பொறுத்துக் காத்து இரட்சித்து
அருள் புரிய வேண்டும்

**ஓம்**

வேலாக நிற்பவனாம்
வேதனைகள் தீர்ப்பவனாம்
வற்றாத அருட்கடலாய்
வளமனைத்தும் தருபவனாம்
வணங்குபவர் வாழ்க்கையினில்
வழித்துணையாய் வருபவனாம்
சங்கடங்கள் தீர்ப்பவனாம்
சௌபாக்கியம் தருபவனாம்
**சண்முகனே கதியென்று**
**சத்தியமாய் வழி பட்டால்**
நம் சந்ததிகள் வாழவைப்பான்
எங்கள்

**சிங்கைநகர் தெண்டபாணி !**

வெற்றி வேல் முருகனுக்கு - அரோகரா
லயன் சித்தி விநாயகனுக்கு - அரோகரா
சிங்கப்பூர் ஸ்ரீதெண்டாயுதபாணிக்கு - அரோகரா

காலைத் தொழுதாலும் கந்தா உன் கையிலிருக்கும்
வேலைத் தொழுதாலும் வேல்கழுவிக் கால்தழுவும்
பாலைத் தொழுதாலும் பாய்ந்து வரும் உன்மயிலின்
வாலைத் தொழுதாலும் வாழ்வு

வேலும் மயிலும் துணை

*முனைவர்- அர.சிங்காரவடிவேலன்.*

**சுபம்**

## Please Follow us on Youtube, Facebook and our website

YOU TUBE

WEBSITE

FACEBOOK



Lord Sri Layan Sithi Vinayagar
73, Keong Saik Road, Singapore-089167. http://www.sltemple.com



Lord Sri Thendayuthapani
15, Tank Road, Singapore-238065. http://www.sttemple.com